தமிழர் வரலாறு

JUN 1972

தேவநேயன்

தமிழர் வரலாறு

தேவநேயன்

எழுதியது

நேசமணி பதிப்பகம்

ஆ 1135, 2-ஆம் மேற்குக் குறுக்குச் சாலை,

காட்டுப்பாடி விரிவு, வ. ஆ. மாவட்டம்.

1972

பதிப்புரிமை]

[விலை கஉ இ·உருபா

(C) ஞானமுத்து தேவநேயன் (1902)

Ed. 15 Feb. 1972

Y 73 (P 31) v

N 71

TAMILAR VARALĀRU

12-50 உருபா

மறைமலை அச்சகம், 46, சவகர்ப் பெருவழி, புன்செய்ப் புளியம்பட்டி.

முகவுரை

''ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
யேங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்.''

இவ்வுலகில் தமிழனைப்போல முன்பு உயர்ந்தவனுமில்லை; பின்பு தாழ்ந்தவனு மில்லை. முதன்முதல் நாகரிக விளக்கேற்றி நானில முழுதும் அகவொளி பரப்பியவன் தமிழனே. தெற்கில் ஈராயிரங் கல் தொலைவு நீண்டு பரந்திருந்த (தமிழன் பிறந்தகமும் பழம் பாண்டி நாடும் அடங்கிய) குமரிக் கண்டம் இந்துமாவாரி யென்னும் தென்பெருங் கடலில் மூழ்கிய பின், முதலிரு கழகப் பல்துறைப் பல்லாயிரம் தனித்தமிழ் நூல்களும் கடல் கோள்களாலும் ஆரியராலும் அழிக்கப்பட்டு மூவாயிரம் ஆண்டு ஆகியுள்ள இன்றும், இருநடைப்பட்ட மொழி யமைப்பிலும், முத்திறப்பட்ட இலக்கண வடிப்பிலும், இசை நாடக வளர்ச்சியிலும், நாற்பொருள் தழுவிய அறவியல் இலக்கியத்திலும், பண்பாட்டுச் சிறப்பிலும், தமிழ்நாட்டிற் கொப்பாக வேறெந்நாடு மில்லை.

ஆயினும், பகுத்தறிவைப் பயன்படுத்தாது மூவேந்தரும் எளிய ஓரீரயலாருக்கும் இழிவகை யடிமைப்பட்டுப் போனதினால், அவரைப் பின்பற்ற நேர்ந்த பொதுமக்களின் வழிவந்த இற்றைத் தமிழருட் பெரும்பாலாரும், தம்மைத் தாமே தாழ்த்துவதிலும், இனத்தாரைப் பகைத்துப் பகைவரை வாழவைப்பதிலும், பகைவர் மனங்குளிரத் தம் முன்னோரைப் பழிப்பதிலும், தம்மருமைத் தனிமொழியைப் புறக்கணித்துப் பகைவரின் அரைச் செயற்கைக் கலவை மொழியைப் போற்றுவதிலும், ஒப்புயர்வற்றவராய் உழல்கின்றனர்.

பிராமணன் தெய்வப் பிறப்பினனென்றும், சமற்கிருதம் ஏனை மொழிகட்கெல்லாந் தாயான தேவமொழியென்றும், இரு நச்சுக் கருத்துக்கள் மூவாயிரம் ஆண்டாகத் தமிழருள்ளத்தில் மேலும் மேலும் பசுமரத்தாணிபோல் அறைந்து பதிக்கப்பட்டு, அவருடைய எலும்பொடும் நரம்பொடும் மூளையொடுங் குருதி

யொடும் இரண்டறக் கலந்து ஊறிப் போனதினுலும்; வலிமை மிக்க மாபெருந் தமிழ இனம் நூற்றுக் கணக்கான பிறவிக் குலக் கூண்டுகளுள் வெவ்வேறு விலங்கினம்போல் அடைக்கப்பட்டுள் ளமையாலும்; அதனுற் பகுத்தறிவு தன்மானம் நெஞ்சுரம் ஆகிய மூவக்க்கரண வாற்றல்களையும் நீண்ட நாட்கு முன்பே இழந்து விட்டமையாலும்; ஆங்கிலராட்சி எத்துணை முன்னேற்றி னும், அறிவியற் கல்வி எத்துணை அறிவு புகட்டினும், நயன்மைக் கட்சி (Justice Party) எத்துணைக் கைதூக்கினும், மொழிநூலா ராய்ச்சி எத்துணை உண்மை வெளிப்படுத்தினும், **பெரியார்** எத்துணை எச்சரிக்கினும், **மறைமலையடிகள்** எத்துணை வழிகாட்டி னும், மேறுடு சென்று மேலையரொடு எத்துணைப் பழகினும்; இருண்ட நாடுகளும் விடுதலை பெற்று முன்னேறிச் செல்லும் போதும், மேலையர் திங்களையும் பிற கோள்களையுஞ் சென்றடை யுங்காலும்; அடுத்த வீட்டிற் குள்ளுங் கால்வைக்கத் தகுதியற்ற வராய்க் கடுகளவும் உணர்ச்சியின்றி அடிமைத் தனத்திலேயே பெருமை கொள்வதும், அறிவுறுத்தும் இனத்தானை எள்ளி நகை யாடுவதும், அந்தோ! எத்துணை இரங்கத் தக்க துன்பச் செய்தி யாம்!

அ-ஆம் நூற்ருண்டில் வெளிநாட்டினின்று வந்த முகமதியர் சிறுபான்மையரேனும், ஆங்கிலர் நீங்கியவுடன் தமக்கெனக் கோன்மை (Sovereignty) கொண்ட தனிநாடு பெற்றுவிட்ட னரே! நூருயிரம் ஆண்டிற்கு முன்பே தோன்றி ஒருகால் நாவ லந்தேய முழுதும் ஆண்ட பழங்குடி மக்களான தமிழர் ஏன் தம் நாட்டையும் பெறவில்லை?; வடநாட்டு மொழி (இந்தி) அடர்த்து மீதூர்ந்து வருவதையுந் தடுக்கவில்லை? ஆங்கிலர் நீங்கின பின் முறைப்படி தமிழக மன்ரே முதன்முதல் விடுதலை பெற்றிருத்தல் வேண்டும்? ஆங்கிலர் ஆண்ட அக்காலத்து உரிமைகூட இக் காலத்தில் இல்லையே! இதற்குக் கரணியம், முகமதியர்க்குள்ள ஓரின வுணர்ச்சியும் ஒற்றுமையும் மறமும் மானமும் இற்றைத் தமிழருட் பெரும்பாலார்க்கு எள்ளளவும் இன்மையே யாம்.

ஒரு நாட்டு மக்கள் முன்னேறுவதற்கு மொழியே வழியாயி னும், அம்மொழியின் திறமறிந்து அவர்தம் நாட்டுரிமையைக் காத்தற்கு வரலாறு இன்றியமையாததாம். வீட்டிற்கு ஆவணம் போன்றதே நாட்டிற்கு எழுதப்பட்ட வரலாறு. அவ் வரலாறும் உண்மையானதாயிருத்தல் வேண்டும். இவ்விருபதாம் நூற்ருண்

1. 1 JUN 1972

டிலும், பல்கலைக் கழகத் துணைக் கண்காணகரும் கல்வியமைச்சரும் கல்வித்துறை யியக்குநருங் கூட, தம் நாட்டு வரலாறும் மொழி வரலாறும் அறியாதிருக்கும் நாடு தமிழ்நாடு ஒன்றே. அரசியல் திணைக்களத்திலும் பல்கலைக் கழகங்களிலும் தாய்மொழித்துறைத் தலைமைப் பதவி தாங்கி ஆயிரக் கணக்காய்ச் சம்பளம் வாங்கிக் கொண்டு, அகப்பகையோடும் புறப்பகையோடுங் கூடித் தாய்மொழியைக் காட்டிக்கொடுக்கும் (தன்மானமுந் தகுதியுமற்ற) பேராசிரியர் வாழும் நாடும் தமிழ்நாடொன்றே. இதனால், தமிழரை என்றுந் தம்மடிப் படுத்த வேணவாக்கொள்ளும் வந்தேறிப் பகைவரான வரலாற்றுசிரியர், சென்ற நூற்றுண்டிலேயே சுந்தரம் பிள்ளையும் வின்சென்று சிமிதும் இந்திய வரலாற்றைத் தெற்கினின்று தொடங்க வேண்டுமென்று எச்சரித்திருந்தும், அதைப் புறக்கணித்து இற்றைத் தமிழரின் அடிமைத்தனத்தைப் பயன்படுத்திக் கொண்டு இயற்கைக்கும் உண்மைக்கும் மாருக, வடக்கினின்று தொடங்கியும் பிற்காலத்ததும் பிறழக் கூறுவதுமான ஆரிய வேதத்தையே அடிப்படையாகக் கொண்டும், தமிழரையும் தம்போன்று அயல் நாட்டினின்று வந்தவரென்றும், அதினுங் கேடாக ஆறினக் கலவையினத்தாரென்றும், தமிழருக்குத் தனியெழுத்தில்லை யென்றும், அசோகன் கல்வெட்டுப் பிராமியெழுத்தினின்று கி. மு. உ–ஆம் நூற்றுண்டில் திரிக்கப்பட்டதே தமிழெழுத் தென்றும், தாம் விரும்பிய வாறெல்லாம் சொல்லியும் எழுதியும் வருகின்றனர்.

அறிவியல் நெறிப்படி நடுநிலையாய் ஆய்ந்து உண்மை காண வேண்டிய மேனுட்டாரும், தமிழர் இன்று எல்லாத் துறையிலும் பிராமணர்க்குக் கீழ்ப்பட்டிருப்பதனுலும், குமரிக் கண்டம் முழுகியும் ஆரிய வருகைக்கு முற்பட்ட தமிழ் நூல்களெல்லாம் அழிக்கப்பட்டும் போனமையாலும், இந்திய நாகரிக இலக்கியம் இன்று பெரும்பாலும் சமற்கிருதத்திலேயே இருப்பதனுலும், பிராமணரும் தாமும் ஆரியர் என்னும் ஓரினத்தார் என்னும் உணர்ச்சியினுலும், மாந்தன் தோன்றியது பலத்தீன (Palestine) நாடென்னும் ஏதேன் தோட்டக் கதையினுலும், (பண்டைத் தமிழிலக்கியம் மறையுண்டும் தமிழர் விழிப்பின்றியும் இருந்த காலத்தில்) கால்டுவெலார் தாமாக ஆய்ந்து தமிழ நாகரிகத்தின் உயர் கூறுகள் ஆரிய வழியின வென்று தவருன முடிபு கொண்டமையாலும், பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் தமிழ்நாட்டில் மிக்கிருப்பதனுலும், ஆரியச் சார்பானவரும் அவருக்கு உடந்தையாளருமே தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் தமிழ்த் துறைத் தலைவராகவும் துணைக் கண்காணகராகவும் அமர்த்தப்படுவத

னாலும், வையாபுரிகளும் வணிகப் புலவரும் மறைமலை யடிகளை யும் அவர் வழியினரையும் இருட்டடிப்புச் செய்து வருவதனாலும், இற்றைத் தமிழருள் நூற்றிற் கெழுபதின்மர் தற்குறிகளா யிருப்ப தனாலும், கோவில் வழிபாடும் இருவகைச் சடங்குகளும் இன்னும் பெரும்பாலும் சமற்கிருதத்தில் பிராமணராலேயே நடத்தப்பட்டு வருவதனாலும், தமிழரின் பழம் பெருமையை அறியும் நிலைமை யில் இல்லை.

கக௨க-ஆம் ஆண்டில், (P. T.) சீநிவாச ஐயங்கார் தெற் கினின்று தொடங்கித் தமிழர் வரலாறு (History of the Tamils) வரைந்து வெளியிட்டாரேனும், அது ஆங்கிலத்திலிருப்பதனாலும் போதிய அளவு மொழி நூற் சான்று காட்டாமையாலும், இவ் வரலாற்று நூலை வரையத் துணிந்தேன்.

இது என் **மதுரை மணிவிழாக் குழுவார்** கககூஎ-இல் தொகுத் தளித்த நன்கொடைப் பயனாக வெளிவருகின்றது. அக்குழு வார்க்குத் தமிழுலகம் என்றும் ஆழ்ந்த கடப்பாடுடையது.

கோவைத் திரு. **இராமசாமிக் கவுண்டர்** அவர்களும் (அ/௩க, கக-ஆம் தெரு, தாதாபாத்து) அவர்கள் மகனார் திரு. **நித்தலின் பனாரும்**, இந்நூல் தொடர்பாகச் செய்த பல்வகை யுதவிகள் ஒருபோதும் மறக்கற் பாலன வல்ல.

தம் பெயர்கொண்டு விளங்கும் மன்றத்தாரே, இனித்தமிழும் தமிழ் நாகரிகமும் பற்றிய தனித்தமிழ் நூல்களை அச்சிட வேண்டு மென்று, **மறைமலை யடிகளே** ஆவி வடிவில் வந்து அமைத்து வைத் தாற் போன்ற **மறைமலை** அச்சகத்தில், புத்தம்புது முத்தெழுத் துக்களைக் கொண்டு குறுகிய காலத்திற் செவ்வையாக இந்நூலை அச்சிட்டுத் தந்த, அவ்வச்சக உரிமையாளரான புன்செய்ப் புளியம்பட்டி **மறைமலை யடிகள் மன்றத்தார்க்கு**, தனித்தமிழன்ப ரெல்லாம் நன்றியும் வாழ்த்துங் கூறத் தனிக் கடமைப்பட்டுள் ளனர்.

காட்டுப்பாடி விரிவு,
களஎ, சுறவம், ௨00௩,
(௩க, சனுவரி, கக௬௨).

தேவநேயன்

பாவாணர் மணிவிழாக் குழு

கருமுத்து சுந்தரம் செட்டியார் கூடல்
திருவொத்த தந்தை திறத்தில்—மருவுற்றென்
மன்னும் மணிவிழாக்கோள் மன்ன யளித்தார்வெண்
பொன்னு மரையா யிரம்.

மாநிலக் கல்லூரி மன்னுந் தமிழ்த்தலைவர்
நாநலச் சுந்தரம் நற்கருணை—வானிரும்பொன்
வாணிகம னோகரனார் வாய்ந்துறுப்பாய் வந்தவிழா
ஏனுருபா ஏழா யிரம்.

அத்தொகையி லீரா யிரத்தைந்நூ றுங்கிலத்தில்
உற்ற உலகமுதற் செம்மொழிக்—கற்றதே
எச்சமிந் நூலிற் கிசைந்ததிந் நற்றொண்டை
மெச்சுந் தமிழுலகம் மேல்.

பண்டா ரகர்ப்பட்டப் பல்லோருட் சுந்தரமே
கண்டார் தமிழகக் கண்ணாரக்—கொண்ட
பிறவித் தமிழ்ப்பற்றுற் பேணினா ரென்னை
யுறவிற் பிசிராந்தை யொத்து.

தன்கரும மென்றுபெருந் தாளாண்மை யோடுதமிழ்
அன்பரிட மெல்லாம் அலைந்தோடி—நன்பொருளை
இட்டினர் தம்மை யிணைச்செயல ரென்றுசெயல்
காட்டினார் நங்கருணை காண்.

தொங்கல் விழுங்காற் றுகையெது வானாலும்
தன்கைப் பொருள்கொடுக்குந் தாராளச்—செங்கை
இரும்பு வணிகரென் ஏத்துபொரு ளாளர்
விரும்பும் மனோகரனார் வீறு.

பாவாணன் பேரிற் பணைத்த மணிவிழாப்பொன்
மூவோர் தொகுப்பு மொழியனைக்கும்—மேவினுமே
நாவார வாழ்த்தி நவையின் றவர்ப்புகழ்தல்
காவாவே னோர்க்குக் கடன்.

கருவிநூற் பட்டி

க. தமிழ்

தொல்காப்பியம்
அகநானூறு
புறநானூறு
பதிற்றுப்பத்து
சிலப்பதிகாரம்
மணிமேகலை
சோழன் பூர்வ பட்டயம்
கொங்கு தேச இராசாக்கள்
வருண சிந்தாமணி—கனகசபைப் பிள்ளை
பலிச வாரு புராணம்—நரசிம்மலு நாயுடு
மூவேந்தர் குல சரிதை—சிவணுண்டி சேர்வை
கொங்குநாடு—புலவர் குழந்தை
கவுண்டர்கள் வரலாறு—ப. அ. துரைசாமி
மனுதரும சாத்திரம் (தமிழ் மொழிபெயர்ப்பு)—இராமாநுசாசாரியர்
கள்ளர் சரித்திரம்—பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்
வேளிர் வரலாறு—, சேரன் செங்குட்டுவன் — மு. இராகவையங்கார்

உ. ஆங்கிலம்

Castes and Tribes of Southern India (7 vols.)
Report on the Socio-economic Conditions of the Aboriginal Tribes of the Province of Madras
Stone Age in India, History of the Tamils. — P. T. Srinivasa Iyengar
Origin and Spread of the Tamils, Pre-Historic South India. — V. R. Ramachandra Dikshitar
Encyclopaedia Britannica, 1970.

குறுக்க விளக்கம்

(க) பொதுச் சொற்கள்

எ—டு.—எடுத்துக்காட்டு
ஒ.நோ:—ஒப்பு நோக்க
கி. பி.—கிறித்துவிற்குப்பின்
கி. மு.—கிறித்துவிற்குமுன்
தோரா.—தோராயம்
நூற்.—நூற்றாண்டு
பக்.—பக்கம்
பேரா.—பேராசிரியர்
p.—page

(உ) இலக்கணக் குறியீடுகள்

இ. கா.—இறந்த காலம்
எ. கா.—எதிர்காலம்
நி. கா.—நிகழ்காலம்
பி. வி.—பிறவினை
comp.—comparative
dim—diminutive
pron.—pronoun
suf.—suffix
sup.—superlative

(ங) மேற்கோள் நூற்பெயர்கள்

அகம்.—அகநானூறு
அரிச். பு.—அரிச்சந்திர புராணம்
ஐங்.—ஐங்குறு நூறு
கந்த பு.—கந்த புராணம்
கம்பரா.—கம்ப ராமாயணம்
கலித்.—கலித்தொகை
குறள்.—திருக்குறள்
குறுந்.—குறுந்தொகை
சிலப்.—சிலப்பதிகாரம்
சிறுபாண்.—சிறுபாணாற்றுப்படை
திவ்.—திவ்வியப் பிரபந்தம்
திவா.—திவாகரம்
தொல்.—தொல்காப்பியம்
நன்.—நன்னூல்
நாலடி.—நாலடியார்
பட்டினப்.—பட்டினப்பாலை
பிங்.—பிங்கலம்
பு.வெ.—புறப்பொருள் வெண்பாமாலை
புறம்.—புறநானூறு
பெரிய பு.—பெரிய புராணம்
பெரும்பாண்.—பெரும்பாணாற்றுப்படை
பொ.—பொருளதிகாரம்
மணி.—மணிமேகலை
மதுரைக்.—மதுரைக் காஞ்சி
மலைபடு.—மலைபடுகடாம்

C. O. D.—The Concise Oxford Dictionary
C. T. S. I.—Castes and Tribes of Southern India
OED.—The Oxford English Dictionary

(ச) மொழிப் பெயர்கள்

இ.—இந்தி
க.—கன்னடம்
து.—துளு துளுவம்
தெ.—தெலுங்கு
பிரா.—பிராகிருதம்
ம.—மலையாளம்
மரா.—மராத்தி
வ.—வடமொழி

AF.—Anglo-French
Ar.—Arabic
As.—Anglo-Saxon
Da.—Danish
Du.—Dutch
E.—English
F.—French
Fris.—Frisian
G.—German
Gael.—Gaelic
Gk.—Greek
Goth.—Gothic
It.—Italian
L.—Latin
LG.—Low German
MDu.—Middle Dutch
ME.—Middle English
MHG.—Middle High German
MLG.—Middle Low German
MSw.—Middle Swedish
Norw.—Norwegian
OE.—Old English
OF.—Old French
OFris—Old Frisian
OHG.—Old High German
OLG.—Old Low German
ON.—Old Norse
OS.—Old Saxon
Pg.—Portuguese
Russ.—Russian
Sc.—Scotch
Skt.—Sanskrit
Slav.—Slavonic
Sp.—Spanish
Sw.—Swedish
W.—Welsh

(ரு) குறி விளக்கம் (Symbols)

குறி	விளக்கம்	குறி	விளக்கம்
-	இடைக்கோடு (hyphen)	+	புணர்ச்சிக் குறி
—	வலமுறைத் திரிவுக் குறி	×	எதிர்நிலைக் குறி, முரண் பாட்டுக் குறி
=	சமக்குறி, பொருட் பாட்டுக் குறி		
ஷை, ,,	மேற்படிக் குறிகள்	...	விடுபாட்டுக் குறி

உள்ளடக்கம் (Contents)

பக்கம்

முகவுரை 1
பாவாணர் மணிவிழாக் குழு 5
கருவிநூற் பட்டி 6
குறுக்க விளக்கம் 7

முன்னுரை:—

க. ஞால முந்திய நிலை ... ... க
உ. எழு தீவுகள் ... ... க
ங. நாவலந்தீவின் முந்நிலைகள் ... ங
ச. குமரிக் கண்டம் ... ... ங
ரு. மாந்தன் பிறந்தகம்... ... ரு
சு. நாகரிக மாந்தன் பிறந்தகம் ... கக
எ. தமிழன் பிறந்தகம் ... ... கஉ
அ. தமிழ் வரலாற்றடிப்படை ... கரு
கூ. தமிழர் வரலாறு அமையும் வகை ... உ0

நூல்:—

I. தனிநிலைக் காண்டம்

க. கற்காலம் ... ... உஎ
உ. பொற்காலம் ... ... ஙஎ
ங. செம்புக் காலம் ... ... ருரு
ச. உறைக்காலம் ... ... சுகூ
வெள்ளி ... ... அசு
ரு. இரும்புக் காலம் ... ... கூக
தலைக்கழகம் ... ... கூசு
தலைக்கழகக் கால நாகரிகமும் பண்பாடும் கூஅ
ஐந்திணைப் பெயர் மூலம் .. கககசு
முதற் கடல்கோள் கங0
இடைக் கழகம் ... ... கஙங
இரண்டாம் கடல்கோள் ... கசங
பாண்டியன் வெற்றிச் செயல் ... கருஉ

பக்கம்

சோழன் வெற்றிச் செயல்கள் ... கருங
சேரன் அருஞ் செயல் ... கருசா

II. கலவுநிலைக் காண்டம்

ஆரியர் இந்தியாவிற்குட் புகவு ... கருகூ
திபூத்தானியத்திற்கும் தமிழுக்கும் உள்ள நெருக்கம் ... கசாசா
இராமாயணக் காலம் ... கஎஎ
நால்வரணப் பகுப்பு ... கஅஅ
முத்திருமேனிப் புணர்ப்பு ... ககூங
பாரதக் காலம் ... ககூஎ
தொல்காப்பியம் ... உ0ரு
தொல்காப்பியர் காலத் தமிழக எல்லை உகசா
மதுரை யமைப்பு ... உஉக
கடைக் கழகத் தொடக்கம் ... உஉஉ
பாணினீயம் ... உஉரு
மோரியப் படையெடுப்பு ... உஉசா
கடைக்கழக முடிவு ... உஙங
கடைக்கழகக் காலக் குறுநில மன்னர் உஙச
கடைக்கழகக் கால ஆரிய மீக்கூர்வு உசஅ
மூவேந்தர் ஆரிய அடிமை முதிர்வு உசாங
குலங்கள் தோன்றிய வகைகள்... உசாகூ
நால்வரணத் தோற்றமும் விளக்கமும் உஎச
இற்றைப் பிறவிக் குலங்கள் ... உஅக
ஆரிய அட்டூழியத்தால் தமிழர்க்கு விளைந்த கேடுகள் ங0ரு

III. தெளிநிலைக் காண்டம்

திருவள்ளுவர் தமிழரின் கண்திறப்பிப்பு ஙககூ
ஆங்கிலராட்சியும் அதன் நன்மைகளும் ஙஉக
கால்டுவெலார் கண்ட வுண்மை ஙஉசா
தமிழன் பள்ளியெழுச்சிப் பாடகர் சுந்தரம் பிள்ளை ஙங0

பக்கம்

தனிப்பெருந் தமிழ் மீட்பர்—
மறைமலையடிகள் ருருரு
தமிழ் வளர்த்த தனிப்பெரு முதல்வர்
இராமசாமிக் கவுண்டர். ருருசு
தமிழ்நாட்டிற்குத் தகுந்த கட்சி தி.மு.க. வே ருருஎ
தமிழ்நாடு இன்னும் விடுதலை பெறவில்லை ருருகூ
கல்வித் திணைக்களத்தின் கடுங்குறைகள் ருசக
புலவர் பெருமிதம் ... ருசரு
முத்தமிழ்க் காவலர் ... ருசச
தமிழ்நாடு முன்னேறும் வழிகள் ருசஎ
தமிழக எல்லை வரவரக் குன்றியமை ருசஎ
தமிழன் முன்னேற்றத் தடை ... ருருஎ
தமிழ்நாட்டுப் பிராமணர்க்கு ஓர்
அன்பெச்சரிக்கை ருருஅ
புரட்சி ... ருருகூ

பின்னிணைப்பு—க.

உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாடுகளால்
தமிழுக்கு விளைந்த கேடு ருசு0

பின்னிணைப்பு—உ.

மொழியின வுணர்வும் படிமுறைக் காப்பும் ருசுஎ

குமரி மலைப்பிறந்த கோமொழி வாழி
நிமிர மறைமலைசீர் வாழி—அமரும்
மறைமலை மன்ற மதன்வாழி வாழி
மறைமலை யச்சு மனை.

முன்னுரை

க. ஞாலமுந்திய நிலை

ஞாலம் என்பது மக்கள் வாழும் உலகமாகிய இம்மாநிலம். 'பூமி' என்னும் வடசொல்லை வேண்டாது வழங்கியதனால், ஞாலம் என்னும் தென்சொல் வழக்கற்றுப் போயிற்று. தென் சொல்லெனினும் தமிழ்ச் சொல்லெனினும் ஒக்கும்.

ஞாலநிலப்பாகம் இன்றுள்ளவாறு ஐந்து கண்டங்களாக வும் ஆயிரக்கணக்கான தீவுகளாகவும் தொன்று தொட்டு இருந் ததில்லை. ஒரு காலத்தில் அது **காண்டவனம்** (Gondwana), **அங்காரம்** (Angara), **பாலதிக்கம்** (Baltica), **அமசோனியம்** (Amazonia) என்ற நாற்பெரு நிலங்களாகவும் ஒரு சில தீவுகளா கவும் பகுந்திருந்தது. காண்டவனம் ஆப்பிரிக்காவையும் கடகத் திருப்பத்திற்குத் (Tropic of Cancer) தெற்கிலுள்ள இந்தியாவை யும் ஆத்திரேலியாவையும், அங்காரம் ஆசியாவின் வடகீழ்ப் பெரும்பகுதியையும், பாலதிக்கம் வட அமெரிக்காவின் வடகீழ்ப் பகுதியையும் கிரீன்லாந்து என்னும் பைந்தீவையும் ஐரோப் பாவின் தென்பகுதியையும், அமசோனியம் தென்னமெரிக்கா வையும், தம்முட்கொண்டிருந்தன. அரபிக் கடலும் வங்காளக் குடாக்கடலும் அன்றில்லை. இந்துமாவாரியின் பெரும்பகுதியும் அத்திலாந்திக்க மாவாரியின் வடபகுதியும் நிலமாயிருந்தன. நண்ணிலக்கடல் ஆசியாவை ஊடறுத்துச் சென்று அமைதிமா வாரியொடு சேர்ந்திருந்தது. அதனால், பனிமலைத்தொடர் (இமயம்) அன்று கடலுள் மூழ்கியிருந்தது. *

உ. எழுதீவுகள்

ஒரு காலத்தில் ஞாலநிலப்பகுதி ஏழு கண்டங்களாகவும் இருந்ததாகத் தெரிகின்றது. அவை ஒன்றினொன்று தீர்ந்திருந் தமையால் தீவுகள் எனப்பட்டன. (தீர்வு-தீவு). அவை பெரு நிலப்பகுதிகளாதலால் தீவம் என்றும் சொல்லப்படும் (தீவு— தீவம்).

---

* V. R. இராமச்சந்திர தீட்சிதர் எழுதிய 'வரலாற்றுமுன்னைத் தென்னிந்தியா'வின் (Pre-Historic South India) முகப்புப் படத்தைப் பார்க்க.

வடமொழியாளர் தீவம் என்னுந் தென்சொல்லைத் 'த்வீப' என்று திரித்து, இருபுறமும் நீரால் சூழப்பட்டது எனப் பொருட் கரணியங் கூறுவர். தீவு என்பது நாற்புறமும் நீரால் சூழப் பட்ட நிலப்பகுதியே.

ஒவ்வொரு தீவும் நிலைத்திணையால் (தாவரத்தால்) நிறைந்து ஒரு மாபெருஞ் சோலைபோல் தோன்றியதனால், பொழில் எனவும்பட்டது.

நாவலந்தீவு, இறலித்தீவு, இலவந்தீவு, அன்றில்தீவு, குசைத்தீவு, தெங்கந்தீவு, தாமரைத்தீவு என்பன எழுதீவுகள்.

"நாவலந் தீவே இறலித் தீவே
குசையின் தீவே கிரவுஞ்சத் தீவே
சான்மலித் தீவே தெங்கின் தீவே
புட்கரத் தீவே எனத்தீ வேழே
ஏழ்பெருந் தீவும் ஏழ்பொழி லெனப்படும்."

என்பது திவாகரம். கிரவுஞ்சம், சான்மலி, புட்கரம் என்பன, முறையே, அன்றில், இலவம், தாமரை என்பவற்றின் மொழி பெயர்ப்பான வடசொல்லாம். நாவல் என்பதைச் சம்பு என மொழி பெயர்த்தனர் வடவர். அன்றில் என்பது ஒரு பறவை வகை.

தெங்கந்தீவு என்பதையே எழுதீவுகளுள் ஒன்றாகத் திவா கரமும் பிங்கலமும் சூடாமணியும் கூறியிருப்பவும், அதற்குப் பகரமாகத் தேக்கந்தீவு என ஒன்றைக் குறித்ததோடு, அதைப் பிங்கலமென்றுங் காட்டியுள்ளது சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகரமுதலி. தெங்கந் தீவு எபன்தைத் தேக்கந்தீவு எனத் தவறாகப் பாடங்கொண்டு, அதற்கேற்பச் 'சாகத்வீப' என வடமொழியில் தவறாக மொழிபெயர்த்ததைச் சரிப்படுத்த வேண்டிச் சென்னையகரமுதலி அவ்வழியை மேற்கொண்டது போலும்! ஆரியர் குமரிநாட்டுத்தமிழர்க்குக் காலத்தால் மிகமிகப் பிற்பட்டவராதலின், எழுதீவுக் கருத்தைத் தமிழிலக்கியத் தினின்றே கொண்டிருத்தல் வேண்டும்.

தீவு என்னும் பெயர், நாவலந்தீவு ஆப்பிரிக்காவினின்றும் பிரிந்துபோன நிலையைக் காட்டும்.

ந. நாவலந்தீவின் முந்நிலைகள்

(க) பனிமலையும் வடஇந்தியாவும் இல்லாத இந்தியப் பகுதி, தெற்கில் முழுகிப்போன குமரிக்கண்டத்தொடு அல்லது பழம்பாண்டி நாட்டொடு கூடியது.

(உ) பனிமலையொடு கூடிய இந்தியாவும் பழம்பாண்டி நாடும்.

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி."

என்று சிலப்பதிகாரம் (கக:கக—உஉ) கூறுவதால், பழம்பாண்டிநாடு முழுமையும் இருந்த காலத்தில் பனிமலையும் இருந்தமை அறியப்படும்.

(ந) பழம்பாண்டிநாடு இல்லாத இந்தியா.

"நாவலந் தீவிலிந் நங்கையை யொப்பார்"
(மணி. உரு. கஉ).

ச. குமரிக்கண்டம் (Lemuria)

"மறைந்த குமரிக்கண்டம் (Lost Lemuria) என்னும் ஆங்கில நூலுட் போந்த படத்தினுலே, ஒரு பெருமலையானது மேலைக்கடலில் தொடங்கி வடக்குந் தெற்குமாகக் குமரிக்குத் தென்பகுதியிலுள்ள நிலப்பகுதியிலே நெடுந்தொலைவு சென்று பின் தென்மேற்காகத் திரும்பி 'மடகாசுக்கர்' என்ற ஆப்பிரிக்கத் தீவுவரை சென்றதாகத் தெரிகின்றது. அம்மலைக்குக் கீழ்ப்பக்கம் உள்ள நாட்டில் பெருமலை ஒன்றுமிருந்ததாகத் தெரியவில்லை. இந்த மலையானது தென்கிழக்கு முதல் வடமேற்குவரை செல்லுகின்ற இமயமலையைப் போல வடமேற்குத் தொடங்கித் தென்கிழக்கிற் செல்லுகின்ற ஒருபெருமலைத் தொடராக இருந்திருப்பதாகத் தெரிகின்றது".* என்று பேரா. கா. சுப்பிரமணியப்பிள்ளை வரைந்திருப்பதினின்று, தெற்கில் முழுகிப்போன குமரிக்கண்டம் என்னும் நிலப்பகுதி ஏறத்தாழ உரு00 கல் தென்வடலாக நீண்டிருந்ததென்றும், அதன் மேற்குப்பகுதி நெடுகலும் ஒரு பெருமலைத்தொடர் தொடர்ந்திருந்ததென்றும், அறியப்படும்.

---

* தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நச்சினுர்க்கினியம், சை. சி. நூ. ப. க. பதிப்பு முகவுரை.

"முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி"

என்று (புறம். 9) நெட்டிமையாரும்,

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக்கோடும்"

என்று இளங்கோவடிகளும் பாடியிருப்பதால், குமரிக்கண்டமும், அதன் தென்கோடியின் மேலைப்பகுதியிலிருந்த குமரிமலைத் தொடரும், அதனின்று பாய்ந்தோடிய பஃறுளியாறும், கட்டுச் செய்திகளல்லவென்றும் உண்மையாயிருந்தவை யென்றும் அறியலாம்.

"தொடியோள் பௌவமும்" † என்னும் சிலப்பதிகாரத் தொடரின் உரையில், "தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளி யென்னும் ஆற்றிற்கும் குமரியென்னும் ஆற்றிற்கும் இடையே எழுநூற்றுக்காவதவாறும், இவற்றின் நீர்மலிவானென மலிந்த ஏழ்தெங்கநாடும், ஏழ்மதுரைநாடும், ஏழ்முன்பாலை நாடும், ஏழ்பின்பாலைநாடும், ஏழ்குன்றநாடும், ஏழ்குணகாரைநாடும், ஏழ்குறும்பனைநாடும் என்னும் இந்த நாற்பத்தொன்பது நாடும், குமரி கொல்லம் முதலிய பன்மலைநாடும், காடும் நதியும் பதியும்" என்று அடியார்க்குநல்லார் குமரிக்கண்டப் பகுதியாகிய பழம்பாண்டி நாட்டைப் பகுத்துக் கூறியிருப்பதும், கட்டுச்செய்தியாயிருக்க முடியாது.

"காலமுறைப்பட்ட உண்மைகளைக் கொண்டு, இற்றை மலையத் தீவுக்கூட்டம் முற்றிலும் வேறுபட்ட இருபகுதிகளைக்கொண்டதென்று, உவாலேசு கூறியுள்ள முதன்மையான சான்று சிறப்பாக உவகையூட்டத்தக்கது. பொருநையோ (Borneo), சாவி (Java), சுமதுரா (Sumatra) என்னும் பெருந்தீவுகளைக் கொண்ட மேலைப்பிரிவாகிய இந்தோ-மலையத் தீவுக்கூட்டம், முன்காலத்தில் மலாக்காவினுல் ஆசியாக் கண்டத்தோடு இணைக்கப்பட்டிருந்தது. ஒருகால், சற்று முந்திக்கூறிய குமரிக் (Lemuria) கண்டத்தோடும் அது இணைக்கப்பட்டிருந்திருக்கலாம். இதற்கு மாறாக, செலிபிசு, மொலுக்காசு, புதுக்கினியா, சாலோமோன் தீவுகள் முதலியவற்றைக் கொண்ட கீழைப்பிரிவாகிய ஆத்திரேலிய-மலையத் தீவுக்கூட்டம், முன்காலத்தில் ஆத்திரேலியாவுடன் நேரே இணைக்கப்பட்டிருந்தது" *

† சிலப். அ: க.

* C. T. S. I. Vol. 1, pp. 20, 21.

"செடிகொடிகளிலும் உயிரிகளிலும் ஆப்பிரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் மிகப்பழங்காலத்திலிருந்த மிக நெருங்கிய ஒப்புமைகளைக் கொண்டு, திருவாளர் **ஒல்டுகாம்** ஒரு காலத்தில் தென்னாப்பிரிக்காவையும் இந்தியாவையும் இணைத்துக்கொண்டு ஒரு தொடர்ந்த நிலப்பரப்பிருந்ததென்று முடிபுசெய்கின்றார்". *

"இந்தியர்க்குப் பெயரே தெரியாத சில பழங்காலத்து மாபெரிய பப்பரப்புளி அல்லது யானைப்புளி அல்லது மேனாட்டு (சீமை)ப்புளி (Baobab) என்னும் ஆப்பிரிக்க மரங்கள், இந்தியத் தீவக்குறையின் (Peninsula) தென்கோடியில், அயல்நாட்டு வணிகம் நிகழ்ந்து வந்த சில துறைமுகங்களில், அதாவது குமரிமுனை யருகிலுள்ள கோட்டாற்றிலும் திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடியருகில் பழைய கொற்கையிருந்திருக்கக் கூடிய இடத்திலும், இன்னுங் காணப்படுகின்றன." ‡

குமரிக்கண்ட நால்நிலைகள்

(க) ஆப்பிரிக்காவொடும், ஆத்திரேலியாவொடும் கூடிய பழம்பாண்டி நாடு.

(உ) ஆப்பிரிக்கா நீங்கிய பழம்பாண்டி நாடு.

(ங) ஆத்திரேலியாவும் நீங்கிய பழம்பாண்டி நாடு.

(ச) சிறிது சிறிதாய்க் குறைந்துவந்த பழம்பாண்டி நாடு.

ரு. மாந்தன் பிறந்தகம்

தென்னிலம்

மாந்த இனங்களின் கொடிவழியும் பொதுப்படையான இடமாற்றங்களும் பற்றிய கருதுகோள்:- "மாந்தனின் முந்தியல் இருப்பிடம் இன்று இந்துமாவாரியில் மூழ்கியுள்ள ஒரு கண்டம் என்றும், அது இன்றுள்ளபடி ஆசியாவின் தென்கரையை நெடுகலும் அடுத்து (பெரும்பாலும் இருந்திருக்கக் கூடியபடி அதனொடு சிலவிடங்களில் இணைந்தும்), கிழக்கில் **அப்பாலை இந்தியாவும்** (Further India) சண்டாத்தீவுகளும் வரையும், மேற்கில் மடகாசுக்கரும் ஆப்பிரிக்காவின் தென்கீழ்க்கரையும் வரையும், பரவியிருந்ததென்றும், கருதுவிக்கும் பல சூழ்நிலைகள் (சிறப்பாகக்

---

* C. T. S. I. Vol. 1, pp. 24.

‡ கால்டுவெல்.

காலக்கணக்கியல் உண்மைகள்) உள்ளன. விலங்குகளும் நிலைத் திணையும் பற்றிய பல ஞாலநூலுண்மைகள், அத்தகைய தென்னிந்தியக் கண்டமொன்று முன்னிருந்த தென்பதைப் பெரிதுங் காட்டுகின்றன. அக்கண்டத்திற்குச் சிறப்பாகவுரியனவாயிருந்த முந்தியற் பாலுண்ணிகளால், அது **இலெமுரியா** (Lemuria) எனப்பெயர் பெற்றது. அதை முதற்கால மாந்தனின் உறைவிடமாகக் கொள்வோமாயின், மாந்த இனங்கள் இடம்பெயர்ந்து ஆங்காங்குக் குடியேறியிருக்கும் திணையியற் பாதீடு எளிதாய் விளங்கிவிடும்.'' *

''மாந்த இனவாராய்ச்சி, வடபாகத்திலும் நண்ணிலக் கடற்கரையிலும் இன்றுவாழும் மாந்த இனங்களின் முன்னோர், தென்னிந்தியா வழியாகத்தான் அவ்விடங்கட்குச் சென்றிருந்தார் என்பது, எவ்வகையிலும் நடந்திருக்கக் கூடாத செய்தியன்று என்பதைக் காட்டும். இந்தியக் கீழ்கரையிற் கண்டெடுக்கப்பட்ட மாந்தனெலும்புக் கூடுகட்கும் அடையாளங்கட்கும் உரியகாலம், இன்னதென்று தீர்மானிக்கப்படாத தாயிருப்பினும், பொதுவாகக் கணிக்கப்படும் வரலாற்றுக் காலத்திற்கு முற்றும் அப்பாற்பட்டதாகும்.'' ‡

இதுவரை உலகிற் கண்டெடுக்கப்பட்ட மாந்தன் எலும்புக் கூடுகளுள், சாலித்தீவில் (Java) 1891-இல் தூபாயிசு என்பவரால் எடுக்கப்பட்டதற்குரிய 'நிமிர்ந்த குரக்கு மாந்தன்' (Pithecanthropos Erectus) காலம் கி. மு. 5,00,000 என்று கணிக்கப்பட்டுள்ளது. 1961-இல் தென்னாப்பிரிக்காவில் தங்கனியிக்காவில் பேரா. இலீக்கி (Prof. Leakey) என்னும் ஆங்கில மாந்தனூலறிஞராற் கண்டெடுக்கப்பட்டுள்ள இரெலும்புக் கூடுகளுள், ஒன்றற்குரிய 'நெற்றுடைப்பான்' (Nut cracker Man or Sinjanthropos Boisi) இற்றைக்கு 6,00,000 ஆண்டுகட்கு முற்பட்டவன் என்றும், இன்னொன்றற்குரிய, இன்னும் பெயரிடப்படாத, நனிமிக முந்திய மாந்தன், குறைந்த பக்கம் 17,50,660 ஆண்டுகட்கு முற்பட்டவன் என்றும், கணிக்கப்பட்டுள்ளது. இதை அமெரிக்க மாந்தனூற் பேராசிரியர் சிலர் மறுத்துள்ளனர். உண்மை எங்ஙனமிருப்பினும், சாலித்தீவையும் தென்னாப்பிரிக்காவையும் தன்னுடன் இணைத்துக் கொண்டிருந்த பெருநாடே குமரிக்கண்ட மாதலின், அந்நிலத்திலேயே

* M. A. M. P. பக். ௩௩, அடிக்குறிப்பு (உ).

‡ Do பக். ௧௧௧.

மாந்தன் தோன்றினனென்றும், அத்தோற்றம் கி.மு. 5,00,000 ஆண்டுகட்கு முந்தியதென்றும், மறுப்பச்சமின்றிக் கூறலாம்.

'உயிரினங்களின் இடம்பெயர்வும் பாதீடும்' பற்றிய அதிகாரத்தில், ஞாலத்தின் மேற்பரப்பில் அடிக்கடி மாறிக்கொண்டிருக்கும் நீர்நிலப்பாதீட்டைக் குறிக்கும்போது, எக்கேல், "இந்துமாவாரி ஒரு காலத்தில் சந்தாத்தீவுகளினின்று தொடங்கி, ஆசியாவின் தென்கரை வழியாய் ஆப்பிரிக்காவின் கீழ்கரைவரைக்கும் பரவியிருந்த ஒருகண்டமாயிருந்தது. **கிளேற்றர்** இப்பழங்காலப் பெருங்கண்டத்திற்கு, அதில்வதிந்த குரங்கொத்த உயிரி பற்றி **இலெமுரியா** என்று பெயரிட்டிருக்கின்றார். இக்கண்டம் மாந்தனின் பிறந்தகமாயிருந்திருக்கக் கூடுமாதலின், மிக முதன்மையானதாகும்." ‡ என்று கூறுகின்றார்.

தொன்னிலம்

நிலவியல் வரலாற்றுராய்ச்சிக்குத் தெரிந்தவரை, இஞ்ஞாலத்தின் தொன்முது பழம்பகுதியாயிருந்தது, தென்மாவாரியில் மூழ்கிப்போன குமரிக்கண்டமே. **யோவான் இங்கிலாந்து** (John England) என்னும் ஆராய்ச்சியாளர், "கோடியாண்டுகட்குமுன், ஒருகால் அதற்கும் முந்தி, ஒருபெருங்கண்டம் ஆப்பிரிக்காவையும் இந்தியாவையும் இணைத்திருந்தது." என்பர்.

இற்றைத் தமிழகத்திலும், நீலமலை, ஆனைமலை, பழனிமலை, ஏலமலை, சேரவரையன் (சேர்வராயன்) மலை ஆகியவற்றின் பாறைவகை எழுபது கோடியாண்டுகட்கு முற்பட்டுத் தோன்றியதென, நிலநூலாராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

நண்ணிலம்

முந்தியல் மாந்தனின் வாழ்விற் கேற்ற பல்வேறு நிலைமைகளை நோக்கின், இஞ்ஞாலத்தின் நடுவிடமே நிறைவுற்ற மாந்தன் பிறந்தகமாயிருந்திருக்க முடியுமென்பது புலனாகும். அத்தகைய இடம் குமரிக்கண்டமே. நண்ணிலக்கோடு (Equator) அதனூடேயே செல்வதைத் திணைப்படத்திற் (Map) காண்க.

முதனிலை மாந்தனின் மேனி முழுவதையும் மூடியிருந்த கோரைமயிர் உதிர்வதற்கும் மென்மையடைவதற்கும், வெப்பநாட்டு வாழ்க்கையே ஏற்றதாகும்.

---

‡ C. T. S. I. Vol. I, பக். ௨0.

ஐரோப்பாவிற்கும் ஆப்பிரிக்காவிற்கும் இடையே நண்ணிலக்கடல் (Mediterranean Sea) என்று பெயர் பெற்றுள்ளது, உண்மையில் இருகண்டத்திடைக் கடலேயன்றி நண்ஞாலக் கடலன்மை அறிக.

வண்ணிலம்

முதற்கால மாந்தன் காட்டுவிலங்காண்டியாகவும் அநாகரிகனுகவுமிருந்து, தன்வாழ்க்கைக்கு இயற்கை விளைவுகளையே சார்ந்திருந்ததனுல், அவனுக்கேற்ற பெருவளநாடு குமரிக் கண்டமே.

ஏதேன் (Eden) தோட்டம் என்பது பல்வகைக் கனிமரங்கள் நிறைந்த வளநாட்டையே குறிக்கும். ஏதேன் என்பது இன்பம் என்று பொருள்படும் எபிரேயச் சொல். பாலும் தேனும் ஓடும் கானுன் தேசமென்று சிறப்பித்துச் சொல்லப்பட்டாலும், மேலையாசியாவிற்கு அது சிறந்ததேயன்றி ஞாலத்திற் சிறந்த நாடாகாது. நண்ணிலக்கடல் ஒரு காலத்தில் நேரே கிழக்குநோக்கி நீண்டு அமைதிமாவாரியிற் (Pacific Ocean) கலந்திருந்ததனுல், அன்று கானுனும் ஏதேன் தோட்டம் இருந்ததாகச் சொல்லப்படும் மெசொப்பொத்தேமியாவும், கடலடியில் இருந்திருத்தல் வேண்டும். அதற்கு முன்பு முதற்காலத்திலும் ஏதேன்தோட்டமிருந்த இடம் நிலப்பகுதியாகவே இருந்ததென்று கொள்ளினும், அது குமரிநாட்டினும் வளஞ் சிறந்ததாகக் கொள்ளமுடியாது. அதைவளப்படுத்திய நாலாறுகளுள் ஒன்ருன ஐபிராத்து (Euphretes) பஃறுளி போற் பேரியாறன்று. அங்குள்ள மலைகளுள் ஒன்றும் குமரிபோற் பன்மலையடுக்கமன்று. இடையிடை வறண்ட வெம்மணற்பாலைகளும் பல வுள.

பனிமலை (இமயம்) போலும் குமரிமலைத் தொடரும் கங்கை போலும் பஃறுளியாறுங் கொண்டு, பசியுந் தகையுந்தணிக்க, இனியனவும் வாழ்நாள் நீட்டிப்பனவுமான கனிகளுங் காய்களும், மாரியுங் கோடையும் விளையும் பல்வகைத் தவசங்களும், சுவைமிக்க பயறுகளும், எளிதாகக் கில்லியெடுக்குங் கிழங்குகளும், தேனும் தெங்கிளநீரும் கடுங்கோடையினும் வற்ருச் சுனைபொய்கைத் தெண்ணீரும், உணவும் மருந்துமான பல்வேறு விலங்கு பறவையூனும், ஆடுமாடுகளின்பாலும், இராத்தங்கி யுறங்க மலைக்குகைகளும் புடைகளும்; அற்றம் மறைக்க இலையுந் தோலும் மட்டையும் மரவுரியும்; ஏராளமாகக் கிடைத்த குமரி

நாடு போலும் இயற்கை வளநாடு இஞ்ஞாலத்தில் வேறேதேனு முண்டோ?

முகவை மாவட்டத்திலுள்ள பாரி பறம்புமலையும், ஆயிரத் தெண்ணூறாண்டுகட்கு முன் மூவேந்தராலும் முற்றுகையிடப் பட்டிருந்தபோது, அதன்மேற்குடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களைக் காலமெல்லாந் தாங்குமளவு எத்துணை இயற்கைவள முற்றிருந்ததென்பது,

"அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொண் முரசின் மூவிரு முற்றினும்
உழவ ருழாதன நான்குபய னுடைத்தே

ஒன்றே, சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே
நான்கே, அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து

திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே
வான்க ணற்றவன் மலையே வானத்து
மீன்க ணற்றதன் சுனையே யாங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினுந்
தாளிற் கொள்ளலிர் வாளிற் றரலன்"

என்று கபிலர் பாடியதினின்று (புறம். 109) அறியக்கிடக் கின்றது. மூவாயிரம் அடி உயரமுள்ள ஒரு சிறு மலை இத்தகைய வளத்ததெனின், பனிமலை போலும் பன்மலையடுக்கத்துக் குமரிமா மலைத் தொடர் எத்துணை வளத்ததா யிருந்திருத்தல் வேண்டும்!

காலமழையும் பொய்க்குமாறு முல்லையிலுங் குறிஞ்சியிலு முள்ள சோலைக்காடுகளெல்லாம் பெரும்பாலும் அழிக்கப்பட்டும், நிலந்தாங்கக்கூடிய அளவுபோல் இருமடங்கு மக்கள்தொகை பெருகியும், உள்ள இக்காலத்தும், ஐம்பதிற்கு மேற்பட்ட வாழைக்கனி வகைகளும், ஒட்டுமாவல்லாத இருபான் மாங்கனி வகைகளும்; நால்வகைப் பலாக்கனிகளும், கொழிஞ்சி, குடகு நாரந்தம், வெள்ளரி, விளா, பனை முதலிய பிற கனிவகைகளும்; நெல், கம்பு, வரகு, கேழ்வரகு, சோளம், சாமை, தினை, குதிரைவாலி, காடைக்கண்ணி என்னும் தொண்வகைத் தவ

சங்களும், அவரை, துவரை, உழுந்து, மொச்சை, பாசி (பச்சை), தட்டான் (தட்டை), கல், கரம்பை (வயல்),கொள் (காணம்) என்னும் தொண்வகைப்பயறுகளும் ஆகிய பதினெண் கூலமும்; கறிசமைக்கப் பத்துவகைக் காய்களும், முப்பான்வகைக்கு மேற்பட்ட கீரைகளும், கறிசமைக்கவோ அவித்துண்ணவோ பயன்படும் பத்துவகைக்கிழங்குகளும், கிடைக்கின்றன.

நெல்லில் மட்டும், அறுபான்வகைச் சம்பாவும் நாற்பான்வகை மட்டையுமாக நூறுவகையுள்ளன. பொன்தினை, செந்தினை, கருந்தினை எனத் தினை முத்திறத்தது. சோளம் ஐவகையது. காராமணி, வரிக்கொற்றுன் என்பன தட்டானுக்கு நெருங்கிய வகைகள்.

இற்றைத் தமிழகத்திலேயே இத்தனை இயற்கையுணவு வகைகளெனின், கி. மு. பத்தாயிரம் ஆண்டுகட்குமுன் தெற்கில் உருOO கல் தொலைவு நீண்டு பரந்திருந்த குமரிக்கண்டப் பழம் பாண்டி நாட்டில், எத்தனை வகையிருந்தனவோ இறைவனுக்குத்தான் தெரியும்!

பிறநாடுகளிற்போல் என்றும் வற்றி வறண்டு கொதிக்கும் பாழ்மணற் பாலைவனமாகிய இயற்கைநிலம், தமிழகத்தில் எவ்விடத்தும் இருந்ததில்லை. இங்குள்ள பாலையெல்லாம், முல்லையுங் குறிஞ்சியும் முதுவேனிற் காலத்தில் நீர்நிலைவற்றி நிலைத்திணை (தாவரம்) பட்டு நிலங்காய்ந்த குறுங்கால நிலையினவே. கோடைமாறி மாரிபெய்தபின், அப்பாலைநிலம் புல்பூண்டும் மரஞ்செடிகொடிகளும் தளிர்த்து முன்போல் முல்லையுங்குறிஞ்சியுமாக மாறிவிடும். இங்ஙனம் பாலையின் நிலையில்லா நிலை நோக்கியே, அதனை நீக்கி ஞாலத்தை நானிலம் என்றனர் பண்டைத் தமிழறிஞர்.

கோவலனுங் கண்ணகியும் காவிரிப்பூம் பட்டினத்தினின்று மதுரைக்குச் சென்ற கடுங்கோடைக் காலத்தை,

"கோத்தொழி லாளரொடு கொற்றவன் கோடி
வேத்திய லிழந்த வியனிலம் போல
வேனலங் கிழவனொடு வெங்கதிர் வேந்தன்
தானலந் திருகத் தன்மையிற் குன்றி
முல்லையுங் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து

நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளுங்
காலை" (சிலப். கக: கூ0-கூஎ)

என்று ஒருமறையோன் கூற்றாக இளங்கோவடிகள் கூறுதல் காண்க. இந்நிலைமையை இன்றும் தமிழ்நாட்டில் முதுவேனிற் காலத்தில் குறிஞ்சி முல்லை நிலங்களிற் காண்க. இதனால், பண்டைத்தமிழகம் இடிணையற்ற பெருவள நாடாயிருந்ததென் பதற்கு எள்ளளவும் இழுக்கில்லையென்க.

கூ. நாகரிக மாந்தன் பிறந்தகம்

மாந்தன் நாகரிக நிலைகள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனநான்கு. மலையும் மலை சார்ந்த இடமுங் குறிஞ்சி; காடும் காடுசார்ந்த இடமும் முல்லை; நாடும் நாடுசார்ந்த இடமும் மருதம்; கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல். இவை ஆங்காங்குச் சிறப்பாகப் பூக்கும் பூ அல்லது வளரும் மரம்பற்றிப் பெயர்பெற்றன.

இயற்கை அல்லது அநாகரிக மாந்தன் விலங்கு பறவைகளை வேட்டையாடி வாழ்வதற்கேற்ற இடம் குறிஞ்சி; அதற்கடுத்த படியாக, ஆடுமாடுகளைச் சிறப்பாக வளர்த்து வாழ்வதற்கு ஏற்ற இடம் முல்லை; அதற்கடுத்தபடியாக, பயிர்த்தொழிலைச் சிறப் பாகச் செய்து வாழ்வதற்கு ஏற்ற இடம் மருதம்; அதற்கடுத்த படியாக, மரக்கலங்களைச் செய்து கடல் வாணிகத்தை நடத்து வதற்கு ஏற்ற இடம் நெய்தல். இந்நால் நிலங்களும் மாந்தன் நாகரிக வளர்ச்சிக்கேற்றவாறு அடுத்தடுத்திருந்தது, அல்லது இருப்பது குமரிநாடும் அதனொடு இணைந்திருந்த இற்றைத் தமிழகமுமே.

இற்றைத் தமிழ்நாட்டிற் போன்றே பண்டைத்தமிழகமாகிய குமரிநாட்டிலும் மேல்கோடியிலேயே பெருமலைத்தொடரிருந்தது. அதனால், நிலம் மேற்கில் உயர்ந்தும் கிழக்கில் தாழ்ந்தும் இருந் தது. இந்நிலைமை பற்றியே, குடதிசை மேல் (மேற்கு) என்றும், குணதிசை கீழ் (கிழக்கு) என்றும், பெயர்பெற்றன. ஒருவன் மேற்றிசையினின்று கீழ்த்திசைவரின், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நால்நிலமும் முறையே அடுத்தடுத்திருக்கக் காண்பான். இந்நிலைமையைப் பிறநாடுகளிற் காண்டல் அரிது.

வெள்ளம் பள்ளத்தையே நாடுமாதலால், தமிழ்நாட்டில் பொருநையும் (தாம்பிரபரணியும்), வைகையும், காவிரியும் போலும் ஒரு பேரியாறு தோன்றும் மலையகத்தினின்று, ஒருவன் அவ்வாற்றுவழியே தொடர்ந்து வருவானாயின், நிலம் வரவரத் தாழ்ந்திருப்பதையும், குறிஞ்சியும் முல்லையும் மருதமும் நெய்தலுமாக முறையே மாறுவதையுங் காண்பான். முதற்கால மாந்தன் இயற்கை யுணவையும் இயற்கை நீர்நிலையையுமே சார்ந்திருந்ததனாலும், மரஞ்செடிகொடியடர்ந்த அடவியை யூடறுத்துச் செல்லும் ஆறுதவிர வேறுவழி அவனுக்கின்மையாலும், குறிஞ்சியினின்று நெய்தல்வரை பெரும்பாலும் ஆற்றோரமாகவே இடம் பெயர்ந்து வந்ததாகத் தெரிகின்றது. ஆறுஎன்னுஞ் சொல்லுக்கு வழியென்னும் பொருள் தோன்றியதும் இங்குக் கவனிக்கத் தக்கது.

எ. தமிழன் பிறந்தகம்

தமிழன் என்னும் இனம் தமிழ் பற்றியதே யாதலால், தமிழ் தோன்றிய இடமே தமிழன் பிறந்தகமாம். அது தென்வாரியில் மூழ்கிப்போன குமரிநாடே. அதற்குச் சான்றுகள்:—

(க) தமிழும் அதனோடு தொடர்புள்ள திரவிடமொழிகளும் நாவலந்தேயத்திற்குள்ளேயே வழங்குதலும்; தென்மொழி வடக்கிற் செல்லச்செல்ல ஆரியப் பாங்கில் வலித்தும் உருத்தெரியாது திரிந்தும் சிதைந்தும் ஒடுங்கியும் இலக்கியமற்றும் இடையீடு பட்டும், தெற்கில் வரவர மெல்லோசை கொண்டும் திருந்தியும் விரிந்தும் இலக்கியமுற்றும் செறிந்தும், இருத்தலும்.

(உ) நாவலந்தேயத்திற்கு வெளியே திரவிட மொழி யின்மையும், மேலைமொழிகளிலுள்ள தென்சொற்கட்கெல்லாம் தமிழிலேயே வேர் அல்லது வேர்ப்பொருளிருத்தலும்.

(ங) தென்மொழிக் குடும்பத்து இற்றை நாற்பெரு மொழிகளும் தொன்றுதொட்டுத் தென்னாட்டிலேயே வழங்குதலும், அவற்றுள் முழுத்தூய்மையுள்ள தமிழ் அந்நாட்டின் தென்கோடியிலிருத்தலும்.

(ச) தமிழ்நாட்டுள்ளும் தெற்கே செல்லச் செல்லத் தமிழ் திருந்தியும் சொல்வளம் மிக்கும் ஒலியெளிமையுற்றும் இருத்

லும், திருத்தக் கல்லிற்குத் தெற்கிட்டுப் பிறந்தவன் என்னும் வழக்குண்மையும்.

(ரு) வடநாட்டு முன்வட (பிராகிருத) மொழிகளிலும் தெலுங்கு முதலிய திரவிட மொழிகளிலுமுள்ள வன்மெய்களின்றிப் பதினெண் மெய்களே தமிழிலிருத்தலும், எட்டும் பத்தும் பன்னிரண்டுமாக மெய்யொலிகள் கொண்ட மொழிகள் ஆத்திரேலியாவிலும் அதனையடுத்துள்ள தீவுகளிலும் வழங்குதலும்.

(சா) தமிழ் முழுவளர்ச்சியடைந்து முத்தமிழான பின் ஏற்பட்ட தலைக்கழகம் குமரிக்கண்டத் தென்கோடிப் பஃறுளியாற்றங்கரை மதுரையில் இருந்தமையும், குமரிக்கண்டத் தோற்றத்தின் எண்ணிற்குமெட்டாத் தொன்மையும், அக்கண்டம் வரலாற்றுக் காலத்திற்கு முன்பே முழுகிப் போனமையும்.

(எ) தென்னைமரம் ஆத்திரேலியத் தீவுகளினின்றே பிறதென்கிழக்குத் தீவுகட்குக் கொண்டுவரப்பட்டதாகச் சொல்லப்படுவதும், குமரிக்கண்டத்தில் ஏழ்தெங்க நாடிருந்தமையும், தென் என்னும் சொல் தென்னை மரத்தையும் தெற்குத் திசையையுங் குறித்தலும்.

(அ) பண்டைத் தமிழ்ச் செய்யுட்களிற் கூறப்பட்டுள்ள நீர்நாயும், உரையாசிரியராற் குறிக்கப்பட்டுள்ள காரோதிமமும் (காரன்னமும்), ஆத்திரேலியாவிற்குத் தெற்கிலுள்ள தாசுமேனியத் தீவில் இன்றுமிருத்தல்.

(கூ) வாணிகத்தால் வந்த இரண்டோர் அயல்நாட்டு விலங்குகளும் நிலைத்திணை (தாவர) வகைகளுந்தவிர, மற்றெல்லாக் கருப்பொருள்களும், காலவகைகளும் நிலவகைகளுமாகிய முதற்பொருளும், இன்றும் தென்னாட்டிற்கு இயற்கையாக வுரியவையே பண்டைத்தமிழிலக்கியத்திற் கூறப்பட்டிருத்தல்.

(க0) தென்னாடு, தென்னர் (தென்னாட்டார்), தென்மொழி, தென்னவன் (பாண்டியன்), தென்கலை என்னும் பெயர்கள் தொன்றுதொட்டு வழங்கி வந்துள்ளமை.

(கக) தென்வடல், தெற்கு வடக்குத் தெரியாதவன், தெற்கும் வடக்குமாய்த்திரிகின்றவன், தென்பல்லி வடபல்லி (தலையணிகள்) முதலிய வழக்குக்களில் தென்திசை முற் குறிக்கப் பெறுதல்.

(கஉ) கடைக்கழகக் காலத்தமிழர் தம் இறந்த முன்னோரைத் தென்புலத்தார் எனக் குறித்தமையும், கூற்றுவன் தென் றிசைக்கிழவன், தென்றிசை முதல்வன், தென்புலக் கோன் எனப்பெயர் பெற்றிருத்தலும்.

(கங) தென்மொழி வளர்ச்சியின் முந்துநிலைகளையெல்லாம் தமிழே காட்டிநிற்றல்.

(கச) கோதுமை, வாற்கோதுமை, உறைபனி, பனிக்கட்டி முதலிய குளிர்நாட்டுப் பொருள்கள் பண்டைத் தமிழிலக் கியத்திற் சொல்லப்படாமையும், தமிழர்க்கு வந்தேறிக கருத்தின்மையும்.

(கரு) கடைக்கழகப் புலவர் நாற்பத்தொன்பதின்மராயும் இடைக்கழகப் புலவர் ஐம்பத்தொன்பதின்மராயும் இருக்க, தலைக்கழகப் புலவர் மட்டும் ஐந்நூற்று நாற்பத் தொன்பதின்மரா யிருந்தமை.

குறிப்பு:- தலைக்கழகப் பாண்டியநாடு தெற்கே இராயிரங் கல் தொலைவு நீண்டு பரந்திருந்ததனால், அதற்கேற்பப் புலவர் தொகையும் மிக்கிருந்ததென அறிக.

(கசா) தமிழ்ஞாலத்தின் நடுவிடமாக, நடவரசன் தில்லை மன்று குமரிநாட்டுப் பாண்டியனால் அமைக்கப் பெற்றமை.

குறிப்பு:- தில்லைமன்று வடபாற் பனிமலைக்கும் தென்பாற் குமரிமலைக்கும் நடுவிடையே அமைந்ததனாலேயே, பேரு லகத்தின் நெஞ்சத்தாவை நிகர்த்ததாயிற்று. இதன் விளக்கத்தை என் **தமிழர் மதம்** என்னும் நூலுட் காண்க. **தில்லைக்கு வடக்கிற் பனிமலையளவு தொலைவிலேயே தெற்கிற் குமரிமலையும் இருந்தது.**

அ. தமிழ் வரலாற்றடிப்படை

மனோன்மணீய ஆசிரியர் **பேரா. சுந்தரம் பிள்ளை** அவர்கள் 1908-இலேயே,

"வடஇந்தியாவில் சமற்கிருதத்தையும் அதன் வரலாற்றையும் படித்து, நாவல (இந்தியா) நாகரிகத்தின் அடிப்படைக் கூற்றைக் காண முயல்வதானது, அப்புதிரை (Problem) மிகக் கேடானதும் மிகச்சிக்கலானதுமான இடத்தில் தொடங்குவதாகும். விந்திய மலைக்குத் தெற்கிலுள்ள இந்தியத் தீவக்குறையே (Peninsula) இன்றும் சரியான இந்தியாவாக இருந்து வருகின்றது. இங்குள்ள மக்களுட் பெரும்பாலார், ஆரியர் வருமுன்பு தாங்கள் கொண்டிருந்த கூறுபாடுகளையும் மொழிகளையும் குமுகாய (சமுதாய) ஏற்பாடுகளையுமே இன்றும் தெளிவாகக் கொண்டிருந்து வருகின்றனர். இங்குக்கூட, வரலாற்றுசிரியனுக்கு உள்நாட்டுப் பாவினின்று அயல்நாட்டு ஊடையை எளிதாய்ப் பிரித்தெடுக்க இயலாவாறு, ஆரியப்படுத்தம் பேரளவு நிகழ்ந்துள்ளது. ஆயின், எங்கேனும் ஓரிடத்தில் அதை வெற்றி பெறப் பிரித்தெடுக்க இயலுமாயின், அது தெற்கில்தான். எவ்வளவு தெற்கே போகின்றேமோ அவ்வளவு பிரித்தெடுக்கும் ஏந்து (வசதி) மிகும்.

"அங்ஙனமாயின், அறிவியல் முறைப்பட்ட இந்திய வரலாற்றுசிரியன், தன் ஆராய்ச்சியை, இதுவரை மிகநீடப் பெருவழக்காகக் கையாளப்பட்டுவந்த முறைப்படி கங்கைச் சமவெளியினின்று தொடங்காமல், கிருட்டிணை காவேரி வைகையாற்றுப் பாய்ச்சல் நிலங்களினின்று தொடங்குதல் வேண்டும்."

என்று எழுதினர். இந்திய வரலாற்றுத் தந்தையாகிய **வின்சென்று சிமிது, தம் இந்திய முந்திய வரலாறு** (Early History of India) என்னும் பொத்தகத்தில் இதை மேற்கோளாகக் காட்டி,

"குமுகாய வேற்பாடுகளும் அரசியல் மாற்றங்களும் உட்பட்ட செவ்விய இந்திய முந்திய வரலாறு விரிவாக எழுதப்படும்போது, கல்விமிக்க பேராசிரியர் கொடுத்துள்ள குறிப்புக்கள் கைக்கொள்ளப்பெறும்; வரலாற்றுசிரியரும் தெற்கினின்று தொடங்குவார். அத்தகைய புரட்சிமுறையில் வரலாறு வரைதற்

கேற்ற காலம் இன்னும் வராமையால், இன்று நான் பழைய முறையையே பின்பற்றுகின்றேன்.'' என்று வரைந்து ஏறத் தாழ அரை நூற்றுண்டாகின்றது.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத் துறைத்தலைவ ராயிருந்த (P. T.) **சீநிவாச ஐயங்காரும் இராமச்சந்திர தீட்சிதரும்,** தமிழர் தென்னுட்டுப் பழங்குடி மக்களென்று நாட்டி, முறையே, தமிழர்வரலாறும் (1929), தென்னுட்டு வரலாறும் (1951), சிறந்த முறையில் எழுதியுள்ளனர்.

குமரிநாட்டுக் குறிப்பைக் கொண்ட **சிலப்பதிகாரம்** 1892-இலேயே வெளிவந்ததாயினும், 1920 - இற்குப் பின்னரே தமிழாராய்ச்சியாளரிடைக் குமரிநாட்டுக் கொள்கை வலுவுற லாயிற்று. குமரிநாடே தமிழன் பிறந்தகம் என்பது, இன்று முடிந்த முடிபும் மறுக்கொணுததுமான உண்மையாகி விட்டது. ஆயினும், ஏதேன் தோட்டக்கதை எழுத்துப்படி நம்பப்படு வதனுலும், பிராமணரின் சொல்வன்மையினுலும், தமிழரின் சொலமாட்டாமையாலும், வையாபுரித்தமிழர் தொகை வளர்ச் சியினுலும், மேலையர் இன்னும் இவ்வுண்மையை ஒப்புக் கொண்டிலர். அதனுல், தமிழரின் முன்னேர் மேலையாசியாவும் கிரீசும் போன்ற நண்ணிலக் கடற்கரை நாடுகளினின்று வந் தவர் என்னும் அடிப்படையிலேயே, மேனுட்டு மொழியாராய்ச்சி நடைபெற்று வருகின்றது. இற்றை யறிவியல்களெல்லாம் மேலை யர் கண்டு வளர்த்துவருபவை யாதலாலும், சிறந்த கருவிகள் அவரிடையுண்மையாலும், ஆராய்ச்சியில்லாரும், கற்றபேதை யரும், வேலைவாய்ப்புப்பெறும் இளைஞரும், கோடிக்குறிக்கோட் பொருளீட்டிகளும், தம் பெயர் விளம்பரத்தையே விரும்பும் தமிழ்ப்பற்றிலிகளும், மேலையர் சொல்வதையெல்லாம் தெய்வத் திருவாய்மொழியென நம்புகின்றனர் அல்லது கொள்கின்றனர்.

மொழிநூலை உலகில் தோற்றுவித்தவர் குமரி நாட்டுத் தமிழிலக்கண நூலாரேயென்றும், மொழியமைப்பில் தமிழுக் கொப்பானது வேறெம்மொழியும் இவ்வுலகில் இல்லையென்றும், மொழித்துறையில் மேலையரே தமிழரிடங் கற்கவேண்டியவரென் றும், ஆராய்ச்சியாளர் எத்துணைப் பேரறிஞராயிருப்பினும் அடிப்படை தவருயின் முடிபுந் தவருகுமென்றும், கருவிகள் எத்துணைச் சிறந்தனவேனும் அறிவற்றவையாதலின் விலக்கும்

வேறுபாடும் அறியாது என்றும் ஒரே நெறியிற் செல்லுமென்றும் மூழ்கிப்போன நிலவரலாற்றிற்கு அருங்கலந் தவிர வேறு எக்கருவியும் பயன்படாதென்றும், அறிதல் வேண்டும்.

சிறந்த கணிதரும் வானூலறிஞருமான சாமிக்கண்ணுப் பிள்ளை, தவருன அடிப்படைகொண் டாய்ந்ததனுலேயே, கோவலன் மதுரைக்குப் புறப்பட்ட நாள் 17—5—756 என்று முடிபுகொண்டு கி. பி. 2-ஆம் நூற்றுண்டு நிகழ்ச்சியை 8-ஆம் நூற்றுண்டினதாகக் காட்டிவிட்டார்.

ஒரு கொடிவழியிற் பின்னேரை முன்னேராக வைத்தாராயின், பேரன் பாட்டனையும் மகன் தந்தையையும் பெற்றதாகத்தான் முடியும். தலைகீழான அடிப்படை தலைகீழான முடிபிற்கே கொண்டு செல்லும். இங்ஙனமே, குமரிநாட்டுத் தமிழ நாகரிகத்திற்கு, நெடுங்காலத்திற்குப்பின் அதன் வழி வந்த ஆரிய நாகரிகம் மூலமாகக் கூறப்படுகின்றது.

வாழை தாழை என்னுஞ் சொற்கள் முற்றெதுகை வடிவினவேனும், 'வாழைப்பூ' என்பதுபோல் 'தாழைப்பூ' என்றுவராது. Patrimony என்பதற் கொத்த பொருள் matrimony என்னுஞ் சொற்கில்லை. இவ்வகை வேறுபாட்டைக் கருவி அறியாது.

பேரா. சீன் பிலியோசா கூறும் மின்னியல் எதிர்ப்பு மானியும் செங்கற் காலக்கணிப்பு முறையும், முறையே சவப்புதையலுள்ள இடத்திலும் நிலத்திலும் தான் பயன்படுமேயொழிய, மாந்தனுடம்பு மண்ணுஞ் சாம்பலுமாய்ப் போனவிடத்திலும் குமரிக்கண்டம் மூழ்கியுள்ள நீர்ப்பரப்பிலும், பயன்படாவென அறிக.

ஆகவே, கருவி கொண்டாராய்வதே அறிவியல் என்றும், நூலுத்தி பட்டறிவுகொண்டு ஆய்வதெல்லாம் உன்னிப்புவேலை (Guess work) என்றும் கூறுவது; அறியாமை, வெறுப்பு, அழுக்காறு, தன்னலம், அடிமைத்தன்மை ஆகியவற்றின் விளைவேயாகும். விரல் என்னும் பெயர் விரி என்னும் வினையினின்றும், தோகை என்னும் பெயர் தொங்கு (தொகு) என்னும் வினையினின்றும், திரிந்துள்ளதைக் கால்டுவெலார் கண்டுபிடித்தது கருவி கொண்டன்று; தமிழ்க் கல்வியும் சொல்லாராய்ச்சித் திறனுங் கொண்டே. ஒவ்வொரு துறையிலும், உண்மையான ஆராய்ச்சியாளர்க்குப் பிறப்பிலேயே அதற்குரிய ஆற்றல் அமைந்து விடுகின்றது. அது பின்னர்க் கல்வியாலும் பயிற்சி

யாலும் வளர்ச்சி யடைகின்றது. தேர்ச்சி பெற்ற மணிநோட்டகன், தொண்மணிகளுள் (நவரத்தினங்களுள்) எதைக்காட்டினும் உடனே அதன் உண்மையான மதிப்பைச் சொல்லி விடுகின்றான். அது ஏனையோர்க்கு இயலாமையால், அதை உன்னிப்புவேலையென்று தள்ளிவிட முடியாது. இங்ஙனமே சொல்லாராய்ச்சி அல்லது மொழியாராய்ச்சித் திறன் இயற்கையிலேயே அமையப்பெற்ற ஒருவர், இருவகை வழக்குத் தமிழையுங் கற்றபின், ஒவ்வோ ரெழுத்துஞ் சொல்லும் திரியும் வகைகளை யெல்லாங் கண்டு, வரலாறு, மாந்தநூல் (Anthropology), ஞாலநூல் (Geography), நிலநூல் (Geology), உளநூல் (Psychology) முதலிய அறிவியல்களொடு பொருந்த ஆய்வாராயின், பிறருக்குத் தோன்றாத சொல்லாக்க நெறிமுறைகளும் சொல்வேர்களும் சொல்வரலாறுகளும் அவருக்கு விளங்கித் தோன்றும். **கீற்றும்** (Skeat) **வீக்கிலியும்** (Weekley), **சேம்பர்சு** (Chambers) குழும் பாரும் தொகுத்த ஆங்கிலச் சொற்பிறப்பியல் அகரமுதலிகள், கருவித்துணைகொண்டு இயற்றப்பட்டன வல்ல.

ஒருவரது வரலாற்றை, அவர் உண்மையாகப் பிறந்த காலத்தினின்றும் இடத்தினின்றுமே தொடங்கல் வேண்டும். அஃதன்றி, வேறொரு காலத்திலும் வேறொரு நாட்டிலும் பிறந்தவராகக் கொள்ளின், அவ்வரலாறு உண்மையானதா யிருக்க முடியாது. தமிழ் அல்லது தமிழர் தோன்றிய இடம் தெற்கே மூழ்கிப்போன குமரிநாடே. ஆதலால், குமரிநாட்டை அடிப்படையாகக் கொண்டே, தமிழ், தமிழர், தமிழ்நாட்டு வரலாறுகளை வரைதல் வேண்டும். குமரிநாட்டுத் தமிழ்த் தோற்றத்தை ஒப்புக்கொள்ளாதார், தமிழரேனும் அயலாரேனும், எத்துணைத் தமிழ் கற்றவரேனும் எப்பெரும் பட்டம் பெற்றவரேனும், தமிழியல்பை அறிந்தவராகார். அதனால் தமிழர் வரலாற்றையும் அறிந்தவராகார். ஆகவே, குமரிநாட்டுக் கொள்கை தமிழ்ப் புலவரின் தகுதிகாட்டும் தனிச் சான்றாகும்.

தமிழரை என்றுந் தமக்கும், தமிழை என்றும் சமற்கிருதத்திற்கும், அடிப்படுத்த விரும்பும் பிராமணர், குமரிநாட்டுண்மையை ஒப்புக்கொள்ளின், தமிழின் முன்மையையும் ஒப்புக்கொண்டதாகு மாதலின், தமிழரும் தம்மைப்போல் வெளிநாட்டினின்று வந்தவரின் வழியினரென்றும், தமிழ் சமற்கிருதத்தினின்று கிளைத்தது அல்லது அதனால் வளம்படுத்தப் பட்டதென்றும், சொல்லியும் எழுதியும் வருகின்றனர்.

வங்கநாட்டுப் பிராமணரும் வடமொழி வெறியருமான பர். (S. K.) சட்டர்சியாரும், தென்னாட்டுப் பிராமணரும் சென்னைப் பல்கலைக்கழக வடமொழித் துறைத் தலைவருமான பர். (V) இராகவனாரும், 1952–இல் வெளிவந்த 'நந்தமோரியர் காலம்' (Age of the Nandas and Mauryas) என்னும் கட்டுரைத் தொகுதியில், மொழியும் இலக்கியமும் (Language and Literature) என்னும் கட்டுரையில், தமிழரின் அல்லது திரவிடரின் முன்னோர் நண்ணிலக் கடற்கரை வாணரென்றும், கிரேத்தாத் (Crete) தீவில் 'தெர்மிலை' (Termilai) என்றும், சின்ன ஆசியாவின் (Asia Minor) தென்பகுதியிலுள்ள இலிசியாவில் (Lycia) 'த்ர்ம்மிலி' (Trmmili) என்றும், இருந்த இருகிளை வகுப்பினரைச் சேர்ந்தவரென்றும், அவர் பெயர் ஆரியத்தில் 'த்ரமிட' அல்லது 'த்ரமிள' என்றும், பின்னர்த் 'த்ரவிட' என்றும் திரிந்ததென்றும், அவர் தென்னிந்தியாவிற்கு வந்தபின் அப்பெயர் அவர் வாயில் 'தமிழ்' என மாறிற்றென்றும், அவர்மொழியிலிருந்த g j ḍ d b என்னும் பிறங்கு நிறுத்தொலிகள் (Voiced Stops) k c ṭ t p என்னும் பிறங்கா நிறுத்தொலிகளாக (Voiceless Stops) வலித்துப் போயினவென்றும், உளறிக்கொட்டியிருக்கின்றனர். ஒரு தனிப்பட்டவர் வாழ்க்கையையேனும் ஒரு மாந்தரின வரலாற்றையேனும் ஆய்ந்து நோக்கின், பிறங்கா வொலி பிறங்கொலியாக வளர்வதேயன்றிப் பிறங்கொலி பிறங்காவொலியாகத் தளர்வது இயற்கையன்மையைக் காணலாம்.

இனி, தம் தவற்றுக் கொள்கைக்கு அரண்செய்வதுபோலக் கருதிக்கொண்டு, கன்னல், சுருங்கை, மத்திகை என்னும் தமிழ்ச் சொற்களின் திரிபான kanna, surigx (surigg), mastix (mastigos) என்னும் கிரேக்கச் சொற்களைத் தமிழ்ச் சொற்களின் மூலமென்று, தலைகீழாகக் காட்டுவர் ஆரியரும் ஆரிய அடிமையரும். இதன் விளக்கத்தை என் 'வண்ணனை மொழிநூலின் வழுவியல்' என்னும் நூலிற் காண்க.

தமிழர் தென்னாட்டுப் பழங்குடி மக்களே என்னும் உண்மையை, (P. T.) சீநிவாசையங்கார் எழுதிய Stone Age in India, History of the Tamils என்னும் நூல்களையும், இராமச்சந்திர தீட்சிதர் எழுதிய Origin and Spread of the Tamils, Pre-Historic South India என்னும் நூல்களையும், படித்துணர்க.

௬. தமிழர் வரலாறு அமையும் வகை

காட்சிப் பொருளும் கருத்துப்பொருளும் ஆகிய ஒவ்வொன்றிற்கும் தனித்தனி வரலாறுண்டு. ஆயின், ஒரு நாட்டின (National) அல்லது மக்கள் வகுப்பு வரலாறே பொதுவாக வரலாறெனப்படுவது. அதுவும், மக்கள் வரலாறு, மொழி வரலாறு, அரசியல் வரலாறு, சட்டஅமைப்பியல் வரலாறு முதலியனவாகப் பலதிறப்படும். அவற்றுள், அரசியல் வரலாறே கல்வித் துறையில் வரலாறெனச் சிறப்பாக வழங்குவது.

வரலாற்று மூலங்கள் (Sources of History)

பொதுவாக ஒரு நாட்டு வரலாற்று மூலங்கள் பின்வருமாறு எழுவகைப்படும்.

க. தொல்பொருள்கள் (Antiquities).

பழங்காலக் கருவி, ஏனம் (கலம்), கட்டிடம், காசு, நடுகல், கல்லறை, மாந்தனெலும்பு முதலியன.

உ. இலக்கியம்.

வெட்டெழுத்து (Epigraph), திருமுகம் (Royal letter or order), திருமந்திரவோலைச்சுவடி, நாட்குறிப்பு (Diary), வழிப்போக்கர் வண்ணனை, வரலாற்றுக் குறிப்புக்கள், வரலாற்றுப் பனுவல்கள் அல்லது பொத்தகங்கள் முதலியன.

வெட்டெழுத்தும் பட்டைப்பொறிப்பு, (சுடுமுன்) களிமட் குழிப்பு, கல்வெட்டு, செப்புப் பட்டையம் முதலியனவாகப் பலதிறப்படும்.

௩. செவிமரபுச் செய்திகள் (Traditions).

௪. பழக்கவழக்கங்கள்.

௫. மொழிநூற் சான்றுகள்.

௬. நிலநூற் சான்றுகள் (Geological evidence).

௭. கடல்நூற் சான்றுகள் (Oceanographic evidence).

நிலம், தட்பவெப்பநிலை, பழக்கவழக்கம், தொழில், உணவு முதலியவற்றால் மக்கள் உடலமைப்பும் நிறமும் வேறு படுவதனாலும், ஒரேயினத்தில் மட்டுமன்றி ஒரே குடும்பத்திலும் நீள் மண்டை (Dolichocephalic), குறுமண்டை (Brachycephalic), இடைமண்டை (Mesaticephalic) என்னும் மூவகை மண்டையர் பிறப்பதனாலும், இங்ஙனமே ஏனையுறுப்புக்களும் நிறமும் இயற்கையாலும் செயற்கையாலும் வேறுபடுவதனாலும், மாந்தன் மெய்யளவியலும் (Anthropometry) குலவரைவியலும் (Ethno--graphy) ஒரு மக்களின வரலாற்றிற்குப் பிற சான்றுகள்போல் அத்துணைத் தேற்றமாகப் பயன்படுவனவல்ல.

தமிழன் பிறந்தகமும் பழம்பாண்டிநாடுமாகிய தென்பெரு நிலப்பரப்பு மூழ்கிப்போனமையால், தொல்பொருளியற் சான்று (Archaeological evidence) இன்று அறவே இல்லாததாயிற்று. நீலமலை, ஆனைமலை, சேரவரையன்மலை முதலிய மலைகளிலுள்ள இற்றைப் பழங்குடி மாந்தரெல்லாம், கொள்ளைக்கும் போருக்குந் தப்பிக் கீழிருந்து மேற்சென்றவரே. அவர் மொழிகளெல்லாம், செந்தமிழ்ச் சிதைவான கொடுந்தமிழுங் கொச்சைத் தமிழுமே யன்றிக் குமரி நாட்டுத் தமிழ் வளர்ச்சி காட்டும் முந்துநிலைக ளல்ல. கற்றார் தொடர்பும் நாகரிக மக்களுறவு மின்மையால், மலைநிலத்திற் கேற்றவாறு அவர்களின் வாழ்க்கைநிலை தாழ்ந் துள்ளது. தமிழரின் கற்கால நிலையெல்லாம் குமரி நாட்டிலேயே கழிந்துவிட்டது. எந்தக் காலத்திலும், நாகரிக மக்கள் வாழும் நாட்டில் அநாகரிக மாந்தரும் வதியலாம். நாகரிகம் மிக்க இவ் விருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்திலும், தமிழ்நாட்டு வேட் டுவப் பெண்டிர் தழையுடையும் மலையாள நாட்டுத் தந்தப் புலைமகளிர் கோரையுடையும் அணிந்திருந்தனர். இதனால் தமிழப் பெண்டிர் அனைவரும் அங்ஙனமே அணிந்திருந்தனர் என்று கூறிவிட முடியாது. இராயிரம் ஆண்டுகட்கு முன்பே, பஞ்சு மயிர் பட்டுநூலால் நூற்றுக்கணக்கான ஆடைவகைகள் தமிழகத்தில் நெய்யப்பட்டன. ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்பு, சிறந்த ஆடைவகைகளெல்லாம் தமிழகத்தினின்றே மேலை நாடுகட்கு ஏற்றுமதியாயின.

துடவரையும் கோத்தரையும் முந்தியல் (Primitive) தமிழ ராகக் கொண்டு, நீலமலையைத் தமிழன் பிறந்தகம் போலப் பேரா. எக்கேல் (Haeckel) கூறுவதும், திரு. புரூசுபூட்டு (Bruce Foote) தொகுத்த பழம்பொருட்களைக் கற்காலத் தமிழர்

கருவிகளுங் கலங்களுமென்று கருதுவதும், இங்ஙனமே ஆதிச்சநல்லூர் முதலிய பிறவிடத்துப் பொருள்களை மதிப்பிடுவதும், தமிழின் தொன்மையறியார் தவறுகும். மலைவாழ் குலத்தா ரெல்லாம் முந்தியல் மாந்த ரல்லர். புதைந்து கிடக்கும் கற்கருவிக ளெல்லாம் கற்காலத்தன வல்ல. கடைக்கழகக் காலத்தில், ஓரி பாரி முதலிய சிற்றரசரும் அவர் படையினருமாகிய நாகரிக மக்களே, பறம்பு கொல்லி முதலிய மலைகளை அரணாகக் கொண்டு, அவற்றின்மேல் வாழ்ந்திருந்தமையை நோக்குக. தென்மாவாரியில் மூழ்கிக் கிடக்கும் குமரிமாநிலம் மீண்டும் எழுந்தாலொழிய, கற்காலத் தமிழரின் கருவிகளைக் காணமுடியாது. இன்று கிடைக்கும் கற்கருவிகளெல்லாம் பிற்காலத்துக் காடுவாழ் குலங்கள் செதுக்கிப் பயன்படுத்தினவையே.

இனி, பல்துறைப்பட்டனவும் அயற்சொல்லுங் கருத்தும் அறவே யில்லவுமான முதலிரு கழக ஆயிரக்கணக்கான தமிழ் நூல்களும், இயற்கையாலும் செயற்கையாலும் அழியுண்டு போனமையாலும்; அவற்றிற்குப் பிற்பட்ட கிறித்துவிற்கு முன்னைத் தமிழ்நூல்களும் ஒன்றிரண்டு தவிர ஏனைய வெல்லாம், சிதலரித்தும் அடுப்பிலெரிந்தும் குப்பையிற் கலந்தும் பதினெட்டாம் பெருக்கில் வாரி யெறியப்பட்டும் பல்வேறுவகையில் இறந்துபட்டமையாலும்; முதுபண்டை வரலாற்றிற்கு அக்காலத்து இலக்கியச் சான்றும் இல்லாது போயிற்று.

ஆரிய வருகைக்கு முற்பட்ட தனித்தமிழ் இலக்கியம் அனைத்தும் அழியுண்டு போயினும், தொல்காப்பியம், இறையனாரகப்பொருளுரை முதலிய நூல்களிலுள்ள வரலாற்றுக் குறிப்புக்கள் குமரிநாட்டுத் தமிழர் வாழ்க்கையையும் அந்நாட்டியல்பையும் பற்றியன வாதலால், அவை தமிழரின் முதுபண்டை வரலாற்றிற் குதவுவனவே.

தொல்காப்பியம் கி. மு. 7-ஆம் நூற்றுண்டு நூலேயாயினும் அதிற் சொல்லப்பட்டுள்ள செய்திகள் கி. மு. 50-ஆம் நூற்றுண்டிற்கு முந்தினவையாகும்.

> "**முந்துநூல் கண்டு** முறைப்பட எண்ணிப்
> **புலந்தொகுத் தோனே** போக்கறு பனுவல்"

என்று தொல்காப்பியரின் உடன்மாணவரான பனம்பாரனார் கூறியிருப்பதோடு, நூல்முழுதும் "என்ப" "என்மனார் புலவர்" எனச் சார்பிற் சார்பு நூன்முறையில், முன்னூலாசிரியரைத் தொல்காப்பியர் தொகுத்துக் குறித்திருத்தல் காண்க.

உலகில் முதன்முதல் எழுதப்பட்ட மொழி சுமேரியம் என்றும், அது கி. மு. 3100-இல் எழுத்துமொழியாய் வழங்கியதற்குச் சான்றுள்ளதென்றும், பிரித்தானியக் கலைக்களஞ்சியத்திற் கூறப்பட்டுள்ளது. தமிழகத்தினின்று சென்ற ஒரு கூட்டத்தாரே சுமேரியரின் முன்னோர் என்னும் உண்மையை, பேரா. இராமச்சந்திர தீட்சிதர் எழுதியுள்ள 'தமிழரின் தோற்றமும் பரவலும்' (Origin and Spread of the Tamils) என்னும் நூலிற் கண்டு தெளிக.

தமிழிலக்கணம், தமிழிலக்கியப் பாகுபாடு, தமிழ் மரபு, குமரிநாட்டுத் தமிழர் வகுப்புக்கள், அவர் தொழில்கள், அவர் மணமுறை, அவர் பழக்கவழக்கம், அக்காலத்து அரசியல், அக்காலப் போர்முறை முதலியன தொல்காப்பியத்திற் சொல்லப்பட்டுள்ளன.

இறையனா ரகப்பொருளில், முக்கழக வரலாறும், தென்மதுரை கதவபுரம் (கவாடபுரம்) என்னும் பழம்பாண்டி நாட்டுத் தலைநகர்ப் பெயர்களும், கழகப் பாண்டியர் புலவர் தொகையும்; சிலப்பதிகாரத்தில், பஃறுளியாறும் குமரிமலையும் முதற்கடல் கோளும் பாண்டிய ஆள்குடி முன்மையும்; அடியார்க்கு நல்லாருரையில், முழுகிப்போன பழம்பாண்டி நாட்டு நிலப்பரப்பும், அதன் தென் வட வெல்லைகளும், அவற்றிடைப்பட்ட பல்வேறு நாடுகளும்; புறநானூற்றில், பஃறுளியாறும் அவ்வாற்றையுடைய பாண்டியன் பெயரும்; கலித்தொகையில், இரண்டாங் கடல்கோளும் அதற்குத் தப்பிய பாண்டியன் செய்கையும்; குறிக்கப்பட்டுள்ளன.

முதலிரு கழகமும் வரலாற்றிற்கு முற்பட்ட நெடுஞ் சேய்மைக் காலத்தன வாதலின், அக்காலத்துப் புலவர் பெயர்களும் நூற்பெயர்களும் தவறாகக் கூறப்பட்டுள்ளன. குமரி நாட்டின் தொன்மையையும் அந்நாட்டையாண்ட பாண்டியர் தொகையையும் தமிழின் முன்மையையும் நோக்கின், முக்கழக வரலாற்றிற் குறிக்கப்பட்டுள்ள கால அளவுகள் நம்பத் தகாதனவும் நிகழ்ந்திருக்கக் கூடாதனவும் அல்ல. கடைக் கழகத்திற்குக் குறிக்கப்பட்டுள்ள கால அளவில், இடைக் கழகத்திற்கும் அதற்கும் இடைப்பட்ட காலமும் சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பஃறுளியா றென்பது திருவாங்கூர் நாட்டிலுள்ள பறளியாறென்றும், அதன் கயவாயில் கடலரிப்பாற் கரைநிலங் கரைந்து போனதையே, இளங்கோவடிகளும் பிறரும் ஒரு தென்பெரு

நிலத்தைக் கடல்கொண்டதாகக் கூறி விட்டனரென்றும், தமிழ்ப்பகைவரான சில ஆரியர் ஒரு புரளியை உண்டு பண்ணியுள்ளனர். தென்பாலிமுகம், தென்மதுரை, பன்மலைத் தொடரான குமரிமலை, ஏழேழ்நாடுகள், பிறநாடுகள், குமரியாறு, எழுநூற்றுக் காதவழி முதலிய செய்திகளுள் ஒன்றுகூட அவர் கூற்றால் விளக்கப்படாதிருத்தல் காண்க.

இடைக்கழகத்தில் எண்ணாயிரத் தெச்சம் தமிழ் நூல்கள் இருந்தன, என்பது போன்றவை செவிமரபுச் செய்திகள்.

பழக்க வழக்கங்கள் என்பன, இலக்கியத்திற் சொல்லப்பட்டுள்ளனவும் இன்று நடைமுறையிற் காண்பனவுமான பல்துறை மரபு வினைகள்.

தமிழின் தோற்றம், வளர்ச்சி, அமைப்பு, (சொல்) வளம், தொன்மை, முன்மை, தாய்மை, தலைமை முதலிய நிலைமைகளை யுணர்த்தும் சொற்களும் சொல்லமைப்பும் சொற்றொடரமைப்பும் மொழியியற் சான்றுகளாம்.

பல்வேறு ஊழிகளில், நீர்வினையாலும் நெருப்புவினையாலும் தோற்றமும் மாற்றமுமடைந்த, நிலப்படைகளும் பாறைகளும் மலைகளும் நிலநூற் சான்றுகளாம்.

நாடும் நகரும் ஆறும் மலையும் கடற்குள் மூழ்கியிருப்பதும், கடலின் பரப்பும் எல்லையும் ஆழமும் வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு வகையில் மாறியிருப்பதும், கடல்நூற் சான்றுகளாம்.

கடைக் கழகத்திற்குப் பிற்பட்ட தமிழக வரலாறு, ஆள்குடி (dynasty) வாரியாகவும் ஆள்நில (territory) வாரியாகவும் நூற்றுண்டு வாரியாகவும், அரச வாரியாகவும் வெவ்வேறு வரலாற்றுசிரியரால் இயன்றவரை காலக்குறிப்புடன் விளத்தமாக வரையப்பட்டுள்ளது. ஆதலால், கடைக்கழகத்திற்கு முற்பட்டது மக்கள் வரலாறுகவே யிருக்க, பிற்பட்டதே மக்கள் வரலாற்றோடு அரசியல் வரலாறுகவும் அமைதல் கூடும்.

"கி. பி. 900-இற்கு முற்பட்ட தென்னாட்டுத் தமிழரையங்களின் துல்லிபமான காலக்குறிப்போடு கூடியத் தூய கிளத்தியல் (narrative) அரசியல் வரலாற்றை இன்றெழுத வியலாது.........
.........இதற்கு மறுதலையாக, துல்லிபமான காலக்குறிப்பை

நீக்கியமைவோமாயின், திரவிடரின் குமுகாய வரலாற்றைத் தொகுத்து வரைதற்கு வேண்டிய கருவிச் சான்றுகள் பேரளவில் உள்ளன என நம்புகின்றேன். அத்தகைய வரலாறு, திரவிட இனங்களின் மொழிகளிலும் இலக்கியங்களிலும் பழக்க வழக்கங் களிலும் போதிய அளவு தேர்ச்சிபெற்ற புலவரால். வரையப் பெறின், அது அனைத்திந்திய வரலாற்ருசிரியனுக்கு இன்றிய மையாத துணையாயிருப்பதுடன், இந்திய நாகரிக வளர்ச்சி மாணவன் தன் துறைப்பொருளை உண்மையான அமைப்பிற் காணவுஞ் செய்யும்.'' என்று **வின்சென்று சிமிது** வரைந்திருத் தல் காண்க. ‡ அவர் காலத்திற்குப்பின் பல கருவி நூல்கள் வெளிவந்துள்ளமையால் இன்று தமிழக அரசியல் வரலாற்றை 7-ஆம் நூற்ருண்டினின்று தொடங்குதல் கூடும்.

தமிழ்மொழி, குமரி நாட்டு மாந்தர் தம் கருத்தை யறிவித் தற்கு முதன் முதலாக வாய்திறந் தொலித்த காலந்தொட்டு, இன்று வரை இடையருது தொடர்ந்து வழங்கிவருவதனுலும்; இயற்கையாலும் செயற்கையாலும் சிதைவுண்டு மிக வளங் குன்றியுள்ள இந்நிலையிலும், தமிழரின் கொள்கை கோட்பாடு களையும் நாகரிகப் பண்பாடுகளையும் மதிநுட்பத்தையும் பேரளவு தெரிவிப்பதனுலும்; எழுவகை வரலாற்று மூலங்களுள்ளும் தலை சிறந்தது மொழியியலே யாம். அதனுல், பெரும்பால் அதனையும், சிறுபால் இலக்கியத்தில் ஆங்காங்குள்ள வரலாற்றுக் குறிப்புக் களையும், துணைக்கொண்டே இந்நூல் எழுதப்படுகின்றது.

தொடக்கந் தொட்டு இன்றுகாறும் தமிழ்மக்கள் வரலாற் றையே இந்நூல் கூறுவதால், கிளத்தியல் முறையல்லாது வண் ணனை (descriptive) முறையிலேயே இருக்குமென்றும், நாகரிகக் காலத்திற்கு முந்திய கற்காலச் செய்திகள் சில உத்திக்கும் இயற் கைக்கும் ஒத்த உய்த்துணர்வாகவே யிருத்தல் கூடுமென்றும், அறிதல் வேண்டும்.

ஆரியர் வருகைக்கு முற்பட்ட தனித்தமிழ்க்காலச் செய்தி களைக் கூறும் **தனிநிலைக்காண்டம்**, ஆரியர் வந்தபின் ஆரியச் சொல்லுங் கருத்தும் தமிழிலும் தமிழிலக்கியத்திலும் தமிழர் வாழ்க்கையிலும் கலந்ததைக் கூறும் **கலவுநிலைக்காண்டம்**, ஆங் கிலர் வந்தபின் தமிழ்மொழியும் தமிழிலக்கியமும் தமிழர்உள்ள மும் ஆரியக் கலப்பு நீங்கித் தெளிந்ததைக் கூறும் **தெளிநிலைக் காண்டம்** என முப்பெரும் பகுதிகளைக் கொண்டது இந்நூல்.

---

‡ Early India, pp. 7 and 8.

தமிழர் வரலாறு

"பொய்யகல நாளும் புகழ்விளைத்த லென்வியப்பாம்
வையகம் போர்த்த வயங்கொலிநீர்—கையகலக்
கற்றோன்றி மண்டோன்றாக் காலத்தே வாளோடு
முற்றோன்றி மூத்த குடி."

(புறப்பொருள் வெண்பாமாலை, ௩௫.)

I. தனிநிலைக் காண்டம்

1. கற்காலம் (Stone Age)
(தோரா. கி. மு. 5,00,000—50,000.)

முந்தியல் தமிழரான அநாகரிக மாந்தர் கல்லாற் பல்வேறு கருவிகளைச் செய்து கொண்ட காலம் கற்காலமாகும். அது பழங் கற்காலம், புதுக்கற்காலம் என இரு பிரிவினது.

(க) பழங் கற்காலம் (Old Stone Age)
(தோரா. கி. மு. 5,00,000—1,00,000.)

தமிழரின் முதற்கால முன்னோரான குமரிநாட்டு மாந்தர், பொன்னம் (metal) ஒன்றும் கண்டுபிடிக்கு முன், கில்லி (கல்லி), வெட்டி, குத்தி, கத்தி, உளி, சுத்தி (சுத்தியல்), சமட்டி (சம்மட்டி), குந்தம், கூந்தாலம், கோடரி, குத்துக் கோடரி முதலிய கருவிகளைக் கல்லால் முரட்டு வேலைப்பாடாகச் செய்து, பயன்படுத்தி வந்த காலம் பழங்கற்கால மாகும்.

அவர் வாழ்ந்த இடம் குமரிமலைத்தொடரின் அடிவாரமான குறிஞ்சி நிலம்.

அவர் செய்த தொழில் காய்கனி பறித்தல், கிழங்ககழ்தல், தேனெடுத்தல், வேட்டையாடல் என்பன. கிழங்கு தோண்டற்குக் கோணலில்லாத கொம்பையும் கூராகச் செதுக்கிய வன் குச்சையும், வேட்டையாடற்குக் கல்லையும் குறுந்தடியையும் நெடுந்தடியையும் பயன்படுத்தி யிருத்தல் வேண்டும்.

அவர் உண்டவுணவு பச்சையும் சுட்டனவுமான இயற்கை விளைவுகளும் வேட்டைக் கறியும் ஆகும். வேனிற் காலத்தில் மூங்கிலும் மரங்களும் உராய்ந்து பற்றிய நெருப்பில் அகப்பட்டுச் செத்த விலங்கு பறவையூன், சுவையாகவும் மெதுவாகவும் இருந்தது கண்டு, வேட்டைக்கறியைச் சுட்டுத் தின்னும் பழக்கத்தை மேற்கொண்டிருத்தல் வேண்டும்.

அவர் உடுத்திய உடை, கோரை தழைத் தொடையும் தையிலையும், மரப்பட்டையும் விலங்குத்தோலுமாகும். ஆப்பிரிக்க அநாகரிக மாந்தர், இந்நூற்றுண்டு முற்பகுதியிலும், சில மரப் பட்டைகளை ஊறவைத்துத் தட்டி விரிவாக்கி ஆடையாக அணிந்தனர். குமரிநாடு தென்னாப்பிரிக்காவுடன் இணைந்திருந்ததனால்,குமரிநாட்டு மாந்தரும் அநாகரிக நிலையில் அத்தகைய மரவுரியை அணிந்திருத்தல் வேண்டும்.

அவர் உறையுள் (தங்குமிடம்) மலைக்குகை, பல்கவர் மரக்கவடு, பரண், கல்லால் அமைத்த வளிமறை* ஆகியவை.

அவர் அணிந்த அணிகள், மருக்கொழுந்து போலும் நறுந்தழை, மணமுள்ள அல்லது அழகிய மலர், மயிற்பீலி, சேவலிறகு, புலிப்பல் தாலி முதலியன.

அவர் புழங்கிய நீர்க்கலம் மூங்கில் நாழியும் சுரைக் குடுக்கை போன்ற நெற்றுக் கூடும்.

அவர் மணமுறை, பருவம் வந்தபின், பெரும்பான்மை ஆண்பாலார், ஒரோவிடத்துப் பெண்பாலார், இணைவிழைச்சு வேட்கை நேர்ந்த போதெல்லாம் எதிர்ப் பாலாரை இசைவித்தோ இசையுமாறு வற்புறுத்தியோ வலிந்தோ புணரும் பொதுமணம் (Promiscuity) ஆகும். கூடிவாழும் குடும்ப வாழ்வு அவரிடை யில்லை. அதனால், ஒரு தலைவனுக்குக் கட்டுப்பட்ட

---

* காற்றை மறைக்கும் சிறு குடில்

குடிவாழ்வும் (Community life) அவரிடையில்லை, விலங்குகளும் சில பறவைகளும் போல், பகலில் உணவுதேடி யுண்பதும், பழகியவிடத்தில் இராத்தங்குவதுமே அவர் இயல்பாயிருந்தது.

கொடிய விலங்குகள் எதிர்ப்பட்டபோது அல்லது இருப்பிடம் வந்து தாக்கியபோது, அவர் தம்மிடமுள்ள கற்கருவியுந் தோமரமுங்கொண்டு சிலவற்றை எதிர்த்துக் கொன்றிருத்தல் வேண்டும்; கொல்லமுடியாத வலியவற்றிற்கு மரத்தின் மீதேறியோ புதருள்ளும் பொதும்பருள்ளும் மறைந்தோ தப்பியிருத்தல் வேண்டும்; அரிமாவும் யானையும் போன்றவற்றை இராக்காலத்தில் தீ வளர்த்து விரட்டியிருத்தல் வேண்டும். மாடுகளொடும் பகைவரொடும் போரிட நாகரைப் போல் தலையிலுங் கொம்புகளை அணிந்திருக்கலாம்.

முதற்காலத்தில் தீயைக் கண்டு மிகமிக அஞ்சினரேனும், பின்பு மெல்லமெல்ல அதன் பல்வகைப் பயன்பாட்டைக் கண்டு, விலங்காண்டி மாந்தரும் அதைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். அணுகாதும் அகலாது மிருந்து குளிர்காய்தல், இறைச்சி சுடுதல், இருள் நீக்கல், குளவியைக் கலைத்துத் தேனெடுத்தல், கொடுவிலங்கு வெருட்டல் முதலியன தீயின் பயன்கள். நிமிர்ந்த குரக்கு மாந்தன் (Pithecanthropus Erectus), என்னும் சாவி (சாவக) மாந்தனினும் முந்தியவனான பீக்கின் மாந்தன் என்னும் சீன மாந்தன் (Sinanthropus Pekinensis), நெருப்பைத் தன் குகையில் வைத்துப் பயன்படுத்தியதாகச் சொல்லப்படுவதால், சாவிமாந்தனை யொத்த குமரிமாந்தன் நெருப்பைப் பயன்படுத்தியதில் வியப்பொன்றுமில்லை.

நன்மையோ தீமையோ இரண்டுமோ செய்தவற்றையும் செய்வதாகக் கருதப்பட்டவற்றையும், முதற்கால மாந்தர் தெய்வமாக வணங்கி வந்தனர். அவை தீ, கதிரவன், திங்கள், இறந்தோர்ஆவி, பேய், நாகம் முதலியன. தெய்வம் என்னும் பெயர் தீயைக் குறிக்குஞ் சொல்லினின்று தோன்றியதே. மரங்களின் உராய்வு, இடி, மின்னல் ஆகிய மூவகைகளில் இயற்கைத் தீ உண்டாயிருத்தல் வேண்டும். தீப்பற்றியெரியுங் கிளைகளினின்று, கொள்ளிக் கட்டைகளைப் பிரித்தெடுத்துக் கொண்டுபோய்ப் பழங்கற் கால மாந்தர் பயன்படுத்தியிருத்தல் வேண்டும்.

மரந்தொறும், மலைதொறும், நீர்நிலைதொறும் ஆவி அல்லது பேய் குடிகொண்டிருந்ததாகவும், பழங்கால மாந்தர் நம்பினர்.

இறந்தவருடம்பைக் குடியிருப்பிற்குச் சற்றுத்தொலைவான இடத்திலுள்ள குழியிலிட்டு, காகங்கழுகும் நரியோரியும் தின்னுவாறு மண்ணால் மூடிவிடுவது அவர் வழக்கம்.

மொழித்துறையில், **இயற்கை மொழி** (Natural Language) அல்லது **முழைத்தல் மொழி** (Inarticulate Speech) என்னும் முந்துமொழிக் குரிய.

(க) உணர்ச்சியொலிகள் (Emotional Sounds)

(உ) விளியொலிகள் (Vocative Sounds)

(௩) ஒப்பொலிகள் (Imitative Sounds)

(ச) குறிப்பொலிகள் (Symbolic Sounds)

(ரு) வாய்ச்செய்கை யொலிகள் (Sounds produced with oral gestures)

(சா) சுட்டொலிகள் (Deictic Sounds)

ஆகிய அறுவகை யொலிகளும், பழங்கற்காலத்திலேயே முறையே தோன்றியிருத்தல் வேண்டும். அதன் இறுதிக் காலத்தில் ஆத்திரேலியா நோக்கியும் தென்னாப்பிரிக்கா நோக்கியும் குமரிமாந்தர் படர்ந்திருத்தல் வேண்டும். நால்வகையெழுத்தில் முதலதான படவெழுத்து (Picture writing or Pictograph) பழங்கற்காலத்தில் தோன்றியிருத்தல் வேண்டும்.

இயற்கையுணவு தேடத் தெரிந்ததும், எளிய உறையுள் அமைத்ததும், அற்றம் மறைத்ததும், அழகுணர்ச்சி தோன்றியதும், தீயைப் பயன்படுத்தியதும், இயற்கைமொழி வளர்த்ததும், படவெழுத் தைப்பயன் படுத்தியதும் பழங்கற்கால மாந்தரின் அறிவுநிலை யென்னலாம்.

(உ.) புதுக் கற்காலம் (New Stone Age)

தோரா. கி. மு. 1,00,000 — 50,000

முந்தியல் குமரிமாந்தர், பழங் கற்காலக் கருவிகளைத் திண்கனக் கருங்கல்லால், வழவழப்பாகவும் மிகக் கூரியனவாகவும் செய்துகொண்ட காலம் புதுக் கற்காலமாகும்.

அவர் வாழ்ந்த இடம் குறிஞ்சியும் அதையடுத்த முல்லையுமாகும். வாழ்க்கைத் திருத்தத்தாலும் மாந்தர் தொகைப் பெருக்காலும், இயற்கையாகவே அவர் முல்லை நிலத்திலும் பரவியிருத்தல் வேண்டும்.

அவர் செய்த தொழில், பெரும்பான்மை கால்நடை வளர்ப்பும் வானவாரிப் பயிர் விளைப்பும்; சிறுபான்மை பழங் கற்கால மாந்தர் செய்தன.

மலையடி வாரங்களிலும் மலைமேலும் வாழும் ஆடு மாடு எருமை ஆகிய மூவிலங்கினங்களையும், அவர் பிடித்துப் பழக்கி வீட்டு விலங்காக்கினர். மூன்றும் பால் தந்தன. ஆடு பால்தருவதொடு ஊனுணவுமாயிற்று. காளைமாடும் கடாவெருமையும் ஏருழவிற்குப் பயன்பட்டன. மானையும் ஆமானையும் காட்டுப்பன்றியையும் முயலையும் உடும்பையும் பிடித்து ஊனுணவிற்குப் பயன்படுத்தினர். இன்று பன்றியிறைச்சி யுண்பவர் ஒருசாராரே. அவரினுஞ் சிறுதொகையினர் மாட்டிறைச்சி யுண்பவர். பறவைகளுள், கோழி, புறு, குயில், காடை, கதுவாலி ஆகியவற்றின் ஊனை விரும்பியுண்டனர். காட்டுக்கோழியைப் பழக்கி வீட்டுக் கோழியுமாக்கினர்.

வானவாரிப் பயிர்கள் என்பன, ஏர்க்காடும் கொத்துக்காடுமாகிய நிலத்தில் மழையினாலேயே விளைந்த, தினை வரகுபோன்ற சிறுதவசங்களும் அவரை துவரை போன்ற பயறு வகைகளுமாகும். புல்வெளிகளா யுள்ளவற்றைக் கால்நடை மேய்ச்சலுக்கு விட்டுவிட்டு, குறுங்காடும் பெருங்காடுமா யுள்ளவற்றைத் தீயினாற் சுட்டெரித்துக் கொன்று விளை நிலமாக்கிய விடம், பிற்காலத்திற் **கொல்லை** யெனப்பட்டது. அடர்ந்த மரஞ்செடி கொடிகளால் இருண்டு கிடவாது வெட்டவெளியான நிலமெல்லாம், கண்ணிற்குப் புலனானதினால், புலம் எனப்பட்டது.

"புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினும்" (புறம், கoகூ:க௨)

"புலங்கெட விறுக்கும் வரம்பில் தானை" (ஷை கசு:கூ)

என்னும் அடிகளை நோக்குக.

விளைநிலத்திலும் வீட்டிலுமுள்ள கூலங்களை எலிகள் தின்று கெடுத்ததனால், அவற்றைக் கொல்லக் காட்டுப் பூனையையும்; ஆடுகளை நரிகள் பிடித்துத் தின்றதனால், அவற்றை விரட்டி மந்தையைக் காக்கக் காட்டு நாயையும்; வீட்டிற் பழக்கினர்.

அடிக்கடி தேகம் பூசுவதால் (உரசுவதால்)

~~நிலத்திற் பூசிப்பூசி மெத்தென்று நடப்பதால்~~, பூனை பூசை யெனப்பட்டது. பூசு—பூசை—பூனை—பூனை. நாய்க்கு ஆட்பற்றுப்போல் பூனைக்கு இடப்பற்று மிகுந்திருப்பதால், தொல்வரவுணர்ச்சி மிக்க ஆண்பூனை பருத்துக் கொழுத்த நிலையில் இன்றும் காட்டிற்குச் சென்று, கண்டார் அஞ்சத்தக்க வெருகாகி விடுகின்றது.

“வெவ்வாய் வெருகினைப் பூசை என்றலும்” (தொல். மர. சுஅ)

“வெருக்கு விடையன்ன வெருணோக்கு” (புறம். நஉச)

“பிள்ளை வெருகின் முள்ளெயிறு புரைய” (ஷ ககஎ)

என்பவற்றால், தமிழகத்திற் காட்டுப்பூனை தொன்றுதொட்டு இருந்துவருவதை அறியலாம்.

இனி, மேலையாரியப் பூனைப் பெயர்கள் தமிழ்ச்சொல்லின் திரிபாயிருத்தலால், தமிழகத்தினின்றே பூனை ஐரோப்பாவிற்குச் சென்றதாகத் தெரிகின்றது.

பூசை—E. puss—pussy, MLG. pus, Norw. puse, Du. poes இதன் மூலம் தெரியவில்லை யென்றும், ஒருகால் முதற்காலத்தில் இது ஒரு பூனைவிளிச் சொல்லாயிருந்திருக்கலாமென்றும், எருதந்துறை (Oxford) ஆங்கில அகரமுதலி கூறுகின்றது. நெல்லை வட்டாரத்தில் இன்றும் பூனையைப் பூசுபூசு என்று அழைப்பதைக் காணலாம்.

கொத்தி (க.) — E. cat, OE. catte, ME. catt(e), LL. cattus, catta, ONF. cat, F. chat, ON. kottr, OHG. kazza. கொத்தை = குருடு குருடன். பூனைக்குப் பகலிற் சரியாகக் கண் தெரியாமையாற் கொத்தி யெனப்பட்டது. இதன் விரிவை என் ‘செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி’யிற் காண்க.

முல்லை நிலத்தை உழக் கலப்பையையும், வேட்டையாடற்கு வளரி—வணரி (வளைதடி), கவண், வில் முதலிய கருவிகளையுங் கையாண்டனர். கல்லோடு, மரம், கொம்பு, மருப்பு (தந்தம்), எலும்பு முதலியனவும் முதற்கருவியாகப்பயன் படுத்தப்பட்டன. மாட்டுக் கொம்பும் எருமைக் கொம்பும் யானை மருப்புமே முதற்கண் வளைதடியாகப் பயன்பட்டிருத்தல் வேண்டும். அவை கிடையா விடத்தே அவை போன்ற வளைதடிகளைப் பயன் படுத்தியிருப்பர்.

முல்லைநிலப் பாறைகளிலுள்ள பள்ளங்களிலும் குழிகளிலுமுள்ள நீர், கதிரவன் வெம்மையாலும் காட்டுத் தீயாலும் காய்ந்தபோது, அதிற்கிடந்த உணவுப் பொருள்கள் சுட்டவுணவினும் பருத்தும் மென்மையாகியும் சுவைமிக்கும் இருந்ததைக் கண்ட மாந்தர், கற்கலங்களில் வரகு தினை முதலியவற்றின் அரிசியைச் சோருக்கவும், அவரை துவரை முதலிய பயறுகளை அவிக்கவும், கற்றுக்கொண்டனர். பட்டமரங்கள் உராய்ந்து அடிக்கடி நெருப்பெழக் கண்டதினால், இயற்கை நெருப்பில்லாத போது ஞெலிகோலாற் கடைந்து செயற்கை நெருப்பையும் உண்டாக்கிக் கொண்டனர். வீடுதொறும் நாள்தொறும் வேளை தொறும் தீக்கடையத் தேவையில்லாவாறு, ஊர் முழுவதற்கும் பொதுவாக ஓர் இடத்தில் இரவும் பகலும் கட்டையெரிய விட்டு அவியாநெருப்பைப் பேணியிருத்தலும் வேண்டும்.

உடுக்க மரவுரி போன்ற நாராடையும், போர்த்திக்கொள்ள ஆட்டு மயிர்க் கம்பளியும், முதற்கண் கைப்பின்னலாகவும் பின்னர்த் தறிநெசவாகவும், அவர் செய்து கொண்டனர். படுக்க மூங்கிற்பாயும் ஓலைப்பாயும் முடைந்து கொண்டனர்.

சந்தனச் சேற்றுலும் வண்ணச்சாந்தாலும், இருபாலாரும், சிறப்பாகப் பெண்டிர், மேனிமுழுதும் பல்வேறு ஓவியம் வரைந்து கொள்வதும், நிலையாயிருக்குமாறு பல்வகை யுருவங்களைப் பச்சை குத்திக் கொள்வதும், பெருவழக்காயிருந்தது.

குடியிருக்க வட்டமான கூரை வீடுகளைக் கட்டிக் கொண்டனர். முதலில் மரத்திலும் மரத்தடியிலும் வதிந்ததனால், வட்டமாகக் கிளைகள் படர்ந்தும் நிலத்திற்படிந்துமுள்ள மரத்தின் போங்கைப் பின்பற்றி, வீட்டின் வடிவை அமைத்ததாகத் தெரிகின்றது. சுற்றுச் சுவரைக் கல்லுள்ள விடத்தில் மட்சாந்து பூசிக் கல்லாலும், அஃதில்லாவிடத்தில் மண்ணாலும், அமைத்தனர்.

கூலங்களும் காய்கறிகளும் போன்ற கெட்டிப் பொருள்களை இட்டுவைப்பதற்கு, பனைநார்ப் பெட்டிகளும் மூங்கிற் கூடைகளும் முடையப்பட்டன. நீரையும் நீர்ப்பொருள்களையும் வார்த்து வைப்பதற்கு, மூங்கில் நாழியும் மரத்திற் கடைந்து கொண்ட குடைகாலும் ஆட்டுத் தோற்பையும் பயன்படுத்தப் பட்டன. சமைப்பதற்குக் கற்கலம் உதவிற்று. கல்லுதல் தோண்டுதல், அல்லது குடைதல். கல்லப்பட்ட ஏனம் கலம் என்னப்பட்டது.

ஆடுமாடு உடும்பு முதலியவற்றின் தோலை மரத்திலும் கலத்தின் வாயிலும் கட்டி உலர்த்தியபோது, குச்சுங் கையும் பட்டு இன்னோசையெழுந்ததைக் கண்டு துடி தொண்டகம் முதலிய தோலிசைக் கருவிகளும்; வண்டினால் துளைக்கப்பட்ட மூங்கிற் குழாயிலும் நாணல் தட்டையிலும் காற்றுப்புகுந்தபோது, இனிதாய் ஒலித்ததைக் கண்டு புல்லாங்குழலும்; முறுகக்கட்டிய வில்லின் நாண் தெறித்தபோது, இன்னிசை பிறந்ததைக் கண்டு வில் யாழ் என்னும் நரப்பிசைக் கருவியும்; நாளடைவிற் புதுக் கற்கால மாந்தர் புனைந்துகொண்டனர்.

இன்பத்திற்கு மட்டுமன்றி, வேளைக்குவேளை உண்டி சமைக்கவும், தொழிலுக்குத் துணையாயிருக்கவும், உடைமைகளைப்பாது காக்கவும், நோய்நிலையில் நலம் பேணவும், ஒரு பெண் நிலையாக வீட்டிலிருக்க வேண்டியிருந்ததால்; வீட்டு வாழ்க்கை ஏற்பட்டபோதே, ஓர் ஆடவனும் பெண்டும் கூடிவாழும் கூட்டு வாழ்க்கையும் ஏற்பட்டது. அது இல்வாழ்க்கையென்று பொதுவாகச் சொல்லப்படினும், கூட்டு வாழ்க்கைக்கும் குமுகாய வாழ்க்கைக்கும் உரிய இன்றியமையாத அறங்களைத் தழுவியதால், இல்லறம் எனச் சிறப்பித்துச் சொல்லப்பெறும்.

அக்காலம் இல்வாழ்க்கைத் தொடக்கக் காலமாதலால், பன் மனைமணமும் (polygamy) தீர்வை (divorce) முறையும் பெரு வழக்காயிருந்தன. பெற்றோரும் பெண்ணும் இசையாதவிடத்து வன்கவர்வும் கள்ளக்கடத்தமும், சூளுரைத்துப் பெண்ணொடு களவாகக் கூடியபின் சூளை மறுத்தலும் நிறைவேற்றாமையும், பலரறியக் கூடியபின் ஒரு பெண்ணைக் கைவிடுதலும், அடிக்கடி நிகழ்ந்தன.

கணவனும் மனைவியுங் கூடியே மகப்பெறினும், வெளிப்படையாகச் சூல்கொண்டு பத்து மாதம் இடர்ப்பட்டுச் சுமந்து பெருநோவொடு பிள்ளை பெறுவதால், பிள்ளைகளின் மீதுள்ள உரிமையும் அதிகாரமும் நெடுங்காலம் தாய்க்கே இருந்து வந்தது. இதில் தந்தைமார் தமக்கும் பங்குகோடற்கு, 'இணியற்படுக்கை' (Couvade) என்னும் ஒரு வலக்காரத்தைக் கையாண்டனர். அதாவது, மனைவி பிள்ளை பெற்றவுடன், கணவனும் அவளைப் போல் நோவுற்றதாக நடித்துப் படுத்துக்கொண்டு, தனக்கு

மகப்பேற்று மருத்துவம் பார்க்கச் சொல்வது. ''குறத்தி பிள்ளை பெற, குறவன் காயந் தின்றான்.'' என்னும் தமிழ்ப் பழமொழி, இன்றும், பண்டை ஆப்பிரிக்க மாந்தரின் வழக்கத்தையொத்த வினை குமரி நாட்டிலும் இருந்ததைக் குறிப்பாக உணர்த்துகின்றது.

இல்வாழ்க்கையும் நிலையான கூட்டுக்குடியிருப்பும் ஏற்பட்டதனால், ஆங்காங்குப் பற்பல ஊர்கள் தோன்றிப் பெருகின. ஒவ்வோர் ஊரிலும் குடிவாணர் பெரும்பாலும் பல்தலைமுறைப் பட்ட ஒரே மாபெருங் குடும்ப வுறவினராயிருந்ததனால், அக் குடும்ப முதியோனே தலைவனாயிருந்து, குற்றவழக்குத்தீர்த்துத் தண்டித்தும் முறை செய்தும் வந்தான். அக்காலத்தில் மக்கள் வாழ்வு நீண்டிருந்ததனால், மகன், தந்தை, பாட்டன், பூட்டன், ஓட்டன் (சேயான்) என்னும் ஐந்தலைமுறையினரும் ஒரே காலத்தில் வாழ்ந்திருந்தனர்.

ஆடுமாடுகட்குப் புல்விளையவும் வானவாரிப் பயிர்களை விளைவிக்கவும் மழை இன்றியமையாததாயிருந்ததனால், மழைத் தெய்வம் அல்லது முகில் தெய்வம் பழங்கற்காலத் தெய்வங்களுடன் புதிதாகவும் சிறப்பாகவும் வணங்கப்பெற்றது. குமரி மொழி, முழைத்தல்மொழி நிலையினின்று இழைத்தல் மொழியில் (Articulate Speech),

(க) அசைநிலை (Isolating or Monosyllabic Stage)

(உ) புணர்நிலை (Compounding Stage)

(ங) கொளுவுநிலை (Agglutinative Stage)

(ச) பகுசொன்னிலை (Inflexional Stage)

என்னும் நால்நிலைகளைப் புதுக்கற்காலம் முடியுமுன் கடந்திருத்தல் வேண்டும். அன்று கருத்தெழுத்துத் (Ideograph) தோன்றியிருத்தல் வேண்டும்.

அசைநிலைக்காலத்திற் சீனரின் முன்னோரும், கொளுவு நிலைக் காலத்திற் சித்தியரின் முன்னோரும், பகுசொன்னிலைக் காலத்தொடக்கத்திற் சுமேரியரின் முன்னோரும், குமரி நாட்டினின்று பிரிந்து போயிருத்தல் வேண்டும்.

சுமேரியர் பிரிந்துபோனதை இராமச்சந்திர தீட்சிதர் எழுதிய 'தமிழரின் தோற்றமும் பரவலும்' (Origin and Spread of the Tamils) என்னும் நூலிற் கண்டு தெளிக. நகர் என்று பொருள்படும் 'ஊர்' என்னும் பாபிலோனிய நகர்ப் பெயர் தமிழாயிருப்பதையும், அப்பன் என்னும் முறைப் பெயர் கல்தேயர் (Chaldees) அல்லது பாபிலோனியர் மொழியில் ஆப் என்று திரிந்திருப்பதையும், நோக்குக.

தீயுண்டாக்கல், சமைத்தல், வானவாரிப் பயிர் விளைத்தல், கால்நடை வளர்ப்பு, நெசவு, இல்வாழ்க்கை, ஊராட்சி, இழைத்தல் மொழியமைத்தல், கருத்தெழுத்தைப் பயன்படுத்தல் என்பன புதுக்கற்கால மாந்தரின் அறிவுநிலையைக் காட்டும்.

கற்கால மாந்தரிடை வகுப்பு வேறுபாடின்மை

கற்கால மாந்தர் பழங்கற்காலத்திற் குறிஞ்சி நிலத்திலும் புதுக்கற்காலத்திற் குறிஞ்சியிலும் அதையடுத்த முல்லை நிலத்திலும் வதிந்தாரேனும், திணை நிலம் பற்றியோ தொழில் பற்றியோ தெய்வ வணக்கம் பற்றியோ, அவரிடை எவ்வகை வகுப்பு வேறுபாடும் இருந்ததில்லை. எல்லாரும் எல்லாத் தொழிலும் செய்து ஒரே வகையாய் வாழ்ந்து ஒரே வகுப்பாயிருந்தனர். பழங்கற்காலத் தாழ்வு நிலையும் புதுக்கற்கால உயர்வுநிலையும் எல்லார்க்கும் பொதுவாகும்.

நீலமலையிலுள்ள கோத்தர் பல் தொழிலும் தெரிந்தவராய் ஒரே வகுப்பாராக வாழ்கின்றனர். ஆடவர் ஒவ்வொருவரும் உழவு, கால்நடைவளர்ப்பு, நெசவு, வணிகம், தச்சு, கொல் தட்டார வேலை, சலவை, மஞ்சிகம் (முடிதிருத்தம்) ஆகிய வாழ்க்கைப் பணிகள் அனையவும் செய்து வருகின்றனர். தொகை பற்றியன்றித் தொழில் பற்றி ஒருவர்க்கும் இன்னொருவர் உதவி வேண்டியதில்லை. இங்ஙனமே கற்கால மாந்தரும் வாழ்ந்திருத்தல் வேண்டும்.

கற்காலங் கழிந்து மருதநில வாழ்வு தொடங்கிய பின்னரே, தொழிற் பிரிவும் அதுபற்றிய வகுப்பு வேறுபாடுந் தோன்றின.

உ. பொற்காலம் (Gold Age)
(தோரா. கி. மு. 50,000—30,000)

தமிழர் வரலாற்றுக் காலப் பகுதிகளுள், பழங் கற்காலம் புதுக் கற்காலம் என்னும் இரண்டும் அவ்வக் காலத்தொடு முடிந்து போனவையாகும். பழங்கற் காலக் கருவிகள் புதுக்கற் காலத்திலும், புதுக்கற்காலக் கருவிகள் பெரும்பான்மையாகப் பொற்காலத்திலும், வழங்கியிரா. ஆயின், பொற்காலம் முதலிய பிற்காலக் கருவிகள் உலகுள்ள காலமெல்லாம் வழங்கும்.

பொற்காலம் செம்புக்காலம் உறைக்காலம் இரும்புக்காலம் எனப் பிரித்த தெல்லாம், பெரும்பாலும் அவற்றின் பயன்பாட்டுத் தொடக்கம் பற்றியே யன்றி முடிவு பற்றி யன்று. ஆயினும், முடிவு குறிக்கப்பட்டிருப்பது, அவ்வக்காலத்து மாழை பெரும்பான்மையாகப் பயன் படுத்தப்பட்ட காலத்தின் முடிவைக் குறித்தற்கே என அறிக.

பொன் அணிகலத்திற்கும், செம்பும் உறையும் (வெண்கலமும்) குடவமும் (பித்தளையும்) நீர்க்கலத்திற்கும், இரும்பு எல்லாக் கருவிகட்கும், என்றும் பயன்படுத்தப்படும். இவற்றுள், பொன் மிகச் சிற்றளவாகவும் இரும்பு மிகப் பேரளவாகவும் இருக்கும்.

மாழைகட்கு இந்நூலிற் கூறப்பட்டுள்ள காலங்கள், மேலையறிஞர் கூறுவனவற்றொடு ஒவ்வா. அவர் தமிழ் நாகரிகத்தின் தொன்மையையும் முன்மையையும் அறியாராதலின், மாழைக் காலங்களைப் பிற்படக்கூறுவதில் வியப்பொன்று மில்லை. ஆரியராலும் அவரடியாராலும் மறைக்கப்பட்டுள்ள வுண்மை வெளிப்பட்டபின், மேலையரும் என் கூற்றை ஒப்புக் கொள்வது திண்ணம்.

பொற்காலம் என ஒன்று தமிழகம் தவிர வேறெந் நாட்டிற்கும் இருந்ததில்லை. பிற நாடுகளிலெல்லாம், பொற்காலம் என்பது, அணியியற் பொருளில், ஒழுக்கத்திலும் செல்வத்திலும் கல்வியிலும் தலைசிறந்த காலத்தைக் (Golden Age) குறிக்குமேயன்றி, செஞ்சொற்பொருளில் பொற்கருவிகளே வழங்கிய காலமொன்றைக் குறிக்காது. தமிழ் நாட்டிற்குள்ள பல்வகைத் தனிச் சிறப்புக்களுள் பொற்காலமும் ஒன்றாகும். பொலிவுற்றது பொன்னெனப்பட்டது. பொல்—பொலி—பொலிவு. பொல்—பொற்பு. பொல்லுதல் = அழகாதல், பொலிதல். பொற்ற = அழகிய, சிறந்த, பொன்னலான. பொல்—பொன். பொல்—பொலம்—பொலன்.

குமரிநாட்டிற் பொற்காலமிருந்தமைக்குச் சான்றுகளாவன:-

(க) பொன்னின் பெயர் மாழைப்பொதுப் பெயரானமை.

தமிழரால் முதன் முதற் கண்டுபிடிக்கப்பட்ட மாழை (metal) பொன்னுதலால், அதன் பெயரே பிற்காலத்திற் கண்டு பிடிக்கப்பட்ட பிறவற்றிற்கும் பொதுப்பெயராயிற்று.

எ-டு: செம்பொன் = செம்பு. வெண்பொன் = வெள்ளி.

கரும்பொன் = இரும்பு.

"தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று." என்னுங் குறளடியில் (௯௩௧), பொன் என்னுஞ் சொல் அடையின்றியும் இரும்பைக் குறித்தது. நாக(இய)மணல் பொன்வித்து எனப்படும்.

(உ) கடைக்கழகக் காலத்திலும் பொன் மிகுதியாக வழங்கினமை.

அக்காலத்துக் காசெல்லாம் பொன்னுயிருந்தமையால், காசு பொன் என்றும், பணமுடிப்பு பொற்கிழி என்றும், பணத்தண்டம் பொன்தண்டம் என்றும், சொல்லப்பட்டன. அரசர் தம்மைப் பாடிய புலவர்க்கு இலக்கக்கணக்கிற் பொற்காசை வாரி வழங்கினர். கடியலூர் உருத்திரங் கண்ணனுர் கரிகால் வளவனைப் பாடிப் பதினறிலக்கம் பொன்பெற்ருர். காப்பியாற்றுக் காப்பியனுர் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலைப்பாடி, நாற்பதிலக்கம் பொன்னும் அவன் ஆண்டதிற் பாகமும் பெற்ருர். காக்கைபாடினியார் நச்செள்ளையார் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைப்பாடி, அணிகலனுக்கென்று ௯ துலாம் பொன்னும் நூருயிரம் பொற்காசும் பெற்ருர். கபிலர் செல்வக் கடுங்கோ வாழியாதனைப் பாடி ஓரிலக்கம் பொற்காசும் ஒரு நாடும் பெற்ருர். அரிசில்கிழார் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறையைப் பாடி, தொண்ணிலக்கம் (ஒன்பது நூருயிரம்) பொற்காசும் அரியணைக் கீடாக அமைச்சுரிமையும் பெற்ருர். பெருங்குன்றூர் கிழார் குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையைப் பாடி, முப்பத்தீராயிரம் பொற்காசும் பல்வகைப் பரிசிலும் பெற்ருர்.

மாதவி போல் தன் ஆடல்பாடலை அரங்கேற்றிய நாடகக் கணிகையரெல்லாரும், ஆயிரத்தெண் கழஞ்சு பொன் பெற்றனர். அரசரை யடுத்துப் பாடிய பாணரெல்லாரும் பொற்றுமரை

யும், பாடினியரெல்லாரும் பொன்னரி மாலையும், பரிசாகப் பெற்றனர்.

தில்லைச்சிற்றம்பலம் பொற்பலகையால் வேயப்பட்டிருந்தது. மதுரையம்பலம் வெள்ளியம்பலம் என்று பெயர் பெற்றிருந்ததனால், தில்லையம்பலம் அன்று பொன்னம்பலமாயிருந்திருத்தல் வேண்டும்.

மூவேந்தரும் கொடைமடம்பட்டுப் பிராமணப் பூசகர்க்குத் துலைநிறைப் பொன் தானஞ் செய்து வந்தனர். கடைக்கழகக் காலத்தில் இத்துணைப் பொன்வளம் இருந்ததெனின், தலைக் கழகத்தினும் முற்பட்டு மக்கள் தொகை மிகக் குறைவாயிருந்த காலத்தில், சிற்சில கருவிகளையேனுஞ் செய்து கொள்ளப் போதிய பொன்னிருந்ததென்பது, நம்பத்தகாததன்று.

(௩) தென்னாப்பிரிக்காவிலும் ஆத்திரேலியாவிலும் இன்றும் பொன் கிடைக்கின்றமை.

உலகில் இன்று மிகுதியாகப் பொன் கிடைக்கும் இடங்கள், இரசியா, தென்னாப்பிரிக்கா, கானடா, அமெரிக்க ஒன்றிய நாடுகள் (U. S. A.) என்னும் நான்காம்.

பொன் கிடைக்கும் வகைகள், தூள் (dust), மணல் (grain), தகணை (nugget), நரம்பு (lode or vein), கலப்பு (mixture) என ஐந்து.

௧அ௫௦ - இல் ஆத்திரேலியப் பொன் கண்டுபிடிக்கப்பட்டபின், பொற்பித்தர் பெருந்திரளாகப் போய் அங்குச்சரிந்தனர். பலவிடத்திற் பெருந்தகணைகள் நில மட்டத்திற்கு ஒரு சில விரலங்கட்குக் (inches) கீழேயே கண்டெடுக்கப்பட்டன. 'அரம்பமலை மணல்' தகணை ('Sierra Sands' nugget) ௧,௧௧௭ விரணையும் (oz.), 'ஆத்தம் பெருமாட்டி' (Lady Hotham) ௧,௱௭ விரணையும், 'நல்வரவு அயலார்' தகணை (Welcome Stranger Nugget), ௨௦௦௦ விரணைக்கு மேலும், 'ஆலதர்மன் தகணை' (Holtermann Nugget) ௨௦௦ துலத்திற்கு (lb.) மேலும் எடை நின்றன.

குமரிக் கண்டம் ஆத்திரேலியாவோடும் தென்னாப்பிரிக்காவோடும் இணைந்திருந்ததனால், அந்நடுவிடத்திலும் பொற்றகணைகள் எளிதாய்க் கிடைத்திருத்தல் வேண்டும்.

முழுகிப் போன குமரிக் கண்டத்தைச் சேர்ந்த தமிழ்நிலம் முழுதும் பழம் பாண்டிநாடாகும். சோழ நாட்டின் வடபகுதி தொண்டை மண்டலம் என்று பிரிந்தது போன்றே, சேரநாட்டின் வடபகுதியும் கொங்கு மண்டலம் எனப் பிரிந்தது. அக் கொங்கும் பின்னர்க் குடகொங்கு குணகொங்கு என இருபாற் பட்டது. கொங்குநாட்டிலும் சோழ நாட்டிலும் ஓடும் பேராறு காவேரி. அக்காவேரி பொன் கலந்த மணலைக் கொழித்ததனாற் பொன்னி யெனப்பட்டது.

சோழ நாட்டில் மிகுதியாகப் பொன் கிடைத்ததனால், முதற் பராந்தகன், இரண்டாங் குலோத்துங்கன் முதலிய சோழவேந்தர் பலர் தில்லைச் சிற்றம்பலம் பொன் வேய்ந்தனர். இரண்டாம் இராசராசன், சிற்றம்பலம் மட்டுமன்றிப் பேரம்பலம் மாட மாளிகை கூடகோபுரம் முதலிய பலவற்றையும், பொன்னா லணிவித்துத் தில்லையைப் பொன்வண்ண மாக்கினான்.

"சிற்றம் பலமுந் திருப்பெரும்பே ரம்பலமும்
மற்றும் பலபல மண்டபமும் — சுற்றிய
மாளிகையும் பீடிகையும் மாடமுங் கோபுரமும்
சூளிகையு மத்தெருவுந் தோரணமும் — ஆளுடையான்
கோயில் திருக்காமக் கோட்டமு மக்கோயில்
வாயில் திருச்சுற்று மாளிகையும் — தூயசெம்
பொன்னிற் குயிற்றிப் புறம்பிற் குறும்பறுத்து
முன்னிற் கடல்களுள் மூழ்குவித்த சென்னி"

— இராசராச தேவருலா.

அரண்மனைகளில் அரசன் தங்கும் தனி மாளிகையும் பொன்னால் வேயப்பட்டிருந்தது. சுந்தரச் சோழனைப் "பொன்மாளிகைத் துஞ்சிய தேவர்" என்று கல்வெட்டுக் கூறுதல் காண்க.

கொங்கு நாட்டிற் கிடைத்த பொன் கொங்குப் பொன் எனச் சிறப்பித்துக் கூறப்பட்டது. இன்றும் சுரங்கத்திற் பொன்னெடுக்கும் குவளாலபுரம் (கோலார்) பண்டைக் கொங்குநாட்டைச் சேர்ந்ததே.

"கொழுங்கொடி யறுகையுங் குவளையுங் கலந்து
விளங்குகதிர்த் தொடுத்த விரியல் சூட்டிப்
பாருடைப் பனர்போற் பழிச்சினர் கைதொழ
ஏறொடு நின்றோர் ஏர்மங் கலமும்"

என்னும் சிலப்பதிகார நாடு காண் காதை யடிகட்கு (கஙஉ-ரு) "செந்நெற் கதிரோடே அறுகையும் குவளையையும் கலந்து தொடுத்த மாலையை மேழியிலே சூட்டிப் பாரை இரண்டாகப் பிளப்பாரைப் போலப் போற்றுவார் தொழப் பொன்னேர் பூட்டி நின்றோர் ஏரைப் பாடும் ஏர்மங்கலப் பாட்டுமென்க." என்று அடியார்க்கு நல்லார் உரை வரைந்துள்ளார்.

சென்னைப் பல்கலைக் கழக அகரமுதலி, இதைப் பின்பற்றிப் பொன்னேர் என்பதற்கு, "பருவ காலத்தில் நல்ல நாளில் முதன் முறையாக உழுங் கலப்பை" என்று விளக்கங் கூறியுள்ளது.

பண்டை மகதநாட்டூர்களில் ஆண்டு தோறும் முதலுழவு உழும்போது, ஊர்த்தலைவன் பொன்னாற் செய்த ஏரைப் பூட்டி உழவர் வரிசையில் முதலில் நின்று, பிறர் பின்வர, ஒரு படைச் சாலோட்டித் தொடங்கிவைப்பான் என்று சொல்லப்படுவதால், குமரி நாட்டில் அதற்கு மூலமான வழக்கம் இருந்திருக்கலா மென்று கருத இடமுண்டு.

உருவப் பஃறேரிளஞ்சேட் சென்னி பொற்றேரை யுடை யவனாயிருந்தான்.

"பொலந்தேர்மிசைப் பொலிவுதோன்றி
மாக்கடல் நிவந்தெழுதருஞ்
செஞ்ஞாயிற்றுக் கவினைமாதோ" (புறம். ச)

என்று பரணர் பாடுதல் காண்க. பண்டைத் தமிழரசரின் தேர் குதிரை யானைகள் பொற்படைகளால் அணிசெய்யப் பெற்றிருந் தன.

"மகிழா தீத்த இழையணி நெடுந்தேர்"
— (புறம். கஉங :ச)

"பாடிப் பெற்ற பொன்னணி யானை" (ஷ கஎஎ :ங)

"வலம்படு தானை வேந்தர்
பொலம்படைக் கலிமா எண்ணு வோரே."
(புறம். ககசு)

அரசருடைய போர் முரசும் அதுபோன்ற பிற சின்னங்களும் பொன்னால் அணி செய்யப்பட்டிருந்தன.

"பொலங்குழை யுழிஞையொடு பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை யுருகெழு முரசம்" (புறம். ரு௦).

கி. மு. கக-ஆம் நூற்றுண்டிற்கும் க௦-ஆம் நூற்றுண்டிற்கும் இடையில் யூதேயா நாட்டை யாண்ட சாலோமோன் அரசன் (க௦கரு-கஉஎரு), ஓப்பீர் (Ophir) என்னும் இந்தியத் துறைமுகத் தினின்று வருவித்த பொருள்களுள் பொன்னும் ஒன்று. அத் துறைநகர், வேம்பாய் எனப்படும் பம்பாய் மாநகர்க்கு வடக்கே நஎ கல் தொலைவிலிருந்த, உப்பரா அல்லது உப்பரகா என்று ஆராய்ச்சியாளராற் கருதப்படுகின்றது. கால்டுவெலார் அது ஒருகால் பாண்டி நாட்டின் கீழ்க்கரையிலுள்ள உவரியா யிருக்கலாமென்று கருதினர். எதுவாயினும், ஓப்பீர் ஓர் இந்தியத் துறைநகர் என்பது உறுதி. சாலோமோன் காலத்திற் சேரநாடு குச்சரம் (குசராத்து) வரை பரவியிருந்தது.

தொன்றுதொட்டுப் பொன் இந்தியாவினின்று மேனுடுகட்கு ஏராளமாக ஏற்றுமதியாகி வந்ததனுல், சேக்கசுப்பியர் (Shakes--peare) தம் 'பன்னிரண்டாம் இரவு' (Twelfth Night) என்னும் நாடகத்தில், பொன்னை 'இந்திய மாழை' (metal of India) என்றுர் (உ:ரு).

(ச) குமரி நாட்டில் பொன் கிடைத்தமை பற்றிய நெட்டிமை யார் கூற்று.

"..................................தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே." (புறம். கூ).

இதன் பழையவுரை :— "தம்முடைய கோவாகிய சிவந்த நீர் மையை யுடைய போக்கற்ற பசிய பொன்னைக் கூத்தர்க்கு வழங்கிய முந்நீர்க் கடற்றெய்வத்திற் கெடுத்த விழாவினை யுடைய நெடியோனு லுளதாக்கப்பட்ட நல்ல நீரையுடைய பஃறுளி யென்னு மாற்றின் மணலினும் பலகாலம்."

குமரிநாட்டு மாந்தர் முதற்காலத்தில் இயற்கை நீர்நிலை களையே சார்ந்திருந்ததனுலும், ஆறில்லாத விடமெல்லாம் அடர்ந் திருண்ட காடாயிருந்ததனுலும், மக்கள் தொகை மிகமிகப் பெரும்பாலும் ஆறுகளை யடுத்தே பரவியிருத்தல் வேண்டும். ஆத

லால், பெருமலை நாடான குறிஞ்சியையும் குறுமலை நாடான முல்லையையுங் கடந்தபின், கரடும் கல்லும் முரம்பும் பாறையும் அருகி நீர்வளமும் நிலவளமும் மிக்க மருத நிலத்திற்கே இயற்கையாகப் பரவியிருந்திருப்பர்.

அங்கு நெல்லும் வாழையும் போன்ற நிலைத்திணை (தாவர) வகைகளையும், அவற்றிற் கேற்ற மென்னிலத்தையுங் கண்டு, அவற்றைச் செயற்கையாக விளைவிக்க முனைந்து உழைத்தனர். என்றும் நீர் வேண்டும் பயிர்களைக் கரிசல் நிலத்திலும், இடையிட்டு நீர் வேண்டும் பயிர்களைச் சிவல் நிலத்திலும் பயிரிட்டனர். செடிகொடி புற்களைதல், கல்லெடுத்தல், உரமிடுதல், பன்முறையுழுதல், கட்டியடித்தல், பரம்படித்தல் (பல்லியாடுதல்), புழுதியாக்குதல், காயவிடுதல் என்னும் பல்வகையில் திருத்தப்பட்ட நிலம் செய் எனப்பட்டது. செய்தல் திருத்துதல். பேரளவாகத் திருத்தப்பட்டது நன்செய் என்றும், சிற்றளவாகத் திருத்தப்பட்டது புன்செய் என்றும், சொல்லப்பட்டன. நன்செய் உரம் மிகுதியாக வைக்கப்படுவதால் வயல் என்றும், (வை—(வய்)—வயல்), சேறுபடுதலால் செறு என்றும், பள்ளமாயிருத்தலால் பண்ணை யென்றும், போரடிக்குங் களஞ் சேர்ந்திருப்பின் கழனி யென்றும், நீண்ட காலம் பண்படுத்தப்பட்டுப் பழமையானபின் பழனம் என்றும், பெயர் பெற்றது. நெல்வயலில் உழும் போதும் அறுவடை செய்யும் போதும் கிணைப்பறை (உறுமி) கொட்டப்பட்டது.

நெல்லும் வாழையும் போன்றவற்றை நன்செயிலும், சோளமும் கேழ்வரகும் போன்றவற்றைப் புன்செயிலும், வரகும் சாமையும் போன்றவற்றை வானவாரிக் கொல்லையிலும், பயிரிட்டனர். நீர்ப்பாசன ஏந்து (வசதி) இருக்குமிடமெல்லாம் புன்செயை நன்செயாக்கினர். பதினெண் கூலமும் எள்ளும் இஞ்சியும் மஞ்சளும் பருத்தியும் பிறவும் விளைக்கப்பட்டன.

நீர்ப்பாசனத்திற்கு முதலில் ஆறும் பொய்கையும் ஆகிய இயற்கை நீர்நிலைகளையே சார்ந்திருந்தனர். பின்னர் அவையில்லாத விடங்களில், கண்ணாறுங் கால்வாயும் ஏரியுங் குளமும் வெட்டிக் கொண்டனர். அவை எல்லார்க்கும் பொதுவாயிருந்தமையாலும், கோடைக்காலத்தில் வற்றிப் போனமையாலும், ஆண்டு முழுதும் பயன்படுமாறும் சொந்தவுடைமையா யிருக்குமாறும், நீர் சுரக்குமிடமெல்லாம் கிணறுகளையும் வெட்டிக் கொண்டனர். அக்காலத்தில் மக்கள் தொகை மிகக் குறைவாயிருந்தமையாலும், நிலப்பரப்பில் முக்காற் பங்கிற்கு மேலும் மர

மடர்ந்த அடவியா யிருந்தமையாலும், கோடை மழை, கால மழை, அடை மழை, படை மழை ஆகிய நால்வகை மழையும் காலந்தப்பாது பெய்து வந்தன. அ(ல்)கால வம்ப மழையும் ஒரோவொரு சமையம் பெய்தது.

கால்வாய் நீரிறைக்க இறைபெட்டி (இறைகூடை), உழணி (ஓணி) முதலிய கருவிகளும், கிணற்று நீரிறைக்க ஏற்றம், கம்மாலை என்னும் பொறிகளும் தோன்றின. அம் = நீர். அம்-கம் = நீர். ஆலுதல் = ஆடுதல், சுற்றுதல். ஆல்—ஆலை = சுற்றிவரும் பொறி. செக்காலை, கரும்பாலை முதலியவற்றை நோக்குக. இன்றும், திருக்கோவலூர்க்கும் வில்லிபுரத்திற்கும் இடைப்பட்ட ஊர்களிற் சுற்றுக்கவலையாடுதல் காண்க. கம்மாலை—கமலை—கவலை. ஏற்றம் கையால் இயக்கப்படுவது. அது கைத்துலா, ஆளேறுந்துலா என இருவகை. கம்மாலை எருது பூட்டி இயக்கப் படுவது.

நெற்சோறு மருதநிலத்தில் முதன் முதலாகப் பொங்கப் பட்டது. சொல் = நெல். சொல்—சொன்றி—சோறு. சிற்றுண்டியாகப் பயன்படுமாறு, அரிசிப்பொரி பொரிக்கவும் அவலிடிக்கவும் கற்றுக்கொண்டனர். பயறு வகைகளை அவித்தும் சுண்டியும் தின்றனர். அவற்றின் பருப்பாற் கும்மாயமுங் கூட்டும் சாறுங் குழம்பும் ஆக்கிச் சோற்றுடன் கலந்துண்டனர். வாழை, வழுதுணை (கத்தரி), வெண்டை, சுரை, பீர்க்கு, பூசணி முதலிய காய்களைத் தனித்தும் பருப்புடன் சேர்த்தும், கறிவகைகளாகச் சமைத்தனர்.

ஊனுக்கு, வயலிலும் வாய்க்காலிலும் பிடித்த மீனையும் ஆமையையும், வீட்டில் வளர்த்த ஆடுகோழிகளையும், பயன்படுத்தினர். இடையிடை முல்லைக்குங் குறிஞ்சிக்குஞ் சென்று, தமக்கு வேண்டிய விலங்கு பறவைகளை வேட்டையாடியும் வந்தனர்.

காரத்திற்கு மிளகையும், இளங்காரத்திற்கும் சுவைக்கும் வெங்காயத்தையும், நிறத்திற்கும் மணத்திற்கும் சளிமுறிப்பிற்கும் மஞ்சளையும், சப்பென்றிருத்தலை நீக்கிச் சுவையூட்டற்கு உமண் என்னும் உவர்நிலத்து உப்பையும் சமையலிற் சேர்த்துக் கொண்டனர்.

குறிஞ்சியிலும் முல்லையிலும் பெரும்பாலும் பாலும் சூட்டிறைச்சியுமே உண்டதனால், அவ்வுணவிற்கு உவர்ப்புப் பொருள்

தேவையில்லாதிருந்தது. முல்லை நிலத்தில், தினை வரகு சாமை முதலியவற்றின் அரிசியைப் பாலிலுஞ் சமைத்திருக்கலாம். மருத நிலத்திற்கு வந்தபின்பே சிறந்த முறையிற் சமையல் தொடங்கியதால், பொங்கல் புழுங்கல் அவியல் சுண்டல் துவட்டல் புரட்டல் காய்ச்சல் பொரியல் முதலிய வினைகளை நீரிற் செய்தற்கு, உவர்ப்புச் சரக்குச் சேர்க்க வேண்டியதாயிற்று. உப்பு விளைக்கும் உவர்நீர்க் கடலைச் சார்ந்த நெய்தல் நிலத்தை அடுக்குமுன், உமணையே பயன்படுத்தியிருத்தல் வேண்டும். உமண் என்பது உவர்மண், அதை முதலில் விற்றவர், பின்பு நெய்தல் நிலத்து உப்பளத்தில் உப்பு விளைத்தபோதும், உமணர் எனப்பட்டனர்.

''களர்நிலத் துப்பிறந்த வுப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்''
(நாலடி. கநந).

பொரியல் முதலில் ஆவின் நெய்யிலேயே செய்யப்பட்டது. அதனாலேயே, பின்னர் எள்ளிலிருந் தெடுக்கப்பட்ட நெய்ப் பொருள் எண்ணெய் (எள்நெய்) எனப் பெயர் பெற்றது. எள்ளின் நெய்யே முதற்காலத்திற் பெருவழக்காக வழங்கினதினால், பிற்காலத்தில், ஆவின் நெய் தவிர மற்றெல்லா நெய் வகைகட்கும் எண்ணெய் என்பது பொதுப்பெயராயிற்று.

சமையற்கு வேண்டிய நெருப்பு, நாள்தோறும் ஞெலிகோலால் விரைந்து கடையப்பட்டது. அது வீடுதொறும் இறவாணத்திற் செருகப்பட்டிருந்தது. குறிஞ்சி வாணரும் முல்லை வாணரும் வேட்டைக்காரரும், அதை என்றுங் கையில் வைத்திருந்தனர்.

''இல்லிறைச் செரீஇய ஞெலிகோல் போல'' (புறம். ௩கரு:ச).
''கானவர் பொத்திய ஞெலிதீ விளக்கத்து'' (புறம். உசஎ:உ).

''புல்லென் மாலைச் சிறுதீ ஞெலியுங்
கல்லா விடையன் போல'' (ஷ. ௩௩க:ச).

''செல்வத் தோன்றலோர் வல்வில் வேட்டுவன்
தொழுதனை னெழுவேற் கைகவித் திரீஇ
இழுதி னன்ன வானிணக் கொழுங்குறை
கானதர் மயங்கிய இளையர் வல்லே

தாம்வந் தெய்தா வளவை யொய்யெனத்
தான்ஞெலி தீயின் விரைவனன் சுட்டுநின்
இரும்பே ரொக்கலொடு தின்மெனத் தருதலின்''
(புறம். கரு௦:எ–கஙு).

இவை பிற்காலத்துச் செய்யுளாயினும், முற்காலத்து நிலைமையையுங் குறிக்கும்.

தீப்பட்ட விடத்திற் களிமண் இறுகிக் கற்போற் கெட்டியானதைக் கண்டு, களிமண்ணாற் பானை சட்டிகளை வனைந்து சுட்டுச் சமையற் கலங்களாகப் பயன்படுத்தினர்.

பருத்திப் பஞ்சால் நூலிழைத்துப் பல்வகை ஆடைகளை நெய்துகொண்டனர். நூல் நூற்றல் பெண்டிராற் செய்யப்பட்டு வந்தது என்பதை, ''நுண்ணிய பலவாய பஞ்சுநுனிகளாற் கைவன் மகடூஉத் தனது செய்கை மாண்பினால் ஒரிழைப் படுத்தலாம், உலகத்து நூனூற்றலென்பது.'' என்னும் இறையனாரகப்பொருளுரைக் கூற்றாலும் (நூற்பா. க),

''பஞ்சிதன் சொல்லாப் பனுவ லிழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா—எஞ்சாத
கையேவா யாகக் கதிரே மதியாக
மையிலா நூன்முடியு மாறு.''

என்னும் நன்னூற் பொதுப்பாயிர நூற்பாவாலும் (உங), அறியலாம். வீட்டிலிருந்து செய்யும் தொழிலுக்கு ஏற்றவர் பெண்டிரே. பருத்திநூல் நூற்ற பெண்டிர் பருத்திப் பெண்டிர் எனப்பட்டனர்.

''பருத்திப்பெண்டின் பனுவ லன்ன'' (புறம். கஉரு).

கணவனொடு கூடியபெண் வீட்டுவேலையுஞ் செய்யலாம்; நன்செய் புன்செய்க் காட்டுவேலையுஞ் செய்யலாம். கணவனையிழந்த கைம்பெண், தன் கற்பைக் காத்துக்கொண்டு பிழைக்க வீட்டுவேலையே செய்தல் கூடும். அத்தகைய வேலை அக்காலத்து நூல் நூற்றலே. ஆதலாற் கைம்பெண்டிர் அதனை மேற்கொண்டனர்.

''ஆளில் பெண்டிர் தாளிற் செய்த
நுணங்குநுண் பனுவல்போல'' (நற். ஙருங).

ஆடைநெசவு இருபாலாராலுஞ் செய்யப்பட்டு வந்தது.

அழகிற்கும் மணத்திற்கும், பல்வகை நறுமலர்களைக் கண்ணியாகக் கட்டியும் மாலையாகத் தொடுத்தும், ஆடவர் கழுத்திலும் பெண்டிர் கொண்டையிலும் நாள்தொறும் புதிது புதிதாக அணிந்து கொண்டனர்.

மருதநிலமண் கெட்டியாயிருந்ததனால், உயர்ந்த மண்சுவர் எழுப்பிப் பெருவீடு கட்டிக் கூரை வேய்ந்துகொண்டனர். ஊர்த் தலைவராயிந்தவர், முல்லைநிலத்துக் கரடுகளிலுங் குன்றுகளிலுமிருந்து கற்கொணர்வித்து, காரை (மணல் கலந்த சுண்ணாம்புச் சாந்து) பூசிக் கல்வீடு கட்டிக்கொண்டனர். சுடுமட்கலந் தோன்றியபின் சுடுமட் கல்லுஞ் சுடுமண் ஓடுந் தோன்றியதனால், அதிகாரமுஞ் செல்வமுஞ் சிறந்தவர் காரைபூசிச் செங்கல் மனைகள் கட்டி ஓடுவேய்ந்து கொண்டனர். ஓடு வேயாது மட்டமாக முகடமைத்த காரைவீடு மச்சுவீடெனப்பட்டது. சுடுமண் என்பது, முதலில், சுட்ட கலம், சுட்ட செங்கல் சுட்ட ஓடு ஆகிய மூன்றையுங் குறித்தது.

சுடுமண் = க. மட்கலம். (*சிலப். கச:கசசு. அரும்*). உ. செங்கல். "சுடும ணோங்கிய நெடுநகர் வரைப்பில்" (பெரும்பாண். சO௫). ௩. ஓடு. "சுடுமண் ஏறு வடுநீங்கு சிறப்பின்" (*சிலப். கச:கசசு*).

சுட்ட செங்கல் சுடுமட் பலகை யென்றுஞ் சொல்லப்பட்டது. "பயிலுஞ் சுடுமட் பலகைபல கொணர்வித்து" (பெரிய பு. ஏயர்கோன். சகூ).

இறுதியில் செங்கல் என்னும் பெயரே நிலைத்தது. பார்வைக்கு நன்று யிருக்கவும் வண்ண ஓவியம் வரையவும், செங்கற் சுவரெல்லாம் மணல் கலவாத வெண்சாந்தினால் தீற்றப்பட்டன.

வெண்சாந்து பூசிய காரைவீடு, கூரைவேய்ந்த மண் வீட்டொடு ஒப்புநோக்கிய போது விளங்கித் தோன்றியதனால், நகர் என்று பெயர் பெற்றது. நகுதல் விளங்குதல். நகு—நகர். நகர் மிக்க ஊரும் சினையாகு பெயராக நகர் எனப்பட்டது. வீட்டைக் குறிக்கும் குடி என்னுஞ் சொல்லும், குடிமிக்க ஊரைக் குறித்தல் காண்க. (எ—டு: மன்னார்குடி, காரைக்குடி). இம் மயக்கந் தவிர்த்து ஊரையே குறிக்க நகரி என்னுஞ் சொல் எழுந்தது. நகர்களை (காரைவீடுகளை) உடையது நகரி. பெரிய நகர் (ஊர்)

நகரம் எனப்பட்டது. இக்காலத்தில் மாநகர் என்பர். அங்ஙனஞ் சொல்லத் தேவையில்லை. 'அம்' என்பது பெருமைப் பொருள் குறிக்கும் பின்னொட்டு. எ—டு: நிலை—நிலையம், விளக்கு—விளக்கம், மதி—மதியம்=முழுநிலா.

நகர்களிலேயே நாகரிகந் தோன்றியதனால், நாகரிகம் என்னும் சொல்லும் நகர் என்னுஞ் சொல்லினின்றே திரிந்தமைந்தது. நகர்—நகரகம்—நகரிகம்—நாகரிகம். இதன் விளக்கத்தை என் 'பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும்' என்னும் நூலிற் காண்க.

அரசன் அல்லது அவனுடைய துணையதிகாரிகள் வதிதல், அறிஞரும் புலவரும் பேராசிரியரும் வாழ்தல், கணக்காயர் பள்ளிகளும் தனிப்பட்ட பெரும்புலவரின் உயர்நிலைக் கல்வி நிலையங்களும் அமைந்திருத்தல், பெரும்பாலார் எழுதப் படிக்கத் தெரிந்தவரா யிருந்து திருத்தமாகப் பேசுதல், எல்லாருந் திருந்திய பழக்க வழக்கங்களை மேற்கொள்ளுதல், அழகிய ஆடையணிகள் உடல் மறைய அணியப்படுதல், துப்புரவான காரை வீடுகளும் மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் நேரான பெருந்தெருக்களும் புதைசாலகங்களும் இருத்தல், ஏந்தான அழகிய ஊர்திகள் இயங்குதல், உயர்ந்த அறுசுவை யுண்டிகள் உண்ணப்படுதல், பலவகை யுயர்ந்த பிறநாட்டு ஐம்புல நுகர்ச்சி யரும்பொருட் கடைகள் அடுத்தடுத்திருத்தல், களவுங் கொள்ளையும் நிகழாவாறு ஊர்காவலர் அல்லும் பகலுங் காத்தல், கொலையாளிகளையும் பிற குற்றவாளிகளையுந் தண்டிக்கும் அறமன்றமும், திருக்கோவில்களும் துறவியர் மடமும் சொற்பொழிவுக் கூடமும் பட்டிமண்டபமும் உண்மை, முதலிய ஏதுக்களால், நகரங்களும் நகர்களுமே நாகரிகப் பிறப்பிடமாயின. அநாகரிகனை நாட்டுப்புறத்தா னென்றும், பட்டிக்காட்டா னென்றும் சொல்வதே, இதை வலியுறுத்தும். நகர மேம்பாடுகள் நகர்களிற் குன்றியிருக்கு மேனும் நாகரிகத்திற் கேதுவானவையே. நாகரிகம் நகரிற் பிறந்ததெனின், நகரத்திற் சிறந்ததெனலாம். பாண்டியன் மதுரை ஒரு நகரம் (மாநகர்). அக்காலத்து நெல்லை (திருநெல்வேலி) ஒருநகர். வைகை மதுரை போன்றதே பஃறுளியாற்றுத் தென்மதுரை.

நாகரிகத்தின் முளை குறிஞ்சி நிலத்திலேயே தோன்றியதேனும், அது முழுவளர்ச்சி யடைந்தது மருதநிலத்து நகர்ப்பாங்கே யென்றும், குறிஞ்சி நாகரிகமும் முல்லை நாகரிகமும்

மருதநாகரிகத்தின் கீழ்நிலைகளே யென்றும், நெய்தல் நிலை வணிகவளர்ச்சிக்கும் செல்வப் பெருக்கிற்குமே ஏதுவென்றும், பாலைநிலை நாகரிக வளர்ச்சியின்றிப் பண்பாட்டிழிபையே காட்டு மென்றும், அறிதல் வேண்டும்.

மருதநிலக் குமுகாய வாழ்வில், ஒருமனை மணமும் இறப்பு வரை பிரியா இல்வாழ்வும் பெரும்பான்மையாயின. ஒருவனால் மணஞ் செய்யப் பட்டமைக்கு அறிகுறியாகப் பெண்ணின் கழுத்திற் பொற்றாலி கட்டப்பட்டது. பன்மனை மணமும் தீர்வை முறையும் தொடர்ந்தனவேனும், தொல்லை மிகுதியும் பண்பாட்டிழிபும் பற்றி அவை தாழ்வாகக் கருதப்பட்டன. ஊர்த்தலைவனும் அவனுக்கு மேற்பட்ட அரசரும், இன்பச் சிறப்பு நோக்கிப் பன்மனை மணத்தையே கடைப்பிடித்தாரேனும், அதன் இழிவை அவரது தெய்வத்தன்மையான அதிகாரம் முற்றிலும் மறைத்து விட்டது. மருத நிலத்து நிலையான குடியிருப்பும் பயிர்த்தொழிலிற் குடும்பக் கூட்டுழைப்பும், கணவன் மனைவியர் காதலை வளர்த்து மணவாழ்க்கையை நீடிக்கச் செய்தன. உயிருக்கின்றியமையாத உணவுப் பொருள்கள் ஏராளமாகக் கிடைத்ததனால், வயிருரவுண்டு இன்புறவும், உழைக்க இயலாதவர்க்குதவி அறம் வளர்க்கவும், ஏதுவாயிற்று.

பொற்கால மருதநில ஆட்சித்துறையில், தனியூராட்சி போய், ஒரு பேரூரும் அதனைச் சூழ்ந்த உட்கிடை போன்ற சிற்றூர்களுஞ் சேர்ந்த கூட்டூராட்சி தோன்றி, பின்னர் அதற்கும் மேற்பட்ட குறுநில மன்னராட்சி ஏற்பட்டிருத்தல் வேண்டும்.

தனியூராட்சி என்பது, எல்லையளவில் இக்காலத்து நாட்டாண்மைக்காரன், பெரியதனக்காரன், பட்டக்காரன், அம்பலகாரன், மூப்பன், தலைவன், கவுண்டன், குடும்பன் முதலிய பெயர்களாற் குறிக்கப்படும் குடித்தலைவன் ஆட்சி போன்றது. ஆயின், அதிகார அளவில் பிற்காலத்து வேந்தன் ஆட்சி போன்றே கோன்மை (Sovereignty) கொண்டது. கூட்டூராட்சி என்பது, கிரேக்க நாட்டு நகர நாடு (City State) போன்றது. ஆதலால், அதுவுங் கோன்மை கொண்டதே. குறுநில மன்னராட்சி என்பது, பாரி காரி முதலிய வேளிராட்சி போன்றது; சின்னூறூர்களும் பன்னூறூர்களுங் கொண்டது. அம்மன்னரின் அரசு வீற்றிருக்கைக ளெல்லாம் நகர்கள். அமைச்சரும் படை மறவரும் அவருக்குத் துணையாயிருந்தனர்.

மருதநிலக்குடியிருப்புப் போன்றே, முல்லை குறிஞ்சி நிலக் குடியிருப்புக்களும் ஆட்சியில் மாறுதலடைந்தன. அதாவது, தனியூராட்சி போய்க் கூட்டுராட்சி தோன்றிற்று. படைத்துணையின்மையாற் குறுநில வாட்சி தோன்றவில்லை. இவ்வாட்சி மாற்றம் பண்டமாற்று, விழாக் காண்டல், வேட்டையாடல் முதலிய தொடர்புகளால் ஏற்பட்டது. ஆயின், மருதம்போல் நாகரிக வளர்ச்சியடையவில்லை. இதற்கு நில அமைப்பே அடிப்படைக் கரணியம். அதனால், நகரங்களுந் தோன்றவில்லை; ஊர்ப்பெயர்களும் வேறுபட்டன. மருதநிலத்து ஊரே ஊரெனப்பட்டது. உர்=உறு. உறுதல் பொருந்துதல். உர்—ஊர். உழவுத் தொழிலே நிலத்தொடு பொருந்தி நிலையாக வாழ ஏதுவாயிற்று. அதனால், சிற்றூர் பேரூரும் பேரூர் மூதூரும் ஆயின. நகரங்கள் பெருமை பற்றிப் பேரூர் என்றும், முதுமை பற்றி மூதூர் என்றும், சொல்லப்பட்டன.

"வாணன் பேரூர்" (மணி. ந: க௨ந).

"அதிராச் சிறப்பின் மதுரை மூதூர்" (சிலப். பதி. நக).

முல்லைநிலத்திற் கால்நடைகட்குப் புல்வெளி தேடி அடிக்கடி இடம் பெயரவேண்டியிருந்தது. அதனாற் கட்டை மண்மேற் கூரைவேய்ந்து, உயரமின்றித் தாழ்வான வீடுகளைக் கட்டிக் கொண்டனர். அதனால் அந்நிலத்தூர் பாடி எனப்பட்டது. படுத்தல்=தாழ்தல், தாழ்வாயிருத்தல். படு—பாடு—பாடி. இனி, படு—படி—பாடி என்றுமாம். வீடுகள் செறிந்திருந்ததனால், அவ்வூர் சேரி எனவும் பட்டது.

குறிஞ்சிநிலக் குடியிருப்பு நிலம்பற்றிக் குறிச்சி யெனப்பட்டது. குறிஞ்சி—குறிச்சி. சிறுசிறு கூட்டமாக வாழ்ந்ததனால் சிறுகுடி யெனவும் பட்டது. குடியென்றது குடித்தொகுதியை. குடி=வட்டமான சிறு வீடு.

பொற்கால மொழி, **பகுசொன்னிலை** (Inflexional Stage) கடந்து **தொகுநிலை** (Synthetic Stage), **பல்தொகுநிலை** (Polysyn-thetic Stage) என்ற நிலைகளும் அடைந்திருத்தல் வேண்டும்.

முறையெண்	நிலை	எடுத்துக்காட்டு
க.	அசைநிலை:	
	(1) இயல்நிலை	ஏ, உள், பல்.
	(2) திரிநிலை	யா, உண் (உட்கொள்). (பர் —பரு— பெரு).
உ.	புணர்நிலை	பெருமகன், செய்கை, நல்லது.
ங.	கொளுவுநிலை	வர் + ஒத்து + இ = வருத்துவி, சுள் —சுண் + அம் + பு = சுண்ணம்பு—சுண்ணும்பு.
ச.	பகுசொன்னிலை	(பெருமகன்—) பெம்மான், பிரான்; செய்கை, நன்று.
ரு.	தொகுநிலை	ஏ + ஒன் = ஏன்—யான். ஏ + உம் = ஏம்—யாம்.
சா.	பல்தொகுநிலை	எல் + அ + உம் = எல்லவும்—எல்லாம், செய் + அல் + ஒண் + அர் + இது + அ = செய்ய வொண்ணுத—செய்யொணுத —செய்யொணு.

அரிது—அருது = கூடாது. செய்யருது = செய்யக் கூடாது.

புதுக் கற்காலத்தில், பெயர்வினை யென்னும் சொல் வேறுபாடும், தன்மை முன்னிலை படர்க்கை யென்னும் இட வேறுபாடும், ஒருமை பன்மை யென்னும் எண் வேறுபாடுமே இருந்திருந்து, பொற்காலத்தில் இருதிணையும் ஐம்பாலும் தோன்றியிருத்தல் வேண்டும். மருதநிலச் சொற்களால் சொல்வளம் பெருகிற்று.

மதவியல் வாழ்க்கையில், பொற்கால மருதநிலத் தமிழர், பழைய குறிஞ்சி முல்லைத் தெய்வங்களுடன் இறந்த அரசனையும் தெய்வமாக வணங்கியதாகத் தெரிகின்றது.

அக்காலத்தில், பெரும்பண்ணைகளி லெல்லாம், தாமாக வந்து ஒட்டிக் கொண்டவரும் விலைக்கு வாங்கப்பட்டவருமாக,

184295 Y73(P31)N7 31L2

இருசார் அடிமையர் இருந்தனர். அவர் தப்பி ஓடிப்போனாலும் அடிமையரென்று அறியப்படுவதற்கு, அவர் காதில் துளையிடப் பட்டது.

தெய்வப்பற்று மிகுந்த பிற்காலத்தில், ஆண்டி முதல் அரசன் வரை எல்லா வகுப்பாரும் தம்மை இறையடியார் என்று காட்டுதற்குத் தம் காது குத்தித் துளையிட்டுக் கொண்டதாகத் தெரிகின்றது. அத்துளை தூர்ந்து போகாவாறே, முதலில் ஓலைச்சுருளும் பின்னர்ப் பொன்னோலையும் பிறவணிகளும் பெண்டிர் அணிந்து வந்திருக்கின்றனர். பாம்படம் (நாகபடம்), தண்டொட்டி, அரிசித்தழுப்பு, பூச்சிக்கூடு, மேலீடு என்னும் ஐவகை நகைகளை யணிதற்குத் தம் இளமையிலேயே குணுக்கு என்னும் குதம்பையால் தம் காதுத் துளையைப் பெரிதாக வளர்த்துக் கொண்டனர். குமரிநாட்டுடன் இணைந்திருந்த பாண்டி நாட்டில், இவ்வழக்கம் இன்றும் இருந்து வருகின்றது. அது காது வளர்த்தல் எனப்படும். ஆடவர் தம் சோணைத் தண்டை அத்துணை நீட்டாவிடினும், குழையும் குண்டலமும் குண்டுக் கடுக்கனும் அணியுமளவு துளையை அகலித்துக் கொண்டனர்.

உழவுத்தொழில் வரவர வளர்ந்து முழுநேர வுழைப்பையும் வேண்டியமையாலும், அதற்குப் பல புதுக்கருவிகள் வேண்டி யிருந்தமையாலும், வாழ்க்கையிலும் நாகரிகம் வளரவளரப் புதிதுபுதிதாகப் பல தேவைகள் தோன்றியமையாலும், எல்லார்க்கும் எல்லா வேலையுஞ் செய்ய நேரமில்லை யென்றும்; நேர மிருப்பினும், விருப்பங்களும் திறமைகளும் இயற்கையாகவே மக்கட்கு வேறுபட்டிருப்பதால், எல்லாரும் எல்லா வேலையுஞ் செய்ய வியலாதென்றும்; கண்டபோது, இயற்கையாகவே பற்பல தொழிற்பாதீடுகள் வெவ்வேறு காலத்தில் ஏற்பட்டன.

மருதநில வாழ்க்கையில், அளவான ஊர்தொறும், முதன் முதற் கோவில் வழிபாடு செய்ய ஒரு பூசகனும், காவல் செய்து வழக்குத் தீர்க்க ஒரு தலைவனும், பண்டமாற்ற ஒரு கடைக்கார னுந் தோன்றியிருத்தல் வேண்டும்.

அதன்பின், உழவர்க்கு வேண்டிய பொருள்களைச் செய் துதவப் பக்கத்துணையாகப் பல தொழிலாளர் படிப்படியாகத் தோன்றினர். அவரைப் பதினெண்குடி மக்கள் என்பது மரபு.

அக்குடிகளை வின்சிலோ (Winslow) அகரமுதலி பின்வருமாறு கூறும்.

வண்ணான்	எண்ணெய் வாணிகன்	ஓச்சன்
நாவிதன்	உப்புவாணிகன்	வலையன்
குயவன்	இலைவாணிகன்	பாணன்
தட்டான்	பள்ளி	
கன்னான்	பூமாலைக் காரன்	
கற்றச்சன்	பறையன்	
கொல்லன்	கோவிற்குடியான் (சங்கூதுவோன்)	
தச்சன்		

இவற்றைப் பின்வருமாறுங் கூறலாம்.

வண்ணான்	உமணன்	
மஞ்சிகன் (முடிதிருத்தி)	தச்சன் (மரக்கொல்லன்)	மருத்துவன்
பறம்பன் (தோலின்துன்னன்)	கல்தச்சன்	கணியன்
உவச்சன்	தட்டான் (பொற்கொல்லன்)	கிணையன் (பறையன்)
		துடியன்
கோலிகன் (நெசவாளன்)	பணிசெய்வோன்	பாணன்
செக்கான்	குயவன்	கூத்தன்

கன்னான் செம்புக் காலத்திலும் இருப்புக் கொல்லன் இரும்புக் காலத்திலுமே தோன்றியிருத்தல் கூடும்.

"துடியன் பாணன் பறையன் கடம்பனென்
றிந்நான் கல்லது குடியு மில்லை"

என்னும் புறநானூற்றுக் கூற்று (கடுரு), ஒரு குறிப்பிட்ட இடம்பற்றியதே யன்றிப் பொதுப்படக் கூறியதன்று.

குடிமக்கள் என்னுஞ் சொல், நிலையான குடிகளாகிய உழவர்க்குப் பல தொழிலுஞ் செய்து மக்கள்போல் உதவுபவர் என்று பொருள்படுவது. குடிமக்கள் எல்லாருள்ளும் விதப்பாகக் குடிமகன் என்று இன்றுஞ் சொல்லப்படுபவன் முடிதிருத்தாளனே.

குடிமக்கள் பலரும் தம் தொழிற்கு அல்லது தொண்டிற்கு உரிய கூலியைக் களத்திலும் உழவர்மனையிலும் வாங்கி வந்தனர்.

வயலிலும் வாய்க்காலிலும் மீன் பிடிக்கப்படுமேனும், கடுங் கோடைக்காலத்தில் ஆறுங் குளமும் வற்றி விடுமாதலாலும், களர்நிலத்து உப்பினும் கடலுப்பே சிறந்ததாகையாலும், செம்படவரும் உமணரும் மருதத்தை யடுத்த நெய்தல் நிலத்தில் தங்கி, முறையே, மீன்பிடித்தும் உப்புவிளைத்தும் வருவாரா யினர். அவர் குடியிருப்பிற்குக் குப்பம் என்றும் துறை யென்றும் பெயர்.

பழங் கற்காலத்திற் படவெழுத்தும் (Pictograph), புதுக்கற் காலத்திற் கருத்தெழுத்தும் (Ideograph), தோன்றியிருத்தல் வேண்டுமென்பது முன்னரே கூறப்பட்டது. படவெழுத்தாவது, ஒரு செய்கையைப் படமாகவே வரைந்து காட்டுவது. கருத் தெழுத்தாவது, ஒவ்வொரு கருத்தையும் படவெழுத்தடிப் படையில் ஒரு குறியாற் குறிப்பது.

பொற்காலத்தில் அசையெழுத்துத் தோன்றி யிருத்தல் வேண்டும். அசையெழுத்தாவது (Syllabary), உயிர்மெய்யை உயிரும் மெய்யுமாகப் பிரிக்காமல் தனியெழுத்தாக எழுதுவது.

பழங் கற்காலத்தில் பத்துவரையும், புதுக் கற்காலத்தில் நூறுவரையும், பொற்காலத்தில் ஆயிரம்வரையும், குமரிமாந்தர் எண்ணத் தெரிந்திருக்கலாம்.

கூட்டுரோட்சி நிலையில், மருதநிலத் தலைவன் ஊரன், மகிழ் நன் (மகிணன்) என்றும், முல்லைநிலத் தலைவன் அண்ணல், தோன்றல், குறும்பொறை நாடன் ‘ என்றும், குறிஞ்சி நிலத் தலைவன் வெற்பன், சிலம்பன், பொருப்பன் என்றும், நெய்தல் நிலத்தலைவன் துறைவன், சேர்ப்பன், கொண்கன், மெல்லம் புலம்பன் என்றும், பதவிப்பெயர் பெற்றிருந்தனர். மகிழ்நன் என்பது, மருதநிலத்து ஆடல்பாடலைக் கண்டுங் கேட்டும் பிற இன்பங்களை நுகர்ந்தும் மகிழ்வுற்றவன் என்பதை யுணர்த்தும். குறுநில வாட்சி நிலையில், அரசர் அனைவரும் மன்னர் எனப்பட் டனர்.

௩. செம்புக்காலம் (Copper Age)

(தோரா. கி. மு. 30,000 — 15,000)

பொன்கிடைப்பு வரவரக் குன்றியதாலும், அணிகலன் கட்கும் உண்கலங்கட்கும் குடிகலங்கட்குமே பொன்னைப் பெரிதும் பயன்படுத்தியதாலும், நாளடைவிற் பல கருவிகளையுங் கலங்களையும் செய்தற்கேற்ற செம்பைக் கண்டுபிடித்தனர்.

> ''குய்க்கொள் கொழுந்துவை நெய்யுடை யடிசில்
> மதிசேர் நாண்மீன் போல நவின்ற
> சிறுபொன் நன்கலஞ் சுற்ற இரீஇக்
> கேடின் றாக பாடுநர் கடும்பென
> அரிதுபெறு பொலங்கலம் எளிதினின் வீசி
> நட்டோர் நட்ட நல்லிசைக் குமணன்'' (புறம். ௧௬௦).

என்னும் பிற்காலச் செய்யுள் முற்கால நிலைமையையும் உணர்த்தும்.

பொருநை யென்னும் நெல்லை மாவட்ட ஆற்றங் கரையிற் செம்பு கிடைத்ததால், அவ்வாறு தாம்பரச் செப்பு என்று பொருள்படும் தாமிர பரணி என்னும் இருபிறப்பிச் சொல்லால் (hybrid) பிற்காலத்திற் குறிக்கப்பட்டது. நெல்லை யருகிலுள்ள ஒரு நகர் செப்பறை (செம்பு+அறை) எனப் பெயர்பெற்றுள்ளது. சிவபெருமானின் ஐவகை அம்பலங்களுள் ஒன்றான நெல்லையம்பலம், செப்போடு வேயப் பெற்றதால் செப்பம்பலம் (தாமிரசபை) எனப்பட்டது. பொதியமலை செம்பிற் பொருப்பு எனப்பட்டது.

> ''தென்கால் விடுக்குஞ் செம்பிற் பொருப்பு''
> (கல்லா. ருக:கக).

செம்பிற் பொருப்பு=செம்புத்தாது உள்ள மலை. இதைச் செப்பு வரையென்று குற்றாலத் தலபுராணங் கூறும்.

செந்நிறமாயிருந்ததனால், செம்பு என்றும் செம்பொன் என்றும் தாம்பரம் என்றும், புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட மாழை அல்லது பொன்னம் பெயர் பெற்றது.

செம்—செம்பு—செப்பு.

தும்—தும்பு—தும்பரம்=சிவப்பான அத்திப்பழம், அப்பழம் பழுக்கும் மரம்.

தும்பரம்—வ. உதும்பர.

தும்பு—துப்பு= க. சிவப்பு. உ. பவழம். ‘‘துப்புறழ் தொண்டைச் செவ்வாய்’’ (சீவக. ருருo). ௩. அரக்கு. (பிங்).

தும்—துமர்—துவர்=க. சிவப்பு ‘‘துவரிதழ்ச் செவ்வாய்’’ (சிலப். சு:உசு). உ. பவழம். (திவா). ௩. துவரம் பயறு அல்லது செடி. ‘துவர்ங்கோடு’ (தொல். எழுத். ௩சு௩, உரை). ச. காவி. ‘‘துவருறுகின்ற வாடை யுடல்போர்த்து’’ (தேவா. சுoஅ:கo). ரு. துவர்ப்பு. ‘‘துவர்மருவப் புளிப்பேற்றி’’ (தைலவ.தைல). சு. நாவல் அல்லது பூவந்தி, கடு, நெல்லி, தான்றி, ஆல், அரசு, அத்தி, இத்தி, முத்தக்காசு அல்லது கருங்காலி, மாந்தளிர் என்ற பத்துத் துவர்ப்பு மருந்துப் பொருள். ‘‘விரையொடு துவருஞ் சேர்த்தி’’ (சீவக. சுஉ௩). எ. பாக்கு. ‘‘வாச மணத்துவர் வாய்க்கொள் வோரும்’’ (பரிபா. கஉ:உஉ).

காசுக்கட்டியும் சாயப்பாக்கும் போன்ற செஞ்சரக்குத் துவர்ப்பா யிருப்பதால், துவர் என்னுஞ் சொல் துவர்ப்புப் பொருள் கொண்டது.

துவர் (சிவப்பு)—தெ. தொகரு, க. தொகர்
துவர் (துவர்ப்பு)—வ. துவர.
துவர்த்தல்=க. சிவத்தல். ‘‘துவர்த்த செவ்வாய்’’ (கம்பரா. நீர்விளை. க௩). உ. துவர்ப்பாதல்.
துவர்ப்பு=க. அறுசுவைகளுள் ஒன்று. (பிங்.)
உ. பத்து (துவர்ப்புப்பொருட் டொகை) (தைலவ. தைல).

துவராடை=காவியாடை. ‘‘அந்துவ ராடைப் பொதுவனொடு’’ (கலித். கoஉ:௩ரு).

துவர்க்கட்டி=காசுக்கட்டி.

துவர்க்கண்டல்=செந்தாழை. (தைலவ. தைல. க௩ரு).

துவர்க்காய்=பாக்கு. ‘‘துவர்க்காயொடு சுக்குத்தின்னும்’’ (தேவா. சுசுo:கo).

துவர்ப்பூ=வாடிச் சிவந்த பூ. "தன்றலை தங்கிய துவர்ப்பூ வேற்றி" (பதினெ. திருக்கண். மறம். நக். சுக).

துவர்வலியுறுத்தி=துவர்ப்பு மருந்து (Astringent tonic).

துவர்—துவரம்=துவர்ப்பு. (பிங்). துவரம்—**வ**. துவ்ர.

துவர்—துவரி=க. இலவம் பூ. "துவரிக் கனிவாய் நிலமங்கை" (திவ். பெரிய தி. அ:அ:ஙு).
உ. காவிநிறம். "துவரி யாடையர் மட்டையர்" (திவ். பெரிய தி. உ:க:சு).

துவரித்தல்=செந்நிறமூட்டுதல். "துவரித்த வுடையவர்க்கும்" (திவ். பெரிய தி. ரு:சு:அ).

துவர்—துவரை=க. துவரம் பயறு. உ. துவரஞ் செடி. ங. காட்டத்தி. ச. கருந்துவரை. ரு. செம்புருக்கி வார்த்துக் கட்டிய செப்புக் கோட்டை மதில்.

"செம்புபுனை ந் தியற்றிய சேணெடும் புரிசை
யுவரா வீகைத் துவரை யாண்டு" (புறம்.உ௦க).

சு. கண்ணன் ஆண்ட துவாரகை. **வ**. த்வாரகா.

துவரஞ்சம்பா=ஒரு நெல்வகை.

துவரைக்கோமான்=இடைக்கழகப் புலவராகச் சொல்லப்படும் ஒருவர். (இறை. க, உரை).

துவரைப்பதி—**வ**. த்வாரவதீ.

துவர்—துகர்—துகிர்=க. பவழம். "பொன்னுந் துகிரு முத்தும்" (புறம். உகஅ).
உ. பவழக்கொடி. "செந்துகிர் படருந் திரைக்கடல்" (கல்லா. முருக. வணி.). துகிர் —தெ. க. து. தொகரு.

துகிர்த்தாளி=பவழமல்லிகை (மலை).

துகிர்—துகில்=க. செந் நல்லாடை. "பட்டுந் துகிலு முடுத்து" (நாலடி.உசுச). உ செந்துணிக்கொடி. (பிங்).

துகில்—துகிலிகை=செந்துணிக் கொடி.

"புரிசைமேற் புனைந்த வாணிலா நெடுந் துகிலிகை"(கந்த பு. திருநகர.உ௦).

தும்பரம்—தம்பரம்—தாம்பரம் = செம்பு. (பதார்த்த.கூகஎ0).
தாம்பரம்—வ. தாம்ர.

தம்பரம்—தம்பர் = வெற்றிலை தின்று சிவந்த எச்சில்.(மாறனலங்.சஎ0,உதா.).

தம்பரம் = தம்பலம் = க. வெற்றிலை தின்று சிவந்த எச்சில். "தில்லை நல்லார் பொதுத் தம்பலங் கொணர்ந்தோ" (திருக்கோ. நகூசு). தெ.தம்ம. உ. வெற்றிலை பாக்கு. "தையால் தம்பலந் தின்றியோ" (கலித்.சுரு). ந.தம்பலப் பூச்சி.

தம்பலம்—வ. தாம்பூல.

தம்பலப் பூச்சி = தம்பலம் போற் சிவந்த மூதாய்.

தம்பலம்—தம்பல் = வெற்றிலை தின்று சிவந்த எச்சில்.

"வெள்ளிலைத் தம்பல்" (கம்பரா.வரைக்கா.சகூ).

தம்பலம்—தம்பலை = சிவந்த இலந்தைப் பழம், அது பழுக்கும் முட்செடி.

துமர்—தமர்—தமரை—தாமரை = செம் முளரி.

தாமரை என்னுஞ் சொல் இன்று தன் சிறப்புப் பொருளிழந்து, பொதுப்பொருளில் வழங்குகின்றது. அதனால், செம்முளரியைக் குறிக்கச் செந்தாமரை என்று மிகைபடக் கூறலாகச் சொல்ல வேண்டியுள்ளது. இது, அரைஞாண் கொடி, குளிர்ந்த தண்ணீர் என்பன போன்ற வழு வழக்கே.

தாமரை—வ. தாமரஸ.

இதுகாறுங் கூறியவற்றால், வடசொல்லாகக் கருதப்படும் தாம்பரம், தாமரை என்னுஞ் சொற்களும் தென்சொல்லே யென்றும், இங்ஙனமே நூற்றுக் கணக்கான தென்சொற்கள் வடமொழியில் இனம்மறைந்து வழங்குகின்றன வென்றும் தமிழ் உண்மையில் திரவிடத்தாயும் ஆரிய மூலமும் ஆகுமென்றும், அறிந்து கொள்க.

பொற்காலத்திற் பொன்னால் உண்கலம் குடிகலம் நீர்க்கலம் முதலிய பல்வகைக் கலங்கள் செய்யப்பட்டனவேனும், அவை பெருமக்களாலேயே பயன்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும். முதன்முதலாகப் பொதுமக்கள் பழங்கிய மாழைக் கலங்கள், செம்பினாற் செய்யப்பட்டவையே. அதனால், சில

குறிப்பிட்ட வடிவையுடைய கலங்கள் எவ்வெக் கருவியாற் செய்யப்படினும், இன்றும் செம்பு, செப்பு, செப்புக்குடம் எனச் செம்புக் காலப் பெயர்களாலேயே வழங்கி வருகின்றன.

நிலையாக வைத்துப் போற்ற வேண்டிய ஆவணங்களும் முறிகளும், எங்கும் எளிதாக எடுத்துச் செல்லக் கூடிய வகையில், செப்பேடுகளிற் பொறிக்கப்பட்டுச் செப்புப் பட்டையம் எனப் பட்டன.

செம்பில் வார்க்கப்பட்ட தெய்வப் படிமைகள் செம்புக் குட்டி யென்றும், செப்புத் திருமேனி யென்றும் சொல்லப் பட்டன.

''புளியிட்ட செம்பையும் போற்றுகிலேனுயர் பொன்னெனவே''
(பட்டினத்தார், பொது.கூக).

முதன்முதல் மரத்திற் குடையப்பட்ட அல்லது செய்யப் பட்ட மரக்கால் என்னும் முகத்தலளவைக் கருவி, செம்பிலும் வார்க்கப்பட்டுச் செப்புக்கால் எனப் பெயர் பெற்றது. செப்புக் கால் திருச்சிற்றம்பலமுடையான் என்பது, சோழர் காலத்தில் வழங்கிய நெல்லளக்குங் கருவி வகை.

உளி, கத்தி, அரம், வாள், கறண்டி, கலப்பைக் கொழு முதலிய பலவகைக் கருவிகளும், பொற்காலத்திற்குப் பின் செம்பிலேயே செய்யப்பட்டிருந்தல் வேண்டும்.

வலிய பகைவராலும் எளிதாய்த் தகர்க்க முடியாவாறு, செம்பை யுருக்கிச் சாந்தாக வார்த்துக் கருங்கல்லாற் கட்டிய இஞ்சி யென்னுங் கோட்டை மதில்வகை, எருமையூர் (மைசூர்) நாட்டுத் துவரை நகரி லிருந்தமை மேற் குறிக்கப்பட்டது. இராவணன் கோட்டை அத்தகைய மதிலுடைமையாற் செப்புக் கோட்டை யெனப்பட்டது.

''செம்பிட்டுச் செய்த இஞ்சித் திருநகர்ச் செல்வம் தேறி''
(கம்பரா. கும்ப. கசா௦).

நெய்தல் நில நுளைந்தர், கட்டுமரம், திமில், படகு முதலிய கலங்களைச் செலுத்தி ஆழ்கடலில் மீன் பிடித்ததொடு, சலங்கு களிற் சென்று முத்துக் குளித்தும் பவழத் தீவுகளினின்று பவழங் கொணர்ந்தும் தம் வாழ்க்கையை வளம்படுத்தினர். கிளிஞ்சில்

முத்துமாலைகளைச் செல்வரும், வலம்புரி இடம்புரி முத்துமாலைகளை அரசரும், வாங்கியணிந்தனர். சங்கு வளையலும் பவழமாலையும் பெண்டிரால் விரும்பி யணியப்பட்டன. சிப்பி நீற்றுச் சுண்ணம் சிறந்த வெண்சுதையாகப் பயன்படுத்தப்பட்டது.

ஒருவன் ஒருத்தியொடு மறைவாகக் கூடிய பின் அவளொடு கூடவில்லையென்று மறுத்துரைத்தலும், அவளைக் கைவிடுதலும், ஒருவன் ஒருத்தியொடு வலிந்து கூடுதலும், ஆகிய பொய்யும் ஒழுக்கக் கேடும் பலரிடைத் தோன்றியபின், பெற்றோரின் இசைவு பெற்றே ஒரு பெண்ணைக் கொள்ளுமாறும், இருபாலாரும் வெளிப்படையாகக் கற்புடன் ஒழுகுமாறும், விழாவொடு கூடிய கரணம் என்னும் திருமணச் சடங்கைப் பெரியோர் ஏற்படுத்தி வைத்தனர்.

''பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப.'' (தொல். ௧௦௯௧).

''கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே.''
(ஷை. ௧௦௮௮).

திருமணக் கரணம் பெரும்பாலும் பின்வருமாறு நடந்தது.

''உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோற் றமலை நிற்ப நிரைகால்
தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி
மனைவிளக் குறுத்து மாலை தொடரிக்
கனையிருள் அகன்ற கவின்பெறு காலைக்
கோள்கால் நீங்கிய கொடுவெண் டிங்கள்
கேடில் விழுப்புகழ் நாள்தலை வந்தென
உச்சிக் குடத்தர் புத்தகல் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்
புதல்வற் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பினின் வழாஅ நற்பல வுதவிப்
பெற்றோற் பெட்கும் பிணையை யாகென

நீரொடு சொரிந்த இரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க
வதுவை நன்மணங் கழிந்த பின்றைக்
கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுதந்து
பேரிற் கிழத்தி யாகெனத் தமர்தர
ஓரிற் கூடிய வுடன்புணர் கங்குல்''

(அகம். அசு).

இதன் பொருள்:—

க—ச. உழுத்தம் பருப்பொடு சேர்த்துச் சமைத்த கொழுமையான குழைந்த பொங்கலோடு பெரிய சோற்றுத் திரளையை உண்டல் இடையறாது நிகழ, வரிசையான கால்களையுடைய குளிர்ந்த பெரிய பந்தற்கீழ்க் கொண்டுவந்து கொட்டிய மணலைப் பரப்பி, வீட்டில் விளக்கேற்றி, மாலைகளைத் தொங்கவிட்டு,

ரு—கo தீய கோள்களின் தொடர்பு நீங்கிய வளைந்த வெண்ணிலாவைக் குற்றமற்ற சிறந்த புகழையுடைய சகடம் என்னும் நாள் அடைய, மிகுந்த இருள் நீங்கிய அழகு பொருந்திய விடியற்காலையில், உச்சந்தலையிற் குடத்தையும் கையிற் புதிய அகன்ற மொந்தையையும் உடைய, மணஞ் செய்து வைக்கும் ஆரவாரமுள்ள முதிய மங்கல மகளிர் முன்னே தருவனவற்றையும் பின்னே தருவனவற்றையும் முறைப்படி எடுத்தெடுத்துக் கொடுக்க,

கக—கரு. மகனைப் பெற்ற தேமலுள்ள அழகிய வயிற்றையும் தூய அணிகளையும் உடைய மகளிர் நால்வர் கூடிநின்று, கற்பினின்றும் தவறாது பலநற்பேறுகளைப் பெற்று, உன் கணவன் விரும்பிப் பேணும் விருப்பத்திற் கிடமாகுக என்று வாழ்த்தி, நீரொடு சேர்த்துப் பெய்த குளிர்ந்த இதழ்களையுடைய பூக்கள், அடர்ந்த கரிய கூந்தலில் நெல்லொடு விளங்க,

கஎ. நல்ல மணவிழா முடிந்த பின்பு,

கஅ—உo. சுற்றத்தார் ஆரவார ஓசையுடன் விரைந்து வந்து, பெரிய மனைக்கிழத்தி யாவாய் என்று சொல்லிச் சேர்த்துவைக்க, ஓர் அறையில் உடன் கூடிய புணர்ச்சிக்குரிய இரவில்.

"மைப்பறப் புழுக்கின் நெய்க்கனி வெண்சோறு
வரையா வண்மையொடு புரையோர்ப் பேணிப்
புள்ளுப்புணர்ந் தினிய வாகத் தெள்ளொளி
அங்கண் இருவிசும்பு விளங்கத் திங்கட்
சகடம் மண்டிய துகள்தீர் கூட்டத்துக்
கடிநகர் புனைந்து கடவுட் பேணிப்
படுமண முழவொடு பரூஉப்பணை யிமிழ
வதுவை மண்ணிய மகளிர் விதுப்புற்றுப்
பூக்கணும் இமையார் நோக்குபு மறைய
மென்பூ வாகைப் புன்புறக் கவட்டிலை
பழங்கன்று கறித்த பயம்பமல் அறுகைத்
தழங்குகுரல் வானின் தலைப்பெயற் கீன்ற
மன்னுமணி யன்ன மாயிதழ்ப் பாவைத்
தண்ணறு முகையொடு வெண்ணூல் சூட்டித்
தூவுடைப் பொலிந்து மேவரத் துவன்றி
மழைபட் டன்ன மணன்மலி பந்தர்
இழையணி சிறப்பிற் பெயர்வியர்ப் பாற்றித்
தமர்நமக் கீத்த தலைநாள் இரவின்"

(அகம். ௧௩௬).

இதன் பொருள்:—

௧—௯. நெஞ்சே, குற்றமற்ற பருப்புடன் கலந்தாக்கிய நெய்மிகுந்த வெண்சோற்றை, நீக்காத இகைத் தன்மையுடன் உயர்ந்த சுற்றத்தார் முதலியோரை உண்பித்து, புட்குறி இனிதாகக்கூட, தெள்ளிய ஒளியையுடைய அழகிய இடமகன்ற பெரிய வானம் களங்கமற விளங்க, திங்களைச் சகடம் கூடிய குற்ற மற்ற நன்னாளில், மணமனையைச் சுவடித்துக் கடவுளை வழிபட்டு, மணமேளத்துடன் பெரிய முரசம் முழங்க, தலைவிக்கு மணநீராட்டிய மகளிர், தம் கூரிய கண்களால் இமையாது நோக்கி மறைய,

௧௦—௧௮. மெல்லிய பூவையுடைய வாகையின் அழகற்ற பின்புறத்தைக் கொண்ட கவர்த்த இலையை, முதிய கன்று, கறித்த பள்ளத்திற் படர்ந்த அறுகின், இடி முழங்கிய வானத்து முதன்மழைக்கு அரும்பிய கழுவிய நீலமணி போலும் கரிய இதழையுடைய பாவையொத்த கிழங்கிடத்துள்ள குளிர்ந்த மணமுள்ள அரும்புடன், சேர்த்துக் கட்டிய

வெள்ளிய நூலைச்சூட்டி, தூய புத்தாடையாற் பொலியச் செய்து, விருப்பத்துடன் கூடி, மழையோசை போன்ற மணவோசை மிகுந்த பந்தலில் அணிகளை மிகுதியாய் அணிந்திருந்ததனால் உண்டான வியர்வையை விசிறியால் ஆற்றி, அவள் சுற்றத்தார் அவளை நமக்குத் தந்த முதல்நாள் இரவில்''

இவை பிற்காலத்தனவாயினும், பிராமணனும் சமற்கிருத மந்திரமுங் கலவாத பண்டைத் தூய தமிழத் திருமண விழாவின் இயல்பைத் தெளிவாகக் காட்டுவனவாகும்.

மருதத்தை யடுத்து நாட்டிற் கணித்தாக வுள்ள முல்லை நிலவாணர், ஆடுமாடெருமையென்னும் முந்நிரையையும், சிறப்பாக ஆநிரையை, வளர்ப்பதை முதன்மைத் தொழிலாகவும், வானுவாரிப் பயிர் விளைவிப்பதைத் துணைத்தொழிலாகவுங் கொண்டு, பிறர்க்குத் தீங்கு செய்யாதும் ஏறுதழுவி மணக்கும் மறவியலை மேற்கொண்டும் வாழ்ந்துவர; குறிஞ்சியை யடுத்துக் காட்டுச் சார்பாகவும் நாட்டிற்குத் தொலைவிலும் உள்ள முல்லைநிலவாணரோ, தம் வாழ்நிலம் ஆண்டுதொறும் வேனிலில் வற்றிவறண்டு வெம்பாலையாக மாறியதால், ஆறலைத்தலையுஞ் சூறைகோட்டலையுமே தம் குலத்தொழிலாகக் கொண்டு விட்டனர். கொடுவறட்சிகொள்ளைக்கே தூண்டும்.

இங்ஙனம், தமிழகம் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என ஐந்திணைப் பாகுபாடுற்றது. திணை ஐந்தாயினும், நிலையான நிலம் நான்கே யாதலால், ஞாலம் நானிலம் என்னப்பட்டது. பாலைநிலத்தலைவர் விடலை, கோ, வேள், மீளி, காளை எனப் பல்பெயர் பெற்றனர்.

மருதநிலத்து ஊர்களிலேயே நெல் விளைந்ததனுல், பாலைநிலந்தவிர மற்ற முந்நில மாந்தரும் தத்தம் நிலத்துச் சிறப்புப் பண்டங்களை அங்குக் கொணர்ந்து நெல்லிற்கு மாறினர்.

''கானுறை வாழ்க்கைக் கதநாய் வேட்டுவன்
மான்றசை சொரிந்த வட்டியும் ஆய்மகள்
தயிர்கொடு வந்த தசும்பு நிறைய
ஏரின் வாழ்நர் பேரி லரிவையர்

ரு குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்
முகந்தனர் கொடுப்ப வுகந்தனர் பெயரும்
தென்னம் பொருப்பன் நன்னாட் டுள்ளும்''
(புறம். ௩௩ :௧—௭).

உமணர், நெய்தல் நிலத்து உப்பளங்களினின்று உப்பை மாட்டு வண்டிகளில் ஏற்றிக்கொண்டு வந்து, மற்ற நிலத் தூர்களில் விற்றனர்.

''......................................கானல்
கழியுப்பு முகந்து கன்னாடு மடுக்கும்
ஆரைச் சாகாட் டாழ்ச்சி போக்கும்
உரனுடை நோன்பகட் டன்ன'' (புறம்: சுo).

''இத்திலைக் குப்பை யேறி யுமணர்
உப்பொ யொழுகை யெண்ணுப மாதோ'' (புறம் ௧௧சு).

விற்பனை பெரும்பாலும் பண்டமாற்றாகவே நடந்தது.

''முள்ளெயிற்றுப் பாண்மகள் இன்கெடிறு சொரிந்த
அகன்பெரு வட்டி நிறைய மனையோள்
அரிகாற் பெரும்பயறு நிரைக்கும் ஊர'' (ஐங். ௪௭).

கெளிறு—கெடிறு = முள்ளுள்ள ஒருவகை மீன்.

''வலைவல் பாண்மகன் வாலெயிற்று மடமகள்
வரா அல் சொரிந்த வட்டியுள் மனையோள்
யாண்டுகழி வெண்ணெல் நிறைக்கும் ஊர'' (ஷை. ௪௮).

மருதத்திற்கும் குறிஞ்சிக்கும் இடைப்பட்ட முல்லை நிலத்து இடைச்சி, ஆனைந்தை மருத நிலத்தில் நெல்லிற்கு விற்றதொடு குறிஞ்சி நிலத்தில் பாலெருமைக்கும் ஆவிற்கும் எருமைக் கடாரிக்கும் மாறி வந்தாள்.

ஆனைந்து என்பன பால் தயிர் மோர் வெண்ணெய் நெய்.

''குறுநெறிக் கொண்ட கூந்த லாய்மகள்
அளைவிலை யுணவிற் கிளையுட னருத்தி
நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்
எருமை நல்லான் கருநாகு பெறூஉம்
மடிவாய்க் கோவலர் குடி'' (பெரும்பாண். ௧சுஉ—௭).

பாலைநில மாந்தர் வழிப்போக்கரைக் கதறப் புடைத்துப் பொருள் பறித்ததையும், பொருளொடு வராதவரின் கைகால் களைத் துண்டித்ததையும், ஆநிரை கவர்தலும் ஆறலைத்தலுஞ் செய்யாது 'அறஞ்செய்யின் மறங்கெடும்.' என்னும் அவர் கொள்கையையும், பின்வருபவற்றால் அறியலாம்.

''அத்தஞ் செல்வோ ரலறத் தாக்கிக்
கைப்பொருள் வெளவுங் களவேர் வாழ்க்கைக்
கொடியோர்'' (பெரும்பாண். ௩௯—௪௧).

''வலிமுன்பின் வல்லென்ற யாக்கைப் புலிநோக்கிற்
சுற்றமை வில்லர் சுரிவளர் பித்தையர்
அற்றம்பார்த் தல்குங் கடுங்கண் மறவர்தாம்
கொள்ளும் பொருளில ராயினும் வம்பலர்
துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்துயிர் வௌவலிற்
புள்ளும் வழங்காப் புலம்புகொள் ஆரிடை''
(கலித். ௪).

''கல்லென் பேரூர்க் கணநிரை சிறந்தன
வல்வில் எயினர் மன்றுபாழ் பட்டன
மறக்குடித் தாயத்து வழிவளஞ் சுரவாது
அறக்குடி போலவிந் தடங்கினர் எயினரும்''
(சிலப். வேட்டு. ௧௨—௧௫).

பாலைநில மகளிரும் மறஞ்சிறந்தவர் என்பதை,

''யானை தாக்கினும் அரவுமேற் செலினும்
நீனிற விசும்பின் வல்லேறு சிலைப்பினும்
சூன்மகள் மாறா மறம்பூண் வாழ்க்கை
வலிக்கூட் டுணவின் வாட்குடி''

என்பதால் (பெரும்பாண். ௧௩௪—௧௩௭) அறியலாம்.

பொற்காலத்திற் குறுநில மன்னவரா யிருந்தவருட் சிலர் செம்புக்காலத்திற் பெருநில மன்னராயினர். முன்னவர் மன்னர் என்றும், பின்னவர் கோக்கள் என்றுஞ் சொல்லப் பட்டனர்.

"கோக்கண்டு மன்னர் குரைகடல் புக்கிலர் கோகனகப்
பூக்கண்டு கொட்டியும் பூவா தொழிந்தில"

என்னும் தனிப்பாடலால், மன்னனினும் பெரியவன் கோ என்பதை அறிக. கோ என்பது கோவன் என்பதன் மரூஉ. கோக்களை (ஆக்களை)க் காக்கும் ஆயன் போல மக்களைக் காப்பவன் அரசன் என்பது கருத்து. இவ்வொப்புமை பற்றியே, ஆயன் கோல்போல் அரசனும் ஒருகோலைக் கையிற் கொண்டான். ஆட்சி நேர்மையாயிருக்க வேண்டுமென்பதைக் காட்டவே, நேரான கோல் கொள்ளப்பட்டது. கோல் ஆட்சியைக் குறிக்குஞ் சின்னமாதலால், முறையான ஆட்சி செங்கோல் என்றும், முறைதவறிய ஆட்சி கொடுங்கோல் என்றும் சொல்லப்பட்டன. கொடுமை வளைவு. செம்மை நேர்மை. கோன் என்னும் தென்சொல்லே துருக்கியிற் 'கான்' என்று திரிந்ததாகக் கால்டுவெலார் கூறுவர்.

கோவன்—கோன்—கோ = அரசன்.

கோவன், கோன் என்னுஞ் சொற்கள் இன்றும் ஆயனையுங் குறித்தல் காண்க. கோன் என்னுஞ் சொல் 'ஆர்' என்னும் உயர்வுப்பன்மை யீறு பெற்றுக் கோனார் எனவும் வழங்கும்.

பாலை நிலந்தவிர மற்ற நான்கு நிலங்களுள், ஒன்றும் பலவுங் கைக்கொண்டவர் கோக்களாவர். அமைச்சர், படைத்தலைவர், பூசகர், தூதர், ஒற்றர் என்னும் ஐம்பெருங்குழுவார் அவருக்கு ஆட்சித் துணையாயிருந்தனர்.

ஐந்திணைகளுந் தோன்றியபின், முதற்கண் குறிஞ்சியில் வேட்டையாடுங் குறவரும், முல்லையில் முந்நிரை வளர்க்கும் இடையரும், மருதத்தில் உழுதொழிலைச் சிறப்பாகச் செய்யும் உழவரும், பாலையில் வழிப்பறித்துக் கொள்ளையடிக்கும் மறவரும், நெய்தலில் மீன்பிடிக்கும் படவரும், ஆகப் பெரும்பாலும் ஒவ்வொரு வகுப்பாரே வாழ்ந்திருப்பர்.

ஒவ்வொரு திணைநிலத்திலும் உள்ள ஒவ்வொரு மக்கட் குடியிருப்பிலும், அடக்கியாளவும் வழக்குத் தீர்க்கவும் ஒரு தலைவன் தோன்றியிருப்பன். அவன் இற்றை நாட்டாண்மைக் காரன்போல் பிறர் செய்யுந் தொழிலையே செய்திருப்பன். தெய்வ வணக்கம் அல்லது அச்சம் இயற்கைப் பண்பாதலால், தலைவனுக்குப் பின் ஒரு பூசகன் அல்லது தேவராளனுந்

தோன்றியிருப்பன். அவர்க்குமுன், மருதநிலப் பேரூர்களில் பண்டமாற்றியர் அல்லது வணிகர் தோன்றியிருப்பர். ஆண்டு தோறும் பல கூலங்களும் புதிதாகவும் ஏராளமாகவும் விளைந்ததால், முந்தின ஆண்டில் மீந்து போன கூலங்களை வாங்கவும், அவற்றிற் கீடாக உழவர்க்கு வேண்டிய பிறநிலத்துப் பொருள்களைக் கொண்டுவந்து தரவும், உழவரினின்றே ஒரு சிலர் வணிகராகப் பிரிந்திருத்தல் வேண்டும். ''யாண்டுகழி வெண்ணெல்'' என்று ஐங்குறு நூற்றுப்பாடல் கூறுவதை நோக்குக. ''ஒன்றிரண்டாம் வாணிகம்'' என்பதும் வணிக முயற்சியை ஊக்கியிருத்தல் வேண்டும். வணிகருக்குப்பின் பல்வேறு கைத்தொழிலாளர் படிப்படியாகத் தோன்றலாயினர். நாகரிகமும் அரசியலும் வணிகமும் வளர வளர, நூற்றுக்கணக்கான பணிகளும் அலுவல்களும் புதுபுதிதாக ஏற்பட்டன. அறிவு வளர்ச்சி யடைந்ததனால், பூசகர் கல்வி கற்பிக்கும் ஆசிரியத் தொழிலும் மேற்கொண்டனர். உழவு, வணிகம். காவல், கல்வி என்னும் நாற்பெருந் தொழில் பற்றி, மருதநில மக்கள் உழவர், வணிகர், அரசர், பார்ப்பார் என நால்வகுப்பாராய் அமைந்தனர். பதினெண் கைத்தொழிலாளரும் உழவர்க்குப் பக்கத் துணைவராகக் கருதப்பட்டதனால், அவருள் அடக்கப்பட்டனர்.

பண்ணியம் = பண்ணப்பட்ட பொருள், விற்பனைப் பண்டம். (மதுரைக். ௪0௫).

பண்ணியம்—பண்ணியன்—பண்ணிகன்—பணிகன்—வணிகன் = பல பண்டங்களை விற்பவன். வணிகன்—வாணிகன்.

பார்ப்பான் = நூல்களைப் பார்ப்பவன். இது 'அன்' சாரியை அல்லது 'அனன்' இறு பெற்றுப் பார்ப்பனன் என்றும் நிற்கும். முக்கால வினைமுற்றும் இங்ஙனம் இறு கொள்ளும்.

எ—டு.	பார்த்தனன்	—	இறந்த காலம்.
	பார்க்கின்றனன்	—	நிகழ் காலம்
	பார்ப்பனன்	—	எதிர் காலம்

"படைப்பனர்" (சிலப்.௧0:௧௩௪), "விரைவனன்" (புறம். ௧௫0) என்னும் எதிர்கால வினை முற்றுக்களை நோக்குக. பார்ப்பனன் என்பது பிராமணன் என்னும் சொல்லின் திரி

பன்று. கல்வித் தொழில் செய்யும் ஆசிரியரும் சமய குரவரும் போன்ற தமிழரையெல்லாம் பார்ப்பாரென்றே சொல்ல வேண்டும். பிராமணரை இச்சொல்லாற் குறிக்க வேண்டின், ஆரியப் பார்ப்பார் (அல்லது பார்ப்பனர்) என்று அடை கொடுத்தே கூறவேண்டும்.

அரசர் என்னுஞ் சொல் பின்னர் விளக்கப்படும்.

மொழிவளர்ச்சியில், எண்வேற்றுமைகளும் முக்காலமும் பல்வகை எச்ச முற்றுக்களும், முழுநிறைவான சொற்றொட ரமைப்பும், செம்புக்காலத்தில் தோன்றியிருத்தல் வேண்டும். எழுத்து வகையில் ஒலியெழுத்துத் (Phonetic characters)தோன்றி யிருக்கும். ஆயின், எகர வொகரக் குறிலுயி ரொலிகளும் ளகர ழகர றகர னகர மெய்யொலிகளும் பெரும்பாலுந் தோன்றி யிரா. இக்காலத்தில் தான், பிராகிருதம் என்னும் வடதிரவிட மொழியாளரின் முன்னோர் வடநாவலம் (இந்தியா) சென்றிருப் பர். பாவகையில் ஆசிரியமும் கலியும் தோன்றி யிருக்கும். மக்களின் எண்ணுந்திறன் பதினாயிரம்வரை சென்றிருக்கும்.

மதத்துறையில், மறுமையுணர்வும் விண்ணுலகக் கொள்கை யும் தோன்றி யிருக்கலாம்.

௪. உறைக்காலம் (Bronze Age)
(தோரா. கி.மு. 15,000—10,000).

உறை யென்பது வெண்கலம். இது முறியெனவும் படும்.

"கஞ்சம் உறைவெண் கலமா கும்மே." (பிங். சு:கசா).

"வெண்கலப் பெயரும் விழுமமும் பெருமையும்

....

ஓரிடைச் சொல்லும் வாழ்நாளும் உறையெனல்."

(ஷை கo:கஅச).

எட்டுப் பங்கு செம்பும் ஒரு பங்கு தகரமுங் கலந்த கலப்பு மாழையே உறை. இது செம்பு போலத் தனிமாழை யன்மை யாலும், வெண்ணிறக் கலவடிவிலேயே மக்கள் இதைக் கண்டமையாலும், கருமிய (காரிய) வாகுபெயராக வெண்கலம் என்னும் பெயர் பெற்றது.

செம்பு, கும்பா, கிண்ணம், குடம், வட்டில் முதலிய கலங்களும்; மாடவிளக்கு, குத்துவிளக்கு, பாவை விளக்கு முதலிய திரிவிளக்கு வகைகளும்; வாள் கறண்டி முதலிய கருவிகளும்; உறையாற் செய்யப்பட்டன.

வெண்கல ஏனத்தில் வார்த்த அல்லது வைத்த நீருங் கட்டியுமான உணவுப்பொருட்கள், சிறப்பாகப் புளிப்புப் பண்டங்கள், கைத்துங் கெட்டும் போகாவாதலால், பொன்னும் வெள்ளியும் கிடையாத ஏழைமாந்தர்க்கும் இடைத்திற வகுப்பார்க்கும் வெண்கல ஏனமே சிறந்த மாழைக்கலமாக இருந்து வந்தது. செப்புக்குடம் என்னும் நீர்க்கலம் செம்பினாற் பெயர் பெறினும், வெண்கலத்தினாலேயே இன்றுஞ் செய்யப்பட்டு வருகின்றது.

வெண்கல வோசை முழங்குவதாலும் மிக நீண்டு நிற்பதாலும், கைத்தாளம், வண்டித்தாளம், கைம்மணி, நாழிமணி, ஆன்மணி, குதிரைமணி, யானைமணி, தேர்மணி, கோபுரமணி, சேமக்கலம், பலகைமணி, முதலிய இசைக்கருவிகட்கு உறையையே முதற்கருவியாகப் பயன்படுத்தினர். "இடிக் குரல் முரசம் இழுமென் பாண்டில்" (சிலப். உசு:கககச) இதிற் பாண்டில் என்றது வண்டித்தாளத்தை.

உவச்சரும் பிற பூசகரும் பூசையிற் பயன்படுத்துவது கைம்மணி.

“கைம்மணிச் சீரன்றிச் சீரறி யாக்கம்ப நாடன்சொன்ன
மும்மணிக் கோவை முதற்சீர் பிழை..............”

என்று வாணியன் தாதன் கம்பர் மீது அங்கதம் பாடினான்.

“தீங்கனி யிரவமொடு வேம்புமனைச் செரீஇ
வாங்குமருப் பியாழொடு பல்லியங் கறங்கக்
கைபயப் பெயர்த்து மையிழு திழுகி
ஐயவி சிதறி ஆம்ப லூதி
இசைமணி யெறிந்து காஞ்சி பாடி
நெடுநகர் வரைப்பிற் கடிநறை புகைஇக்
காக்கம் வம்மோ காதலந் தோழி
வேந்துறு விழுமந் தாங்கிய
பூம்பொறிக் கழற்கால் நெடுந்தகை புண்ணே.”

என்னும் புறப்பாட்டில் (உ௮௧) இசைமணியென்றது கைம் மணியையே.

“கறங்குமணி துவைக்கும் ஏறுடைப் பெருநிரை”
என்பதில் (மலைபடு. ௫௭௩) குறித்தது ஆன்மணி.

“கறங்குமணி வாலுளைப் புரவியொடு”
என்பதில் (சிறுபாண். ௧௧௨) குறித்தது குதிரைமணி.

“கயிறுபிணிக் கொண்ட கவிழ்மணி மருங்கின்
பெருங்கை யானையிரும் பிடர்த்தலை யிருந்து”
என்பதில் (புறம். ௩:௧௦—௧௧) குறித்தது யானைமணி.

“பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண் பறவை பேதுற லஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்”
என்பதில் (அகம். ௪:௧௦—௧௨) குறித்தது தேர்மணி.

யானையை மணிகட்டாது தெருவழிச் செல்ல விடுவதில்லை. அதனால், “யானைவரும் பின்னே, மணியோசை வரும் முன்னே” என்ற பழமொழி யெழுந்தது.

"மணியிலாக் குஞ்சரம் வேந்தூர்த லின்னா." என்றார் கபிலர். (இன்னா. கச).

வழக்கிழந்தோ பெருந்தீங்கு செய்யப்பட்டோ அரசனிடத்தில் முறையிடுவோர் அசைக்குமாறு, அரண்மனை வாயிலிற் கட்டப்பட்ட ஆராய்ச்சி மணி வெண்கல மணியே.

"வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சுசுடத் தான்றன்
அரும்பெறற் புதல்வனை யாழியின் மடித்தோன்"
(சிலப். ௨௦:ருரு—ரு).

"ஆடுங் கடைமணி நாவசை யாமல் அகிலமெங்கும்
நீடுங் குடையைத் தரித்தபி ரானிந்த நீணிலத்தில்
பாடும் புலவர் புகழொட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்கச் சோழனென் றேயெனைச்
சொல்லுவரே."

என்பது, ஒட்டக்கூத்தரும் இரண்டாங் குலோத்துங்கச் சோழனும் முன்னீரடியும் பின்னீரடியுமாகப் பாடிய தனிப்பாடல்.

பொதுமக்கள் நேரமறியுமாறு, நாழிகை தோறும் அடிக்கக் கோபுரத்திற் கட்டிய பெருமணி கோபுர மணியாம்.

உறுதியும் பார்வையுமுள்ளதும், போதிய அளவு கிடைக்கக் கூடியதும், பெரும்பாலுங் களவுங் கொள்ளையும் போகாததும், ஆன மாழை உறையே யாதலால், அதிலேயே சிறியவும் பெரியவுமான தெய்வப் படிமைகளும் மக்கட்படிமைகளும் வார்க்கப்பட்டன.

உறைக் காலத்தில், நெய்தல் நில மக்கள் கப்பல் நாவாய் முதலிய பெருங்கலங்களிற்சென்று, அக்கரை நாடுகளிலும் அவற்றையடுத்த தீவுகளிலுமுள்ள பல்வகை அரும்பண்டங்களைக் கொண்டு வந்து நீர்வாணிகத்தைப் பெருக்கினர்.

ஆட்சித்துறையில், கோவினும் பெரிய வேந்தன் தோன்றி, ஐந்திணை யரசரையும் அடக்கி யாண்டான். தனக்கொரு தனிச் சிறப்பு வேண்டி, முடியணியும் உரிமையைத் தனக்கே கொண்டான். இதனாலேயே, அவன் வேந்தன் எனப்பட்டான்.

மே=மேல். மே—மேய். மேய்தல்=விலங்கு புல்லின் மேற் பகுதியைத் தின்னுதல், கூரையின்மேல் வைக்கோலிடுதல்.

மேய்—வேய். வேய்தல் = கூரையின்மேல் வைக்கோலிடுதல், ஒற்றன் ஒரு கோலத்தை மேற்கொண்டு உளவறிதல், தலைமேல் மகுடமணிதல்.

வேய்—வேய்ந்தோன்=மகுடமணிந்தோன்.
வேய்ந்தோன்—வேய்ந்தன்—வேந்தன்.
கொன்றைவேய்ந்தோன்=கொன்றை மாலையை அல்லது மலரைத் தலையிற் சூடிய சிவன்.

கொன்றைவேய்ந்தோன்—கொன்றைவேந்தன்=சிவன்.
வேந்தன்—வேந்து. ஒ.நோ: அரசன்—அரசு,
அமைச்சன்—அமைச்சு, பாங்கன்—பாங்கு,
பார்ப்பான்—பார்ப்பு.

முடியுடை மூவேந்தர் என்னும் வழக்கை நோக்குக.

"வண்பொழில் மூவர் தண்பொழில் வரைப்பின்" என்று தொல்காப்பியங் (கருருசா) கூறுவதால், கி.மு. எ-ஆம் நூற்றாண்டு வரை இச்சிறப்புரிமை காக்கப்பட்டு வந்ததென அறியலாம். அதன்பின், கடைக்கழகக் காலத்தில் குறுநில மன்னர் தலையெடுத்ததால், மூவேந்தரும் இவ்வதிகாரத்தை இழந்துவிட்டனர்.

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி"

என்று இளங்கோவடிகள் பாடுவதாலும், தமிழன் பிறந்தகம் குமரிநாடாதலாலும், குமரிக்கண்டத் தமிழ்நில முழுதும் பழம்பாண்டிநாடாதலாலும், மூவேந்தருள்ளும் முதலில் தோன்றியவன் பாண்டியனே என்பது அறியப்படும். பிற்காலத்தில், நாவலந்தேயத்தின் கீழ்ப்பாகத்தையும் மேற்பாகத்தையும் துணையரசராக அல்லது மண்டிலத் தலைவராக ஆளுமாறு, அமர்த்தப்பெற்ற பாண்டியன் குடியினர் இருவரே, சேரசோழராக மாறியிருத்தல் வேண்டும்.

பண்டி = வண்டி (சக்கரம், சகடம்).

பண்டி—பாண்டி = க. வட்டமான விளையாட்டுச் சில்.
உ. அதைக் கொண்டு விளையாடும் விளையாட்டு (வட்டாட்டு).
ந. மாட்டு வண்டி. "அகவ வரும் பாண்டியும்" (பரிபா. ம: கசு).
ச. கூடாரப்பண்டி. (சிலப். கச: கசுஅ, அரும்.)
ரு. (உருண்டு திரண்ட) எருது. (பரிபா. உ0: கஎ, குறிப்பு.).
ஒ. நோ: குண்டு—குண்டை = எருது.

பாண்டி—பாண்டியம் = க. எருது. "செஞ்சுவற் பாண்டியம்" (பெருங். உஞ்சைக். நஅ: நஉ).
உ. (எருதுகொண்டு உழும்) உழவு. "பாண்டியஞ் செய்வான் பொருளினும்" (கலித். கநசு).

பாண்டி—பாண்டில் = க. வட்டம். "பொலம்பசும் பாண்டிற் காசு" (ஐங். நக0). உ. வட்டக்கட்டில். "பேரள வெய்திய பெரும்பெயர்ப் பாண்டில்" (நெடுநல். கஉந). ந. வட்டத் தோல். "புள்ளி யிரலைத் தோலூ னுதிர்த்துத் தீதுகளைந் தெய்திய திகழ்விடு பாண்டில்" (பதிற்றுப். எச). ச. வட்டத் தாளம். "இடிக்குரன் முரச மிழுமென் பாண்டில்" (சிலப். உசு: கசுச). ரு. வட்டக் கண்ணடி. "ஒளிநம்......... பாண்டில்" (பு. வெ. சு: கஉ). சு. வட்டக்கிண்ணி. "பாண்டி லெடுத்த பஃறுமரை கீழும் பழனங்களே" (திருக்கோ. உசகூ). எ. விளக்குத் தகழி. (பிங்.). அ. தேர்வட்டை. (சிலப். கச: கசுஅ. உரை). கூ. இருசக்கர வண்டி. "வையமும் பாண் டிலும்" (சிலப். கச: கசுஅ). க0. குதிரை பூட்டிய தேர் (திவா.). கக. நாடு. ஒ. நோ: மண்டலம், வட்டாரம். கஉ. எருது, காளை.

காளை மறம் விஞ்சிய தாதலின், போர்மறவன் காளையெனப் பட்டான்.

காளை = க. இளவெருது. உ. கட்டிளம் பருவத்தினன். (திவா.). ந. பாலைநிலத்தலைவன். (திவா.). ச. போர் மறவன். "உரவுவேற் காளையும்" (புறம்: நநச).

காளை மறம் விஞ்சியது மட்டுமன்று; கற்பாறையிலும் ஆற்று மணலிலும் சேற்று நிலத்திலும் மேட்டிலும் பள்ளத் திலும், பொறைவண்டியை "மருங்கொற்றி மூக்கூன்றித் தாள் தவழ்ந்து" இழுத்துச் செல்லுங் கடைப்பிடியு முள்ளது. அதனல்,

"மடுத்தவா யெல்லாம் பகடன்னுன் உற்ற
இடுக்கண் இடர்ப்பா டுடைத்து."
என்றுர் திருவள்ளுவர். (குறள். சுஉச).

"அச்சொடு தாக்கிய பாருற் றியங்கிய
பண்டச் சாகாட் டாழ்ச்சி சொல்லிய
வரிமணன் ஞெமரக் கற்பக நடக்கும்
பெருமிதப் பகட்டுக்குத் துறையு முண்டோ"
என்றுர் ஔவையார். (புறம். கூo).

அரசன் போர்மறமும் ஆட்சித்திறனும் ஒருங்கே யுடையவன் என்பதை யுணர்த்தற்கு, குமரிநில முதல் தமிழ வேந்தன் பாண்டியன் எனக் குடிப்பெயர் பெற்றுன். செழியன், வழுதி, மாறன் முதலிய குடிப்பட்டங்களும் பின்னர்த் தோன்றின. பாண்டிநாடு வெப்பநாடாதலால், குளிர்வெண்மதி குலமுதலாகக் கொள்ளப்பட்டது போலும்! வேப்பந்தாரை யணிந்ததற்கும் கயற்கொடி கொண்டதற்கும் இதுவே கரணியமாயிருக்கலாம். தாராலும் கொடியாலும் வேம்பன் மீனவன் என்னும் பெயர்களும் எழுந்தன. கயல்மீன் யானைமீனும் பனைமீனும் போலப் பருமீனன்றுதலின், அதைக் கொன்றதனுற் பிடித்த வெற்றிச்சின்னமாகக் கயற்கொடியைக் கருத இடமில்லை. குளிர்ந்த பேரொளிவீசும் முழுமதி போன்றவன் குடிகள் பேரின்பமும் அறிவும்பெற ஆளும் அரசன், என்னுங் கருத்திற் பிடிக்கப்பட்ட மதிவட்டக்குடை, அல்லது வெண்கொற்றக் குடையும், தமிழகத்தின், சிறப்பாகப் பாண்டி நாட்டின், வெப்ப நிலையைக் குறிப்பாக வுணர்த்தும்.

நண்ணிலக்கோடு குமரிமுனைக்குத் தெற்கிற் பதின்பாகைக்குள் இருப்பதும், இற்றைத் தமிழகத்திலும் வடவாணரினும் தென்வாணர் பெரும்பாலுங் கருத்திருப்பதும், முழுகிப்போன தென்பாண்டி நாட்டின் வெம்மை மிகுதியை யுய்த்துணர ஏதுவாகும்.

சோழ பாண்டியர் பாண்டவர்க்குத் துணையாகவும் சேரன் நடுநிலையாகவும் பாரதப்போரிற் கலந்து கொண்டதனுலும், மூவேந்தர் குடிகளும் பாண்டவ கௌரவர்க்கு முன்பே வரலாற்றிற் கெட்டாத் தொன்முது பழங்காலத்தில் தோன்றியமையாலும், பாண்டியன் என்னும் சொல்லைப் பாண்டவன்

என்னுஞ் சொல்லினின்று திரிப்பது, வரலாற்றறிவும் ஆராய்ச்சித்திறனும் இல்லாதவர் செயலெனக் கூறி விடுக்க.

இனி, பழையன் என்னும் குறுநிலமன்னன் ஒருவன் பாண்டிநாட்டில் வாழ்ந்து, வேம்பைக் காவல்மரமாக வளர்த்ததையும், பாண்டிய வேந்தரின் பழைமையையும் நோக்கி; பண்டு என்னும் சொல்லினின்று பாண்டியன் என்னுஞ் சொல்லைத் திரிப்பர் சிலர். பாண்டிய வேந்தன் இன்று தான் நமக்குப் பழைமையானவனே யன்றி, அவன் முதன்முதலாகக் குமரிநாட்டில் தோன்றிய போது ஒருவருக்கும் பழைமையானவன் அல்லன் என்றும், பழையன் என்னுஞ் சொல் ஒருவனது இயற்பெயருக்கே யன்றி, ஓர் ஆள்குடிப் பெயருக்கு ஏற்காதென்றும், அவர் அறிதல் வேண்டும்.

பாண்டிய வேந்தன் ஐந்திணை நிலங்களையுங் கைப்பற்றி ஆண்டதனால், கருங்கடல்முதல் கருமலைவரை நாடு முழுதுங் காவற்குட்பட்டது. பாலைநிலவாணர் வேந்தனின் படைமறவராயினர். அந்நிலத்தலைவன் காட்டுப் படைத்தலைவனானான். ஏற்கெனவே யிருந்த மருதநிலப்படை நாட்டுப்படை யெனப் பட்டது. போர்க்காலத்திலும் அமைதிக்காலத்திலும் நிலையாக விருந்தபடை நிலைப்படை யென்றும், அவ்வப்போது போரின் தேவைக்குத் தக்கவாறு கூலிக் கமர்த்தப்பட்ட படை கூலிப் படை யென்றும், பெயர்பெற்றன.

காவல் மிகுந்து களவுங்கொள்ளையும் போரும் நீங்கவே, நாட்டில் அமைதியும் இன்பமும் நிலவின. தொழில்கள் பெருகின. வழிப்போக்கும் இடம்பெயர்வும் அச்சம் நீங்கின. வணிகம் வளர்ந்தது. மக்கள் பெருகப் பெருக மெல்ல மெல்ல வடக்கே சென்று பரவினர். நாட்டுச் செல்வத்தை மிகுக்கவும், நாகரிக வாழ்க்கைக் கேற்ற பொருள்களைத் தொகுக்கவும், காட்டுவழிகளிலெல்லாம் காவற்படையை நிறுவி நில வாணிகத்தையும், கடற்கரை வளைந்துள்ள இடங்களிலெல்லாம் துறைநகர்களை யமைத்து நீர்வாணிகத்தையும், வேந்தன் ஊக்கினான்.

ஏற்கெனவே, இயற்கைமொழிக்காலத்திற் பிரிந்து சென்ற மாந்தரினங்கள் ஆப்பிரிக்க ஆத்திரேலிய நிலப்பகுதிகளிலும், இழைத்தல் மொழியின் அசைநிலைக் காலத்திற் பிரிந்துசென்ற மாந்தரினங்கள் சீன மங்கோலிய நிலப்பகுதிகளிலும், கொளுவு

நிலைத்தொடக்கக் காலத்திற் பிரிந்துசென்ற மாந்தரினங்கள் மேலையாசிய நிலப்பகுதிகளிலும், செம்புக்காலத்தில் ஏகார ஓகாரங்கள் குறுகு முன்னும் ள ழ ற ன தோன்றுமுன்னும் பிரிந்து போன மாந்தரினங்கள் வடஇந்தியாவிலும், பெருகிப் பரவி வந்தன. பெருநில்லங்களில் வாழ்ந்தவருட் சிலர் அவற்றை யடுத்த சிறுநிலங்களான தீவுகளிலுங் குடியேறினர்.

பெருநிலத்தினின்றும் தீர்ந்து நாற்புறமும் நீராற் சூழப் பட்டிருக்கும் சிறு நிலமே தீவாகும். தீர்—தீர்வு—தீவு. ஓ. நோ. கோர்—கோர்வை—கோவை. குரு(வு)—கோர்—கோ. தீவு—தீவம்=பெருந்தீவு. வடமொழியாளர் தீவு என்னுஞ் சொல்லைத் த்வீப என்று திரித்து, இருபக்கம் நீராற் சூழப்பட்ட தெனப் பொருட்கரணியங் காட்டுவர். இதன் பொருந்தாமை யைக் கண்டு கொள்க.

நிலவணிகத்தார் பாதுகாப்பும் உதவியும் நோக்கி, எப்போதுங் கூட்டமாகவே சென்று வந்தனர். அக்கூட்டத்திற்குச் சாத்து என்று பெயர். சார்தல்=சேர்தல், கலத்தல், கூடுதல்.

"நல்லெழில் மார்பனைச் சார்ந்து" (கலித். கசஉ).

சார்—சார்த்து—சாத்து=க. கூட்டம். "சுரிவளைச் சாத்து நிறை மதி தவழும்" (கல்லா. சுங:நஉ). உ. வணிகர் கூட்டம்.

"சாத்தொடு போந்து தனித்துய ருழந்தேன்"

(சிலப். கக:கஅ0).

சாத்து—வ. ஸார்த்த.

சாத்து—சாத்தன்=க. வணிகக் கூட்டத்தலைவன். (நன். கூ0, மயிலை). உ. வணிகர் தெய்வமான ஐயனார். (அரு. நி.). ங. வணிகர்க்கிடும் இயற்பெயர்களுள் ஒன்று. ச. சீத்தலைச்சாத்தனார். "அவனுழையிருந்த தண்டமிழ்ச் சாத்தன்" (சிலப். பதி. ய). ரு. யாரேனும் ஒருவனைக் குறிக்கும் பொதுப் பெயர். "அக்கடவுளாற் பயன்பெற நின்றானோர் சாத்தனை" (தொல். பொ. சஉஉ, உரை). சு. உழவர் எருதிற் கிடும் விரவுப்பெயர்.

வடவர் ஐயனாரைக் குறிக்கும்போது சாஸ்தா என்றும், சாஸ்த்ரு என்றும், திரிப்பர். இதினின்று அவர் ஏமாற்றை அறிந்து கொள்க.

சாத்தர் = வெளிநாடு சென்றுவரும் வணிகக் கூட்டத்தார்.

"அதர்கெடுத் தலறிய சாத்தரொ டாங்கு" (அகம். ௩௧).

சாத்தவர் = சாத்தர். "பழுதில் சாத்தவர்கள் சூழ" (திருவாலவா. உஎ:க)

சாத்தன் என்னுஞ் சொல் பிற்காலத்திற் சாத்துவன் என்றும் சாத்துவான் என்றுந் திரிந்தது. கண்ணகியின் தந்தை மாசாத்துவான் (பெருஞ்சாத்தன்) என்று இயற்பெயர் பெற்றிருந்தமை காண்க.

சாத்தர் தம் வணிகச் சரக்குகளை ஏற்றிச் செல்ல முதலிற் பொதியெருதுகளைப் பயன்படுத்தினர். பின்னர் மேலையாசியாவினின்று கழுதை, குதிரை, ஒட்டகம், கோவேறுகழுதை ஆகியவற்றைப் படிப்படியாகக் கொண்டுவந்து பழக்கினர்.

கழுதையின் பிறப்பிடம், வடகிழக்கு ஆப்பிரிக்காவில் எத்தியோப்பியா சோமாலி முதலிய நாடுகளும், மேலையாசியாவில் சீரியா பாரசீகம் பெலுச்சித்தானம் முதலிய நாடுகளும், நடு ஆசியாவில் திபேத்தும் மங்கோலியாவும், ஆகும்.

குதிரையின் பிறப்பிடம் ஆசியாவின் வடநடுப்பாகமென்றும், அங்கிருந்து அது கிழக்கே சீன மங்கோலிய நாடுகட்கும், மேற்கே ஐரோப்பாவிற்கும், தென்மேற்கே பாரசீகம் அரபியா முதலிய நாடுகட்கும், சென்றதாகச் சொல்லப்படுகின்றது.

ஒட்டகத்தில், ஒற்றைத் திமிலிக்கு அரபியாவும் இரட்டைத் திமிலிக்குப் பகத்திரியாவும் (Bactria), பிறப்பிடமாகச் சொல்லப்படுகின்றது.

கோவேறு கழுதை, ற்காலத்திற் கி. மு. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே, சின்ன ஆசியாவிற் பயன்படுத்தப் பட்டதாகத் தெரிகின்றது. அது ஆண்கழுதைக்கும் பெண்குதிரைக்கும் பிறந்த கலப்பினமாகும்.

வணிகச் சாத்திற்குக் கழுதையும் குதிரையுமே மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டன.

“தடவுநிலைப் பலவின் முழுமுதற் கொண்ட
சிறுசுளைப் பெரும்பழங் கடுப்ப நெரியற்
புணர்ப்பொறை தாங்கிய வடுவாழ் நோன்புறத்
தணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கும்.”
(பெரும்பாண். எஎ—அ௦).

அரபிக் குதிரைகள் பெரியனவும் பேணுதற் கரியனவுமாதலால், பெரும்பாலும் படைகட்கும் அரசர் ஊர்தற்குமே பயன்படுத்தப்பட்டிருக்கும். நாட்டுத்தட்டு என்றும் அச்சிமட்டம் என்றும் சொல்லப்படும் சிறுதரக் குதிரைகளையே, சாத்துக்கள் பயன்படுத்தியிருக்கும். நாட்டுத்தட்டு இந்தியாவிலேயே வளர்க்கப்படுவது. அச்சிமட்டம் சுமதுராத் (Sumatra) தீவின் வடமேற்குப் பகுதியாகிய அச்சியிலிருந்து (Achin) வந்தது.

சாத்துக்கள் குதிரைகளைப் பயன்படுத்தியதை, பெருஞ்சாலை வழிகளில் ஆங்காங்குக் கட்டப்பட்டிருக்கும் சாத்தனார் (ஐயனார்) கோவிற்குமுன், சுதையாலும் சுடுமண்ணாலும் செய்து நிறுத்தப்பட்டுள்ள குதிரையுருவங்களினின்று அறிந்து கொள்ளலாம்.

குதிரை தமிழகத்திற்கு வந்த பின்னரே, குமரர் காதல் வாழ்வில் மடலேற்றம் என்னும் மணமுறைவினை தோன்றியிருத்தல் வேண்டும்.

ஓர் இளைஞன் தான் காதலித்த பெண்ணை அவள் பெற்றோர் தர இசையாவிடின், நீர்ச்சீலை மட்டும் அணிந்து உடம்பு முழுதும் சாம்பற்பூசி எருக்குமாலையணிந்து, ஊர் நடுச்சந்தியிற் பனங்கருக்கு மட்டையாற் செய்த குதிரைமேலமர்ந்து, தான் காதலித்த பெண்ணின் உருவப்படத்தை வலக்கையிலேந்தி, அதை உற்று நோக்கிய வண்ணமாயிருப்பான். ஊர்ப்பெருமக்கள் அதனைப் பார்த்தவுடனேயே, அவன் எல்லா வகையிலும் பெண்ணிற்குத் தகுதியுள்ளவனென்றும் அவனிலுஞ் சிறந்தவன் இல்லையென்றுங் காணின், பெண்ணின் பெற்றோ

ரிடம் பேசித் திருமணத்திற்கு ஏற்பாடு செய்திருக்கவுங் கூடும். அது அத்துணை எளிதாக முடிவதாயில்லா விடின், அவர் அவனை நோக்கி "நீ ஆய்வு தருகின்றையா?" என வினவுவர். அவன் "தருகின்றேன்." எனின், அவனை அம்மடற் குதிரைமீது அமர்ந்திருந்தவாறே பெருந்தெரு வழியாக ஊரைச் சுற்றியிழுப்பர். பனங்கருக்காற் காயம் படுந்தொறுங் காதல் மறம் (வீரியம்) கிளரின், அவன் கடைப்பிடியையும் அவன் எண்ணம் நிறைவேருவிடின் இறந்துபடும் நிலைமையையும் உன்னி, பெண்ணின் பெற்ருேரை வற்புறுத்தி இசைவித்து மணத்தை முடித்து வைப்பர். இது இக்காலத்து உண்ணு நோன்பும் பாடுகிடப்பும் (சத்தியாக்கிரகமும்) போன்றது. பழைய வுரையிலுள்ள வீரியம் என்னும் சொற்கு விந்து என்று பொருள் கொள்ளுவது பொருந்தாது.

பெண்ணின் பெற்ருேர் ஊரைப் பகைத்துக் கொள்ள முடியாது. அதனுல், மடலேற்றத்தாற் காதலன் கருதியது கைகூடும் வாய்ப்புண்டு. ஆயின், அதே சமையத்தில், காதலன் தன்மானத்தைத் துறக்கவும் நோவைத் தாங்கவும் காயம் மிகின் உயிரை இழக்கவும் அணியமாயிருத்தல் வேண்டும். இதன் அருமை நோக்கியே எல்லாரும் இதை மேற்கொள்வதில்லை. சிலர் வெற்றரட்டாக விளம்பிச் சொல்லளவிலேயே நின்று விடுவர்.

இம்மடலேற்ற வழக்கு நாகரிகம் நிரம்பாத பழங்காலத்திற் குரியதாதலால், தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே அற்றுப் போயிருத்தல் வேண்டும். ஆயின், இன்றும் ஒருவர் கோவை பாடின், மடலூர்தலும் ஒரு துறையாக அமைதல் வேண்டுமென்பது புலனெறி வழக்கமாகும். ஆதலால், அயல்நாட்டார் அகப்பொருட் செய்யுட்களைப் படித்தவுடன் பண்டைத்தமிழ் நாகரிகத்தைப் பற்றித் தவருன எண்ணங் கொள்ளாவர்று, மறைமலையடிகள் வழிப்பட்ட தனித்தமிழாசிரியரிடமே தமிழ் பயிலுமாறு செய்தல் வேண்டும். கோடன்மாரும் வையாபுரிகளும் தமிழைப் பழிப்பதிலுங் கெடுப்பதிலும் ஆரியரினும் விஞ்சியவராவர்.

அரபிக் குதிரைகள் வந்தபின், பாண்டியனுக்கும் அவன் சிற்றரசர்க்கும், காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை என்னும் நால்வகைப் படைகள் அமைந்தன.

ஆட்சித்துணையாக, ஐம்பெருங் குழுவும் எண்பேராயமும் ஐவகை யுறுதிச்சுற்றமும் எனப் பதினெண் குழுவார் அமைந்தனர்.

அமைச்சர் பூசகர் அணிபடைத் தலைவர்
தூதர் மிக்க துணிவுடை யொற்றர்
அரசர்க் கான ஐம்பெருங் குழுவார்.

கணக்கிய லாளர் கருமத் தலைவர்
கருவூ லத்தார் கடைகாப் பாளர்
நகர மாந்தர் நளிபடைத் தலைவர்
குதிரை மறவர் கொல்யானை மறவர்
அரசர்க் கெண்பே ராயத் துணைவர்.

அடுத்தமெய்ந் நண்பர் அந்த ணாளர்
மடைத்தொழி லாளர் மருத்துவக் கலைஞர்
வருவது கூறும் வானூற் கணியர்
அரசர்க் கைவகை யுறுதிச் சுற்றம்.

பாண்டியன் தன் ஆள்நிலத்தை மூன்று மண்டலங்களாகவும், ஒவ்வொரு மண்டலத்தையும் பலநாடுகளாகவும், ஒவ்வொரு நாட்டையும் பல கூற்றங்களாகவும், பிரித்தாண்டதாகத் தெரிகின்றது. மண்டலம் என்னுஞ்சொல் மண்டிலம் என்றுந் திரியும்.

மண்டலம் என்பது வட்டம். அச்சொல் வட்டம், வட்டகை, வட்டாரம் என்னும் சொற்கள் போன்று நாட்டுப் பகுதியைக் குறித்தது. அது தூய தென்சொல்லே.

முண்டு = உருட்டுக் கட்டை. முண்டு—முண்டம் = உருண்டு திரண்ட கட்டி, சதைத்திரள், கை, கால் தலையில்லா வுடல், பெரிய வுருட்டுக் கட்டை. முண்டு—முண்டை = முட்டை. முண்டு—முட்டு—முட்டை. முண்டு—மண்டு. மண்டுதல் = வளைதல். மண்டு—மண்டி. மண்டியிடுதல் = காலை மடக்குதல்.

மண்டு—மண்டலம் = க. வட்டம். (பிங்.); 'சுடர் மண்டலம்' (திருநூற். அ0). உ. வட்ட வடிவம். (திவா.). ங. மந்திரச் சக்கரம். ச. கதிரவனை அல்லது திங்களைச் சுற்றியுள்ள ஊர்கோள்

(வட்ட வொளிக்கோடு). ரு. காதலன் காதலியின் உடம்பிற் பொறிக்கும் வட்ட வடிவமான உகிர்க்குறி. சு. கயிறு பாம்பு முதலியவற்றின் சுற்று. "மண்டலம் பயிலுரகர்" (பாரத. குருகுல. ங). எ. வட்ட வடிவமான படை வகுப்பு (குறள். எகஎ, உரை). அ. குதிரை வட்டமாகச் சுற்றி யோடுதல். "பண்ணிய வீதிபற்றி மண்டலம் பயிற்றினனே" (சீவக. எகூரு). கூ. நடுவிரல்நுனியும் பெருவிரல்நுனியும் கூடி வளைந்திருக்க மற்ற விரல்களும் ஒக்க வளைந்து நிற்கும் இணையாவிணைக்கை (சிலப். ங:கஅ, உரை). ம. வில்லோர் இருகாலையும் வளைத்து நிற்கும்நிலை.

மண்டலம்—மண்டலி.

மண்டலித்தல்=க. வளைத்தல். உ. காலை வளைத்து நிற்றல். ங. சுற்றிச் சுற்றி வட்டமிடுதல். ச. ஒரு பாட்டின் இறுதி எழுத்து அசை சீர் சொல் என்பவற்றுள் ஒன்று அடுத்த பாட்டின் முதலில் அமையப் பாடுதல்.

மண்டலம்—மண்டிலம்=க. வட்டம். உ. வட்டவடிவம். ங. கதிரவன். "பகல்செய் மண்டிலம் பாரித்தாங்கு" (பெரும்பாண். சசஉ). ச. திங்கள். "செய்வுறு மண்டிலம்" (கலித். எ). ரு. வட்டக் கண்ணாடி. "மையறு மண்டிலம் போலக் காட்ட" (மணி. உரு:கஙஎ). சு. வானம். (பிங்.). எ. பார்வட்டம். "செஞ்ஞாயிற்று.. பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்" (புறம். ௩0). அ. பார்நிலம் "கடல்சூழ் மண்டிலம்" (குறுந். ௩00). கூ. வட்டமாயோடுகை. "செலவொடு மண்டிலஞ் சென்று" (பு. வெ. கஉ, வென்றிப். கச). க0. இருகாலும் வளைத்து நிற்கும் நிலை. "இருகால் மண்டலத் திடுதல்மண் டிலநிலை" (பிங். சு:ஙசுக).

மண்டலம்—வ. மண்டல.

மண்டலம் என்னும் சொல் மட்டுமன்று, வட்டம் என்னும் சொல்லும் வட சொற் றிரிபாகவே சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகரமுதலியிற் காட்டப்பட்டுளது.

வல்—வள்—வண்டு, வட்டு—வட்டம்.

வட்டம்—வட்ட (பிரா.)—வ்ருத்த (வ.). L. verto (turn).

இத்திரிபைத் தலைகீழாக வ்ருத்த—வட்ட—வட்டம் என்று காட்டியுள்ளது செ. ப. க. க. த. அகரமுதலி இதைத் தலைமைத் தமிழ்ப் பேராசிரியரோ கல்வியமைச்சரோ கடுகளவுங் கவனிப்பதே யில்லை.

மண்டலம் வட்டம் என்னும் இருசொற்கும் அடிவேர் **முல்** என்பதென்றும், வடமொழி தமிழ்த்திரிபே யென்றும், என் **செந்தமிழ்ச் சொற்பிறப்பிய லகரமுதலி**யில் ஐயந்திரிபற விளக்கப் பெறும்.

உழவு, கைத்தொழில், வணிகம், அரசியல் முதலியவற்றால், உலகியல் அறிவு பலதுறையிலும் வளர்ந்து வந்தது. அதன் விளைவாக, மதத்துறையிலும் பல மாறுதல்கள் நேர்ந்தன. ஐந்திணை நிலத்தாரும், ஐம்பூதங்களையும் நன்மையுந் தீமையும் செய்யும் உயிரிகளையும் இறந்த முன்னோரையும் போரிற்பட்ட பெருமறவரையும் பேய்களையும் பொதுவாக வணங்கி வந்தாலும், ஒவ்வொரு திணைநிலத்திற்கும் ஒவ்வொரு தெய்வம் சிறப்பாக நிலைத்துவிட்டது.

குறிஞ்சி நிலத்தில் முதற்கண் தோன்றி, ஏனை நிலங்களிலும் மட்டுமன்றி உலகமுழுதும் பரவிய முதல் தெய்வம் தீயாகும். அதனால், தெய்வம் என்னும் பொதுப்பெயரே தீயின் பெயரினின்றுதான் திரிந்தது.

தேய்தல்=மரங்கள் அல்லது கற்கள் உராய்தல், உராய்ந்து தீப்பற்றுதல்.

தேய்—தேயு=உராய்ந்து பற்றும் நெருப்பு.

தேயு—தேசு=நெருப்பின் ஒளி. தேசு—**வ.** தேஜஸ். தேய்—தே=தெய்வம். (பிங்.). "தேபூசை செய்யுஞ் சித்திர சாலை" (சிவரக. நைமிச. உ0). உ. நாயகன். (இலக். அக.).

தே—தீ=க. நெருப்பு. "விளித்தலைஇய தீயும்" (புறம். உ). உ. விளக்கு. "தீத்துரீஇ யற்று" (குறள். கூஉகூ). ங. வயிற்றுத்தீ, கடும்பசி. "வயிற்றுத்தீத் தணிய" (புறம். எச). ச. சினத்தீ, சினம். "மன்னர்தீ யீண்டுதங் கிளையோடு மெரித்திடும்" (சீவக. உ௫0). ரு. தீயின்தன்மை, தீமை.

"தீப்பால தான்பிறர்கட் செய்யற்க" (குறள். உ0சு). சு. நஞ்சு. "வேகவெந் தீநாகம்" (மணி. உ0:கூஅ). எ. நரகத்தீ. "அழுக்காறு..................தீயுழி யுய்த்துவிடும்" (குறள். கசுஅ). ஒ. நோ: தேம்பால்—தீம்பால்.

தேய்—தேய்வு—தேவு = க. தெய்வம். (பிங்.). "நரகரைத் தேவுசெய் வானும்" (தேவா. சுகூசு:உ). உ. தெய்வத் தன்மை.

தேவு—தேவன் = கடவுள். "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" (திருமந். உகஂச). தேவன்—**வ**. தேவ.

தேய்வு—தெய்வு—தெய்வம் = க. வணங்கப்படும் பொருள். "தெய்வ முணவே" (தொல். பொ. கஅ). உ. தெய்வத் தன்மை. ங. தெய்வத்தன்மை யுள்ளது. ச. கடவுள். ரு. கடவுள் ஏற்பாடு, ஊழ். தெய்வம்—**வ**. தைவ.

தேய் என்னும் மூலத்திலுள்ள யகரமெய், தெய்வம் என்னுஞ் சொல்லிலு மிருத்தல் காண்க.

குறிஞ்சி நிலத்தார், 'தெய்வம் தீவடிவினது அல்லது தீ யொத்தது என்னுங் கருத்தினரேனும், தெய்வம் அல்லது தேவன் என்பது பொதுப்பெயராகிவிட்டதனால், தீயைப்போற் சிவந்தவன் என்னுங் கருத்தில் தம் தேவனைச் சேயோன் என்றனர். அவன் தம்மைப்போல் மறவனாயிருக்க வேண்டுமென்று கருதி, மறத்திற்குச் சிறந்த இளமைப் பெயரால் அவனை முருகன் என்றனர். முருகு இளமை. அழகு என்பது அதன் வழிப் பொருள். தம் படைக்கலமாகிய வேலை யேந்தியும், குறிஞ்சிக் குரிய கடப்பமாலையை யணிந்தும், இருப்பதாகக் கருதி, வேலன் என்றும் கடம்பன் என்றும் இருபெயர் சேர்த்தனர். மேலெழுந்து விண்ணுலகஞ் செல்ல வுதவுமென்று கருதி, குறிஞ்சிக்குரிய அழகிய பெரும்பறவையாகிய மயிலை முருகனுக்கு ஊர்தியாகக் கொண்டனர். அவன் பிற பெயர்களும் இயல்களும் செயல்களும், என் **தமிழர் மதம்** என்னும் நூலில் விளக்கப்பெறும்.

முல்லை நிலத்தார், தம் கன்றுகாலிகட்குப் புல் வளரவும் வானவாரிக் கொல்லையிற் பயிர்கள் விளையவும், இன்றியமையாத மழை பெய்யும் கருமுகிலை அல்லது அது திரளும் நீல

வானைத் தம் தேவன் வடிவாகக் கொண்டு, அவனை மாயோன் என்றும் கரியவன் என்றும் மால் என்றும் குறித்தனர்.

மருதநிலத்தார், விண்ணுலகக் கொள்கை கொண்டதனால், இம்மையிற் சிறந்த நல்வினை செய்யும் பொதுமக்கள் தேவராகவும் வேந்தன் தேவர்கோனாகவும், மறுமையில் விண்ணுலகத்திற் சேர்வர் என்னும் நம்பிக்கையினால், ஒருங்கே விண்ணுலக வேந்தனாகவும் மழைத் தெய்வமாகவுங் கொண்ட தம் தேவனை, வேந்தன் என்றே விளம்பினர்.

நெய்தல் நிலத்தார், கடல்படு செல்வத்திற்கும் நீர்வாணிகத்திற்கும் கடலையே நம்பியிருந்ததனால், கடல் தலைவனே தம் தேவன் எனக்கொண்டு, அவனை வாரணன் என்றனர். வாரணம் கடல். வாரணன் கடல் தலைவன். வார்தல் வளைதல். வள்—வர்—வார்—வாரணம். கடல் நிலத்தைச் சூழ்ந்திருப்பதால் வாரணம் எனப்பட்டது. ''வளைகடல் வலையிற் சூழ்ந்து'' சீவக. ககக௫). கேடகமும் சங்கும் வாரணம் எனப்படுவதும் வளைந்திருத்தல் பற்றியே. வாரணன்—**வ**. வருண. கடற்கோ = வாரணன் (உபதே. உருத். ௨௩௦).

பாலைநிலத்தார் அடிக்கடி ஆறலைத்தும் சூறையாடியும் போரிட்டும் மக்களைக் கொன்று பிணமாக்கியதனால், அப்பிணங்களைத் தின்பதாகக் கருதப்பட்ட கூளிகளின் (பேய்களின்) தலைவியாகிய காளியை, தமக்குப் போரில் வெற்றி தருபவளாகக் கருதி, அவளை அவர் தெய்வமாகக் கொண்டு காவிட்டு வழிபட்டனர். பேய்நிறம் கருப்பென்பது பற்றி, அவள் காளி எனப்பட்டாள். கள்—காள்—காளம்—காளி = கருப்பி. அவளை மாயோள் என்பதும் அந்நிறம் பற்றியே. மாமை கருமை. காளி—**வ**.காலீ. கருப்பாய் என்பது உலக வழக்கு.

காளி வணக்கம் அடிப்படையிற் பேய் வணக்கமாயினும், அது தாய் வணக்கமும் கண்ணகிபோலும் கற்புடைத் தேவி வணக்கமுங் கலந்ததாகும். காளியம்மை கொற்றவை என்னும் பெயர்கள் தாய் வணக்கக் கருத்தைக் காட்டும். கொற்றம் + அவ்வை = கொற்றவை (வெற்றித்தாய்). இனி, அம்மை யென்னும் பெயர் அடையடுக்காது தனித்தும் அவளைக் குறிக்கும். அதனால், அவளால் நேர்வதாகக் கருதப்பட்ட கொப்புள நோய், அம்மை யென்றே பெயர் பெற்றது.

இங்ஙனம் ஐந்திணை வணக்கமும் ஏற்பட்டபின், மருதநிலப் பார்ப்பாருட் சிறந்த அறிஞர் சிலர், பிறவியறுக்கும் வீடு பேற்றுக் கருத்துங்கொண்டு, அப்பேற்றைப் பெறும் சிவநெறி திருமால் நெறி ஆகிய இரு மதங்களையுங் கண்டனர். குறிஞ்சி நிலத்திலிருந்து ஆய்ந்தவர் சிவ நெறியையும், முல்லை நிலத் திலிருந்து ஆய்ந்தவர் திருமால் நெறியையும், கண்டதாகத் தெரிகின்றது. வீடுபேற்று முயற்சியை மேற்கொண்டவர், உலகப் பற்றை முற்றத் துறந்து எல்லாவுயிர்களிடத்தும் அருள் பூண்டமையால், அந்தணர் எனப்பட்டார்.

"அந்தண ரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்." (குறள். ௩0).

இங்ஙனம், கல்வித் தொழிலாளர், இல்லறம் பேணும் பார்ப்பார் என்றும் துறவறம் பூணும் அந்தணரென்றும், இரு பாற்பட்டனர். இங்ஙனமே, அரசரும் குறுநில மன்னர் பெரு நில மன்னர் என்றும், வணிகரும் நில வணிகர் நீர் வணிகர் என்றும், உழவரும் உழுதுண்போர் (கருங்களமர்) உழுவித் துண்போர் (வெண்களமர்) என்றும், இவ்விரு திறப்பட்டனர். கருங்களமர் காராளர் என்றும், வெண்களமர் வெள்ளாளர் என்றும், சொல்லப்பட்டனர். இவ்விரு சாரார்க்கும் வேளாளர் என்பது பொதுப்பெயராகும். ஏனை மூவர் போலாது, புதிதாய் வந்தவர்க்கும் அன்புடன் விருந்தோம்பி வேளாண்மை செய்வதனால், உழவர் வேளாளர் எனச் சிறப்பிக்கப்பட்டனர். வேளாண்மை பிறரை விரும்பியாளுந் தன்மை.

"வேளாளன் என்பான் விருந்திருக்க வுண்ணாதான்."
(திரிகடுகம். கஉ).

குறிஞ்சி நிலத்தார், குறவர் குன்றவர் இறவுளர், கானவர் வேட்டுவர் என்றும்; முல்லைநிலத்தார், ஆட்டிடையர் மாட்டி டையர் என்றும்; நெய்தல் நிலத்தார், நுளையர், திமிலர், பரதர் (பரவர்) என்றும்; பாலைநிலத்தார், எயினர், மறவர், வேட்டுவர், வேடர் என்றும்; இடம்பற்றியும் தொழில் பற்றியும் கருவி பற்றியும் சிற்சில வகுப்பாராய்ப் பிரிந்து போயினர்.

ஆயர், இடையர், கோவர், தொறுவர், பொதுவர் என்னும் பெயர்கள், பெயர்வேற்றுமையே யன்றிக் குலவகுப்பைக் குறியா.

ஆன்வல்லோர் (திவா.) என்றும், ஆன்வல்லவர் (சூடா.) என்றும், ஆயர்க்குப் பெயருண்மையால், கோவலன் என்பது கோ மேய்ப்பதில் வல்லவன் என்று பொருள்படும் தென்சொல்லே யன்றி, கோபாலன் என்னும் இருபிறப்பி வடசொல்லின் திரிபாகாது.

பாலைநிலம் குறிஞ்சியை யடுத்ததாதலின், வேட்டுவர் என்னும் பெயர் கொண்ட வகுப்பார் இருநிலத்திலும் இருந்தனர். கடிய நெடு வேட்டுவன் என்னுங் கொடையாளி கோடைமலைக்குத் தலைவன். சிலப்பதிகாரத்திற் பாடப்பட்டுள்ள வேட்டுவ வரி பாலைவாணரைப் பற்றியது.

உறைக்காலத்து மொழித் துறையில், எகர ஒகரக் குறில்களும் ள, ழ, ற, ன மெய்களுந் தோன்றி நெடுங்கணக்கு நிரம்பியிருத்தல் வேண்டும். வெண்பா வஞ்சிப்பாவுந் தோன்றி நால்வகைப் பாவிலும் இலக்கியம் நடைபெற்றிருக்கும். இசை நாடகக் கலைகளும் வளர்ச்சியுற்று இலக்கிய விலக்கணம் பெற்றிருக்கும். எழுத்து சொல் பொருள் என்னும் முக்கூறுந் தழுவிய பிண்ட விலக்கணமுந் தோன்றியிருக்கும்.

தமிழர் மீண்டும் வடக்கே சென்று பரவியிருப்பர்.

வடஇந்தியா திரவிடநாடாகவும், நடுவிந்தியா மொழிபெயர் தேயமாகவும், மாறியிருக்கும்.

மக்கள் பெருகி ஆள்நிலம் மிக விரிவடைந்துவிட்டதனால், பாண்டியன், குமரியாற்றிற்கு வடக்கிற் பனிமலை வரையுள்ள நிலப்பாகத்திற் கீழ்ப்பாதியை ஒருவனும் மேற்பாதியை ஒருவனும் ஆளுமாறு, இருதுணையரையரை அமர்த்தியிருத்தல் வேண்டும்.

வெள்ளி (வெண்பொன்)

செம்பும் வெள்ளீயமுங் கலந்து உறையென்னுங் கலப்புப் பொன்னம் (metal), அமைத்ததற்கு முன்னோ பின்னோ, வெள்ளி அல்லது வெண்பொன் என்னும் பொன்னமும் தமிழகத்திற் கிடைத்துப் பயன்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். வெண்ணிற மாயிருப்பது வெள்ளி. வெள்—வெள்ளி.

"இரும்பல்லாத பொன்னத் தனிமங்களுள் (elements) தலைசிறந்து பயன்படுபவற்றுள் ஒன்றுன செம்பு, கற்காலத்தின் பிற்பகுதியில் கி. மு. அ000 போல் புதுக் கற்கால மாந்தனுற் கண்டுபிடிக்கப்பட்டு முதன்முதலாகப் பயன்படுத்தப்பட்டது. செம்பு இயற்கையில் தனிப்பொன்ன நிலையிற் காணப்படுகின்றது. இவ்வியற்கைச் செம்பு புதுக் கற்கால மாந்தன் கல்லிற் கீடாகப் பயன்படுத்திய கருவிப்பொருளாகும். அதினின்று அவன் முருட்டுச் சம்மட்டிகளையும் கத்திகளையும் பின்னர் மற்றக் கலங்களையும் அமைத்தான். அதன் சமட்டப்படுந் தன்மையால், அதை வேண்டிய வடிவத்திற்கு அடித்துக் கருவிகளை உருவாக்குவதற்கு மிக எளிதாயிருந்தது. தட்டுவதனுற் செம்பு இறுகிக் கூர்மை மிக்கனவும் நீண்டுழைப்பனவுமான ஓரங்கள் தோன்றின. அப்பொன்னத்தின் பளபளப்பான செம்பட்டை நிறமும் நிலையான தன்மைகளும் அதை மிகுந்த விலைமதிப்புள்ள தாக்கின.

"இம் முந்து காலத்திற் செம்பிற்காகச் செய்த தேடுகை, இயற்கைச் செம்பைக் கண்டு பிடிக்கவும் அதன் வைப்புக்களிலிருந்து அதையெடுக்கவும் வழி வகுத்தது. கி. மு. சு000 ஆண்டுகட்குச் சற்றுப்பின்பு, அப்பொன்னத்தைக் குடியிருப்புத் தீக்களத்தில் உருக்கி வேண்டிய வடிவத்தில் வார்த்துக் கொள்ள முடியுமென்பது, கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பின்பு, பொன்னவியற் செம்பிற்கும் செம்புள்ள பாறைக்குமுள்ள உறவும், செம்பு கலந்த மணலிலிருந்து நெருப்பினுலும் கரியினுலும் செம்பைப் பிரித்தெடுக்க முடியுமென்பதும், கண்டு பிடிக்கப்பட்டன. இதினின்று பொன்னவூழி தொடங்கிப் பொன்னக்கலை பிறந்தது." (பொன்னக்கலை:வரலாறு பார்க்க).

"செம்புக் காலத் தொடக்கத்தில் அதன் மாபெரு வளர்ச்சி எகிபதுவில் இருந்திருக்கக் கூடும். கி. மு. ரு000 ஆண்டுக் காலத்திலேயே, கல்லறைகளில் இறந்தவர் பயன்பாட்டிற்கு வைக்கப்பட்ட படைக்கலங்களும் கருவிகளும் செம்பினுற் செய்யப்பட்டிருந்தன. கி. மு. ந அ00 போல், சீனுய்த் தீவக்குறையில் (Peninsula), சினெப்புரு (Snefru) அரசனுல் ,செப்புச் சுரங்கங்கள் நடத்தப்பட்டதைப் பற்றிய திட்டமான எழுத்தேடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இச்சுரங்கங்களிற் கண்டெடுக்கப் பட்டுள்ள குகைகள், அப்பொன்னத்தைப் பிரித்தெடுக்குங்கலை

தூய்மைப்படுத்தலையும் உட்கொண்டதென்பதைக் காட்டுகின்றன. அக்கலை, செம்பைச் சன்னத்தகடுகளாக அடித்து, அவற்றைக் குழாய்களாகவும் பிறவுருப்படிகளாகவும் செய்கிற அளவிற்கு வளர்ச்சியடைந்திருந்தது. அக்காலத்தில் உறை (வெண்கலம்) முதன்முதல் தோன்றிற்று. அம்மூலக்கருவிப் பொருளின் அறியப்பட்ட முதற்பழந் துண்டு, மெதும் (Medum) கூம்புக் கோபுரத்திற் கண்டெடுக்கப்பட்டுள்ள ஒரு வெண்கலப் பாரையாகும். அதன் தோற்றக்காலம் தோரா. கி. மு. ௩எ00 என்று பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.''

''செம்பும் வெள்ளீயமுங் கலந்த அளையம் (alloy) ஆகிய உறை, செம்பினும் உயர்ந்த வன்மையும் விறப்பும் ஆகிய தன்மைகளை உடையது. இது பொதுவாகப் படைக்கலங்களும் கலையுருப்படிகளும் செய்யுங் கருவிப்பொருளாகப் பயன்படுத்தப்பட்டது. இது மிகுதியாகவும் சிறப்பாகவும் பயன்படுத்தப்பட்ட காலம் உறைக்காலம் (Bronze Age) எனப்படும். உறையைப் பயன்படுத்துகை, எகிபதுவிலிருந்து கிரேத்தாவிற்குக் (Crete) கி. மு. ௩000-இலும், சிசிலிக்குக் (Sicily) கி.மு. உ௫00-இலும், பிரான்சிற்கும் ஐரோப்பாவின் பிறவிடங்கட்கும் கி. மு. உ000-இலும், பிரித்தனுக்கும் காண்டிநேவியப் பரப்பிற்கும் கி. மு. கஅ00-இலுமாக, நண்ணிலக்கடற்கரை நாடுகட்கு விரைந்து பரவியது.''

''கி. மு. ௩000 போல் செம்பு செப்பறைத் (Cyprus) தீவில் ஏராளமாக எடுக்கப்பட்டது. அங்குள்ள செம்பு வைப்புக்கள் மிகப் பெரியனவாகவும் மிகவுயர்ந்த விலைமதிப்புள்ளனவாகவும் இருந்ததனால், அத்தீவின் ஆட்சி, அடுத்தடுத்து, எகிபதியர்க்கும் அசீரியர்க்கும் பீனிசியர்க்கும் கிரேக்கர்க்கும் பாரசீகர்க்கும், உரோமர்க்கும் தாவிற்று. உரோமர்க்கு வேண்டிய செம்பு ஏறத்தாழ முற்றிலும் அத்தீவினின்றே வந்தது. அதனால் அது 'செப்பறைப் பொன்மணல்' (aes cyprium) எனப்பெயர் பெற்றது. அப்பொருளுள்ள இலத்தீனப் பெயர் 'கிப்ரியம்' என்று குறுகிப் பின்னர்க் 'குப்ரம்' என்று திரிந்தது. இப் பெயரினின்றே 'காப்பர்' என்னும் ஆங்கிலச் சொல் வந்தது. இலத்தீனப் பெயரின் முதலீரெழுத்துக்களுஞ் சேர்ந்து 'கு' (cu) என்னும் இதளியக் (Chemical) குறி யமைகின்றது.

"ஆசியாவிற் செம்பும் உறையும் எப்போது முதலிற் பயன் படுத்தப்பட்டன வென்பது, தெரியவில்லை. சு சிங்கின் (Shu Ching) பாவியங்கள் (epics), சீனத்தில் கி. மு. உ௫00-இலேயே செம்பு பயன்படுத்தப் பட்டதாகக் கூறுகின்றன. ஆயின், அக் கலையின் அற்றை நிலையைப் பற்றியாவது, அப்பொன்னம் அதற்குமுன் பயன்படுத்தப்பட்டதைப் பற்றியாவது, ஒன்றும் அறிதற்கில்லை. கி. மு. ௧௭௬௫-இலிருந்து ௧௧௨௨ வரை யாண்ட சங் (Shang) ஆள்குடிக் (dynasty) காலத்திற் செய்யப் பட்டனவும், பேரழகுடையனவும், உயர்ந்த கலைத்திறனைக் காட்டுவனவுமான உறைக்கலங்கள், கிடைத்துள்ளன. ஆயினும், இப்பொன்னங்களின் மூலத்தைப் பற்றிய மருமம், முந்துகாலச் சீனரின் திருக்கல்லறைகளில் என்றென்றைக்கும் பூட்டிவைக்கப்பட்டுள்ளது போலும்!" — பிரித்தானியக் கலைக் களஞ்சியம் (௧௯௭0) ௬, பக். ௪௬அ.

வெண்கலம் திண்மையும் வன்மையும் உடைமையினாலேயே உறையெனப்பட்டது. முறியென்பதும் அப்பொருட்டே. உறத்தல் செறிதல். உறுதல் உறுதியாதல். உறைதல் இறுகுதல். முறத்தல் விறப்பாதல். முறுகு திண்மை.

வெள்ளி, பொன்னிற்கு அடுத்தபடியாக அழகுள்ளதும் விலையுயர்ந்ததும் அணிகலத்திற்குப் பயன்படுவதுமான பொன்னமாகும். அது பொன்போல் அத்துணை யுயர்ந்ததன்றேனும், உலகத்திற் கிடைக்குமளவு மிகக் குறைவாகவே யுள்ளது. ஞாலத்தின் கற்புறணியிற் கிடைக்கும் அரைக்கோடிப் பங்கு இரும்பிற்கு, ஒருபங்குதான் வெள்ளி கிடைக்கின்றது.

"வெள்ளியின் நடைமுறைப் பயன்பாட்டுத் தொடக்கம், தொன்மைக்குள் மிகத் தொலைவு செல்கின்றது. எனினும், மாந்தன் முதன்முதற் பணிக்குப் பயன்படுத்திய பொன்னங்கள், பொன்னும் செம்புமேயென்று நம்பப்படுகின்றது. கி. மு. ௪000 வரை பழைமையான அரசர் கல்லறைகளில், வெள்ளியணிகலன்களும் சுவடிப்புக்களும் காணப்படுகின்றன. கி. மு. ௩௬00 போல் எகிப்தை ஆண்டதாகக் கருதப்படும் மெனெசின் (Menes) நெறியீட்டுத் தொகுப்பில், ஒருபங்கு பொன், விலைமதிப்பில் இரண்டரைப் பங்கு வெள்ளிக்குச் சமமென்று தீர்க்கப் பட்டுள்ளது. இதுவே முதற் பொன்னளவைத் திட்டமாக இருக்கலாம். கி. மு. ௭00-ஆம் ஆண்டு, சிந்தாற்றிற்கும் நீலாற்றிற்கும் இடைப்பட்ட எல்லா நாடுகளிலும், பொன்னும் வெள்ளியும் பணமாக வழங்கின என்பது பெரும்பாலும் தேற்றம்.

உரோமர், தம் காலம் வரை, வெள்ளிப் பணிக்கலையிலும் அறிவியலிலும் வேறெந் நாட்டாரினும் மிகத் தேர்ச்சி பெற்றிருந்திருக்கலாம்.''—பிரித்தானியக் கலைக்களஞ்சியம் (கஙஎ0), உ0, பக். ருஙசு.

மேற்காட்டிய மேற்கோட்பகுதிகள், தமிழறியாதவராற் பெரும்பாலும் மேனுடுகளே பற்றி யெழுதப்பட்டவையாதலால், அவற்றுள் தமிழர் வரலாற்றிற்கு ஒவ்வாதன வெல்லாம் அறியாமையின் விளைவென்று கருதியமைக.

இற்றையுலகில் மிகப்பெரிய வெள்ளிச்சுரங்கம் மெகசிக்கோவில் (Mexico) உள்ளது. அமெரிக்க ஒன்றிய நாடுகளிலும் (U. S. A.) கானடாவிலும் வெள்ளி பெருவாரியாகக் கிடைக்கின்றது. தென்னமெரிக்காவிலும் வெள்ளி எடுக்கப்படுகின்றது. முதன்மையான வெள்ளியீய நாக மணல்கள் ஆத்திரேலியாவிற் கிடைக்கின்றன. சிற்றளவாக வெள்ளி கிடைக்குமிடங்கள் உலகெங்கும் பரவியுள்ளன.

பண்டைத்தமிழகத்தில், வெள்ளிக் கலங்கள் பயன்படுத்தப்பட்டது மட்டுமன்றி, வெள்ளி வேய்ந்த மாடங்களும் அம்பலங்களும் அரண்மனைகளிலும் கோவில்களிலும் அமைந்திருந்தன.

> ''அமிழ்தன மரபி னூன்றுவை யடிசில்
> வெள்ளி வெண்கலத் தூட்ட லன்றி''
>
> (புறம். நகூ0).

> ''விளங்கில வந்தி வெள்ளி மாடத்
> திளங்கோ வேண்மா ளுடனிருந் தருளி''
>
> (சிலப். உரு:ச—ரு).

> ''வெள்ளியம் பலத்து நள்ளிருட் கிடந்தேன்''
>
> (சிலப். பதி. சக).

வெள்ளி சிற்றளவாகக் கிடைத்ததனுல், அரசராலும் பெருஞ்செல்வராலும் அணிவகைப் பொருள்கட்கன்றி, பொது மக்களாற் பல்வகைக் கருவிகள் செய்யப் பயன்படுத்தப்படவில்லை. அதனுல், வெள்ளிக்காலம் என ஒரு காலமும் ஏற்படவில்லை.

ரு. இரும்புக்காலம் (Iron Age)
(தோரா. கி. மு. 10,000—உலக முடிவு.)

உறைக்குப்பின் தனிப் பொன்னமாகக் கண்டுபிடிக்கப் பட்டதும், உலகெங்கும் ஏராளமாகக் கிடைப்பதும், எல்லாக் கருவிகளுஞ் செய்தற்கேற்ற உறுதிமிக்கதும், நாகரிகமும் அறிவும் விரைந்து வளர்தற் கேதுவாயிருந்ததும், கரும்பொன் என்னும் இரும்பாகும். அதன் கருமை நிறத்தால் இரும்பெனப் பட்டது. இர்—இரு—இருள். இருமை கருமை. இரு—இரும்—இரும்பு. E iron, OE iren.

"அசீரியரும் எகிபதியரும் இரும்பை மிகுதியாகப் பயன் படுத்தினர். திருப்பொத்தகம், படைப்பியல் (ஆதியாகமம்), ச—ஆம் அதிகாரம் உஉ—ஆம் திருமொழியில், தூபால் காயீன் இரும்பு செம்பு வினைஞர்க்கெல்லாம் பயிற்றுளனாக இருந்தானென்று சொல்லப்பட்டுள்ளது. தாவீதின் காலத்திற் கருவிகளும் படைக்கலங்களுஞ் செய்ய இரும்பு பயன்படுத்தப்பட்டது. இலக்கியக் கிரேக்கரின் முன்னோடிகளான தோரியப் படையெடுப்பாளர், இருப்புக் கருவிகளையும் படைக்கலங்களையுங் கொண்டிருந்தார்கள். ஆக்கிலெசிற்கு, அவனது வல்லுடம்பாண்மைப் பரிசாக ஓர் இருப்புப் பந்து அளிக்கப்பட்ட செய்தியை ஓமர் குறித்திருக்கின்றார். கிரேக்கர் கருங்கடலின் தென்கரையினின்றும், உரோமர் இசுப்பானியாவினின்றும் எல்பாவினின்றும், இரும்பைப் பெற்றனர். தெளிவாக வுள்ளபடி, அதற்கு முந்திய மூலங்கள் இந்தியாவில் இருந்தன."

—பிரித்தானியக் கலைக்களஞ்சியம் (கதுஎ0), கஉ, பக். ருகூஅ.

தூபால் காயீன் காலம் கி.மு. ௩அஎச. கி.மு. கசஉரு—இல் கானானியர் இருப்புத்தேர் வைத்திருந்தனர். கஉகூ—இல் கானான் அரசனான யாபீன் கூ0 இருப்புத்தேர் உடையவனாயிருந்தான். இரும்பு மட்டுமன்றித் தேரும் முதன்முதல் தமிழகத்திலேயே தோன்றியிருத்தல் வேண்டும்.

தமிழ், உலகில் முதன்முதல் தானே தனியாகத் தோன்றிய மொழியாதலால், நீண்ட காலமாகச் சிறப்புப் பெயரின்றி மொழி என்னும் பொதுப் பெயராலேயே வழங்கி வந்தது. ஓர் ஊரில் ஒரே ஆறிருப்பின், ஆற்றிற்குப் போய் வந்தேன் என்றே சொல்வர். அதுபோல் ஒரே மரமிருப்பின், மரத்தடிக்குப் போ

என்றே சொல்வர். இங்ஙனம் தமிழும் தமிழகத்தில் ஒரே மொழியாயிருந்ததனால், மொழியென்றே முதலில் வழங்கிற்று.

தென்னில மக்கள் வடக்கே சென்றபின், தட்பவெட்பநிலை சுற்றுச் சார்பு முதலியவற்றின் வேறுபாட்டாலும், பேச்சுறுப்புக்கள் வன்மை பெற்றுவிட்டதனாலும், இலக்கிய விலக்கணங்களும் புலவருமின்மையாலும், வாய்க்கிசைந்தவாறு பேசி வந்ததனாலும், அவர் மொழி வல்லோசையும் கொச்சைத்தன்மையும் பெற்றுத் திரவிடநிலையடைந்துவிட்டது. அதன்பின் அங்குச் சென்ற தென்னில வணிகர், வடநாட்டில் மொழிபெயர்ந்திருந்ததைக் கண்டனர். அதனால் அந்நாட்டை மொழிபெயர் தேயம் என்றனர். அம்மொழிபெயர் தேயத் தென்னெல்லை வரவரத் தெற்கே தள்ளி வந்தது.

"குல்லைக் கண்ணி வடுகர் முனையது
வல்வேற் கட்டி நன்னாட் டும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும்" (குறுந். கக).

"வில்லலைத் துண்ணும் வல்லாண் வாழ்க்கைத்
தமிழ்கெழு மூவர் காக்கும்
மொழிபெயர் தேஎத்த பன்மலை யிறந்தே." (அகம். ௩க).

"பனிபடு சோலை வேங்கடத் தும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும்" (ஷை. உகக).

"தொடையமை பகழித் துவன்றுநிலை வடுகர்
பிழியார் மகிழர் கலிசிறந் தார்க்கும்
மொழிபெயர் தேஎம் இறந்தன ராயினும்"
(ஷை. உகரு).

இவை பிற்காலத்தனவாயினும், முற்காலத்து நிலைமையையும் ஒருவாறு குறிக்கும்.

நிலவாணிகம் போன்றே நீர்வாணிகமுஞ் சிறந்தது. ஆற்றைக் கடக்கப் பரிசல், அம்பி, ஓடம், பள்ளியோடம் முதலிய கல வகைகளும்; கால்வாய் ஆறு கரையோரக் கடல் ஆகியவற்றிற் சரக்குக்களைக் கடத்தத் தோணி, பஃறி முதலிய கடத்து வகைகளும்; கடலிலுட்சென்று மீன்பிடிக்கக் கட்டுமரம்,

மேங்கா, திமில், படகு முதலிய சிறுகல வகைகளும்; முத்துக் குளிக்கச் சலங்குப் படகும்; ஆழ்கடலைக் கடந்து அக்கரைநாடுகளில் வணிகஞ்செய்து மீளக் கப்பல், நாவாய், வங்கம் முதலிய பெருங்கல வகைகளும்; ஏற்பட்டன.

நெய்தல் நிலத்தில் மீன்பிடிக்கும் தொழிலராயிருந்த படவர் அல்லது பரவர் சிலர், நெடுங்கடல் செல்லும் நீர்வணிகராயினர். அவருள் தலைவர் குறுநிலமன்னருமாயினர். அவர் குடிப்பெயர் பரதர், பரதவர் எனவுந் திரிந்தது.

படம் = துணி, சீலை, பாய். படம்—படவு = பாய் கட்டிய தோணி. "படவ தேறி" (திருவாச. சரு:ரு).

படவு—படகு. படவு—படவன் = படகோட்டி. "படவர் மடமகளிர்" (திருப்போ. சந். பிள்ளைத். முத். ச).

படவன்—பரவன் = படகேறி மீன் பிடிப்பவன். "மீன்பல பரவன் வலைகொணர்ந் திட்டனன்" (திருமந். உ0ருக).

பரவன்—பரதவன் = க. மீன் பிடிப்போன். "மீன்விலைப் பரதவர்" (சிலப். ரு:உரு). "திண்டிமில் வன்பரதவர்" (புறம். உச:ச). உ. நீர்வணிகன், வணிகன். (சிலப். ரு:கருஎ, உரை). ந. குறுநிலமன்னன். "தென்பரதவர் மிடல்சாய" (புறம். நஎஅ).

பரதவன்—பரதன் = க. மீன்பிடிப்போன். "படர்திரைப் பரதர் முன்றில்" (கம்பரா. கார்கால. எச). உ. கடலோடி. "பரதர் மலிந்த பயங்கெழு மாநகர்." (சிலப். உ:உ). ந. வணிகன். "பரத குமரரும்" (சிலப். ரு:கருஅ).

பரதவர் கடலோடிகளும் (Mariners) சுற்றுக்கடலோடிகளுமாயிருந்ததனால் (Circumnavigators), வடதிசைச் சென்று வடபார் முனையில் சிற்சில வேளைகளில் தோன்றும் வண்ணவொளியைக் கண்டு, அதற்கு வடவை யென்று பெயரிட்டனர்.

வடம்—வடவை = வடதிசை நெருப்பு.
"வடவைக் கனலைப் பிழிந்தெடுத்து" (தனிப்பாடல்).

வடவனல் = வடவை.

"அக்கடலின் மீது வடவனல்நிற்க விலையோ"
(தாயு. பரிபூர.கூ).

"வெள்ளத் திடைவீழ் வடவனலை" (கம்பரா. தைலமா. அசா).

வடவனலம் = வடவை.

"கடுகிய வடவன லத்திடை வைத்தது" (கலிங். சoஉ).

வடம்—வடந்தை = வடதிசையிலுள்ளது, வடகாற்று.
வடந்தைத்தீ = வடவை. "சுடர்ந்தெரி வடந்தைத் தீயும்"
(காஞ்சிப்பு. இருபத். ௩அச).

உத்தர மடங்கல் = வடவை (திவா.). உத்தரம் = வடக்கு.
மடங்கல் = கூற்றுவன்போல் உலகையழிக்கும் ஊழித் தீ.

உத்தரம் = வடக்கிலுள்ள ஊழித்தீ, வடவை (பிங்.).
பாரின் தென்முனையிலும் வடவை போன்ற ஒளி தோன்றுமேனும், ஆரியர் வருகைக்கு முற்பட்ட பண்டைத் தமிழிலக்கியம் முற்றும் அழியுண்டு போனமையால், அதைப்பற்றிய இலக்கியக் குறிப்பும் இறந்துபட்டது.

வடவனல் குமரிநாடு முழுகுமுன்னரே கண்டுபிடிக்கப்பட்டதேனும், அதைப் பற்றிய குறிப்புள்ள இற்றைப் பண்டைநூல் எ-ஆம் நூற்றாண்டினதான திவாகரமே. எனினும், வடவையை முதன்முதற் கண்டவன் தமிழனே என்பதற்கு, அதுவே போதிய சான்றும். ஏனெனின், இற்றை யறிவியல்களைக் கண்ட மேனாட்டாரும் அதை கஎ-ஆம் நூற்றாண்டிலேயே அறிந்தனர். காசந்தி (Gassendi) என்னும் பிரெஞ்சிய அறிவியலார் கசாஉக -இல் அதைக்கண்டு அதற்கு 'வடவிடியல்' (Aurora Borealis) என்று பெயரிட்டார். இன்று அப்பெயர்க்கு வடவொளி யென்றே பொருள் கொள்ளப்படுகின்றது. அதன் விளக்கம்,

"A luminous atmospheric phenomenon, now considered to be of electrical character, occurring in the vicinity of, or radiating from, the earth's northern or southern magnetic

pole, and visible from time to time by night over more or less of the adjoining hemisphere, or even of the earth's surface generally; popularly called the Northern (or Southern) Lights..........................." என்று எருதந் துறை ஆங்கிலப் பேரகரமுதலியிற் கூறப்பட்டுள்ளது.

தமிழ்ப்பெயரும் இலத்தீனப் பெயரும், ஏறத்தாழ முற்றும் பொருளொத்திருத்தல் காண்க.

நிலவணிகர் வடக்கிற் பனிமலை வரையும் வட மேற்கில் மேலையாசியாவரையும், நீர்வணிகர் பல்திசையிலுமுள்ள அக்கரை நாடுகள் எல்லாவற்றிலும், பேசப்படும் மொழிகளை யெல்லாங் கேட்டபின், தம்மொழி ஒன்றிலேயே ழகரம் சிறப்பா யொலித்தலைக் கண்டு, அதற்குத் தமிழ் என்று பெயரிட்டிருக்கலாம்.

தம்—தமி = க. தனிமை. "தமிநின்று" (திருக்கோ. கசுஎ).
உ. ஒப்பின்மை. (சங். அக).

தமி + ழ் = தமிழ் (தனிமையாக ழகரத்தைக் கொண்ட மொழி). தமிழ்—தமிழம்.

தமிழின் இனிமையையும் தமிழப் பண்பாட்டின் சீர்மையையும் நோக்கி,

"இனிமையு நீர்மையுந் தமிழெனலாகும்." (க0:ருஅ0) என்றார் பிங்கல முனிவர். அவ்விரண்டும் வழிப்பொருளே யன்றித் தமிழ் என்னுஞ் சொல்லின் வேர்ப்பொருளாகா.

சொல்வளமைப்பும், செம்மரபும், இலக்கண வொழுங்கும், ஐவகைத் தொடை யமைந்த நால்வகைப் பாவின் இன்னோசையும், பொருளிலக்கணமும், சிறப்பாக அகப்பொருட்டுறைகளும், இன்கதை தழுவிய வனப்பியலும், தமிழின் இனிமையையும்; பொருண்மொழிப் பாக்களும் அரசியல் நூலும் அறநூலும் மெய்ப் பொருள்நூலும் தமிழப் பண்பாட்டின் நேர்மையையும், காட்டும்.

அகப்பொருட் டுறைகளின் இனிமையை நுகர்ந்தே, மாணிக்க வாசகர் யாவையும் பாடியபின் கோவையும் பாடி, அதில்,

"சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தை
யுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலி னுய்ந்தவொண் டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ.."

என்று(திருக்கோ.உ0), தம் சிறப்பான இடுபாட்டைக் குறிப் பாகத் தெரிவித்தார்.

இரும்புக் காலத்தில், வெண்பா முதலிய நால்வகைப் பாக்களுள் முதல் இரண்டன் கலப்பால் மருட்பா என்னும் கலவைப்பாவும், கலிப்பாவின் திரிபால் பரிபாடல் என்னும் திரிபாவும், தோன்றின. இசை, நாடகம், மருத்துவம், சமையல், கணக்கு, கணியம், ஏரணம், மறை, மெய்ப்பொருள் முதலிய பல்துறைக் கலைகளும் அறிவியல்களும் பற்றிய நூற்றுக்கணக்கான நூல்களும்; அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்னும் எண் வகை வனப்பியலும்; தோன்றியிருத்தல் வேண்டும். மொழியுடன் இசையும் நாடகமும் இணைக்கப்பட்டு, இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழ் வழக்கும் ஏற்பட்டிருத்தல் வேண்டும். ஐந்திணைச் சொற்களும் சேர்ந்து, தமிழ் பெருவளம் பெற்றிருந்தது.

தலைக்கழகம்

முத்தமிழும் ஒருங்கே கற்ற புலவர் நூற்றுக்கணக்கினர் தோன்றியதனால், பழைய இலக்கியத்தை ஆராயவும் புதிய இலக்கியத்தை இயற்றவும், பாண்டியன் பஃறுளியாற்றங்கரை மேலிருந்த மதுரை யென்னும் தன் தலைநகரில் ஒரு கழகம் நிறுவினான். அதன் உறுப்பினர் ஐந்நூற்று நாற்பத்தொன்பதின்மர் என்றும், அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினாரென்றும், அவராற் பாடப்பட்டன **முதுநாரையும் முதுகுருகும் களரியாவிரையும்** பல **பரிபாடலும்** பிறவுமென்றும், அக்கழகத்தை நடத்தி வந்த பாண்டியர் **காய்சினவழுதி** முதல் **கடுங்கோன்** இருக எண்பத்தொன்பதின்மர் என்றும், அவருட் பாவரங்கேறினார் எழுவரென்றும், அக்கழகம் இருந்த காலநீட்சி நாலாயிரத்து நானூற்று நாற்பதாண்டென்

றும், இறையனு ரகப்பொருள் உரையிற் சொல்லப்பட்டுள்ளது.

அக்கழக வுறுப்பினர் பெயர்கள் இறந்துபட்டன. அகத்தியர் இடைக்கழகக் குலைவிற்குப்பின் வடநாட்டினின்று வந்த ஆரியர். முதலிரு கழக வுறுப்பினரும் தூய தமிழராவர். சிவன் பெயரும் முருகன் பெயருங் கொண்ட இருவர் தலைக்கழக வுறுப்பினரா யிருந்திருக்கலாம். முரஞ்சியூர் முடிநாகராயர் கி.மு. பத்தாம் நூற்றூண்டுப் பாரத காலத்தவர். நிதியின் கிழவன் என்பது, வடதிசைத் தலைவனைக் குறிக்கும் தொல் கதைக் கட்டுப்பெயர்.

தலைக் கழகம் கி. மு. ௧0,000 போல் தோன்றியது. அக் காலத்து மக்கள் இக்காலத்தாரினும் மிக நீண்டு வாழ்ந்திருப்பராதலால், சராசரி ஆளுக்கு ௫0 ஆண்டு வைத்துக்கொள்ளின், அகூ பாண்டியருக்கும் சசரு0 ஆண்டாகும். முக்கழக வரலாற்றிற் குறிக்கப்பட்டுள்ள காலநீட்சி சசச0 ஆண்டு. இது முற்றும் பொருத்தமானதும் நிகழ்ந்திருக்கக் கூடியதுமாகும்.

தலைக்கழகத்திற்கு அளவை நூலாயிருந்த மாபிண்ட நூற் பெயரும் மறைந்து விட்டது. அகத்தியம் ஒரு மாபிண்டமாயினும், இடைக்கழகத்திற்குப் பிற்பட்டதாதலின், தலைக்கழக நூலாயிருந்திருக்க முடியாது. எழுத்து, சொல், பொருள் என்னும் முக்கூற்றி லக்கணமுங் கொண்ட இயற்றமிழ் நூல் பிண்டம்; இயலிசை நாடகம் என்னும் முத்தமிழிலக்கணமுங் கொண்ட நூல் மாபிண்டம். ஒவ்வொரு தமிழும் இலக்கணம் இலக்கியம் என்னும் இருபாற் பட்டது. முத்தமிழ்க்கும் இலக்கணம் ஒரே நூலாயிருக்கும்; ஆயின், இலக்கியம் வெவ்வேறு வனப்புக் களாகவும் பனுவல்களாகவும் இருக்கும். இயற்றமிழிலக்கணப் பொருட்கூற்றில் யாப்பும் உவமை யென்னும் அணியும் அடங்கும்.

தலைக்கழகம் வரலாற்றிற் கெட்டாத தொன்மையதாதலால், அதைப் பற்றிய வண்ணனையிற் சில விளத்தங்கள் கி. பி. கூ-ஆம் அல்லது எ-ஆம் நூற்றூண்டில் வரையப்பட்ட வுரையில், தவருகக் குறிக்கப்பட்டிருப்பது இயற்கையே.

தலைக்கழகம் தொடங்கினபின், உலகியற் கலைகளும் அறிவியல்களும் வளர்ந்து வந்ததுபோன்றே, மதவியல் ஆராய்ச்சி

யும் ஆழ்ந்து வளர்ந்தது. சிவநெறிக்கும் திருமால் நெறிக்கும் மேற்பட்ட, கடவுள் நெறியென்னும் பொது நெறியும் கண்டறியப்பட்டது. பொதுமக்கள் சிறுதெய்வ வணக்கத்தையும், புலமக்கள் பெருந்தேவ மதத்தையும், துறவியர் கடவுள் நெறியையும், கடைப்பிடித்தனர்.

ஆயின், காளி போர்வெற்றித் தெய்வமாகவும் அம்மை நோய்த் தெய்வமாகவுங் கருதப்பட்டதனால், நாளடைவில் ஐந்திணைப் பொதுத் தெய்வமானாள். தமிழன் பிறந்தகமும் பழம் பாண்டி நாடுமாகிய தென்னிலத்தின் தென்கோடியிலிருந்த பெருமலைத்தொடருக்கும், வடகோடியிலிருந்த பேராற்றிற்கும், குமரி யென்னும் காளியின் பெயரே இடப்பெற்றது.

பாண்டியன் மதிக்குலத்தா னாதலால், அவன் முதல் தலைநகர் அவன் குல முதல்வன் பெயரை யொட்டி மதுரை யெனப் பட்டது. மதி—மதிரை—மதுரை. ஒ.நோ: குதி—குதிரை. குதித்தல் தாண்டுதல்.

வைகை மதுரை பிற்காலத்த தாதலால், 'மருத முன்றுறை' என்னும் தொடரினின்று மதுரைப் பெயர் வந்ததென்பது பொருந்தாது. பஃறுளி மதுரைப் பெயரே வைகை மதுரைக்கும் பிற்காலத்தில் இடப்பட்டது.

தலைக்கழகக் கால நாகரிகமும் பண்பாடும்

ஆரியர் தென்னாடு வருகைக்கு முற்பட்ட முதலிரு கழகத் தனித்தமிழ் நூல்களனைத்தும் அழியுண்டு போயினும், மொழியமைப்பினின்றும் முக்கழக வரலாற்றினின்றும் கடைக்கழகப் பாடல்களிலும் பனுவல்களிலுமுள்ள குறிப்புக்களினின்றும், தலைக்கழகக் கால நாகரிகப் பண்பாட்டை ஒருவாறுணரலாம்.

மொழி

அஃறிணையினின்று மக்களைப் பிரித்துக் காட்டுவதும், ஒரு நாட்டு மக்களின் நாகரிகப் பண்பாட்டு அளவுகோலும், மொழியே. மொழியினாலேயே மாந்தன் நரன் என்று பெயர் பெற்றிருத்தல் வேண்டும். நரலுதல் = க. ஒலித்தல். "ஆடுகழை

நரலும் சேட்சிமை" (புறம். கஉ०). ௨. கத்துதல். "வெண் குருகு நரல்வீசும் நுண்பஃறுவலைய" (அகம். கச). ௩. பேசு தல்.

நரல்—நரன் = மாந்தன். "வறிதே நிலையாத விம்மண் ணுலகின் நரனாக வகுத்தனை" (தேவா. கூ௩ச:௨).

நரன்—நரம் = மாந்தப்பிறவி. "நரத்திலும் பிறத்திநாத" (திவ். திருச்சந். ௨க).

வானரம் (வால்நரம்) = வாலையுடைய மாந்தன் போன்ற விலங்கு. "வானர முகள" (சீவக. ககசூஅ).

நரன்—வ. நர. வானரம்—வ. வாநர.

நர என்னுஞ் சொல்லிற்கு வடமொழியில் வேரில்லை. வானர என்னுஞ்சொல்லை 'நர ஏவ' என்று பிரித்து, நரனைப் போன்றது என்று பொருள் கூறுவர் வடமொழியாளர்.

மொழிக்கு அடுத்தபடியாக, மாந்தனின் சிறப்பாற்றல் முன்னுதல். முன்னுதல் கருதுதல். முன்னுவான் (வானீற்று நி. கா. வி. எ.)—முன்னுன் (ம.) AS munan (to think).

முன்—முன்னம் = க. கருத்து. "முன்ன முகத்தி னுணர்ந்து" (புறம். ௩). ௨. மனம். (திவா.).

முன்னம்—முனம்—மனம் = உள்ளம்.

மனம்—வ. மனஸ். L. mens. ME mynd, E mind.

முன்—மன் = கருதும் ஆற்றலுள்ள மாந்தன்.

மன்பது = மக்கட் கூட்டம், "மன்பது மறுக்கத் துன்பங் களைவோன்" (பரிபா. கரு:ருஉ).

மன்பது—மன்பதை = மக்கட்கூட்டம்.

"மன்பதை காக்குநின் புரைமை" (புறம். ௨க०).

மன்—வ. மநு. OS, OHG man, E man.

மொழியிலுங் கருத்திலும் அன்றும் இன்றும் என்றும் சிறந் தவன் தமிழனே.

ஒவ்வொரு நாட்டிலும், மொழியை வளர்ப்பவர் பொது மக்கள்; இலக்கியத்தை வளர்ப்பவர் புலமக்கள். மொழிகள் இயன்மொழியும் திரிமொழியும் என இருவகைப்படும். தானே தோன்றியது இயன்மொழி; ஒன்றினின்று திரிந்தது திரிமொழி. ஆகுபெயர்கள் இருமடியும் மும்மடியும் ஆகுவது போன்று, திரிமொழிகளும் இருமடியும் மும்மடியுந் திரியும். திரவிடம் தமிழினின்று திரிந்த திரிமொழி; ஆரியம் திரவிடத்தினின்று திரிந்த இருமடித் திரிமொழி.

குமரிநாடு தமிழன் பிறந்தகம் மட்டுமன்றி மாந்தன் பிறந்தகமு மாதலால், தமிழே இம்மியும் ஏனைமொழி கலவாத முழுத் தூய இயன்மொழியாகும்.

இருதிணை ஐம்பால் இரெண் மூவிடங்களாகிய கிளவியிலக்கணமும், நுண்பிரிவுகளையுடைய எண் வேற்றுமைப் பெயரிலக்கணமும், நந்நான்கு வகைப்பட்ட முக்கால வினையிலக்கணமும்; வளமை, செம்மை, மரபு, தகுதி, தூய்மை முதலிய சொற்றிறங்களும்; சுருக்கம், தெளிவு, மதிப்புறவு, இடக்கரடக்கல், மங்கலம் முதலிய சொற்றொடரமைதிகளும் கொண்டு; பதினெண் திரவிட மொழிகட்குத் தாயும் பதினாூரியப் பிரிவுகட்கு மூலமுமா யமைந்தது தமிழ்.

இருதிணை

எல்லாப் பொருள்களையும், உயிரும் மெய்யும் உயிர்மெய்யும் (உயிரியும்) என மூவகையாக வகுத்தாலும், தனக்கும் பிறர்க்கும் நல்லதுந் தீயதுமாகிய இரண்டையும் பகுத்தறியும் பண்பையே சிறப்பாகக் கொண்டு, அஃதுள்ளதை உயர்ந்த வகுப்பென்றும் அஃதில்லதைத் தாழ்ந்த வகுப்பென்றும் துணிந்து, அதற்கேற்ப, உயர்ந்த வகுப்பைக் குறிக்குஞ் சொற்கட்கே ஆண் பெண் என்னும் இருபாலீறும், தாழ்ந்த வகுப்பைக் குறிக்குஞ் சொற்கட்கெல்லாம் ஒருமை பன்மை யென்னும் இரெண்ணீறுமே கொடுத்து, மொழியை வளர்த்தவர் தமிழப் பொதுமக்களே. மக்களும் தேவரும் உயர்ந்த வகுப்பு; மற்றவை தாழ்ந்த வகுப்பு.

எ—டு:

ஒருமை: முருகன் வந்தான், வள்ளி சென்றாள். —உயர்திணை.

காளை உழுகிறது, ஆவு கறக்கின்றது, கல் குத்துகிறது, அது பறக்கின்றது. —அஃறிணை.

பன்மையீறும் இருவகுப்பிற்கும் வெவ்வேறும்.

பன்மை: அரசர் வாழ்ந்தனர் (வாழ்ந்தார்), ஆசிரியன்மார் பேசினர். —உயர்திணை.

காளைகள் உழுகின்றன, மாடுகள் மேய்கின்றன, அவை இனிக்கின்றன, இலைகள் அசைகின்றன. —அஃறிணை.

மக்கள், குருக்கள், அவர்கள் வந்தார்கள், என்பன வழுவமைதியாகக் கொள்ளப்பெறும்.

'இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பல்' என்னும் முறையில், பொதுமக்கள் வகுத்த வகுப்புக்கட்கே இலக்கண நூலார் உயர்திணை அஃறிணை யெனப் பெயர் கொடுத்தனர். இன்றும், கல்லா மாந்தர் இக்குறியீடுகளை அறியாவிடினும், இருதிணை முறைப்படியே பேசுவர். உயிரையும் பாலையுமே யன்றிப் பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்டு வேறெம்மொழியாரும் பொருள்களைப் பகுத்திலர். தெலுங்கில் **மகத்**, **அமகத்** என்றது தமிழைப் பின்பற்றிப் பிற்காலத்திலேயே.

வளமை

நால்வகையடை: வாழையிலை, நெல்தாள், கரும்புத் தோகை, பனையோலை.

பல்வகைப் பிஞ்சு: மாவடு, பலா மூசு, வாழைக் கச்சல், தென்னங் குரும்பை, பாக்கு நுழாய்.

காய்ப்பு மாறியபின் தோன்றும் பிஞ்சு நுரு (நொரு).

யானைப்பெயர்கள்: ஆம்பல், உம்பல், உவா, எறும்பி, ஓங்கல், கரி, கறையடி, கைம்மலை, கைம்மா, தூங்கல், தும்பி, தோல், நால்வாய், பகடு, புழைக்கை—பூட்கை, பெருமா, பொங்கடி, மதமா, மறமலி, மாதிரம், மொய், வழுவை, வாரணம், வேழம் முதலியன.

முகத்திற் செம்புள்ளி யுள்ளது சிந்துரம் அல்லது புகர்முகம். முருகன் ஊர்தி பிணிமுகம். ஆண்யானை களிறு; பெண்யானை பிடி.

அயல்நாட்டினின்று வந்த குதிரையினத்தையும், பத்திற்கு மேற்பட்ட வகையாகப் பிரித்தமை முன்னர்க் கூறப்பட்டது.

தமிழ் மொழி, தனக்குரிய வீடு என்னுஞ் சொல்லை மட்டுமன்றி, இல் என்னுந் தெலுங்குச் சொல்லையும், மனையென்னும் கன்னடச் சொல்லையும், சமற்கிருதத்திற்கும் பின்னிய (Finnish) மொழிகட்கும் பொதுவான குடி என்னுஞ் சொல்லையும், தன்னகத்துக் கொண்டுள்ளதென்று, கால்டுவெலார் தமிழ்ச் சொல்வளத்தைப் பாராட்டிக் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

கொடை வேண்டற் சொற்கள்:

"இயென் கிளவி இழிந்தோன் கூற்றே." (தொல்.௯௨அ).

"தாஎன் கிளவி ஒப்போன் கூற்றே." (ஷ ௯௨௧).

"கொடுஎன் கிளவி உயர்ந்தோன் கூற்றே."

(ஷ ௯௩0).

ஒன்றைச் சொல்லும் வகையைப் பற்றிமட்டும் முப்பதிற்கு மேற்பட்ட வினைச்சொற்கள் உள. '**தமிழ் வரலாறு**' பார்க்க.

குமரிநாட்டுத் தமிழ் ஓரிலக்கம் சொற்களைக் கொண்டிருந்தது. அந்நாட்டு முழுக்கினாலும், முதலிரு கழக விலக்கிய அழிவினாலும், பாதிச்சொற்கள் இறந்துபட்டன.

செம்மை

எழுத்துக்களையும் சொற்களையும் சொற்றொடர்களையும், ஒலியும் பொருளும் திரிக்காதும் சிதைக்காதும் இலக்கண நெறியிற் பேசுவது செம்மை. செம்மை தவறியது கொடுமை. செம்மையான தமிழ் செந்தமிழ். கொடுமையான தமிழ் கொடுந்தமிழ். தமிழை என்றுஞ் செந்தமிழாகவே வழங்கவேண்டுமென்பது, தொன்னூலாசிரியர் இட்ட நிலையான வரம்பு. அவ்வரம்பினாலேயே, கடந்த மூவாயிரம் ஆண்டாக ஆரியர் எத்துணையோ கேடு செய்திருப்பினும், தமிழ் இன்னும் அழியாது இருந்து வருகின்றது.

தெலுங்கில் னகர வீற்றை டகர வீறாகவும், கன்னடத்திற் பகரமுதலை ஹகர முதலாகவும், மலையாளத்தில் மெலியடுத்த வல்லெழுத்தையும் மெலியாகவும் வடார்க்காட்டு ஆம்பூர் வட்

டத்தில் ழகரத்தை யகரமாகவும், ஒலிப்பது ஒலித்திரிபான கொடுந்தமிழாம்.

செருப்பு, திருப்பு, நெருப்பு, பருப்பு என்பவற்றை, முறையே, செப்பு, திப்பு, நிப்பு, பப்பு எனத் தெலுங்கில் திரிப்பது சொற்றிரிபான கொடுந்தமிழாம்.

'என்னது ஆகின்றது?' என்பதை எந்தாணு என்றும், 'நான்? செய்யவேண்டும்' என்பதை ஞான் செய்யேணம் என்றும், மலையாளத்தில் திரிப்பது சொற்றொடர்த்திரிபான கொடுந்தமிழாம்.

விடைசொல்லுதல் என்னும் சிறப்புப் பொருளுள்ள செப்புதற் சொல்லைச் சொல்லுதல் என்னும் பொதுப் பொருளில் தெலுங்கில் திரிப்பதும், ஆய்ந்து பார்த்தல் என்னும் சிறப்புப் பொருளுள்ள நோடுதற் சொல்லைப் பார்த்தல் என்னும் பொதுப்பொருளிற் கன்னடத்தில் திரிப்பதும், புதுப்பெருக்கு நீர் என்னும் சிறப்புப் பொருளுள்ள வெள்ளம் என்னும் சொல்லை நீர் என்னும் பொதுப் பொருளில் மலையாளத்தில் திரிப்பதும், பொருட்டிரிபான கொடுந் தமிழாம்.

இக்காலத்துப் பேராசிரியர் சிலர் உலக வழக்கிற்கும் கொச்சை வழக்கிற்கும் வேறுபாடறியாது, வச்சிருக்கோம்(வைத் திருக்கிறோம்) என்பதை உலகவழக்காகக் கொள்வர்.

"நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலக மாதலின்
இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத்
திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும்."

(தொல். கரு௮௯).

"வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி அவர்கட் டாகலான."

(ஷ கருகூ௨).

என்பவற்றைக் கண்டும் அவர் உணர்வதில்லை. பொதுமக்களுள் ஒரு சாராரான கீழ்மக்கள் பேச்சையுந் தழுவவேண்டுமெனின், அவர் ஒழுக்கத்தையும் பின்பற்ற வேண்டியதாகும். இது உயர்ந் தோர்க் குடம்பாடன்று. செய்யுள் வழக்கிற்கும் உலக வழக்கிற் கும் சிறிது வேறுபாடிருப்பினும், இரண்டும் செந்தமிழ் வழக்கே

யென்றும், செம்மை தமிழின் உயிர்நாடிப் பண்பென்றும், தமிழுக்கு வழுநிலையானவை திரவிட மொழிகட்கு வழா நிலையாகு மென்றும், அதனாலேயே அவை தனிமொழிகளாக வழங்குகின்றனவென்றும், அறிதல் வேண்டும்.

மரபு

"எப்பொருள் எச்சொலின் எவ்வா றுயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே."

(நன். நஅஅ).

இளமை, ஆண்பால், பெண்பால், விலங்குக் காவலர், உறுப்புக்கள், வினைகள், கழிபொருள் முதலிய பல்வகைப் பொருளும்பற்றி, பண்டை மேன்மக்கள் எச்சொற்களை வழங்கினரோ அச்சொற்களையே வழங்குதல் மரபாம்.

எ—டு:

இளமை

மாந்தன் மகவு (குழவி, சேய், பிள்ளை), ஆட்டுக்குட்டி, மாட்டுக்கன்று, எருமைக்கன்று, நாய்க்குட்டி (குருளை), பூனைக் குட்டி (பிள்ளை), கழுதைக் குட்டி, குதிரைக் குட்டி, ஒட்டகக் கன்று, கீரிப்பிள்ளை, நாவிப்பிள்ளை, அணிற்பிள்ளை, யானைக் கன்று (கயந்தலை, முனி, களவம், குட்டி), யாளியணங்கு, புலிக்குருளை, அரிமாக்குருளை, ஓநாய்க்குருளை, கரடிக்குட்டி (குருளை), நரிக்குருளை, குரங்குக்குட்டி (குழவி, பார்ப்பு, பறழ், மகவு), மான்குட்டி (கன்று), காசறைக்கரு, வெருகுப் பிள்ளை, எலிக்குட்டி (குஞ்சு), தேட்குஞ்சு, பாம்புக்குட்டி,

ஆமைப் பார்ப்பு (குட்டி), நண்டுக்குஞ்சு (பார்ப்பு), மீன் குஞ்சு, கெண்டைக் கசளி, அயிரைப்பொடி, முதலைக்கன்று,

பறவைக் குஞ்சு (பார்ப்பு), கோழிக்குஞ்சு, காக்கைக் குஞ்சு, காரிப்பிள்ளை, கொக்குப்பிள்ளை, வண்டுப்பார்ப்பு,

புழுப்பார்ப்பு, பேன்செள்,

வேப்பங்கன்று, வாழைக்கன்று (கருந்து), தென்னம்பிள்ளை, பனைமடலி (வடலி), நெல்நாற்று.

ஆடு மான் கழுதை குதிரை ஆகியவற்றின் இளமைப் பெயர் மறியென்று செய்யுள் வழக்கில் வழங்கினும், உலக வழக்கில் அச்சொல் அவற்றின் பெண்பாற் பெயராகவே வழங்கிவருகின்றது. ஒ. நோ: E mare, OE mere (பெண் குதிரை).

சிறுமியைக் குட்டியென்பதும், கடைச்சனை அல்லது கடைப் பிள்ளையைக் கடைக்குட்டி யென்பதும், இழிவழக்காம்.

ஊண்வினைகள்

உறிதல், உறிஞ்சுதல்	நீர்ப்பொருளையும் நெகிழ்ச்சிப் பொருளையும் காற்றால் வாய்க்குள் இழுத்தல்.
குடித்தல் —	நீர்ப்பொருளை இயல்பாக உட்கொள்ளுதல்.
பருகுதல் —	நீர்க்கலத்திற் பற்படக் குடித்தல்.
அருந்துதல் —	சிறிது சிறிதாகக் குடித்தல்.
மண்டுதல் —	மண்டியுட்படக் குடித்தல்.
மாந்துதல் —	பேரளவாகக் குடித்தல்.
சப்புதல் —	ஒன்றைமெல்லாது நாவிற்கும் அண்ணத்திற்கும் இடையிலிட்டு நெருக்கி, அதன்சாற்றை மெல்ல மெல்ல உறிஞ்சுதல்; அல்லது அப்பொருளைச்சிறிது சிறிதாகக் கரைத்தல்.
சுவைத்தல் —	ஒன்றைமென்று அதன் சுவையை நுகர்தல்.
சவைத்தல் —	மெல்லிய பொருளை மெல்லுதல், குழந்தை தாய்ப்பாலைச் சப்புதல்.
சூம்புதல், சூப்புதல்	தித்திப்புக் குச்சும் மூளையெலும்பும் விரலும் போன்றவற்றை வாயிலிட்டுச் சப்புதல்.
தின்னுதல் —	பழமும் பலகாரமும் போன்ற சிற்றுண்டியை மென்று உட்கொள்ளுதல்.
உண்ணுதல் —	கவளங் கவளமாகச் சோற்றைஉட்கொள்ளல்.
சாப்பிடுதல் —	குழம்பும் சாறும் மோரும் (அல்லது அவற்றுள் ஒன்று) கலந்த சோற்றைக் கவளங் கவளமாகக் கறிவகைகளுடன் (அல்லது அவையின்றி) உட்கொள்ளுதல்.
மடுத்தல், வாய்மடுத்தல்	கம்பங்கஞ்சியும் கேழ்வரகுக் கூழும் போன்றவற்றைக் கட்டிகட்டியாகக் கூட்டில் தொட்டுண்ணுதல், கவளங் கவளமாகப் பிறரூட்டுதல்.

அசைத்தல், அசைவு செய்தல் } விலங்கு அசையிடுவதுபோல் அலகை யசைத்து மென்று உட்கொள்ளுதல்.

அயிலுதல் —குழந்தை அளைந்து சோறுண்ணுதல்.

அயில்—அயின்—அயினி = உணவு.

"தாலி களைந்தன்று மிலனே பால்விட்
டயினியு மின்றயின் றனனே"...... (புறம். ௭௭).

அள்ளல் = நெருக்கம், குழைந்தசேறு.
அள்—(அய்) — அயில். அளிதல் = கலத்தல், குழைதல். அள்—அளாவு. அள்—அளை.

"சிறுகை யளாவிய கூழ்." (குறள். ௬௪).

"..................................இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்." (நள. கலிதொ. ௬௮).

ஒ.நோ: பள்—(பய்)—பயில். பயிலுதல் பழகுதல்.

கப்புதல் —மொக்கி விரைந்து உட்கொள்ளுதல்.
மொக்குதல் = வாய்நிறையக் கொண்டுமெல்லுதல்.

"கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணி"

(திருப்பு. விநாயக.௧).

மிசைதல் —விருந்தினரை யுண்பித்து மிஞ்சியதை யுண்ணுதல்.

"வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்." (குறள். ௮௫).

மொசித்தல்—பலர் கூடி யுண்ணுதல்.

"விழவின் றுயினும் படுபதம் பிழையாது
மையூன் மொசித்த வொக்கலொடு" (புறம். ௯௬).

"மொய்கொண் மாக்கள் மொசிக்கவூண்
சுரந்தனள்" (மணி. ௧௧:௧௩௬).

மொய்த்தல் திரளுதல். மொய்—மொயி—மொசி.
மொசிதல் மொய்த்தல்.

"கடுந்தே றுறுகிளை மொசிந்தன துஞ்சும்"
(பதிற்றுப். எக:சு).

ஆர்தல் —வயிறு நிரம்ப வுண்ணுதல்.

விழுங்குதல் —மெல்லாதும் சுவை பாராதும் ஒரே தடவையில் விரைந்து வாய்வழி வயிற்றிற்குள் இடுதல்.

உட்கொள்ளுதல்—எவ்வகையிலேனும் வயிறு சேர்ப்பித்தல்.
இது எல்லா ஊண்வினைகட்கும் பொதுவாம்.

கடைக்கழகக் காலத்திற் புலவர் பலர் மரபும் (Idiom) தகுதியும் (Propriety) போற்றுமையால், பலசொற்கள் தம் சிறப்புப் பொருளை இழந்துவிட்டன.

இன்று, குளம்பி (காப்பி) சாப்பிடுதல், சுருட்டுக் குடித்தல், கொசுவலை, தேட்கடி என்பன மரபுவழுவாம். இவை, குளம்பி குடித்தல், சுருட்டுப் பிடித்தல் அல்லது புகைத்தல், உலங்கு வலை அல்லது நுளம்புவலை, தேட்கொட்டு என்றிருத்தல் வேண்டும். சம்பளத்தை (salary) ஊதியம் (profit, gain) என்பதும் வழுவாம். இலக்கணப்புலமை நிரம்பாதவர் நூலாசிரியரும் பொத்தக ஆசிரியரும் ஆவதனாலும் மரபு கெடுகின்றது.

தூய்மை

செம்மை போன்றே தூய்மையும் தமிழின் உயிர்நாடிப் பண்பாம்.

வெளிநாடுகளினின்று வந்த பொருள்கட் கெல்லாம், அவற்றின் சிறப்பியல்பு நோக்கி உடனுடன் தமிழ்ப்பெயர்கள் இடப்பட்டன.

எ—டு: அடைக்காய் (பாக்கு), அண்டிமா (முந்திரி, Cashew), உருளைக்கிழங்கு, ஒட்டகம், கரும்பு, கழுதை, குச்சுக் கிழங்கு (ஆழ்வள்ளிக்கிழங்கு, ஏழிலைக்கிழங்கு, கொம்புக்கிழங்கு, சவரிக் கட்டை, மரவள்ளிக்கிழங்கு), குதிரை, செந்தாழை (Pineapple), புகையிலை, புகைவண்டி, பேரீந்து, மிதிவண்டி, மிளகாய், முந்திரி (கொடி முந்திரி, grape), வான்கோழி.

காள் காள் என்று கத்துவது கழுதை.

தமிழின் இயல்பை அறியாதார் சிலர்,

‘‘குரங்கின் ஏற்றினைக் கடுவன் என்றலும்
மரம்பயில் கூகையைக் கோட்டான் என்றலும்
செவ்வாய்க் கிளியைத் தத்தை என்றலும்
வெவ்வாய் வெருகினைப் பூசை என்றலும்
குதிரையுள் ஆணினைச் சேவல் என்றலும்
இருள்நிறப் பன்றியை ஏனம் என்றலும்
எருமையுள் ஆணினைக் கண்டி என்றலும்
முடிய வந்த அவ்வழக் குண்மையின்
கடிய லாகா கடனறிந் தோர்க்கே.’’ (தொல். கருசுஅ).

என்பதைப் பிறழவுணர்ந்து, தமிழில் வரைதுறையின்றிப் பிற மொழிச்சொற்களை வழங்கத் தொல்காப்பியம் இடந்தந்துவிட்ட தாகக் கூறுவர். இந்நூற்பாவிலுள்ள சொற்களெல்லாம் தூய தமிழ்ச்சொற்களே யென்பதையும், அவற்றுட் சில சிறிதே பொருள் திரிந்தவை யென்பதையும், அவர் அறிந்திலர்.

கடுவன் என்பது கணவன் என்பதன் திரிபு. கணவன் என்னுஞ்சொல் அஃறிணையிலும் வழங்கும்.

‘‘வங்காக் கடந்த செங்காற் பேடை
எழாலுற வீழ்ந்தெனக் கணவற்கா ணாது’’
(குறுந். கருக).

என்பதை நோக்குக. கோட்டான் மரக் கொம்பில் அல்லது பொந்தில் வாழ்வது. தத்தை இலைகளிலும் ஓலைகளிலும் தொத்தி நிற்பது. தொத்து—தொத்தை—தத்தை. தொத்தை—தோத்தா (இந்தி). பூசை என்பது வீட்டுப் பூனையின் பெயர். சேவல் என்பது பறவை யாணின் பெயர். சே என்பது விலங்காணின் பெயர். எ—டு: சேங்கன்று = ஆண்கன்று. சே—சேவு—சேவல். ஏனம் என்பது கரியது என்னும் பொருளுள்ளது. ஏனல் = கருந் தினை. ஏனை—யானை. கண்டி கடியது (கடுமையானது).

‘‘சேவும் சேவலும் இரலையும் கலையும்
....,
போத்தும் கண்டியும் கடுவனும் பிறவும்
யாத்த ஆண்பாற் பெயரென மொழிப.’’

என்று முன்னரே கரு௦க-ஆம் நூற்பாவில், சேவல், கண்டி, கடுவன் என்னும் முச்சொற்களை ஆண்பாற் பெயராகத் தொல்காப்பியங் குறித்திருத்தல் காண்க.

ஆயினும், தொல்காப்பியர்க்கு இருபது நூற்றுண்டுகட்குப் பிற்பட்டுத் தோன்றிய நன்னூலார், தமிழின் தூய்மையைக் காவாது, எல்லா வடசொற்களையும் தமிழில் வழங்க இடந்தந்தது போன்றே,

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே." (சசுஉ).

என்று வழுப்படக் கூறிவிட்டார். இது தழுவத் தக்கதன்று.

சுருக்கம்

சுருங்கச் சொல்லல் ஒரு பண்பாட்டுக் கூருகப் பண்டைத் தமிழராற் கொள்ளப்பட்டது.

"பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்." (குறள். கககசு).

"பலசொல்லக் காமுறுவர் மன்ற மாசற்ற
சிலசொல்லல் தேற்ரு தவர்." (ஷை சுசக).

என்ருர் திருவள்ளுவர்.

ஒருவன் கூலக்கடைக்குச்சென்று, கடைக்காரனிடம் பாசிப் பயறு (பச்சைப்பயறு) உள்ளதா என்று வினவின், கடைக்காரன் அஃதில்லாவிடத்து, உழுந்தல்லதில்லையென்று தன்னிடமுள்ள வேருெரு பயற்றை அல்லது சரக்கைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்றும், வினவிய பொருள் மட்டுமே யிருக்குமாயின், அதை இப்பயறல்ல தில்லையென்று சுட்டிக்கூற வேண்டுமென்றும், இங்ஙனங் கூறின் மேற்கொண்டு பல வினுக்களும் விடைகளும் வீணுக எழாவாறு தடுக்குமென்றும், பண்டை யிலக்கண நூலார் வணிகர்க்குச் சொன்னது, மற்றெல்லாத் தொழிலாளர்க்கும் பொருந்தும் பொது வாய்பாடாகும்.

"எப்பொரு ளாயினும் அல்ல தில்லெனின்
அப்பொரு ளல்லாப் பிறிதுபொருள் கூறல்."

"அப்பொருள் கூறின் சுட்டிக் கூறல்."

என்பன தொல்காப்பியம் (சொல். ௩௫. ௩சு).

தெளிவு

சுருங்கச் சொல்லல் சிறந்த பண்பாயினும், விளக்கமின்றிச் சொல்வது பயன்படாது குற்றமாகுமாதலின், 'மாப்பூத்தது' என்று பலபொருளொருசொல்லின் சிறப்புவினை குறியாது, 'மா வீழ்ந்தது' என்று பொதுவினை குறிப்பது கூடாதென்றும், அதை 'மாமரம் வீழ்ந்தது,' 'விலங்குமா வீழ்ந்தது' என்று தெளிவுபடுத்திக் கூறவேண்டுமென்றும்; ஒரு பொருளின் இயற்கைக்கு மாறுன இயலையும் செயலையுங் கூறும்போது, அதற்குக் கரணியத்தையும் குறிப்பாகவோ வெளிப்படையாகவோ குறித்தல் வேண்டுமென்றும்; தொன்னூலாசிரியர் நெறியிட்டுள்ளனர்.

"ஒன்றுவினை மருங்கின் ஒன்றித் தோன்றும்
வினைவேறு படாஅப் பலபொரு ளொருசொல்
நினையுங் காலைக் கிளந்தாங் கியலும்."

"குறித்தோன் கூற்றந் தெரித்துமொழி கிளவி."
என்பன தொல்காப்பியம். (சொல். ருச, ருரு).

இலக்கியம்

இசை, நாடகம், கணிதம், கணியம், ஏரணம், மந்திரம், மறை, பட்டாங்கு, மடை, மருத்துவம், அறம், அரசியல், மல், போர், நிலம், நீர் முதலிய பல்வேறு நூல்கள் பற்றிய சிறப்பிலக்கியமும்; அறுவகைப் பாவான தனிநிலைச் செய்யுளும், எண்வகை வனப்பான தொடர்நிலைச் செய்யுளும், ஆகிய பொதுவிலக்கியமும்; மூலமும் உரையும் செய்யுளாகவே யிருந்தன. இங்ஙனம் வேறெம்மொழியிலும் இருந்ததில்லை, இருக்கப் போவதுமில்லை.

"பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொலோ டவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனுர் புலவர்." (கஙஙசு)

என்று தொல்காப்பியங் கூறுதல் காண்க.

இலக்கியம் முழுதும் செய்யுளாகவே இருந்ததனால், இலக்கிய வழக்கு செய்யுள்வழக்கெனப்பட்டது. எல்லாப்புலவரும் பாவலராயிருந்ததனால், பாவலர் எனப்படாது புலவர் என்றே பெயர் பெற்றனர். அவர் இக்காலத்துப் பாவலர் போல், ஏடும் எழுதுகோலும் எடுத்து ஓரிடத்தமர்ந்து 'எண்ணியெண்ணி அடித்துந்திருத்தியும் செய்யுளியற்றாது, உரைநடையிற் பேசுவதுபோல், எங்கும் என்றும் எப்பொருளும் பற்றிக் கடுத்துப் பாடியவராவர். ஆசிரியரும் அறிவுறுத்துவோரும் கணியரும் ஆகிய கல்வித் தொழிலாளர் மட்டுமன்றி; உழவர், வணிகர், மருத்துவர், கொல்லர் முதலிய பல்வகைப் பிறதொழிலாளரும், குறிஞ்சி நிலத்துக் குறவரும், பாலைநிலத்துக் கள்ளர் மறவரும், முல்லைநிலத்து ஆயரும், நெய்தல் நிலத்துப் பரவரும் ஆகியவருள்ளும் சிலர் பாவலராயிருந்தனர். அதனாலேயே, தலைக் கழகத்துப்புலவர் ஐந்நூற்று நாற்பத்தொன்பதின்மர் உள்ளிட்டு, நாலாயிரத்து நானூற்று நாற்பத் தொன்பதின்மர் பாடினர்.

இலக்கணம்

தமிழில் இலக்கண முதனூல் இயற்றியவர், முற்றத்துறந்து முழுமுனிவரான ஒரு மெய்ப்பொருளறிஞர்.

> "வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
> முனைவன் கண்டது முதனூல் ஆகும்."
>
> (தொல். கரு௯௪).

முனைதல் வெறுத்தல். முனை—முனைவு—முனைவன். முனிதல் வெறுத்தல். முனி—முனிவு—முனிவன் = உலகை வெறுத்துப் பற்றைத் துறந்தவன்.

எழுத்து

முதனூலாசிரியர் ஒரு சிறந்த மெய்ப் பொருளறிஞராயிருந்ததனாலேயே, உயிரும் மெய்யும் உயிர்மெய்யும் (உயிரியும்) போன்று ஏழுத்தொலிகள் மூவகைப்பட்டிருத்தலைக்கண்டு, முப்பொருட் பெயர்களையே எழுத்தொலிகட்கும் உவமையாகுபெயராக இட்டிருக்கின்றார். தானாக இயங்கும் உயிரைப்போன்று தானாக வொலிக்கும் உயிரெழுத்தும்; உயிரின் சேர்க்கையின்றித் தானாக வொலிக்காத மெய்யெழுத்தும்; உயிரொடு சேர்ந்தவுடம்பு அதனால் இயக்கப்பட்டு அதனொடு ஒன்றி. அதனினும்

முற்பட்டுத் தோன்றும் உயிர்மெய் போன்று, உயிரெழுத்தொடு சேர்ந்த மெய்யெழுத்து ஒலிக்கப்பட்டு அதனொடு ஒன்றி அதனினும் முற்பட்டுத் தோன்றும் உயிர்மெய்யெழுத்தும்; இருத்தலைக் காண்க. உயிர்மெய் உயிரையுடைய மெய். 'பிராணி' என்னும் வடசொல் வழக்கினால் உயிர்மெய் என்னுஞ் சொல்லின் பொருள் மறைந்தது.

ஒலியின் நிலைமையையே உருவத்திலுங் காட்டுவதற்கு, உயிர்மெய்க்கு மெய்யுருவமும் உயிர்க்குறியுஞ் சேர்ந்த தனிவடிவமைத்தார். இவ்வமைப்பு முதன்முதல் தமிழிலேயே ஏற்பட்டது. உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் சேர்ந்த தொகுதிக்குக் **குறுங்கணக்கு** என்றும், அவற்றொடு உயிர்மெய்யெழுத்துக்களும் சேர்ந்த தொகுதிக்கு **நெடுங்கணக்கு** என்றுபெயர். இவை உறவுக்குறியீடுகளாதலால் (Relative Terms), ஒருங்கே தோன்றினவையாகும்.

மேலைநாடுகள் உட்படப் பிறநாட்டு வண்ணமாலைகளெல்லாம் (Alphabets) குறுங்கணக்கே. சப்பானிலும் எத்தியோப்பியாவிலும் உள்ள அசையெழுத்துக்களும் (Syllabaries), மெய்யின்மையால் நெடுங்கணக்காகா.

மேனாட்டுக் குறுங்கணக்கெல்லாம் ஒழுங்கின்றி உயிரும் மெய்யுங் கலந்திருப்பதால், தமிழ்க் குறுங்கணக்குப்போல் பிறப்பை அடிப்படையாகக் கொண்ட முறையைக் (Order) காட்டுவதில்லை. சொல்லின் மூவிடத்திலும் எந்த எழுத்தும் வரலாமாதலால், முதனிலை இடைநிலை இறுதிநிலை என்னும் இடவரம்பும் மேலைமொழியெழுத்துக்கட்கில்லை. சொற்கள் நீண்டகாலமாக மேன்மேலுந் திரிந்து திரிந்து உருமாறி, துருப்பிடித்த இருப்புக்கருவிகள்போல் உறுப்புப் பிரிக்கமுடியாதிருப்பதால், பகுசொல்லமைப்பும் சொற்புணர்ச்சியும் ஆகிய எழுத்தின் புறத்திலக்கணங்களும் பெரும்பாலும் மேலைமொழிக்கட்கில்லை. ஆகவே, பத்துவகையகமும் இருவகைப் புறமும் ஆகிய பன்னீரெழுத்திலக்கணங்களும் நிரம்பிய மொழி தமிழ் ஒன்றே.

எழுத்திலக் கணமே யீரா றவைதாம்
எண்பெயர் முறைபிறப் புருவம் அளவே
முதலீ றிடைநிலை போலி யகமாம்
கிளவியும் புணர்ச்சியுங் கிளப்பின் புறமாம்.

மாத்திரை என்பதும் தென்சொல்லே. அது இன்று இருமொழிப் பொதுவாய் மயக்கத்திற் கிடமாயிருத்தலின், அளபு என்னும் ஐயுறவற்ற தென்சொல் இங்கு ஆளப்பட்டது. குமரிநாட்டார் பொதுவாக எஃகுச் செவியராயிருந்தமையின், கண்ணிமையள வான ஒரு மாத்திரையின் அரையளவோடு காலளவையும் எழுத்தொலிகளிற் கண்டறிந்தனர்.

தமிழில் எழுத்துத் தோன்றிய காலம் கி. மு. க0,000. வேத ஆரியர் நாவலந் தேயத்திற்குட் புகுந்த காலம் கி. மு. க௫00. அவருக்கு எழுத்தில்லை. அவர் வேதம் நீண்ட காலமாக எழு தாக் கிளவியாகவே யிருந்தது. தென்னாடு வந்து தமிழரொடு தொடர்பு கொண்டபின், தமிழெழுத்தைப் பின்பற்றிக் கிரந்த எழுத்தை அமைத்துக் கொண்டனர். அதன்பின், கிரந்த எழுத்தை அடிப்படையாகக் கொண்டு, வடநாட்டில், கி. பி. ௩-ஆம் நூற்றாண்டிற்கும் கக-ஆம் நூற்றாண்டிற்கும் இடையில், தேவநாகரி தோன்றிற்று. தமிழ் நெடுங்கணக்கையும் எழுத்திலக்கணத்தையும் தழுவி, எழுத்துமுறையும் உயிர்மெய்த் தனிவடிவும் சொற்புணர்ச்சியும், முதற்கண் சமற்கிருதத்திலும் பின்னர் ஏனை யிந்திய மொழிகளிலும், ஏற்பட்டன. **கால்டு வெலார்** தமிழ் அல்லது தமிழர் வரலாற்றை அறியாமையால், தமிழ் நெடுங்கணக்கு சமற்கிருத வண்ணமாலையைத் தழுவிய தென்று தவறுகக் கூறிவிட்டார்.

கி. மு. ௩-ஆம் நூற்றாண்டில், அசோகன் கல்வெட்டுப் பிராமியெழுத்து தமிழகத்துப் புகுந்தது. அதனின்றே வட்டெழுத்துத் தோன்றிற்று. ஆரியர் தம் தமிழொழிப்புத் திட்டத்தை அடிப்படையினின்று தொடங்கியதால், மூவேந்தரும் ஆரிய அடிமையராய்ப் போன பிற்காலத்தில், தமிழ் நாட்டுக் கல்வெட்டில் வட்டெழுத்துப் புகுந்திருக்கின்றது. தமிழுக்கும் வட்டெழுத்திற்கும் யாதொரு தொடர்புமில்லை. இன்றுள்ள தமிழெழுத்துத் தொன்று தொட்டு வருவதே.

"தொல்லை வடிவின எல்லா எழுத்துமாண்
டெய்தும் எகர ஒகரமெய் புள்ளி." (கூஅ)

என்று க௩-ஆம் நூற்றாண்டுப் பவணந்தி முனிவர் கூறுதல் காண்க. எகர ஒகரமெய் புள்ளி நீங்கியதும், ஏகார ஓகாரமெய் இரட்டைச்சுழிக் கொம்பு பெற்றதும், ஏகாரவுயிர் கீழிழுப்புக் கொண்டதுமே, பிற்காலத்து வேறுபாடாம்.

கஙகூஅ-இல் சென்னையில், வையாபுரிகள் குழுச்சார்பாக நடைபெற்ற உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாட்டில், ஒரு தமிழ்ப்பகைவர், தமிழெழுத்து அசோகன் கல்வெட்டுப் பிராமி லிபியினின்று தோன்றியதென்று கட்டுரை படித்துவிட்டதனுற் கலங்கற்க. இலக்கணத்தின் முந்தியது இலக்கியம்; இலக்கியத்தின் முந்தியது எழுத்து; எழுத்தின் முந்தியது மொழி. தமிழ் குமரி நாட்டில் தோன்றியதென்றும், திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமும் அதுவேயென்றும், மொழியாராய்ச்சி முரசறைந்து முழக்குகின்றது.

சொல்

சொற்களை முதனிலை, இறு, புணர்ச்சி, சாரியை, இடைநிலை, திரிபு என்னும் ஆறுறுப்பாகப் பகுத்தும்; இயற்சொல், திரிசொல், திசைச்சொல் என மூவகையாக வகுத்தும்; மொழிநூற்கு அடிகோலியது தமிழே.

பொருள்

தமிழிலக்கிய மெல்லாம் செய்யுள் நடையிலிருந்தமையால், சொல்லிலக்கணத்தை யடுத்துச் சொற்றொடரிலக்கணத்தைக் கூறுவிடினும், செய்யுளிலக்கணத்தைக் கூறி அதன்பின் பொருளிலக்கணத்தைக் கூறியிருக்கலாம். ஆயின், முதனூலாசிரியர் மெய்ப்பொருளறிஞரா யிருந்ததனுல், மொழிநடை எதுவாயினும் பொருளே அதன் உள்ளீடென்றும், தனிச்சொற்கும் பொருளுண்டென்றும், கண்டு, அதனையே சொல்லிற்கடுத்துக் கூறியதோடு, அதற்கே சிறப்புக் கொடுத்துச் செய்யுளை அதனுள்ளடக்கி, மூன்றும் அதிகாரத்தைப் பொருளதிகாரமெனப் பெயரிட்டு இயற்றமிழ் இலக்கண நூலின் முடிமணியாக்கினர். திருக்கோவிலின் முகமண்டபமும் இடைமண்டபமும் உண்ணாழிகையும் போல, எழுத்தும் சொல்லும் பொருளும் முறையே ஒன்றிஞென்று சிறந்தனவாகும்.

பிற்காலத்துப் பாண்டியன் ஒருவன், எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் வல்லாரைமட்டும் தலைப்பட்டுப் பொருளதிகாரம் வல்லாரைத் தலைப்படாதபோது, புடைபடக் கவன்று, ''என்னை? எழுத்துஞ் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமெனின் இவை

பெற்றும் பெற்றிலேம்.'' என்று வருந்தியதாக, இறையனாரகப் பொருளுரை கூறியிருப்பது இங்குக் கவனிக்கத் தக்கது. இதனால், தமிழன் பெருமையையும் தமிழின் பெருமையையும் ஒருங்கே உணரலாம். ஏனைமொழியிலக்கண நூலாரெல்லாம் எழுத்து, சொல், யாப்பு, அணி என்னும் நாலொடு நின்றுவிட, தமிழிலக்கண நூலார் மட்டும் யாப்பின் பொருளுக்கும் இலக்கணம் வகுத்தது, குமரி நாட்டுத் தமிழரின் ஒப்புயர்வற்ற அகக்கரண வளர்ச்சியைக் காட்டும். பொருளிலக்கணம் போலப் பண்டைத் தமிழனின் புலமை நுணுக்கத்தைக் காட்டும் சான்று வேறெதுவுமில்லை.

எல்லாப் பொருள்களையும் அகம்புறம் என இரண்டாகப் பகுத்து, ஒவ்வொன்றையும் எவ்வேழு திணையாக வகுத்திருக்கின்றார் முதனூலார்.

கூலிக்காரன்முதல் கோமகன்வரை எந்நிலையராயினும் எத்தொழிலராயினும், மக்களையெல்லாம் ஆண்டு நடத்தும் குணம் இரண்டு. அவை காதலும் மறமும். மக்களெல்லாரும் ஆடவரும் பெண்டிருமாகப் படைக்கப்பட்டிருப்பதால், காதல் வாழ்க்கை மாபெரும்பாலர்க்கு இன்றியமையாததாகும். பொருளில்லார்க்கு இவ்வுலக மில்லையாதலால், ஒரு தொழிலை மேற்கொள்வது எல்லார்க்கும் இன்றியமையாதது. எத்தொழிலிலும் போட்டி தொன்று தொட்டுச் சிற்றளவாகவோ பேரளவாகவோ இருந்தே வந்திருக்கின்றது. எதிரிகளை வென்று வாழ்க்கையைத் திறம்பட நடத்த மறமும் இன்றியமையாதது.

இனி, ஒரே பெண்ணைப் பலர் மணக்க விரும்பும்போது, காதலிலேயே மறமுங் கலக்கின்றது.

இவ்விரு குணங்களுள்ளும் அல்லது குணவாழ்க்கையுள்ளும், உள்ளத்திற்கு மிக நெருங்கியது காதலே. ஆதலால் அதை அகம் என்றார். அகமல்லாதது புறமாதலின் மறத்தைப் புறம் என்றார். இங்ஙனம் இரண்டையும் வேறுபடுத்திக் கூறினும், அவை அகப்பகையும் புறப்பகையும் போலப் பிரிந்து நில்லாது, அகங்கையும் புறங்கையும்போல ஒன்றியே நிற்கும்.

தமிழனுக்குத் தமிழ் அகம்; திரவிடம் அகப்புறம்; ஆரியம் புறம்; சேமியம் புறப்புறம். இவ்வகைக் கூற்றினின்றே, அகம் புறம் என்னும் சொற்களின் பொருளை ஒருவாறுணரலாம்.

அரசன் எல்லார்க்குந் தலைமையாகவும் பொதுவாகவும் எல்லாரையுந் தன்னுளடக்கியும் நிற்பதால், அரசனுக்குச் சொன்னது அனைவர்க்குஞ் சொன்னதாகு மென்றும், காதல் வாழ்க்கையிலும் மறவாழ்க்கையிலும் தலைசிறந்த நுகர்ச்சியும் பட்டறிவும் அரசனுக்கே யுண்டென்றுங் கண்டு, ஓர் இளவரசனை யே காதலனாகவும் ஓர் இளவரசியையே காதலியாகவுங் கொண்டு, அகப்பொருளிலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது. இது புலனெறி வழக்கம் எனத் தமிழுக்கே சிறந்த மரபாகும். ஆயினும், இது நாடக வழக்கமும் உலகியல் வழக்கமும் கலந்ததாதலால், சிறுபான்மை பொதுமக்கள் காதல் வாழ்க்கையும் ஆங்காங்குக் கூறப்பெறும்.

அகப்பொருள் என்னும் காதல் அல்லது மணவாழ்க்கை, கைக்கிளை (ஒருதலைக்காமம்), ஐந்திணை (இருதலைக்காமம்), பெருந்திணை (பொருந்தாக்காமம்) என மூவகையாக வகுக்கப் பட்டுள்ளது. அவற்றுள், எல்லாவகையிலும் நல்லதென ஒப்புக் கொள்ளப்பட்ட இருதலைக்காமம் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்னும் ஐந்து உரிப்பொருளாகப் பிரிக்கப் பட்டும்; அவை முறையே குறிஞ்சி பாலை முல்லை நெய்தல் மருதம் ஆகிய நிலங்கட்கு உரிமையாக்கப்பட்டும்; உள்ளன. இப்பிரிப்பும் நிலவுரிமைப் படுத்தமும், முதனூலாசிரியரின் நெடுங்காலக் கூர்ங்கவனிப்பையும் நுண்மாண் நுழைபுலத்தையும் தெற்றெனக் காட்டுகின்றன. இதனை என் **'பொருளிலக்கண மாண்பு'** என்னும் நூலில் விளக்கிக் காட்டுவேன்.

ஐந்திணைப்பெயர் மூலம்

குறிஞ்சி

குறி = அடையாளம், காலம், அளவு, தடவை.

குறி—குறிஞ்சி = ஒரு பல்லாண்டுக்கால அளவைக் குறிக்கும் பூ, அப்பூப்பூக்கும் செடி, அச்செடி இயற்கையாக வளரும் மலை, மலை, மலையும் மலை சார்ந்த் இடமும், மலைநாடு.

ஒ. நோ: நெரி—நெரிஞ்சி—நெருஞ்சி.

கோடைக்கானல் மலையிலும் நீலமலையிலும் உள்ள குறிஞ்சிச் செடிகள், பன்னீராண்டிற் கொருமுறை பூக்கின்றன. நீலமலையிலுள்ள தொதுவர் (தோடர்), குறிஞ்சி பூக்குந் தடவை

யைக் கொண்டே தம் அகவையைக் கணக்கிட்டு வந்தனர். குமரிநாட்டுக் குறிஞ்சிநில வாணரும் இங்ஙனமே செய்திருத்தல் வேண்டும்.

ஆங்கிலேயர், இந்தியா முழுதுமுள்ள குறிஞ்சிச்செடிகளை யெல்லாம் ஆய்ந்து, குறிஞ்சி வகைகள் மொத்தம் சசு என்றும், அவை பூக்கும் காலவிடையீடு ஓராண்டு முதல் கசு ஆண்டுவரை பல்வேறு அளவுபட்டதென்றும், கண்டறிந்திருக்கின்றனர். குமரிநாட்டில் எத்தனைவகை யிருந்தனவோ அறியோம்.

முல்லை

முல்—முன்—முனை = கூர்மை, கடலிற்குள் நீண்டுசெல்லும் கூரிய நிலப் பகுதி.

முல்—முள் = க. கூர்மை. "முள்வாய்ச் சங்கம்" (சிலப். ச:எஅ). உ. கூரிய நிலைத்திணையுறுப்பு. "இளைதாக முண் மரங் கொல்க" (குறள். அஎகூ). ங. ஊசி. ச. பலாக்காய் முனை.

முள்—முளை = கூரிய முனை. "முள்ளுறழ் முளை யெயிற்று" (கலித். ச).

முல்—முல்லை = கூரிய அரும்பு வகை, அஃதுள்ள கொடி, அக்கொடி வளரும் காடு, காடும் காடு சார்ந்த இடமும். "முல்லை வைந்நுனை தோன்ற வில்லமொடு" (அகம். ச:க).

என்பதில், முல்லையரும்பை வைந்நுனை என்று அதன் கூர்மையைச் சிறப்பித்திருத்தல் காண்க. வை கூர்மை.

பாலை

பால்—பாலை = இலையிற் பாலுள்ள செடியுங்கொடியும் மரமுமான பல்வேறு நிலைத்திணை யினங்கள், அவை (முது) வேனிலில் தழைக்கும் நிலப்பகுதி, குறிஞ்சி நிலத்திற்கும் முல்லை நிலத்திற்கும் இடைப்பட்ட வறண்ட காடு, மாரியில் தழைத்தும் கோடையில் வறண்டும் இருக்கும் வன்னிலம்.

பகல் (பகுப்பு) என்னும் சொல்லின் மரூஉத் திரிபான பால் என்னும் வகைப்பெயர்க்கும், பாலை என்னும் நிலத்திணைப் பெயர்க்கும், தொடர்பில்லை.

மருதம்

மல் = வளம். "மற்றுன்று மாமலரிட்டு"
(திருக்கோ. கஎ௮).

மல்—மல்லல் = க. வளம். "மல்லல் வளனே." (தொல். எ௮௮). உ. அழகு. "மல்லற்றன் னிறமொன்றில்" (திருக்கோ. ரு௮, பேரா.). ௩. பொலிவு. (சூடா.).

மல்—மல்லை = வளம். "மல்லைப் பழனத்து" (பதினெ. ஆளுடை. திருவுலா. ௮).

மல்—(மர்)—மருது = ஆற்றங்கரையும் பொய்கைக்கரையும் போன்ற நீர்வளம் மிக்க நிலத்தில் வளரும் மரம்.

ஒ. நோ: வெல்—வில்—(விர்)—விருது = வெற்றிச் சின்னம்.
"பருதி........விருது மேற்கொண்டுலாம் வேனில்"
(கம்பரா. தாடகை. ரு).

மருது—மருதம் = பெரிய மருது, மருது, மருத மரம் வளரும் நீர்வள நிலம், வயலும் வயல் சார்ந்த இடமும், நீர்வளமும் நிலவளமும் மிக்க அகநாடு.

"அறலவிர் வார்மணல் அகலியாற் றடைகரைத்
துறையணி மருது தொகல்கொள வோங்கி"
(அகம். கூஎ).

"வயலுழை மருதின் வாங்குசினை வலக்கும்
பெருநல் யாணரின்.................................."
(புறம். ருஉ).

"பொய்கை மேய்ந்த செவ்வரி நாரை
தேங்கொண் மருதின் பூஞ்சினை முனையின்
காமரு காஞ்சி துஞ்சும்
ஏமஞ்சால் சிறப்பினிப் பணைநல் லூரே."
(ஷை ௩ருக).

"மருதுயர்ந் தோங்கிய விரிபூம் பெருந்துறை"
(ஐங். ருரு).

"கரைசேர் மருத மேவி......................" (ஷை எசு).

"திசைதிசை தேனார்க்குந் திருமருத முன்றுறை"
(கலி. உஎ).

"மருதிமிழ்ந் தோங்கிய நளியிரும் பரப்பின்
மணன்மலி பெருந்துறைத் ததைந்த காஞ்சியொடு"
(பதிற்றுப். உரு).

"வருபுனல் வையை மருதோங்கு முன்றுறை"
(சிலப். கசு:எஉ).

"...................................காவிரிப்
பலராடு பெருந்துறை மருதொடு பிணித்த"
(குறுந். உருஅ.)

இம் மேற்கோள்களிலெல்லாம், மருதமரம் ஆற்றையும் பொய்கையையும் வயலையுமே அடுத்திருந்ததாகக் கூறப்பட்டிருத்தல் காண்க.

நெய்தல்

நள்ளுதல் = க. அடைதல். "உயர்ந்தோர் தமை நள்ளி" (திருவானைக். கோச்செங். உரு). உ. செறிதல். "நள்ளிருள் யாமத்து" (சிலப். கரு:கoரு). ரு. கலத்தல், பொருந்துதல். ச. நட்புச்செய்தல். "நாடாது நட்டலின் கேடில்லை" (குறள். எகூக). நள்ளார் = பகைவர்.

நள்—நண். நண்ணுதல் = க. கிட்டுதல். "நம்பனையுந் தேவனென்று நண்ணுமது" (திருவாச. கஉ:கஎ). உ. பொருந்துதல். ரு. நட்புச்செய்தல். நண்ணுநர் = நண்பர். (பிங்.). நண்ணார் = பகைவர். "நண்ணாரும் உட்குமென் பீடு"
(குறள். கoஅஅ).

நள்—நளி. நளிதல் = க. செறிதல். "நளிந்து பலர் வழங்காச் செப்பந் துணியின்" (மலைபடு. கசுஎ). உ. ஒத்தல். "நாட நளிய நடுங்க நந்த" (தொல். கஉருஉ).

நள்—நெள்—நெய். நெய்தல்=க. தொடுத்தல். "நெய் தவை தூக்க" (பரிபா. கக:அ௦). உ. ஆடை பின்னுதல். "நெய்யு நுண்ணூல்" (சீவக. ௩௦கக). ௩. ஒட்டுதல்.

நெய்=ஒட்டும் பொருளாகிய உருக்கின வெண்ணெய் "நீர்நாண நெய்வழங்கியும்" (புறம். கசுசு:உக). உ. வெண்ணெய். "நெய்குடை தயிரி னுரையொடும்" (பரிபா. கசு:௩). ௩. எண்ணெய். "நெய்யணி மயக்கம்" (தொல். பொ. கசசு). ச. புனுகு நெய். "மையிருங் கூந்தல் நெய்யணி மறப்ப" (சிலப். ச:ருசு). ரு. தேன். "நெய்க்கண் ணிருஅல்" (கலி. சஉ). சு. அரத்தம். "நெய்யரி மற்றிய நீரெலாம்" (நீர்நிறக். ருக). எ. கொழுப்பு. "நெய்யுண்டு" (கல்லா. எக). நேயம், நட்பு. "நெய்பொதி நெஞ்சின் மன்னர்" (சீவக. ௩௦சக).

நெய்—நேய்—நேயம்=க. நெய். (பிங்.). உ. எண்ணெய். (பிங்.). ௩. அன்பு. "நேயத்ததாய் நென்னலென்னைப் புணர்ந்து' (திருக்கோ. ௩க). ச. தெய்வப் பற்று. 'நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி" (திருவாச. க:க௩).

நேயம்—நேசம்=க. அன்பு. "நேசமுடைய வடியவர்கள்" (திருவாச. கூ:ச). உ. ஆர்வம். "வரும்பொருளுணரு நேசம்" (இரகு. இரகுவு. ௩அ).

நேசம்—நேசி. நேசித்தல்=க. அன்பு வைத்தல். "நேசிக் குஞ் சிந்தை" (தாயு. உடல்பொய். ௩உ). உ. மிகவிரும்புதல்.

"நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்" (தாயு. பரிபூர. க௩).

நெய்—நெய்தல்=நீர்வற்றிய காலத்திலும் குளத்துடன் ஒட்டியிருக்கும் செடிவகை, அச்செடி வளரும் கடற்கரை நிலம், கடலும் கடல் சார்ந்த இடமும்.

"அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்—அக்குளத்திற்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவார் உறவு." (மூதுரை, கஎ)

என்பதை நோக்குக.

பண்டைக்காலத்தில், இடப்பெயர்கள் பெரும்பாலும் நிலைத் திணைச் சிறப்புப் பற்றியே ஏற்பட்டன.

எ—டு:

ஊர்ப்பெயர்—தில்லை, ஆலங்காடு, பனையூர், நெல்லூர், விராலிமலை, காஞ்சிபுரம்.

நாட்டுப்பெயர்—ஏழ்தெங்கநாடு, ஏழ்குறும்பனைநாடு.

பெருந்தீவுப்பெயர்—நாவலந்தீவு, இலவந்தீவு, தெங்கந்தீவு.

ஒவ்வொரு பெருந்தீவும் பொழில் (சோலை) என்றும் பொதுப் பெயர் பெற்றது. இதனால், உலகமும் பொழிலெனப்பட்டது.

"ஏழுடையான் பொழில்" (திருக்கோ. எ).

குறிஞ்சி முல்லை முதலிய ஐந்திணை நிலப்பெயர்களும், அவ்வந்நிலத்திற்குரிய கருப்பொருளும் தட்பவெப்பமும் பற்றிய நிலைமையையும், உரிப்பொருள் என்னும் புணர்தல் இருத்தல் முதலிய மக்கள் காதலொழுக்க வகையையும், இருமடி ஆகுபெயராய்க் குறிக்கும். இவ்வகையிலேயே,

"பாலை நின்ற பாலை நெடுவழி" (சிறுபாண். கக)
"முல்லை சான்ற முல்லையம் புறவின்" (ஷை கசுக)
"மருதஞ் சான்ற மருதத் தண்பணை" (ஷை கஅசு).

என்னும் அடிகளில், முன்னிற்கும் திணைப்பெயர்கள் அமைகின்றன. குறிஞ்சி முல்லை பாலை மருதம் நெய்தல் என்பன, பண்ணுப்பெயர்களாய் அமைவதும் இம்முறையிலேயே.

மேற்காட்டிய சிறுபாணாற்றுப்படை யடிகட்கு, "பாலைத் தன்மை நிலைபெற்றமையாற் பிறந்த பாலைநில மாகிய தொலையாத வழி;" "பாலைத் தன்மையாவது, காலையும் மாலையும் நண்பகலன்ன கடுமைகூடிச் சோலை தேம்பிக் கூவல்மாறி, நீரும் நிழலுமின்றி நிலம்பயந் துறந்து, புள்ளும் மாவும் புலம்புற்று இன்பமின்றித் துன்பம் பெறுவதொருகாலம்." என்றும்;

"கணவன் கூறிய சொற்பிழையாது இல்லிருந்து நல்லறஞ் செய்து ஆற்றியிருந்த தன்மையமைந்த முல்லைக்கொடி படர்ந்த அழகினையுடைய காட்டிடத்து" என்றும்;

"ஊடியுங் கூடியும் போகநுகருந் தன்மையமைந்த மருத நிலத்திற் குளிர்ந்த வயலிடத்து" என்றும்;

நச்சினார்க்கினியர் உரைகூறியிருத்தலைக் காண்க.

இங்ஙனமே, மதுரைக் காஞ்சியிலும், ஐந்திணை நிலப் பெயர்களும் அவற்றிற் குரிய உரிப்பொருளை ஆகுபெயராக வுணர்த்து கின்றன.

மருதஞ்சான்ற = ஊடலாகிய உரிப்பொருளமைந்த.
முல்லைசான்ற = இருத்தலாகிய உரிப்பொருளமைந்த.
குறிஞ்சிசான்ற = புணர்ச்சியாகிய உரிப்பொருளமைந்த.
பாலைசான்ற = பிரிவாகிய உரிப்பொருளமைந்த.
நெய்தல்சான்ற = இரங்கலாகிய உரிப்பொருளமைந்த.

குறிஞ்சி முதலிய ஐந்திணைப் பெயர்களும் நிலத்திணையைக் குறிக்கும்போது, மருதம் பாலை என்பன இயற்பெயரும், குறிஞ்சி முல்லை என்பன சினையாகு பெயரும், நெய்தல் என்பது தொழிலாகுபெயரும், ஆகும். ஐந்தும் முன்பு நிலத்தைக் குறித்துப் பின்பு நிலவொழுக்கத்தைக் குறிக்கும்போது, மருதம் பாலை என்பன இருமடியாகு பெயரும் ஏனைய மும்மடி யாகுபெயரும் ஆகும்.

இடத்தின் பெயர் இடவொழுக்கத்தைக் குறிப்பது, கும்ப கோணம் பண்ணிவிட்டான் என்னுங் கொச்சை வழக்குப் போன்றது.

நிலவொழுக்கத்தின் பெயரே நிலத்தைக் குறித்தது என்று சொல்வது, தோகை என்னும் பெயர் முதலிற் பெண்ணையே குறித்துப் பின்னர் மயிலுக்காயிற்று என்று சொல்வ தொத்ததே.

காதலர் இருவரின் மணவாழ்க்கை, தெய்வ ஏற்பாட்டால், ஒரோவழி பெற்றோர்க்கும் மற்றோர்க்கும் தெரியாத களவொழுக்கமாகத் தொடங்குவது முண்டு. அது இருமாதத்திற்குள் வெளிப்பட்டுவிடும். அதன் பிற்பட்ட வெளிப்படை யொழுக்கம் கற்பெனப்படும். மணவாழ்க்கை ஆயிரங் காலத்துப் பயிராத லால், தமிழர் களவொழுக்கம் ஆரியர் கூறும் அற்றைப் புணர்ச்சியான யாழோர் (கந்தருவர்) மணமன்று; நல்லாசிரி

யரிடம் கல்லாதவரும் அயல் நாட்டாரும் கருதுகின்றவாறு, இல்வாழ்க்கை யேற்படாத அநாகரிகக் காலத்துக் காமப் புணர்ச்சியு மன்று.

கற்பில் தொடங்கும் மணவாழ்க்கையே பெரும்பான்மை; களவில் தொடங்குவது மிகமிகச் சிறுபான்மை. கற்பாகத் தொடராத களவு இழிந்தோ ரொழுக்கமெனப் பழிக்கப்படுவது. இறைவன் ஏற்பாடும் இன்பமிகுதியும் களவின் சிறப் பியல்புகள்.

காதலர் வாழ்க்கை தொடக்கம் முதல் முடிவுவரை நானூறு துறைகளாக வகுக்கப்பட்டு, கோவை என்னும் நாட கமாகக் கூறப்பெறும். இது வடவர் கூறும் காமநூலன்று. இம்மை யின்ப விருப்பினர்க்கு நுகர்ச்சியால் உவர்ப்பு விளைவித் தும், உலகப் பற்றற்றவர்க்கு உவமை காட்டியும், சிற்றின்பச் செய்தி வாயிலாக மக்களைப் பேரின்பத்திற்கு வழிப்படுத்த வேண்டுமென்பதே, முதனூலாசிரியர் நோக்கம். இதை மாணிக்கவாசகர் உணர்ந்தே இறுதியில் திருச்சிற்றம்பலக் கோவை பாடினர்.

"ஆரணங்காண் என்பர் அந்தணர் யோகியர் ஆகமத்தின்
காரணங்காண் என்பர் காமுகர் காமநன் னூலதென்பர்
ஏரணங்காண் என்பர் எண்ணர் எழுத்தென்பர் இன்புலவோர்
சீரணங் காகிய சிற்றம் பலக்கோவை செப்பிடினே."

என்னும் மதிப்புரைத் தனிப்பாடலை நோக்குக.

திருவள்ளுவரும், நடவா முறை அறத்தைக் கூறுது நடை முறை யறத்தையே கூறுவதால், கண்டுகேட்டுண்டுயிர்த் துற் றறியும் ஐம்புல வின்பமும் ஒருங்கே தரும் ஒண்டொடி, அருள் நிறைந்த இறைவனால் ஆடவனுக்கு அளிக்கப்பெற்ற வாழ்க் கைத் துணையென்று கண்டு, அவளோடு கூடி அறவழியில் இன்பம் நுகர்ந்து, ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே செல்லும் வாயெல்லாம் செய்யின், இம்மைச் சிற்றின்பமும் மறுமைப் பேரின்பமும் அடையலாம் என்பதை யுணர்த்தற்கே, இன்பத்துப் பாலை இறுதியிற் கூறினர். இதை யுணராது, துற வறத்தினலேயே வீடுபேறுண்டாம் என்னும் ஆரியக்

கொள்கையை நம்பும் சிற்றறிவாளர், இன்பத்துப்பாலைப் பழிக்கவும் திருவள்ளுவரைக் கண்டிக்கவும் துணிவர்.

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ தெவன்."

என்னுங் குறளை (சசு) நோக்குக.

இனி, அகப்பொருள் போன்றே புறப்பொருளும் அரசனையே தலைமையாகக் கொண்டு, அவன் மறவாழ்க்கைக்குரிய போர்த் தொழிலை எழுதிணையாக வகுத்துக் கூறுகின்றது. அவற்றுள், வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை என்னும் நான்கும் போர் வகைகளையும், வாகை போர் வெற்றியையும், காஞ்சி போரால் விளங்கித் தோன்றும் உலகநிலையாமையையும், பாடாண் போர் வெற்றியால் ஏற்படும் புகழையும், பற்றியனவாம்.

தமிழ்ப் பொருளிலக்கணம் காதலையும் போரையுமே பற்றிக் கூறுவதால், மற்றப்பொருள்களெல்லாம் விடப்பட்டுள்ளனவென்றும், அரசனும் படைமறவருமே போர்புரிவதால் பிறர்தொழில்களை யெல்லாம் அது தழுவவில்லை யென்றும், சிலர் கருதிக் குறை கூறுவாறு, வாழ்க்கைப் போராட்டத்தில் மக்கள் மேற்கொள்ளும் எல்லாத் தொழில் வெற்றிகளும் வாகைத் திணையுள் அடக்கப் படுகின்றன. அது,

"அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபின் அரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்
மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்
நாலிரு வழக்கின் தாபதப் பக்கமும்
பாலறி மரபின் பொருநர் கண்ணும்
அனைநிலை வகையோ டாங்கெழு வகையின்
தொகைநிலை பெற்ற தென்மனார் புலவர்"

என்று தொல்காப்பியமும் (க0உக),

பார்ப்பன வாகை, வாணிகவாகை, வேளாண் வாகை, பொருநவாகை, அறிவன்வாகை, தாபத வாகை, அவைய முல்லை, கணிவன் முல்லை, மூதின்முல்லை, கிணைநிலை, என்று

வாகைப் படலத்திலும்; மல்வென்றி, உழவன்வென்றி, ஏறு கொள்வென்றி, கோழிவென்றி, தகர்வென்றி, யானைவென்றி, பூழ்வென்றி, சிவல்வென்றி, கிளிவென்றி, பூவைவென்றி, யாழ் வென்றி, சூதுவென்றி, ஆடல்வென்றி, பாடல்வென்றி என்று ஒழிபிலும், புறப்பொருள் வெண்பா மாலையும், கூறுவதால் அறியப்படும்.

சிலர், சிறப்பாக ஆரிய வழியினர், பொருளிலக்கணம் பாட்டியலே (Poetics) யன்றி வேறன்று என்று, அதன் சிறப்பை இறப்பக் குறைத்தும் மறைத்தும் கூறுவர். பிராமணனைத் தலை யாக வுயர்த்தியும் தமிழனைக் கடையாகத் தாழ்த்தியும், எழுத்து, சொல், பா, பனுவல் முதலியவற்றிற்கு நால் வகை வரணம் வகுப்பதே **பாட்டியல். பொருளிலக்கணமோ,** மாந்தன் இதுவரை அறிந்ததும் இனிமேல் அறியப்போவதுமான எல்லாப் பொருள்கட்கும் புலனெறி வழக்கப்படி இலக்கணம் வகுக்கும் இடிணையற்ற அறிவியம்.

காஞ்சித்திணையுள், இளமை நிலையாமை, செல்வநிலை யாமை, யாக்கை நிலையாமை, உடல்நல நிலையாமை ஆகிய பல்வேறு நிலையாமைகளை எடுத்துக் கூறுவதை, மக்களை நன்னெறிப் படுத்தற்கு வாய்ப்பாகக் கொள்வதும், தமிழப் பண்பாட்டுக் கூறும். மக்களெல்லாரும் இறப்பையும் வாழ்நாட் குறுக்கத்தையும் எண்ணி, சொல்லைச் சுருக் கிச் செயலைப்பெருக்கி, செந்தமிழிற் பேசி, காதல் மனையாளொடு கூடி இன்பம் நுகர்ந்து, இயன்றவரை அறஞ்செய்து, தத்தம் தொழிலில் வெற்றிபெறுமாறு மேன்மேல் திறம் மிகுத்து இறுதியில் இறைவனையடைய வேண்டுமென்பதே, முதனூலாசிரியர் நோக்கமாம்.

செய்யுள்

பண்டைப் புலவர் உரைநடை, செய்யுள் என்னும் இரு வகை நடையுள்ளும் செய்யுள் சிறந்ததென்று கண்டே, உரை களும் அகரமுதலி போன்ற உரிச்சொற்றெகுதிகளும் உட்பட, எல்லாப் பனுவல்களையும் செய்யுளில் இயற்றினர். இதையறி யாது, பண்டைப் புலவர்க்கு உரைநடையில் எழுதத் தெரியா தென்றும், உரைநடை நூலில்லாதது பண்டையிலக்கியத்திற்கு

ஒருபெருங்குறையே யென்றும், கூறுவார் "பொரிமாவை மெச்சினுனும் பொக்கைவாயன்." என்ற பழமொழிக்கே எடுத்துக் காட்டாவார்.

நால்வகைப் பாக்கட்குள், வெண்பாவும் கலிப்பாவும் போன்றவை வேறெம்மொழியினுங் காணமுடியாது. இறைவனை வழுத்துவதற்கும் காதற்செய்தியை வண்ணிப்பதற்கும், ஒத்தாழிசைக்கலிவகை போன்ற யாப்பு வேறொன்றுமில்லை.

அணி

பொருளை விளக்குவதற்கும் தெரியாத பொருளைத் தெரிவிப்பதற்கும் உவமை இன்றியமையாததாகையாலும், பெரும்பாலும் எல்லா அணிகட்கும் உவமையே மூலமாதலாலும், செய்யுளியற்றுவாரின் திறமைக்குத்தக்கவாறு இயல்பாகவே அணி அமையுமாதலாலும், காலஞ் செல்லச்செல்லப் புதிதுபுதிதாக அணிகள் தோன்றுமாதலாலும், முதனூலாசிரியர் அணிவகையில் விளக்கக் கருதியது உவமை யொன்றே.

உவமை எல்லாமொழிகளிலுங் கையாளப்படுமேனும், உள்ளுறை யென்னும் உவமைவகை தமிழுக்கே சிறப்பாக வுரியதாம். ஒரு தலைவனைத் தலைவி அல்லது தோழி விளிக்கும்போது, அவன் தன்மை புலப்படுமாறு அவன் நாட்டுக் கருப்பொருளின் செயலை எடுத்துக் கூறுவது உள்ளுறை யுவமமாம்.

"பைந்தலைய நாக பணமென்று பூகத்தின்
ஐந்தலையின் பாளைதனை யையுற்று—மந்தி
தெளியா திருக்குந் திருநாடா வுன்னை
ஒளியாது காட்டுன் னுரு." (நள. கலிநீங். எ०).

இது இருதுபன்னனின் தேரோட்டியாக வந்திருந்த நளனை நோக்கித் தமயந்தியின் தோழி கூறியது.

நளன் கார்க்கோடகன் என்னும் பாம்பினுற் கடியுண்டு நிறம் மாறியிருந்ததனுல், தெளிவாக அடையாளந் தெரியாது மயங்கி நின்ற தோழி, "உன் நாட்டுமந்தி, ஐம்பிரிவான கமுகம் பாளையைப் பார்த்து ஐந்தலை நாகமோ என்று ஐயுற்றுத் தெளியாதிருக்கின்றது" என்றது, "நானும் உன்னைப் பார்த்து

நளனோ வேறொருவரோ என்று மயங்கித் தெளியாதிருக்கின்றேன்.'' என்னும் பொருள்பட நிற்பதால், உள்ளுறை யுவமமாம்.

இசை

தலைக்கழகக் காலத்திலேயே, மிடற்றிசையும் (வாய்ப்பாட்டும்) தோல் துளை நரம்பு உறை (வ. கஞ்சம்) என்னும் நால்வகைக் கருவியிசையும், வளர்ச்சி யடைந்திருந்தன.

பண் (எ இசை), பண்ணியல் (சு இசை), திறம் (ரு இசை), திறத்திறம் (ச இசை) எனப் பண்களை நால்வகையாக வகுத்திருந்தனர்.

நரப்புக்கருவிகள் முந்தியாழ் (ஆதியாழ், பெருங்கலம், ஆயிர நரம்பு), வில்யாழ் (பல நரம்பு) பேரியாழ் (உக நரம்பு), சுறவியாழ் (மகரயாழ் கக நரம்பு), சகோட யாழ் (கச நரம்பு), முண்டக யாழ் (கூ நரம்பு), செங்கோட்டியாழ் (எ நரம்பு), சீறியாழ் (ச நரம்பு), சுரையாழ் (க நரம்பு), எனப் பலவகைய. ஆயிரம் என்றது பெருந்தொகையை. உறை யென்றது உறையினுலேயே செய்யப்பட்ட தாளக் கருவியை.

நரப்புக்கருவி இசை வளர்ச்சியின் உச்சநிலையைக்காட்டும். யாழ்த் தண்டின் கடையில் யாளித்தலையுருவம் பொருத்தப்பட்டதனுல், நரப்புக்கருவி யாழ் என்பெயர் பெற்றது. மடங்கல் (சிங்க) உடம்பும் யானைத்துதிக்கை போன்ற நீண்ட மூக்குங் கொண்ட யாளி என்னும் விலங்கினம், குமரிநாட்டிற்கே யுரியதாகும்.

யாழிசையின்பத்தில் ஆழ்ந்து இடுபட்ட அசுணம் என்னும் விலங்கும் குமரிநாட்டிற் குரியதே. அது பறவையோ என்று சிலர் ஐயுறுகின்றனர். ஆயின், அதை அசுணமா என்று சிந்தாமணி கிளந்தே கூறுகின்றது.

"இன்னளிக் குரல் கேட்ட வசுணமா" (சீவக. கசுoஉ). நற்றிணை "அசுணங் கொள்பவர் கைபோல்" (ூoச) என்று இனச்சிறப்புப் பெயரையே குறித்திருப்பினும், "இசையறி விலங்காகிய அசுணமானை" என்று, ஒரு மான்வகையாகவே நாராயணசாமி ஐயர் உரை வரைந்திருக்கின்றார். மா

னிறைச்சி எல்லாராலும் விரும்பப் படுவதாலும், மான்வேகமாய் ஓடும் விலங்கினமாதலாலும், அசுணம் ஒரு சிறந்த மான்வகை யாகவே இருந்திருக்கலாம்.

யாளிக்கும், வலிமையும் தோற்றப் பொலிவும் மட்டுமன்றி, இசையுணர்ச்சியும் இருந்திருக்கலாம்.

ஆயப்பாலை, வட்டப்பாலை, சதுரப்பாலை, திரிகோணப் பாலை என்னும் பண்திரிப்பு முறைகள், முறையே, முழுவிசை யும் அரையிசையும் காலிசையும் அரைக்காலிசையும் பற்றிய வாயின், தமிழிசைக்கு உலகில் இன்றும் இணையில்லை யென்றே சொல்லலாம்.

நாடகம்

இயற்றமிழ்க்குரிய புலனெறி வழக்கத்தில் நாடக வழக்க மும் கலந்திருப்பதனாலும், தலைக்கழகத்து இலக்கணம் மாபிண்ட மென்னும் முத்தமிழிலக்கணமாகவே வழங்கியதாலும், நாடக மும் அக்காலத்து வளர்ச்சியடைந்திருந்தமை அறியப்படும்.

இசை நாடக விரிவை யெல்லாம், இனி நான் எழுதும் '**முத்தமிழ்**' என்னும் நூலிற் கண்டுகொள்க.

கணக்கு

குமரிநாட்டு மக்கள் பழங்கற் காலத்திற் பத்து வரையும், புதுக்கற் காலத்தில் நூறு வரையும், பொற்காலத்தில் ஆயிரம் வரையும், செம்புக்காலத்திற் பத்தாயிரம் வரையும், உறைக் காலத்தில் நூறுயிரம் வரையும், இரும்புக்காலத் தொடக்கத்திற் பத்து நூறுயிரம் என்னும் கோடி வரையும், எண்ணத் தெரிந் திருத்தல் வேண்டும். அதன்பின், நெய்தல், குவளை, ஆம்பல், சங்கம், தாமரை, வெள்ளம், பரதம் முதலிய அடுக்கிய கோடிகளைக் குறிக்கும் பேரெண்கள் எழுந்தன. பரதம் என்பது, க-இன்பின் உச சுன்னங் கொண்டது.

தொடக்கத்தில் இரு கை விரல்களையும் எண்ணிப் பத்தென் னும் எண்ணைப் பெருந்தொகை யாகக் கொண்டதனாலேயே, மேற்பட்ட பிற்காலத்துப் பெருந்தொகைகளை யெல்லாம் முறையே பப்பத்து மடங்கு உயர்ந்தனவாகக் கொண்டிருக் கின்றனர்.

கோலாரிய மாந்தர் கைவிரல்களோடு கால் விரல்களையுஞ் சேர்த்து எண்ணியதனால், பேரெண்களை யெல்லாம் பப்பத்து மடங்காகக் கொள்ளாது இவ்விருபது மடங்காகக் கொண்டிருக்கின்றனர்.

ஆயின், மேலைநாடுட்பட நாகரிக நாடுகளெல்லாம் தமிழ் முறையையே பின்பற்றி வருவது கவனிக்கத்தக்கது.

கணியம்

குமரிநாட்டுக் கணிதநூல் வல்லார் கூர்ங்கண்ணராயிருந்தமையின், உள நாட்களையும் கதிரவனுந் திங்களுமல்லாத ஐங்கோள்களையும் பன்னீ ரோரைகளையும் கண்டுபிடித்தனர்.

பகலிரவால் நாளையும், வளர்பிறை தேய்பிறையால் மாதத்தையும், இருதிசை இயனத்தால் (அயனத்தால்) ஆண்டையும், அறிந்தனர்.

எழுகோள்களால் கிழமை (வாரம்) என்னும் எழுநாட் கால அளவும், பன்னீ ரோரைகளாற் பன்னிரு மாதப்பெயரும், ஏற்பட்டன.

மாதம் என்பது தென்சொல்லே. மதி = திங்கள். மதி—மாதம்—வ. மாஸ. திங்களைக் குறிக்கும் மதி என்னுஞ்சொல் வடமொழியில் இல்லை. ஒ. நோ: moon—month.

எழுநாட் கிழமை உலகமெங்கும் தொன்று தொட்டு வழங்கி வருவது, தமிழ் நாகரிகப் பரவலின் விளைவாகும். விவிலியத்தின் முதற் பொத்தக முதலதிகாரத்திற் கூறப்பட்டுள்ள படைப்பு வரலாற்றில், இறைவனுர் அறுநாள் படைத்து ஏழாம் நாள் ஓய்ந்திருந்தார் என்றது, தமிழர் வகுத்த கிழமை முறையைத் தழுவியே.

ஆரிய மொழிகளில் வழங்கிவரும் பன்னீ ரோரைப் பெயர்களும், தமிழ்ப்பெயர்களின் மொழிபெயர்ப்பே.

இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி என்னும் பெரும்பொழுது (ஆண்டின் பகுதிகள்) ஆறற்கும் எதிராக; காலை, நண்பகல், எற்பாடு (சாயுங்காலம்), மாலை, யாமம், வைகறை என்னும் சிறுபொழுது (நாளின் பகுதிகள்) ஆறும், இயற்கையாக அமைந்தன.

மதம்

தலைக்கழகக் காலத்தில், சிவ மதத்திற்கும் திருமால் மதத்திற்கும் பொதுவானதும், ஊர் பேர் குணங்குறியற்று எங்கும் நிறைந்திருக்கும் ஒரு பரம்பொருளை எங்கும் என்றும் உள்ளத்தில் தொழுவதும், ஆன கடவுள் நெறி (சித்த மதம்) என்னும் உயர்நிலை மதம், தமிழத் துறவியரால் தோற்றுவிக்கப்பட்டது.

இதன் விளத்தமும் (விவரமும்), சமயம் மதம் என்னும் இருசொல்லும் தென்சொல்லே யென்பதும், அடுத்து வெளிவரும் '**தமிழர் மதம்**' என்னும் நூலில் விரிவாக விளக்கப்பெறும்.

வடக்கே சென்று திரவிடராகத் திரிந்த குமரிநில மக்களுள் ஒருசாரார், வடமேற்குத் திசையிற் பரவி ஐரோப்பாவிற்குள் புகுந்து ஆரியராக மாறத் தொடங்கியிருத்தல் வேண்டும்.

முதற் கடல்கோள்

அக்காலத்திற் புயலாலும் பாறையாலும் கலச்சேதம் அடிக்கடி நிகழ்ந்ததால், பெருங்கடலைக் கடப்பதும் கடந்தால் மீள்வதும் அரிதாக விருந்தன. நெடியோன் என்னும் பாண்டியன் ஒருவன், கடல் கடந்து கீழ்த்திசை நாடுகட்குச் சென்று, ஏமமாக மீண்டான். கடல் தனக்கு உதவியாக இருந்த தென்று கருதி, தன் நன்றியறிவைக் காட்டும் முகமாகக் கடல் தெய்வத்திற்கு ஒரு விழாக்கொண்டாடினான். அவனையே "முந்நீர் விழவின் நெடியோன்" (புறம். கூ) என்று நெட்டிமையார் குறித்தார்.

இன்னொரு பாண்டியன், கலப்படையமைத்துக் கீழ்த் திசைத் தீவொன்றிற்குச் சென்று, தான் கடலைக் கடந்து விட்டமையால் அதை வென்று தனக்கு அடிப்படுத்தியதாகக் கருதி, அதற்கு அடையாளமாக, கடற்கரையிலுள்ள பாறையொன்றில் தன் அடிச்சுவடுகளைப் பொறித்து, அவற்றைக் கடல் தன் அலையால் என்றும் அலசிக் கழுவுமாறு செய்தான். அதனால், 'வடிம்பலம்ப நின்ற பாண்டியன்' எனப்பட்டான்.

கடலுக்கு அஞ்சின நெடியோன் வேறு; அதற்கு மிஞ்சின வடிம்பலம்ப நின்ற பாண்டியன் வேறு.

இன்னுமொரு பாண்டியன் கடன்மேற் செல்லும்போது, கடல்கொந்தளித்தது. அதைக் கடல் தலைவனின் வினையாகக் கருதி, அதை யடக்க ஒரு வேலை விட்டெறிந்தான். கொந் தளிப்பு இயற்கையாக அடங்கிற்று. ஆயின், அது வேலெறிந் ததன் வினைவென்றே அப்பாண்டியனும் அவன் உழையரும் கருதினர். பொதுமக்கள் அதனால் என்ன நேருமோ என்று அஞ்சியிருத்தல் வேண்டும். சிறிது காலத்தின்பின், அவ்வச்சத் திற் கேற்பவே, பாண்டி நாட்டின் பெரும்பகுதியைக் கடல் கொண்டது. அது கி. மு. ருooo போல் நிகழ்ந்ததாகும். அதனையே,

"அடியில் தன்னள வரசர்க் குணர்த்தி
வடிவேல் எறிந்த வான்பகை பொருது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள"

என்று (சிலப். கக:கள-உo) இளங்கோவடிகள் கூறுகின்றார்.

"முன்னொரு காலத்துத் தனது பெருமை யின தளவை அரசர்க்குக் காலான் மிதித் துணர்த்தி, வேலா னெறிந்த அந்தப் பழம்பகையினைக் கடல்பொருது, பின்னொரு காலத்து அவனது தென்றிசைக் கண்ணதாகிய பஃறுளி யாற்றுடனே, பலவாகிய பக்கமலைகளையுடைய குமரிக் கோட்டையும் கொண் டதனால், வடதிசைக் கண்ணதாகிய கங்கை யாற்றினையும் இமயமலை யினையும் கைக்கொண்டு ஆண்டு, மீண்டும் தென்றி சையை யாண்ட தென்னவன் வாழ்வானாக."

"..............................கடல் எறிந்து கொண்ட எல்லை யளவும் வடபால் தனதாக்கி, மீண்டும் தென்றிசையை யாண்டவென ஒப்பாக்கலு மொன்று: அடியாலு ணர்த்தி எறிந்த பகைபொருது கொள்ளத் தானுங்கொண்டு ஆண்ட தென்னவ னென்க"

என்று அடியார்க்கு நல்லார் இப்பகுதிக்கு வரைந்துள்ள உரையை நோக்குக.

அடியில் தன்னள வரசர்க் குணர்த்தியது வடிம்பலம்ப நின்ற பாண்டியன் செய்தி. இரரசரும் ஒரு குடியினர் என்னுங் கருத்தால், இருவர் செயலும் ஒருவர் செயலாகக் கொள்ளப் பட்டன.

தமிழிலக்கியத்திற் கூறப்பட்டுள்ள **முதற்கடல்கோள்** இதுவே. ஆப்பிரிக்காவும் ஆத்திரேலியாவும் குமரிநாட்டினின்று அறவே பிரிந்து நெடுந்தொலைவு நீங்கி விட்டன. ஆப்பிரிக்கா பிரிந்ததனால் அரபிக்கடல் தோன்றிற்று. அது வங்கக் கடலினும் முந்தித் தோன்றியதனாலேயே, வாரணன் மேற்றிசைத் தலைவனாகக் கொள்ளப்பட்டான்.

பழம்பாண்டி நாட்டின் தென்பெரும் பகுதி மூழ்கவே, தலைக்கழகமும் ஒழிந்தது.

கடல்கோள் நிகழ்ந்தவுடன், ஒரு பெருங்கூட்டத்தார் வடதிசை நோக்கிச் சென்றிருத்தல் வேண்டும். சிறுசிறு கூட்டத்தாரும் தனிப்பட்டவரும் வடமேற்கும் வடகிழக்கும் பல்வேறு நாடுகட்குச் சென்று, கடல்கோட் செய்தியைப் பரப்பியிருக்கின்றனர். பிற்காலத்தில், அந்நாடுகள் ஒவ்வொன்றிலும் கடல்கோள் அல்லது பெருமழை வெள்ளம் நிகழ்ந்ததாகக் கதை எழுந்திருக்கினறது.

அலோரசு (Alorus) என்னும் பாபிலோனிய அரசன் காலத்தில், பிலித்தியரின் (Philistines) **தாகோன்** (Dagon) தெய்வத்தைப் போல் அரை மாந்தனும் அரை மீனுமான (அதாவது, அரைக்கு (இடுப்பிற்கு) மேல் மாந்தன் வடிவமும் அதற்குக்கீழ் மீன் வடிவமுங் கொண்ட), **ஓயன்னெசு** (Oannes) என்னும் ஓர் உயிரி பாரசீகக் குடாக்கடல் (Persian Gulf) வழியாக வந்து, பாபிலோனியருக்குக் கல்வி முழுவதையும் நாகரிகக் கலைகள் யாவற்றையும் கற்பித்ததாகப் பாபிலோனிய வரலாறு கூறுகின்றது.

அவ்வோயன்னெசு, மேற்கூறிய முதற் கடல்கோட்குப்பின், பாண்டிநாட்டினின்று சென்ற ஒரு தமிழறிஞனாகவே யிருத்தல் வேண்டும். அவனுக்கு அரைமீன் வடிவங் கட்டிக்கூறியதற்கு அவன் கடல் வழியாகச் சென்றதும், பாண்டியனுக்கு மீனக் கொடியும் மீன முத்திரையும் பற்றி மீனவன் என்னும் பெயரிருந்தமையுமே, கரணியமாகும்.

தமிழக் கலவணிகர் மேல்கடற்கரை யோரமாகவே கராச்சி வழியாகச் சென்று, பாரசீகக் குடாக்கடலுள்ளும் செங்கடலுள்ளும் புகுந்து, மேலையாசியாவொடும் எகிபது நாட்டொடும்

வணிகஞ் செய்து வந்ததாகத் தெரிகின்றது. இராமச்சந்திர தீட்சிதரின் 'தமிழர் தோற்றமும் பரவலும்' என்னும் ஆங்கில நூலைப் பார்க்க.

இடைக் கழகம்

பாண்டிநாட்டின் பெரும்பகுதி மட்டுமன்றி, பஃறுளியாறும் பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடும் மூழ்கவே, பாண்டியர் குடியில் எஞ்சியிருந்தவன் தன் பேரிழப்பை யெண்ணி வருந்தி அதற்கு ஒருவாறு ஈடுசெய்து கொள்வதுபோல், வடக்கிற் சென்று பனிமலைக் குவட்டிலும் கங்கையாற்றங் கரையிலும் தன் கயல் முத்திரையைப் பொறித்து மீண்டான். அன்று அங்கு வல்லரசின்மையாலும் பெரும்பகுதி காடாயிருந்தமையாலும், சிறிதும் அவனுக்கு எதிர்ப்பில்லாது போயிற்று. அரசியல் அக்காலத்தில் விரிவடையா திருந்ததனாலும், வடநாவலப் பகுதி மிகத் தொலைவிலுள்ளமையாலும் மொழிபெயர் தேய மாகையாலும், அவன் அங்குத் தன் குடியினன் ஒருவனைத் துணையரையனாக இருத்தி விட்டுத் தென்னாட்டிற்கே மீண்டு அதை ஆண்டு வந்தான்.

> ''பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
> குமரிக்கோடுங் கொடுங்கடல் கொள்ள
> வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு
> தென்றிசை யாண்ட தென்னவன் வாழி''

என்று (சிலப். கக:கக—உஉ) இளங்கோவடிகள் கூறுதல் காண்க.

கடல்கோட்குத் தப்பிய குடிகளைக் குடியமர்த்துவதிலும், தலைநகரமைப்பதிலும், ஆட்சித்துணைவரைத் தேர்ந்தெடுப்பதிலும், படைதொகுப்பதிலும், நீண்ட காலஞ் சென்றதனால், பாண்டியனால் நேரடியாகத் தமிழ்நிலம் முழுவதுங் கவனிக்க முடியவில்லை. நாவலந்தேயப் பகுதிகளையாண்ட இருதுணையரையரும், அந்நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு இருவேந்தராகப் பிரிந்துபோயினர். கீழ்நாடு நெல்விளைவாற் சோழ நாடென்றும், மேல்நாடு மலைச்சரிவாற் சாரல் நாடென்றும், பெயர்பெற்றிருந்ததனால்; கீழைவேந்தன் சோழன் என்றும், மேலைவேந்தன் சேரன் என்றும், ஆள்குடிப்பெயர் பெற்றனர்.

சொல்=நெல். சொல்—சொன்றி=சோறு. சொல்—(சொறு)—சோறு. சொல் — (சோல்)—(சோள்)—சோழ் — சோழம்—சோழன்.

ஒ.நோ: கல்(கருமை)—கள்—காள்—காழ் = கருமை.
காழ்—காழகம் = கருமை.

கில்(தோண்டு)—கீள்—கெள்—கேள்—கேழல் = மண்ணைத் தோண்டும் ஆண்(பன்றி).

துல்(பொருந்து)—தொள்—தோள்—தோழன்.

புல்(துளை)—பொல்—பொள்—போழ் = பிளவு, துண்டு, வார்.

சோழநாடு நெல்வளமும் அதனாற் சோற்றுவளமும் மிக்கிருந்தது. முதன்முதல் இயற்கையாகவும் நெல் அங்கு மிகுதியாக விளைந்திருத்தல் வேண்டும்.

"வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து."

என்று ஔவையார் ஒருவர் பாடியிருத்தல் காண்க.

நெற்பயிர் எங்கும் மிகுதியாக விளைக்கப்படும் இக்காலத்திலும், சோழநாட்டின் கருவகமாகிய தஞ்சை மாவட்டமே தமிழகத்தின் நெற்களஞ்சியமா யிருத்தல் காண்க. இன்று இதற்குக் காவிரியாற்று வளமே அடிப்படைக் கரணியமாகும்.

சோழனுக்குக் கிள்ளி, சென்னி, வளவன் என்றும் குடிப்பெயருண்டு.

குடமலை யென்னும் மேற்குத் தொடர்ச்சி மலைக்குக் கீழ்ப்புறமாயினும் மேற்புறமாயினும், சேர்நாட்டின் பெரும்பகுதி அம்மலையின் அடிவாரச் சரிவே. மலையடிவாரம் சாரல் எனப்படும்.

"சாரல் நாட நடுநாள்" (குறுந். கக:ரு).

"சாரல் நாட செவ்வியை யாகுமதி" (ஷை கஅ:உ).

"சாரல் நாட வாரலோ எனவே" (ஷை கசக:அ).

என்பன மலைப்பக்க நாட்டைச் சாரல் நாடு எனக் கூறுதல் காண்க.

சாரல்—சேரல்—சேரலன். சேரல்—சேரன். சேரமகன்—சேரமான்.

சேரல், சேரலன், சேரன், சேரமான் என நால்வடிவிலும் சேரன்குடிப் பெயர் வழங்கும்.

"குடக்கோச் சேரல் இளங்கோ வடிகட்கு" (சிலப்.பதி:க).

"சேரலர், சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க"
(அகம். கசகூ:எ—அ).

"குலவுவேற் சேரன் கொடைத்திறங் கேட்டு"
(சிலப். உரு:சூஉ).

"பான்மை நண்பாற் சேரமான் தோழரென்று பார்பரவும்"
(பெ. பு. கழறிற்.சூசூ).

சேரனுக்கு உதியன், குடநாடன், கோதை, பொறையன், மலையன், வானவன், வானவரம்பன், வில்லவன் என்னும் குடிப்பெயர்களு முண்டு.

பாண்டியனுக்குப் போன்றே சேரசோழர்க்கும் நாற்படையும் ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும் ஐவகை யுறுதிச் சுற்றமும் அமைந்தன.

மூவேந்தர்க்கும், அரசச் சின்னம் பத்தென்றும் அரசியலுறுப்பு ஏழென்றும் கொள்ளப்பட்டன.

முகுடம் (முடி), செங்கோல், மாலை, முத்திரை, குடை, கொடி, முரசு, தேர், யானை, குதிரை என்பன பத்துவகைச் சின்னம். கொடியும் முத்திரையும் குறிவடிவில் ஒன்றேனும், பொருள் வடிவிலும் பயன்பாட்டு வகையிலும் வேறாம்.

நாடு, குடி, பொருள், படை, அரண், அமைச்சு, நட்பு என்னும் ஏழும் அரசியலுறுப்பாம். நாடில்லாமற் குடியில்லையாதலின், நாட்டைக் குடியுள் அடக்கி,

"படைகுடி கூழமைச்சு நட்பர ணாறும்
உடையான் அரசருள் ஏறு."

என்றார் திருவள்ளுவர் (குறள். ௩அக). ஆயினும், நாடும் ஓர் உறுப்பாம் என்பதை அறிவித்தற்கே, அதை எ௬-ஆம் அதிகாரத் தலைப்பாக்கினார். நாடில்லாமற் குடியில்லை; ஆயின், குடியில்லாமல் நாடுண்டு.

அரசனின் சின்னம் (அடையாளம்) வேறு; அரசனின் அரசியலுறுப்பு வேறு. அரசியலுறுப்பு ஏழும் சேர்ந்து ஓர் உடம்பும், அரசன் அதன் உயிரும், ஆகும்.

"மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்." (புறம். கஅ௬).

உறுப்புஞ் சின்னமும் ஒன்றென மயக்கி, பெயர்(நாமம்), நாடு, ஊர், ஆறு, மலை, ஊர்தி, படை, முரசு, தார், கொடி என்று **திருவாசகமும்**,

"ஆறு மலையும் யானையுங் குதிரையும்
நாடு மூரும் கொடியு முரசும்
தாருந் தேருந் தசாங்க மெனப்படும்."

என்று **திவாகர** வுரிச்சொற் றொகுதியும்,

மலை, யாறு, நாடு, ஊர், மாலை, குதிரை, யானை, கொடி, முரசு, தானை என்று **சூடாமணி** யுரிச்சொற் றொகுதியும்,

யானை, நாடு, ஊர், ஆறு, மலை, குதிரை, தேர், முரசு, தார், கொடி என்று **வெண்பாப் பாட்டியலும்**,

"மலையே யாறே நாடே யூரே
பறையே பரியே களிறே தாரே
பெயரே கொடியே என்றிவை தசாங்கம்."

என்று **பன்னிருபாட்டியலும்**,

"மலைநதி நாடூர் வனைதார் இவுளி
கொலைமத களிறு கொடிமுர சாணை
இவையே தசாங்கம் என்மனார் புலவர்."

என்று **இலக்கண விளக்கமும்**, கூறும். இவற்றின் பொருந்தாமையை எண்ணிக் காண்க.

முடிகோல் மாலை முத்திரை குடைகொடி
முரசுதேர் யானை குதிரை சின்னம்.

படைகுடி கூழமைச்சு நட்பரண் நாடோ
டுடையான் அரசருள் ஏறு.

இவை உரைச் செய்யுள் எனக் கொள்க.

முகுடம் என்பது தென்சொல்லே.

முகு—முகிள். முகிள்தல் = அரும்புதல். முகிள்—முகிழ் = அரும்பு. முகிழ்—முகிழம்—பேரரும்பு. முகிழ்—முகிழி. முகிழித் தல் = அரும்புதல். முகிள்—முகுள்—முகுளம் = பேரரும்பு, மொட்டு. முகுள்—முகுளி. முகுளித்தல் = க. அரும்புதல். உ. குவி தல். "முகுளிக்கும்........அரவிந்த நூறுயிரம்" (தண்டி. சூஉ).

முகுளம்—முகுடம் = குவிந்த அரசர் மணிமுடி. "முகுடமும் பெருஞ்சேனையும்" (பாரத. குரு. கச).

முகுடம்—வ. முகுட்ட.

முகுடம்—மகுடம் = மணிமுடி. "அரக்கன்றன் மகுடம்" (கம்பரா. முதற்போ. உசசு).

மகுடம்—வ. மகுட்ட.

பரோ தம் 'சமற்கிருத மொழி'யில் (Sanskrit Language) 'முகுடம்' தென்சொல்லே யென்று காட்டியிருப்பதைக் காண்க. (பக். ௩அரு).

நாட்டுத் தட்டல்லாத சிறந்த குலக்குதிரைகள் புரவி, பாடலம், கோடகம், இவுளி, வன்னி, குதிரை, பரி, கந்துகம், கனவட்டம், கோரம் முதலிய பலவகைகளாக வகுக்கப்பட்டி ருந்தன. அவற்றுள், பாண்டியன் குதிரை கனவட்டம்; சோழன் குதிரை கோரம்; சேரன் குதிரை பாடலம்; சிற்றரசர் குதிரை கந்துகம்.

திசைபற்றிப் பாண்டிய நாடு தென்புலம் என்றும், சோழ நாடு குணபுலம் என்றும், சேரநாடு குடபுலம் என்றும், சொல் லப்பட்டன. பாண்டியனுக்குத் தென்னன் அல்லது தென்ன வன் என்னும் பெயரும் எழுந்தது. முந்நாடும், தனித்தனி நாடென்றும் ஒருங்கே தமிழகம் என்றும் பெயர்பெற்றன.

கடல் கோட்குப்பின் எஞ்சியிருந்த பழம்பாண்டி நாட்டுப் பகுதியின் ஊடு, குமரி என்னும் பேரியாறு ஓடிற்று.'

''தெனுஅ துருகெழு குமரி'' (புறம். சு:உ)
என்பதனுல் அதன் பெருமையும் வேகமும் அறியப்படும்.

''வார ணுசியோர் மறையோம் பாளன்
ஆரண வுவாத்தி அபஞ்சிகன் என்போன்
பார்ப்பனி சாலி காப்புக்கடை கழிந்து
கொண்டோற் பிழைத்த தண்டமஞ்சித்
தென்றிசைக் குமரி யாடிய வருவோள்''

என்பதனுல் (மணி. கரு:ந—எ), பண்டைநாளில், வடநாட்டிற் கங்கையாற்றின் கரையில் வாழ்ந்தோரும், தம் தீவினை போக்க வந்து நீராடுமாறு, குமரியாறு ஒரு சிறந்த திருநீர்நிலையாக விருந்ததை யறியலாம்.

பாண்டியன் தன் தலைநகரைக் குமரியாற்றின் கயவாயில் அமைத்ததாகத் தெரிகின்றது. கயவாய் என்பது ஆறு கடலொடு கலக்குமிடம்.

''கடன்மண் டழுவத்துக் கயவாய் கடுப்ப''
(மலைபடு. ருஉஅ).

பாண்டியன் தலைநகர் கடல்வழியாக வருவோர்க்கு வாயில் போல் இருந்தமையால், **கதவம்** அல்லது **கதவபுரம்** என்று பெயர்பெற்றிருக்கலாம்.

கடத்தல் கடந்துசெல்லுதல். கட—கடை = வாயில். கட—கடவு = கடந்து செல்லும் வழி. கடவு—கதவு = வாயில், வாயிலடைப்பு. ஒ. நோ: door = door—shutter, entrance. கதவு—கதவம் = பெருங்கதவு.

கதவம்—வ. கவாட—கபாட (மூறைமாற்றுப் போலி).
வடமொழியில் இச்சொற்கு மூலம் இல்லை.

''குமரிமலை, கடல்கொண்ட நாட்டில் எவ்வாறு அமைந்திருந்தது என்று ஆயுமிடத்து, அந்நாட்டின் பகுதிகளை நன்கறிந்து **காட்டு எலியட்டு** (Scott Elliot) எழுதியுள்ள 'மறைந்த குமரிக்கண்டம்' என்னும் ஆங்கில நூலுட்போந்த படத்தினுலே, ஒரு பெரு மலையானது மேலைக்கடலில் தொடங்கி.......................

மடகாசுக்கர் (Madagascar) என்ற ஆப்பிரிக்கத் தீவுவரை சென்றதாகத் தெரிகின்றது..................இம்மலையைத் தமிழிற் **குமரி** யென்றும் வடமொழியில் **மகேந்திரம்** என்றும், முன்னோர் கூறினரென்பதற்குக் காரண முண்டு. **சிவதருமோத்தரம்** என்னுஞ் சைவவுபாகமத்தில், **பொதியிற்**குத் தென்பால் **மகேந்திர** முண்டென்றும், அந்நூலுரையுள் தெற்குமுதல் வடக்கு இருக அஃது இருந்ததென்றும், கூறப்பட்டுள்ளது. ,அதனடிவாரத்துள்ள தேசம் பொன்மயமான **இலங்கை** யென்றும் குறிக்கப்படுகின்றது.'' என்று, பேரா. கா. சுப்பிரமணியப்பிள்ளை சை. சி. நூ. ப. கழகப்பதிப்பான தொல்காப்பிய எழுத்ததிகார நச்சினார்க்கினியத்திற்குத் தாம் வரைந்துள்ள ஆராய்ச்சி முன்னுரையிற் கூறியுள்ளார்.

> ''உன்னதத்தென் மயேந்திரமே யுயர்மலையஞ் சையகிரி
> வின்னவிலுஞ் சுத்திகமே யிருக்குமுயர் விந்தியமே
> பன்னுபுகழ் மிகுபாரி யாத்திரமே யெனப்பகர்ந்த
> இன்னகிரி யேழுமுதற் குமரிதலத் திசைந்தனவே.''

> ''அங்கமெதிர் நிரனிறையாற் சமாக்கியமு மணிமலையுஞ்
> சங்கமுந்தண் குமுதமுநல் வராகமெனுந் தலந்தானுந்
> துங்கமலி பொதித்தென்பாற் றொடர்ந்தவடி வாரத்தின்
> அங்கனக விலங்கையுமேழ் வரைச்சார லடித்தேசம்.''
> (சிவதருமோத்தரம், கோபுரவியல், ௭௭, ௭அ).

இச்செய்யுட்களினின்று, இடைக்கழகக் காலத்தில், குமரிமுனைக்குத் தெற்கில் பழைய குமரிமலைத் தொடரின் பகுதியாகவோ தனியாகவோ ஒருமலையிருந்ததென்றும், அதினின்றே குமரியாறு தோன்றிக் கிழக்கு நோக்கி யோடியதென்றும், இலங்கை இந்தியாவொடு இணைந்திருந்ததென்றும், குமரியாறும் பொருநையாறும் இலங்கை யூடும் ஓடியிருக்கலாமென்றும், பாண்டிநாடு குமரிமுனையினின்று ௫00 கல் தொலைவு தெற்கே நீண்டிருந்திருக்கலாமென்றும், உய்த்துணரப்படும்.

சோழனுக்கு உறையூரும், சேரனுக்குத் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கருவூரும், தலைநகராயிருந்தன. பாண்டியன் தலைநகர், ஆட்சிக்கும் நீர்வாணிகத்திற்கும் ஒருங்கே பயன்பட்டது. நெல்லை மதுரை முகவை மாவட்டங்களின் மேல் பகுதியும் கொங்குநாடும் வேம்பாய் (Bombay) மாநிலத்தின் மேல்பாகமும் சேர நாடாயிருந்தன.

கதவபுரம் கட்டியமைக்கப்பட்டுப் பல்லாண்டு சென்றபின், **இரண்டாம் கழகம்** அமைக்கப்பட்டது. அதன் உறுப்பினர் ஐம்பத்தொன்பதின்மர் என்றும், அவருள்ளிட்டுப் பாடினுர் மூவாயிரத்தெழுநூற்றுவர் என்றும், அக்கழகத்தை நடத்தி வந்த பாண்டியர் **வெண்டேர்ச்செழியன்** முதல் **மூடத்திருமாறன்** இருக ஐம்பத்தொன்பதின்மர் என்றும், அவருட் பாவரங்கேறிஞர் ஐவர் என்றும், கழகம் இருந்த கால நீட்சி மூவாயிரத்தெழுநூற்ருண்டு என்றும், இறையனுரகப் பொருளுரை கூறுகின்றது. தலைக்கழக வரலாற்றிற் போன்றே, இதன் வரலாற்றிலும் பல செய்திகள் தள்ளத்தக்கன. கழகமிருந்தது மட்டும் உண்மையான செய்தியாகும். இடைக்கழக நூல்நிலையத்தில் இருந்த நூல்கள் எண்ணுயிரத்தெச்சம் என்று, ஒரு செவிமரபுச் செய்தி வழங்கி வருகின்றது. செந்தமிழ்ப் பாண்டி நாட்டின் மாபெரும் பகுதியைக் கடல் கொண்டுவிட்டதனுல், தலைக்கழகத்தில் ருசகூ-ஆக இருந்த புலவர் தொகை ருகூ-ஆகக் குன்றிற்று.

மூவேந்தரும் ஒரே குடியினரும் ஒரே மொழியினருமாதலால், தம்முட் பெண்கொண்டுங் கொடுத்தும் இயன்றவரை ஒற்றுமையைப் பேணி வந்தனர். ஆயினும், ஒரோவொரு சமையத்து, பழவிறல்தாயத்தோடமையாது புதுவிறல் தாயத்தை நச்சிய பேராசைப் பெருவலிவேந்தன், ஏனை வேந்தனெருவனெடு பொருது அவன் நாட்டைக் கைப்பற்றுவதற்குத் தோற்றுவாயாக, தன்நாட்டுப் பாலைநில மறவரையேவி அவன் நாட்டு முல்லை நிலத்து ஆநிரைகளைக் கவர்ந்து வரச்செய்து, அவனைப் போருக்குத் தூண்டுவதும் நேர்ந்தது. இதை,

> "வெட்சி தானே குறிஞ்சியது புறனே
> உட்குவரத் தோன்றும் இரேழ் துறைத்தே"
> (தொல். கOOஉ).

> "வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
> ஆதந் தோம்பல் மேவற் ருகும்." (ஷ கOOங).

> "வஞ்சி தானே முல்லையது புறனே." (ஷ கOOஎ).

"எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென் றடல்குறித் தன்றே."
(ஷை ௧௦௦அ)

என்பவற்றால் அறியலாம்.

ஒரு வேந்தன் இன்னொரு வேந்தனுக்குப் பெண் கொடுக்க மறுத்த போதும், ஒரு வேந்தன் கொடுங்கோலாட்சி செய்யின் ஒரு செங்கோல் வேந்தன் அவனைத் திருத்தும்போதும், போர் நிகழும். ஆயின், அன்று நிரை கவர்தலும் நிரை மீட்டலு மின்றி நேரடியாகப் போர் தொடுக்கப்படும்.

பாலைநிலத் தலைவர், வேந்தரால் ஏவப்படும்போது மட்டு மன்றி, வலிமையற்ற வேந்தர் ஆளும்போதும், அடுத்துள்ள முல்லைநிலத்து ஆநிரைகளைக் கவர்வது வழக்கம்.

இங்ஙனம் ஒருபுறம் பாலை மறவரால் நிரை கவரப்பட்டும், மற்றொருபுறம் கோநாய் புலி முதலிய காட்டுவிலங்குகளால் மந்தை யாடுமாடுகள் அடிக்கப்பட்டும், இடர்ப்பட்டு வந்த இடையர், தற்காப்பு வினையிலும் தடுப்பு வினையிலும் தொடர்ந்து இடுபட்டதனால், நாளடைவில் குறிஞ்சிநிலக் குறவர்க்கும் பாலை நில மறவர்க்கும் எள்ளளவும் இளைக்காத காளையரும் ஆளியரும் ஆயினர். ஆயினும், பாலைநிலத்தார்போல் வலியப் போர்க்குச் சென்றதில்லை. ஆயின், வந்த போரை விட்டதில்லை. ஆயர் போல் ஆய்ச்சியரும் மறமிகுந்து பாலைநிலத்திற்கும் சென்று ஆனைந்து விற்றனர்.

பாலைநிலத்தார்போற் சூறையாடலையும் போர்புரிதலையும் வாழ்க்கைத் தொழிலாகக் கொள்ளாது, ஆடவர் ஆடுமாடெ ருமையாகிய முந்நிரைகளை மேய்த்தும், வானவாரிப் பயிர்களை விளைத்தும்; பெண்டிர் பால் தயிர் மோர் வெண்ணெய் நெய் யாகிய ஆனைந்தைக் குறிஞ்சி பாலை மருதம் ஆகிய முந்நிலத்தும் விற்றும்; அமைதியாக வாழ்க்கை நடத்திவந்த ஆயர், தம் மறத்தைக் குன்றாமற் காத்தற்கும் தம் உடல் வலிமையை மேன் மேல் வளர்த்தற்கும், **ஏறுதழுவல்** என்னும் பெண்கோடல் முறையை ஏற்படுத்தினர்.

ஆயர் குலத்தில் வினைவல பாங்கரல்லாத உயர் குடியிற் பிறந்த ஒவ்வொரு பெண்ணிற்கும், பிறந்தவுடன் அவ்வப் பெண்ணின் பெயரால் ஒவ்வொரு சேங்கன்று ஒதுக்கப் பெற்

றது. அக்கன்றுகளை, வேலையிற் பழக்காதும் விதையடிக்காதும் சிறந்த ஊட்டங் கொடுத்து வளர்த்து வந்தனர். அவை கொழுத்துப் பருத்து, காளைப் பருவத்தில், கடைந்தெடுத்த கருங்காலித் தூண்கள் போன்ற கால்களுடனும், உருண்டு திரண்ட உடலுடனும், மதர்த்துச் சிவந்த கண்களுடனும், கண்டார் அஞ்சும் கடுந்தோற்றத்தை அடைந்தன. ஆண்டு தோறும், பூப்படைந்து மணத்திற்கேற்ற கன்னியர்க்குரிய காளை களையெல்லாம், கொம்பு திருத்திக் கூராக்கி, ஒரு குறித்த நன்னாளில், அழகாகச் சுவடிக்கப்பட்ட ஒரு தொழுவத்திற்குள் அடைத்து, ஒவ்வொரு குமரியையும் மணக்க விரும்பும் ஆயர் குலக் குமரர் அவ்வக் குமரிக்குரிய காளையைத் தனிப்படப் பிடித்தடக்கி நிறுத்துமாறு, அவற்றைத் திறந்து விட்டனர். அவை இருமருங்குங் கூடி நிற்கும் பெருங்கூட்டத்தைக் கண்டும், அக்கூட்டத்தாரின் ஆரவாரத்தொடு கூடிய பல்லியப் பேரோசையைக் கேட்டும், மருண்டு மிரண்டு, கூற்றுவன் தூதர்போற் கொடிய பார்வையுடன், வாலை முறுக்கியும் காலைக் கிளப்பியும் உடலை வளைத்தும் கழுத்தைத் திரித்தும், குளம்பு பட்ட விடமெல்லாம் தீப்பறக்கக் குதித்தோடியபோது, ஏறுதழுவுங் குமரர் பலர் எதிர் நின்று கொம்பைப் பற்றியும், அள்ளையிற் பாய்ந்து கழுத்தைத் தழுவியும், பின்சென்று காலை வாரியும், பிறவாறும், தாம் குறித்த காளையை அடக்கிநிறுத்த இயன்றவரை முயன்றனர். சிலர் கண்ட அளவில் அஞ்சி நின்று விட்டனர். சிலர் மறு விழாவிற்குக் கடத்தி வைத்தனர். சிலர் சிறு புண்ணொடு திரும்பினர். சிலர் விழுப்புண்பட்டனர். சிலர் குடல் சரிந்து அங்கேயே மாண்டனர். சிலர் வென்றனர். வென்றவர் தம் விலைமதிப்பில்லாப் பரிசைப் பெற்று வின்பந் துய்த்தனர்.

கடல்கோளின் பின், கடல்கோளச்சத்தாலும் மக்கட் பெருக்கின் விளைவாகவும், பெருங்கூட்டத்தார் வடநாவலஞ் சென்று, குடியமர்ந்தனர். அங்குத் தம் தாய்நாட்டை நினைவு கூர்தற்கு, தொழுநை யாற்றங் கரையடுத்து ஒரு நகரமைத்து அதற்கு மதுரை என்று பெயரிட்டனர். அது தென்வாரியில் முழுகிப் போன பஃறுளி மதுரையை நோக்கி, தமிழரால் வட மதுரை எனப்பட்டது. அதனால், பஃறுளி மதுரையும் வட மதுரை நோக்கித் தென்மதுரையெனப்பட்டது. ஆகவே, 'வட' 'தென்' என்பன உறவியல் அடைகளே என அறிக.

மது என்னும் ஓர் அரசன் பெயரால் அவன் தலைநகர் மதுபுரி எனப்பட்டதென்றும், அது பின்னர் மதுரை—மத்ரா

என்று திரிந்ததென்றும், கூறுவது பொருந்தாது.

"மாயனை மன்னும் வடமதுரை மைந்தனை"
(திவ். திருப்பா. ரு)

என்று ஆண்டாள் தென்மதுரையொடு ஒப்புநோக்கியே பாடுதல் காண்க.

பாண்டியன் கடல்கோட்குப்பின் பனிமலை சென்று அதன் மேற் கயற்பொறி பொறித்து, கங்கையாற்றங்கரை நகரில் தன் உறவினனைத் துணையரையனாக அமர்த்திவிட்டு வந்தது போன்றே, சோழனும் தான் வேந்தனானபின் பனிமலைமேற் புலிப்பொறி பொறித்து, கங்கைநாட்டை ஆளுமாறு ஒரு படிநிகராளியை அமர்த்தி விட்டு வந்தான். இங்ஙனம், பாண்டியர் குடியான திங்கள் மரபும் சோழர் குடியான கதிரவன் மரபும் வடநாட்டில் நிறுவப்பெற்றன.

வடநாடு மொழிபெயர் தேய மாயினும், தமிழரும் அங்குக் குடியிருந்ததனாலும், திரிமொழியாளர்க்கும் தமிழ் ஓரளவு விளங்கியதனாலும், கற்றூர் அனைவர்க்கும் தமிழே இலக்கிய மொழியாயிருந்தமையாலும், சேர சோழ பாண்டியம் போலும் வல்லரசு அங்கின்மையாலும், சில்லாயிரம் ஆண்டுகள் தமிழரசு அங்குச் செவ்வன் நடைபெற்றது.

தலைக்கழகத்திற் போன்றே, இடைக்கழகத்திலும் முந்நாட்டையுஞ் சேர்ந்த தமிழகத் தலைமைப் புலவரெல்லாரும் கலந்திருந்து, முதுநூலாய்ந்தும் புதுநூலியற்றியும் வந்தனர்.

பாண்டிய நாட்டின் பெரும்பகுதியை ஏற்கெனவே கடல் கொண்டதனாலும், கதவபுரம் கடல் வாயிலிருந்ததனாலும், ஆழ் கடலிற் செல்லும் நாவாயும் வங்கமும் போன்ற பெருங்கலங்கள் தமிழகத்திற் புணர்க்கப்பட்டதனாலும், பாண்டியன் முன்விழிப்பாயிருந்து, மறுகடல்கோள் நேரின் குடும்பத்தொடு தப்புமாறு, ஒரு பெருங் கலத்தை என்றும் அணியமாய் வைத்திருந்திருத்தல் வேண்டும்.

இரண்டாம் கடல்கோள்

தமிழிலக்கியத்திற் குறிக்கப்பட்டுள்ள இரண்டாம் கடல் கோள், தோரா. கி. மு. உருயய-இல் நிகழ்ந்திருத்தல் வேண்டும். அக்கடல்கோளால், நாகநாடு என்று சொல்லப்படும்

கீழ்த்திசை நிலப்பகுதி, ஏறத்தாழ கஉ00 கல் தொலைவு பரப்புள்ளது மூழ்கிப்போயிற்று. அதுவே,

"தீங்கனி நாவ லோங்குமித் தீவிடை
யின்றேழ் நாளி லிருநில மாக்கள்
நின்றுநடுக் கெய்த நீணில வேந்தே
பூமிநடுக் குறூஉம் போழ்தத் திந்நகர்
நாகநன் னாட்டு நானூறி யோசனை
வியன்பா தலத்து வீழ்ந்துகே டெய்தும்"

என்று மணிமேகலையில் (கூ:கஎ—உஉ), முன்னறிவிப்புப்போற் கூறப்பட்ட பின்னறிவிப்புச் செய்தி.

கதவபுரமும் குமரியாற்றிற்குத் தென்பால் நிலமும் மூழ்கிப்போயின. இலங்கை இந்தியாவினின்றும் பிரிந்துவிட்டது. வங்கக்குடாக்கடல், புதிதாகத் தோன்றியதனால், தொல்கதை (புராண)முறையில் சகரரொடு தொடர்புபடுத்தித் தொடுகடல் எனப்பட்டது. தொடுதல் தோண்டுதல்.

"வடாஅது பனிபடு நெடுவரை வடக்குந்
தெனாஅ துருகெழு குமரியின் தெற்குங்
குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்குங்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்"

என்று (புறம்.சூ), காரிகிழார் பாடுதல் காண்க. "உருகெழு குமரி" என்பதற்கு, "உட்குந் திறம் பொருந்திய கன்னியாறு" என்றே பழைய உரையாசிரியர் கூறுவதையும் நோக்குக.

குமரியாறிருக்கவும் அதன் கயவாயிலிருந்த கதவபுரம் மூழ்கியதூ, காவிரியாறிருக்கவும் அதன் கயவாயிலிருந்த காவிரிப் பூம்பட்டினம் மூழ்கியது போலாம்.

கோவலன் காலத்திலேயே வங்கக்கடல் இருந்ததனால்தான் அவன் மாமன் மாநாய்கன் (மாநாவிகன்) நீர்வாணிகத் தலைவனாயிருக்கவும், சாதுவன் கலத்திற் சென்று கீழைத்தீவுகளுடன் வாணிகஞ் செய்யவும், இயன்றது.

கீழ்த்திசை நாட்டார் நாக வணக்கமும் நாகமுத்திரையுங் கொண்டிருந்ததனால், நாகர் எனப்பட்டார். அவர்நாடு நாக

நாடு எனப்பட்டது. அவருள் நாகரிகரும் அநாகரிகருமாக இரு சார் மாந்தரும் இருந்தனர்.

"கீழ்நில மருங்கின் நாகநா டாளும்
இருவர் மன்னவர்" (மணி. கூ:ருரு)

என்றும்,

"நாக நாடு நடுக்கின் ருள்பவன்
வாகை வேலோன் வளைவணன்" (ஷ உச:ருச—ரு)

என்றும், குறிக்கப்பட்டவர் நாகரிக மக்கள்.

"நக்க சாரணர் நாகர்" என்றும் (மணி. கசு:கரு)

"நக்க சாரணர் நயமிலர் தோன்றி
....
ஊனுடை யிவ்வுடம் புணவென் றெழுப்பலும்"

என்றும் (ஷ ஷ ருசு—ருகூ), குறிக்கப்பட்டவர் நரவூனுண்ணிகளான விலங்காண்டி மாக்கள்.

வங்கக் கடல் தோன்றுமுன் அங்கிருந்த நிலப்பரப்பில் வாழ்ந்த மாந்தர், கீழைக்கரை நெடுகலும் குடியேறியதனுல், அவர் சேர்ந்த ஊர்கள் நாகர்கோவில், நாகூர், நாகபட்டினம், நாகபுரி எனப்பெயர்பெற்றன.

"அங்கமெதிர்" என்னுஞ் சிவதருமோத்தரச் செய்யுளின் (கோபுர. சஅ) சிறப்புரையில் "கனகமயமான இலங்கை யென்னுந் தேசம், இரத்னபூமியுடன் கூடியைஞ்ஞூறு யோசனே சமுத்திரத்துக்குட் புகுந்திருக்குமென்க." என்னுங் குறிப்பும்,

"சேண்டொடர் சிமையத் தெய்வ மகேந்திரத்
தும்பர்ச் சென்ருன்" (மகேந். உரு).

"கீண்டது வேலை நன்னீர் கீழுறக் கிடந்த நாகர்
வேண்டியவ் வுலக மெங்கும் வெளிப்பட மணிகள் மின்ன"
(கடல்தாவு. உக)

என்னும் கம்பராமாயண அடிகளும், இங்குக் கவனிக்கத்தக்கன. ஆரியத் தொல்கதை மயக்கினுல், இடைக்காலப் பெரும் புலவரும், நாகர் என்னும் மாந்தரினத்தாரைப் பாம்பினமாகக் கருதி விட்டனர். கீழ்நாடு என்பதையும் கிழக்கு நாடென்று கொள்ளாது, நிலத்திற்கும் நீருக்கும் கீழுள்ள நாடென்று கொண்டுவிட்டனர்.

கடல்கோள் நிகழ்ந்தவுடன், பாண்டியன் முன்னரே தான் அணியமாக வைத்திருந்த பெருங்கலத்திலேறி வெள்ளத்தைக் கடந்து, கொற்கைத்துறைப் பக்கம் வந்து சேர்ந்திருத்தல் வேண்டும். அதன்பின், கடல்கோட்குத் தப்பிய தன் குடிகள் வாழ்தற்கு, சோழ நாட்டிலும் சேர நாட்டிலும் தென்கோடிப் பகுதிகளை வென்று கொடுத்தான் என்பது,

> ''மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
> மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
> புலியொடு வின்னீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
> வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்.''

என்னும் முல்லைக் கலித் (க0ச) தரவால் அறியக் கிடக்கின்றது. ''மேவார் நாடு'', ''வலியினான் வணக்கிய'' என்னுங் குறிப்புக்களால், சேர சோழர் நிலந்தர இணங்காமையும் பாண்டியன் பொருது வென்றதும், அறியப்படும்.

''அடியிற் றன்னளவு....................தென்னவன் வாழி'' என்னும் சிலப்பதிகாரப் பகுதியுரையில், ''அங்ஙனமாகிய நிலக்குறைக்குச் சோழநாட்டெல்லையிலே முத்தூர்க் கூற்றமும் சேரமானாட்டுக் குண்டூர்க் கூற்றமு மென்னு மிவற்றை, இழந்த நாட்டிற்காக வாண்ட தென்னவன் வாழ்வானாக வென்றவாறு.'' என்று அடியார்க்கு நல்லார் வரைந்திருப்பது, இரண்டாம் கடல்கோட்குப் பிற்பட்ட செய்தியையே குறிக்கும்.

முதற் கடல்கோட்குப்பின் நிகழ்ந்தது போன்றே, இரண்டாம் கடல்கோட்குப் பின்னும், தென்னாட்டு மக்கள் வடதிசையும் வடநாட்டு மக்கள் வடமேலைத் திசையும் பரவிச் சென்றனர். கடல்கோட் செய்தி பாபிலோனையும் எட்டிற்று.

முதற் கடல்கோள் மாபேரளவினதா யிருந்து ஞாலத்தின் மேற்புறத்தைப் பலவிடத்தும் மிக மாற்றியிருப்பினும், அது மிகப் பழங் காலத்ததாதலின், அது பற்றிய செய்தி பிறநாட்டு வரலாறுகளில் இடம் பெறவில்லை. ஆயின், இரண்டாம் கடல்கோட் செய்தி, முதற்கண் பாபிலோனிய நாட்டிலும் பின்னர் யூதேயாவிலும் அதன்பின் பிறநாடுகளிலும் பரவி, அவ்வந் நாட்டுச் செய்தியாக நிலைத்து விட்டது. பாபிலோனியாவில், கி.மு.உ000 ஆண்டுகட்கு முன்பே, கடல்கோள் போன்ற ஒரு தொடர்மழை வெள்ளக் கதை வழங்கி வந்திருக்கின்றது. அதையே யூதர் கொண்டு கூறியதாகத் தெரிகின்றது.

தென் கல்தேயத் தலைநகராகிய **ஊர்** என்னும் பாபிலோனிய நாட்டுப் பேரூரில், **ஆபிரகாம்** கி. மு. கஅகஅசு-இல் பிறந்தான். அவன் மரபில் வந்த மோசே (கி. மு. கருஎக—கசருக), எழுதினதாகச் சொல்லப்படும் திருப்பொத்தகம் (Bible), படைப்பியல் (Genesis) எ-ஆம் அதிகாரத்தில் உள்ள வெள்ளக் கதை, பாபிலோனியக் கதைக்கு ஏறத்தாழ ருOO ஆண்டு பிற்பட்டது.

வெள்ளக்கதை வழங்கும் நாடுகளிலெல்லாம், கலத்தின் வாயிலாகக் கடல்கோட்குத் தப்பிய பாண்டியன் போல் ஒவ்வொருவன் சொல்லப்படுகின்றான். கல்தேயர் (பாபிலோனிய) நாட்டில் **சிசுத்துரசு** (Xisuthrus) அல்லது **அசிசு அதரா** (Hasis adra); யூத நாட்டில் **நோவா** (Nova); கிரேக்க நாட்டில் ஒசீசெசு (Ogyges) அல்லது **தியூக்கேலியன்** (Deucalion); சீன நாட்டில் போகி (Fohi). பிற்காலத்தில் வேத ஆரியர் இந்தியாவிற்கு வந்தபின் ஓரளவு உண்மையறிந்ததனால், **சத்தியவிரதன்** என்னும் **திராவிட பதி** என்றனர்.

பல்வேறு நாடுகளிற் கடல்கோட்கு அல்லது வெள்ளத்திற்குக் குறிக்கப்பட்ட காலம்:—

நாடு	**காலம்**
பாபிலோனியா	தோரா. கி. மு. ௩OOO-இற்குச் சற்று முன்பு.
யூதேயா (Bible)	,, உ௩சஅ
இலங்கை	,, உ௩அஎ
தமிழகம்	தோரா. ,, உருOO

ஓயன்னெசு போன்றே, பலர் கிழக்கினின்று பாரசீகக் குடாக் கடல் வழியாகப் பின்னர் இடையிட்டிடையிட்டு வந்ததாக, பாபிலோனியச் செங்கற் பட்டையங்கள் கூறுகின்றன.

திருப்பொத்தகம் (Bible), படைப்பியல் (Genesis), சு-ஆம் அதிகாரம் முதலிரு திருமொழிகள், "மாந்தர் ஞாலத்தின்மேற் பெருகத் தொடங்கி, அவர்கட்கு மகளிர் பிறந்தபோது, தேவ குமரர் மாந்தர் மகளிரை மிக அழகுள்ளவரென்று கண்டு, அவர்களுள் தமக்குப் பெண்களைத் தெரிந்து கொண்டார்கள்." என்றிருப்பது, குமரிநாட்டினின்று நாகரிக வளர்ச்சியில்லா

நிலையில் மேனுடு சென்ற மாந்தர் வழியினர், நாளடைவில் வெள்ளையராகி, பிற்காலத்தில் அங்குச் சென்ற நாகரிக மாந்தரின் மகளிரை மணந்து கொண்டனர் என்பதையே, குறிக்கும்.

அதே அதிகாரம் ச-ஆம் திருமொழியில், "அக்காலத்தில் அரக்கர் ஞாலத்தி லிருந்தனர் என்பது, ஆப்பிரிக்க மாந்தர் அக்காலத்திலும் கருத்தும் பருத்தும் இருந்ததையே காட்டும்.

இனி, எ-ஆம் அ-ஆம் அதிகாரங்களில் வெள்ளச் செய்தியையும், கூ-ஆம் க0-ஆம் அதிகாரங்களில் நோவாவின் மரபுப் பெருக்கத்தையும், கூறியபின், கக-ஆம் அதிகாரம் உ-ஆம் திருமொழி, "மக்கள் கிழக்கே யிருந்து வழிநடந்து வருகையில், சினெயார் நாட்டிற் சமநிலத்தைக் கண்டு, அங்கே குடியிருந்தனர்." என்றிருப்பது, கடல்கோட்குப்பின், நாவலந் தேயத்தினின்று ஒரு கூட்டத்தார் நில வழியாக மேலையாசியா சென்று தங்கினர் என்பதையே, தெரிவிக்கும்.

கடல்கோளச்சத்தினுல் மட்டுமன்றி, வாணிகஞ் செய்தற்கும், தமிழர் பலர் வடக்கே சென்று கங்கை நாட்டிற் குடியேறினர்.

குறிஞ்சித் தெய்வமாகிய சேயோன் வணக்கத்தினின்றே சிவநெறி திரிந்ததனுல், சிவனுக்கும் மலையகமே சிறந்த இருக்கையாகக் கொள்ளப்பட்டது. பனிமலை கடலடியினின் றெழுந்த பின்பும், குமரிமலையின் பெருமை குன்ருதிருந்ததனுல், அஃதிருந்தவரை பாண்டியன் பெருமிதத்தோ டிருந்தான். அஃது மூழ்கியபின், அவன் தன் நாட்டின் சிறுமையையும் தாழ்வையும் நீக்குவதற்காக மட்டுமன்றி, தன் குடி தொன்று தொட்டு வழிபட்டுவந்த சிவனுக்கு ஒரு தகுந்த இருக்கை யமைக்கவுமே, பனிமலையைக் கைக்கொண்டான். அம்மலையின் மேற்பகுதி வெண்பனிக்கட்டி மூடி என்றும் வெண்ணிறமாய்த் தோன்றுவதால், வெள்ளிமலை யெனப்பட்டது. அதன் கொடுமுடியே சிவனிருக்கையாகவும் மண்ணுலகப் பேரின்ப நிலையமாகவும், சிவநெறியாரால் கருதப் பெற்றது. பாண்டியர் பன்முறை பனிமலைமேற் கயற்பொறி பொறித்தது, வேத்தியல் மட்டுமன்றித் தேவியல் தொடர்புங் கொண்டதாகும். இக்காலத் தமிழகச் சிவமடங்களும் வெள்ளிமலைத் தொடர்பு கூறுதல் காண்க.

சிவனடியார்க்குச் சிறந்த அக்கமணி (உருத்திராக்கம்), பனிமலை யடிவாரத்துள்ள நேபாள நாட்டிலேயே தொன்று தொட்டு விளைகின்றது. பஃறுளியாறு மூழ்கிய பின் கங்கையாறே நாவலந்தேயப் பேரியாறான தனாலும், வெள்ளிமலையைத் தன் குடுமியாகக் கொண்ட பனிமலையினின்று அது தோன்றி வருவதாலும், சிவநெறியார்க்கு அதுவே தலைசிறந்த திருநீர் நிலையாயிற்று. இதனால், சமயப்பற்றுள்ள தமிழர் பலர், சிறப்பாகப் பெருஞ்செல்வர், கங்கை நாட்டிற் குடியேறினர். அதன் விளைவாகத் திருக்கேதாரம் வாரணாசி (காசி) முதலிய சிவநகர்கள் வடநாட்டில் தோன்றின.

காவிரிப் புதல்வர் என்பதுபோல், தமிழக வேளாளருட் சிலர் தம்மைக் கங்கை குலத்தார் என்று சொல்லிக் கொண்டனர். கங்கையம்மன் என்னும் நாட்டுப்புறத் தெய்வமும் தோன்றிற்று.

சிவநெறியார்க்கு நேபாளத்தினின்று அக்கமணி வருவது போன்றே, அரசர்க்கும் தெய்வப் படிமைகட்கும் வீச வெண் கவரியும், கூந்தலில்லாப் பெண்டிர் கொண்டை முடிக்கக் கருங் கவரியும், பனிமலை யடிவாரத்தினின்றும் திபேத்தினின்றும் வந்திருக்கின்றன.

"நரந்தை நறும்புல் மேய்ந்த கவரி
குவளைப் பைஞ்சுனை பருகி யயல
தகரத் தண்ணிழற் பிணையொடு வதியும்
வடதிசை யதுவே வான்றோ யிமயம்" (புறம். கருஉ)

என்பதனால், கவரிமயிர் தரும் எருமை பனிமலை யடிவாரத்திற் புல்மேய்ந்ததைத் தமிழர் கண்ணாரக் கண்டமை அறியப்படும்.

"கவரி முச்சிக் கார்விரி கூந்தல்
ஊசல் மேவற் சேயிழை மகளிர்" (பதிற். சரு:க—உ)

என்பது, பண்டைக்காலப் பெண்டிரும் கவரிமுடி யணிந்ததைத் தெரிவிக்கும்.

கவரிமா என்னும் எருமைக்குக் கியாக்கு (gyāk) என்பது திபேத்தில் வழங்கும் பெயர். ஆங்கிலத்தில் அது யாக்கு (yak) என்றும், தமிழில் ஆகு என்றும் திரியும்.

"ஆகு கவரி சீகரம் சவரி." (பிங். அ:கடரு).

இதில், ஆகு என்பது முதலாகுபெயராக முடியைக் குறித்தது.

கவரிமா ஒருவகை எருமையாதலால், கல்லாடர் தமிழ் நாட்டு எருமையையும் கவரி என்று குறித்துவிட்டார்.

"படிந்துசே ெட்றியுஞ் செங்கட் கவரியும்"
(கல்லா. ருங:ஙo).

இதைப் பிங்கலமும் "காரான் மகிடம் கவரி காரா" என்று பின்பற்றி விட்டது.

வணிகர் மட்டுமன்றி, அடியாரும் புலவரும் அரசரும் படை மறவரும் அடிக்கடி வடநாடு சென்று வந்ததனல், அந்நாட்டு இயற்கையமைப்பும் அரசியலும் மக்கள் வாழ்க்கை முறையும் சிறப்பு நிகழ்ச்சிகளும், தமிழர்க்குத் தெரிந்து இலக்கியத்திலும் குறிக்கப்பட்டன.

கங்கை சிந்தாறுகளும், **சோணை, வாரணை, அசி, தொழுனை** முதலிய கங்கைக் கிளைகளும் பண்டைத் தமிழ்ப் புலவர்க்குத் தெரிந்திருந்தன.

கங்கை நாட்டில் முதற்கண் குமரிநாட்டினின்று சென்ற தமிழரே குடியிருந்தமையால், ஊர்ப்பெயர்கள் பெரும்பாலும் **ஊர், நகர், புரம், புரி** எனத் தமிழ்ப்பேறே பெற்றன. முதலிற் புரம் என்பது கோபுரமுள்ள நகரையும் புரி என்பது கோட்டையுள்ள நகரையுங் குறித்து, பின்னர்ப் பொது வீறுகளாயின. புரம் = உயர்வு, உயர்ந்த கட்டிடம். புரி = வளைவு, வளைந்த (சூழ்ந்த) கோட்டை. பாதிரிபுரம் என்பது பிற்காலத்திற் பாடலிபுர எனத் திரிந்தது. காளிவணக்கங் கொண்ட தமிழர் சிலர், வங்கத்திற் குடியேறிக் கங்கைக் கரையிற் காளி கோவிலுடன் அமைத்த நகரே **காளிக்கோட்டம்**. காளி (பாலைநிலத்) தமிழ்த் தெய்வம். காளி கோட்டம் என்னும் இரண்டும் தூய தென்சொல். காளிக் கோட்டம் என்பது, இன்று ஆங்கிலச்சொல் வழியாகக் கல்கத்தா எனத் திரிந்துள்ளது. கங்கைக் கயவாய் அடுத்துத் 'தம்லுக்' அல்லது 'தமுல்க்' என்னும் பெயர் கொண்டுள்ள துறைநகர்ப் பெயர், தமிழகம் என்னும் சொல்லின் திரிபாயிருக்கலாம்.

'தமலித்தி' என்று பாலிமொழியிலும், 'தம்ரலிப்தி' என்று சமற்கிருதத்திலும் வழங்கும் இடப்பெயர், தமிழ்நத்தி அல்லது தமிழுலாத்தி என்பது போன்ற தென்சொல்லின் திரிபாயிருக்கலாம்.

வேம்பாய் (Bombay) மாநிலப் பகுதி முழுதும் பதினெண் குடி வேளிர் பரவியிருந்ததனால், **வேளகம்** எனப்பட்டது.

கண்ணன் ஆண்ட குச்சரநாட்டு மேற்பகுதியின் தலைநகர்ப் பெயரான துவாரகை என்னும் சொல், **துவரை** என்னும் தமிழ்ச்சொல்லின் திரிபே. எருமை (மைசூர்) நாட்டுத் **துவரை** நகரில் கி. பி. உ-ஆம் நூற்றாண்டு ஆண்டுகொண்டிருந்த இருங்கோவேள், தன் ஆள்குடியின் சகூ-ஆம் தலைமுறையினன் என்று சொல்லப்படுவதால், அவன் குடி முதல்வன் கண்ணன் காலத்தவனாகவே யிருந்திருத்தல் வேண்டும். அது கி. மு. க000.

"செம்புபுனைந் தியற்றிய சேணெடும் புரிசை
உவரா வீகைத் துவரை யாண்டு
நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே......................." (புறம். உகூக)

என்று இருங்கோவேள் கபிலரால் விளிக்கப் பெற்றமையையும், அவன் வேள் என்று பெயர் பெற்றிருந்தமையையும் நோக்குக.

ஒட்டர (Orissa) நாட்டுத் தலைநகரின் பெயரான **கடகம்** (Cuttack) என்னும் சொல், கோட்டை மதிலைக் குறிக்கும் தூய தென்சொல்லே. மதிலாற் சூழப்பட்டதனால் அந்நகர் கடகம் எனப் பெயர் பெற்றது.

இன்று தெலுங்கு நாட்டுப் பகுதிகளாக விருக்கும் **நெல்லூர் குண்டூர்** மாவட்டங்கள், முன்னர்த் தமிழ்நிலமா யிருந்ததை, அவற்றின் பெயர்களே தெரிவிக்கும். நெல்லூர் மாவட்டத்தூடு ஓடும் **வடபெண்ணை**யாறு, தமிழ் நாட்டுத் தென்பெண்ணை யாற்றுடன் ஒப்புநோக்கி யிடப்பெற்ற பெயர் கொண்டதென்பது, சொல்லாமலே அறியப்படும்.

கருநாடகம் (கன்னடம்), துளு, குடகம் முதலிய நாடுகள் கடைக்கழகக் காலத்திலும் தமிழ்நிலங்களாகவே யிருந்தமை, பின்னர் விளக்கப்படும்.

பாண்டியன் வெற்றிச் செயல்

"வானியைந்த விருமுந்நீர்ப்
பேஎ நிலைஇய விரும்பௌவத்துக்
கொடும்புணரி விலங்குபோழக்
கடுங்காலொடு கரைசேர
நெடுங்கொடிமிசை யிதையெடுத்
தின்னிசைய முரசமுழங்கப்
பொன்மலிந்த விழுப்பண்ட
நாடார நன்கிழிதரும்
ஆடியற் பெருநாவாய்
மழைமுற்றிய மலைபுரையத்
துறைமுற்றிய துளங்கிருக்கைத்
தெண்கடற் குண்டகழிச்
சீர்சான்ற வுயர்நெல்லின்
ஊர்கொண்ட வுயர்கொற்றவ" (மதுரைக். எரு-அஅ)

என்று, மாங்குடி மருதனார் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனை, அவன் முன்னோருள் ஒருவன் செய்த வெற்றிச் செயலை அவன்மேலேற்றிக்கூறி விளித்தார். அவ்வெற்றிச் செயல், கடல்கடந்து சென்று, சாவகம் என்னும் **சாலித் தீவைக்** கைப்பற்றிய தாகும்.

சாலி என்பது செந்நெல் என்று பொருள்படும் தென்சொல். பிற்காலத்திற் பாண்டியனொடு சென்ற பிராமணப் பூசகன் ஒருவன், சாலி என்பது ஒரு தவசப் பெயராயிருத்தலால், அதை வடமொழியில் யவ என்று மொழிபெயர்த்தான். அது பின்னர் ஜவ—ஜாவ எனத் திரிந்து தமிழிற் சாவகம் என்னும் வடிவு கொண்டது. சாலித்தீவின் தலைநகர் சாலியூர்.

சாலித்தீவைப் பாண்டியன் கைப்பற்றியபின், தமிழர் அங்குச் சென்று குடியேறினர். அதனால், அத்தீவின் பல பிரிவுப் பெயர்கள் இன்றும் **பாண்டியன், மதியன், புகார், பாண்டிய வாசம், மலையன்கோ, கந்தளி, செம்பூட்சேய்** என்று, தமிழ்ப்பெயர்களே கொண்டு விளங்குகின்றன என்றும்; **மீனன் காப்பு** என்னு மிடத்துள்ள மலையர், தம் முன்னோர் இந்தியாவினின்று வந்ததாகக் கூறுகின்றனர் என்றும்; **கெரினி** (Gerini) என்னும் ஆசிரியர்,

அங்கு வழங்கும் மலையன் கோலன் (Maleon Kolan) என்னுங் குடிப்பெயரை, மலையர் சோழர் என்னும் தமிழரசர் குடிப் பெயர்களுடன் இணைத்துக் காட்டுகின்றனர் என்றும்; திரு விசயம் (ஸ்ரீ விஜய) என்னும் அரையத் தலைவனுக்குச் சுறவக் கொடியும் திருமாற விசயோத்துங்கன் (ஸ்ரீ மாற விஜயோத்துங் கன்) என்னும் பெயரும் உண்டென்றும்; **ரா. ராகவையங்கார்** தாம் எழுதியுள்ள **தமிழ் வரலாறு** என்னும் நூலிற் கூறியுள் ளார். (பக். ௩௩அ-௯).

மீனன் மீனவன்; அதாவது மீனக்கொடி யுடைய பாண்டி யன். மீனன் காப்பு என்பது பாண்டியன் காவலுள்ள இடம் என்று பொருள்படும்.

தமிழர் படிப்படியாகப் பக்கத்துத் தீவுகளிலும் நிலங்களி லும் பரவினதாகத் தெரிகின்றது. சாலிக்கு வடகிழக்கில் ஒரு சிறு தீவு **மதுரா** என்றும், வடமேற்கில் ஒரு பெருந்தீவு **சுமதுரா** (Sumatra) என்றும், வடக்கில் ஒரு மாபெருந் தீவு **பொருநையோ** (Borneo) என்றும், சுமதுராவிற்கு வடக்கிலுள்ள தீவக்குறை **மலையா** (Malaya) என்றும், பெயர் பெற்றுள்ளன.

பொருநை (தாம்பரபரணி) என்பது பாண்டி நாட்டு ஆற் றுப் பெயர். மலையம் என்பது பொதியமலைப் பெயர். சுமதுரா என்பதன் முன்னொட்டும் சிங்கபுரம் (Singapore) என்னும் தீவுப் பெயரும், ஆரியச் சார்பால் ஏற்பட்டனவாகும். புரம் என்னும் இறு தமிழ்.

சோழர் வெற்றிச் செயல்கள்

"நளியிரு முந்நீர் நாவா யோட்டி
வளிதொழி லாண்ட வுரவோன் மருக" (புறம். ௬௬)

என்று, சோழன் கரிகாற்பெருவளத்தானை வெண்ணிக்குயத் தியார் பாடியிருப்பதால், அவன் முன்னோருள் ஒருவன் ஆழ் கடல் கடந்து மீண்டமை அறியப்படும். வளிதொழிலாள்வ தென்பது, பருவக்காற்றறிந்து அதன் வாக்கிற் கலஞ்செலுத் துதல்.

ஒரு பருந்தினால் துரத்தப்பட்ட புறு, செம்பியன் என்னும் சோழன் காலடியில் வீழ்ந்தது. அவன் அதைக் காத்தற்கும்

பருந்தின் பசியைத் தீர்த்தற்கும், தன் உடம்பினின்று அப் புருவளவு தசையறுத்துப் பருந்திற் கிட்டான். இச்செய்தி பின்னர்த் தொல்கதை முறையில் விரிவாக்கப்பட்டது.

"நிலமிசை வாழ்ந ரலமரல் தீரத்
தெறுகதிர்க் கனலி வெம்மை தாங்கிக்
காலுண வாகச் சுடரொடு கொட்கும்
அவிர்சடை முனிவரு மருளக் கொடுஞ்சிறைக்
கூருகிர்ப் பருந்தின் ஏறுகுறித் தொரீஇத்
தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
தபுதி யஞ்சிச் சீரை புக்க
வரையா வீகை யுரவோன் மருக." (புறம். சுஙு)

என்று செம்பியன் வழிவந்த சோழன் நலங்கிள்ளி தம்பி மாவளத்தான் விளிக்கப்பட்டமை காண்க. செம்பியன் பெயர் அவனுக்குப் பிற்பட்ட சோழர்க்கு ஒரு குடிப்பெயராயிற்று.

அக்காலத்தில் இலங்கையில் அரக்கர் என்றும் இயக்கர் என்றும் இருவகுப்பார் இருந்திருக்கின்றனர். அவர் மாயக்கலையில் வல்லவராயிருந்ததனுல், பிற்காலத்தில், ஆரியத் தொல்கதைஞர், அவரை வானியங்கும் அல்லது மக்களினத்திற்கு அப்பாற்பட்ட பதினெண் கணத்தாருள் இரு கணத்தாராகக் கொண்டனர் போலும்! அரக்கர் அரசன் இராவண்ணன். அவன் தலைநகர் இலங்கை. இயக்கர் அரசன் பிங்கலன் (குபேரன்). அவன் தலைநகர் அளகை. அவன் மாபெருஞ் செல்வன். சங்கம் தாமரை என்னும் பேரெண்களின் அளவுகொண்ட இரு பொக்கசம் (நிதி) இட்டி வைத்திருந்ததாகச் சொல்லப்படுகின்றுன். இரு என்னும் சொல்லிற்குப் பெரு என்றும் இரண்டு என்றும் பொருளுண்டு. அச்சொல் நிதி என்னும் வடசொல்லைத் தழுவும்போது, இடையில் மகரமெய் தோன்றுதாதலால், இருபொருட்கும் பொதுவாக நிற்கும். அதனுல், இருவேறு பொக்கசம் என்று தொல்கதைஞர் கொண்டிருக்கலாம். உண்மையில் இருவேறு பொக்கசமாயின், ஒன்று மூலபண்டாரமாகவும் இன்னென்று வழங்கும் பண்டாரமாகவும் இருந்திருத்தல் வேண்டும்.

அரக்கருக்கும் இயக்கருக்கும் நெடுநாட் பகையிருந்து வந்தது. இறுதியில் மூண்ட கடும்போரில், இயக்கர் குலம்

வேரறுக்கப்பட்டது. பிங்கலன் தப்பிப் பனிமலைக்கு ஓடிப்போய் விட்டான். பிற்காலத்தில் ஓர் இயக்கி (இயக்கப் பெண்) தமிழகத்தில் நாட்டுப்புறத் தெய்வமும் ஆனாள்.

"புறஞ்சிறை மூதூர்ப் பூங்கண் இயக்கிக்குப்
பான்மடை கொடுத்துப் பண்பிற் பெயர்வோள்
ஆயர் முதுமகள் மாதரி யென்போள்"
(சிலப். ககசா—ககஅ)

என்று இளங்கோவடிகள் கூறுதல் காண்க.

இலங்கை, தொன்று தொட்டு, மருமம் மிக்க அருங்கட்டட வினைகட்குச் சிறந்ததா யிருந்து வந்திருக்கின்றது.

மாந்தை (மாதோட்டம்) என்னு மிடத்தில், இரும்பினாற் செய்த 'காந்தமலை' என்னும் காந்தக் கோட்டை யிருந்ததாக வும், அக்கோட்டை யிலுள்ளார் அண்மையிற் செல்லும் கப்பல் களையெல்லாம் காந்தத்தா லிழுத்துக் கொள்ளையடித்ததாகவும், **மாந்தைப்பள்ளு, விசுவபுராணம், விசுவகர்ம நாடகம்** என்னும் பனுவல்களிற் சொல்லப்பட்டுள்ளது.

"சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த"
(சிலப். ஆய்ச். படர்க். க)

என்பதனால், ஆரெயில் முழுமுத லரணம் ஒன்று அங்கிருந்த தாகத் தெரிகின்றது.

அசுரர் என்று தொல்கதைஞர் கூறும் இலங்கை அரக்கர், அந்தரத்தில் தொங்குமாறு மூன்று அரணான கோட்டைகளை அமைத்து இருந்திருக்கின்றனர். அவற்றை ஒரு சோழன் அழித்து, 'தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன்' என்னும் விருதுப் பெயர் பெற்றான்.

"ஒன்னா ருட்குந் துன்னருங் கடுந்திறல்
தூங்கெயி லெறிந்தநின் னூங்கணோர்" (புறம்:நகூ)

என்பது செம்பியன் செயலை அவன் பின்னோர்மேல் ஏற்றிக் கூறுகின்றது.

"தூங்கெயில் மூன்றெறிந்த சோழன்காண் அம்மானை"
(சிலப். உகூ:கஅ "வீங்குநீர்") என்பதும் அதுவே.

"ஒன்னூர், ஓங்கெயிற் கதவம் உருமுச்சுவல் சொறியும்
தூங்கெயி லெறிந்த தொடிவிளங்கு தடக்கை
நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பியன்"

என்பது சிறுபாணாற்றுப்படை. (எகூ—அஉ).

சேரன் அருஞ்செயல்

கரும்பு முதலில் நியூகினியாவில் இயற்கையாக விளைந்த தென்றும், பின்னர்ச் சீனத்திற்கும் அதன்பின் பிறநாடுகட்கும் கொண்டுபோகப்பட்ட தென்றும், பிரித்தானியக் கலைக்களஞ்சியம் கூறுகின்றது. சாலி (சாவகம்) நியூகினியாப் பக்கத்திலிருப்பதால், சீனத்திற்குமுன் சாலிக்குக் கரும்பு சென்றிருக்கும் என்பதை உய்த்துணரலாம்.

விண்ணுலகத்திற்கு மாகம் என்பது ஒரு பெயர்.

"மாகந்தொட நனிநிவந்த கொடி" (ஞானா. உச:கரு). மாகம் என்பது நாகம் எனத் திரியும்.

"நாகநீள் நகரொடு நாகநா டதனொடு" (சிலப். க:உக). என்பதில், நாகநீள்நகர் என்பது தேவருலகைக் குறித்தல் காண்க. ஆகவே, நாகநாடென்பது மேலையுலகத்திற்கும் கீழை நாடுகட்கும் பொதுப் பெயராம்.

சாலி நாட்டரசர்க்கு இந்திரன் என்னும் பட்டம் இருந்தது. வெள்ளையானை கீழைநாடுகளுள் ஒன்றாகிய கடாரத்தில் (பர்மாவில்) வாழ்ந்தது. இந்திரன் யானை வெள்ளையானையென்றும், அதன் பெயர் ஐராவதம் என்றும் தொல்கதை கூறும். கடாரத்தில் வெள்ளையானை இருந்ததால், அங்கு ஓடும் ஆறு ஐராவதி எனப்பட்டது.

விண்ணுலகப் பெயரும் தேவர் கோன் பெயரும் வெள்ளை யானையும் கீழைநாட்டிற்கு இசைந்ததால், எண்டிசைத்தலைவருள் ஒருவனாகிய தேவர்கோனுக்குக் கீழைத்திசை குறிக்கப் பட்டது.

சேரருள் ஒருவன், இந்திரன் என்னும் பட்டங்கொண்டவன் ஆண்ட நாடாகிய சாலியினின்று, தமிழகத்திற்குக் கரும்பைக் கொண்டுவந்து பயிராக்கினான். அதனால், அவன் மரபில் வந்த **அதிகமான் நெடுமான் அஞ்சியை,**

"அமரர்ப் பேணியும் ஆவுதி யருத்தியும்
அரும்பெறல் மரபின் கரும்பிவட் டந்து
நீரக விருக்கை யாழி சூட்டிய
தொன்னிலை மரபினின் முன்னோர் போல
....
வழுவின் றெய்தியும் அமையாய்" (புறம். கூகூ)

என்றும், அவன் மகன் பொகுட்டெழினியை,

"அந்தரத்—தரும்பெற லமிழ்தம் அன்ன
கரும்பிவட் டந்தோன் பெரும்பிறங் கடையே"
(ஷ ௩௯௨)

என்றும், பாடினர் ஔவையார்.

இங்ஙனம், நிலவணிகரும் நீர்வணிகரும் மூவேந்தரும், ஞாலத்தின் பலவிடங்கட்கும் சென்று, ஆங்காங்குள்ள அரும் பொருள்களையெல்லாம் கொணர்ந்து, தமிழகத்தையும் தமிழர் வாழ்க்கையையும் வளம்படுத்தினர்.

சீனத்தினின்று கற்பூரம் கற்கண்டு சீனக்காரம் முதலியனவும், சாலியினின்று கரும்பு கராம்பூ திப்பிலி (பண்டகி), முதலியனவும், மொலுக்காசினின்று அட்டிகமும் (சாதிக்காயும்), இந்தோனேசியாவென்னும் கீழிந்தியத் தீவுக்கணத்தினின்று கொடியீந்து என்னும் சவ்வரிசியும், மலையாவினின்று பாக்கு என்னும் அடைக்காயும், இலங்கையினின்று கருவாப்பட்டையும், ஆபுகானித்தானம் என்னும் காந்தாரத்தினின்று பெருங்காயமும், அரபியாவினின்று அடப்பம் (வாதுமை), கொடிமுந்திரி, சுராலை (சாம்பிராணி) முதலியனவும், மேலையாசியாவினின்று கசகசா அத்திரி (கோவேறு கழுதை) முதலியனவும், சின்ன ஆசியாவினின்று கொத்துமல்லி, சீரகம், பெருஞ்சீரகம், கொங்காரப் பூ (குங்குமப் பூ) முதலியனவும், மெகசிக்கோவினின்று மிளகாயும், அமெரிக்காவினின்று வள்ளியென்றும் சருக்கரைவள்ளியென்றும் சொல்லப்படும் சீனிக்கிழங்கும், பிறவிடங்களினின்று பிறவும், வந்து சேர்ந்தன.

கி. மு. கரு00 போல் ஆரியர் இந்தியாவிற்கு வரும்வரை, தமிழ் மொழியும் தமிழிலக்கியமும் தமிழ நாகரிகமும், தமிழர் வாழ்க்கையும், இம்மியும் ஆரியங் கலவாது முழுத்தூய நிலையில் இருந்து வந்தன.

II. கலவுநிலைக் காண்டம்

ஆரியர் இந்தியாவிற்குட் புகவு

(தோரா. கி. மு. 1500)

மேனாடுகளுள் முதற்கண் நாகரிக மடைந்தவை சுமேரியா வும் எகிபதும் ஆகும்.

சுமேரியர் கொளுவுநிலை (Agglutinative) மொழி பேசிய துரேனிய அல்லது சித்திய இனத்தார். பிற்காலத்திற் சேமிய வகுப்பார் சுமேரியாவைக் கைப்பற்றினர். சுமேரிய நாகரிக வழிப்பட்டது பாபிலோனிய நாகரிகம். இரண்டிற்கும் உரிய நாடு மெசொப்பொத்தாமியா. அது தைகிரிசு ஐப்பிராத்து என்னும் ஈராறுகட் கிடையில், கீழைத்துருக்கி நீங்கலாக, உள்ள நாடாகும். இன்று கிடைத்துள்ள முதற்பழஞ் சுமேரிய வெட்டெழுத்தின் காலம் கி. மு. ௩௧௦௦. சுமேரிய மொழி கி. மு. ௨௦௦௦ வரை ஆட்சி மொழியாயிருந்தது. அதன்பின், பாபிலோனிய அக்கேடிய (Akkadian) மொழி அதன் இடத் தைக் கொண்டது.

தென் பாபிலோனிய அல்லது தென் கல்தேயத் (Chaldean) தலைநகரான ஊர் என்னும் நகர் இருந்த இடத்து அகழ்வில், கி. மு. ௩௦௦௦ ஆண்டிற்கு முற்பட்ட சேரநாட்டுத் தேக்கு உத் தரம் எடுக்கப்பட்டுள்ளது. நிலாத் தெய்வத்திற்கு அங்கொரு கோவிலும் இருந்ததாகச் சொல்லப்படுகின்றது. பாண்டியர் திங்களைத் தம் குடிமுதலாகக் கொண்டிருந்ததனால், முதற் காலத்தில் அதைத் தெய்வமாகவும் வணங்கியிருத்தல் வேண் டும். பொதுமக்களும் அதை வணங்கியதைப் 'பிறை தொழு கென்றல்' என்னும் அகப்பொருட் டுறையால் அறியலாம். பூம்புகாரில் ஒரு நிலாக் கோவில் இருந்தது.

"நிக்கந்தக் கோட்டம் நிலாக்கோட்டம் புக்கெங்கும்"

(சிலப். ௯:௧௩).

பாபிலோனியர் கைக்கொண்ட பிற தமிழப் பழக்கவழக்கங்களை, 'தமிழர் தோற்றமும் பரவலும்' என்னும் (ஆங்கில) நூலிற் காண்க.

எகிபதிய அரசாட்சி, ௩௧ ஆள் குடிகள் (dynasties) தொடர்ந்து, தோரா. கி.மு. ௩௪௦௦- இலிருந்து தோரா. கி.மு. ௩௩௫ வரை இருந்து வந்தது. அதன்பின், கி. மு. ௩௩௨-இல்,

மக்கதோனியப் பேரரசனுன **மா அலெகசாந்தர்** எகிபதுவைக் கைப்பற்றினன். தொன்மையில், எகிபதுவும் சுமேரியாவும் ஏறத்தாழச் சமமாகும்.

ஆப்பிரிக்காவின் தென்பாகத்தினின்றும் மேலையாசியாவி னின்றும் அடுத்தடுத்துச் சென்ற மக்கட்கூட்டத்தாரே, நீலாற் றின் பள்ளத்தாக்கிலுள்ள சதுப்புநிலங்களை யடுத்த தாழ்நிலங் களை, நாலாயிரம் ஆண்டாக மெள்ள மெள்ளத் திருத்திக் குடி யிருந்தனர் என்று, எகிபது நாட்டு வரலாறு கூறுகின்றது. அந்நாட்டிற்கும் இந்தியாவிற்கும் தொன்றுதொட்டு வணிகத் தொடர்பிருந்ததாக, வரலாற்று ஆராய்ச்சியாளர் கூறுகின் றனர்.

“ஆசியாவினின்று, கடல் வழியாக, முதற் குடியேற்றக் கூட்டத்தார் கி. மு. ௩000-இற்குப் பிற்படாது கிரேக்க நாட்டிற் குச் சென்றபோதே, மெசொப்பொத்தாமியாவில் **ஊர்** நாகரிகம் முழுவளர்ச்சி யடைந்திருந்தது. அவர்கள், செப்பறைத் தீவி லும் (Cyprus) கிரேத்தாத் தீவிலும் (Crete) சில சைக்கிலேடு களிலும் (Cyclades), கிரேக்கத் தீவக்குறையில் மேற்குப் பாகத்தைவிட வெப்பமாகவும் காய்ந்துமிருந்த கிழக்குப் பாகத் திலும், குடியேறினர்கள். அன்று அவர்கள் பயிர்த்தொழிலிலும் கடற்செலவிலும் முல்லை வாழ்க்கையிலும் பயின்றிருந்தனர். ஆயினும், அன்றும் அவர்கள் புதுக் கற்கால நிலையிலேயே யிருந் தனர். ஏனெனின், அவர்கள் கருவிகள் கல்லாலும் பெரும்பாலும் மெலோசுத் (Melos) தீவிற் கிடைத்த புட்டிக்கண்ணுடி போன்ற எரிமலை யுறைகூழாலுமே (Obsidian) செய்யப்பட்டிருந்தன. தோரா. கி. மு. உசுOO ஆன கிரேக்க உறைக்காலத் தொடக் கத்தில் (சில ஆசிரியர் உறைக்காலத்தைச் செம்புக்கால மென் றும் சரியான உறைக் காலமென்றும் பிரித்து, அதன் தொடக் கத்தைத் தோரா. கி. மு. உகூOO என்று முந்திய தாக்குவர்.), செம்பைப் பயன்படுத்தத் தெரிந்த வேறு சில கூட்டத்தாரும் சென்று, முன்பு சிதறலாகக் குடியிருந்தவரொடு கூடிக்கொண் டனர். அவர்களும் ஆசியாவினின்று சென்றவர்களாகவும், தங்கட்கு முந்தினவரின் இனத்தைச் சேர்ந்தவர்களாகவும், பெரும்பாலும் இருந்திருக்கலாம்.” (பிரித்தானியக் கலைக்களஞ் சியம் (கக௯௦), க௦, பக். எகூ௦).

“மெசொப்பத்தாமியாவிலும் எகிபதுவிலும் நாகரிக மாந் தரால் செய்யப்பட்ட திருந்திய கலைகளும் தொழில்களும், ஐரோப்பாவில் முதற்கண் கிரேத்தரத் தீவின் **மினோவரா லும்**

(Minoans) கிரேக்க நாட்டு **மைசீனியராலும்** (Mycenaeans) உறைக்காலத்தில் தழுவப்பட்டு வளர்க்கப்பட்டன.''
—பிரித்தானியக் கலைக்களஞ்சியம் (கக௯௦) பக், எஅ௯.

கிரேக்கரின் நகர நாட்டுக் காலத்தில் (கி.மு. சருஅ-ச௦ச), அரசியல் மதியியல் (அகக்கரணவியல்) குமுகாயவியல் புத்தெழுச்சி யுண்டாயிற்று. கிரேக்க நாகரிகம், கி. மு. அ-ஆம் நூற்றாண்டிலிருந்து நண்ணிலக் கடற்கரை யையரோப்பிய நாடுகட்கும் கருங்கடற்கரை நாடுகட்குங் கொண்டு செல்லப்பட்டது. கிரேக்கராலும் மக்கதோனியராலும் (Macedonians) கி. மு. ச-ஆம் நூற்றாண்டில் ஒரு பேரரசு ஏற்படுத்தப்பட்டது. மக்கதோனிய அரசனான மா அலெகசாந்தர் (Alexander the Great–கி. மு. ங௩சு–ங௨ங), சிந்துவெளிவரை அப்பேரரசை விரிவுபடுத்தினன். கி. மு. ரு-ஆம் நூற்றாண்டில் உரோமப் பேரரசு கிரேக்கப் பேரரசை வீழ்த்தியது. உரோமப் பேரரசின் தலைநகர், கி. மு. ங௩௦-இல், உரோம நகரத்தினின்று (பின்னர்க் **கான்சுத்தாந்திநோபில்** எனப் பெயர்பெற்ற) **பிசந்தியத்திற்கு** (Byzantium) மாற்றப்பட்டபோது, பிசந்தியப் (Byzantine) பேரரசு தொடங்கிக் கி. பி. கசருங வரை நீடித்தது. பிசந்தியத்திலும் அதையடுத்த சுற்றுப்புறத்திலும் கிரேக்கரே யிருந்தனர். கிரேக்கப் பேரரசில் மட்டுமன்றி, உரோமப் பேரரசிலும் பிசந்தியப் பேரரசிலும் கிரேக்க நாகரிகமே இணைப்புக் கூறாக இருந்து, இற்றை ஐரோப்பிய நாகரிகத்திற்கு அடிகோலிற்று. ஆயின், அக்கிரேக்க நாகரிகத்திற்கு அடிமணை தமிழநாகரிகம் என்பதை உலகம் இன்னும் அறிந்திலது.

மேலையாசியாவினின்று, கிரேக்க நாட்டிற்கு மக்கள் குடியேறு முன்பே, கொளுவுநிலை மொழிகளைப் பேசிக்கொண்டிருந்த துரேனிய இனத்தார் வட ஐரோப்பாவிற் குடியேறி விட்டனர்.

துருக்கியர் (Turks), காசக்கர் (Cossacks) முதலிய வகுப்பார் சேர்ந்த தார்த்தாரிய (Tartarian) இனத்தாரும் இரசியாவிற் குடியேறி யிருந்தனர். அதனாலேயே, ''Scratch a Russian and you find a Tartar.'' என்னும் ஆங்கிலப் பழமொழி யெழுந்தது.

துரேனியர்க்குந் தார்த்தாரியர்க்கும் பின், மேலையாரியரின் முன்னோரான வடதிரவிடர் வடமேலை ஐரோப்பாவிற் குடியேறினர். அங்கு அவர் மொழி தியூத்தானிய (Teutonic) ஆரியமாகத் திரிந்தது. அது பின்னர்த் தெற்கில் இலத்தீன முறையிலும்

அதன்பின் கிரேக்க முறையிலும் மாறிற்று. அதற்கடுத்த திரிபே கீழையாரிய மூலமாகும். அதுவும் பின்னர் இந்தியம் இரானியம் என்னும் இருகிளையாகப் பிரிந்தது.

தியூத்தானியம் (செருமானியம்)

தியூத்தானியக்கிளை (க) மேலைச் செருமானியம், (உ) வடசெருமானியம், (ந) கீழைச் செருமானியம் என்னும் முப்பிரிவுகளைக் கொண்டது. பழைய ஆங்கிலம், பழைய பிரிசியம் (Frisian), பழைய சாகசனியம், பழைய உயர்செருமானியம் என்பன மேலைச் செருமானியத்தையும்; ஐசிலாந்தியம், தேனியம் (Danish), நார்வீசியம், சுவீடியம் என்பன வடசெருமானியத்தையும்; கோதியம் (Gothic), வாந்தலியம் (Vandalic) என்பன கீழைச் செருமானியத்தையும் சேர்ந்தவை யாகும். இம் முப்பிரிவுகளுஞ் சேர்ந்த தியூத்தானியத்தின் மூலநிலையே (Proto Teutonic), தியூத்தானிய முறை என்று மேற் குறிக்கப்பட்டது.

பழைய ஆங்கிலம் அல்லது ஆங்கில சாகசனியம் (Anglo-Saxon) என்று சொல்லப்படும் மொழியில், இன்று கிடைத்துள்ள முதற்பழைய எழுத்தேடு (document) கஉ00 ஆண்டகவையதே.

இலத்தீன்

இத்தாலியரின் முன்னோர், நடு ஐரோப்பாவிலிருந்து, கி.மு. அ-ஆம் நூற்றாண்டிற்குமுன், ஆல்பசு (Alps) அப்பெனைன் (Appennines) மலைத்தொடர்களின் வழியாக வந்து குடிபுகுந்தனர். கி. மு. எருந-இல், திபேர் (Tiber) ஆற்றங்கரைமேல் உரோம நகர் கட்டப்பட்டது. அந்நகரை யுட்கொண்ட இலாத்தியம் (Latium) என்னும் கோட்டத்தில் (Dt.) பேசப்பட்ட மொழியே **இலத்தீன்**. அது கி.மு. சூ00-இலேயே ஒரு திரிமொழியாயிருந்தது. கி. மு. முதல் நூற்றாண்டில் தான் அது இலக்கியச் செம்மொழி யாயிற்று. அதன் காலம் பின் வருமாறு ஐம்பாகுபடும்.

(க)	பழைய இலத்தீன்	—	கி. மு. எரு-இற்குமுன்.
(உ)	இலக்கிய ,,	—	,, எரு—கி.பி. களரு.
(ந)	பிந்திய ,,	—	கி. பி. களரு—சூ00.
(ச)	இடைக்கால ,,	—	,, சூ00—கரு00.
(ரு)	இக்கால ,,	—	,, கரு00-இலிருந்து.

இலத்தீன முறை யென்று மேற்குறித்தது இலத்தீனத்தின் மூலநிலையையே (Proto-Latin).

கிரேக்கம்

கிரேக்க நாடு பல நகரநாடுகளாகத் தோன்றியதனால், கிரேக்கமொழி பல கிளைமொழிகளாகப் பிரிந்திருந்தது. அக்கிளை மொழிகள் அத்திக்கம், அயோனியம், இயோலியம், தோரியம், ஆர்க்கேடியம், சைப்பிரியம் என்பன. அவற்றுள், அத்திக்கமே சிறந்த இலக்கியச் செம்மொழி யாயிற்று. அதன் திரிபான காய்னீ (Koine) என்னும் பொதுமொழியே, அலெகசாந்தர் பேரரசிலும் பிசந்தியப் பேரரசிலும் ஆட்சிமொழியாயிருந்தது. பழங்கிரேக்கத்தின் மிகப் பிந்திய வளர்ச்சியே இக்காலக் கிரேக்கம்.

இத்தாலியாவிலிருந்த 'கிரையாய்' என்னும் ஒரு சிறு மக்கட் கூட்டத்தின் பெயரினின்று, கிரீக்கு (Greek) என்னும் பெயர் தோன்றியதாகச் சொல்லப்படுகின்றது. இத்தாலியும் கிரேக்க நாடும் ஒன்றையொன்று அடுத்திருப்பதனாலும், கிரேக்கப் பேரரசை யடுத்து உரோமப் பேரரசு தோன்றியமையாலும், பின்னதன் தொடர்ச்சியான பிசந்தியப் பேரரசின் காலத்தில் கிரேக்கர் தம்மை உரோமர் என்றும் தம் மொழியை உரோமேயம் (Romaic) என்றும் சொல்லிக்கொண்டமையாலும், இலத்தீனுக்கும் கிரேக்கத்திற்கும் பலசொற்கள் பொதுவாயிருப்பதனாலும், இருமொழியும் மிக நெருங்கியவை என்பது அறியப்படும். இலக்கிய வளர்ச்சியிலும், அரசியல் வளர்ச்சியிலும் கிரேக்கம் முந்தியதேனும், மொழிநிலையில் இலத்தீன் முற்பட்டதாகும்.

கெலத்தியம், செருமானியம் (தியூத்தானியம்), இத்தாலியம், எல்லெனியம் (கிரேக்கம்), பாலத்தோ-சிலாவியம், அல்பானியம், அர்மீனியம், இரானியம், இந்தியம் எனத் தொண் பெருங்கிளைகளையும், வேறு சில சிறு கிளைகளையுங் கொண்டது ஆரியம் என்னும் மொழிக்குடும்பம். பெருங்கிளைகளுள் முதல் நான்கும் இறுதி யொன்றுமே, தமிழ்த் திரிபாராய்ச்சிக்குச் சிறந்தவை யாகும்.

ஆரியம் என்பது, இனவகையில் ஐரோப்பாவில் தோன்றியதேனும், மொழிவகையில் இந்தியாவிலேயே தொடங்கி விட்டது. அதன் தொடக்க நிலை வடுகு என்னும் தெலுங்கே. வடுகு

என்பது வடகு என்பதன் திரிபாகும். வடகு வடமொழி. ஆகவே, தெலுங்கு பெயராலும் திரிபாலும் வடமொழி யென்னும் சமற்கிருதத்தை ஒருபுடை யொத்ததாம்.

ஆரியத் தன்மை யடைந்த தெலுங்குத் திரிபுகள்

(க) **உரப்பொலி.**

எ—டு: செய்—Ceyi.

(உ) எடுப்பொலி.

எ—டு: குடி (வீடு, கோயில்)—gudi, சப்பு—ஜப்பு (b), தகை (தாகம்)—daga, புகா (சோறு)—buvva.

(ங) மெலிவலி யிணை வலிப்பு.

எ—டு: inka (இன்னும்), mancu (மூடுபனி), enta (எவ்வளவு), manṭa (மண்ட்ட)-தீக்கொழுந்து, gumpu (கும்பு).

தமிழில், ங்க (nga), ஞ்ச (nja), ண்ட (ṇḍa), ந்த(nda), ம்ப(mba) என்ற மெலிவலி மெய்ம்மயக்கே இயலும்.

(ச) தன்மை முன்னிலைப் பெயர்களின் நகரமுதல் மகரமாதல்.

எ—டு: நாம்—மனமு, நீர்—மீரு.

(ரு) வினவடி ககரமாகத் திரிதற்கு வழிவகுத்தல்.

எ—டு: எவற்றினை—வேட்டினி, எவற்றின்—வேட்டி.

வகரம் ககரமாகத் திரிதல் இயல்பு.

எ—டு: ஆவா—ஆகா, சிவப்பு—சிகப்பு, துவர்—துகர்.

இம்முறையில், எவ்—வெ—கெ என்று திரிந்து, பிராகிருதம் என்னும் வடதிரவிடத்திலும் ஆரிய மொழிகளிலும் வினவடி ககரமா யமையும்.

எ—டு: **இந்தி—கோன் = யார், கஹான் = எங்கே.**
இலத்தீன்—qui = எது, quot = எத்தனை.
சமற்கிருதம்—குத்ர = எங்கே, கிம் = என்ன.

தன்மை யொருமைப் பெயர்

	இந்தி	சமற்கிருதம்	இலத்தீன்	ஆங்கிலம்
முதல்வேற்றுமை	மைன்	அஹம்	(ego) எகொ	இக், ஐ
இரண்டாம் ,,	முஜே	மாம், மா	மே	மீ
மூன்றும் ,,	முஜ்ஸே	மயா	—	—
நான்காம் ,,	முஜ்கோ	மஹ்யம், மே	மிஹி	—
ஐந்தாம் ,,	முஜ்ஸே	மத்	மே	—
ஆறும் ,,	மேரா	மம	மெயீ	மை
ஏழாம் ,,	முஜ்மே	மயி	—	—

சூரசேனிப் பிராகிருதத்தின் வழிவந்த இக்கால மொழி இந்தி. அதில் நான் என்பது மைன் என்றும், நாம் என்பது ஹம் என்றும், திரிந்துள்ளன. தன்மைப் பன்மைப்பெயர் சூரசேனியில் ஹாம் என்றிருந்திருத்தல் வேண்டும். அது பின்னர் வடமொழியில் அஹம் என்றும், இலத்தீனிலும் கிரேக்கத்திலும் (அக)—(எக)—எகொ—எகோ (Gk egō) என்றும், திரிந்த தாகத் தெரிகின்றது.

மெய்ம் முதற் சொற்கள் முதற்குறைத் திரிபால் உயிர்முத லாவது இயல்பே. எ—டு: மேழகம்—ஏழகம்.

ஆகும் என்பதன் திரிபான ஆம் (yes) என்னும் தமிழ்ச் சொல், வடமொழியில் ஆம் என்றே திரியாதிருக்கவும், இந்தி யில் ஹாம் என்று திரிந்துள்ளது. ஆதலால், நாம்—ஆம்—ஹாம் என்னும் திரிபு இயற்கைக்கு மாறுன தன்று.

வடமொழியிலும் மேலையாரிய மொழிகளிலும், தன்மை யொருமைப் பெயர் அகர அல்லது எகர முதலாயிருப்பினும், அதன் ஏனை வேற்றுமைகளெல்லாம் மகர முதலாகவே யிருப் பதால், அதன் எழுவாய் வேற்றுமையும் முதற்கண் மகர முத லாகவே யிருந்திருத்தல் வேண்டுமென்பது துணியப்படும்.

வடஇந்தியாவில் முதற்கண் குடியேறியவர் தமிழர் வழி யினரான திரவிடரே யாதலால், வடஇந்தியமொழி வடதிர விடம் எனப்படும். வடுகிற் கடுத்த திரிமொழி வடதிரவிடமே.

வடதிரவிடருள் ஒருசாரார் வடமேற்காகச் சென்று ஐரோப்பாவின் வடமேலைப் பகுதியை (செருமானிய காண்டினேவியத்தை) அடைந்ததனால், அவ்விடத்துத் தோன்றிய தியூத்தானியம் (செருமானியம்), ஆரியக் கிளைகள் எல்லாவற்றுள்ளும் தமிழுக்கு மிக நெருக்கமாக வுள்ளது. அதன் தெற்கிலுள்ள இலத்தீனம் அதினுஞ் சற்றுத் திரிந்தும், தென்கிழக்கிலுள்ள கிரேக்கம் இலத்தீனினுஞ் சற்றுத் திரிந்தும், கிரேக்கத்திற்குக் கிழக்கில் நெடுந்தொலைவு வந்த கீழையாரியம் இலத்தீன கிரேக்கத்தினும் மிகத்திரிந்தும், உள்ளமை தமிழாரியத் திரிபு வளர்ச்சிப்பாதை வளைவைத் தெளிவாகக் காட்டும்.

தியூத்தானியத்திற்கும் தமிழுக்கும் உள்ள நெருக்கம்

(க) சொல்லொப்புமை

கத்தொலிகள்: கூ—கூவு—coo, கரை—cry, crow, ஊள் (வி.)—howl, ஊளை (பெ.)—howl, கனை—neigh, பிளிறு—blare, உரறு—roar, இமிர்—hum, கலி—call.

விளிகள்: ஏ, ஏய்—hey, ஓ—O, oh, ஓய்—hoy, எல்ல—எல்லா—hallo.

குறிப்பொலிகள்: ஆ (வருத்தம்)—ah, ஆகா (வியப்பு)—aha, ஏ (வினா)—eh, (ஊ)ம் (தயக்கம், வெறுப்பு)—hum, சீ—சே, சை—shaw, pshaw.

சுட்டுச்சொற்கள்: ஆன் (அங்கு)—yon, ஆண்டு—yond, அதோள்—thider, இதோள்—hider, எதோள்—whider, இதா, இதோ—lo.

இளமைப்பெயர்கள்: பையன்—ME boi, E boy, சிறுக்கன்—சிக்கன்—OE cicen, E chicken, குழந்தை—OE cild, E child, குட்டி—kid, kiddy, குரு—கரு—LG gor (child), குருளை—ME gurle, E girl, சிட்டு—chit.

முறைப்பெயர்கள்: அம்மை—அம்மா—mamma, ma, அப்பன்—அப்பா—papa, pa, தா (தந்தை)—da, தாதா—தாத்தா, தாதை—dada, daddy, dad, மகன்—Gael. magus (son), E mac.

அஃறிணை யுயிரிப் பெயர்கள்: உதள் (ஆட்டுக்கடா)—OHG widar, E wether, புல்லம்—bull, பூசை—pussy, கொத்தி—cat, ஏழகம்—elke, elk, மறி—mare, குருகு—crane, நாகம்—OE snaca, E snake, களவன் (நண்டு)—கடப்பான்—OE crabba, E crab, சுறவு—shark.

முதன்மை வினைகள்: இன்—ean, yean, உருள்—whirl, ஒழுகு—walk, கரை—carry, காண் (அறி)—kon, ken, con, குந்து—squat, கொல்—ME culle, kille, E kill, OE cuell, E quell, சப்பு—sup, sip, தின்—dine, துப்பு—spit, துருத்து—thrust, தொள்—till, நாடு—OE neod, E need, பொள்—பொளி—bore, பொறு—OE, OS, OHG ber, E bear, முன் (னு)—mun (to think), விக்கு—விக்கல்—hiccup.

துணைவினைகள்: இரு—are (வடசெருமானியம்). arem—am (இருக்கிறேன்). art = இருத்தி (இருக்கின்றாய்).

இரு—is (தென்செருமானியம்).

பூ—be. பூத்தல் = தோன்றுதல், உண்டாதல், இருத்தல். "பூத்தலிற் பூவாமை நன்று" (நீதிநெறி. சு).

புகு—பொகு—பொகில் = அரும்பு. பொகில்—போகில் = அரும்பு. பொகு—போ—போத்து = புதிதாகத் தோன்றுங் கிளை. போத்து வெடித்தல் என்பது மரபு. மலரைக் குறிக்கும் பூ என்னும் சொல் வேறு. அது பொல் என்னும் வேரினின்று திரிந்தது; பொலிதற் பொருளது. பொலிதல் விளங்குதல். பூ—வ. bhū.

பதி—வதி—வசி—வ. வஸ்— E was.

இரிச்சார்டு மாரிசு (Richard Morris) தம் Historical Outlines of English Accidence என்னும் ஆங்கில இலக்கண வாராய்ச்சி நூலில், was என்னும் ஆங்கிலத் துணை வினைச் சொல்லை வஸ் (to dwell) என்னும் வடசொல்லி னின்றே திரிப்பர். (பக். உசுசு).

பிள்—பெள். பெட்டல் விரும்புதல். பிள்—விள்—விரு—விரும்—விரும்பு. விள்—வெள்—வெண்டு. வெண்டுதல் விரும்புதல். வெள்—வேள்—வேண்டு. வேள்—வேண் = விருப்பம். வேட்டல் விரும்புதல்.

விள்—will (விருப்பத் தீர்மானத்தைக் குறிக்கும் ஆங்கில எதிர்காலத் துணை வினைச்சொல்).

மைந்து (வலிமை)—might. இயல்வைக் குறிக்கும் may என்னும் ஆங்கிலத் துணை வினைச்சொல்லை might என்பதினின்றே திரிப்பர். இயல்வு—possibility.

Can என்னும் ஆங்கிலத் துணை வினைச்சொல்லை, அறிதற் பொருள் கொண்ட con என்னும் வினைச்சொல்லினின்று திரிப்பர் இரிச்சார்டு மாரிசு (H. O. E. A., பக். உசுஅ). காணுதல் அறிதல். காட்சி அறிவு. காண்—con—can.

பொதுச்சொற்கள்: எ—டு: இல்—inn, எல்லாம்—OE eal, all, ஏர்—AS ear (to plough), குரல் (தொண்டை) — ME crawe, E craw, தாங்கல் (குளம்)—tank, துளை (வாயில்)—door, பக்கு (பை) — bag, படி (உடம்பு) — body, பார் (கம்பி)—bar, பிறந்தை—birth, புதல் (அரும்பு) — ME boddle, budde, E bud, புருவம்—brow, புழுதி—mould, மூளை—marrow, மெது—OE Smoth, E smooth, விசுக்கு (விரைவுக்குறிப்பு)—whisk.

முன்னொட்டுக்கள் (Prefixes): அல்—அன்—un, இல் (எ-ஆம் வேற்றுமையுருபு) — in, அண் (மேல்) — on, உம்பர்—up, over.

பின்னொட்டுக்கள்: அஃகுதல் = சுருங்குதல், சிறுத்தல், நுணுகுதல். அஃகு—ock (dim.suf.).

இட்டிது = சிறியது. இட்டு—et, ete, ette (dim.suf.).

குன்னுதல் = குறுகுதல், சிறுத்தல். குனி—குன்னி (சிறுத்தது)—kin (dim.suf.)

ஏர்தல் எழுதல். ஏர்—er (comp. adj. suf.).

எட்டுதல் உயர்தல். எட்டு—est (sup. adj. suf,).

வினையீறுகள்: வான்—ஆன்—அன்— an (inf. suf.).

கொண்டு—கிண்டு (கொச்சை)—இண்டு (கொச்சை)—inde (pres. part. suf.).

(உ) இலக்கண வொப்புமை:

புணர்ச்சி:

"தனிக்குறில் முன்னொற் றுயிர்வரின் இரட்டும்"
(நன். உ0ரு).

எ—டு: கண்+அழகன்=கண்ணழகன்,
சொல்+இனிமை=சொல்லினிமை.

இந்நெறியீடு ஆங்கிலத்திற்கும் ஏற்கும்.

எ—டு: thin+er=thinner, sit+ing=sitting.

இருமொழியிலும் ஒருமை பன்மையென்னும் இரெண்களே யுண்டு.

தனிநிலையமைப்பு (Absolute Construction):

எ—டு: தமிழ்—கூட்டம் முடிந்து, எல்லாரும் போய்விட்டனர்.

ஆங்கிலம்—The meeting having ended, all went away.

(ங) ஆங்கிலத்திற் சொன்மூல மின்மை

Bag, broad, kill, spread முதலிய பல சொற்கு மூலந்தெரியவில்லையென்று, **எருதந்துறை அகாமுதலியிற்** குறிக்கப்பட்டுள்ளது. அவற்றிற் கெல்லாம் மூலம் தமிழிலேயே உள்ளது.

பக்கு(பை)—bag, பரந்த—broad, கொல்—kill, பரத்து—spread.

அவ்வகர முதலியில், சில ஆங்கிலச் சொற்கட்கு மூலந் தவருகக் குறிக்கப்பட்டுள்ளது.

எ—டு: "bury..............burg—st. of Gmc **bergan** shelter, protect." இதுபொருந்தப் புகலல் என்னும் உத்தி பற்றியது. புதை—bury, புதையல்-burial. ஒ.நோ: விதை—விரை.

"lo, int..............combining OE lā int. ME lo=loke, LOOK." இதுவும் பொருந்தப் புகலலே.
இதா—la, இதோ—lo. ஒ.நோ: மது—L mel.

ஆரிய மொழிகள் ஐரோப்பாவின் மேற்கினின்று கிழக்காகத் திரிந்த படிமுறைத் திரிபைக் காட்டும்

சொற்பட்டி

தமிழ்	தியூத்தானியம்	இலத்தீன்	கிரேக்கம்	கீழையாரியம்
அல் (எதிர்மறை முன்னொட்டு)	அன்	—	அன்	ந(ந்+அ)
இதோள் (இங்கு)	ஹிதர்	கித்ர	—	அத்ர
இரு	இஸ்	எஸ்	எஸ்	அஸ்
இரும்பு	ஐரன் அயெண்	இரிஸ்	—	அயஸ்
இலக்கம் (வெளிச்சம்)	லைற் (று)	லுக்ஸ்	லியூக்கோஸ்	ருச்
உகை–அகை (செலுத்து)	அக	அகோ(g)	அகோ(g)	அஜ்
கணு (முட்டு)	க்னீ	கெனு(g)	கொனு(g)	ஜானு
கத்து (வெட்டு)	கட்	—	—	க்ருத்
காண் (அறி)	கான்– க்ஞ–க்னே	க்னோ(g) —னோ	க்னோ(g)	ஜ்ஞா
கிழம்	—(கம்)	—	கெரொன்(g)	ஜரா
குந்து	ஸ்குவாத்	ஸெத்(d)	—	ஸத்(d)
கும்(கூடு)	—	கும்	ஸிம்	ஸம்
துவா (வாயில்)	தோர்	—	துர	த்வார்(d)
துருத்து	த்ரஸ்ற்(று)	த்ருடொ	—	தூத்(d)
நாவி, நாவாய்	—	நாவிஸ்	நௌஸ்	நௌ
பார்	—	பரெ	—	பஸ்
பிறங்கு	பிரைற்(று)	—	—	ப்ரஜ் (bh)

தமிழ்	தியூத்தானியம்	இலத்தீன்	கிரேக்கம்	கீழையாரியம்
பொறு	பெர்(b)	பெர்(fer), பொர்த்	பெர்(ph)	பர் (bh)
மன்	மெஅன்	—	—	மநு
முழுகு	—	மெர்கொ(g)	—	மஜ்ஜ்
முன்(னு) (கருது)	முன்	—	—	மன்
மூளை	மேரோ	—	—	மஜ்ஜா
மெது	ஸ்மூத்	—	—	ம்ருது
வலி, வலம்	—	வலி,வலர்	—	பல(b)
விடலை (மாட்டுக்கன்று)	வெலெ	விதுல	இதலொஸ்	வத்ஸ
க. பேக்கு(b)	beg	—	—	பிக்ஷ்(bh)

கிரேக்கநாட்டொடு தொடர்பு கொண்டிருந்த கீழையாரியர், சின்ன ஆசியாப் பக்கத்தினின்று பாரசீகம் வழியாக வந்து, ஆகசுசு (Oxus) ஆற்றுப் பள்ளத்தாக்கில் தங்கினர். அங்குக் கொள்கையும் எதிர்காலத் திட்டமும் பற்றி அவர்கட்குள் கருத்து வேறுபாடு உண்டானதினால், இருகட்சிப்பட்டு ஒருசாரார் மேற்கிற் பாரசீகத்திற்குப் பிரிந்து போயினர். இன்னொரு சாரார் இந்துக்குசு மலைத்தொடர்க் கணவாய்களைக் கடந்து, ஆபுக்கானித்தானம் என்னும் காந்தார நாட்டு வழியாகச் சிந்துவெளிக்குட் புகுந்தனர்.

பொதுவாக, மேற்கே சென்றவர் உண்மையும் நேர்மையும் உள்ளவ ரென்பது, பிற்கால வரலாற்றால் தெரிய வருகின்றது.

ஆரியர் ஒரே யினத்தா ராயினும், இசரவேலரைப்போல் முன்னோர் பெயரால் ஏற்பட்ட பல்வேறு குடிவகுப்புக்களா யிருந்திருக்கின்றனர். ஒவ்வொரு குடிவகுப்பிற்கும் ஒரு தலைவனும் ஒரு பூசாரியும் இருந்தனர்.

ஆரியர் இந்தியாவிற்கு வந்தபோது ஆடுமாடு மேய்ப்பதன்றி வேறொன்றும் அறிந்தவ ரல்லர். அவர்கட்குக் கல்வியுமில்லை, கலையுமில்லை; எழுத்துமில்லை, இலக்கியமுமில்லை. பூசாரிகள் இயற்கைத் தெய்வங்களை, சிறப்பாக நெருப்புத் தெய்வத்தை, வழிபட்டுத் தங்கள் குடிவகுப்பாரின் சடங்குகளை நடத்திப் பல்வகை வேள்விகளை வளர்த்து வந்தனர். குடிவகுப்

புத் தலைவர் தமிழ்நாட்டு ஊர்க்கவுண்டர் அல்லது நாட்டாண்மைக்காரர் போன்றே தத்தம் தொழிலைச் செய்து, அவ்வப்போது ஏற்படும் சண்டைசச்சரவுகளையும் வழக்குக்களையுந் தீர்த்து வந்தனர்.

ஆரியர் பழங்குடி மக்களை நோக்க, மிகமிகச் சிறுபான்மையரா யிருந்ததனால், தம் முன்னோர் மொழியைப் பேச வாய்ப்பின்றி விரைந்து மறந்து விட்டனர். வடநாட்டிலிருந்த தமிழரொடும் திரவிடரொடும் போட்டியிட்டுப் பழந்தமிழ் மந்திரங்கள் போல் பாடத்தொடங்கிய, ஆரியப் பூசாரிகளின் வான்கோழியாட்டுப் போன்ற பாட்டுக்களும், தென்றமிழ்ச்சொல்லும் வட திரவிடச்சொல்லும் மிக்கு எகர ஒகரமின்றி, பிராகிருதம் என்னும் முன்வடமொழியிலேயே உள்ளன.

மந்திரம் என்னும் சொல்லும், வேதப் பிரிவின் பெயரான மண்டலம் என்னும் சொல்லும், தூய தென்சொற்களே. வேதம் என்னும் சொல்லும், வேதத்தின் மறுபெயரான சுருதி யென்னும் சொல்லும், தென் சொற்களின் திரிபுகளே. மண்டலம் என்னும் சொல் வரலாறு முன்னரே கூறப்பட்டது.

முன்னுதல் கருதுதல். முன்—மன். மன்னுதல் கருதுதல். திரம் (திறம்) என்பது ஓர் ஈறு. உள்ளத்தின் தூய்மையும் வலிமையும் உள்ளவர், தாம் கருதியது தப்பாது நிறைவேறுமென்று எண்ணி, வாய்விட்டோ வாய்க்குள்ளோ சொல்வதே மந்திரமாம். மன்னும் திறம் அல்லது எண்ணும் வலிமை மந்திரம் (மன் + திரம்).

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்." (குறள். ௬௬௬).

கீளுடை (லங்கோடு) அல்லது நீர்ச்சீலை (கோவணம்) போலும் எளிய வுடையன்றி வேறு புறக்கோலங் கொள்ளாது, உள்ளத் துறவு பூண்டு இருவகைப் பற்றையும் அறவே யறுத்து, இறைவனொடு இரண்டறக் கலந்தாற்போல் அவனைப் பற்றிய ஊழ்கத்தில் (தியானத்தில்) ஆழ்ந்து இடுபட்ட பேரறிஞர், தாம் உண்மையென்று உணர்ந்தவற்றை வெளியிடுஞ் செய்யுட்களும் மந்திரம் அல்லது வாய்மொழி யெனப்படும்.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப." (தொல். கசஎசு).

"பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே" (ஷ கஅஎகூ).

திருமூலர் திருமந்திரமும் நம்மாழ்வார் திருவாய்மொழியும் இத்தகையன. தப்பாது நிறைவேறும் மெய்ம்மொழி யென்னுங் கருத்தில், மந்திரம் வாய்மொழி யெனப்பட்டது.

விழித்தல் = கண்திறத்தல், காணுதல், அறிதல். விழி = அறிவு. "தேரார் விழியிலா மாந்தர்" (திருமந். கஎஎ). விழி—L vide—Skt. வித்—வேத = அறிவு, மறை.

செவியுறு—வ. ச்ரு—ச்ருதி = கேள்வி, (எழுத்தின்மையாற் பார்க்கப்படாது) கேட்கப்படும் ஆரிய மறை.

மேலையாரிய மொழிகள் எல்லாவற்றிலும் எகர ஒகரக் குறில்கள் உள்ளன. வேதமொழியில் மட்டும் அவை யின்மையால், இந்திய ஆரியர், கடலிற் காயம் உரசினதுபோல், வடஇந்தியப் பழங்குடி மக்களொடு இரண்டறக் கலந்துபோய் அவர் மொழியையே மேற்கொண்டமை அறியப்படும். ஆயின், ஆரியப் பூசாரிகள் மட்டும் தங்கள் உயர்வைக் காத்தற்குத் தனியினமாகவே வாழ்ந்து, மதவியல் பற்றிய தம் முன்னோர் மொழிச் சொற்களை, தம் மந்திரங்கள் என்னும் பாடல்களிலும் இருவகைச் சடங்குகளிலும் பல்வகை வேள்விகளிலும் போற்றி வந்திருக்கின்றனர். இது, அராபியரும் துருக்கியரும் பாரசீகருமான முகமதியர், இந்தியாவிற்கு வந்தபின் தம் முன்னோர் மொழிகளை மறந்து வடநாட்டுப் பழங்குடி மக்களின் தாய்மொழியாகிய இந்தியையே மேற்கொண்டு, மதத்துறையில் மட்டும் அரபிச் சொற்களையும் பாரசீகச் சொற்களையும் போற்றிவருவது போலாம்.

ஆரியர் பெருங்கூட்டத்தாராக வந்து இந்தியாவிற்குட் புகுந்தன ரென்றும், பிராமணர் சத்திரியர் வைசியர் சூத்திரர் என்னும் நால்வகைக் குலவொழுங்கு கொண்டிருந்தன ரென்றும், தம் போர் வலிமையாலேயே வடநாட்டைக் கைப்பற்றினரென்றும், தவறான கருத்துக்கள் இன்றும் இருந்து வருகின்றன.

வடஇந்தியாவில் ஆரியப் பூசாரிகள் தவிர மற்றெல்லாரும் பழங்குடி மக்களொடு கலந்து போனமையால், இன்று வட நாட்டுமக்களை ஆரியரென்றும் திரவிடரென்றும் பிரித்தறிய முடியாது. தென்னாட்டிற்கு வந்த ஆரிய வகுப்பார் பூசாரியரே. ஆதலால், தமிழரும் திரவிடருமான தென்னாட்டு அல்லது தென்னிந்திய மக்களெல்லாம் ஆரியக் கலப்பற்ற தூய பழங்குடியினத்தாரே. இந்தியா வெங்கும், தனிப்பட்ட முறையில் ஆடவரும் பெண்டிரும் பழங்குடி மக்களொடு தொன்றுதொட்டுத் தொடுப்பும் மணவுறவும் கொண்டு வந்திருப்பினும், குலவளவில் ஓரளவு தூய்மையைப் போற்றி வந்திருக்கும் ஆரிய வகுப்பார் பிராமண ரென்னும் பூசாரியரே.

ஆரியப் பூசாரிகள், அகக்கரண வளர்ச்சியின்றிச் சிறுபிள்ளைகள் போல், இயற்கையுஞ் செயற்கையுமான பல்வேறு சிறு தெய்வங்களைப் பற்றி முன்னிலைப் பரவலாகவும் படர்க்கைப் பரவலாகவும் பாடிய பாடற்றிரட்டே, ஆரிய வேதத் தொகுப்பாம். முதன்முதலாகத் தோன்றிய தொகுப்பு (ஸம்ஹிதை) இருக்கு (ருக்) வேதம். அதில், கங்கைவெளியும் பிரமபுத்திர வெளியுமாகிய கீழ் வடவிந்தியாவிற் குரிய அரிசி, ஆலமரம், வேங்கை முதலியன சொல்லப்படாமையால், அத்தொகுப்பு முழுதும் பஞ்சாபு என்னும் ஐயாற்று வெளியில் ஆரியர் தங்கியிருந்த போதே பாடப்பட்டதாக, அறிஞர் கருதுகின்றனர். இனி, அவ்வேதப் பிரிவுகளான பத்து மண்டலங்களுள், முதல் தொண்டுள்ளும் (ஒன்பதுள்ளும்) நாற்குலப் பகுப்பைப் பற்றிய குறிப்பேயில்லையென்று சொல்லப்படுகின்றது. பத்தாம் மண்டலத்திலுள்ள புருட சூத்தம் (புருஷ ஸூக்த) என்னும் குழறுபடை மந்திரப் போலியும், பிற்காலத்துச் சேர்க்கப்பட்ட இடைச்செருகலே. இது 'தமிழர் மதம்' என்னும் நூலில் விளக்கப்படும்.

பூசாரிகளல்லாத ஆரிய வந்தேறிகள் பழங்குடி மக்களொடு கலந்து போனதனுல், அவர்களொடு கலவாத ஆரியப் பூசாரிகள் நாட்டுமக்களை யடுத்தே பிழைக்க வேண்டி யிருந்தது. சிவநெறியாரும் நாகரிக மக்களும் பொது மக்களிடை யிருந்ததனுல், அவர்களாற் புறக்கணிக்கப்பட்ட ஆரியப் பூசாரிகள், அரசரை வயப்படுத்தச் சூழ்ச்சி செய்து சில வழிகளை வகுத்தனர். அவற்றுள் ஒன்று வேள்வி வளர்த்தல்.

தெய்வத்தின் பெயரால் என்ன சொன்னாலும் நம்புவதும் எதைக் கேட்டாலும் கொடுப்பதும் ஆகிய மதப்பித்தம், பழங் குடி மக்களின் சிறப்பியல் பென்பது கண்டு, அரசரிடம் சென்று, தாங்கள் தேவர் வழிவந்த நிலத்தேவர் (பூசுரர்) என்றும், தங்கள் மொழி தேவமொழி யென்றும், தாங்கள் வகுத்த வேள்வி களைச் செய்தால் அரசர்க்கு வெற்றியும் குடிகட்கு நன்மையும் நாட்டிற்குச் செழிப்பும் உண்டாகு மென்றும், சொல்லி ஏமாற்றி னர். இவ் வேமாற்றிற்கு, அவர்களின் வெண்ணிறமும், உரப்பி யும் எடுத்தும் கனைத்தும் ஒலிக்கும் ஒலிகள் மிக்க அவர்களின் மந்திரமொழியும், பெரிதும் துணைசெய்தன. அடியைச் சாய்த் தால் மரஞ்சாய்வதுபோல் அரசனை வயப்படுத்தினால் குடிகள் தாமாக வயப்படுவர் என்று, அவர்கள் கருதியது நிறைவேறிற்று. விசுவாமித்திரர் போன்ற அரசர் சிலர் வயப்பட்டனர்.

வேள்வி செய்யவேண்டிய முறையைப் பற்றிப் பெரும்பாலும் உரைநடையில் இருக்கு மந்திரங்களை எடுத்துக் கூறி, அவற் றிற்கு எசுர் (யஜுர்) வேதத் தொகுப்பென்றும்; வேள்வியிற் பாடற் கேற்றவாறு பல இருக்கு மந்திரங்கட்கு இசையமைத்து, அவற்றின் திரட்டிற்குச் சாமவேதத் தொகுப்பென்றும்; பெயரிட் டனர். இதனால், முன்னர் ஒரே வேதமா யிருந்தது மூவேதம் (த்ரயீ) ஆயிற்று.

வேள்வியில் மந்திரங் கூறித் தெய்வங்களை அழைப்பவன் 'ஹோதா' என்றும், தீ வளர்ப்பவன் 'அத்வர்யு' என்றும், இசைவகுத்த மந்திரங்களைப் பாடுபவன் 'உத்காதா' என்றும், பெயர் பெற்றனர். வேள்வியின் பெருமைக்குத் தக்கவாறு, இம் முப்பணியர் தொகையும் மிகும்.

வேளிரும் மன்னரும் வேந்தரும் போன்ற மூவகை யரசர் செல்வநிலைக்கும் ஏற்றவாறு, சிலபல நாட்களில் முடிவனவும் சிலபல மாதங்களில் முடிவனவும் சிலபல ஆண்டுகளில் முடிவன வுமான பற்பல வேள்விகள் வகுக்கப்பட்டன. நூற்றுக் கணக் கிலும் ஆயிரக் கணக்கிலும் இலக்கக் கணக்கிலும், பொதுமக்கள் பணம் அரசர் வாயிலாகச் செலவிடப்பட்டது. வேள்விப் பணி யாளர் (ருத்விக்குகள்) பொன்னும் மணியும் ஏராளமாகப் பரிசு பெற்றதுடன், ஆயிரக்கணக்கான ஆரியப் பூசாரியர் கொழுக்க விருந்துண்டனர். இங்ஙனம், அவர்கள் வாழ்க்கை எளியமுறை

யில் இனிது நடைபெற வழி வகுக்கப்பட்டு விட்டது. அரசர், வேள்வி வளர்ப்பே கால மழைக்குக் கரணியம் என்று நம்பிய தால், எத்துணைப் பொருட்செலவு நேரினும் பொருட்படுத்தாது, இக்காலத்துப் பொருளியல் வளர்ச்சித் திட்டங்கள் (Economic projects) போன்றே கருதி, இயன்ற போதெல்லாம் சிறு வேள்வி களையும் பெரு வேள்விகளையும் இயற்றுவித்து வந்தனர்.

ஆரியப் பூசாரிகள் வடநாட்டரசரை வயப்படுத்த இன்னொரு வலக்காரத்தையும் கையாண்டனர். அது தமிழர் மருதநிலத்து வேந்தன் வணக்கமான இந்திர வணக்கத்தைத் தாமுந்தழுவி யமை. அரசன் என்று பொருள்படும் இந்திரன் என்னும் பெயர், வேந்தனுக்கு வழங்கிய வடநாட்டுச் சொல்லாகும். இந்திர வணக்கமோ அதையொத்ததோ மேலையாரியருக்கில்லை யென்று, **மாக்சு மூல்லர்** கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. ஆரியர் தென்னாடு வந்தபின், இந்திரன் என்னும் சொல் தமிழகத்திலும் வழக்கூன்றியது. "இந்திரனே சாலுங்கரி" (உரு) என்று திருக்குறளிலும், இந்திரவிழவூ ரெடுத்த காதை யென்று சிலப் பதிகாரத்திலும், ஆளப்பட்டிருத்தல் காண்க. இந்திரவிழா பண்டைத்தமிழர் விழாவா யிருந்ததனாலேயே, காவிரிப்பூம்பட்டினத்தார் அந்நகர் மூழ்கும்வரை அதைக் கொண்டாடி வந்தனர்.

"தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன்
விண்ணவர் தலைவனை வணங்கிமுன் நின்று
மண்ணகத் தென்றன் வான்பதி தன்னுள்
மேலோர் விழைய விழாக்கோ ளெடுத்த
நாலேழ் நாளினும் நன்கினி துறைகென"

(மணி. க:ச—அ).

வடநாட்டரசர் தமிழர் போன்றே இந்திரனைக் குலதெய்வமாகக் கொண்டிருந்ததனால், ஆரியப் பூசாரியர் இந்திரனை மன்றாடிப் பாடிய மந்திரங்கள் அவர் உள்ளத்தை இறுகப் பிணித்து விட்டன.

ஆயினும், ஆரியக் கொலை வேள்வியையும் சிறுதெய்வ வணக்கத்தையும் அயன்மொழி மந்திரங்களையும் ஏற்காத சிவ நெறியாரான மன்னர், ஆரியப் பூசாரியரைப் போற்றவில்லை. அதனால், அப்பூசாரியர் தமக்கு வயப்பட்டவரைக் கொண்டே

வயப்படாதவரொடு போரிட்டு வென்றனர். இத்தகைய வெற்றிகளே இருக்கு வேதத்திற் சொல்லப்பட்டுள்ளன. இவ்விருபதாம் நூற்றாண்டிலும், ஆங்கிலராட்சியும் ஆங்கிலக் கல்வியும் ஏற்பட்ட பின்பும், பேராயக்கட்சித் (Congress) தலைவரான பிராமணர், அறியாமையும் தன்னலமுங் கொண்ட தமிழரைக் கொண்டே, தமிழரையும் திரவிடரையும் முன்னேற்றிய நயன்மைக் கட்சித் (Justice Party) தலைவரைத் தோற்கடித் திருப்பதையும், திருக்கோவில் தமிழ் வழிபாட்டைத் தடுப்பதையும் நோக்குக.

வடநாட்டுப் பழங்குடி மக்களுள் சிவநெறியாரு மிருந்தமை, அவர் வழிபட்டுவந்த திருக்குறிப்படிமையை, ஆண்குறித் தெய்வம் (சிச்னதேவ) என்று ஆரியப் பூசாரியர் பழித்ததனால் அறியப்படும்.

இந்திரன் சம்பரனின் க௦௦ கோட்டைகளை அழித்தான் என்று இருக்கு வேதத்திற் சொல்லப்பட்டிருப்பது (உ:கச:சு), இந்திர வணக்கங்கொண்ட ஓர் அரசனின் வெற்றி இந்திரன் மேல் ஏற்றிக் கூறப்பட்டிருப்பதே.

இராமாயணக்காலம்

(தோரா. கி. மு. கரு௦௦—கஉ௦௦)

சோழன் வேந்தனானபின் வடநாட்டில் தன் படிநிகராளியாக அமர்த்திய சோழக்குடியினன் வழிமரபே, சமற்கிருத இலக்கியத்திற் 'சூரிய வமிசம்' என்று சொல்லப்படுவது. அவ்வழியில் வந்தவனே இராமன்.

கம்பராமாயணம், பாலகாண்டம், குலமுறை கிளத்து படலத்தில், இராமனின் முன்னோராகச் சொல்லப்பட்டவர் பதினால்வர். அவர் பெயர்கள்: மனு, பிருது (வேனன் மகன்), இட்சுவாகு, ககுத்தன் (ககுத்ஸன்), பாற்கடல் கடைந்து அமுதளித்தவன் (நிமி?), மாந்தாதா, முசுகுந்தன், சிபி, சாகரர், பகீரதன், நூறு குதிரைவேள்வி (அசுவமேதம்) செய்தவன், இரகு, அசன், தசரதன் என்பன.

ஒருகாலத்தில் கலுழன் விண்ணுலகை யடைந்து, அங்கிருந்த அமிழ்தத்தைக் கவர்ந்து சென்றான். இந்திரன் தான் திரும்பி வருமளவும் விண்ணகரைக் காக்க முசுகுந்தச் சோழனை

அமர்த்தி, அவனுக்குத் துணையாக ஒரு பூதத்தையும் நிறுத்தி விட்டு, அமிழ்தத்தை மீட்கச் சென்று விட்டான். அக்காலை அவுணர் திரண்டு வந்து முசுகுந்தனொடு பொருது தோற்றோடி னர். பின்னர் ஒரு வஞ்சனையால் அவனை வெல்லக் கருதி, அவர் மீண்டும் வந்து, அவன் அகக்கண்ணும் காரிருளில் மூழ்குமாறு ஒரு பேரிருள் அம்பை விடுத்தனர். அவன் செய் வதறியாது மயங்கி நிற்கும்போது, அவன் துணைப்பூதம் ஒரு மந்திரத்தை உதவ அதனால் தெளிந்து, அவுணரைக் கொன்று குவித்தான். மீண்டுவந்த இந்திரன் செய்தியறிந்து, முசு குந்தனுக்கு நிலையாக வுதவுமாறு அப்பூதத்தையும் அவனுடன் அனுப்பினான். அது புகாரில் நாளங்காடியில் நின்று நாள் தொறும் படைய லுண்டு வந்தது.

இக்கதையே சிலப்பதிகாரத்தில்,

''கடுவிசை யவுணர் கணங்கொண் டெண்டிக்
கொடுவரி யூக்கத்துக் கோநகர் காத்த
தொடுகழல் மன்னற்குத் தொலைந்தன ராகி
நெஞ்சிருள் கூர நிகர்த்துமேல் விட்ட
வஞ்சம் பெயர்த்த மாபெரும் பூதம்
திருந்துவேல் அண்ணற்குத் தேவன் ஏவ
இருந்துபலி யுண்ணும் இடனும்'' (சு:எ-கந)

என்று கூறப்பட்டுள்ளது.

சீன நாட்டிற்கு வானவர் நாடு என்றொரு பெயருண்டு. அந்நாடு பூதக்கதைகட்குப் பெயர் போனதென்பது அலா டின் கதையால் அறியப்படும்.

முசுகுந்தன் சீனநாட்டரசன் ஒருவனொடு நட்புக் கொண் டிருந்து, அவன் நகருக்குச் சென்றிருக்கலாம். அன்று கலுழ வேகன் என்பானொருவன் அமிர்தபதி என்பாளொருத்தியைக் கவர்ந்து சென்றிருக்கலாம். சீனவரசன் முசுகுந்தனைத் தன் நகரைக் காக்குமாறு இருத்தி விட்டு அமிர்தபதியை மீட்கச் சென்றபின், ஊணர் (Huns—ஹூணர்) என்னும் நடு ஆசிய வாணர் சீனத்தலைநகரைத் தாக்கி முசுகுந்தனால் முறியடிக் கப்பட்டிருக்கலாம். சீன அரசன் தனக்குத் துணை யென்று கொண்டிருந்த பூதப்படிமையைப் புகாருக்கு அனுப்பி யிருக் கலாம்.

புலவர் குழந்தையார் முசுகுந்தனை முதுகாந்தன் என்பர்.

முசுப்போற் குந்தியிருப்பவன் என்னும் பொருள் கொண்டதாயின், முசுகுந்தன் என்பது தூய தென்சொல்லே. முற்பிறப்பில் முசுக்கலையா யிருந்தான் என்னுங் கதை இக்காலத்திற் கொள்ளத்தக்க தன்று.

சிபி என்பவன், புறுவைத் துரத்திய பருந்திற்குத் தன் தசையை அறுத்துக் கொடுத்த செம்பி அல்லது செம்பியன் என்னும் சோழனே. அவன் பெயர் வடமொழியிற் சிபி எனத் திரிந்துள்ளது. இதையறியாத (அல்லது அறிந்தே ஏமாற்றுகின்ற) வடமொழிப்புலவர், சோழர் சிபி என்னும் வடநாட்டு ஆரிய வரசனின் வழியினராகக் கூறி மகிழ்வர்.

இராமன் காலத்தவனான பரசிராமன், கார்த்த வீரியார்ச்சுனன் மக்கள் எய்த இருபத்தோரம்பு பட்டு இருபத்தொரு முறை தன் மார்பில் அடித்துக் கொண்டிறந்த, தன் தாயைக் கொன்றதற்குப் பழி வாங்குமாறு, இருபத்தொரு தலைமுறை அரசரைக் கருவறுக்க வஞ்சினங் கூறினானென்றும், அதன் தொடர்பாகக் காந்தன் என்னும் சோழனைக் கொல்லப் புகுந்து வரும்போது, அச்சோழன் தன் அரசப் பொறையைத் தன் காதற் கணிகை மகனாகிய ககந்தனிடம் ஒப்புவித்து, "நான் அகத்திய முனிவர் கட்டளைப்படி திரும்புமளவும் நீ இதை ஏற்றுத் தாங்கு" என்று சொல்லி நாட்டை விட்டுப் போனதாக ஒரு கதை, மணிமேகலையிற் கூறப்பட்டுள்ளது.

"மன்மருங் கறுத்த மழுவாள் நெடியோன்
தன்முன் தோன்றல் தகாதொளி நீயெனக்
கன்னி யேவலிற் காந்த மன்னவன்
இந்நகர் காப்போர் யாரென நினைஇ
நாவலந் தண்பொழில் நண்ணார் நடுக்குறக்
காவற் கணிகை தனக்காங் காதலன்
இகழ்ந்தோர் காயினும் எஞ்சுத லில்லோன்
ககந்த னாமெனக் காதலிற் கூஉய்
அரசா ளுரிமை நின்பா லின்மையின்
பரசு ராமன்நின் பால்வந் தணுகான்
அமர முனிவன் அகத்தியன் தனாது

ககந்தன் காத்தல் காகந்தி யென்றே
யியைந்த நாமம் இப்பதிக் கிட்டீங்
குள்வரிக் கொண்டவ் வுரவோன் பெயர்நாள்''
(மணி.உஉ:உரு—ஙஉ).

இதனுல், இராமன் காலமும் அகத்தியன் காலமும் காந்தன் காலமும் ஒன்றென்பதும், புகாரின் பழமையும், மூவேந்தர் குடிகளின் தொன்மையும் அறியப்படும்.

அகத்தியர்

வேதக் காலத்தில் வடஇந்தியாவில் நிகழ்ந்த இனப்போர்களெல்லாம், ஆரியச் சூழ்ச்சியால் பழங்குடிமக்களும் வடதிரவிடருமான ஒரே இனத்திற்குள் நிகழ்ந்தவையே. உலகமுதல் உயர்தனிச் செம்மொழி பேசியவரும், ஒப்புயர்வற்ற இலக்கியவிலக்கண முடையவரும், பல்துறைப் பண்பாட்டு நாகரிகரும், கூற்றுவனையும் அறைகூவிக் குமைக்கும் படையினரும், கடல் கடந்து பல நாடுகளைக் கைப்பற்றியவரும், மாபேரினத்தாருமான பண்டைத்தமிழர்; கல்வியறி வில்லாதவரும், கையோங்கினுங் காதவழி யோடுபவரும், கையுங்காலுமாக வந்தவரும், இரந்துண்டே வாழ்பவரும், விரல்விட்டும் எண்ண வேண்டாத சிறு தொகையினருமான, ஆரியப் பூசாரிகட்கு அடிமைப்பட்டுப் போனதையும்; இவ்விருபதாம் நூற்றுண்டின் பிற்பகுதியிலும் ஆரிய வயப்பட்ட பேராயத் தமிழர், உரிமை வேண்டும் நயன்மைக் கட்சித் தமிழரைப் பகைத்து வென்றதையும் இன்றும் எதிர்ப்பதையும்; நோக்குமிடத்து, வடநாட்டுப் பழங்குடி மக்கள் ஆரியப் பூசாரிகட்கு அடங்கிப்போனது ஒருசிறிதும் வியப்பன்று. தமிழரைக் கொண்டே தமிழரை அடக்கி யொடுக்கி வருவது போல், நாட்டுமக்களைக் கொண்டே நாட்டுமக்களை வென்றிருக்கின்றனர் வடக்கிலும்.

ஆரியப் பூசாரிகள் சிந்து வெளியினின்று கங்கை வெளிக்கு வந்தபின், வேத மந்திரங்களின் பொருளை விளக்கும் **பிராமணம்** என்னும் உரைநடைநூல்கள் எழுந்தன. பல் வேள்விச்சாலை முதுகுடுமிப் பெருவழுதியும் அரசவேள்வி (ராஜ ஸூய) வேட்ட பெருநற்கிள்ளியும் பல் யானைச் செல்குழு குட்டுவனும் போன்ற அரசரைத் தமிழகத்தில் துணைக்கொண்டது போன்றே, விதேக

நாட்டு மாதவன் போன்ற அரசரை வடநாட்டில் துணைக் கொண்டு ஆரிய வேள்வி மதத்தைப் பரப்பியிருக்கின்றனர் என்பது, சதபத பிராமணத்தால் தெரிய வருகின்றது (க, ச:க:கo).

வேள்வி எல்லாம் வல்லதும் அளவிலா ஆற்றலுடையது மாகு மென்றும், வேள்வி யாசிரியனே மக்களுட் பெரியவனென்றும், அவன் வேள்வி வளர்ப்பதனாலேயே மழை பெய்து பயிர் விளைந்து ஆ சுரந்து உலகம் நடைபெறுகிறதென்றும், கருத்துக்கள் பரப்பப் பட்டன. ஆரியப் பூசாரி பெரியவன் என்னுங் கருத்தில் பிரமன் (brahman) எனப்பட்டான். பிரமன் = பிராமணன்.

"பிரமன் முதல் நால்வருணத்து" (திருவானைக். கோச்செங். ௬௯).

பிரமகத்தி = பிராமணக் கொலை.

"பிரமகத்தியி னீங்கிப் பிறங்குவான்" (சேதுபு. தனுக். ௫௭).

பிரம காதகன் = பிராமணனைக் கொன்றவன்.

பிரம காயத்திரி = பிராமணர் நாடோறும் ஓதும் மந்திரம்.

பிரம குலம் = பிராமண வகுப்பு.

பிரம சர்ப்பம் = பிராமணப் பாம்பு.

பிரம சூத்திரம் = பூணூல் (பிராமணன் அணிவது).

பிரம தாயம் = பிராமணர்க்கு விடப்பட்ட இறையிலி நிலம்.

பிரம தீர்த்தம் = நீரில் தருப்பையைத் தோய்த்து உடம்பில் தடவுகை.

பிரம தேயம் = பிராமணர்க்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட ஊர்.

பிரம மாராயன், பிரம ராயன் = பிராமண அமைச்சன் பட்டப்பெயர்.

பிரம முடி (முடிச்சு) = பிராமணரின் பூணூலிலுள்ள ஒரு வகை முடிச்சு.

பிரம முனி (ரிஷி) = பிராமண 'முனிவன்'.

பிரமராக்கதன் = தீச்சாவடைந்த பிராமணப் பேய்.

பிரம யோனி =பிராமணப் பிறப்பு.
பிரம விந்து =பிராமணனுக்குப் பிறந்தவன்.

பெரு—பெருகு—வ. ப்ருஹ். பெருங்கதை, பெருவுடையார் என்னும் தென்சொற்களின் மொழிபெயர்ப்பே, ப்ருஹத் கதா, ப்ருஹ தீஸ்வர என்னும் வடசொற்கள்.

பெருமன்—வ. ப்ரஹ்மன்—பிரமன். பிரமனுக் குரியது பிராமணம். பிராமணத்திற் குரியவன் பிராமணன்.

பிராமணர் தென்னாட்டுத் தமிழ நாகரிகச் சிறப்பைப் பற்றிக் கேள்விப்பட்டு, இங்கும் தம் மேம்பாட்டை நிறுவுமாறு, நைமிச அடவியில் அடிக்கடி மாநாடு கூடிச் சூழ்ந்ததாகத் தெரிகின்றது.

ஒரு நிமை (நொடி) நேரத்தில் ஒரு பெரும்படை கொல்லப்பட்ட இடம், நைமிசம் என்று பெயர் பெற்றதாகச் சொல்லப்படுகின்றது. இமை—நிமை—வ. நிமி—நிமிஷ—நைமிஷ—நைமிச.

நைமிசாடவி மாநாட்டுத் தீர்மானத்தின்படி, அகத்தியர் தென்னாடு நோக்கிப் புறப்பட்டார். அவர் காசியினின்று விந்தமலை யடைந்து, அங்கிருந்து தண்டக அடவி வந்து தங்கி, அதன்பின் காஞ்சி யடைந்து, பின் காவிரி தோன்றும் சையம் என்னும் குடகுமலை சென்று, குடமலை வழியாகப் பொதிய மலை போய்ச் சேர்ந்ததாகக் காஞ்சிப்புராணங் கூறுகின்றது.

விந்தமலை கடக்க முடியாத தென்று ஆரியர் நெடுநாளாகக் கருதிக் கொண்டிருந்ததனால், அகத்தியர் அதைக் கடந்து வந்த போது அதன் செருக்கை யடக்கினதாகக் கூறினர்.

"யோகமுறு பேருயிர்கள் தாமுலைவு றாமல்
ஏகுநெறி யாதெனமி தித்தடியி னேறி
மேகநெடு மாலைதவழ் விந்தமெனும் விண்டோய்
நாகமது நாகமுற நாகமென நின்றான்."

என்பது கம்பராமாயணம் (ஆரணி. அகத். நக).

இராமன் தன் மனைவியொடும் தம்பியொடும் காட்டிற்கு வந்து தண்டக அடவியில் அகத்தியரைக் கண்டபோது, அம் முனிவர் இராமனை அங்கேயே யிருந்து அரக்கரைக் கொல்லச்

சொன்னு ரென்றும்; அதற்கு இராமன் தான் அதற்காகவே வந்திருப்பதால், இன்னும் சற்றுத் தெற்கே தள்ளிப் போய் அரக்கர் வரும் வழியிற் காத்திருக்க வேண்டுமென்று சொன்ன னென்றும்; அதற்கு அகத்தியர் இசைந்து, வில்லும் வாளும் அம்பும் புட்டிலுங் கொடுத்துப் பஞ்சவடியிற் போயிருக்கச் சொன்னுரென்றும்; கம்பராமாயணங் கூறுகின்றது.

"விழுமியது சொற்றனையிவ் வில்லிதிவண் மேனுள்
முழுமுதல்வன் வைத்துளது மூவுலகும் யானும்
வழிபடவி ருப்பதிது தன்னைவடி வாளிக்
குழுவழுவில் புட்டிலொடு கோடியென நல்கி.

"இப்புவன முற்றுமொரு தட்டினிடை யிட்டால்
ஒப்புவர விற்றெனவு ரைப்பரிய வாளும்
வெப்புருவு பெற்றவரன் மேருவரை வில்லா
முப்புரமெ ரித்ததனி மொய்க்கணையு நல்கா."

என்பன அகத்தியர் இராமனுக்குப் படைக்கலம் வழங்கியது பற்றியன (கம்ப. அகத். ருரு, ருசு).

அகத்தியர் காசியிற் புறப்படு முன்னரே சிவபெருமானிடந் தமிழ் கற்ருர் என்னுங் கதையும், அகத்தியருக்கு அடுத்தே ஒரு பிராமணக்கூட்டம் வந்து தண்டக அடவியில் தங்கி யிருந்ததும், அகத்தியர் இராமனுக்கு வில்லும் வாளும் வழங்கி யதும், நோக்குமிடத்து, ஓர் ஆரியக் குடியேற்றக் கூட்டத்தின் தலைவராகவே அகத்தியர் திட்டமிட்டு வந்ததாகத் தெரி கின்றது.

அவர் தமிழகம் வந்து முத்தமிழுங் கற்று, ஒரு முத்தமி ழிலக்கணம் இயற்றி, அதற்கு அகத்தியம் எனப் பெயரிட்டார். தமிழ முனிவர் போற் பொதிய மலையில் தங்கி, ஆரியரும் தமி ழருமான மாணவர் பலருக்குத் தமிழ் கற்பித்தார். ஆரிய மாண வருள் ஒருவனை இந்திரன் என்பவன், இயற்றமி ழிலக்கணத் தைத் தழுவி, பொருள் ஆரியத்திற் கேற்காமையால் அதை நீக்கி, எழுத்தும் சொல்லும் பற்றி முதல் ஆரிய இலக்கண நூலை இயற்றி, அதற்கு ஐந்திரம் எனப் பெயரிட்டான். அதைப் பின்பற்றியே பிராதிசாக்கியங்கள் என்னும் ஆரிய வேதச் சிற்றி

லக்கணங்கள் தோன்றி யிருத்தல் வேண்டும். இந்திரன் தமிழெழுத்தினின்று கிரந்த எழுத்தை வகுத்தே நூலியற்றி யிருத்தல் வேண்டும்.

கான்சுத்தாந்தியசு பெசுக்கி (Constantius Beschi) என்னும் வீரமா முனிவர், இத்தாலியா நாட்டினின்று கஅ-ஆம் நூற்றுண்டில் இங்குவந்து, வேம்பாய் (Bombay) மண்டலத்தைச் சேர்ந்த கோவாவில் தமிழ் கற்று, தமிழ்நாட்டிற் பொதுமக்களொடு தொடர்பு கொண்டு சமயப்பணி யாற்றி, ௩௬௧௫ மண்டிலம் (விருத்தம்) கொண்ட **தேம்பாவணி** என்னும் சிறந்த பாவியத்தையும், ௩௭௦ நூற்பா கொண்ட **ஐந்திலக்கணத் தொன்னூல் விளக்கம்** என்னும் அரிய இலக்கண நூலையும், இயற்றியதை நோக்கின், அகத்தியர் முத்தமிழிலக்கணம் இயற்றியது அத்துணை வியப்பிற் கிடமானதன்று.

அகத்தியம் ஆரியரால் அழியுண்டபின், பிற நூல்களிலுள்ள அகத்திய மேற்கோள்களெல்லாம் தொகுக்கப் பட்டன. முதற்கண் தொகுத்த சிறு தொகுப்பு சிற்றகத்தியம் என்றும், பின்னர்த் தொகுத்த பெருந் தொகுப்பு பேரகத்தியம் என்றும், பெயர் பெற்றதாகத் தெரிகின்றது. பிற்காலத்தில் அவையும் இறந்தொழிந்தன.

சிவபெருமான் திருமணத்திற்கு வந்த பதினெண் கணத்தாரையும் தாங்காது பனிமலை யமிழ்ந்ததனுல், ஞாலத்தின் வடதிசை தாழ்ந்து தென்றிசை யுயர, தேவர் வேண்டுகோட்கிணங்கி அகத்தியர் தெற்கில் வந்து பொதிய மலைமேல் நின்றபின், இரு திசையும் சமநிலைப்பட்டன என்னுங் கதை, ஒரு காலத்திற் பனிமலை கடலடி யிருந்ததையும், தெற்கிற் பனிமலை போல் உயர்ந்திருந்த குமரிமலை முழுகினதையுமே, குறிக்கும்.

இனி, அணிவகையிற் பொருள் கொள்ளின், இலக்கியத் துறையிலும் பொருளியல் குமுகாயவியல் அரசியல் முதலிய வாழ்க்கைத் துறைகளிலும், வடக்கில் தாழ்ந்திருந்த ஆரியம் அகத்தியர் தெற்கே வந்தபின் உயர்ந்த தென்றும், தெற்கில் அவற்றில் உயர்ந்திருந்த தமிழம் தாழ்ந்த தென்றும், கொள்ளலாம். இவ்வகையிலேயே,

"மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்"

என்னும் புறப்பொருள் வெண்பாமாலைச் சிறப்புப் பாயிரம் பொருள்படுவ தாகும்.

அகத்தியரை யடுத்தே நாரதரும் தென்னாடு வந்து, இசைத் தமிழ்கற்றுப் **பஞ்சபாரதீயம்** என்னும் இசைத்தமிழ் நூலை இயற்றி யிருத்தல் வேண்டும்.

"இனி இசைத்தமிழ்நூலாகிய **பெருநாரை பெருங்குருகும்**, பிறவும், தேவவிருடி **நாரதன்** செய்த **பஞ்சபாரதீய** முதலா உள்ள தொன்னூல்கள் இறந்தன. நாடகத்தமிழ் நூலாகிய **பரதம் அகத்தியம்** முதலாகவுள்ள தொன்னூல்களும் இறந்தன." என்று கச-ஆம் நூற்றாண்டினரான **அடியார்க்கு நல்லார்** தம் சிலப்பதிகார உரைப்பாயிரத்துள் வரைந்திருத்தல் காண்க.

"நாரதன் வீணை நயந்தெரி பாலும்
....
மங்கல மிழப்ப வீணை மண்மிசைத்
தங்குக இவளென" (சிலப். சு:கஅ—உ௩)

என்பதனாலும், நாரதனின் தமிழகத் தொடர்பும் இசைப்புலமை யும் அறியப்படும். வீணை என்பது தமிழர் நரப்புக்கருவி. நரம்பு விண்ணென இசைப்பது வீணை. நோயினால் நரம்பு வலிக்கும்போது, நரம்பு விண்விண் எனத் தெறிக்கின்றது என்று கூறும் வழக்கை நோக்குக.

விண்—வீண்—வீணை = வ. வீணா. மூங்கிலைக் குறிக்கும் வேணு என்னும் வடசொல்லினின்று, வீணை அல்லது வீணா என்னும் சொல்லைத் திரிப்பது பொருந்தாது. வேதக்காலத்தில் ஆரியருக்கு நரப்புக் கருவியுமில்லை; இசைப்புலமையு மில்லை. ஒருநரம்பில் ஒரே யிசை (சுரம்) இசைப்பது யாழ் என்றும், ஒரு நரம்பில் மெலிவு சமன் வலிவு என்னும் முந்நிலைகளுள் ஒன்றும் பலவும் இசைப்பது வீணை என்றும், வேறுபாடறிக. செங்கோட்டி யாழும் சகோட யாழும் வீணை வகைகளே. இவற்றுள் முன்னது மெட்டுள்ளது; பின்னது கோட்டியம் (கோட்டு வாத்தியம்) போல் மெட்டில்லது.

"நாடகத்தமிழ் நூலாகிய பரதம்" என்று அடியார்க்கு நல்லார் குறித்திருப்பதால், தமிழ்ப் பரதநூலே வடமொழி நட நூலாகிய பரத சாத்திரத்திற்கு முதனூலென அறிக. முதனூலின் பெயரையே வழிநூற்கும் இடுவது ஓர் ஆரிய வலக்காரம். முத னூலை அழித்துவிட்டு வழிநூலை முதனூலென்பது அவர் வழக்கம். ஆதிவாயிலார் வெண்பாவில் இயற்றிய பரத சேனாபதியம் என்னும் நாடகத்தமிழ் நூல் இறந்துபட்டது. இன்று வழங்கும் பரத சேனாபதியம் வேறு.

இராமாயணம் என்பது, கதையை நோக்கினும், பாவி யத்தை (காவியத்தை) நோக்கினும், பாரதம்போல் அத்துணை வரலாற்று முறைப்பட்டதும் தெளிவும் திட்டமுமான செய்திகளைக் கொண்டதும் அன்று.

வடநாட்டில் நாற்பதுவகை இராமாயணக் கதைகள் வழங்கு கின்றன வென்றும், அவற்றுள் ஒன்றில் இராமன் தன் தங்கை யான சீதையை மணந்தான் என்றும், இன்னொன்றில் இராமன் இராவணனின் மனைவியான சீதையைக் கவர்ந்து கொண்டான் என்றும், இருப்பதாகச் சொல்கின்றனர்.

இராமன் கோதாவரிக்குத் தெற்கில் வரவில்லையென்றும், சீதையைக் கவர்ந்த அரக்கன் வாழ்ந்த இலங்கை கோதாவரி யாற்றிடைத் திட்டேயென்றும், தமிழ் நாட்டிலும் இலங்கைத் தீவிலும் நிகழ்ந்தனவாகச் சொல்லப்படும் செய்திகளெல்லாம் பிற்காலத்துக் கட்டுக்கதை யென்றும், ஆராய்ச்சியாளர் சிலர் கருதுகின்றனர்.

இதற்கு ஏதுக்களாவன:—

(க) இராமன் தன் மனைவியுடனும் தம்பியுடனும், கோதா வரிக் கரையிலுள்ளதும் ஐந்து ஆலமரங்கள் சேர்ந்திருந் ததுமான பஞ்சவடியில் தங்கினமை.

(உ) இராவணன் சீதையைப் பஞ்சவடியிற் கவர்ந்தமை.

(ங) இலங்கை என்னும் சொற்கு ஆற்றிடைக் குறை என் னும் பொருளுண்மையும், கோதாவரி நடுவில் ஓர் ஆற் றிடைக்குறை யுண்மையும்.

(ச) கி.மு. ங-ஆம் நூற்றாண்டை மோரியர்க்குமுன், வடநாட் டார் ஒருவரும் தமிழகத்தின்மேற் படையெடுக்காமை.

(ரு) இராமன் படையைக் குரக்குப்படை யென்றதும், குரங்குகட்கு உயர்திணைத் தன்மை கூறியதும், அநுமான் என்னும் குரங்கைப் பன்மொழிப் புலவனென்றும் தொண்ணிலக்கணப் (நவ வியாகரண)பண்டிதனென்றும் பாராட்டியதும்.

(சு) சீதையைத் தேடுமாறு இராமன் குரங்குகளை விடுத்த போது, கோதாவரிக்கு வடக்கிலுள்ள விந்தமலை, நருமதையாறு, ஏமகூடம், தண்டக அடவி, முண்டத்துறைச் சோலை, பாண்டுமலை ஆகிய இடங்களைப் பார்க்கச் சொன்னதுடன், கோதாவரியும் அடையுங்கள் என்றமை.

(எ) எருமையூர்க்கு (மைசூர்க்கு) வடக்கிலுள்ள கிட்கிந்தை மலை, அன்று சேரநாட்டைச் சேர்ந்து மாவலி (மகாபலி) வேந்தன் ஆட்சிக்குட் பட்டிருந்தமை.

(அ) இராமவிலக்குமணர் வெள்ளக்கணக்கான குரக்குப் படையுடன் சோழநாடு வழியாகப் பாண்டிநாடு வந்து, கடலுக்கணை கட்டி இலங்கை புகுந்து, இராவணனொடு பதினெண் மாதம் பொருது வென்று அரக்கர் குலத்தை வேரறுத்தனர் என்னும் செய்தி, சோழனுக்கும் பாண்டியனுக்கும் தெரியாது போனமை.

(கூ) இராமன் விந்தமலைக்குத் தெற்கில், முனிவர் என்னும் ஆரியப் பூசாரிகளும் அரக்கரும் சடாயு என்னும் கழுகும் குரங்குகளும் தவிர, தமிழரையும் வேறு மக்களையுங் காணுமை.

க0) பீடுமன், இராமன் காலத்தவனான பரசுராமனிடம் விற்கலை பயின்றவனாயினும், இராமனையோ இராமாயணத்தையோ அறியாதிருந்தமை.

(கக) இராமாயணக் கதை இடத்திற் கிடமும், இராமாயணப் பாவியம் ஆசிரியர்க் காசிரியரும், சிறிதும் பெரிதும் வேறுபட்டிருத்தல்.

(கஉ)இராமாயணப் பாவியம், மேன்மேலும் உயர்வுநவிற்சியும் இடைச் செருகலும் பிற் சேர்க்கையும் கதை மாற்றமுங் கொண்டு வந்துள்ளமை.

இராமாயணப் பனுவல் முதன்முதல் வான்மீகியாரால் சிற்றளவாகப் பாடப்பட்டிருக்கலாம். பாரதக் காலத்திற்குப் பின் பதின் தோற்றரவு (தசாவதாரம்) வகுக்கப்பட்டபோது, அது விரிவடையத் தொடங்கி யிருக்கலாம்.

''பருதி சூழ்ந்தவிப் பயங்கெழு மாநிலம்
ஒருபகல் எழுவர் எய்தி யற்றே
வையமுந் தவமுந் தூக்கின் தவத்துக்
கையவி யனைத்தும் ஆற்ற தாகலின்
கைவிட் டனரே காதலர் அதனால்
விட்டோரை விடாஅள் திருவே
விடாஅ தோரிவள் விடப்பட் டோரே''

என்னும் புறப்பாட்டு (நூஅ) வான்மீகியார் என்னும் புலவ ரொருவர் பாடியதாக வுள்ளது. இது அரசு நிலையாமையை யும் தவத்தின் மேன்மையையும் அழகாக எடுத்துக் கூறுவது. ஆசிரியர் பெயரையும் பாட்டின் பொருளையும் நோக்குமிடத்து, இவர் இராமாயண வான்மீகியார் தாமோ, அன்றி அவர் வழி யினரோ என்னும் எண்ணம் மின்போல் தோன்றி மறைகின் றது.

அகத்தியர் வழிகாட்டியபின் தமிழகம் வந்த பிராமணர், தென்னாட்டாரும் வடநாட்டார் போன்றே மதப்பித்தரா யிருந் தது கண்டு, தாம் நிலத்தேவரென்றும் தம் மொழி தேவ மொழி யென்றும் ஏமாற்றி, குமரிமுதல் பனிமலைவரை இந்தி யப் பழங்குடி மக்கள் அனைவரையும், உலகில் மக்களுள்ள காலமெல்லாம் தமக்கும் தம் வழியினர்க்கும் அடிமைப்படுத்துதற் பொருட்டு, குமுகாயத் துறையில் ஒன்றும் சமயத்துறையில் ஒன்றுமாக இரணைத்திந்தியத் திட்டங்களை வகுத்துவிட்டனர்.

நால் வரணப் பகுப்பு

தமிழ்ப் பொருளிலக்கணத்தில் அகப்பொருட்குச் சிறப்பாக வுரியவராகத் தலைமக்களே கொள்ளப்பட்டதனால், கல்வி காவல் வணிகம் உழவு கைத்தொழில் என்னும் மருதநிலத் தொழில் கள் ஐந்தனுள், கைத்தொழில் உழவிற்குப் பக்கத் துணையான

தென்று நீக்கி, ஏனை நான்கிற்கும் உரிய அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்னும் நால்வகுப்பாரையே காதலன் காதலி யென்னுங் கிளவித்தலைவராகக் குறித்தனர்.

அந்தணர் என்பது துறவியரான ஐயரையே சிறப்பாகக் குறிக்குமேனும், அகப்பொருட்டுறைக்கு அவர் ஏற்காமையின் இல்லறத்தாரான பார்ப்பாரே அந்தணர் என்னும் பெயராற் கொள்ளப் பெறுவர். அந்தணர் முதலிய நால்வகுப்பார் பெயரும் அவ்வவ்வகுப்பார் அனைவரையுங் குறிக்குமேனும், அவருள் தலைமையானவரே, கிளவித்தலைவராகக் குறிக்கப் பெறுவர் என்பதை அறிதல் வேண்டும். ஆகவே, வேளாளர் என்பவர் அவ்வகுப்பாரின் (உழுவித்துண்ணும்) தலைவரான வேளிர் என்னும் குறுநில மன்னரே யென்றும், வணிகர் என்பவர் மாசாத்துவன் போலும் நிலவணிகரும் மாநாய்கன்போலும் நீர்வணிகருமே யென்றும், அரசர் என்பவர் கோக்களும் வேந்தருமே யென்றும், அந்தணரென்பார் தலைமைப் புலவரும் குருக்களும் அமைச்சருமே யென்றும், இது புலனெறிவழக்க மென்னும் இலக்கிய (செய்யுள்) வழக்கே யென்றும், அறிந்துகொள்க. துறவியர் அகப்பொருட் டலைவ ரல்லரேனும், தூதுசெல்லல் சந்துசெய்தல் முதலிய புறப்பொருட்குத் தலைவராவர்.

உலக வழக்கில், கல்வி காவல் (ஆட்சி), வணிகம் உழவு கைத்தொழில் என்னும் ஐவகைத் தொழில் செய்வோரும், முறையே, பார்ப்பார் அரசர் வணிகர் உழவர் (வேளாளர்) தொழிலாளர் எனப்படுவர். பிராமணர் இப்பாகுபாட்டைப் பயன்படுத்தி, பார்ப்பாரையும் அந்தணரையும் ஒருங்கே பிராமணர் என்றும், அரசரைச் சத்திரியர் என்றும், உழவர் சிலர் மாடு மேய்ப்பதாலும், உழுவித்துண்ணும் வேளாளர் வகுப்பைச் சேர்ந்தவர் (வெள்ளாளர்) பலர் கடைக்காரரும் வணிகருமா யிருப்பதாலும், உழவும் வணிகமும் மாடுமேய்ப்பும் ஒருங்கே செய்பவரை வைசியர் என்றும், உழவுங் கைத்தொழிலுங் கூலிவேலையுஞ் செய்யும் மூவகுப்பாரைச் சூத்திர ரென்றும், மக்களை நால்வகுப்பாக வகுத்து, பிராமணனுக்கு வெண்ணிறமும் சத்திரியனுக்குச் செந்நிறமும் வைசியனுக்குப் பொன்னிறமும் சூத்திரனுக்குக் கருநிறமும் சார்த்திக் கூறி, நால்வரணப் பாகுபாட்டை ஏற்படுத்தி, பிராமணர் கல்வித்தொழிலையும் பிற வகுப்பார் தத்தமக்குக் குறிக்கப்பட்ட தொழில்களையும் வழிவழி

செய்து வரவேண்டுமென்றும், சத்திரியன் முதலிய மூவரும் பிராமணனுக்கு இறங்கு வரிசையில் தாழ்ந்தவரென்றும், சூத்திரன் மேன் மூவர்க்கும் வைசியன் மேலிருவர்க்கும் சத்திரியன் பிராமணர்க்கும் தொண்டு செய்யவேண்டுமென்றும், இது இறைவன் ஏற்பாடென்றும், மேல்வகுப்பார் மூவரும் பூணூல் அணியும் இருபிறப்பாளரென்றும், வேதத்தைச் சூத்திரன் காதாலுங் கேட்கக் கூடாதென்றும், பிராமணனைக் காணின் மற்ற மூவரும் தத்தம் தாழ்வுநிலைக்குத் தக்கவாறு ஒதுங்கி நிற்கவேண்டுமென்றும், இறைவன் கட்டளை யிட்டதுபோற் கற்பித்துவிட்டனர்.

இச்சட்டதிட்டம் வடநாட்டில் விரைந்து முழுவதும், தென்னாட்டிற் படிப்படியாகப் பேரளவும், ஆட்சிக்குக் கொண்டுவரப் பட்டது.

இங்ஙனம், இயற்கையாகத் தொழில்பற்றி யிருந்த குலப்பாகுபாடு நிறம் பற்றி மாற்றி யமைக்கப் பட்டது. வரணம் நிறம். வள்ளுதல்=வளைத்தல், வளைத்தெழுதுதல். வள்—வளை. வளைத்தல்=வளைத்தெழுதுதல், வண்ணப் படம் வரைதல், வரைதல்.

''உருவப் பல்பூ வொருகொடி வளைஇ'' (நெடுநல். கக௩).

வள்—வண். வளை—வணை. வண்—வண்ணம் = க. எழுத்து. உ. எழுதிய படம். ௩. படமெழுதுங் கலவை. ''பலகை வண்ண நுண் டுகிலிகை'' (சீவக. கக௦௭). ௪. எழுதுங் கலவை நிறம், நிறம். ''வான்சுதை வண்ணங் கொளல்'' (குறள். எகச). வண்ண மாலை=நெடுங்கணக்கு. வ. வர்ண மாலா.

வள்—வர்—வரி. வரிதல்=எழுதுதல். வரித்தல்=க. எழுதுதல். ''வள்ளுகிர் வரித்த சாந்தின் வனமுலை''(சீவக. உ௫௩உ). உ. ஓவியம் வரைதல். ''வல்லோன் தைஇய வரிவனப்புற்ற வல்லிப் பாவை'' (புறம். ௩௩). ௩. கோலஞ் செய்தல். ''புன்னை யணிமலர் துறைதொறும் வரிக்கும்''(ஐங்குறு. ககஎ).

வரி=க. கோடு. ''நுண்ணிய வரியொடு திரண்டு''(சீவக. கஎ௦உ). வரிமா=வரிப்புலி(வேங்கை). உ. தொய்யிற் கொடி வரை. ''மணிவரி தைஇயும்''(கலித். எசு). ௩. கை வரை. ௪. எழுத்து, எழுத்தின் வரிவடிவு. ௫. ஓவியம். சு. நிறம். ''வரியணி சுடர் வான்பொய்கை'' (பட்டினப். ௩அ).

வர்—வரு—வருவு. வருவுதல் வரைதல். வருவுமுள் = பொன்னைத் தகட்டிற் கோடிழுக்கும் இருப்பூசி.

வரு—வரை. வரைதல் எழுதுதல்.

வரி + அணம் = வரணம் = க. எழுத்து, ஓவியம். உ. நிறம். ௩. நிறம் பற்றிய நால் வகுப்பு.

வண்ணம் = வரணம். ஒ. நோ: திண்ணை = திரணை.

வண்ணம்—வண்ணி. வண்ணித்தல் = ஓவியம் வரைந்து கோலஞ் செய்தல் போல், ஒரு பொருளைப்பற்றி அழகாகப் புனைந்துரைத்தல். "வண்ணித்த லாவ தில்லா" (சீவக. உசருஅ).

வரணம்—வரணி. வரணித்தல் = அழகாகப் பலபடப் புனைந் துரைத்தல்.

வண்ணி—வண்ணனை. வரணி—வரணனை.

வண்ணம் = நிறம், நிறத்தால் வேறுபடும் பொருள்வகை, வகை (பொது), இனவகை, ஓசைவகை, ஓசைவகையால் ஏற்படும் செய்யுள்வகை (இருபது தொல்காப்பிய வண்ணமும் நூறு அவிநய வண்ணமும் கணக்கற்ற திருப்புகழ் வண்ணமும்), பாட்டுவகை (கணக்கற்ற வண்ண மெட்டுக்கள்).

வண்ணம் என்னும் சொல்லிற்குரிய பொருள்கள், பெரும்பாலும், வரி வரணம் என்னும் சொற்கட்கு முண்டு.

அவ்வண்ணம் இவ்வண்ணம் என்பன, அப்படி இப்படி என்று பொருள்பட்டுப் பொதுவான வகையைக் குறிப்பன. இன்ன வண்ணம்—இன்னணம்.

வரணி—வ. வர்ண். வரணனை—வ. வர்ணனு.

வண்ணம் வரணம் என்னும் இரு தென்சொற்களையும் வடசொல்லென மயங்கி, வரணம் என்பதை வருணம் என்றும், வரணி என்பதை வருணி என்றும், வரணனை என்பதை வருணனை என்றும், அகரத்தை உகரமாக மாற்றி எழுதுவதோ டமையாது, வண்ணம் வண்ணி என்னும் சொற்களையும் வர்ண வர்ண் என்னும் வடசொல் வடிவுகளின் திரிபாகக் கொள்வா ராயினர்.

நால்வகை வரணப் பகுப்பின் பின்னரே, பேருலக வடிவான 'விராட்' என்னும் பரம்பொருளின் முகத்தினின்று பிராமணனும், தோளினின்று (புயத்தினின்று) சத்திரியனும், தொடையினின்று வைசியனும், பாதத்தினின்று சூத்திரனும், தோன்றினர் என்னும் 'புருட சூத்தம்' (புருஷ ஸூக்த) இருக்கு வேதம் பத்தாம் மண்டலத்திற் செருகப்பட்டது. பேருலக வடிவான பரம்பொருட் கருத்தும், பிராமணர்க்குத் தமிழரொடு தொடர்பு கொண்டபின் தோன்றியதே.

முகம் முதலிய நான்கனுள்ளும், முகமே உச்சியிலும் ஏனை மூன்றும் ஒன்றினொன்று தாழ்ந்தும், முறையே மேலிருக்கும் ஒன்றையும் இரண்டையும் மூன்றையும் தாங்கியும், இருப்பது போல், நால்வரணத்துள்ளும் பிராமணனே தலைமையானவன் என்பதும், ஏனை மூவரும் முறையே ஒருவரினொருவர் தாழ்ந்தவரும் மேலுள்ள ஒருவனையும் இருவரையும் மூவரையும் தாங்க வேண்டியவருமாவர் என்பதும்; நாலுறுப்பும் ஒரே ஆள் வடிவான பேருலக மகன் (விராட் புருஷ) கூறுகளாதலால், நால்வரணமும் இறைவன் படைப்பென்பதும்; கருத்தாம்.

இனி, கல்வித்தொழிலுக்கு வாயும் (நாவும்) மூளையும், போர்த்தொழிலுக்குத் தோளும், இருந்து துலை நிறுத்தற்குத் தொடையும், நடந்து பாடுபடுதற்குப் பாதமும், வேண்டுமென்பது; உட்கருத்தாம்.

இனி, போருக்கு வேண்டும் தோள்வலிமை மறக் குடியினர்க்கும், வணிகத்திற்கு வேண்டும் பண்டமாற்றுத் திறமை வாணிகக் குடியினர்க்கும், உழைப்பிற்கு வேண்டும் உடல்வலிமை பாட்டாளி மக்கட்கும், இருப்பதுபோல், கல்விக்கு வேண்டும் நாவன்மையும் மதிநுட்பமும் பிராமணனுக்கே யுண்டென்பதும், ஆதலால், நால்வரணத்தாரும் தத்தமக்குக் குறிக்கப்பட்ட தொழிலையே செய்துவர வேண்டுமென்பதும், நச்சுத்தன்மையான சூழ்ச்சிக் கருத்தாம்.

பிராமணர் பொதுமக்களொடு தொடர்புகொள்ளாது நேரே வேந்தரை யடுத்து, அவர் பழங்குடிப் பேதைமையையும் கொடைமடத்தையும் மதப் பித்தத்தையும், தம் வெண்ணிறத்தையும் வெடிப்பொலி மொழியையும், வரையிறந்து பயன்படுத்திக் கொண்டு, தாம் நிலத்தேவர் என்றும் தம்மொழி தேவ

மொழியென்றும், தாம் குறித்த வேள்விகளைச் செய்யின் இம்மையில் மாபெரு வெற்றியும் மறுமையில் விண்ணுலக வேந்தப் பதவியும் பெறலாமென்றும், துணிந்து சொன்னபோது, அறிவியற் கல்வியும் மொழியாராய்ச்சியும் இல்லாத அக்காலத்து அரசர் முற்றும் நம்பி அடிமையராயினர். "மன்னன் எப்படி, மன்னுயிர் அப்படி." ஆதலால், குடிகளும் ஆரியர்க் கடிமையராயினர்.

ஒன்றரை நூற்றாண்டு ஆங்கிலர் ஆட்சியும், இரு நூற்றாண்டு ஆங்கில அறிவியற் கல்வியும், கால் நூற்றாண்டு நயன்மைக் கட்சி முன்னேற்றமும், ஏற்பட்ட பின்னும், மேலையர் திங்களையும் செவ்வாயையும் அடையும்போதும், தமிழின் திரிபான சமற்கிருதத்தைத் தேவமொழியென்றும், சமற்கிருதச் சொல்லின் ஆற்றல் தமிழ்ச்சொற் கில்லையென்றும், உறழுரையாடுவாராயின், அதைச் செவிமடுத்துத் தமிழரும் ஊமையரும் உணர்ச்சி நரம்பற்றவருமா யிருப்பாராயின், மூவாயிரம் ஆண்டு கட்கு முற்பட்ட கள்ளங் கரவற்ற வெள்ளந்தி மக்கள் ஆரிய ஏமாற்றிற்கு இணங்கியது வியப்பாகாது.

முத் திருமேனிப் புணர்ப்பு

பிராமணர் தமக்கும் தம் வேதத்திற்கும் தம் வேதமொழிக்கும் எத்துணை யுயர்வைத் தேடிக் கொள்ளினும், மதத்துறையில் மட்டும் தமிழரை வெல்லமுடியவில்லை. ஏனெனில், ஆரிய மதம் வீடு பேற்றுக் கொள்கையும் கடவுளுணர்ச்சியுங் கோவில் வழிபாடுமில்லாது, கீழ்மக்கள் பேய்கட்குப் படைப்பதும் காவு (பலி) கொடுப்பதும் போல், இயற்கையுஞ் செயற்கையுமான பல்வேறு சிறுதெய்வங்கட்கு, விலங்குகளைக் காவிட்டுத் தீயிற் சுட்டெரிக்கும் அல்லது வாட்டித்தின்னும் வேள்விநெறியே.

தமிழரோ, எங்கும் நிறைந்து எல்லாவற்றையும் படைத்துக் காத்தழிக்கும் இறைவனை, சிவன் என்னும் பெயராலும் திருமால் என்னும் பெயராலும் பெரும்பாலும் காய்கனிகளையே படைத்து வழிபடுவனவும், வெவ்வேறு மெய்ப்பொருளியல் கொண்டனவும், இல்லறத்தாலும் துறவறத்தாலும் வீடுபேறடைவனவுமான, சிவமதம் திருமால்மதம் என்னும் இருபெரு மதங்களை யுடையவர்.

அவ்விரு மதங்களையும் ஆரியப்படுத்துவதற்கு, இறைவனின் முத்தொழிற் கொள்கையைப் பயன்படுத்தி, முத்தொழிற்கும் வெவ்வேறு தலைவர் உண்டென்றும், படைப்பவன் பிரமா என்றும், காப்பவன் திருமால் என்றும், அழிப்பவன் சிவன் என்றும், முத்திருமேனிக் (திருமூர்த்திக்) கொள்கையை வகுத்து விட்டனர் பிராமணர்.

பிரமா என்னும் சொல் பிரமன் என்னுஞ் சொல்லினின்று திரித்ததாகும். பிரமா பிராமணக்குல முதல்வன் என்பதும், அதற்கேற்ப நால்வரணங்களையும் அவற்றிற் குரிய குணங்களுடன் படைப்பவன் என்பதும், உட்கருத்து.

பிரமா மூவுலகும் அல்லது பல்லுலகும் படைப்பவன் என்று கொள்ளப்படினும், உண்மையிற் பிரமா பிராமணராற் படைக்கப்பட்ட செயற்கைத் தெய்வமே.

முத் திருமேனிக் கொள்கை வகுக்கப்பட்ட பின்பும், தமிழர் பிரமாவை வணங்காதும் ஒப்புக்கொள்ளாதும் முன்போற் சிவனையும் திருமாலையுமே வணங்கி வந்திருக்கின்றனர். பிரமாவிற்குக் கோவிலும் வழிபாடும் இல்லாது போயின.

சிவனையும் திருமாலையும் ஆரியத்தெய்வங்களாகக் காட்டுதற்கு, வேதத்தெய்வங்களோடு அவரை இணைத்தனர். சூருவளித்தெய்வமாகிய உருத்திரனைச் சிவனென்றும், கதிரவத் தெய்வமாகிய விட்டுணுவைத் (விஷ்ணுவைத்) திருமாலென்றும், கூறினர்.

சிவன் என்னுஞ் சொல்லை ஆரியச்சொல் லாக்குதற்கு, அதற்கு மங்கலமானவன் அல்லது நன்மைசெய்பவன் என்று பொருள்கூறி, சிவ என்னும் குறிப்புப் பெயரெச்சத்தை உருத்திரன் இந்திரன் அக்கினி என்னும் வேதத் தெய்வங்களின் பெயருக்கு அடையாக்கினர். சிவன் என்னுஞ் சொற்போன்றே சிவந்தவன் என்று பொருள்படும் அரன் என்னுஞ் சொல்லை, ஹரன் என்று திரித்து அழிப்பவன் என்று பொருள் கூறினர்.

வேதத்தை அல்லது வேதங்களை முதற்கண் எழுதாது செவிமரபாகப் போற்றிவந்ததற்கு, எழுத்தின்மையே கரணியம். பின்னர்த் தமிழ் எழுத்து வழிப்பட்ட கிரந்த எழுத்துத் தோன்றிய பின்னும் பலநூற்றுண்டு எழுதா திருந்தமைக்குக் கரணியங்கள் பின்வரும் மூன்றாகும்.

(க) வேதப் பொருளின் தாழ்வை மறைத்தல்.

(உ) வேதமோதிப் பிழைக்கும் தொழிலை ஆரியப் பூசாரிகட்கே உரிமை யாக்கல்.

(ங) அவ்வக்கால அறிவு வளர்ச்சிக் கேற்ப, வேண்டிய பகுதிகளை இடைச்செருகல்.

"ஆற்ற லழியுமென் றந்தணர்கள் நான்மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதார்"

என்பது, கோதமர் பெயரிலுள்ள திருவள்ளுவ வெண்பா மாலைச் செய்யுள்.

பொதுவாக ஆரியர் என்று சொல்லப்படும் பிராமணர், முதற்கண் சிந்துவெளி யிலிருந்து பின்னர்ப் பிரம வர்த்தத்திற்கும், அதன்பின் மத்திய தேசத்திற்கும் பரவினர். சரசுவதி யாற்றிற்கும் திருடத்துவதி யாற்றிற்கும் இடைப்பட்டது **பிரம வர்த்தம்**. சரசுவதி மறைந்த வினசனத்திற்குக் கிழக்கும், பிரயாகைக்கு மேற்கும், பனிமலைக்குத் தெற்கும், விந்தியமலைக்கு வடக்கும் உள்ள நாட்டுப்பகுதி **மத்திய தேசம்**. இராமாயணக் காலத்தில் பிராமணர் மத்திய தேசக் கிழக்கெல்லை அடைந்திருத்தல் வேண்டும்.

சிந்து என்னும் பெயர்

ஆரியர் வருமுன்னர் தமிழரே வடநாட்டிற் குடியேறி யிருந்தமையாலும், குமரிமலை முழுகி அரபிக்கடல் தோன்றியபின், சிந்துவெளி வழியாகவே தமிழர் அல்லது திரவிடர் மேலையாசியாவிற்கும் அதன்பின் ஐரோப்பாவிற்கும் சென்றிருப்ப ராதலாலும், சிந்து என்னும் ஆற்றுப்பெயர் தமிழர் இட்ட தமிழ்ப்பெயராகவே யிருக்கலாம்.

சிந்துதல் சிதறுதல். சிதறுதல் நீர்ப்பொருளையும் கட்டிப் பொருளையும் சிறுசிறு பகுதியாக வீழ்த்துதல். மழை துளிதுளியாகப் பெய்தலின், மழை பெய்தல் துளி சிதறுதல் என்று சொல்லப்படும்.

"தாழிருள் துமிய மின்னித் தண்ணென
வீழுறை யினிய சிதறி யூழிற்
கடிப்பிகு முரசின் முழங்கி யிடித்திடித்துப்
பெய்தினி வாழியோ பெருவான்" (குறுந். ௨௭௦)

என்பது முகில் துளி சிதறுதலையும்,

"அருவி யன்ன பருவுறை சிதறி
யாறுநிறை பகரு' நாடனை" (ஷ ௨௭௧)

என்பது ஆறு துளி சிதறுதலையும், குறித்தன.

முகில் துளி சிந்தியே மக்கட்குக் கீழ்நீரும் மேல்நீரும் ஆற்றுநீரும் கிடைத்தலால், சிந்து என்னுஞ் சொற்கு நீர் (பிங்.), ஆறு (பிங்.) என்னும் இருபொருளும் ஏற்பட்டன.

இனி, சிந்துதல் என்னும் வினைச்சொற்குத் தெளித்தல் என்பதனொடு ஒழுகுதல் என்னும் பொருளு மிருத்தலால், சிந்து என்னுஞ் சொல் ஓர் ஆற்றின் பெயராவதற்கு முற்றும் பொருத்தமானதே. வடமொழியில் இச்சொற்கு மூலமில்லை. மானியர் உவில்லியம்சு தம் சமற்கிருத-ஆங்கில அகரமுதலியில், ஒருகால் சித் (Sidh) என்பது மூலமா யிருக்கலாம் என்று ஐயுறவாகக் குறிப்பர். அச்சொற்குச் செல்லுதல் (to go) என்னும் பொருளே உள்ளது. மேலும், இருக்கு வேதத்தில் சிந்தாற்றிற்குச் சரசுவதி யென்னும் பெயரே வழங்கப்பட் டிருப்பதாகத் தெரிகின்றது. பிற்காலத்தில் ஆரியர் பிரமவர்த்தம் சென்ற பின்னரே, அந்நிலப் பகுதிக்கு மேலெல்லையாகவும் சட்டிலெசு என்னும் கிளையாற்றிற்குத் துணைக் கிளையாகவும் இருந்த, சிற்றாற்றிற்கு அப்பெயரை இட்டதாகத் தெரிகின்றது. அது இன்று சுர்சூதி (Sursooty) என்று வழங்குகின்றது.

பழம்பாரசீகரின் சொராத்திரிய (Zoroastrian) வேதமாகிய **செந்து அவெத்தாவில்** (Zend-Avesta), **ஹப்த ஹைந்தவ** என்பது அசுரமத்தாவினாற் படைக்கப்பட்ட 'பதினாறு' தெய்வங்களுள் ஒன்றாகக் கூறப்பட் டிருப்பதனாலும், **ஹரக்வைதி** (Haraquaiti) என்பது ஓர் ஆபுக்கானிய ஆறாகக் குறிக்கப்பட் டிருப்பதனாலும், பலதெய்வங்கள், சிறப்பாக அக்கினி, சொராத்திரியர்க்கும் இருக்கு வேதியர்க்கும் பொதுவா யிருப்பதனாலும், அவ்விரு வகுப்பாரும் ஒருகாலத்திற் சிந்துவெளியில் ஓரினத்தாரும் ஒரே மதத்தாருமாய் வாழ்ந்திருந்து, பின்னர் முன்னவர் மேற்கும் பின்னவர் கிழக்குமாகப் பிரிந்து போயினர் என்பது, உய்த்துணரப்படும்.

சகரம் அல்லது ஸகரம் பாரசீகர் வாயில் ஹகரமாகத் திரியும்.

எ—டு:

சிந்து (ஸிந்து) — ஹிந்து
ஸப்தன் (ஏழு) — ஹப்தன்
அசுரன் (அஸுர) அஹுர

இம்முறையிலேயே, ஸப்தஸிந்து என்பது ஹப்தஹிந்து என்றும், ஸரஸ்வதி என்பது ஹரக்வைதி என்றும், திரிந்துள்ளன.

இதனால், சிந்தாறு ஒருகாலத்தில் எழுகிளைகள் கொண்டிருந்ததாகத் தெரிகின்றது. சிந்தாற்றுத் தேவிக்கு ஏழ் உடன்பிறந்தாண்மார் (sisters) என்ற இருக்குவேதியர் கொள்கையினாலும் இது வலியுறும்.

இனி, சில தெய்வ வேறுபாட்டினாலும் கொள்கை மாறுபாட்டினாலும், சொராத்திரியரின் முன்னோர் பகைமை கொண்டே பிரிந்து போனதாகத் தெரிகின்றது. செந்து அவெத்தாவிற் கூறப்பட்டுள்ள **அஹுர மஸ்தா** இருக்கு வேதத்திற் குறிக்கப்படவில்லை. சொராத்திரியர் அசுரரை நல்லவராகவும் தேவரைத் தீயவராகவுங் கொண்டனர். இந்திய ஆரியர் கருத்து இதற்கு முரணானது.

பாரதக் காலம்

(தோரா. கி. மு. 1100—1000)

பீடுமன் பரசுராமனிடம் விற்கலை பயின்றவன் என்று சொல்லப்படுவதால், பாரதக் காலம் இராமாயணக் காலத்திற்கு இரு தலைமுறையே பிற்பட்டதாகும்.

பாண்டவரும் கௌரவரும் திங்கள் மரபைச் சேர்ந்தவர். வடநாட்டுத் திங்கள் மரபு, பாண்டியன் கங்கைக்கண் நிறுவிய படிநிகராளி வழியினதே. பாண்டவரின் முன்னோர் புதன் (அறிவன்), புரூரவன், ஆயு, நகுடன், யயாதி, பூரு, துடியந்தன், பரதன், அத்தி, குரு, சந்தனு, பீடுமன், விசித்திரவீரியன், திருதராட்டிரன், பாண்டு என்போர். பீடுமன் கௌரவ பாண்டவரின் பாட்டனும், திருதராட்டிர பாண்டுவர் அவரின் தந்தைமாரு மாவர்.

பாரதக் காலத்திற் பெயர்பெற்றவனும் பாரதப் போரை இயக்கியவனும் கண்ணன் ஆவன். அவன் தென்னாட்டு ஆயர் மரபுப்படி, கோசல நாட்டரசன் மகள் சத்தியை என்னும் நப்பின்னையை ஏழ் ஏறுதழுவி மணந்தான். அவன் மதுராவில் ஆண்டுகொண்டிருந்த போது, காலயவனன் என்பவன் பெரு மிலேச்சப் படையுடன் வந்து அந்நகரை முற்றுகையிட்டான். அதை முன்னரே அறிந்த கண்ணன், குசராத்தின் மேற்கில் அரபிக்கடலிலுள்ள ஒரு தீவில் துவாரகை (துவரை) என்னும் நகரை யமைத்து, அதற்குத் தன் தலைநகரை மாற்றிக் கொண்டான்.

யவனம் என்பது கிரேக்க நாட்டிற்கொரு பெயர். யவனன் கிரேக்கன். சின்ன ஆசியாவிலும் கிரேக்க நாடுகளிருந்தமை யால், அவற்றையடுத்து வாழ்ந்த அரபியர்க்கும் அவரையொத்த மூர் வகுப்பாரான வடஆப்பிரிக்கர்க்கும், அப்பெயர் வழங்கிற்று. அதனால், உண்மையான கிரேக்கரை வெள்ளை யவனர் என்றும், அரபியரும் மூராருமான சோனகரைக் காலயவனர் என்றும், நிறம் பற்றி வேறுபடுத்திக் கூறியதாகத் தெரிகின்றது. காலம் கருப்பு. 'சுன்னத்து' என்னும் வழக்கம்பற்றிச் சோனகர் எனப் பெயர் பெற்றனர் போலும்! மிலேச்சர் பெலுச்சியர். பெலுச்சியர் நாடே பின்னர்ப் பெலுச்சித்தானம் (Baluchistan) எனப்பட்டது.

மாவலி என்னும் சேரவேந்தன் மகனான வாணன், வேம்பாய்க்கு (Bombay) வடக்கே மேல்கரையடுத்த சோணிதபுரம் என்னும் நகரிலிருந்தாண்டு வந்தான். அவன் மகள் உழை கண்ணன் பேரனான அநிருத்தனொடு களவொழுக்கம் பூண்டு வந்தாள். அதுகண்ட வாணன் அநிருத்தனைச் சிறையிட்டான். அதனால் கண்ணன் படையொடு வந்து பொருது வாணனைத் தோற்கடித்தான். உடனே வாணன் அநிருத்தனையும் தன் மகளையும் கண்ணனிடம் ஒப்புவித்து மன்னிப்புப் பெற்றான். அன்று அநிருத்தன் தந்தையான காமன் (பிரத்தியும்நன்) ஆடிய வாகைக் கூத்து, பேடி என்னும் புறநட வகையாகும். அதையே,

"சுரியற் றாடி மருள்படு பூங்குழற்
பவளச் செவ்வாய்த் தவள வாணகை
யொள்ளரி நெடுங்கண் வெள்ளிவெண் டோட்டுக்
கருங்கொடிப் புருவத்து மருங்குவளை பிறைநுதற்
காந்தளஞ் செங்கை யேந்திள வனமுலை

யகன்ற வல்கு லந்நுண் மருங்கு
லிகந்த வட்டுடை யெழுதுவரிக் கோலத்து
வாணன் பேரூர் மறுகிடைத் தோன்றி
நீணில மளந்தோன் மகன்முன் னாடிய
பேடிக் கோலத்துப் பேடுகாண் குநரும்''
(மணி. ௩:௧௧௬—௧௨௫)

என்று பாடினார் சீத்தலைச்சாத்தனார். பேடிக் கூத்து முன்னரே தமிழகத்தில் ஆடப்பட்டு வந்தது. முதற்கடல்கோட்குப்பின் குமரிநாட்டினின்று வடக்கிற் சென்ற ஆயர் வழியினனே கண்ணனாதலால், அவன் மகன் அந்நடத்தை முன்னோர் வாயிலாக அறிந்திருந்து ஆடினான்.

வாணன் நகர் குசராத்து என்னும் குச்சர நாட்டிலிருந்ததனால், அற்றைச் சேரநாடு அதுவரை பரவி யிருந்தமை அறியப்படும். இதனால், முழுகிப்போன குமரிநாடு முழுதும் பாண்டிநாடா யிருந்தகாலத்து, இந்திய நிலமுழுதும் குமரியாற்றிலிருந்து பனிமலைவரை, கிழக்கிற் சோழநாடும் மேற்கிற் சேரநாடுமாக இருந்ததென்னும் உண்மையும் புலனாகும். குமரி நாடு முழுகிய பின்பும், இந்தியா முழுதும் மூவேந்தராட்சிக் குட்பட்டு முந்நாடாயிருந்த நிலைமையையே, நாரதன் மூவுல குலாவி (திரிலோக சஞ்சாரி) என்னும் வழக்குணர்த்தும். மூவுலகென்றது மூவேந்தர் நாடுகளையே. 'திரிபுவன தேவன்', 'திரிபுவனச் சக்கரவர்த்தி', 'மூவுலகாளி', என்று சோழர் விருதுப் பெயர்கள் கொண்டிருந்தமை காண்க.

அகத்தியர் இராமன் **காலத்திலேயே** தமிழகம் வந்து பொதியமலையில் தங்கி **விட்டதனால்**, அவர் "துவராபதிப் போந்து நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரையும் பதினெண்குடி வேளிருள்ளிட்டாரையும் அருவாளரையுங் கொண்டுபோந்து, காடுகெடுத்து நாடாக்கிப் பொதியின்கணிருந்து, இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து, இராக்கதரை ஆண்டு இயங்காமை" விலக்கினார் என்று, நச்சினார்க்கினியர் தம் தொல்காப்பிய எழுத்ததிகார **உரை** முகத்திற் கூறியிருப்பது பொருந்தாது. இதிலிருந்து அறியக் கூடியதெல்லாம், கண்ணன் காலத்தில் மராட குச்சரநாடுகளில் தமிழ வேளிர் குடியிருந்தனர் என்பதே. இனி, அகத்தியர் இராவணனைத் தம் இசைவலிமையால் அடக்கித் தமிழகம் புகாமற் செய்தனர் என்பதும், இராமாயணக் கதையொடு முரண்படுவதாகும்.

அருச்சுனன் (மருதன்) தென்னாட்டுத் திருநீராட்டு வருகை

அருச்சுனன் குமரிநீராடத் தென்னாடு வந்தபோது பாண்டியன் (சித்திராங்கதன்) மணவூர் என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டிருந்தான். அங்குப் பாண்டியனின் விருந்தினனாயிருந்த அருச்சுனனுக்கும் பாண்டியன் மகள் சித்திராங்கதைக்கும் இடையே காதல் நேர்ந்ததனால், இருவருக்கும் திருமணம் நிகழ்ந்தது.

சித்திராங்கதன், சித்திராங்கதை யென்பன, பாரத ஆசிரியர் வேண்டுமென்றே இட்ட வடசொற் கட்டுப்பெயர்கள்.

மணவூர் நிலையான தலைநகரன்மையின், அங்குத் தமிழ்க் கழகம் ஏற்படவில்லை.

வடமொழியாளர் மணவூரை மணலூர் என்று திரித்து, சிக்காதாபுரி என்று மொழிபெயர்த்திருப்பதாகத் தெரிகின்றது.

பாரதப்போரில் முத்தமிழ் வேந்தருங் கலந்து கொண்டனர். சோழபாண்டியர் பாண்டவர்க்குத் துணைநின்று பொருதனர். சேரன் உதியஞ் சேரலாதன் நடுநிலையாயிருப்பதுபோல் ஒரு பக்கமும் சேராதிருந்து, இரு பக்கப் படைகட்கும் போர் நிகழ்ந்த பதினெண் நாளும் சோறு வழங்கி, பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதன் என்னும் பெறற்கரும் பெரும்பெயர் பெற்றான்.

> "யாணர் வைப்பி னன்னாட்டுப் பொருந
> வான வரம்பனை நீயோ பெரும
> அலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ
> நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
> யீரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
> பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்"
> (புறம். உ)

என்று முரஞ்சியூர் முடிநாகராயர் பாடியிருத்தல் காண்க.

பாரதப்போர் முடிந்தபின், வியாசர் மகாபாரதம் என்னும் வடமொழிப் பாவியத்தை இயற்றினார். அது பின்னர் மேன்மேலும் விரிவாக்கப்பட்டது. வியாசர் பதினெண் புராணங்களையும் இயற்றியதாகச் சொல்லப்படுகின்றது.

பாரதப்போருக்குப் பின்னரே அதர்வ (அதர்வண) வேதம் தோன்றி, வேதம் நான்கென வியாசரால் வகுக்கப்பட்டிருத்தல் வேண்டும். அதனாலேயே அவர் வேத வியாசர் என்று பெயர் பெற்றதாகத் தெரிகின்றது. முந்தின வேதங்களிற் சொல்லப் படாத பல்வேறு உலக வாழ்க்கைச் செய்திகளும், ஆரிய ஒழுக்க முறைகளும், ஆக்க வழிப்பு மந்திரங்களும், சாவேள்வி யும், சில இருக்கு வேத மந்திரங்களுடன் சேர்த்து அதர்வ வேதத்திற் கூறப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. பேய் மந்திரங்களிலும் செய்வினையிலும் பற்றும் நம்பிக்கையுங் கொண்ட கல்லா மாந்தரைக் கவர்தற்கு, அதர்வ வேதம் தொகுக்கப் பட்டது போலும்!

பகவற் கீதை கண்ணபிரானாற் சொல்லப்பட்டதன்று; பத்துத் தோற்றரவு வகுப்பும் அத்துவைதம் என்னும் இரண் டன்மைக் கொள்கையும் தோன்றிய பின்னரே, ஒருவரால் இயற் றப்பட்டு மேன்மேலும் விரிவாக்கப்பட்டு வந்திருத்தல் வேண்டும்.

சாலோமோன் (கி.மு. க0௬௪—௯௮0) என்னும் யூதவரசன், பாரதக்காலத்தில் தென்னாட்டினின்று மயில் குரங்கு தங்கம் முதலிய பொருள்களைக் கலங்களில் தருவித்தான்.

மயில் தமிழகக் குறிஞ்சிநிலப் பறவை. தோகை என்பது அதன் சினையாகுபெயர். அதற்கு அழகுதருவது அதன் தோகையே. தோகை—Arab. தாவூஸ், தவஸ், Gk. தவோஸ், L. பவோ, E. பீ (pea), peacock (மயிற்சேவல்).

கப்பு மரக்கிளை. குரங்கு மரக்கிளையில் வாழ்வது.
"கோடுவாழ் குரங்கும் குட்டி கூறுப." (தொல். கருகஉ).
கப்பு—கப்பி (குரங்கு)—Skt. கபி, Gk. கேப்போஸ், Heb. கோப் (kof), E. (ape).

பொன் கொங்குநாட்டில் மிகுதியாக விளைந்தது முன்னர்க் கூறப்பட்டது.

"பொன்படு கொண்கான நன்னன் நன்னாட்
டேழிற் குன்றம் பெறினும்" (நற். ௩௯௧)

"உவரா வீகைத் துவரை யாண்டு
நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே விறற்போ ரண்ணல்

....

இருங்கட லுடுத்தவிவ் வையகத் தருந்திறற்
பொன்படு மால்வரைக் கிழவ'' (புறம். உ0௧)

என்பன, சாலோமோன் கப்பல்கள் பொன் ஏற்றிச் சென்ற உப்பரா (Ophir) என்னும் மேல்கரைத் துறைமுகத்திற்கு, அடுத்துள்ள கொண்கானத்திலும் கொங்கிலும் பொன் விளைந் தமை கூறுதல் காண்க.

பாரதக் காலத்தில் ஆரியப் பூசாரிகள் வடஇந்தியா முழுதும் பரவியிருத்தல் வேண்டும். அதன்பின் அந்நிலப்பகுதிக்கு ஆரியா வர்த்தம் என்னும் பெயருண்டாயிற்று. வங்க நாட்டை யடைந்து காளிக் கோட்டத்தைக் கண்டபின், காளிவணக் கத்தை மேற்கொண்டு, காளி கோயிற் பூசாரியரு மாயினர்.

ஆரியன் என்னும் சொல்

ஐரோப்பிய மொழிகளும், பாரசீக மொழியும், வேத மொழி யும் சமற்கிருதமும், வடஇந்திய மொழிகள் மட்டுமன்றி நடுவிந் திய மொழிகளும், இன்று ஆரியம் என்று சொல்லப்படினும்; முதன்முதல் அப்பெயர் ஏற்பட்டது வேதமொழியும் சமற்கிருத மும் ஆகிய வடமொழிக்கே. சென்ற நூற்றுண்டில் **மாகசுமூல்லரே** வேதமொழிக்கு அல்லது சமற்கிருதத்திற்கு இனமான மொழி கட்கெல்லாம் ஆரியம் என்னுஞ் சொல்லைப் பொதுப்பெயராக வழங்கினர்.

ஐரோப்பிய மொழிகட்கும் பாரசீகத்திற்கும் ஆரியம் என் னும் பெயர் பொருந்தினும் வடஇந்திய மொழிகட்கு, சிறப் பாக நடுவிந்திய மொழிகட்கு, அப்பெயர் பொருந்தாது. வட மொழியாளரே வேதக்காலத்தின்பின், தென்னிந்திய மொழிகளை யெல்லாந் திரவிடமொழிகள் என்று கொண்டு, தமிழ், தெலுங்கு, கன்னடம் ,மராத்தி, குசராத்தி ஆகிய ஐந்தையும் ஐந்திரவிடம் (பஞ்ச திராவிட) எனக் குறித்தனர். வடஇந்திய மொழிகளை 'முன்வடமொழி' (பிராகிருதம்) எனக் குறிப்பதே பொருத்த மாம். வடஇந்திய மொழிகளையும் நடுவிந்திய மொழிகளையும் ஆரிய மொழிகள் எனக் கொள்வது மட்டுமன்றி, அவற்றைச் சமற்கிருதக் கிளைகளாகவும் கொள்வது, இருமடி மொழியியல் வழுவாம். இது, தமிழ் குமரிநாட்டு மொழியென்னும் உண்மை யையும் அதன் வடதிசைத் திரிபையும் அறியாததனல் விளைந்த கேடாகும்.

ஆரியன் மொழி ஆரியம். ஆரியன் (ஆர்ய) என்னுஞ் சொல்லை 'அர்ச்' என்னும் மூலத்தினின்று திரிந்ததாகக் கொண்டு, வணங்கப்படத் தக்கவன் என்று அதற்குப் பொருள் கூறுவர் செருக்கிற் சிறந்த பிராமணர். ஏரைக் குறிக்கும் 'அர்' என்னும் இலத்தீனச் சொல்லினின்று ஆரியன் என்னும் சொல்லைத் திரித்து, அதற்கு ஏர்த்தொழில் செய்வோர் என்று பொருள் கூறுவர் மாகசுமுல்லர். சமற்கிருதத்தில் இல்லாத மேலை யாரியச் சொற்களுள் 'அர்' (ஏர்) என்பது ஒன்றென்று அவரே கூறியிருப்பதாலும், வேத ஆரியர் மாடு மேய்த்தவரே யன்றிப் பயிர்த்தொழில் செய்யாதவராதலாலும், அதுவும் பொருந்தாது.

ஆரியம் தமிழின் இருமடித் திரிபாதலாலும், சமற்கிருதச் சொற்களின் ஐந்திலிரு பகுதி தமிழாதலாலும், வடமொழி யாளர்க்கு ஆரியர் என்னும் பெயர் இந்தியாவிலேயே, அதுவும் அவர் தமிழரொடு தொடர்புகொண்ட பின்னரே, ஏற்பட்ட தனாலும், ஆரியன் என்னும் சொற்கு மூலம் தமிழிலேயே ஆய்ந்து காணல் வேண்டும். ''மிலேச்சர் ஆரியர்'' என்னும் பிங்கல நூற்பா (ரு:எஉ), ஆரியரின் முற்கால நிலைக்கு ஏற் பினும் பிற்கால நிலைக்கு ஏற்காது.

அருமை = பெறற்கரிய அல்லது காண்டற்கரிய பெருஞ் சிறப்பு, மேன்மை. அரு—அரி—ஆரி = மேன்மை. ஆரி—ஆரி யம் = மேன்மை.

''ஆரியந் தனி யைங்கரக் களிறு'' (கம்பரா. ஊர்தேடு. கக). ஆரியம்—ஆரியன் = மேலோன், பெரியோன்.

> ''அஞ்சிலே யொன்று ருக வாரியற் காக வேகி''
> (கம்பரா. பாயிரம். அனுமன்.)

> ''ஐயுற லுஊதடை யாளம் ஆரியன்
> மெய்யுற வுணர்த்திய வுரையும் வேறுள''
> (ஷெ. உருக். உரு).

> ''ஆரிய னுரைப்ப தாறு னனைவரு மதனைக் கேட்டார்''
> (ஷெ விபீடண. கoசு).

கம்பர் இராமனை ஆரியன் என்றது, பண்பும் பதவியும் பற்றியுமே யன்றி இனம் பற்றியன்று. இராமன் சோழர்குடி

யைச் சேர்ந்தவ னென்றும், வடநாட்டுத் திரவிடனென்றும், ஆரிய இனத்தானல்ல னென்றும், அறிதல் வேண்டும்.

பார்ப்பான், அந்தணன், ஐயன் என்னும் தூய தமிழ்ப் பெயர்களை ஆரியர். எங்ஙனம் மேற்கொண்டனரோ, அங்ஙனமே ஆரியன் என்னும் பெயரையும் தென்சொல் என்று தெரிந்தோ தெரியாமலோ மேற்கொண்டிருத்தல் வேண்டும். இது, துரை என்னும் தென்சொல் வெள்ளையருக்கே பிற்காலத்தில் வரையறுக்கப்பட்டது போலாம்.

இராமாயணக் கதையிலும் பாவியத்திலும் பலசெய்திகள் பிராமணராற் கட்டிச் சொல்லப்பட்டிருப்பது பற்றி, இராமனை ஓர் ஆரிய அடிமையனென்று இகழ்ந்துவிடல் கூடாது. மேலும், இக்காலத்திலும் நம்மிடையே ஆரிய அடிமையரான அமைச்சரும் கட்சித்தலைவரும் இருக்கும் போது, நாம் ஏன், வரலாற்றுச் சான்றில்லாததும் மெய்யானதென்று திட்டமாகத் தெரியாததுமான, ஒரு பழங்கதையிற் சொல்லப்பட்டிருப்பவனைப் பற்றிக் கருதி வீணாக நோகவேண்டும்?

சம்புகன் என்னும் சூத்திரன் தவஞ்செய்ததால் ஒரு பிராமணப் பிள்ளை இறக்க, அது அகாலச் சாவென்று கருதித் தந்தை துயருற்றதை, நாரதரால் அறிந்த இராமன் சூத்திரனைக் கொன்றவுடன், பிராமணப் பிள்ளை உயிர்பெற் றெழுந்தது என்னுங் கதை, பழங்குடி மக்களை அச்சுறுத்தப் பிராமணர் கட்டிய கட்டுச் செய்தியாகவு மிருக்கலாம்.

துரோணச்சாரியன் ஏகலைவனுக்கு விற்கலை பயிற்ற இசையாமையும், அவன் தானாகப் பயின்றபின் அவனது இடக்கைப் பெருவிரலைத் துண்டிக்கச் செய்ததும், பாரதக் காலத்தில் உண்மையாக நடந்ததென்று கருத இடமுண்டு.

ஆரியன் என்ற சொல்லொடு, aristo (best) என்னும் கிரேக்கச்சொல் தொடர்புடையதா யிருக்கலாம்.

வல்—வள்—வட்டு (வள்+து)—வட்டம் — **பிரா.** வட்ட— **வ.** வ்ருத்த—வர்த்த. வர்த்த என்னுஞ்சொல் 'ஆ' என்னும் முன்னொட்டுப் பெற்று ஆவர்த்த என்றாகும். ஆரிய+ஆவர்த்த= ஆரியா வர்த்த. பிரம வர்த்த என்பதில் முன்னொட்டில்லை. வட்டம், வட்டகை, வட்டாரம் என்னுஞ் சொற்கள் தமிழகத்திலும் நாட்டுப் பகுதிகளைக் குறித்தல் காண்க.

பாபிலோனுக்கு முதன்முதல் மயில் கொண்டு சென்றவர் தென்னாட்டு வணிகரே.

தொல்காப்பியம்

(கி. மு. எ–ஆம் நூற்றாண்டு)

தொல்காப்பியம் இன்றுள்ள முதல் தொன்னூல் மட்டுமன்றி, பண்டைத்தமிழ் நாகரிகத்தையும் பண்பாட்டையும் தாங்கி நிற்கும் ஒருபெருந் தூணுகும். அஃதின்றேல், கடைக்கழகத்திற்கு முந்திய தமிழும் தமிழ்வரலாறும் அதனல் தமிழர்வரலாறும் அறவே இல்லாமற் போம்; தமிழன் உலகுள்ள வளவும் ஆரியனுக் கடிமையாகவே இருந்துழல்வான். குமரிநாட்டுத் தமிழன் தன் நுண்மாண் நுழைபுலத்தால் வகுத்த பொருளிலக்கணம், அதற்கு அச்சிறப்பைத் தந்துள்ளது.

அத்தகைய சிறப்பு வாய்ந்ததேனும், முக மண்டபமும் கூட கோபுரமுங் கொண்ட மணிமாட மாளிகைகள் நிறைந்த ஒரு மாநகரம், ஆழ்கடலில் மூழ்கிப்போனபின், அதன் கற்கள் சில வற்றை யெடுத்துக் கட்டிய ஒரு சிற்றில் போன்றதே தொல்காப்பியம்.

இலக்கணத்திற்கு முந்தியது இலக்கியம்; இலக்கியத்திற்கு முந்தியது மொழி. தொல்காப்பியத்திற்கு முந்தின இலக்கணங் களே நூற்றுக்கணக்கின; இலக்கிய நூல்கள் ஆயிரக்கணக்கின; ஏனைப்பனுவல்கள் எண்ணிறந்தன.

தொல்காப்பியச் சிறப்புப்பாயிரம் பாடிய பனம்பாரனர் என்னும் உடன்மாணவர்,

> ''செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
> **முந்துநூல் கண்டு** முறைப்பட எண்ணிப்
> புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்''

என்று கூறியிருப்பது உ–ஆம் கடல்கோட்குப்பின், நீண்ட காலமாகக் கழகந் தோன்ருமையால் பண்டை நூல்களெல்லாம் ஆரியரால் அழியுண்டும் மறையுண்டும் போனநிலைமையில், உ. வே. சாமிநாதையர் திருவாவடுதுறை மடத்தில் அழிவிற்குத் தப்பிக் கிடந்த கடைக்கழகப் பனுவல்களையும் தொகை நூல்களையும் கண்டெடுத்தது போல், தொல்காப்பியனரும் பல தொன்னூல்களைக் கண்டெடுத்தாரோ எனக் கருத இடந்தருகின்றது.

"ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்"
என்று பனம்பாரனாரும்,

"இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்
றனைத்தே செய்யுள் இட்டச் சொல்லே." (தொல். அ௮0)

"நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங் காலை அந்தணர்க் குரிய." (ஷ கரு௭0)

என்று தொல்காப்பியனாரும், கூறியிருப்பதால், தொல்காப்பியக் காலத்திலேயே ஆரியம் தமிழகத்தில் ஓரளவு வேரூன்றி விட்டதை அறியலாம்.

ஆரியர் கூறும் படைப்புத் தெய்வமாகிய பிரமனைத் தமிழர் ஒத்துக்கொள்ளாமையால், முத் திருமேனியரும் சேர்ந்தவரே முதற்கடவுள் என்பதை யுணர்த்தற்கு, ஆரியப் போலித் துறவியர் சென்றவிடமெல்லாம் முக்கவர்க் கோலை ஏந்திச் சென்றனர்.

"எறித்தரு கதிர்தாங்கி யேந்திய குடைநீழல்
உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்
நெறிப்படச் சுவலசைஇ வேறோரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயன்மாலைக் கொளைநடை யந்தணீர்"

என்னும் பாலைக் கலித் தரவையும் (௯), "உறியிலே தங்கின கமண்டலத்தையும், அரி அயன் அரனென்னும் மூவரும் ஒருவ ரென்று சொல்லுதல் தன்னிடத்தே அமைந்த முக்கோலையும், முறைமைபடத் தோளில் வைத்து........................போதலை இயல்பாக வுடைய ஒழுக்கத்தினை யுடையீர்" என்னும் அதன் உரையையும், நோக்குக.

"புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்"
என்றதற் கேற்ப,

"எழுத்தெனப் படுப
....
முப்பஃ தென்ப" (௧)
என்று எழுத்ததிகாரத்தையும்,

"உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை யென்மனார் அவரல பிறவே" (௪அ௪)
என்று சொல்லதிகாரத்தையும்,

"கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை யென்ப" (கூசஎ)

என்று பொருளதிகாரத்தையும், அதனுள்ளும்,

"அகத்திணை மருங்கின் அரில்தப வுணர்ந்தோர்
புறத்திணை யிலக்கணந் திறப்படக் கிளப்பின்" (க௦௦உ)

என்று புறத்திணை யியலையும்,

"பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்
கண்ணிய புறனே நால்நான் கென்ப" (கககூரு)

என்று மெய்ப் பாட்டியலையும்,

"நல்லிசைப் புலவர் செய்யு ளுறுப்பென
வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே" (கஉருகூ)

என்று செய்யுளியலையும், தொடங்கியதுடன், இடையிடை நெடுகலும் "என்மனார் புலவர்", "நுண்ணிதின் உணர்ந்தோர்", "மொழிப", "என்றிசி னோரே", என்றும் பிறவாறும் முன்னூலாரைப் பன்மையிற் சுட்டி, இறுதியில் நூலையும் "நுனித்தகு புலவர் கூறிய நூலே." என்று தொல்காப்பியனார் முடித்திருப்பதால், ஒரோவிடத்துள்ள ஒருசில ஆரியக் கருத்துக்கள் தவிர ஏனைய இலக்கணச் செய்திகளெல்லாம், முந்து நூல்களிற் கண்டவையே என்பது தெளிவாகும்.

தொல்காப்பியத்திற் சொல்லப்பட்டுள்ள (அகமும் புறமும் பற்றிய) பாட்டு, உரை, நூல் (இலக்கணமும் பல்வேறு அறிவியலும்), வாய்மொழி (மந்திரம்), பிசி (விடுகதை), அங்கதம் (எதிர்நூல்), முதுசொல் (பழமொழி) என்னும் எழுநில யாப்பிற்கும்; வெள்ளை, ஆசிரியம், கலி, வஞ்சி, மருள், பரிபாடல் என்னும் அறுவகைப் பாவிற்கும்; புறநிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து, அவையடக்கியல், செவியுறை என்னும் நால்வகை வாழ்த்திற்கும்; பாவண்ணம், தாவண்ணம் முதலிய இருபது வகை வண்ணத்திற்கும்; அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்னும் எண்வகை வனப்பிற்கும்; இலக்கியமா யிருந்தவற்றுள் ஒன்றுகூட இன்றில்லை.

இலக்கணத்திற்கு முந்தியது இலக்கியமும் இலக்கியத்திற்கு முந்தியது மொழியுமாதலாலும், சொல்லிலும் சொல்வடிவிலும் உலக வழக்கினின்று வேறுபட்ட செய்யுள் வழக்கே பண்டை

யிலக்கண நூல்களிற் பெரும்பாலும் எடுத்துவிளக்கப்பட்டமை யாலும், உலகவழக்கு பொதுமக்களுடைய தாதலாலும், பொது மக்களொடு தொடர்புகொள்ளாத புலவர் சிலரும் இலக்கண நூல் இயற்றியுள்ளமையாலும், எல்லாத் தமிழ்ச்சொற்களையும் எடுத்துக் கூறும் மேலைமுறைச் சொற்களஞ்சியம் இதுவரை தொகுக்கப் பெருமையாலும், தமிழின் சொல்வளத்தை மொழி யாராய்ச்சி வாயிலாகவே அறிதல் கூடும்.

''சகரக் கிளவியும் அவற்ரோ ரற்றே
அ ஐ ஔஎனும் மூன்றலங் கடையே.'' (எழுத். சூஉ)

என்னும் தொல்காப்பிய நூற்பா உண்மைக்கு மாறுனது. இந் நூற்பாவின் உ-ஆம் அடியின் ''அவை ஔ என்னும் ஒன்றலங் கடையே'' என்னும் பாடவேறுபாடு மிகப் பொருத்தமாம். ஆயின், தொல்காப்பியரைப் பெருமைப் படுத்துவதாகக் கருதிக் கொண்டு இப்பாட வேறுபாட்டை ஏற்க மறுப்பவர், உண்மை யில் தொல்காப்பியரையும் தமிழையும் சிறுமைப்படுத்துபவரே யாவர். தொல்காப்பியத்திற் சகரமுதற்சொல் ஆளப்பெருமை, அச்சொல் தமிழில் இன்மைக்குச் சான்ருகாது.

''சரிசமழ்ப்புச் சட்டி சருகு சவடி
சளிசகடு சட்டை சவளி–சவிசரடு
சந்து சதங்கை சழக்காதி யீரிடத்தும்
வந்தனவாற் சம்முதலும் வை.''

என்று, பண்டை நாளிலேயே ஓர் இலக்கண நூலாசிரியனுல் சகரமுதலின்மைக் கொள்கை மறுக்கப்பட்டுள்ளமை, நன்னூல் மயிலைநாதருரையால் அறியக்கிடக்கின்றது. (எழுத். ருக).

சகரமுதற் சொற்கள்

சக்கட்டி, சக்கல், சக்கு, சக்கை, சகடம் (சகடை), சகண்டை, சகதி, சகோடம்,

சங்கங்குப்பி, சங்கு (சங்கம்),

சச்சரவு, சச்சு,

சட்டம் (சட்டகம்), சட்டன் (சட்டநம்பி, சட்டநம்பிப் பிள்ளை—சட்டாம்பிள்ளை), சட்டி, சட்டு, சட்டுவம் (சட்டுகம்),

சட்டை, சடக்கன், சடக்கு, சடங்கம், சடங்கு, சடசட (சட புட), சீடார், சடுகுடு, சடை, சடைவு,

சண்டி, சண்டு, சண்டை, சண்ணம், சண்ணி, சண்ணு, சண்பு (சம்பு), சணம் (சணல்), சறுய், சறுவு, சணை,

சத்தவி, சத்தான் (செத்தான்), சதக்கு, சதுப்பு, சதை,

சந்தனம், சந்தி, சந்து, சந்தை,

சப்பட்டை, சப்பளி (சப்பளம்—சப்பணம்—சம்மணம்), சப்பரம், சப்பன், சப்பாணி, சப்பு (சவறு), சப்பு (சப்பிடு—சாப்பிடு), சப்பை,

சம், சம்பளம், சம்பா, சமட்டு (சமட்டி—சம்மட்டி, சவட்டு—சவட்டி—சாட்டி, சவட்டை—சாட்டை), சமம் (சமன்), சமர் (சமர்த்து), சமை (சமையல், சமைதல், சமையம், சமயம்),

சர், சர (சரசர), சரக்கு, சரக்குப்புரக்கு, சரட்டு, சரடு, சரப்பளி (சரப்பணி), சரவடி, சரவை, சரி, சருக்கரை (சக்கரை), சருக்காரம் (சக்காரம்—சக்கரம், செக்கு), சருக்குக் கட்டை, சருகம், சருகு, சருச்சரை, சருவு (சருவம்), சரேல்,

சல் (செல்), சல்லரி, சல்லி, சல்லிகை, சலக்கு, சலங்கு, சலங்கை (சதங்கை), சல (சலசல), சலகு (சலகன்—சலவன்), சலகை, சலம், சலம்பு, சலவை, சலாகை, சலாங்கு, சலி (சலியடை—சல்லடை), சலுக்குமொலுக்கு, சலுகை,

சவ்வு, சவ (சவு), சவக்கு, சவடி, சவடு, சவம், சவர், சவர்க்களி, சவலை, சவள், சவளம், சவளி, சவளை, சவறு, சவை,

சழக்கு, சழங்கு, சழி,

சள், சள்ளு, சள்ளை, சள (சளசள), சளப்பு, சளம்பம், சளார், சளி,

சற்று, சறும்பு, சறுக்கு, சறை, சறைமணி,

சன்னம்.

இச்சொற்களெல்லாம் தொல்காப்பியர் காலத்திற்குப் பின் றேன்றியவை என்பர் சிலர். அவர் தமிழியல்பையும் தமிழ் வரலாற்றையும் அறியார். தொல்காப்பியர்க்குப் பின் தமிழ் தளர்ந்ததேயன்றி வளர்ந்ததின்று.

சக்கணி (கூத்து வகை), சடங்கடி (வஞ்சனை), சடரி (சிதைவு), சடலை (வீண்செயல்), சக்கத்து (முத்து வகை), சக்கட்டம் (சக்கந்தம்), சட்டறம் (அறவுரை), சப்படி (வயிரக்குற்றம்), சராய் (காற் சட்டை), சல்லடம் (அரைக்காற் சட்டை), சல்ல வட்டம் (கேடகவகை), சமனை (ஓகவகை), சவதரி (தேடு) என்பனவும், இவை போன்ற பிறவுமே, தொல்காப்பியருக்குப் பின் தோன்றியிருக்கலாம்.

தொல்காப்பியர் உலகவழக்கைச் செவ்வையாக ஆராயவில்லை என்பதற்குப் பல சான்றுகள் உள.

(க) "மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பின்
பார்ப்பும் பறழும் குட்டியும் குருளையும்
கன்றும் பிள்ளையும் மகவும் மறியும்என்(று)
ஒன்பதும் குழவியோ டிளமைப் பெயரே." (மர. க)

என்றதோ டமையாது,

"சொல்லிய மரபின் இளமை தானே
சொல்லுங் காலை அவையல திலவே." (ஷை உசு)

என்று வரையறையும் இட்டார் தொல்காப்பியர்.

கசளி, கயந்தலை, கரு, கருந்து, குஞ்சு, குருமன், செள், சேய், நாகு, புதல்வு (புதல்வன், புதல்வி), பொடி, முனி (யானைக் கன்று) முதலிய இளமைப் பெயர்கள் விடப்பட்டுப்போயின. இங்ஙனமே சில ஆண்பாற் பெயர்களும் பெண்பாற் பெயர்களும்.

(உ) நீன் நீம் என்பன முன்னிலை யொருமை பன்மைப் பெயர்கள். இவற்றின் முந்தின நிலை நூன் நூம். நூம் என்பதன் வேற்றுமையடி நும். நீன் என்பதன் கடைக்குறை நீ. நீ என்பது இர் என்னும் பலர்பாலீற்றொடு சேர்ந்து நீயிர் நீவிர் என்றாகும். ஆயின், தொல்காப்பியரோ, நும் என்பதினின்று நீயிர் என்பதைத் திரித்தார்.

''அல்லதன் மருங்கிற் சொல்லுங் காலை
உக்கெட நின்ற மெய்வயின் இவர
இய்யிடை நிலைஇ இறுகெட ரகரம்
நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே
அப்பால் மொழிவயின் இயற்கை யாகும்.''
(தொல். நஉசு).

(ந) ஒன்பது+பத்து என நிறுத்தித் தொண்ணூறு என்றும், ஒன்பது+நூறு என நிறுத்தித் தொள்ளாயிரம் என்றும், புணர்த்தார் தொல்காப்பியர். (தொல். எழுத். குற். சo, ருஅ).

இது நாளிகேரம் என்னும் சொல்லினின்று கேரளம் என்னும் சொல்லைத் திரிக்கும் வடமொழி வழக்கொத்ததே.

இவற்றை இடைச்செருகல் என்பார் இடைச்செருகலின் இயல்பை அறியார். இவை இடைச்செருகலாயின் நன்னூலார் இவற்றைப் பின்பற்றியிரார். இவை போன்ற தவற்றுப் புணர்ப்பும் பிரிப்பும் இன்னும் பலவுள. அவை யெல்லாம் என் 'தொல்காப்பிய விளக்கம்' என்னும் நூலில் விளக்கப் பெறும்.

(ச) உரியியலில், தீர்தல், தீர்த்தல், பழுது, முழுது என்னும் பெருவழக்கான உலகவழக்குச் சொற்களும், அருஞ் செய்யுட்சொற்கள் போல் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

(ரு) புணரியல் கஎ-ஆம் நூற்பாவிற் சாரியை என்று கூறப்பட்டுள்ள வற்றுள், ஆன் அக்கு இக்கு என்பன சாரியையல்ல. இற்றுச்சாரியை குறிக்கப்பெறவில்லை. அற்றுச் சாரியை வற்றுச்சாரியை எனக் குறிக்கப்பட்டுள்ளது. இவை யெல்லாம் என் தொல்காப்பிய விளக்கத்தில் விரிவாகக் கூறப்பெறும்.

பிள்ளையாட்டு

தொல்காப்பியத்திற் சொல்லப்பட்டுள்ள பல புறத்துறைகள், பண்டைத் தமிழரின் மறத்தை மட்டுமன்றி, அக்காலத்துக் கோவரசிலுள்ள குடியாட்சி யுரிமையையுங் காட்டுவனவாயுள.

''வாண்மலைந் தெழுந்தோனை மகிழ்ந்துபறை தூங்க
நாடவற் கருளிய பிள்ளை யாட்டும்'' (புறத். சுo)

என்னும் கரந்தைத்துறையும், அதன் உரையில் நச்சினார்க்கினியர் எடுத்துக்காட்டிய

"வன்கண் மறமன்னன் வாண்மலைந்து மேம்பட்ட
புன்றலை யொள்வாட் புதல்வற்கண்—டன்புற்றுக்
கான்கெழு நாடு கொடுத்தார் கருதார்க்கு
வான்கெழு நாடு வர."

என்னும் வெண்பாவும், பாராட்டி மகிழத்தக்கன. இது புறப்பொருள் வெண்பா மாலையில் முற்றும் மாற்றப்பட்டுச் சிறப்பிழந்துள்ளது.

தொல்காப்பிய நால்வகுப்பு

"நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங் காலை **அந்தணர்க் குரிய.**" (தொல். கருஎ0).

"**அந்த ணாளர்க்** குரியவும் அரசர்க்(கு)
ஒன்றிய வரூஉம் பொருளுமா ருளவே." (ஷை கருஎஉ).

"**அந்த ணாளர்க்** கரசுவரை வின்றே." (ஷை கருஎச).

"படையுங் கொடியுங் குடையும் முரசும்
நடைநவில் புரவியுங் களிறுந் தேரும்
தாரும் முடியும் நேர்வன பிறவும்
தெரிவுகொள் செங்கோல் **அரசர்க்** குரிய." (ஷை கருஎக).

"**வைசிகன்** பெறுமே வாணிக வாழ்க்கை." (ஷை கருஎஅ).

"**வேளாண் மாந்தர்க்கு** உழுதூண் அல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி." (ஷை கருஅக).

ஆரிய நால்வரணப் பாகுபாடு தமிழகத்தில் மெள்ளமெள்ளப் புகுத்தப்பட்டது. தொல்காப்பியர் காலத்தில் பிராமணரே அந்தண ராயினர். அவர்க்கு அரசுரிமையும் கொள்ளப்பட்டது. மற்ற மூவகுப்பும் முன்போலிருந்தன. வாணிகர்க்கு 'வைசியர்' என்னும் வடசொல் வழங்கத் தொடங்கிற்று.

வேளாண் தலைவரான வேளிர்க்கு அல்லது குறுநில மன்னர்க்கு வேந்தர்க் குற்றுழிப் பிரிவுண்டு. அதனால்,

"வேந்துவிடு தொழிலின் படையுங் கண்ணியும்
வாய்ந்தனர் என்ப அவர்பெறும் பொருளே."
(ஷை கருஅஉ)

"வில்லும் வேலுங் கழலுங் கண்ணியும்
தாரும் ஆரமுந் தேரும் வாளும்
மன்பெறு மரபின் ஏனோர்க்கு முரிய." (ஷை கருஅந)

என்று கூறப்பட்டது. இச்சிறப்பு பொதுமக்களான உழுதூண் வேளாளர்க் கில்லை யென்பது,

"அன்ன ராயினும் இழிந்தோர்க் கில்லை." (ஷை கருஅச)

என்பதனாற் பெறப்படும்.

தொல்காப்பிய அரங்கேற்றம்

தொல்காப்பியர் அகத்தியரின் மாணவரல்லர். மாணவ ராயின் அகத்தியரை அல்லது அகத்தியத்தைத் தம் நூலிற் குறித்திருப்பார். அகத்தியர் தலைமையிலேயே தொல்காப்பியமும் அரங்கேற்றப்பட்டிருக்கும். "முந்துநூல் கண்டு" என்றதற் கேற்ப, "என்மனார் புலவர்" என்று பலர்பாலிலேயே முன் னூலாசிரியரைத் தம் நூல்முழுதும் குறித்திருக்கின்றார். அகத்தி யர்க்கும் தொல்காப்பியர்க்கும் இடைப்பட்ட காலம் ஏறத்தாழ ஐந்நூறாண்டாகும். முன்னவரின் மாணவரே பின்னவர் என்று கொண்டவர், அகத்தியரைப் பற்றித் தொல்காப்பியத்தில் ஒரு குறிப்புமின்மையால், அதற்குங் கரணியங் காட்டுவார் போல் ஒரு கதையைக் கட்டிவிட்டனர்.

தொல்காப்பியர் காலத்தில் கழகமும் ஏற்படவில்லை. பாண் டியன் பெரும்பாலும் மணலூரில் வதிந்திருத்தல் வேண்டும். அற்றைப் பாண்டியன் பெயர் நிலந்தரு திருவிற் பாண்டியன் என்று, பனம்பாரனார் குறித்துள்ளார். அவன் இரண்டாம் கடல் கோட்குத் தப்பின இடைக்கழகப் பாண்டியன் அல்லன். நில மில்லாத தன் குடிகள் சிலர்க்கு நிலம் ஒதுக்கியதனால், அப் பெயர் பெற்றிருத்தல் வேண்டும்.

"அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற் கரில்தபத் தெரிந்து"

என்று சிறப்புப் பாயிரங் கூறுவதால், அரங்கேற்ற அவையில் தலைமை தாங்கினவன் நால்வேதமும் வல்ல ஒரு பிராமணத் தமிழ்ப்புலவன் என்பது தெளிவாகின்றது. இது இரா. இராக வையங்கார் தலைமையில் உ. வே. சாமிநாதையர் தம்நூலை அரங்கேற்றிய தொத்ததே.

தொல்காப்பியத்திலுள்ள ஆரியக் கருத்துக்களும் ஒரு சில வடசொற்களும் பற்றி நாம் வருந்த வேண்டியதில்லை. அது அக்காலத்து நிலைமை. ஆரியக் கருத்தும் சொல்லும் கொண்டிருந் ததனாலேயே, அது இதுவரை அழிவுறாமல் தப்பிவந்துள்ள தென்று நாம் உணர்ந்து மகிழவேண்டும்.

கிறித்துவிற்கு முற்பட்ட கடைக்கழகக் காலத்து நூல்களுள், நமக்குக் கிடைத்துள்ளது திருக்குறள் ஒன்றே. அதுவும், ஆதிபகவன் கதையாலும் திரிவர்க்க வழிநூலென்னும் இளைப் பாலும் திருவள்ளுவ வெண்பாமாலையாலுமே, தப்பி யிருத்தல் வேண்டும். திருக்குறட்கு ஐந்நூறாண்டு முற்பட்டதும், இயற் றமிழிலக்கணம் முழுவதும் குமரிநாட்டு முறைப்படி எடுத்தியம்பு வதுமான தொல்காப்பியம், நம் முன்னோரின் பெருமையை அறியவும், மீண்டும் தமிழை அரியணை யேற்றவும் நாமும் முன்னேறி நம் உரிமையை முற்றும் பெறவும், இன்று நம் கையில் உள்ளதெனின், இது நம் நற்காலத்திற் கேதுவான இறைவன் திருவருளே என்று தெரிந்து கொள்க.

தொல்காப்பியத் தொழிற்குலங்களும் தொழில்களும்

அகவர் (வ. சூதர்.)—அரசன் பள்ளியெழுச்சி பாடுவோர்.

"சூத ரேத்திய துயிலெடை நிலையும்" (தொல். பொ. கூகை).

"நாளீண்டிய நல்லகவர்" (மதுரைக். உஉக).

தொல்காப்பியத்தில் வடசொல்லே ஆளப்பட்டுள்ளது.

அடியோர் — அடித்தொழில் செய்பவர், அடிமையர்.

அந்தணர் — துறவியர்.

அரசர் — நாடாள்வார்

அறிவர் — முக்கால அறிவினர், முற்காணியர் (Prophets)

ஆயர் — ஆநிரை மேய்ப்போர், ஆடுமாடு மேய்க்கும் இடையர்.

இளையர் — வேலைக்காரர்
ஏரோர் — உழவர்
ஐயர் — முனிவர்
செவிலி — அரசர் செல்வர் முதலிய பெருமக்கள் பிள்ளைகளின் வளர்ப்புத்தாய்.
கூத்தர் — கூத்தாடுபவர், நடஞ்செய்பவர், நாடக நடிகர்.
துடியர் — உடுக்கை யடிப்பவர்
தேரோர் — தேர்ப் பாகர்
படைஞர் — படைமறவர்
பரத்தையர் — விலைமகளிர், பொதுமகளிர்.
பாகர் — குதிரைப்பாகர் (வாதுவர்), யானைப் பாகர்.
பாங்கன் — அரசரின் அகப்பொருளொழுக்கத் தோழன்.
பாங்கி — அரசியரின் அகப்பொருளொழுக்கத் தோழி.
பாணர் — இசைப்பாணர், குழற்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப்பாணர் ஆகிய இசைத் தொழிலார்.
பார்ப்பார் — ஆசிரியர் புலவர் உவச்சர் குருக்கள் முதலிய இல்லறத்தாரான கல்வித்தொழிலார்.
பொருநர் — ஏர்க்களம் பாடுநரும் போர்க்களம் பாடுநரும்.
மறவர் — போருங் கொள்ளையுமாகிய மறத்தொழில் புரியும் பாலைவாணர், படைமறவர்.
வாணிகர் — சில்லறையாகவும் மொத்தமாகவும் பண்டமாற்றுச் செய்யும் நிலவாணிகரும், கடல் கடந்து வெளிநாட்டொடு வணிகஞ்செய்யும் நீர்வாணிகரும்.
விரிச்சி — விரிச்சி (Oracle) கூறுபவர். விள்—விடு—விடிச்சி—விரிச்சி = தெய்வத்தினிடமிருந்து மறைவான செய்திகளை அறிந்து வெளிப்படுத்துதல்.
வினைவலர் — ஏவிய தொழில் செய்வதில் வல்லவர்.
விறலி — விறல் (சத்துவம்) பட ஆடும் பாண்மகள்.

வேட்டுவர் — வேட்டைத்தொழில் செய்யும் குறிஞ்சி முல்லை பாலை வாணர்.

வேந்தர் — சேரசோழபாண்டியர்.
வேயர் — ஒற்றர்
வேலன் — முருகன் என்னும் தெய்வமேறி யாடுபவன்.
வேளாளர் — உழுதுண்போரும் உழுவித்துண்போரும்.

இனி, பல்வகைக் கட்டிடங்களும் கருவிகளும் கலங்களும் செய்பொருட்களும் தொல்காப்பியத்திற் குறிக்கப்பட்டிருப்ப தால், அவற்றை உருவாக்கிய கொல்லர், தச்சர், கற்றச்சர், தட்டார், கன்னர் என்னும் ஐவகைக் கம்மியரும், கொத்தர் நெசவர் குயவர் முதலிய தொழிலாளரும், அக்காலத்தில் இருந் திருத்தல் வேண்டும்.

தொல்காப்பியர் காலத் தமிழக எல்லை

"வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெயர் எல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர்." (தொல். கநுகசூ)

என்று, தொல்காப்பியர் தம் காலத் தமிழ்யாப்பிற்குக் கூறிய எல்லையே, அவர் காலத் தமிழக எல்லையு மாகும். ஒரு நாட்டிற்கு நாற்றிசை யிருப்பின், நாலெல்லையும் இருக்கத்தான் செய்யும். அதைச் சொல்ல வேண்டுவதில்லை. ஆயின், எல்லைப் பெயரைக் குறியாது நாற்பெயர் எல்லை என்று மட்டும் சொல்லி யிருத்தலால், அந்நாலெல்லையும் வேறுபட்ட வகையினவா யிருத்தல் வேண் டும். வடக்கில் வேங்கடமலையும் தெற்கில் குமரியாறும் கிழக்கில் வங்கக் கடலும் தெளிவாய்த் தெரிந்த எல்லைகளாம். மேற்கில் எது எல்லையெனின், அது குடமலைத் தொடரே. அக்காலத்தில் சேரநாடு திருச்சி மாவட்டக் கருவூரைத் தலைநகராகக்கொண்டு, பெரும்பாலும் குடமலைக்குக் கிழக்கேயே இருந்தது. அம்மலைத் தொடருக்கு மேற்கில் இருந்த நிலம், மிக வொடுங்கித் துறை நகர்களுக்கன்றி ஒரு நாட்டு மக்கள் அனைவரும் வதியத்தக்க பரப்புள்ளதா யிருந்ததில்லை. பிற்காலத்திலேயே மேல்கரை நிலப்பகுதி விரிவடைந்ததாகத் தெரிகின்றது. இதையே, பரசு ராமர் தாம் தவஞ்செய்தற்கு இடம்வேண்டிக் கடல்மீது அம் பெய்ய, அது சற்றுப் பின்வாங்கி இடந்தந்தது என்னுங் கதை குறிக்கும். பரசுராமர் அங்குச் சென்றபின், இயற்கையாகக் கடல் ஒதுங்கி நிலம் விரிவடைந்தது என்பதே உண்மைச் செய்தி.

"வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்" என்னுந் தொடர், தொல்காப்பியர் காலத்தில் மூவேந்தரும் ஒற்றுமைப் பட்டு உயர்வா யிருந்ததையும், குடிகள் கொள்ளையும் போரு மின்றி இன்பமாக வாழ்ந்ததையும், குறிப்பாக வுணர்த்தும்.

தொல்காப்பியருக்குப் பின் ஆரியச் சூழ்ச்சியாலும் தன்னலப் பற்றுலும் மூவேந்தரிடையும் அடிக்கடி போர் மூண்டதனுலும், துணையரசரும் குறுநிலமன்னரும் தம் வேந்தர்க் கடங்காது முடி சூடி முழுவுரிமை யரசரானதனுலும், சோழநாட்டின் வடபகுதி தொண்டைநாடென்றும், சேரநாட்டின் கீழ்ப்பகுதி கொங்கு நாடென்றும் பிரிந்து போயின.

தொண்டைநாடு

தொண்டைநாடு ஆர்க்காடு போல் நிலைத்திணையாற் பெயர் பெற்றதாகத் தெரிகின்றது. தொண்டை என்பது கோவைக் கொடியையும் ஆதொண்டையையும் குறிக்கும். ஆதொண்டை என்பது காற்றேட்டிச் செடிக்கும் காற்றேட்டிக் கொடிக்கும் பொதுப்பெயர். இம்மூன்றனுள் ஒன்று மிகுந்திருந்த நிலப்பகுதி தொண்டை நாடெனப் பெயர் பெற்றது.

திரையன் என்பது நெய்தல்நிலத் தலைவன் பெயர். ஆர்க் காடு செங்கழுநீர்ப்பட்டு நெல்லூர் ஆகிய மும் மாவட்டப்பகுதி களைக் கொண்டது தொண்டைநாடு. ஒருகால் நெய்தல்நிலச் சிறப்புப்பற்றி, அந்நாட்டரசன் திரையன் எனப் பெயர் கொண் டிருக்கலாம். நாகபட்டினத்துச் சோழன் நாக கன்னியைப் புணர்ந்து ஒரு புதல்வனைப் பெற்றுனென்று நச்சினுர்க்கினியர் கூறுங் கதையும், கிள்ளிவளவன் பீலிவளை என்னும் நாக கன்னியைப் புணர்ந்து ஒரு புதல்வனைப் பெற்றுனென்று சீத் தலைச் சாத்தனுர் கூறுங் கதையும், பல செய்திகளில் வேறுபட் டனவும் வெவ்வேறு காலத்தனவும் ஆகும்.

சோழன் கரிகாற் பெருவளத்தான்மேற் பட்டினப்பாலை பாடிய கடியலூர் உருத்திரங் கண்ணனுரே, பெரும்பாணுற்றுப் படையில்,

"கொண்டி யுண்டித் தொண்டையோர் மருக"

என்று இளந்திரையனைப் பல தலைமுறைப்பட்ட ஓர் ஆள் குடி யினனுகக் கூறியிருப்பதால், மேற்கூறிய கதை யிரண்டும் பிற் காலத்தனவென்றும் பெரும்பாலுங் கட்டுச்செய்தி யென்றும் அறிக.

அஃதாயின், ''அந்நீர்த் திரைதரு மரபின் உரவோ னும்பன்'' என்று பாடியதை இளந்திரையன் எங்ஙனம் ஒத்துக் கொண்டானெனின், ஆரியச் சார்பால் அக்காலத் தமிழர் பகுத்தறிவை யிழந்து விட்டதனால்,

> ''நீயே, வடபான் முனிவன் தடவினுள் தோன்றி
> ....
> நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
> வேளிருள் வேளே'' (புறம். உ0க)

என்று கபிலர் பாடியதை இருங்கோவேள் ஏற்றுக்கொண்டது போன்றே, இளந்திரையனும் உருத்திரங் கண்ணனார் பாடியதை ஏற்றுக்கொண்டான் என்று கூறி விடுக்க.

கொங்கு நாடு

கொங்கு என்பது, மணம், பூந்தாது, தேன், கள், கருஞ் சுரை, சொங்கு (உமி அல்லது புறத்தோல்), குவிவு என எண் பொருள்படும் பலபொருளொருசொல். கொங்கு நாட்டில் தேன் மிகுதியாக அல்லது சிறந்ததாகக் கிடைப்பதால், அந்நாடு கொங்கு நாடெனப் பட்டது என்று பலர் கூறுவர். தேன் கொங்கு நாட்டிற்கே சிறப்பாகவுரிய தன்று. சோலைகள், சிறப்பாக இயற்கைச் சோலைகள், உள்ள இடமெல்லாம் தேன்கூடு கட்டப் படும். அத்தகைய சோலைகளாற் போர்க்கப் பட்டிருப்பவை பெருமலைகள் அல்லது உயர்மலைத்தொடர்கள். கொங்குநாட்டு மலைகளிற் போன்றே பிறநாட்டு மலைகளிலும் தேன்கூடு கட்டும்.

> ''அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து
> திணிநெடுங் குன்றந் தேன்சொரியும்''

பறம்புமலை, முற்காலச் சோழநாட்டை அல்லது பிற்காலப் பாண்டிநாட்டைச் சேர்ந்ததாகும். பறம்புமலைத் தேன் எவ்வகையிலும் திறக்கேடுள்ள தன்று. கொங்கு நாட்டு ஆனைமலையை ஒரு கூறுகக்கொண்ட குடமலைத்தொடர், நெல்லை மாவட்டத் தென் கோடிவரை செல்கின்றது. அங்கும் தேன்கூடு கட்டத்தான் செய்கின்றது.

கொங்குநாட்டின் பண்டைக்காலப் பரப்பைப் பலர் சரியாக அறியவில்லை. குடகமும் எருமையூர் (மைசூர்) நாடும் சேலங் கோவை மாவட்டங்களும் சேர்ந்ததே முதற்காலக் கொங்கு

நாடாம். அதில் உடல்போல் மிகுந்திருந்தது எருமையூர் நாடே. மூவேந்தர் நாடுகளுள்ளும் உயர்ந்து குவிந்திருக்கும் நிலப்பகுதி எருமையூர் நாடென்பதை, புறணிப் படத்தையும் (relief map) மட்டக் கோட்டுப் படத்தையும் (contour map) பார்த்துத் தெளிக. சேரநாட்டின் கீழைப்பகுதி, மலைகளாலும் உயர்நில மட்டத்தாலும் குவிந்திருப்பதனாலேயே கொங்கு நாடெனப் பட்டது.

கும்—கும்மல் = குவியல். கும்மி = கை குவித்தடித்து விளையாடும் விளையாட்டு. கும்மி—கொம்மி.

கும்—கொம்—கொம்மை = க. மேடு. உ. அடுப்புக் குமிழ். ங. கதவுக் குடுமி. ச. கொம்மட்டிக்காய் (கும்மட்டிக்காய்). ரு. கை குவித்துக் கொட்டுகை. சூ. இளமுலை. ''வாரணி கொம்மை'' (பரிபா. உஉ:ஙo).

கும்—கும்பு. கும்புதல் = குவிதல், கூடுதல்.

கும்பு—கும்பம் = க. குவியல். உ. குடம். ங. யானை மத்தகம். ச. கும்ப வோரை. ரு. கும்ப மாதம் (மாசி).

கும்பம்—வ. கும்ப (kumbha).

கும்பு—கும்பளம் = பூசணிக்காய்.

கும்பு—கூம்பு—கூப்பு. கூப்புதல் குவித்தல்.

கும்பு—கும்பிடு. கும்பிடுதல் கை குவித்தல்.

கும்பு—குப்பு—குப்பல். குப்பு—குப்பி—கொப்பி = கும்மி.

குப்பு—குப்பை = குவியல், மேடு, கழிவுப்பொருட் குவியல்.

கும்—குமி—குமிழ்—குமிழி. குமி—குவி—குவியல், குவியம், குவால், குவை.

கும்—குங்கு. குங்குதல் = க. குவிதல். உ. சுருங்குதல். ங. குன்றுதல்.

குங்கு—கொங்கு = குவிந்த பொருள் அல்லது இடம்.

கொங்கு—கொங்கை = க. குவிந்த முலை. உ. மரத்தின் புடைப்பு (protuberances or knobs of a tree).

கொங்கு—கோங்கு = கொங்கை போற் குவிந்த மொட்டு, அதன் மலர், அது பூக்கும் மரம்.

''வேங்கை வெற்பின் விரிந்த கோங்கின்
முகைவனப் பேந்திய முற்று விளமுலை''

என்பது, (புறம். ௩௩௬:௯—௧௦.) கோங்கமொட்டு கொங்கை போற் குவிந்ததென்பதைத் தெரிவித்தல் காண்க.

கொங்கு நாடு பிற்காலத்திற் குடகொங்கு குணகொங்கு என இரண்டாகப் பிரிந்த்து. பின்னர்க் குணகொங்கும் வடகொங்கு தென்கொங்கு என இரண்டாகப் பிரிந்தது. எருமையூர் நாட்டின் மேற்பகுதி குடகொங்கு; "குடகக் கொங்கரும்" (௩௦: ௧௫௯) என்று சிலப்பதிகாரம் கூறுவதால், குடகப் பகுதியே முதற் காலக் குடகொங்காகும். அதன் கீழ்ப்பகுதியும் சேலங் கோவை மாவட்டங்களும் குணகொங்கு. அது இரண்டாகப் பிரிந்தபின், எருமையூர் நாட்டின் கீழ்ப்பகுதி வடகொங்கு; சேலங் கோவை மாவட்டங்கள் தென்கொங்கு. வடகொங்கின் தென்பகுதி கங்கநாடென மாறிற்று.

இன்று கொங்கு நாடெனப் படுவது சேலங் கோவை மாவட்ட நிலப்பகுதியே. அதுவே தென்கொங்கு வடகொங்கு மேல் கொங்கு (மீகொங்கு) என மூன்றுகப் பிரிந்தும் உள்ளது.

கொங்கு நாடு தொடர்ந்த போர் நிகழ்ச்சியாற் செங்களமாகி அமைதி குலைந்ததனல், சேரன் தன் தலைநகரைக் கருவூரினின்று மேல்கடற்கரையிலுள்ள கொடுங்கோளூர்க்கு மாற்றிக் கொண்டான். அது பின்னர்க் கருவூர் வஞ்சி என்னும் பெயர்களும் பெற்றது. பழைய கருவூர் சோழர் வயப்பட்டது.

சேரநாட்டு மக்கள் குடமலைக்குக் கிழக்கிலுள்ள கொங்கு நாட்டினின்று சென்று குடியேறியதனலேயே, அவர் வழியினர் மொழியிலும், கதிரவன் எழுந்திசை கிழக்கு என்றும் விழுந்திசை மேற்கு என்றும், சோழ பாண்டி நாடுகளிற் போன்றே சொல்லப்படுகின்றன. குடமலைக்குக் கிழக்கிலுள்ள நிலப்பகுதியில், கடலடுத்த கீழ்ப்பாகம் தாழ்ந்தும் மலையடுத்த மேற்பாகம் உயர்ந்தும் இருப்பதால், கதிரவன் எழுந்திசையும் விழுந்திசையும் கிழக்கு மேற்கு எனப்பட்டன. கீழ்—கீழ்க்கு—கிழக்கு. மேல்—மேற்கு. குடமலைக்கு மேற்கிலுள்ள நிலப்பகுதி கிழக்கில் உயர்ந்தும் மேற்கில் தாழ்ந்தும் இருப்பதால், கிழக்கை மேற்கென்றும் மேற்கைக் கிழக்கென்றும் சொல்ல வேண்டும். அவ்வழக்கின்மையால், சேரநாட்டாரின் முன்னேர் தமிழகத்தின் கீழைப் பகுதியினின்றே மேலைப்பகுதிக்குச் சென்றனர் என்பது தெளிவாம்.

மேற்றிசையைக் குறிக்கப் 'படுஞாயிறு' (படுஞாயிற்றுத் திசை) என்னும் சொல்வழக்கும் சேரநாட்டில் அல்லது மலையாள நாட்டில் உண்டேனும், அதுவும் சோழ பாண்டி நாட்டிற் பொழுதடைவைக் குறிக்கும் கீழைத் தமிழ்ச்சொல்லே யென்றும், மேற்கு என்னும் சொல் அதனால் அங்குத் தன் பொருளை இழந்து விடவில்லை யென்றும், கீழ்த்திசையைக் குறிக்கக் கிழக்கு என்பது தவிர வேறொரு சொல்லுமில்லை யென்றும், அறிந்து கொள்க.

கிழக்கிந்தியத் தீவினின்று கரும்பைக் கொண்டுவந்து பயிராக்கிய முது பழங்காலச் சேரனை, அதிகமானின் முன்னோனென்று ஔவையார் கூறியிருப்பதும், சேரநாட்டு மக்களின் முன்னோர் கொங்கு நாட்டினின்று சென்றவர் என்பதை, வலியுறுத்தல் காண்க.

குமரிமலைத்தொடர் மூழ்கியபின், நில மட்டத்தில் வடநாடு உயர்ந்தும் தென்னாடு தாழ்ந்தும் போனதனால், வடதென் திசைகட்கு உத்தரம் தக்கணம் என்னும் பெயர்கள் ஏற்பட்டுள்ளமையையும் நோக்குக. உ = உயர்வு. தக்கு = தாழ்வு. உத்தரம்—**வ.** உத்தர. தக்கணம்—**வ.** தக்ஷிண. எழுங்கதிரவனை நோக்கும் போது தென்றிசை வலப்புறத்தி லிருப்பதனால், கதிரவ வணக்கங் கொண்ட ஆரியர் தக்ஷிண என்னுஞ் சொல்லிற்கு வலம் (right) என்றும் பொருள் கொண்டனர். ப்ரதக்ஷிண = வலமாகச் சுற்றிவருதல். L. dexter = right.

மதுரையமைப்பு

(தோரா. கி. மு. ரு-ஆம் நூற்றாண்டு)

இரண்டாங் கடல்கோட்குப் பின், நீண்ட காலமாகக் கொற்கையிலும் மணலூரிலும் பாண்டியரிருந் தாண்டுவந்தனர். அதன்பின், வைகைக் கரையில் இருந்த கடம்ப வனம் என்னும் கடப்பங்காடு அழிக்கப்பட்டு இற்றை மதுரை கட்டப்பட்டது. பஃறுளிக்கரை மேலிருந்த பாண்டியன் முதல் தலைநகர்ப் பெயரே இதற்கும் இடப் பட்டதனால், அப்பெயர்க் கரணியமே இப்பெயர்க்குமாம். அக்கால வழக்கிற் கேற்ப, மதுரையைச் சுற்றி நீற்புறமும், பல்வேறு போர்ப் பொறிகளைப் பொருத்தற்கும் நொச்சி மறவர் நின்று போர் செய்தற்கும் ஏற்றவாறு, அகன்றுயர்ந்த கோட்டைமதில் எழுப்பப்பட்டது. நாற்புறமும் கோட்டைவாயிலும் வாயில்தொறும் மேன்மாடமும்

அமைந்தன். மதின்மேல் இடையிடை காவற்கோபுரங்களும் கட்டப்பட்டன. வாயின்மாடச் சிறப்பினுல் மதுரை மாட மதுரை யெனப்பட்டது. ''மாடமதுரையும்'' (புறம்.நஉ:ரு), ''மாடமதுரை'' (சிலப்.பதி:உ0, அ:ந, கூ:எசு, கரு:ககஉ), ''நான்மாட மதுரை'' (திருவால. திருவிளை. உ0:க).

கடைக்கழகத் தொடக்கம்

(கி. மு. ரு-ஆம் நூற்ருண்டு)

மதுரை மாநகர் அமைக்கப்பட்ட வுடன், மூன்ரும் புலவர் கழகமும் தோற்றுவிக்கப் பட்டது. நாற்பத்தொன்மதிர் உறுப்பினராயினர். முக்கழகத்திலும் உறுப்பினர் தொகைக்கு வரையறை இல்லை. அவ்வக்காலத்தில் தலையாய புலவர் அல்லது சிறந்த புலவர் எத்தனைவரோ அத்தனைவரும் இடம்பெற்றனர். புதிதாக யாரேனும் சிறந்த புலவர் வரினும் சேர்க்கப்பட்டனர். இதனையே, தகுந்த புலவர் வரின் கழகப்பலகை தானே ஒரு முழம் நீண்டு இடந்தரும், என்னும் மரபுரை குறிக்கும். நாற்பத்தொன்பது என்னுந் தொகை ஏழே ழென்று வகுக்கப்படுவதால், மொழிப்பற்றும் மூப்பும் புலமைத்திறமும் நோக்காது, மதம் பற்றியோ குலம் பற்றியோ நிலம் பற்றியோ ஏழெழுவர் தொகுக்கப்பட்டனர் எனக் கருதற்க. எத்தனைவர் வரினும் ஏற்றுப் போற்றற் கேற்ற செல்வம் பாண்டியனிடத்திருந்தது. முக்கழகத்திலும் புலவர் தொகையை ஒன்பதென்னும் எண்ணில் முடித்தது, ஓரிடத்தை இறைவனுக்கு ஒதுக்கவேண்டுமென்னுங் கொள்கை பற்றியே.

> ''சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளும்
> உறைவான் உயர்மதிற் கூடலி லாய்ந்தவொண் டீந்தமிழ்''

என்று மாணிக்க வாசகர் பாடியது இக்கருத்துப் பற்றியே. அகத்தியமும் தொல்காப்பியமும் கடைக் கழக இலக்கண நூல்களாயிருந்தன.

இடைக்கழகத்திற்கும் கடைக்கழகத்திற்கும் இராயிரத்தைந் நூருண்டிற்கு மேல் இடையீடுபட்டுவிட்டதனுல், இடைக் கழகத் திறுதிப் பாண்டிய னுன முடத்திரு மாறனே கடைக்கழக முதற் பாண்டிய னுன் என்பது பொருந்தாது. இந் நெட்டிடையீட்

டிற்குக் கரணியம் பின்னர்க் கூறப்படும். கழக இருக்கையை இறையனாரகப் பொருளுரை உத்தர மதுரை யென்று கூறியது, தென்மதுரை யொடு ஒப்புநோக்கியென் றறிக.

கழகத்திற்குத் தொகை யென்றும் கூடல் என்றும் பெயர்கள் ஏற்பட்டன. அதன்பின், இடவனுகு பெயராக மதுரையும் கூட லெனப் பட்டு, மாடச் சிறப்பால் மாடக்கூடல், நான்மாடக்கூடல் என்னும் வழக்கெழுந்தது. மாடங்கள் முகில்படியுமாறு வான ளாவ வுயர்ந்திருந்ததனுல், நான் முகின் மாடக் கூடல் என்றும் புலவர் புகழ்ந்து பாடினர். அத்தொடரைத் தொல்கதையாளர் பயன்படுத்திக்கொண்டு, மதுரைமேற் கடுமழை பொழிந்த நான்முகில்களை நான்மாடங்கள் கூடித்தடுத்தன வென்று கதை புனைந்து விட்டனர்.

மதுரைக் கோட்டை வாயில் ஒன்றன் முன், ஒரு மூதால மரம் படர்ந்தோங்கியிருந்ததனுல், அவ்விடம் ஆலவாய் என்று பெயர் பெற்றிருந் திருக்கலாம். அப்பெயரையும் பொருள் திரித்து, பாம் பினுல் எல்லை காட்டப் பட்ட விடமென்று கதை கட்டி விட்டனர். ஆலவாய் என்பது முதலில் நான்மாடங்களுள் ஒன்றன் பெய ராகவே யிருந்தது. நான்மாடப் பெயர்களை, "அவை திருவால வாய் திருநள்ளாறு திருமுடங்கை திருநடுவூர். இனிக் கன்னி கரியமால் காளி ஆலவாய் என்றுமாம்." என்று நச்சினுர்க் கினியர் கூறுதல் காண்க. (கலி. கூஉ, உரை).

சமற்கிருத ஆக்கம்

வேத ஆரியர் என்று சொல்லப்படும் இந்திய ஆரியர் இந்தி யாவிற்குட்புகுந்தவுடன் தம் (கிரேக்கத்தை யொத்த) மொழியை மறந்து விட்டனர். இதற்கு அவர் சிறுதொகையினரா யிருந்த தும் பழங்குடி மக்களுடன் கலந்து போனதுமே கரணியம்.

ஆரியப் பூசாரியரும் அவரைப் பின்பற்றிய விசுவாமித்திரன் போன்ற ஒருசில நாட்டுமக்களும், பாடிய மந்திரத் தொகுதி என்னும் பாடற்றிரட்டே இருக்கு வேதமாம். அதன் மொழி, மறந்துபோன கீழையாரியமும் வடநாட்டுத் திரவிடமாகிய பிராகிருதமுங் கலந்த மொழியாம். அக்கலப்பினுல், இந்திய ஆரிய மொழி எகர ஒகரக் குறில்களையும் இழந்தது.

ஆரியப் பூசாரிகளான பிராமணர் தென்னுடு வந்து தமிழ ரொடு தொடர்பு கொண்டபின், வேதமொழியுடன் ஏராளமான திரவிடச்சொற்களும் தமிழ்ச்சொற்களும் அவற்றினின்று திரிக்

கப்பட்ட ஆயிரக்கணக்கான புதுச்சொற்களும் இடுகுறிச் சொற்களும் கலந்த, கலவை மொழியில் இதிகாச புராணங்களும் தரும சாத்திரங்களும் நாடகங்களும் பிறவும் இயற்றப்பட்ட பின்னரே, கி. மு. சூ-ஆம் நூற்றுண்டுபோல் சமற்கிருதம் என்னும் அரைச் செயற்கையான இலக்கிய நடைமொழி நிறைவாக உருவாயிற்று. பிராகிருதம் (பிராக்ருத) என்பது முந்திச் செய்யப்பட்டது என்றும், சமற்கிருதம் (ஸம்ஸ்க்ருத) என்பது கலந்து செய்யப்பட்டது என்றும், பொருள்படுவன வாகும்.

இந்தைரோப்பியம், வேதியம், சமற்கிருதம் என்னும் மூவேறு நிலைகளில், ஆரியம் தமிழ்ச்சொற்களைக் கடன்கொண்டுள்ளது. வேதியம் கடன்கொண்டது வடநாட்டுப் பிராகிருத வாயிலாக வென் றறிக. வடமொழி என்னும் பெயர் வேதமொழிக்கும் சமற்கிருதத்திற்கும் பொதுவாகும். பைசாசி, சூரசேனி, மாகதி என்று வடநாட்டில் மூன்றும், திராவிடி என்று தென்னுட்டில் ஒன்றுமாக, பிராகிருதம் நான்கென வகுத்தனர்.

வேதமொழி போன்றே சமற்கிருதமும் நூன்மொழியாகும். அது பிறந்ததுமில்லை; இறந்ததுமில்லை. ஒரு மொழிக்கு உயிர் உலக வழக்கே. சில பல பண்டிதர் பல்லாண்டு வருந்திக்கற்றுச் சமற்கிருதத்திற் பேசுவதனுல், அது உயிர்மொழியாகிவிடாது. அது உயிர்மெய்யுமன்று; சவமுமன்று; வல்லோன் புனைந்த பாவை போன்றதே.

உலக வழக்கு மொழிகளா யிருந்து இறந்து போனவற்றை மட்டுமன்றி, சென்ற நூற்றுண்டு மேலை மொழியறிஞர் புனைந்த எசுப்பெராந்தோ (Esperanto), நோவியல் (Novial) முதலிய செயற்கை மொழிகளைக் கூடக் கற்றுப் பேசக்கூடியவர் உலகிலுள்ளனர்.

மறையியலாக மட்டுமுள்ள வேதமொழிக்கு இலக்கணம் வகுத்தது ஐந்திரம் என்றும், மறையியலும் (வைதீகமும்) உலகியலும் (லௌகீகமும்) கலந்த சமற்கிருத மொழிக்கு இலக்கணம் வகுத்தது பாணினீயம் என்றும், அறிதல் வேண்டும்.

பாணினீயம்

சமற்கிருதத்தின் தலைசிறந்த இலக்கண நூலாகிய பாணினீயம் பாணினியால் கி. மு. ச-ஆம் நூற்றுண்டில் இயற்றப்பட்டது. இலக்கணநூலை வியாகரணம் என்பர் வடநூலார். அது கூறுபடுப்பு (Analysis) என்னும் பொருளது. நந் நான்கு

இயல்கள் (பாதங்கள்) உள்ள எண்ணதிகாரங்கள் (அத்தி யாயங்கள்) கொண்டது பாணினி வியாகரணம். அதனால் அது அட்டாத்தியாயீ (அஷ்டாத்யாயீ) எனப் பெயர் பெற்றது. அதன் நூற்பாக்கள் (சூத்திரங்கள்) ஏறத்தாழ ௩௯௯௦. அந் நூற்கு முன் எண்ணிலக்கண நூல்கள் இயற்றப் பட்டதாகச் சொல்லப்படுகின்றது. அவற்றுள் முதலது வேதகாலத்த தெனப்படும் ஐந்திரம்.

தொல்காப்பியம் பாணினீயத்திற்கு முந்நூற்றாண்டு முந்தியது. அதனாலேயே, "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" என்று மட்டுங் கூறினார் தொல்காப்பியரின் உடன்மாணவரான பனம்பாரனார். சமற்கிருத இலக்கண நூல்களெல்லாம் பவணந்தி நன்னூல்போல் எழுத்துஞ் சொல்லுமே கூறுவன வென்றும், தமிழிற்போல் ஒரு வழங்குமொழியை விளக்காது வேதமும் இதிகாச புராணங்களுமாகிய இலக்கியத்திலுள்ள அரைச் செயற்கையான நடைமொழியையே (Semi-artificial literary dialect) விளக்குவன வென்றும், அறிதல் வேண்டும்.

தொல்காப்பியம் எழுத்துஞ் சொல்லும் பொருளுமாகிய மூவதிகாரங் கொண்டது; பொருளதிகாரத்தில், தமிழுக்கே சிறப்பான பொருளிலக்கணத்துடன் செய்யுளியலையும் அணியியலான உவமவியலையும் உட்கொண்டது. ஆதலால், பாணினீயத்தினின்று தொல்காப்பியம் தோன்றியதாகச் சிலர் கூறுவது, பேரன் பாட்டனைப் பெற்ற கதையும் களாச்செடியிற் பலாப்பழம் பறித்த கதையுமே யாகும்.

பாணினி, "அ இ உண்.", "ரு லு க்.", "ஏ ஓங்.", "ஐ ஔச்.", "ஹ ய வ ர ட்.", "லண்.", "ஞ ம ங ண நம்." முதலிய ௧௪ குறுங்கணக்கு நூற்பாக்களை, சிவபெருமானின் உடுக்கையினின்று தோன்றின ஒலிகளாகக் கூறி, அவற்றிற்கு 'மகேசுவர சூத்திரங்கள்' எனப்பெயரிட்டது, இந்தியப் பழங்குடி வர்ணரை ஏமாற்றத் துணிச்சலுடன் செய்த படுமோசச் சூழ்ச்சியாகும்.

"புண்ணிய சரவணம் பொருந்துவி ராயின்
விண்ணவர் கோமான் விழுநூ லெய்துவிர்"

என்னும் சிலப்பதிகார அடிகளை (௧௧:௯௮—௯) நோக்கின், பாணினியின் ஏமாற்றை மக்கள் நம்பி அவரிலக்கணத்தையே போற்றிப் பயிலுமாறு, தமிழ்த் தொடர்பு காட்டும் ஐந்திர வியா

கரணப் படிகளையெல்லாம் தொகுத்து, அழகர்மலையடுத்ததும் மக்கள் வழங்காததும் ஆழம் மிக்கதுமான ஒரு பொய்கைக்குள் எறிந்து விட்டதாகக் கருத இடமுண்டாகிறது. தமிழகத்துத் தோன்றிய ஐந்திரம் தமிழகத்திலேயே அழியுண்டது போலும்!

குடவம் (பித்தளை - brass)

மூன்றில் இருபங்கு செம்பும் ஒருபங்கு துத்தநாகமுங் கலந்தது குடவமாகும். உரோம நகரில் கி. மு. உ0-இல் குடவக்காசு வழங்கிற்று. தமிழகத்தில் ஏனமும் எளியார் அணிகலமும் செய்யக் குடவம் கி. மு. ந-ஆம் நூற்றாண்டிற் பயன்படுத்தப் பட்டிருக்கலாம்.

மோரியப் படையெழுப்பு

(கி. மு. ந-ஆம் நூற்றாண்டு)

தமிழகத்தின் மேல் முதன்முதலாகப் படையெடுக்கத் துணிந்த வடஇந்திய (மகதநாட்டு மோரிய) அரசன் பிந்துசாரன் (கி. மு. ந0க—உஎந), ஒரு பெரும்படையைத் தென்னாட்டிற் கனுப்பினான். அப்படை கோசர் என்னும் ஒருவகைப் பொருநரைத் துணைக்கொண்டு, தென்கன்னடம் என்னும் கொண்கானத்தின் கடற்கரைப் பகுதியான துளுநாட்டிற் புகுந்து, அதை யாண்டுகொண்டிருந்த நன்னன் என்னும் தமிழ் மன்னனை நாட்டைவிட்டு ஓட்டிவிட்டது. இதனை,

"அழியல் வாழி தோழி நன்னன்
நறுமா கொன்று நாட்டிற் போக்கிய
ஒன்றுமொழிக் கோசர் போல"

என்னும் குறுந்தொகைப் பாட்டால் (எந) அறியலாம்.

பின்னர், கோசர் தென்கிழக்காக வந்து கொங்கு நாட்டுப் பழையன் மோகூரைத் தாக்கினர். அவன் அவரைப்புறங்கண்டு துரத்தினான். அதன்பின் கோசருக்குத் துணையாக மகதத்தினின்று ஒரு புதுப்படை வந்தது. அது வரும்போது, அதைச் சேர்ந்த தேர்களும் சரக்கு வண்டிகளும் வருவதற்குத் தடையாயிருந்த பாறைகளையெல்லாந் தகர்த்து, பாதையைச் செவ்வைப் படுத்திக்கொண்டு வந்தது. அது,

''துனைகா லன்ன புனைதேர்க் கோசர்
தொன்மூ தாலத் தரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசங் கடிப்பிகுத் திரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்
பணியா மையிற் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி யுருளிய குறைத்த
இலங்குவெள் ளருவி யறைவாய்''

என்னும் அகப்பாட்டுப் பகுதியால் (உருக) அறியப்படும்.

இனி, அப்படை வடுகரையும் துணைக்கொண்டு வந்த தென்பது,

''முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்றிசை மாதிரம் முன்னிய வரவிற்கு
விண்ணுற வோங்கிய பனியிருங் குன்றத்
தொண்கதிர்த் திகிரி யுருளிய குறைத்த
அறை யிறந்து'' (அகம். உஅக)

என்னும் மாமூலர் கூற்றால் தெரிய வருகின்றது.

ஆகவே, வடுகர் கோசர் மோரியர் என்னும் மூவின மறவரைக் கொண்டது அப்படை என்பதை அறியலாம். வடுகரையும் கோசரையும் புறங்காணின் மோரியர் தாமே புறங்காட்டுவர் என்பதை அறிந்த சோழன் இளஞ்சேட்சென்னி, தன் நாட்டைக் காக்கும் கடமையை யுணர்ந்து, முன்பு ''வளங்கெழு கோசர் விளங்குபடை நூறி'' (அகம். உ0௫), பின்பு கொண்கானஞ்சென்று பாழியரணை யழித்து ஓரே யடியாக மோரியரைத் தமிழகத்தினின்று துரத்திச் ''செருப்பாழி யெறிந்த'' என்னும் விருதடைமொழியும் பெற்றான். இதனை,

''எழாஅத் திணிதோட் சோழர் பெருமகன்
விளங்குபுகழ் நிறுத்த இளஞ்சேட் சென்னி
குடிக்கட னாகலிற் குறைவினை முடிமார்
செம்புறழ் புரிசைப் **பாழி நூறி**
வம்ப வடுகர் பைந்தலை சவட்டி'' (அகம். ௩எ௫)

என்பதனால் அறியலாம். அவன் ''வடவடுகர் வாளோட்டிய'' (புறம். ௩எஅ) செயல் சற்றுப் பிந்தினதா யிருக்கலாம். வடவடுகர் கலிங்கநாட்டுத் தெலுங்கர்.

கீரந்தையின் வீட்டுக் கதவைத் தட்டி, அதனால் வேண்டாது தன் கையைக் குறைத்துக்கொண்ட கொற்கைப் பாண்டியனும், மகனை முறை செய்த மனுமுறை கண்ட சோழனும், கி. மு. உ-ஆம் நூற்றாண்டினரா யிருந்திருக்கலாம்.

மனுமுறை என்றது வடமொழி மனுதரும சாத்திர முறையை யன்று. அந்நூலின் காலம் கி. பி. உ-ஆம் நூற்றாண்டு. அதற்கு முன் தோன்றிய ஆரியதரும நூல்களும், நடுநிலையின்றிக் குலத்திற் கொருமுறை கூறுவனவே. கன்றைக் கொன்றதற்குக் கழுவாய் அல்லது தண்டனை யென்னென்று சோழன் வினவிய போது, பொற்கன்று செய்து பிராமணர்க்குக் கொடுத்து, ஆநிரையொடு காடு சென்று ஒரு மாதம் புன்மேய்ந்து வர வேண்டுமென்று, பிராமணர் கூறினர். அதை அவன் ஒப்புக் கொள்ளாது, உயிருக் குயிரே யீடென்று தன் மகன் மேல் தேரேற்றிக் கொன்றான். வடநூல்களிற் கதிரவன்குல அரசருள் முதல்வனைக் குறிக்கப் பெறும் மனு, தமிழ்ப்பெயர் கொண்ட ஒரு சோழனா யிருந்திருத்தல் வேண்டும். அவன் கண்ட நடுநிலை முறையையே, மகனை முறை செய்த சோழன் சிறப்புப் பெயர் குறித்தல் வேண்டும்.

தில்லையிலிருந்து பாணினீயத்திற்கு விரிவுரை (பாஷ்யம்) வரைந்த பதஞ்சலியார் கி. மு. உ-ஆம் நூற்றாண்டினரே. பேசு—வ.—பாஷ்—பாஷ்யம்.

ஆரியம் தமிழகத்தில் வேரூன்றி, நால்வரணமும் பிறப்பிலமைந்தவை யென்றும், பிராமணன் நிலத்தேவன் என்றும், துறவால் மட்டும் வீடுபேறென்றும், துறவு பிராமணனுக்கே வுரியதென்றும், பிராமணன் வேள்வி வளர்ப்பதனாலேயே உலகம் நடைபெறுகின்றதென்றும், பிராமணனுக்குத் தொண்டு செய்வதனாலேயே ஏனை மூவரணத்தாரும் மறுமையில் நன்னிலையடைவ ரென்றும், பல தீய கொள்கைகள் தமிழருள்ளத்திற் பதிக்கப் பட்டு வருவது கண்ட திருவள்ளுவர், தமிழரின் கண் திறக்கவும் அவரை முன்னேற்றவும் தம் திருக்குறளை இயற்றியருளினது கி. மு. உ-ஆம் நூற்றாண்டாகும். என் **திருக்குறள் தமிழ்மரபுரை**யைப் பார்க்க.

பிராமணர்க்கு முற்றும் அடிமையாகித் தமிழகத்தைப் பாழாக்கிய பாண்டியருள் தலைசிறந்த பல்வேள்விச் சாலை (யாகசாலை) முதுகுடுமிப் பெருவழுதி, கி. மு. முதல் நூற்றாண் டினனா யிருந்திருக்கலாம்.

''இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த
நான்மறை முனிவ ரேந்துகை யெதிரே'' (புறம். ௬)

என்று, வேதமோதிய பிராமணரை யெல்லாம் முனிவர் என்று கூறி, அவருக்குமுன் தன் குடுமியவிழ்ந்து விழுமாறு தலை குனிந்து வணங்கும்படி, முதுகுடுமிப் பாண்டியனை வேண்டிய காரிகிழார் என்னும் தமிழத் தமிழ்ப் புலவன் நிலைமையை நோக்கும்போது, எத்துணை யுணவுத்தட் டிருப்பினும் இக்காலமே நற்காலம் என்று தெரிகின்றது. இனி,

''பல்சாலை முதுகுடுமியின்
நல்வேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவின் நெடியோன் போல''
(மதுரைக். எ௫௯—எ௬௩)

என்னும் அடிகள், தொல்காப்பியம் அரங்கேறிய காலத்து நிலந்தரு திருவிற் பாண்டியனும், நான்மறை முற்றிய அதங் கோட்டாசானைக் கொண்டு பல்வேள்வி செய்தவன் தானே என்று ஐயுறச் செய்கின்றன.

கி. பி. முதல் நூற்றாண்டினனான கரிகால் வளவன்,

''இருநில மருங்கிற் பொருநரைப் பெறாஅச்
செருவெங் காதலிற் றிருமா வளவன்
வாளுங் குடையு மயிர்க்கண் முரசும்
நாளொடு பெயர்த்து நண்ணார்ப் பெறுகவிம்
மண்ணக மருங்கினென் வலிகெழு தோளெனப்
புண்ணிய திசைமுகம் போகிய வந்நாள்
அசைவி லூக்கத்து நசைபிறக் கொழியப்
பகைவிலக் கியதிப் பயங்கெழு மலையென
இமையவ ருறையுஞ் சிமையப் பிடர்த்தலைக்
கொடுவரி யொற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு
மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்
கோனிறை கொடுத்த கொற்றப் பந்தரும்
மகதநன் னாட்டு வாள்வாய் வேந்தன்
பகைபுறத்துக் கொடுத்த பட்டிமண் டபமும்
அவந்தி வேந்த னுவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபின் தோரண வாயிலும்

பொன்னினும் மணியினும் புனைந்தன வாயினும்
நுண்வினைக் கம்மியர் காணா மரபின
துயர்நீங்கு சிறப்பினவர் தொல்லோ ருதவிக்கு
மயன்விதித்துக் கொடுத்த மரபின விவைதாம்
ஒருங்குடன் புணர்ந்தாங் குயர்ந்தோ ரேத்தும்
அரும்பெறன் மரபின் மண்டபம்''

(சிலப். ரு:அகூ—ககo)

நிறுவி,

''காடுகொன்று நாடாக்கி
குளந்தொட்டு வளம்பெருக்கி
....
கோயிலொடு குடிநிறீஇ''. (பட்டினப். உஅரு—சா)

காவிரிக்குக் கரை கட்டி வேலி நிலம் ஆயிரங் கலம் நெல் விளையச்செய்து,

''நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்துங் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
இழத் துணவுங் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய வீண்டி.''

(பட்டினப். கஅரு—ககூஉ)

''பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருக'' மாந்தரும்,

(சிலப். ரு:கசா—எ)

''கஞ்ச காரரும் செம்புசெய் குநரும்
மரங்கொல் தச்சரும் கருங்கைக் கொல்லரும்
கண்ணுள் வினைஞரும் மண்ணீட் டாளரும்
பொன்செய் கொல்லரும் நன்கலந் தருநரும்
துன்ன காரரும் தோலின் துன்னரும்
கிழியினும் கிடையினும் தொழில்பல பெருக்கிப்
பழுதில் செய்வினைப் பால்கெழு மாக்களும்''

(சிலப். ரு:உகூ—ருச)

வேறு பல தொழிலாளரும் தழைத்தோங்கச் செய்தான். ஆயின், அவனும் ஆரியச் சாய்கடையில் வீழ்ந்து,

''அறமறக் கண்ட நெறிமா ணவையத்து
முறைநற் கறியுநர் முன்னுறப் புகழ்ந்த
தூவியற் கொள்கைத் துகளறு மகளிரொடு
பருதி யுருவிற் பல்படைப் புரிசை
யெருவை நுகர்ச்சி யூப நெடுந்தூண்
வேத வேள்வித் தொழின்முடித் தது'' (புறம். உ௨௪)

மிகமிக வருந்தத் தக்கதே.

கி. பி. உ-ஆம் நூற்றாண்டினரான, ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனும், கண்ணகிக்குப் படிமை சமைத்த சேரன் செங்குட்டுவனும், தமிழினத்தின் பெருமையைக் காத்ததனாற் பாராட்டத் தக்கவரே.

ஆரியப் படை என்றது ஆந்திரப் பேரரசின் (கி. மு. ௫௬௭—கி. பி. உ௨௦) வடுகப் படையை. வடநாட்டில் அல்லது வடக்கில் உள்ளவரை யெல்லாம் ஆரியரென்னும் வழக்கு இடைக் காலத்தில் எழுந்துவிட்டது. ''ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு.'' என்னும் பழமொழியில், ஆரியக் கூத்தென்றது வடுகரின் கழைக்கூத்தையே.

புதைய லெடுத்தவ னென்று சிறையிலிடப்பட்ட வார்த்திகனை விடுதலை செய்தபின், நெடுஞ்செழியன்

''நீர்த்தன் றிதுவென நெடுமொழி கூறி
அறியா மாக்களின் முறைநிலை திரிந்தவென்
இறைமுறை பிழைத்தது பொறுத்தல்நும் கடனென''

மன்னிப்புக் கேட்டதுடன்,

''தடம்புனற் கழனித் தங்கால் தன்னுடன்
மடங்கா விளையுள் வயலூர் நல்கியதே''

அளவிற்கு மிஞ்சினதாம். அதற்கும் மேல், நெடுஞ்செழியன் வார்த்திகன் காலில் விழுந்து வணங்கியது தமிழினத்திற்கே அழியாப் பேரிழிவாம். இதனால் அற்றைப் பிராமணர் கொட்டமும் தமிழர் அடிமைத்தனமும் தெளிவாம்.

''கார்த்திகை கணவன் வார்த்திகன் முன்னர்
இருநில மடந்தைக்குத் திருமார்பு நல்கி''

என்று (சிலப். உ௬:க௨0—க) இளங்கோவடிகள் படிமாற்றணி யால் மறைத்துக் கூறியிருத்தல் காண்க.

கோப்பெருந்தேவியின் ஊடலால் ஏற்பட்ட மனக்கலக்க நிலையில், நெடுஞ்செழியன் ஆய்ந்து பாராது கோவலனைக் கொன்றது கடுங்குற்ற மாயினும்,

"பொன்செய் கொல்லன் றன்சொற் கேட்ட
யானோ வரசன் யானே கள்வன்
மன்பதை காக்குந் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் னுயுளென
மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே தென்னவன்
கோப்பெருந் தேவி குலைந்தனள் நடுங்கிக்
கணவனை யிழந்தோர்க்குக் காட்டுவ தில்லென்
றிணையடி தொழுதுவீழ்ந் தனளே" (சிலப். உ0:எரு—அக)

என்னுஞ் செய்தி, வளைந்த கோலை உடனே நிமிர்த்திவிட்டது. இதனாற் பாண்டியன் செங்கோன்மையும் வெளியாயிற்று.

சேரன் செங்குட்டுவன், தமிழரசரை யிகழ்ந்த கனக விசயர் மேல், பனிமலையிலெடுத்த பத்தினித்தெய்வப் படிமைக் கல்லை ஏற்றிக் கொணர்ந்தது, என்றும் தமிழர்க்குப் பெருமை தருவதே. ஆயினும், அக்கல்லைக் கங்கைக் கரையில் நீராட்டிய போது, மாடலன் என்னும் பிராமணனுக்குத் துலைநிறைத் தானமாக ரு0 துலாம் பொன் கொடுத்ததும், கொடுங்கோளூரில் அவன் சொன்னவுடன் வேள்வி செய்ததும், அவனது ஆரிய அடிமைத் தனத்தைத் தெளிவாகக் காட்டும்.

செங்குட்டுவன் பத்தினிப் படிமைக்குக் கல்லெடுக்க வட நாடு சென்ற போது பேரியாற்றங் கரையிலிருந்து ஓரேநாளில் தன் தலைநகர்க்குத் திரும்பியதனாலும், நீலமலையில் தங்கினதனாலும், திரும்பி வந்தக்கால் நெய்தல் நில மகளிர் வரவேற்றுப் பாடியதனாலும், அவன் காலத்தில் கொடுங்கோளூரே தலைநகராக இருந்ததாகத் தெரிகின்றது. தமிழகம் மட்டுமன்றி இந்தியா முழுதும் அவன் அதிகாரத்திற் குட்பட்டிருந்ததனால், அவன் விரும்பி யிருப்பின் கொங்கு நாட்டுக் கருவூரை மீண்டும் தலைநகராகக் கொண்டிருத்தல் கூடும். ஆயின், அவன் முன்னோரே அதை விட்டுவிட்டதனாலும், நாட்டை வளம்படுத்தும் நீர் வணிகத்திற் குப் பூம்புகார் போல் ஒரு துறைநகரே ஏற்றதா யிருந்ததனாலும்,

கொடுங்கோளூரிலேயே நிலைத்து விட்டான். திருமால் கோவிலாகிய ஆடகமாடம், கருவூரிற் போன்று கொடுங்கோளூரிலும் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். அக்காலத்திற் பொன்னிற்குப் பஞ்சமில்லை. செங்குட்டுவன் காலத்திற் கொங்கு நாட்டுப் பகுதியை யாண்ட சேரர் குடியினர், தகடூர் அதிகமான் சரவடியினரே.

நெடுஞ்செழியன் ஆரியப்படையை வென்றிருந்ததனாலும், செங்குட்டுவன் படை கங்கையைக் கடத்தற்கு நூற்றுவர் கன்னர் (சாதகர்ணி? சாதவாகனர்?) உதவியதனாலும், கி. பி. உ-ஆம் நூற்றாண்டில் ஆந்திரப் பேரரசிற்குத் தமிழ்நாடு உட்பட்டிருந்ததென்று கொள்ள இடமில்லை.

கடைக்கழக முடிவு

கி. பி. ௩-ஆம் நூற்றாண்டில், உக்கிரப் பெருவழுதி காலத்தில், பாண்டிய வரசும் கடைக் கழகமும் குலைந்தன.

முதலிரு கழக இலக்கியமும் முற்றும் ஆரியரால் அழியுண்டதனால், இக்காலத்திற் சிலர் கடைக்கழகம் ஒன்றே இருந்ததெனக் கருதுவர். வையாபுரிகளோ, அதுவுமிருந்த தில்லையென்றும், கி. பி. ௬-ஆம் நூற்றாண்டில் மதுரையில் தோன்றிய சமண சங்கம் ஒன்றே தமிழகத்திலிருந்த பண்டைத் தமிழ்க் கழகம் என்றும், கூறுவர்.

௧௦-ஆம் நூற்றாண்டினரான பட்டினத்து அடிகள் கழகத்தைக் குறிக்கும் சங்கம் என்னும் வடசொல்லும் பெரிய சங்கைக் குறிக்கும் சங்கம் என்னும் தென்சொல்லும் வடிவொத்திருப்பதால், சங்கைப் பயன்படுத்தும் காலம் நோக்கி அதை மூன்றாக்கி,

> ''முதற்சங் கமுதூட்டும் மொய்குழலா ராசை
> நடுச்சங்கம் நல்விலங்கு பூட்டும்—கடைச்சங்கம்
> ஆம்போ ததுவூதும் அம்மட்டோ இம்மட்டோ
> நாம்பூமி வாழ்ந்த நலம்.'' (பொது)

என்னும் வெண்பாவில், பண்டைத் தமிழ்க் கழகம் மூன்றென்பதைக் குறிப்பாக வுணர்த்துதல் காண்க.

நல்விலங்கு பூட்டும் என்றது திருமணத்தன்று ஊதப்பட்டதை. அக்காலத்தில் மங்கல வினைக்கும் சங்கூதப்பட்டது. ஆம்போது என்றது இறந்தபின் ஊதப்படும் வேளையை. மூவிடத்தும் சங்கம் என்னும் வடிவே அமையுமாறு, முதற்சங்கம் பாலூட்டும் என்று பாடியிருக்கலாம். ஆயின், பாலூட்டுவது சிறு சங்காதலால், அதைச் சங்கு என்று குறித்தார்.

கடைக் கழகக் காலக் குறுநில மன்னர்

அகுதை, அத்தி, அதிகமான் தகடூர் பொருது வீழ்ந்த எழினி, அதிகமான் நெடுமானஞ்சி, அதிகமான் நெடுமானஞ்சி மகன் பொகுட்டெழினி, அந்துவஞ் சாத்தன், அந்துவங்கீரன், அம்பர் கிழான் அருவந்தை, அவியன், ஆதனழிசி, ஆதனுங்கன், ஆந்தை, ஆமூர் மல்லன், ஆய் அண்டிரன், இயக்கன், இருங்கோவேள், இளங்கண்டீரக்கோ, இளங்குமணன், இளவிச்சிக்கோ, இளவெளிமான், இர்ந்தூர் (இந்தூர்) கிழான் தோயன் மாறன், எயினன், எழினி, ஏற்றை, ஏறைக்கோன், ஏனாதி திருக்கிள்ளி, ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன், ஓய்மான் நல்லியக் கோடன், ஓய்மான் வில்லியாதன், கங்கன், கட்டி, கடிய நெடுவேட்டுவன், கண்டீரக் கோப்பெரு நள்ளி, கந்தன் (நாஞ்சிற் பொருநன்), கரும்பனூர்கிழான், குமணன், கொண்கானங் கிழான், சிறுகுடிகிழான் பண்ணன், சோழநாட்டுப் பிடவூர்கிழார் மகன் பெருஞ் சாத்தன், சோழியவேனாதி திருக்குட்டுவன், தந்துமாறன், தரும புத்திரன், தழும்பன், தாமான் தோன்றிக் கோன், தென் பரதவர், தேர்வண் மலையன், தொண்டைமான், நம்பி நெடுஞ்செழியன், நன்னன், நன்னன் சேய் நன்னன், நாஞ்சில் வள்ளுவன், நாலைகிழவன் நாகன், நெடுவேளாதன், பழையன், பிட்டங் கொற்றன், புல்லி, பூந்துறை (புன்றுறை), பொறையாறு கிழான், மல்லி கிழான் காரியாதி, மலையமான் சோழியவேனாதி திருக்கண்ணன், மலையமான் திருமுடிக்காரி, முக்காவல் நாட்டு ஆமூர் மல்லன், முதியன், மூவன், மையற்கோமான் மாவன், மோகூர்ப் பழையன், வல்லார் கிழான் பண்ணன், வல்வில் ஓரி, வாட்டாற்றெழினியாதன், விச்சிக்கோன், வெளிமான், வேங்கை மார்பன், வேள் எவ்வி, வேள் பாரி, வையாவிக்கோப் பெரும்பேகன் முதலியோர்.

இவருள், தொண்டைமான் நன்னன் முதலிய சிற்றரசரும், வள்ளல்களும் முடியணிந்தவ ராவர். கடைக் கழகக் காலத்திற் பொதுவாக மூவேந்தர் கைகளும் தாழ்ந்துவிட்டதனால், குறுநில மன்னர் தலையெடுத்து முடியணிந்து கொண்டனர். சேரன் செங்குட்டுவன் ஏழரசரை வென்று, அவர் முடிகளை மாலையாக அணிந்திருந்தான். அவ்வெழுவருள் ஐவர் குறுநில மன்னர்.

''வில்கெழு தானை விச்சியர் பெருமகன்
வேந்தரொடு பொருத ஞான்றை'' (குறுந். ௩உஅ)

என்பது, குறுநில மன்னன் வேந்தரை எதிர்த்ததைக் கூறுதல் காண்க.

குறுநில மன்னருட் பெருவள்ளல்கள்

அதிகமான், ஆய், ஓரி, காரி, நள்ளி, பாரி, பேகன், குமணன், நல்லியக்கோடன் என்பவர் பெருவள்ளல்கள். இவருள் முதலெழுவர் இலக்கியப் புகழ் பெற்றவர். அவருள்ளும் பாரி பெரும்புகழ் பெற்றவன். அவ்வெழுவர் கொடைப் பொறையையும் அவருக்குப்பின் நல்லியக்கோடன் ஒருவனே தாங்கினனென்று, நல்லூர் நத்தத்தனார் பாடுவர் (சிறுபாண்:கக௩—க௫). தன் தம்பியால் நாடுகொள்ளப்பட்டுக் காடுபோந்திருந்த குமணன், பெருந்தலைச்சாத்தனார்க்குக் கொடுக்கத் தன்னிடம் பொருளின்மையால், தன் தலையை வெட்டிக்கொண்டுபோய்த் தன் தம்பியிடங் கொடுத்துப் பெரும் பொருள் பெறுமாறு தன் வாளைக் கொடுத்து,

''சாதலி னின்னாத தில்லை யினிததூஉம்
ஈத லியையாக் கடை.'' (உ௩0)

என்னுங் குறளுக்கு எடுத்துக்காட்டானான்.

இனி, எவ்வி, நன்னன், பண்ணன் முதலிய வேறுபல வள்ளல்களு மிருந்தனர்.

''ஓம்பா வீகை மாவே ளெவ்வி'' (புறம். உச).

''இசைநல் லீகைக் களிறுவீசு வண்மகிழ்
பாரத்துத் தலைவன் ஆர நன்னன்'' (அகம். க௫உ).

''தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்
பண்ணன் சிறுகுடி'' (அகம். ௫ச).

இவ்வள்ளல்கள் இன்றேல், கடைக் கழகக் காலத்திற் புலவர் பாணர் கூத்தர் பொருநர் முதலிய இரவலர் வாழ்ந்திருக்கவும், தமிழும் இசையும் கூத்தும் வளர்ந்திருக்கவும், முடியாதென்றே கூறலாம். மாபெருஞ் செல்வரான மூவேந்தரும், பிராமணர்க்குத் தொண்டுந் தானமுஞ் செய்வதிலும், அவர் ஏவிய வேள்விகளை யெல்லாம் இயற்றுவதிலுமே, காலத்தையும் குடிகள் பணத்தை யும் செலவிட்டு, ஏழைப் புலவர்க் கெல்லாம் எட்டாக் கைய ராகவே யிருந்து வந்தனர்.

ஆரியத் தொல் கதைஞர், தமிழ வள்ளல்களின் தலைத்திறக் கொடைச் சிறப்பையும் பொன்றுப் புகழையும் மறைத்தற் பொருட்டு, வரையாது கொடுப்பவன் தலைவள்ளல் என்றும், கேட்கக் கொடுப்பவன் இடைவள்ளல் என்றும், புகழக் கொடுப் பவன் கடைவள்ளல் என்றும், வள்ளல்களை மூவகைப்படுத்தி, செம்பியன் முதலிய எழுவர் தலையெழுவள்ளல்களும், அக்குரன் முதலிய எழுவர் இடையெழுவள்ளல்களும், ஆய் முதலிய எழு வர் கடையெழுவள்ளல்களும், ஆவர் என்று பொருத்தமின்றி உண்மைக்கு மாறாக வகுத்துள்ளனர். இருந்த ஊர்களை யெல்லாம் இரவலருக்குக் கொடுத்த ஆயும் பாரியும், புலவனுக்குத் தலை யையுங் கொடுத்த குமணனையும், ஒத்த கொடையாளிகள் வர லாற்றிற்குத் தெரிந்தவரை ஒருவருமில்லை.

செம்பியனை ஆரியனென்று கருதிக் கொண்டு, அவனைத் தலையெழுவள்ளல்களுள் ஒருவனாகக் கூறியுள்ளனர். அவன் தமிழகத்துச் சோழருள் ஒருவன் என்பது முன்னரே கூறப் பட்டது. இடையெழுவள்ளல்களுள் ஒருவனாகக் கொண்ட கன் னனைப் பெருமைப்படுத்த, கொடைக்குக் கன்னன் என்றும், "கார்த்திகைக் கப்பால் மழையு மில்லை, கருணனுக் கப்பால் கொடையுமில்லை." என்றும், கூறுவர். 'கொடுக்கனுக் கப்பால் மழையுமில்லை, குமணனுக் கப்பால் கொடையுமில்லை.' என்றே பழமொழி வழங்கல் வேண்டும். கொடுக்கன் = தேள், நளி (கார்த்திகை) மாதம். கடைக்கழகக் கால வள்ளல்களின் தொகையை அடிப்படையாகக் கொண்டே, ஏனைக்காலத்தார் தொகையையும் ஏழேழாக வகுத்திருத்தல் காண்க.

அண்டிரன் என்பது கண்டீரன் என்பது போன்ற ஓர் இயற் பெயர். தமிழகத்தின் தென்கோடியிலுள்ள பொதியமலை நாட்டை ஆண்ட ஆய் அண்டிரன் தெலுங்கனல்லன். அண்டிரன் என்னுஞ் சொற்கு ஆந்திரன் என்னுஞ் சொல்லொடு தொடர்பில்லை.

வடபாற் குறுநில மன்னர்

எருமையூரன்

இற்றை மைசூர்நாட்டின் பழம்பெயர் **எருமை நாடு** என்பது. எருமைகள் மிக்கிருந்ததனால் அந்நாடு அப்பெயர் பெற்றது. அதன் தலைநகர் எருமையூர். அதிலிருந் தாண்டவன் **எருமையூரன்**. தலையாலங் கானத்துச் செருவென்ற **நெடுஞ்செழியனால்** வெல்லப்பட்ட எழுவருள் **எருமையூரனும்** ஒருவன்.

''கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன்
ஆலங் கானத் தகன்றலை சிவப்பச்
சேரல் செம்பியன் சினங்கெழு **திதியன்**
போர்வல் யானைப் பொலம்பூண் **எழினி**
நாரரி நறவின் **எருமை யூரன்**
தேங்கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின்
இருங்கோ வேண்மான் இயல்தேர்ப் **பொருநன்**என்
றெழுவர் நல்வலம் அடங்க ஒருபகல்
முரசொடு வெண்குடை அகப்படுத் துரைசெலக்
கொன்றுகளம் வேட்ட'' (அகம். ௩௬)

என்று நக்கீரர் பாடுதல் காண்க.

''நேரா வன்தோள் வடுகர் பெருமகன்
பேரிசை எருமை நன்னாட் டுள்ளதை'' (அகம். ௨௫௩)

என்பதில், எருமை என்பது வடுகர் தலைவன் ஒருவனின் பெயரைக் குறித்ததேயன்றி, அவனை எருமை நாட்டொடு தொடர்பு படுத்தியதன்று.

எருமைக்கு வடமொழியில் மகிசம் (மஹிஷ) என்று பெயர். அதனால் எருமையூர் என்பதைப் பிராமணர் மகிசபுரி என மொழிபெயர்த்தனர். அச்சொல் அதன் ஆங்கில வடிவை யொட்டி இன்று மைசூர் என வழங்குகின்றது.

''மாவா ராதே;'' (உ௭௩) என்னும் புறப்பாட்டைப் பாடிய **எருமை வெளியனார்** என்னும் புலவர், எருமையூரினராவர். ''இருள்கிழிப் பதுபோல்'' என்னும் எ௨-ஆம் அகப் பாட்டைப் பாடிய **கடலனார்** இவர் மகனார் ஆவர்.

நன்னன்

எருமை நாட்டிற்கும் குடமலைக்கும் மேற்கிலுள்ள தென்கன்னடப்பகுதி, **கொண்கானம்** என்னும் பெயர்கொண்டதாகும். கொண்கு துறைமுகம் அல்லது கடற்கரை. கொண்கன் நெய்தல் நிலத்தலைவன். **கொண்கானம்** கடற்கரை நிலமாதலால் அப் பெயர் பெற்றது போலும்!

கடைக்கழகக் காலத்தில் கொண்கானத்தை ஆண்டவன் **நன்னன்.** அவன் தலைநகர் கடம்பின் பெருவாயில் என்பர். **ஏழிற் குன்றம்** என்னும் பெருமலையையும்; **பாழி, பாரம், வியலூர், பிரம்பு** என்னும் பேரூர்களையும், உடையது கொண்கானம். அவ்வூர்களுள் பாழி ஒரு வல்லரண் நகர். அது **ஏழில் மலையின்** எழு குவடுகளுள் ஒன்றான **பாழியை** அரணாகக் கொண்டதாகத் தெரிகின்றது. நன்னன் ஒரு கொடையாளியாகவும் இருந்தான்.

''பொன்படு கொண்கான நன்னன் நன்னாட்
டேழிற் குன்றம் பெறினும்'' (நற். ௩௯௧).

''இசைநல் லீகைக் களிறுவீசு வண்மகிழ்
பாரத்துத் தலைவன் ஆர நன்னன்
ஏழில் நெடுவரைப் **பாழிச் சிலம்பில்**'' (அகம். ௧௫௨).

''சூழி யானைச் சுடர்ப்பூண் நன்னன்
பாழி அன்ன கடியுடை வியனகர்'' (அகம். ௧௫).

''நறவுமகிழ் இருக்கை நன்னன் வேண்மான்
வயலை வேலி **வியலூ** ரன்ன'' (அகம். ௬௭).

நன்னன் வேளிர் மரபைச் சேர்ந்தவன் என்பது, வேண்மான் என்னும் பெயராலும்,

''நன்னன் உதியன் அருங்கடிப் **பாழித்**
தொன்முதிர் வேளிர் ஓம்பினர் வைத்த
பொன்'' (அகம். உ௫அ)

என்பதனாலும் அறியப்படும். **பாழிப்** பொன் கவர அடிக்கடி போர் நிகழ்ந்ததனால் அந்நகர் **செருப்பாழி** எனப் பெயர் பெற்றது போலும்!

ஏழில்மலை என்பதைப் பிராமணர் சத்த சைலம்(ஸப்த சைல) என மொழிபெயர்த்தனர். பின்னர் ஏழில்மலை என்பது எலிமலை எனத் திரிந்தபோது, ஏழில்மலை நாட்டை அவர் மூசிகநாடு

என்றனர். மூசிகம் (மூஷிக) என்பது எலியைக் குறிக்கும் வட சொல். **பாழிச்சிலம்பு** என்பது **பாழிக்கல்** என்றும் வழங்கும். அது இன்று **பாட்கல்** எனத் திரிந்துள்ளது. **வியலூர்** என்பது, இன்று கன்னடமொழி யியல்பிற்கேற்பப் **பெயிலூர்** (Bailur) என்று வழங்குகின்றது.

கொண்கானத்தின் கடலோர வடபகுதி **துளுநாடு** எனப் படும். அங்குத் **தோகைக்கா** என்றவூருள்ளது. மயில்கள் நிறைந்த சோலையினால் அவ்வூர் அப்பெயர் பெற்றது.

> "..........................பறைக்கண் பீலித்
> தோகைக் காவின் துளுநாட் டன்ன" (அகம். கரு).

பாழிச் சிலம்பும் மயிலுக்குப் பெயர் பெற்றதென்பது,

> "ஏழில் நெடுவரைப் பாழிச் சிலம்பிற்
> களிமயிற் கலாவத் தன்ன" (அகம். கருஉ)

என்பதனால் அறியப்படும். **தோகைக்கா** என்பது தோக்கா என மருவி, இன்று சோக்கு (ஜோக்) எனத் திரிந்துள்ளதாகப் பேரா. ஒளவை. சு. துரைச்சாமிப் பிள்ளையார் கூறுவார்.

கொண்கானம் என்பது கடைக்கழகக் காலத்திலேயே **கொங்கணம்** எனத் திரிந்து விட்டது. "கொக்கென்று நினைத் தனையோ கொங்கணவா?" என்று திருவள்ளுவர் மனைவியார் கூறியதாகக் கதையுண்மையும், "கொங்கணர் கலிங்கர் கொடுங்கரு நாடர்" என்று சிலப்பதிகாரம் கூறுவதையும் (உரு: கருசு), காண்க.

வெளியன் வேண்மான் ஆய் எயினன்

கொண்கானத்தின் தென்கீழ்ப் பகுதி **புன்னாடு** எனப்பட்டது. அதை ஆண்ட வெளியன் வேண்மானர் மரபில் வந்தவன் **வெளியன் வேண்மான் ஆய் எயினன்**. அவன் தலைநகர் **வாகை**.

> "வண்கை **எயினன் வாகை** யன்ன" (புறம். நருக).

> "யாம விரவின் நெடுங்கடை நின்று
> தேமுதிர் சிமையக் குன்றம் பாடும்
> நுண்கோ லகவுநர் வேண்டின் வெண்கோட்
> டண்ணல் யானை யீயும் வண்மகிழ்
> **வெளியன் வேண்மான் ஆஅய் எயினன்**" (அகம். உ0அ)

என்பதனால், அவன் கொடைத்திறம் விளங்கும்.

பதிற்றுப் பத்தின் உ-ஆம் பதிகம், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனை, "உதியஞ் சேரற்கு வெளியன் வேண்மாள் நல்லினி இன்ற மகன்" என்கின்றது. அவ்வேண்மாள் வெளியன் மரபினள் போலும்.

பிட்டங் கொற்றன்

கொண்கானத்திற்குக் கிழக்கில், குடமலைத் தொடரிலுள்ள குவடுகளுள் ஒன்று குதிரை மலை. அம்மலைநாட்டை யாண்டவன் பிட்டங் கொற்றன்.

"அருவி யார்க்குங் கழைபயில் நனந்தலைக்
கறிவள ரடுக்கத்து மலர்ந்த காந்தட்
கொழுங்கிழங்கு மிளிரக் கிண்டிக் கிளையொடு
கடுங்கட் கேழ லுழுத பூழி
நன்னாள் வருபத நோக்கிக் குறவர்
உழாஅது வித்திய பரூஉக்குரற் சிறுதினை
முந்துவிளை யாணர் நாட்புதி துண்மார்
மரையான் கறந்த நுரைகொள் தீம்பால்
மான்றடி புழுக்கிய புலவுநாறு குழிசி
வான்கே ழிரும்புடை கழாஅ தேற்றிச்
சாந்த விறகின் உவித்த புன்கம்
கூதளங் கவினிய குளவி முன்றிற்
செழுங்கோள் வாழை யகலிலைப் பகுக்கும்
ஊராக் குதிரைக் கிழவ கூர்வேல்
நறைதார்த் தொடுத்த வேங்கையங் கண்ணி
வடிநவில் அம்பின் வில்லோர் பெரும
கைவள் ளீகைக் கடுமான் கொற்ற
வையக வரைப்பில் தமிழகங் கேட்பப்
பொய்யாச் செந்நா நெளிய ஏத்திப்
பாடுப என்ப பரிசிலர் நாளும்
ஈயா மன்னர் நாண
வீயாது பரந்தநின் வசையில்வான் புகழே."

(புறம். கசுஅ),

என்னும் கருவூர்க் கந்தப்பிள்ளை சாத்தனார் பாட்டும்

> "ஒளிதிகழ் முத்தம் விறலியர்க் கீத்து
> நார்பிழிக் கொண்ட வெங்கட் டேறல்
> பண்ணமை நல்யாழ்ப் பாண்கடும் பருத்தி"
> (புறம். களo)

என்னும் உறையூர் மருத்துவன் தாமோதரனார் பாட்டும்,

> "இன்று செலினுந் தருமே சிறுவரை
> நின்று செலினுந் தருமே பின்னும்
> முன்னே தந்தனென் என்னது துன்னி
> வைகலுஞ் செலினும் பொய்யல னாகி
> யாம்வேண்டி யாங்கெம் வறுங்கலம் நிறைப்போன்
> தான்வேண்டி யாங்குத் தன்னிறை யுவப்ப
> அருந்தொழில் முடியரோ திருந்துவேற் கொற்றன்
> இனமலி கதச்சேக் களனொடு வேண்டினும்
> களமலி நெல்லின் குப்பை வேண்டினும்
> அருங்கலம் களிற்றொடு வேண்டினும் பெருந்தகை
> பிறர்க்கும் அன்ன அறத்தகை யன்னே" (ஷை களக)

என்னும் காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாட்டும், குதிரைமலைக் குறவர் வாழ்க்கையையும் கொற்றன் கொடைத் திறத்தையும் தெளியக் காட்டும்.

குதிரைமலைப் பகுதியிலுள்ள வடகரை மேற்கரை என்னும் இடப்பெயர்கள், இன்று 'படகரா' 'மர்க்கரா' என்று உருமாறி வழங்குகின்றன.

குதிரைமலை நாட்டுத் தலைநகர்ப் பெயரான கொற்றன் கருவூர் என்பது, இன்றும் 'கொத்த கனவூர்' என்று வழங்கி வருவதாகப் பேரா. ஔவை. சு. து. கூறுவர்.

இருங்கோவேள்

கொண்கானத்தின் வடபா லிருந்தது கடம்பரின் பங்களநாடு. அவ்விரு நாடுகட்கும் கிழக்கில் குடமலைத்தொடரின் கீழ்பால் இருந்தது வேளிரது வேணாடு. அந்நாட்டுத் துவரை நகரைத் தலைநகராகக் கொண்டு இருங்கோவேள் ஆண்டு வந்தான்.

> "உவரா ஈகைத் துவரை யாண்டு
> நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
> வேளிருள் வேளே" (புறம். உoக)

என்று கபிலர் பாடுதல் காண்க.

துவரை (துவாரசமுத்திரம்) இன்று எருமையூர் நாட்டைச் சேர்ந்தது.

வேம்பாய்ப் (Bombay) பைதிரம் (பிரதேசம்) முழுதும் முன் காலத்தில் வேளுடா யிருந்தது. முன்னர் **நைசாம்** அரையத்தைச் சேர்ந்திருந்த எல்லோரா (Ellora), பழைய பட்டையங்களில் (சாஸனங்களில்) **வேளூர்** என்றும் **வேளூரகம்** என்றும் குறிக்கப்பட்டுள்ளது. **வேம்பாய்ப்** பைதிரத்துச் சோழாபுரம் (Sholapur) மாவட்டத்தில் ஒரு நகர் **வேளாபுரம்** (Velapur) என்ற பெயர் கொண்டுள்ளது. அகமதுநகர் வட்டத்தில் **வேளாபுரம்** என்றும், பூனா மாவட்டத்தில் **வேளகம்** என்றும், பல நகரங்கள் உள்ளன. அப்பைதிரத்தைச் சேர்ந்த **வேளகம்** (வேள் கிராமம் (?)) என்னும் மாவட்டத் தலைநகர் பெல்காம் (Belgaum) என்றும், **வேள்பட்டி** என்னும் ஊர் பேல்ஹுட்டி (Bel hutti) என்றும், வழங்குகின்றன. **ஒய்சள** மன்னரின் பட்டப்பெயரான பெல்லாள என்பது வேளாளன் என்பதன் திரிபாகவே கருதப்படுகின்றது.

தொடக்கக் காலத்தில், **வேளுடு** மராட்டிய நாட்டில் மட்டு மன்றி கூர்ச்சரத்திலும் பரவியிருந்தது. கத்தியவார் கச்சுப் (Cutch) பைதிரங்களில், இன்றும் பலவூர்கள் **வேளா** என்பதன் திரிபான பேலா (Bela) என்னும் பெயர் கொண்டுள்ளன. அகத்தியர் துவாரபதிப் போந்து பதினெண்குடி வேளிருள்ளிட்டாரைக் கொண்டுவந்தார் என்னும், நச்சினார்க்கினியர் கூற்றும், வேதக்காலத்தில் மராடமும் குச்சரமும் பஞ்ச திரவிடத்துள் அடக்கப்பட்டதும், இங்குக் கவனிக்கத்தக்கன.

பிற்காலத்துத் தோன்றிய சளுக்கியர் வேளுட்டை ஆண்டதனலேயே, "வேள்புல வரசர் சளுக்கு வேந்தர்." என்று **திவாகரமும் பிங்கலமும்** கூறுகின்றன.

கங்கர்

இற்றை எருமையூர் (மைசூர்) நாட்டின் ஒரு பகுதியை, அதாவது, பண்டைக் குணகொங்கின் வடபாகத்தில் ஒரு பகுதியை, கங்கர் என்னும் மரபினர் கடைக்கழகக் காலத்திலேயே ஆண்டு வந்தனர்.

"துன்னருங் கடுந்திறற் **கங்கன் கட்டி**"

என்று அகப்பாட்டும் (சச),

"பங்களர் கங்கர் பல்வேற் கட்டியர்"
என்று சிலப்பதிகாரமும் (உடு:கஙுள), கூறுதல் காண்க.

கொங்கன் என்னும் பெயரே கங்கன் என்று திரிந்திருக்கலாம்.

கட்டியர்

கங்கநாட்டிற்குக் கிழக்கிலிருந்த பண்டைக் குணகொங்குப் பகுதியைக் கங்கர் ஆண்டுவந்ததாகத் தெரிகின்றது.

"குல்லைக் கண்ணி வடுகர் முனையது
பல்வேற் கட்டி நன்னாட் டும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும்"

என்னுங் குறுந்தொகைப் பாட்டை (கக) நோக்குக.

வடக்கிற் பல்லவர் தலையெடுத்த பின்பும், தெற்கில் அதிகமானர் கை தாழ்ந்த பின்புமே, கங்கநாடும் கட்டிநாடும் தெற்கே தள்ளி வந்திருத்தல் வேண்டும்.

காவிரிப்பூம்பட்டினம் கடலில் மூழ்கியமை

சேரன் செங்குட்டுவன் பத்தினித் தெய்வத்திற்குப் படிமை நிறுவி விழா வெடுத்தபின், காவிரிப்பூம்பட்டினத்தைக் கடல் கொண்டது. அன்றே அதற்குச் சற்றுமுன்போ குமரியாறும் கடலுள் மூழ்கிற்று. அதன்பின் தமிழகத்தின் தென்னெல்லையும் கடலாயிற்று. அதனால்,

"நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்" (சிலப். அ:க)

என்று பாடினார் இளங்கோவடிகள்.

கடைக்கழகக் கால வாணிக வளர்ச்சி

நிலவணிகமும் நீர்வணிகமும் கடைக்கழகக் காலத்திற் பெருவளர்ச்சி யடைந்திருந்தது.

சட்டையணிந்தவரும் பாத்க்கூடு (boots) மாட்டியவருமான மேலையாசியரும் மேனாட்டாரும், மிளகுப் பொதிகள் கொண்டு செல்லும் கோவேறு கழுதைச்சாத்தொடு கூடி, மலைபடுசெல்வமுங் கடல்படுசெல்வமுமான பல அரும்பொருள்களை, அரசன் நிறுத்திய விற்படைஞர் இரவும் பகலுங் காத்திருக்கும் சுங்கப் பெருவழிகளிற் சென்று, விற்றுத்திரிந்தனர்.

"மலையவுங் கடலவு மாண்பயந் தரூஉம்
அரும்பொரு ளருத்துந் திருந்துதொடை நோன்றாள்
அடிபுதை யரணம் எய்திப் படம்புக்கு
....
உடம்பிடித் தடக்கை யோடா வம்பலர்
அணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கும்
உல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்
....
வில்லுடை வைப்பின் வியன்காட் டியவின்"
(பெரும்பாண்: சுஎ—அஉ).

கடாரம் (பர்மா) மலையா முதலிய கீழைநாடுகட்கும் சுமதுரை சாலி (சாவகம்) முதலிய கீழைத்தீவுகட்கும், நீர்வாணிகர் சென்று வணிகம் செய்து வந்தனர். அவர் இக்காலத்து நாட்டுக்கோட்டைச் செட்டிமார் போல் தங்கள் குடும்பங்களை இங்கேயே விட்டுச் சென்றனர். இவ்வழக்கம் கி. மு. எ-ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே இருந்ததென்பது,

"முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை."

என்னும் தொல்காப்பிய நூற்பாவால் (கூஅ0) அறியப்படும்.

கீழ்கரையி லிருந்த **கொற்கை தொண்டி புகார்** முதலிய துறைநகரங்களுள், **புகார்** மிகப் பெரிதாகவும் உலகிலேயே தலைசிறந்ததாகவும் இருந்தது. அது காவிரிக் கயவாயில் அமைந்த அழகிய துறைநகரமாதலால் **காவிரிப்பூம்பட்டினம்** என்றும், அவ்வாறு கடலிற் புகும் இடத்திலிருந்ததனால் **புகார்** என்றும், பெயர் பெற்றது. துறைநகரைப் பட்டினம் என்பது பண்டை வழக்கு. பதி—பதனம்—பத்தனம்—பட்டனம் (பட்டணம்)—பட்டினம்.

"கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும்
பயனற வறியா யவனர் இருக்கையும்
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையும் இலங்குநீர் வரைப்பும்"
(சிலப். ரு: கூ—கஉ)

"மொழிபெயர் தேத்தோர் ஒழியா விளக்கமும்"
(ஷை சூ: கசரு)

என்பவற்றால், உலகெங்கணுமுள்ள பல்வேறு நாட்டுமக்கள், காவிரிப்பூம்பட்டினத்தில், தங்கள் நாட்டுப்பொருள்களுடன் தங்கியிருந்தமை அறியப்படும். யவன ரென்பார் கிரேக்கரும் உரோமரும்.

மேல்கரையி லிருந்த முசிறி தொண்டி மாந்தை முதலிய துறைநகர்களுள், சுள்ளியம் பேரியாற்றுக் கயவாயிலிருந்த முசிறி சிறந்ததா யிருந்தது.

''சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி'' (அகம். கசக).

பாண்டியன் உரோம நாட்டுத் தொடர்பு

பாண்டியன் **அகத்தசு** (Augustus-கி. மு. சச—கி. பி. கச) என்னும் **உரோம** நாட்டுப் பேரரசனுக்குத் தூது விடுத்த தாகவும், அது ஏற்றுக்கொள்ளப்பட்ட தாகவும், சொல்லப்படு கின்றது. ஏற்கெனவே இருநாடுகட்கும் இடையே இருந்த வாணி கத்தொடர்பொடு தூதாண்மைத் தொடர்பும் ஏற்பட்டதன் விளைவாக, ஒரு சிறு உரோமக் குடியேற்றம் மதுரையில் அமைந்ததாகவும், பாண்டியன் மெய் காவற் படை உரோமப் பொருநரைக் கொண்டிருந்ததாகவும், தெரிகின்றது. மதுரை மாநகர்க் கோட்டை வாயிலையும், கோவலன் காலத்தில் உரோ மப் படைஞர் காத்துநின்றதை,

''கடிமதில் வாயில் காவலிற் சிறந்த
அடல்வாள் யவனர்க் கயிராது புக்காங்கு''
(சிலப். கச:சுசு—எ)

என்பதனால் அறியலாம். இந்நிலைமை கி. பி. ச—ஆம் நூற்றுண்டு வரை நீடித்தது. அதனால், அக்காலத்து உரோமக் காசுகள், பாண்டி நாட்டில் மட்டுமன்றித் தமிழகத்தின் பலவிடங்களிலும் கிடைத்துள்ளன.

''யவனர் நன்கலந் தந்த தண்கமழ் தேறல்''
(புறம். ருசு:கஅ)

என்பது, யவனர் பாண்டியர் வாணிகத் தொடர்பைக் காட்டும்.

மேலை யாரியக் கலத்துறைச் சொற்கள்

உலகில் முதன்முதல் ஆழ்கடலிற் பெருங்கலஞ் செலுத்தின வரும், சுற்றுக்கடலோடிகளா (circumnavigators) யிருந்தவரும் தமிழரே. அதனாற் கடலும் கலத்துறையும் பற்றிய பல தமிழ்ச் சொற்கள், மேலையாரிய மொழிகளிற் கலந்துள்ளன.

வாரி—L. mare. வாரணம்—L. marinus. E. marina, marine, mariner.

படகு—LL. barca, It., Sp., Pr. barca, F. barque, E. bark, barque.

L. barga, OF. barge, E. barge.

ட—ர, போலித் திரிபு. ஒ. நோ: கொடுக்கு—ME. croc, E. crook. குடகு, தூத்துக்குடி, கள்ளிமேடு, தரங்கம்பாடி முதலிய இடப்பெயர்கள் ஆங்கிலத்திற் கொண்டுள்ள வடிவுகளையும் நோக்குக.

கலம்—Gk. galaia, L. galea, OF. galie, ME. galie, E. galley,
கப்பல்—OE. scip, OFris. skip, schip, NFris. skapp, skep, WFris. skip, OS. skip, MLG. schip, schep, LG. schipp, MDu. sc(h)ip, sc(h)eep, Du. schip, WFlem. scheep, OHG. scif, skef, MHG. schif, schef, G. schiff, ON. skip, Sw. skepp, Da. skib, Goth. skip, F. esquif, It. schifo.

இது தியூத்தானியப் பொதுச்சொல் (Com. Teut.) என்றும், இதன் அடிமூலம் திட்டமாய்த் தெரியவில்லை யென்றும் ("the ultimate etymology is uncertain") என்றும், எருதந்துறை ஆங்கிலப் பேரகரமுதலியிற் (O. E. D.) குறிக்கப்பட்டுள்ளது.

கொம்பு—கொப்பு—கப்பு—கப்பல் = பல கிளைகளைக் கொண்ட பாய்மரமுள்ள கலம்.

நாவி, நாவாய்—L. navis, navia, OF. navie, ME. navie, E. navy. Gk. naus.

நங்கூரம்—Gk. agkura, L. ancora, OE. ancor, E. ancher, Pers. langar.

ஆங்கில அகரமுதலியில், இச்சொற்கு agk (=hook) என்னும் கிரேக்கச் சொல் மூலமாகக் காட்டப்பட்டுள்ளது. அச்சொல்லும் அங்கு என்னும் தென்சொல்லின் திரிபே. அங்குதல் வளைதல். அங்கு—அங்கணம் = வாட்டமான சாய்கடை.

முதன்முதல் தமிழகத்தினின்றே மேனாடுகட்குச் சரக்குகள் ஏற்றுமதியாயின என்பதற்கு, அரிசி இஞ்சி என்னும் இரு சொற்களே போதிய சான்றும்.

அரு—அரி = க. சிறுமை. அரிநெல்லி (சிறுநெல்லி).
உ. நுண்மை. "அரியே ஐம்மை."
(தொல். அருஎ).
ங. அரிசி. "அரிசியும் வரியும் அரியென லாகும்."
(பிங்.).

அரி—அரிசி = க. சிறியது. அரிசிப்பல் (சிறுபல்). உ. நெல் புல் (கம்பு) முதலிய கூலங்களின் உள்ளீடு.

அவரை துவரை முதலிய பயற்றம் பருப்புக்களை நோக்க, நெல் புல் முதலிய தவசங்களின் அரிசி சிறியதாயிருத்தல் காண்க.

அரிசி—E. rice, ME. rys, Fris. rys, Du. rijst, rijs, rys, MLG. riis, ris, MHG. ris, G. reis, MSw. riis, Sw. and Da. ris, OF. ris, F. riz, It. riso, L. oriza, oryza, Gk. oruza, oruzon, Sp. and Pg. arroz, Arab. aruz, uruz.

Bot. n. L. Oryza sativa.

நெல் தோன்றுதொட்டுத் தமிழகத்து விளைபொருள் என்பதும், அரிசி முதன்முதல் தமிழகத்தினின்றே மேனாடுகட்கு ஏற்றுமதியானதென்பதும், வெளிப்படை. அங்ஙனமிருந்தும், எருதந்துறை ஆங்கிலப் பேரகர முதலியில் (O. E. D), 'அரிசி' தமிழ்ச் சொல்லென்று குறிக்கப்படாது, "probably of Oriental origin" என்றும், எருதந்துறைச் சிற்றகர முதலியில் (C. O. D.), "of Oriental orig." என்றும் மட்டுமே குறிக்கப்பட்டுள்ளது.

இதற்குக் கரணியமாயிருந்தவர் ஆரியர் மட்டுமல்லர்; அவரடியாரான வையாபுரிகளும் தன்னலப் புலிகளும் வணிகப் புலவருமாவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற் பத்தாண்டுகட்கு முன்னரே என்னால் தொகுக்கப்படவிருந்த செந்தமிழ்ச் சொற்பிறப்பியற் பேரகர முதலி, சேதுப்பிள்ளையால் தடுக்கப்பட்டுவிட்டது. இதை இன்னும் அப்பல்கலைக் கழகம் உணரவில்லை.

இஞ்சிவேர்—Gk. ziggiberis, L. zingiber, gingiber, OE. gingifer, gingiber, E. ginger.

OF. gingibre, gingimbre, mod. F. gingembre, Pr. gingibre, gingebre, Sp. gengibre, agengibre, Pg. gengivre, It. zenzevero, zenzero, gengero, gengiovo.

Arab. zanjabil, MDu. gengber, D. gember, MHG. ingewer, Ger. ingwer, MLG. engewer, Da. ingefeer, Sw. ingefara.

கோழிக்கோட்டிலிருந்து (Calicut) ஏற்றுமதியான பருத்தித் துணி ஆங்கிலத்திற் கலிக்கோ (calico) என்று பெயர் பெற்றுள்ளது.

கடைக்கழகக் கால ஆரிய மீக்கூர்வு

பழங்குடிப் பேதைமை, மதப் பித்தம், கொடைமடம் என்னும் முக்குற்றமும் ஒருங்கு கொண்ட மூவேந்தரும், பகுத்தறிவைப் பயன்படுத்தாது பிராமணரை முற்றும் பின்பற்றியதனால், கடைக் கழகக் காலத்தில், மதவியல் குமுகாயவியல் மொழியியல் என்னும் முத்துறையிலும், ஆரியம் மிக வேரூன்றி விட்டது.

(க) மதத்துறை

ஆரியப்படுத்தம்

தமிழர், நால் வேதங்களையும் நான் முகமாகக் கொண்டதனால், அவனைத் திருமாலின் (கொப்பூழினின்று பிறந்த) மகனென்று தமிழ்த் தெய்வத்துடன் இணைத்து விட்டனர்.

> ''நீனிற வுருவின் நெடியோன் கொப்பூழ்
> நான்முக வொருவற் பயந்த பல்லிதழ்த்
> தாமரைப் பொகுட்டிற் காண்வரத் தோன்றி''
> (பெரும்பாண். ச0உ—ச)

ஆரிய வேதங்கட்கும் சிவனுக்கும் யாதொரு தொடர்பும் இன்றேனும், சிவனே வேதங்களை யருளியதாகக் கூறப்பட்டது.

''நான்மறை முதுநூல் முக்கட் செல்வன்'' (அகம். கஅக).

முதுகுடுமிப் பெருவழுதி, கரிகால் வளவன், அரச வேள்வி (ராஜஸூய) வேட்ட பெருநற் கிள்ளி, பல்யானைச் செல்கெழு குட்டுவன், சேரன் செங்குட்டுவன் முதலிய தமிழவேந்தர், ஆவின் பாலிருக்க அங்கணநீர் குடிப்பார் போல், கோவிலில் வழிபடும் பெருந்தேவ வழிபாட்டை விட்டுவிட்டுக் கொலை வேள்விசெய்யும் சிறு தெய்வ வழிபாட்டை மேற்கொண்டனர்.

> ''கடல்வளர் புரிவளை புரையு மேனி
> யடல்வெந் நாஞ்சிற் பனைக்கொடி யோனும்'' (புறம்.ருசு)

"பிறவா யாக்கைப் பெரியோன்" (சிலப். ரு:கசுக) என்பவற்றால், திருமாலின் பல தோற்றரவுக் கொள்கை புகுத்தப்பட்டது தெளிவாகின்றது.

"கறைமிட றணியலு மணிந்தன் றக்கறை
மறைநவி லந்தணர் நுவலவும் படுமே" (புறம். கட.வா.)

என்பது, ஒரு கட்டுக்கதையால் சிவனை ஆரியப்படுத்தும்.

"நீரற வறியாக் கரகத்துத்
தாழ்சடைப் பொலிந்த அருந்தவத் தோற்கே"
(புறம். கட. வா.)

என்பது, சிவபெருமானுக்குப் பிராமண வடிவேற்றுந் தொடக்கத்தைக் காட்டும்.

திருமுருகாற்றுப்படை, கந்தபுராணக் கட்டுக் கதையால் முருகன் ஆரியத் தெய்வமாக்கப்பட்டதைத் தெரிவிக்கும்.

தெய்வம் பற்றிய பரிபாடற் பாக்களால், ஆரியத் தெய்வங்களெல்லாம் தமிழகத்துட் புகுத்தப்பட்டதை அறியலாம்.

"தெய்வ மால்வரைத் திருமுனி யருள
....
தாதவிழ் புரிகுழல் மாதவி தன்னை" (சிலப். ௩:க—எ)

என்பதனால், ஒரு வரலாற்று மகளும் ஆரியத் தொல்கதைத் தொடர்புபடுத்தப்பட்டுள்ளாள்.

ஏமாற்று

நோயால் இறந்த அரசருடம்பைப் பிராமணன் தருப்பையிற் கிடத்தி வாளால் வெட்டி, அவருயிரை விண்ணுலகத்திற் கேற்றும் **வாள்போழ்ந் தடக்கலும்**; பாலைக் கௌதமனார், பூத்துப் பெருவேள்வி வேட்டுப் பத்தாம் வேள்வி வேட்கையில், தம் மனைவியாருடன் விண்ணுலகடைந்தாரென்பதும்; பாண்டியன் அரசியற் பணியாளர் வார்த்திகனைச் சிறையிலடைத்தவுடன், காளிகோயிற் கதவம் தானே சாத்திக் கொண்ட தென்பதும், துணிச்சலான ஏமாற்று வினைகளாம்.

பொருள் கவர்வு

தமிழ வேந்தரின் பொற்செல்வப் பெருக்கையும் ஏமாளித் தன்மையையுங் கண்ட பிராமணர், அவரிடமிருந்து இயன்ற

வரை பொன்னும் நிலமும் பறிக்கத் திட்டமிட்டுப் பதினறு தானங்கள் வகுத்துள்ளனர். அவையாவன:—

(க) துலாபுருடதானம் — ஆள்நிறைப் பொற் கொடை.
(உ) இரணிய கருப்ப தானம் — பொற் கருப்பைக் கொடை.
(ங) பிரமாண்ட தானம் — பொன் நிலவுருண்டைக் கொடை.
(ச) கல்ப பாதப தானம் — விண்மரப் பொற் கொடை.
(ரு) கோசகசிரம் — ஆயிர ஆக் கொடை.
(சூ) இரணிய காமதேனு தானம் — பொன்னுக் கொடை.
(எ) இரணியாசுவ தானம் — பொற்குதிரைக் கொடை.
(அ) இரணியாசுவரத தானம் — பொற்குதிரைத் தேர்க் கொடை.
(கூ) ஏமாத்திரத தானம் — பொன்யானைத் தேர்க் கொடை.
(க0) பஞ்சலாங்குல பூதானம் — ஐயேர்நிலக் கொடை.
(கக) தரா தானம் — பொன் நிலக் கொடை.
(கஉ) விசுவ சக்கர தானம் —வியனுல காழிப் பொற்கொடை.
(கங) மகா கல்ப லதா தானம் — பெரு விண்கொடிப் பொற் கொடை.
(கச) சப்த சாகர தானம் — எழுகடற் கொடை.
(கரு) இரத்தினதேனு தானம்— மணிப்பொன் னுக்கொடை.
(கசூ) மகா பூத கட தானம் — ஐம்பூதப் பொற்கலக் கொடை.

இவற்றுள், விண்மரப் பொற்கொடை ஒரு குதிரை வேள்விக்குச் சமம் என்றும், பொற் குதிரைத் தேர்க் கொடையால் தீவினை யனைத்தும் நீங்குமென்றும், சொல்லப்பட்டது.

பொற் கருப்பைக் கொடை என்பது, பொன்னால் ஆவுருச் செய்து அதனூடு புகுந்து வெளிவந்தபின் அதனைப் பிராமணனுக்குக் கொடுப்பது. பொன்னுப் புகல் மறுபிறப்பிற்கு ஒப்பானதென்றும், அதனால் தீவினை நீங்கி வாழ்நாள் நீடிக்கும் என்றும், கருத்து. ஓர் ஆள் புகுந்து வெளிவருமளவு ஆவுருவம் செய்வதற்கு, எத்துணைப் பொன் வேண்டுமென்றும், அதைப் பெறுபவனுக்கு அது எத்துணைப் பெருஞ்செல்வமென்றும், எண்ணிக் காண்க.

பொன்னிலக் கொடை யென்பது, நாவலந் தீவம் போல் அமைத்த திண்ணிய பொற்றகட்டைக் கொடுப்பது.

எழுகடற் கொடை என்பது, நன்னீர், உவர்நீர், பால், தயிர், நெய், தேன், கருப்பஞ்சாறு ஆகியவற்றை எழு குண்டங்களில் நிரப்பிச் சடங்குசெய்து கொடுப்பது.

பிராமணருக்குக் கொடுக்கும் நிலத்திற்குப் பிரமதாயம் என்றும், ஊர்க்குப் பிரமதேயம் என்றும், பெயர்.

மேற்கூறிய பதினறு தானங்களும், தெய்வ விழா நாளாகிய திருநாளிலும் பிறந்தநாள், மணநாள், வெற்றிநாள் முதலிய பெருநாட்களிலும், அரசரால் கைம்மாறின்றிப் பிராமணத் தலைவர்க்குச் செய்யப்படும். பிராமணர் தெய்வத் தன்மையுள்ளவர் என்று நம்பப்பட்டதனால், அவர்க்குச் செய்யுந் தானம், கோவிற்குக் கொடுக்குங் காணிக்கைபோல் மதத் தொடர்பான நல்வினையாகக் கருதப்பட்டது. வேத அறிவிற்குத் தக்கவாறு பிராமணனுக்குச் சிறப்பு ஏற்பட்டது. கடைக் கழகக் காலத்திற் சேரன் செங்குட்டுவன் மாடலனுக்குக் கொடுத்த, ஆள்நிறைப் பொன் (௫௦ துலாம்) குறிக்கப்பட்ட சிலப்பதிகாரம் இறந்துபடாமல் உள்ளது. இன்னும் எத்தனைப் பிராமணர்க்கு எத்தனை வேந்தர் எத்தனைமுறை அத்தானம் வழங்கினரோ அறியோம்.

(உ) குமுகாயத்துறை

பிராமண வுயர்த்தம்

தொடக்கத்திற் பூணூலும் குண்டிகையும் முக்கோலும் மணையும் கொண்டு திரியும் நாடோடிப் பிராமணர்க்கும், பின்னர் வேதமோதிய எல்லாப் பிராமணர்க்கும், தமிழத் துறவியர்க்குரிய அந்தணன் முனிவன் என்னும் பெயர்களை மட்டுமன்றி, இறைவனுக்குரிய பகவன் கடவுள் என்னும் பெயர்களையும், ஆரியரும் தமிழரும் வழங்கத் தலைப்பட்டு விட்டனர்.

தம்மை அந்தணரென்று பெருமையாகச் சொல்லிக்கொண்ட கபிலர், வேதம் ஓதினவரோ அல்லரோ அறியோம். பொதுவாக, பார்ப்பான் என்னும் பெயர் இல்லறத்தார்க்கும், அந்தணன் என்னும் பெயர் துறவறத்தார்க்கும் உரியனவாகும். வேள்வித் துறை முற்றிப் பார்ப்பன வாகை சூடிய, சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந் தாயனும், அந்

தணன் என்னும் பெயரை மேற்கொண்டிலன். ''அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்'' என்றே (கOஉக) தொல்காப்பியருங் கூறுகின்ருர். அங்ஙனமிருந்தும், பாரியொடு பழகினவரும்,

> ''புலவு நாற்றத்த பைந்தடி
> பூநாற்றத்த புகைகொளீஇ யூன்றுவை
> கறிசோ றுண்டு''

வந்தவருமான கபிலர் தம்மை அந்தணர் என்றது, இக்கால நிலைக்கு இயல்பாயினும் அக்கால நிலைக்கு வியப்பானதே.

நால்வரண நிலைநாட்டு

நால்வரணக் கொள்கையை நன்ருக நாட்டுதற்கு, மதுரைக் கோட்டை மதில் நான்கிலும், வெண்மை செம்மை பொன்மை கருமை ஆகிய நானிற வரணப் பூத வடிவுகளும், முறையே வரையப்பட்டிருந்தன.

> ''தண்கதிர் மதியத் தன்ன மேனியன்
> ....
> பவளச் செஞ்சுடர் திகழொளி மேனியன்
> ....
> செந்நிறப் பசும்பொன் புரையு மேனியன்
> ....
> மண்ணுறு திருமணி புரையு மேனியன்
> ....
> நாற்பாற் பூதமும் பாற்பாற் பெயர''
>
> (சிலப். உஉ:களா—கOஅ).

நாடகம் பார்ப்பவர் அனைவரும் காணுமாறு, நால் வரணப் பூதங்களையும் வரைந்த வண்ணப் படம் நாடக வரங்கின் மேல் வைக்கப்பட்டது.

> ''கூறிய வுறுப்பிற் குறியொடு புணர்ந்தாங்
> காடுநர்க் கியற்று மரங்கின் நெற்றிமிசை
> வழுவில் பூதம் நான்கும் முறைப்பட்
> எழுதின ரியற்றல் இயல்புணர்ந் தோரே.''
>
> (சீவக. சுளஉ, ந. மேற்.).

''வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே.'' (புறம். க௮ரு)

என்றான் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனும்.

தொழிலாளரைத் தாழ்த்தல்

''கட்டில் நிணக்கும் இழிசினன்'' (புறம். ௮௨),

''துடி யெறியும் புலைய
எறிகோல் கொள்ளும் இழிசின'' (ஷை உ௮எ)

என்பன, கட்டில் பின்னுவானையும் பறையடிப்பானையும் இழித்துக் கூறுவன.

''கண்ணுள் வினைஞர் கைவினை முற்றிய
நுண்வினைக் கொல்லர் நூற்றுவர் பின்வர
மெய்ப்பை புக்கு விலங்குநடைச் செலவிற்
கைக்கோற் கொல்லன்'' (சிலப். கசு:க0ரு—க0௮)

பாண்டியன் பெயரொடு வரிசை பெற்றவனாயிருந்தும், ''விலங்குநடைச் செலவு'' என்னுந் தொடருக்கு, ''இழிகுலத் தோனாதலின், உயர்ந்தோர் வந்தவிட மெங்கும் விலங்கி நடத்தல்.'' என்று குறிப்புரைகாரரும், ''மேன்மக்களைக் கண்டு ஒதுங்கி நடத்தல்.'' என்று அடியார்க்கு நல்லாரும் உரை வரைந்துள்ளனர். இதனால், அக்காலத்திலேயே, ஆரியச் சூழ்ச்சியால் சில தமிழ வகுப்பாரிடைப் பிணக்கேற்பட்டிருந்த தாகத் தெரிகின்றது.

மணிகளில் நால்வரணப் பிரிவு

''காக பாதமுங் களங்கமும் விந்துவும்
....
நால்வகை வருணத்து நலங்கே ழொளியவும்''
(சிலப். கச:க௮0—க௮ரு).

''நால்வகை வருணத் தொளியாவன:

''அந்தணன் வெள்ளை அரசன் சிவப்பு
வந்த வசியன் பச்சை சூத்திரன்
அந்தமில் கருமையென் றறைந்தனர் புலவர்.''

"இனி, வருண நான்கின் பயனுவன:—

"மறையோ ரணியின் மறையோ ராகிப்
பிறவி யேழும் பிறந்துவாழ் குவரே."

"மன்னவ ரணியின் மன்னவர் சூழ
இந்நில வேந்த ராவரெழு பிறப்பும்."

"வணிக ரணியின் மணிபொன் மலிந்து
தணிவற வடைந்து தரணியில் வாழ்வர்."

"சூத்திர ரணியின் தோகையர் கனகநெல்
வாய்ப்ப மன்னி மகிழ்ந்துவாழ் குவரே."
(சிலப். அடியார்க்கு. உரை. மேற்.)

இங்ஙனமே, தொண்மணிகட்கும் நால்வரணப் பகுப்புண்டு. நால்வரணப் பகுப்பு நிலைப்பும் பிராமண வுயர்வும் இதன் பயனும்.

தனியின வாழ்வு (Apartheid)

பிராமணர் தமிழரொடு கலந்து குடியிராது, தனித்தெருவிலும் தனிச்சேரியிலும் தனியூரிலுமே குடியிருப்பது வழக்கம். அவர் தம் குடியிருப்புப் பகுதியை அக்கிர காரம் என்பர். மயிலைநாதர் அதைப் பார்ப்பனச் சேரி என்பர். பிராமணர் குடியிருப்பிற்கு வேந்தர் கொடுத்த தனியூர் சதுர்வேதி மங்கலம் எனப்படும். மதுரைக்குக் கிழக்கேயுள்ள வேம்பற்றூர், கடைக்கழகக் காலத்திற் பிராமணர்க்குப் பிரமதேயமாகக் குலசேகரன் என்னும் பாண்டியனுற் கொடுக்கப்பட்டதென்றும், அதனுல் அது குலசேகர சதுர்வேதி மங்கலம் என்று பெயர் பெற்றதென்றும், சொல்லப்படுகின்றது. வேந்தர் அரசிய லதிகாரிகட்குப் பட்டம் வழங்கும்போதும், பிராமணர்க்குப் பிரமராயன் அல்லது பிரமமாராயன் என்று வழங்குவதே மரபு. எல்லா வகையிலும் பிரிந்தும் தமித்தும் வாழ்வதே பிராமணர் வழக்கம். சுடலை கூட அவர்க்குத் தனியாக வுண்டு.

இனங்காத்தல்

சேரன் செங்குட்டுவன் தன் வடநாட்டுச் செலவிடையில் நீலமலையில் தங்கியிருந்த போது, சில வழிப்போக்குப் பிராமணர் அவனிடம் சென்று, தம்மை வானியங்கும் சித்தர்போற் காட்டி, "நீ பனிமலைக்குச் செல்வதாயின், அங்குள்ள பிராமணரைக்

காத்தல் வேண்டும்.'' என்று கட்டளையிட்டுச் சென்றனர். முத்தமிழ் நாட்டாருள்ளும் பிராமணர்க்கு முந்தியடிமைப்பட்டவரும் முற்றும் அடிமைப்பட்டவரும் சேரநாட்டாரே.

நூற்றுக்கணக்கினரும் ஆயிரக் கணக்கினருமான பிராமணர் கொழுக்க வுண்டு காலங் கழிக்குமாறு, வேந்தரைக் கொண்டு பெருவேள்விகள் வேட்பதும் வேட்பிப்பதும், இனங் காத்தலை ஒரு பயனாகக் கொண்டதே.

பழந்தமிழ வேந்தரைப் பழித்தல்

மாவலி என்பவன் பாரதக் காலத்திற்கு முற்பட்டுச் செங்கோலாட்சி செய்த மாபெருஞ் சேரவேந்தன். சேரநாட்டுத் தமிழரின்பின், அவர் வழியினரான மலையாளியர், இன்றும் அவ்வேந்தனை ஆண்டுதோறும் நினைவுகூர்ந்து மகிழ்ச்சியாய்க் கொண்டாடி வருகின்றனர். பிராமணர் அவனை ஓர் அசுரனாக்கி, அவன் திருமாலாற் கொல்லப்பட்டதாகக் கதையுங் கட்டிவிட்டனர்.

மாவலியின் மகன் பிள்ளை பேர்த்தியான **உழை**, கண்ணபிரானின் மகன் பிள்ளை பேரனான **அநிருத்தனை** மணந்தாள். மாவலியின் மரபில் வந்த **சீர்த்தியை,** கோவலன் காலத்துக் **கிள்ளிவளவன்** மணந்தான். சோழநாட்டின் ஒரு பகுதியான நடுநாட்டை கசு-ஆம் நூற்றாண்டுவரை, வாணகோவரையர் என்னும் மாவலி மரபினர் சிற்றரசராக இருந்து ஆண்டு வந்தனர்.

பண்டைத் தமிழர் தேவரும் அல்லாதவரும் என்று குறிக்குமிடத்துச் சுரர் அசுரர் என்றனர்.

சுல் = நெருப்பு. ஓ.நோ: L. sol (sun).

Goth. sunnō, OS., OHG. sunno, sunna, ON. sunna, OE. sunna, sunne, E. sun.

சுல்—சுல்லி = க. நெருப்புள்ள அடுப்பு. உ. அடுப்புள்ள அடுக்களை. சுல்லி—**வ**. சுல்லீ (c).

சுல்—சுள். சுள்ளெனல் = எரிதல், சுடுதல், காய்தல்.
சுள்—சுள்ளை = மட்கலஞ் சுடும் இடம். சுள்ளா—சூளை.
சுள்—சுர்—சுரம் = சுடும் பாலை நிலம்.

சுரம்—சுரன் = தீ வடிவான தேவன். **வ.** ஸுர.

அல் (அல்லாத)—அ. ஒ.நோ: நல்—ந.

அசுரன்=சுரனல்லாதவன். ஒ.நோ: அவலம்=வலமின்மை, நோய், துன்பம், துயரம்.

பிராமணர் தம்மைச் சுரர் என்றதனால், தாமல்லாத தமிழரும் திரவிடருமான பழங்குடி மக்களை அசுரர் என்றனர்.

கொல்லேறடக்கல், திரிபன்றியெய்தல், கனவில்நாணேற்றல், கடுமாக் கொல்லல் முதலிய அருமறவினை செய்து மணத்தல், பழங்குடி மக்கட்கே உரியதும் இயல்வது மாதலின், அது **அசுரமணம்** எனப்பட்டது.

வடநாட்டிலும் தென்னாட்டிலும் பல அரசரும் அறிஞரும் பிராமணியத்தை எதிர்த்ததனால், அசுரன் என்னுஞ் சொற்குக் கொடியவன் என்னும் பொருளை ஊட்டிவிட்டனர்.

தமிழப் பண்பாட்டழிவு

பூஞ்சாற்றூர்ப் பார்ப்பானை ஆவூர் மூலங் கிழார் புகழ்ந்ததும் பிராமணரை வணங்குமாறு காரி கிழார் வேண்டியதும்,

> ''ஏற்ற பார்ப்பார்க் கீர்ங்கை நிறையப்
> பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து'' (புறம். ங௬எ)

என்று ஔவையார் பாடியதும், தமிழப் பண்பாட்டொடு முரணுவன வாகும்.

தமிழர் ஒற்றுமைக் குலைவு

சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திரு மாவளவனும், பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும், ஒருங்கிருந்தாரைக் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்

> ''ஒருவீர் ஒருவீர்க் காற்றுதிர் இருவீரும்
> உடனிலை திரியீ ராயின் இமிழ்திரைப்
> பௌவம் உடுத்தவிப் பயங்கெழு மாநிலம்
> கையகப் படுவது பொய்யா காதே
> அதனால், நல்ல போலவும் நயவ போலவும்

தொல்லோர் சென்ற நெறிய போலவும்
காதல் நெஞ்சின்நும் இடைபுகற் கலமரும்
ஏதின் மாக்கள் பொதுமொழி கொள்ளாது
இன்றே போல்கநும் புணர்ச்சி'' (புறம். ருஅ)

என்று பாடியதனுள் மறைந்துகிடக்குங் குறிப்பைக் கூர்ந்து நோக்கிக் காண்க. மூவேந்தர்க்குள்ளும் ஓரளவு ஒற்றுமையிருந்த கடைக்கழகக் காலம் வரை, அயலார் தமிழ்நாட்டைக் கைப்பற்ற முடியவில்லை. அதன் பின்னரே, ஒன்றன்பின் ஒன்றுகப் பல அயலாட்சிகள் தோன்றி, மூவேந்தரும் மறைந்தனர். அன்று மூவேந்தர் ஒற்றுமையைக் குலைத்த **ஏதின்மாக்கள் கூட்டம்**, இன்றும் தமிழரிடை யிருந்து ஒற்றுமையைக் குலைத்து வருகின்றது.

நடுநிலை திறம்பல்

தானங்களெல்லாம் பிராமணர்க்கே செய்யப்பட்டன.

''ஆர்புனை தெரியல்நின் முன்னோ ரெல்லாம்
பார்ப்பார் நோவன செய்யலர்'' (புறம். சங)

என்று தாமப்பல் கண்ணனார் சோழன் நலங்கிள்ளி தம்பி மாவளத்தானை நோக்கிக் கூறியதினின்று, பிராமணர்க்குத் தனிச்சலுகை காட்டப்பட்டமை விளங்குதல் காண்க.

(ங) மொழித்துறை

தமிழிழிபு

தமிழ் வழிபாட்டிற்கும் சடங்கிற்கும் தகாத மொழியென்று தள்ளப்பட்டது.

தமிழ் எழுத்து மறைப்பு

கல்வெட்டுக்கள் பிராமி எழுத்திலேயே வெட்டப்பட்டன.

சொற்பெயர்ப்பு

பிராமணர் தமிழகம் வந்து தமிழரை யண்டித் தமிழாலேயே வாழினும், தமிழ்ச்சொற்களை வழக்கு வீழ்த்த வேண்டு மென்றே வேண்டா வடசொற்களைப் புகுத்தினர்.

எ—டு:	தென்சொல்	வடசொல்
	வேந்தன்	இந்திரன்
	குமரிமலை	மகேந்திர பருவதம்
	அறம்	தருமம்
	சாலி	யவ (ஜவ—ஜாவ—சாவகம்)

சில இடப்பெயர்களைச் சற்றே திரித்து வடசொல்லாக்கினர்.

எ—டு:	தென்சொல்	வடசொல்
	குமரி	குமாரீ
	கன்னி	கன்யா
	மதுரை	மதுரா
	காஞ்சிபுரம்	காஞ்சீபுர
	வாரணன்	வருண

வடசொல் வழக்கு

ஆயிரக்கணக்கான தென்சொற்கள் இறந்துபட்டுள்ள இக் காலத்தும் அயன்மொழித் துணையின்றித் தமிழைத் தூய்மையாக எழுதலாம். தொல்காப்பியர் காலத்தில் தமிழ்ச் செய்யுட்கு வட சொல் வேண்டியதேயில்லை. ஆயினும், வேதத்திலும் இதிகாச புராணங்களிலும் நூற்றுக்கணக்கான தென்சொற்க ளிருப்பதனு லும், அக்காலத்தில் வரலாற்றையும் மாந்தனூலையும் துணைக் கொண்ட மொழியாராய்ச்சி யின்மையாலும், வடமொழியிலுள்ள தென்சொற்களை யெல்லாம் வடசொல் என்றே கருதினதினலும், வடமொழி தேவமொழியாதலால் ஒரு மொழியினின்றும் கடன் கொள்ளாதென்னும் தவறான கருத்துப் புகுத்தப்பட்டதனலும், வடமொழி வெறியரான பிராமணர் ஒருசில வேண்டா வடசொற் களைத் தமிழிற் புதிதாகப் புகுத்தினதனலும்,

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே."

(தொல். அஅச)

"சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்."

(ஷை அஅரு)

என்று தொல்காப்பியர் கூறிவிட்டார். ஆயினும், கூடலூர் கிழார் வடக்கு கிழக்கு என்னும் அருமையான உலகவழக்குச் சொற்கள் இருக்கவும் அவற்றிற்குத் தலைமாறாக (பதிலாக), உதீசி பிராசி என்னும் வடசொற்களின் திரிபான ஊசி பாசி

என்னும் சிதைவுகளை, உஉகூ-ஆம் புறப்பாட்டில் ஆண்டிருப்பது, அவரது பேதைமையையே காட்டும்.

(ச) இலக்கியத் துறை

வீட்டின்பம் அளிக்கும் இறைவனைச் சிவன் அல்லது திருமால் என்னும் பெயரில் வணங்கிவந்ததனால், தமிழரே அறம் பொருளின்பம் வீடென்னும் நாற்பொருளை வகுத்தவ ராவர். சிறுதெய்வங்கட்குக் காவு கொடுத்து வேள்வி வளர்க்கும் ஆரியர்க்கு, விண்ணுலகப் பேறே யன்றி வீடுபே றில்லை.

நாற்பொருட்பேறு மக்களெல்லார்க்கும் பொதுவாயிருக்கவும், அந்நான்கும் பிராமணர்க்கே யுரியவை யென்றும், அவற்றுள் முதன் மூன்றே அரசர்க்கும் முதலிரண்டே வணிகர்க்கும் முதலொன்றே சூத்திரர் என்னும் வேளாளர்க்கும் உரியவை என்றும், மதத் துறையும் குமுகாயத் துறையும் தழுவுமாறு இலக்கியத் துறையில் வகுத்துவிட்டனர்.

ஒரு நாடகக் கதையை அல்லது பனுவலை அமைக்கும்போது அல்லது இயற்றும்போது, அக்கதைத் தலைவனின் குலத்திற்கேற்பப் பொருளை வகுக்க வேண்டுமென்பது, நூன்முறையாகி விட்டது. இதைக் கடைக் கழகப் பாண்டியருள் ஒருவனும் நாடக நூலாசிரியனுமான, மதிவாணனும் கடியாது மதிவீணனாயினன்.

''அறமுதல் நான்கும் ஒன்பான் சுவையும்
முறைமுன் நாடக முன்னோ னுகும்''

''அறம் பொரு ளின்பம் அரசர் சாதி.''

''அறம்பொருள் வாணிகர் சாதியென் றறைப.''

''அறமேற் சூத்திரர் அங்க மாகும்.'' (செயிற்றியம்)

இங்ஙனமே தொண் (ஒன்பான்) சுவைகட்கும் வரணப் பாகுபாடு வகுக்கப்பட்டுள்ளது. இதினின்று, கடைக் கழகக் காலத்திலேயே, மூவேந்தரும் மதத் துறையில் எத்துணை அடிமடையராயினர் என்பதை அறிந்து கொள்ளலாம்.

களப்பாளர் (களப்பிரர்) ஆட்சி

(தோரா. கி. பி. ௩௦௦—௫௬௦)

கடைக்கழக முடிவிற்குப்பின் பாண்டி நாட்டை முந்நூற்றுண்டு ஆண்ட, களப்பாளர் வடநாட்டினின்று வந்தவ ரென்றும், பல் வகுப்பினரென்றும், பலவாறு சொல்லப்படு கின்றது. அவர் பல்வேள்விச்சாலை முதுகுடுமிப் பெருவழுதி பிராமணர்க்கு அளித்த வேள்விக்குடிப் பட்டையத்தை மறுத் ததனாலும், முருக வழிபாட்டினர் என்று சொல்லப்படுவதனாலும், தமிழராகவும் இருந்திருக்கலாம். களப்புதல் காடு வெட்டித் திருத்துதல். நெல்லை மாவட்டத்திற் சங்கரநயினார் கோவில் வட்டத்தில், களப்பாளர் குளம் என்று ஓர் ஊர் உள்ளது. களப்பிலார் என்பது கள்ளர் வகுப்பாரின் பட்டங்களுள் ஒன்றாக, பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் குறித்துள்ளார்.

பல்லவர் ஆட்சி (சோழநாடு)

(கி. பி. ௪-ஆம் நூற்—௯-ஆம் நூற்.)

பல்லவர் காடவரும் காடுவெட்டிகளுமான தமிழரே.

பாண்டியர் ஆட்சி (பாண்டிநாடு) — ௫௬௦—௯௨௦.

சோழர் ஆட்சி (சோழநாடு) — அ௫௦—௧உ௭௯.

(சோழபாண்டிநாடுகள்) — ௯உ௦—௧௧௯௦.

பாண்டியர் ஆட்சி (பாண்டிநாடு) — ௧௧௯௦—௧௩௧௦.

மாலிக்கு காபூர் *தமிழ்நாட்டுக் கொள்ளையடிப்பு*—௧௩௧௦.

மதுரைச் சுலுத்தானியம்—௧௩௨௯—௧௩௭௭.

செஞ்சி—	(௧) நாயக்கர் ஆட்சி	— ௧௪௭௬ — ௧௬௩௯.
	(௨) முசல்மானர் ,,	— ௧௬௩௯ — ௧௬௫௯.
	(௩) பீசபூர்-மராத்தியர் ,,	— ௧௬௭௭ — ௧௬௯௦.
	(௪) முசல்மானர் ,,	— ௧௬௯௦ — ௧௬௯அ.
	(௫) பிரெஞ்சியர் ,,	— ௧௭௫௦ — ௧௭௬௧.
	(௬) ஆங்கிலர் ,,	— ௧௭௬௧ — ௧௯௪௭.
மதுரை—	(௧) நாயக்கர் ஆட்சி	— ௧௫௨௯ — ௧௭௩௬.
	(௨) முகமதியர் ,,	— ௧௭௩௬ — ௧௭௭௨.
	(௩) ஆங்கிலர் ,,	— ௧௭௭௨ — ௧௯௪௭.
தஞ்சை—	(௧) நாயக்கர் ஆட்சி	— ௧௫௩௨ — ௧௬௭௫.
	(௨) மராட்டியர் ,,	— ௧௬௭௫ — ௧அ௫௫.
	(௩) ஆங்கிலர் ,,	— ௧அ௫௫ — ௧௯௪௭.

சேரநாட்டு அரசர்கள்

கடைக் கழகக் காலத்திலேயே, மேலைச் சேரநாடாகிய குடமலைநாடு, தென்வடலாக, வேணுடு குட்டநாடு பொறைநாடு குடநாடு கொண்கானநாடு எனப் பல பிரிவுகளைக் கொண்டிருந்தது. அவற்றுள், கொண்கான நாட்டை நன்னனும், ஏனையவற்றை உதியன் மரபினரும் பொறையன் மரபினருமான இரு வேறு சேரர்குடிக் கிளையினரும், ஆண்டு வந்தனர்.

''இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவிற்
பொலம்பூண் நன்னன் பொருதுகளத் தொழிய
வலம்படு கொற்றம் தந்த வாய்வாட்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்
இழந்த நாடுதந் தன்ன'' (அகம். ௧௯௯)

என்பதனுல், கொண்கானநாடு மீண்டும் சேரர்கை சேர்ந்தமை அறியப்படும்.

கீழைச் சேரநாடாகிய கொங்குநாட்டின் தென்பகுதியான தகடூர் நாட்டை, அதிகமான் மரபினரான சேரர் குடிக் கிளையினர் ஆண்டுவந்தனர். வடபகுதியின் மேற்பாகத்துக் குடகு நாட்டைக் கோசரும், எஞ்சிய பாகத்தை எருமையூரன் இருங்கோவேள் கங்கர் கட்டியர் ஆகியோரும் ஆண்டு வந்தனர்.

''கொங்கிளங் கோசர்'' (சிலப். உரை பெறுகட்டுரை).

''குடகக் கொங்கரும்'' (ஷை ௩0:௧௫௯).

கி. பி. எ-ஆம் நூற்றுண்டில் மேலைச் சேரர்குடிக் கிளைகள் நேர்வழித் தொடர்ச்சி யற்றன. அதன் பின், **பெருமாள்** மரபினர் சிலர் ஆண்டுவந்தனர். அவருள் மூவர் குறிப்பிடத்தக்கவர்.

முதலாம் சேரமான் பெருமாள் (௬௯௭—௭௧௨).

இவர் **பெருமாக் கோதை** என்னும் இயற்பெயரையும் **கழறிற்றறிவார்** என்னும் சிறப்புப்பெயரையும் உடைய சிவனடியார்.

நாலாம் குலசேகரப் பெருமாள் (௭௫௪—௭௯௮).

இவர் **குலசேகராழ்வார்** என்னும் திருமாலடியார்.

இரண்டாம் சேரமான் பெருமாள் (௭௯௮—௮௩௪).

இவர் ஓர் 'இசலாம்' அடியார். நாட்டைப் பன்னிருவர்க்குப் பகிர்ந்து கொடுத்துவிட்டு மெக்கா சென்று விட்டார். (**துடிசைகிழார் சேரர் வரலாறு**).

அப்பன்னிரு நாடுகளாவன:—

(க) கோழிக்கோடு
(உ) வள்ளுவநாடு
(ங) கொச்சி
(ச) திருவிதங்கூர் (திருவதங்கோடு)
(ரு) குறும்பரநாடு
(சு) கோட்டயம்
(எ) சிரக்கல்
(அ) கடத்தநாடு
(கூ) பாலக்காடு
(க0) பெய்ப்பூர்
(கக) பரப்பநாடு (ஒரு பகுதி)
(கஉ) ,, (மற்றொரு பகுதி)

சேரநாட்டுத் தமிழ், க0-ஆம் நூற்றுண்டிற்குப் பின் கொடுந்தமிழாகத் திரிந்து, கரு-ஆம் நூற்றுண்டிற்குப் பின் திரவிடமாக மாறிவிட்டது. சேர (சேரல) நாடும் மொழியும் கேரளம் எனப்பட்டன. சேரல்—சேரலம்—கேரளம்.

கொங்குநாட்டு அரசுகள்

அதிகர் (அதிகமானர்), கங்கர், கட்டியர் என்னும் மும்மரபினரும், கடைக்கழகக் காலத்திலிருந்து கங-ஆம் நூற்றுண்டு வரை, பேரரசர்க்கு அடங்கியும் அடங்காதும், கொங்குநாட்டின் பகுதிகளை ஆண்டுவந்தனர்.

சோழர் ஆட்சி—க00ச—கங0ங.

இடையிற் பாண்டியர் மீயாட்சி—கஉசுரு—கங00.

சோழராட்சிக்குப் பின், கேரளராட்சியும் ஒய்சளராட்சியும் விசயநகர நாயக்கராட்சியும் உடையாராட்சியும் ஐதரலி திப்பு சுலுத்தானுட்சியும், சிச்சிறிதுகாலம் நடைபெற்றன.

ஆங்கிலராட்சி—கஎகூகூ—கக௯சஎ.

இந்திய விடுதலையும் ஒன்றியமும் (Union)—க௯சஎ.

கேரள நாட்டுச் சிற்றரையங்களும் இந்திய ஒன்றியத்திற் கலந்தன.

தமிழ்நாடு—(க) பேராய (Congress) ஆட்சி — ககூசஎ—ககூசுஎ.

(உ) தி.மு.க. (D.M.K.) ஆட்சி — ககூசுஎ— (?)

மூவேந்தர் ஆரிய அடிமை முதிர்வு

கடைக்கழகக் காலத்திலேயே, மூவேந்தரும் வேள்வி மதத்தைத் தழுவி ஆரிய அடிமைகளாய்ப் போய்விட்டதனால், இந்தியா முழுவதையும் நிலையான ஆரிய அடிமைத்தனத்துள் அமிழ்த்துதற்பொருட்டு, நால்வரணவொழுக்கத்தை நிலைநிறுத்தும் **மனுதரும சாத்திரம்** என்னும் குலவொழுக்க நூல் கி.பி.உ-ஆம் நூற்றுண்டிலும்; கோவிலமைப்பு, வழிபாட்டு முறை, போற்றியான் (அருச்சகன்) தகுதி, கொண்முடிபு (சித்தாந்தம்), தெய்வச் சிறப்பு, வழிபாட்டின் பயன் முதலியவற்றை விளக்கிக் கூறும் **ஆகமம்** என்னும் வழிபாட்டு மறை கி. பி. சு-ஆம் நூற்றுண்டிலும்; சமற்கிருதத்தில் இயற்றப்பட்டு விட்டன. சிவனிய ஆகமங்கள் **காமிகம்** முதல் வாதுளம் வரை இருபத்தெட்டென்பர். காளி வழிபாட்டு மறையைத் **தந்திரம்** என்பர்.

"தந்த்ரங்கள் ஸம்ஹிதை, ஆகமம், தந்த்ரம் என மூவகைப்படும். அவற்றுள் ஸம்ஹிதைகள் வைஷ்ணவர்களாலும், ஆகமங்கள் சைவர்களாலும், தந்த்ரங்கள் சாக்தர்களாலும், போற்றப்படுகின்றன. அவை முற்றிலும் வைதிகக் கொள்கைகளைப் பின்பற்றியன எனக் கூறுதற்கு இடன் இல்லை. அவை தீக்ஷை கொண்டு ஆசிரியனிடமிருந்து கொள்ளத் தக்கன. தந்த்ரங்கள் கி. பி. ஐந்தாம் நூற்றுண்டின் பின்னரே உண்டாயின என்பர்." என்று (P. S.) சுப்பிரமணிய சாத்திரியார் கூறுவர் (வடமொழி நூல் வரலாறு, பக். ௩௦க).

சமற்கிருத மொழியும் பிராமணப் போற்றியானும் ஆரியத் தொல்கதைகளுந் தவிர, ஆகமப் பொருள் அனையவும் ஏற்கெனவே தமிழ்நாட்டிலும் தமிழிலும் உள்ளவையே என்றறிதல் வேண்டும். ஆகமம் என்னும் சொற்கே, புதிதாக வந்தது அல்லது தோன்றியது என்பது தான் பொருள். எல்லா வகையிலும் ஆரியத்தை எதிர்க்கக்கூடிய தமிழ நாகரிகக் கோட்டையான தென்னுடு பிடிபட்டுப் போகவே, இந்தியா முழுதும் மதத் துறையிலுங் குலத்துறையிலும் ஆரிய வயப்பட்டுவிட்டது. பிராமணப் பூசகனே சமற்கிருதத்திற் போற்றி செய்வது, தமிழ் நாட்டுக் கோவில் மரபாயிற்று.

முதற் பராந்தகச் சோழன் (கி. பி. ௯௦௭—௯௫௩), வேதம் வல்ல பிராமணர்க்கு வீரநாராயணபுரம் முதலிய ஊர்களை முற்றூட்டாகக் கொடுத்து, பொற்கருப்பைத் தானமும் ஆள் நிறைப் பொன் தானமுஞ் செய்தான். ஆற்றூர் (ஆத்தூர்), திருத்தவத்துறைக் (லால்குடி) கோவில்களில், பூசைவேளையில் திருப்பதிகம் ஓதப் பிராமணரை அமர்த்தினன்.

முதலாம் இராசராசன் (கி. பி. ௯௮௫—௧௦௧௪) கட்டின தஞ்சைப் பெருவுடையார் கோவிற் கோபுரம், தாசுமகால் இந்தியாவிற்குத் தருவதினும் பதின்மடங்கு பெருமை தமிழகத்திற்குத் தருவதாகும். ஆயின், அவனும் அடிமையானதனல், சோழமார்த்தாண்ட சதுர்வேதிமங்கலம் என்னும் **திருவியலூரில்,** ஆள்நிறைப் பொன் தானஞ் செய்தான்; அவன் தேவியும் பொற்கருப்பைத் தானஞ் செய்தாள். அவனுக்குக் குருக்களாயிருந்தவர்கள் இலாடம், காசி, காசுமீரம் முதலிய வடநாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்ட பிராமணர்கள். அவர்கள் பெருமடத் தலைவர்களாயிருந்து அரசியலில் மிகுந்த சொற்செல்வு பெற்று விளங்கினர். இலாடம் வங்க நாட்டின் ஒரு பகுதி.

அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் பாடிய தேவாரப் பதிகங்கள் மொத்தம் ௯௬000 என்று சொல்லப்படுகின்றது. இன்று கிடைத்திருப்பவை எழுநூற்றுத் தொண்பத்தாறே (௭௯௬). இவற்றுள் ஒருசிலவே இராசராசன் காலத்திற் கோவில்களிற் பாடப்படும் வழக்கிலிருந்தன. ஏனையவற்றின் ஏடுகளையெல்லாம் பிராமணர் தொகுத்து, தில்லையம்பலத்தில் ஓர் அறைக்குளிட்டுப் பூட்டி விட்டனர். இராசராசன் இம்மருமத்தை யறிந்து, அவ்வறையைத் திறக்கச் சொன்னன். கோவிற் சொத்தைக் கொள்ளையடித்துக் கொண்டிருந்த, தில்லை வாழந்தணர் என்னும் மூவாயிரம் பிராமணரும் மறுத்துத் தடுத்தனர். இராசராசன் ஒரு சூழ்ச்சி செய்து திறப்பித்தான். சிதல் அரித்த ஓர் ஏட்டுக் குவியல் காட்சியளித்தது. உடனே, ''அரசே! கவலற்க. இக்காலத்திற்கு வேண்டிய வற்றை மட்டும் வைத்துக்கொண்டு, வேண்டாதவற்றை யெல்லாம் யாமே சிதலரிக்க விட்டேம்.'' என்று ஒரு வானுரை யெழுந்தது! 'சூத்திர' வேந்தன் நிலத்தேவரை ஒன்றும் செய்ய இயலவில்லை.

இராசராசன் மகனான முதலாம் **இராசேந்திரனும்** (கி. பி. ௧௦௧௪—௧௦௪௨), தஞ்சைப் பெரிய கோவிலிற் பூசைசெய்து வந்த தன் குருவாகிய சர்வ சிவ பண்டிதருக்கும், ஆரிய நாட்டிலும் மத்திய நாட்டிலும் கௌட (வங்க) நாட்டிலுமிருந்த அவர்

மாணவருக்கும், ஆண்டுதோறும் இராயிரங் கலம் நெல் குரவ நுகர்ச்சியாகக் (ஆசாரிய போகமாகக்) கொடுக்குமாறு கட்டளை பிறப்பித்தான்.

கி. பி. கoநகூ-இல், எண்ணுயிரம் என்னும் இடத்தில், ௩oo பிராமண மாணவரும் கo பிராமண ஆசிரியரும் கொண்ட ஓர் இலவச மறைநூல் விடுதிக் கல்லூரி கட்டித் தானஞ் செய்தான்.

வீரராசேந்திரச் சோழன் (கி.பி. கoசுஉ—கoசுஎ) திருமுக்கூடல் என்னுமிடத்தில், பிராமண மாணவர்க்கு வேதமும் பிறநூல் கலைகளும் கற்பிக்குமாறு, மருத்துவச்சாலையொடு கூடிய ஓர் இலவச விடுதிக் கல்லூரியைக் கட்டிக் கொடுத்தான்.

மூன்றாங் குலோத்துங்கன் (ககஎஅ—கஉகஅ) திருவொற்றியூரிற் பிராமண மாணவர்க்குப் **பாணினீயம்** கற்பிக்குமாறு, **வியாகரண தான வியாக்கியான மண்டபம்** ஒன்று அமைத்து, அதற்கு சுo வேலி நிலங் கொண்ட குலோத்துங்கன்காவனூர் என்ற ஊரை இறையிலி யாக்கினான். அவன் குருவும் இலாட நாட்டுப் பிராமணரே.

பல கோவில்களில் துலாபார மண்டபம் என்றே ஒன்று கட்டப்பட்டிருந்தது. துலாபாரம் என்று ஒரு வரியும் குடிகளிடம் வாங்கப்பட்டது. சோழர் போன்றே பாண்டியரும் ஒழுகினர். சேரரைப் பற்றிச் சொல்லவே வேண்டுவதில்லை. இங்ஙனம் குடிகள் பொதுப்பணம், தமிழும் தமிழனும் தளரவும், பிராமணனும் பிராமணியமும் வளர்ந்தோங்கவும், வாரியிறைக்கப் பட்டது.

கடுங்கோன், காய்சினவழுதி, இளஞ்சேட்சென்னி, நெடுங்கிள்ளி, மாவலி, உதியஞ்சேரலாதன் என்றிருந்த அரசர் தனித் தமிழ்ப் பெயர்களெல்லாம்; ஜடில பராந்தகன், விஜயாலயன், பாஸ்கர வர்மன் என வடசொற் பெயர்களாக மாறின.

பாண்டியர் பெயருக்கு முன் மாறவர்மன் ஜடாவர்மன் என்பனவும், சோழர் பெயருக்கு முன் ராஜகேசரி பரகேசரி என்பனவும், அடைமொழிகளாகச் சேர்க்கப்பட்டன.

அரசர் மெய்க்கீர்த்திகள் ஸ்வஸ்தி ஸ்ரீ என்று தொடங்கின. இடையிடை சமற்கிருதச் சொற்கள் கலந்தன. முன்னும் பின்

னும் சமற்கிருதச் சொலவங்களும் (சுலோகங்களும்) அமைந் தன. சமற்கிருதச் சொற்களும் சொலவங்கள் போன்றே கிரந்த எழுத்தில் வெட்டப்பட்டன. கல்வெட்டு சிலாசாசனம் என்றும், செப்பு வெட்டு தாமிர சாசனம் என்றும், பெயர் பெற்றன.

மதத்துறையிற் போன்றே மற்றத்துறைகளிலும் மூவேந்தரும் பிராமணர்க்கு எடுப்பார் கைப்பிள்ளைகளாயினர். தமிழ் சமற் கிருத வார்ப்பகத்தில் வார்க்கப்பட்டது. வட சொல் மிகுந்து, கொச்சை வழக்கும் இலக்கண வழுக்களும் புகுந்து, தமிழ்ப் புலவர் கை கடந்து, பகைவர் ஆட்சிக்குட்பட்டு விட்டது. அரைகுறையா யிருந்ததும், நாயக்கர் ஆட்சியிலும் தஞ்சை மராட்டிய மன்னராட்சியிலும் நிரம்பி விட்டது. தஞ்சைச் சரபோசி மன்னர், தம் 'சரசுவதி மகால்' என்னும் கலைக்கூடத் தில் தொகுத்துள்ள உஉ000–இற்கு மேற்பட்ட பொத்தகங்களுள், பெரும்பாலன சமற்கிருதமே.

அரசன் என்னும் சொல்வரலாறு

உரம் = வலிமை. **உரம்—உரவு** = வலிமை.

"உரவுச் சினந் திருகிய" (புறம். உரு:ங).

உரவு—உரவோன் = வலியோன்.

"ஒருதா மாகிய வுரவோ ரும்பல்" (புறம். கஅ:ங).

உரவு—உரவன்—அரவன்—அரசன் = வலியோன், தலைவன், ஆள்வோன்.

வ—ச: போலித் திரிபு. ஒ.நோ: ஏவு—ஏசு, பரவு—பரசு, விரவு—விரசு.

அரசன்—அரைசன்—அரையன்—அரையம்.

அரசன்—வ. ராஜன், ராஜா—இ. ராஜ், தெ. ராஜு.

அரையன்—அரையர்—ராயர்—க. ராயரு, தெ. ராயலு.

அரையன்—ராயன்—வங். ராய்.

அரவன்—(ராவன்)—மராட். ராவ்.

அரசன்—அரசு, அரையன்—அரைசு.

அரசன்—Gk. archon = ruler, king.

L. rēx, rēgis, OIr. rēg.

E. rich, OE. rice, OFris. rike, Mod Fris. ryk, rik- rijck, MDu. rijke, rijck, Du. rijk, OS. riki, MLG. rike, LG. rik, OHG. richi, riche, G. reich, ON. rikr, Norw. and Sw. rik, Da. rig, Celt. rix, F. riche, Sp. rico, It. ricco.

அரையன்—ராயன்—ராய்—OF. roy, F. roi, ONF. rei, E. ray, roy.

மேலை யாரிய மொழிகளில் இச்சொற்கட்கு மூலமில்லை. சமற்கிருதத்தில் ராஜன் என்னும் சொற்கு 'ரஜ்' (ஒளிர், to shine) என்பதை மூலமாகக் காட்டி, 'ரங்' (நிறம்) என்னுஞ் சொல்லொடு தொடர்புபடுத்துவர். ஆளுதற் பொருளில், arkhō அல்லது arkh-ein என்னும் கிரேக்கச் சொல்லையும், ராஜ் என்னும் சமற்கிருதச் சொல்லையும், rego என்னும் இலத்தீன் சொல்லையும், ஆளுதல் பிறப்பட்ட வழக்கென அறிக.

அரசி = வ. ராஜ்ஞீ, L. regina. ராஜ்ஞீ என்னும் வடசொல்லே இன்று ராணி என்று வழங்குகின்றது.

அணைத்தல் = தழுவுதல், தழுவிக் காத்தல்.
ஒ. நோ: தழுவுதல் = அணைத்தல், அணைத்துக் காத்தல்.

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்"
(குறள். ருசச).

தழுவு—தழிஞ்சி = போரிற் படைக்கலங்களால் தாக்குண்டு சேதமுற்ற படையாளரைப் போற்றியுரைத்தும் பொருள் கொடுத்தும் அரசன் தழுவிக்கோடல்.

"அழிபடை தட்டோர் தழிஞ்சியொடு தொகைஇ"
(தொல். பொ. ௬௩).

அரவணைத்தல் = அரசன் தழுவுதல், அரசன்போல் தழுவிக் காத்தல்.

"ஐயன் புரியும் அரவணைப்பும்" (பணவிடு. உஎ).

அரவணைத்துக் காக்க வேண்டும் என்னும் உலக வழக்கையும் நோக்குக. இதில், அரவு என்பது அரசனையன்றிப் பாம்பைக் குறிக்காது. பாம்பணைத்தல் என்பது புணர்ச்சியைக் குறிக்குமேயன்றிப் பாதுகாத்தலைக் குறிக்காது.

அரவு—அரசு. ஒ. நோ: உரவு—உரசு.

உரவு—உராவு—அராவு.

கடைக்கழகக் காலத் தொழிற் குலங்கள்

அகவர் (சூதர்), அங்காடிவணிகர் (நாளங்காடி வணிகர், அல்லங்காடி வணிகர்), அச்சுக்கட்டிகள், அடியோர், அண்டர் (இடையர்), அரசர் (கிழவர், வேளிர், மன்னர், கோக்கள், வேந்தர்), அளவர், ஆட்டு வாணிகர், ஆயர் (கோவலர், கோவர்), ஆறலைகள்வர், இராக்கடைப் பெண்டிர் (தெருப் பொது மகளிர்), இயவர் (இசைக்கருவியாளர்), இலையமுதிடுவார் (இலைவாணியர்), உமணர், உழவர் (கடையர்), உறைகாரர், எயினர், எலிமயிர்நெசவர், ஓசுநர் (மீகாமர்), ஓவர் (மாகதர்), கடம்பர், கடிகையர் (நாழிகைக் கணக்கர்), கண்ணுளர், கண்ணுளாளர் (சித்திரக் காரர்), கணிகையர், (நாடகக் கணிகையர், கோவிற் கணிகையர்), கணியர், காலக் கணிதர், கம்மியர் (கம்மாளர்), களமர் (கருங்களமர், வெண்களமர்), கன்னர் (செப்புக் கன்னர், வெண்கலக் கன்னர்), காழியர் (பிட்டு வாணிகர்), கானவர், கிணைவர் (கிணைப் பொருநர்), கிழியினும் கிடையினும் பல தொழில் செய்வார், குயிலுவர் (தோலிசைக் கருவிகள் செய்வோர்), குறவர், குன்றவர், குறும்பர், கூத்தர், கூலவாணிகர், கூவியர் (அப்ப வாணிகர்), கொல்லர், கோடியர் (கழைக்கூத்தர்), சங்கறுப்போர், சாக்கையர், சாலியர் (நெசவர்), தச்சர், துடியர், தேர்த்தச்சர், தையற்காரர் (துன்னகாரர், சிப்பியர்), நுண்வினைக் கம்மியர், நுளையர், பட்டினவர் (மீன்விலைப் பரதவர்), பட்டுச் சாலியர், படையுள்படுவோன் (சின்னமூதி), பரதர் (செட்டிகள்), பரதவர் (பரவர்), பரத்தையர் (இற்பரத்தையர், சேரிப்பரத்தையர்), பழையர் (கள் விற்கும் வலையர்), பறம்பர் (தோலின் துன்னர்), பறையர் (பறையறைந்து விளம்பரஞ் செய்வோர்), பாசவர் (ஊன் விற்போர்), பாணர் (இசைப் பாணர், குழற்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப்பாணர்), பார்ப்பார், புலையர், பூ விற்பார், பொருநர் (ஏர்க்களம் பாடுநர், போர்க்களம் பாடுநர்), பொன்வாணிகர், மணவர் (வாசவர்), மணிகோப்பார், மணிநகைத்தட்டார், மரக்கலக் கம்மியர், மழவர் (மழநாட்டு மறவர்), மறவர் (பாலை வாணர்),

மாலைக்காரர், வண்ணார், வயிரியர் (ஒருவகைக் கூத்தர்), வலைஞர், வள்ளுவர் (அரசர் விளம்பரப் பறையர்), விலை மகளிர் (சிறுவிலை மகளிர், பெருவிலை மகளிர்),

''இமுங் கம்மும் உருமென் கிளவியும்'' (தொல். ௩உஅ),

''மின்னும் பின்னும் பன்னும் கன்னும்'' (ஷ ௩சரு)

என்று தொல்காப்பியங் கூறுவதால், அக்காலத்திலேயே ஐங் கம்மும் செம்பும் வெண்கலமுமாகிய இரு கன்னும் நடைபெற்றமை பெறப்படும். இளங்கோவடிகள்,

''கஞ்ச காரரும் செம்புசெய் குநரும்'' (சிலப். ரு:உஅ)

என்று, இரு கன்னையும் வேறாகப் பிரித்து, வெண்கலக்கன்னை வடசொல்லாற் குறித்தார்.

பார்ப்பார் என்னும் தமிழ்ச்சொல், கடைக்கழகக் காலத்தில் இல்லறத்தாரான பிராமணர்க்கே வரையறுக்கப்பட்டுவிட்டது. சிறப்பாகத் துறவியரைக் குறிக்கும் அந்தணர் என்னும் தமிழ்ச் சொல்லும், முதற்கண் பிராமணப் போலித்துறவியர்க்கு வழங்கி, பின்னர் இல்வாழ் பிராமணர்க்கும் வழங்கப்பட்டுவிட்டது.

குலங்கள் தோன்றிய வகைகள்

ஆரியர் (பிராமணர்) வருமுன் தோன்றிய குலங்களெல்லாம் தொழில் பற்றியனவே யாம்.

(க) நானிலத் தொழில்

மருதம்—உழவர், முல்லை—ஆயர், குறிஞ்சி—வேட்டுவர், நெய்தல்—மீன் பிடியர் (நுளையர்).

முதன்முதல் தோன்றிய குலங்கள் இந்நால்வகைத் தொழில் வகுப்புக்களே. இந்நான்கும் உணவு பற்றியனவே.

(உ) ஐந்தாம் (நிலையில்லா) நிலத் தொழில்—கவர்வு

முல்லையும் சிறுமலைக் குறிஞ்சியும் முதுவேனிற் காலத்தில் வற்றி வறண்டதனல், அங்குள்ள வேட்டுவர் ஆறலைப்

போரும் சூறை கொள்வோருமாக மாறி, அம்பெய்வதால் எய்நர் (—எயினர்) என்றும், மறமிகையால் மறவர் என்றும், பெயர் பெற்றனர்.

(௩) மருத நிலத்தொழில் நான்கு

மருத நில மக்கள் தொகை பெருகிய பின், பண்டமாற்றிற்கு வணிகரும், வழக்குத் தீர்ப்பிற்கும் காவற்கும் ஊர்க் கிழவரும் (தலைவரும்), நோய் நீக்கவும் மழைபெய்விக்கவும் தெய்வத்தை வேண்ட உவச்சனும் (பூசாரியும்), உழவரினின்று பிரிந்தனர்.

ஊர்க் கிழவரே அரசர்குலத் தொடக்கம். ஆட்சிப் பரப்பு விரியவிரிய, வேளிரும் மன்னரும் கோக்களும் வேந்தரும் முறையே தோன்றினர்.

முதற்காலத்தில், நானிலத்திற்கும் பொதுவான பண்டமாற்று மருதநிலத்திலேயே நிகழ்ந்தது. பின்னர் நீர்வாணிகம் தோன்றியபின் நெய்தல் நிலத்திலும் நிகழ்ந்தது.

மருதநிலத்திற் போன்றே ஏனை நிலங்களிலும், குடியிருப்புத்தலைவரும் தேவராளரும் (பூசாரிகளும்) தோன்றினர்.

உவச்சர் வகுப்பினின்றே, நாளடைவில் புலவரும் ஆசிரியரும் துறவியரும் முனிவரும் முதன்முதலாகத் தோன்றினர். கல்வி, உலகியலும் மதவியலும் என இரண்டாகப் பிரிந்தது.

(௪) மருதநிலப் பேரூர்ப் பதினெண் கைத்தொழில்கள்

மருதநிலப் பேரூர்களில், உழவிற்குப் பக்கத் துணையாகப் பதினெண் கைத்தொழில்கள் படிப்படியாகத் தோன்றின. பிறநிலக் குடியிருப்புக்களிலும், அவ்வந் நிலத்திற்கேற்றவாறு சில கைத்தொழில்கள் தோன்றின.

(௫) பற்பல கைத்தொழில்கள்

திணைமயக்கம் ஏற்பட்டபின், நானில மக்களும் மருதநில நகரங்களிலும் நெய்தல்நிலப் பட்டினங்களிலும் அமர்ந்து,

பல்வேறு கருவிப் பொருள்களைக் கொண்டு நாகரிக வாழ்க்கைக்கேற்ற பற்பல தொழில்களைச் செய்து வந்தனர்.

(சு) தொழிற் பிரிவுகள்

நாகரிகமும் மக்கள்தொகையும் மிகுந்தபின், எல்லாத் தொழில்களும் அல்லது வகுப்புக்களும் இரண்டும் பலவுமாகப் பிரிந்தன.

(எ) பெயர் மாற்றங்கள்

மக்கள் பெருநிலப் பரப்பிற் படர்ந்து பரவினபின், ஒரே வகுப்பார்க்கே இடவேறுபாட்டால் பெயர் வேறுபாடு ஏற்பட்டது.

தொழில்கள் நிகழும் வகைகள்

விளைப்பு, வளர்ப்பு, பிடிப்பு, தொகுப்பு, புணர்ப்பு, செய்வு, பிரித்தெடுப்பு, பண்டமாற்று, நிலைமாற்று, காப்பு (மாந்தன் காப்பு, தெய்வக் காப்பு), ஆள்வு, செப்பனீடு, விலக்கு, வாழ்விப்பு, இன்புறுத்தம், ஆய்வு, அறிவிப்பு, உய்ப்பு, உடலுழைப்பு, அழிப்பு முதலியன.

குலப்பிரிவுகள் தோன்றிய வகைகள்

(க) நிறம்—வெள்ளாளன் (வெண்களமன்), காராளன் (கருங்களமன்), இருளன்.

(உ) இடம்—சோழிய வேளாளன், ஆர்க்காட்டு முதலி, மலையாளி.

திசை—தென்திசை வெள்ளாளர், மேல்நாட்டான்.

(ங) குடியிருப்பு—கோட்டை வெள்ளாளன், தெருவான் (சேரநாட்டுச்சாலியன்).

(ச) ஊண்—'சைவ' (மரக்கறி) வெள்ளாளன், புலையன், தவளை தின்னி (பறையன்).

(ரு) உடை—தண்டப்புலையன், குளிசீலையாண்டி ((கோவணாண்டி).

(சு) அணி—பவளங்கட்டி (கொங்கு வெள்ளாளர்).

(எ) தாலி—சிறுதாலி மறவர், ஐந்தாலி (அஞ்சாலி)யிடையர்.
கொண்டைமுடிப்பு—கொண்டை கட்டி வேளாளர்.

(அ) கோலம்—பச்சைகுத்தி (குறவர், வேளாளர்), நீறுபூசி (வெள்ளாளன்).

(சு) முதற்கருவி—பொற்கொல்லர், வெண்கலக்கன்னார்.

(கo) கருவி—வில்லி, வலையன்.

(கக) கருவியளவு—சிறுபாணர், பெரும்பாணர், சின்ன மேளம், பெரியமேளம் (மேளகாரர்).

(கஉ) பண்டமாற்றுப் பொருள்—கூல வாணிகன், இலை வாணியன், எண்ணெய் வாணியன்.

(கந) தொழிற்பிரிவு—தீக்கொல்லன், இரும்புக்கொல்லன், கடைச்சற் கொல்லன்.

தொழில்நுட்பம்—கண்ணுளர், கணிகையர்.
தொழில் வேறுபாடு—கோலியன்.
தெய்வப்பற்று—தேவகணிகையர் (கோவிற் கணிகையர்).
திருத்தொண்டுவகை—பூவாண்டிப் பண்டாரம், உப்பாண்டிப் பண்டாரம்.
பண்பு—மறவன்.
அலுவல்—கணக்கன்.
கல்வி—புலவன், பண்டாரம், ஓதுவான்.
முன்னோர் பதவி—முதலியார் (படைமுதலியார்).
முன்னோர் பட்டம்—முதலி, முதலியார், பிள்ளை.
முன்னோர் வெற்றி—களம் வென்றார்.
முன்னோர் இடம்—செம்பியன் நாட்டார்.
முன்னோர் தொழில்—செங்குந்தர்.
முன்னோர் செயல்—முதுகர் (முதுவர்).

முன்னோர் பெயர்—திருவள்ளுவன் (வள்ளுவன்), வாணர்.

ஒழுக்கம்—பரத்தையர், திருமுடிக் கவுண்டர்.

சடங்கு —பன்னிரண்டுநாள் (பள்ளி).

வழக்கம்—பந்தல்முட்டிப் பள்ளி, கைகாட்டி (கணக்கன்), துருவாளர்.

நிகழ்ச்சி—பன்னிரண்டாம் செட்டி.

கதை—கார்காத்தார்.

பட்டம்—உடையான்.

பிரிவுப்பெயர்—இல்லத்துப்பிள்ளை.

முறைப்பெயர்—அம்மாப்பள்ளர், ஆத்தாப்பள்ளர்.

இடமாற்றமும் முன்னோர் செயலும்—பழியர்.

இடமாற்றமும் பெயர் மாற்றமும்—தேன்வன்னியர் (தென்னார்க்காட்டு இருளர்).

இடவேறுபாடும் பெயர் வேறுபாடும்—பரவர், பட்டணவர், செம்படவர்.

தொகை—ஆயிர வணிகர் (வைசியர்), ஐஞ்னூற்றுன் (பாணன்).

சின்னம்—ஆனை, ஆந்தை, காடை (கொங்கு வெள்ளாளர்).

விலங்கு பேண்வு—பாகர், வாதுவர் (குதிரை).

விலங்கு பிடிப்பு—நரிக்குறவன்.

விலங்குத்துணை—நாயாடி (வேட்டுவன்), எருதாண்டி.

கலப்பு—மேளகாரன் (இசைவேளாளன்), இளமகன்.

கிளை—சவளக்காரன், காவற்காரன்.

தொகுதி—முக்குலத்தார், அம்பல(க்)காரன்.

மதம்—சிவனியர் (சைவர்), திருமாலியர் (வைணவர்).

மதமாற்றம்—சமணர், பவுத்தர், கிறித்தவர், முகமதியர் (துலுக்கர்).

மதப்பிரிவு—பழஞ்சவையர் (Roman Catholic), சீர்திருத்தச் சவையர் (Protestant).

தெய்வம்—ஐயனூர் (கள்ளர் பிரிவு).

செல்வம்—ஒற்றைச்செக்கான் (வாணியன்), இரட்டைச்செக்கான் (வாணியன்).

கட்சி—வலங்கை, இடங்கை (பணிசெய்வோன்).

இடமாற்றம்—குன்னுவர், முதுவர், பச்சைமலையாளியர்.

வரிசை—கடையர்.

அரசன் பெயர்—தொண்டைமான்.

இரப்பு—நோக்கன், பொன்னம்பலத்தார், முடவாண்டி.

நால்வரணத் தோற்றமும் விளக்கமும்

குலங்கள் இயற்கையாகத் தொழில் பற்றியே தோன்றின. மாந்தன் வாழ்க்கைக்குப் பல்வேறு பொருள்கள் வேண்டியிருப்பதால், அவற்றையெல்லாம் விளைவிக்கவோ தேடவோ செய்யவோ பல்வேறு குலங்கள் ஏற்பட்டன. அப்பொருள்களுள், இன்றியமையாதவற்றிற்கு முன்னும், தேவையானவற்றிற்குப் பின்னும், இன்புறுத்துவன வற்றிற்கு அதன் பின்னும், நாகரிகச் சிறப்புப் பற்றியவற்றிற்கு இறுதியிலும், குலங்கள் எழுந்தன. பல்வேறு பொருள்களையும் ஒருவழித் தொகுத்தற்குப் பண்டமாற்றுத் தொழிலும், அவற்றைக் காத்தற்குக் காவல் தொழிலும், அவை தோன்றிய அன்றே அமைந்தன. தெய்வ வழிபாடும், நோயும் துன்பமும் இன்றிக் காக்கும் காவல் பற்றித் தோன்றியதே.

"மகனறிவு தந்தை யறிவு." என்ற முறைப்படி, தந்தையின் தொழில் திறமையும் மனப்பான்மையும் இயற்கையாகவே மகனுக்கமைவதாலும், மக்கள் தொகை மிகாத தொடக்கக் காலத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் சொல்லளவிலுந் தோன்றாமையாலும், எல்லாத் தொழில்களும் தொல்வரவாகவே தொடர்ந்து செய்யப்பட்டு வந்தன. தலைமுறை மிகமிகத் தொல்வரவுத் தொழில் திறமை மிகுவதனாலும், அத்தொடர்ச்சி மேன்மேலும் போற்றப்பட்டு வந்தது. ஒருவன் தன் திறமைக்கும்

விருப்பத்திற்கும் ஏற்றவாறு, எச்சமையத்திலும் தொழில் மாற முடியுமேனும், அதற்கேதுவான நிலைமை அக்காலத்தில் ஏற்படவில்லை.

துப்புரவு, ஒழுக்கம், கல்வி, செல்வம், அதிகாரம் முதலியன பற்றியன்றி, பிறப்பினால் ஏற்றத்தாழ்வு எவருக்கும் ஏற்றிக் கூறப்படவில்லை.

எல்லார் உயிர் வாழ்க்கைக்கும் இன்றியமையாத உணவை விளைப்பதனாலும், நிலையாகக் குடியிருந்து விளைவில் ஆறிலொரு பங்கைக் கடமையாக விறுத்து அரசை நிலைநிறுத்துவதனாலும், போர்க்காலத்திற் படைஞனாகிப் பொருது வெற்றியுண்டாக்குவதனாலும், இரப்போர்க் கீந்து துறப்போர்க்குத் துணையாயிருப்பதனாலும், எல்லாத் தொழிலாளருள்ளும், உழவனே உயர்ந்த குடிவாணனாகவும் தலைசிறந்த இல்வாழ்வானாகவும் கொள்ளப்பட்டான். கைத்தொழிலாளரெல்லாம் உழவனுக்குப் பக்கத் துணைவராகவே கருதப்பட்டனர்.

“உழுவார் உலகத்தார்க் காணியஃ தாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து.” (குறள். ௧0௩௨)

“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.” (ஷை ௧0௩௩)

“பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்.” (ஷை ௧0௩௪)

“இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.” (ஷை ௧0௩௫)

“இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.” (ஷை ௪௧)

“துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.” (ஷை ௪௨)

வெளிநாட்டு அரும்பொருள்களை யெல்லாம் கொண்டுவந்து

மக்கள் வாழ்க்கையை வளம்படுத்தியும், அரசனுக்கவ்வப் போது பண முதவியும், நாட்டிற்கு நன்மை செய்த வாணிகன், உழவனுக்கடுத்தபடியாகப் போற்றப்பட்டான்.

கள்வராலும் கொள்ளைக்காரராலும் பகைவராலும் அதிகாரிகளாலும் கடுவிலங்குகளாலும், உயிருக்கும் பொருளுக்கும் கேடு வராமற் காக்கும் அரசன், பணி வகையில் வணிகனுக்கு அடுத்த படியாகவும், அதிகார வகையிற் கண்கண்ட கடவுளாகவும், கருதப்பட்டான்.

ஆசிரியனுகவும் அமைச்சனுகவும் தூதனுகவும் பணிபுரிபவனும், ஆக்கவழிப் பாற்றலுள்ளவனுமான அந்தணன், இறைவனுக்கடுத்தபடி தெய்வத்தன்மையுள்ளவனுகக் கருதப்பட்டான்.

இங்ஙனம் உழவு வாணிகம் காவல் கல்வி என்னும் நாற்றெழிலே தலைமையாகக் கொள்ளப்பட்டு, எல்லாக்கைத் தொழில்களும் உழவுள் அடக்கப்பட்டன.

பொருளிலக்கண நூலார், அகப்பொருளின்பத்தைச் சிறப்பித்தற்பொருட்டுத் தலைமக்களையே கிளவித்தலைவராகக் கொண்டதனல், வேந்தர்க்குற்றுழிப் பிரியும் (உழுவித்துண்ணும் வேளாளர் தலைவனுகிய) வேளையும், பொருள்வயிற் பிரியும் இருவகை வணிகர் தலைவரையும், போருக்குப் பிரியும் இருவகையரசரையும், தூதிற்குப் பிரியும் (கீழ்நிலை அந்தணனுகிய தமிழப்) பார்ப்பனத் தலைவனையும், காதலரரகக் குறித்தனர். வேளாளர் வணிகர் அரசர் அந்தணர் என்பதே வரலாற்று முறையாயினும், அந்தணர்க்கும் அரசர்க்கும் சிறப்புக் கொடுத்தற் பொருட்டு அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என எதிர்முறையிற் கூறினர்.

இந்நாற்பாற் பகுப்பையே, பிராமணர் சத்திரியர் வைசியர் சூத்திரர் எனத் திரித்தனர் ஆரியப் பூசாரியர்.

தமிழ நால் வகுப்பிற்கும் ஆரிய நால்வரணத்திற்கும் வேறுபாடு.

தமிழம்	ஆரியம்
தமிழப் பாகுபாடு தொழில் ஒன்றையே அடிப்படையாகக் கொண்டது.	ஆரியப் பாகுபாடு நிறத்தையும் பிறப்பையுமே அடிப்படையாகக் கொண்டது. வரணம் நிறம். சாதி பிறப்பு. ஜன்—ஜா—ஜாதி= பிறப்பு, பிறவிக் குலம்.
அந்தணர் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவோர், அந்தண்மை (அழகிய குளிர்ந்த அருள்) பூண்ட துறவியர். அந்தண்மை பூண்ட இல்லறத்தாரான பார்ப்பாரும் அந்தணர் என்னும் பெயருக் குரியர். இவ்விரு வகுப்பிற்கும் இனகுலமதஇட வரையறையில்லை.	ஆரியப் பூசாரியரே பிராமணர். துறவு பிராமணனுக்கே உண்டு. ஆதலால், அவனே வீடுபேறடைய முடியும்.
அரசர் என்பார் ஆள்குடியினர்.	சத்திரியர் என்பார் ஆள்குடியினரும் போர்மறக் குலத்தாரும் ஆவர்.
வணிகர் என்பார் பண்டமாற்று அல்லது வாணிகம் ஒன்றே செய்பவர்.	வைசியர் என்பார், வாணிகம் வேளாண்மை ஆவளர்ப்பு ஆகிய முத்தொழில் செய்பவர்.
வேளாளர் என்பார் பயிர்த்தொழில் ஒன்றேசெய்பவர்.	சூத்திரர் என்பார் பல்வேறு கைத்தொழிலும் கூலிவேலையும் அடிமைத்தொண்டும் செய்பவர்

தமிழம்	ஆரியம்
நால்வகுப்பாருள்ளும் வேளாளனே உயர்ந்தவன். அவன் உழவுத் தொழிலும் வேளாண்மையுஞ் செய்வதனுலேயே, உலகம் நடைபெற்று வருகின்றது.	நால்வரணத்தாருள்ளும் பிராமணனே உயர்ந்தவன். அவன் வேள்வி வளர்ப்பதனுலேயே, உலகம் நடைபெற்று வருகின்றது. உழும்போது புழுபூச்சிகள் கொல்லப்படுவதால், உழவுத் தொழில் மிக இழிவானது.
கல்வி எல்லார்க்கும் பொது. எவ்வகுப்பிலும் எக்குடும்பத்திலும் அறிஞன் தோன்றலாம்.	கல்வி பிராமணனுக்கே உரியது. மற்றெல்லாரும் மற்றத் தொழில்களே செய்தல் வேண்டும்.
திறமையும் விருப்பமும்பற்றி ஒருவன் எத்தொழிலையுஞ் செய்யலாம்; எச்சமையத்திலும் தொழில் மாறவுஞ் செய்யலாம்.	நால் வரணமும் இறைவனுற் படைக்கப்பட்டவை. ஒவ்வொருவனும் தன் வரணத்திற்குரிய தொழிலையே செய்தல் வேண்டும்.

இங்ஙனம் எல்லாத் தொழிலாளரும் நான்குபிறவி வகுப்பிற்குட் புகுத்தப்பட்டுவிட்டனர். பிராமணர் வந்த புதிதில் வெண்ணிறமா யிருந்ததனுலும்; வெப்ப நாடாகிய தமிழகத்தில் வெயிலிற் காய்ந்து வேலை செய்பவர் கருநிறமாயும், வீட்டிலும் நிழலிலும் இருந்து வேலை செய்பவர் பொன்னிறமாயும், இவ்விரு சாரார்க்கும் இடைப்பட்டவர் செந்நிறமாயும், இருப்பதனுலும்; நிறம்பற்றி மக்களை நால் வகுப்பாக வகுப்பதற்குத் தோதாகவிருந்தது. ஆயின், வேளாளருள் ஒரு சாராரான வெள்ளாளர் சூத்திர வகுப்புள் அடக்கப்பட்டது, நாலாம் வகுப்பென்னும் வரிசை பற்றியே.

தொழில் பற்றிக் குலங்கள் ஏற்கெனவே ஏற்பட்டிருந்தனவேனும், அவற்றையெல்லாம் நால்வகைப் பிறவி வகுப்புக்களாக வகுத்தவர் பிராமணர். அதனையே,

"முற்படைப் பதனில்வே றுகிய முறைமைபோல்
நால்வகைச் சாதியிந் நாட்டில்நீர் நாட்டினீர்"

என்று, குலவிளக்க அகவல் பாடிய கபிலர் கூறினர்.

பிராமணர் கல்விக் களத்தைத் தமக்கே யுரியதாகக் கூறியதனால், கல்வித்துறையில் முன்பு தமிழர்க்கு வழங்கிய பார்ப்பார், அந்தணர், ஐயர் என்னும் பெயர்களுள் முன்னது முற்றும், பின்னவை ஓரளவும், பிராமணர்க்கு வரையறுக்கப்பட்டு விட்டன. "அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்" என்று தொல்காப்பியரும், "பற்பலர் நாட்டிலும் பார்ப்பா ரிலையால்" என்று அகவற் கபிலரும், குறித்தது ஆரியப் பார்ப்பனரான பிராமணரையே.

ஐயன் என்னும் பெயர்

ஐ=க. வியப்பு. "ஐவியப் பாகும்." (தொல். அசுஅ).
உ. வியக்கத் தக்க பெரியோன், அரசன், தலைவன். "என்னைமுன் நில்லன்மின்" (குறள். எஎக). ந. குடும்பத் தலைவனான தந்தை. "தன்னை சேவடித் தாமரை" (சீகாளத். பு. நான்முக. கஉச). ச. மணமான பெண்ணின் தலைவனான கணவன். "என்னைக்கு முதவாது." (குறுந். உஎ).

ஐ—ஆய் = அன்னை.

ஐ—ஐது = வியப்பானது. "ஐதே யம்ம." (தொல். சொல். நஅரு, உரை).

ஐ—ஐயன் = க. பெரியோன். உ. ஐங்குரவர் என்னும் ஐந்து பெரியோரின் பொதுப் பெயர். தாய், தந்தை, அண்ணன், அரசன், ஆசிரியன் என்னும் ஐவரும் ஐம்பெரியோர். தாயைக் குறிக்கும்போது ஐயை என்று இறு திரியும். தம் ஐயன் தமையன் (அண்ணன்). "தந்தைக்குப்பின் தமையன்." ந. பெரியோனன் முனிவன். "ஐயர் யாத்தனர் கரணம் என்ப." (தொல். க0கக). பிங்கல நிகண்டின் முனிவர் பகுதி "ஐயர்

வகை'' என்று பெயர் பெற்றிருத்தல் காண்க. ௪. எல்லார்க்கும் எல்லாவற்றிற்கும் தலைவனான இறைவன். ரு. சாத்தன் என்னும் தெய்வம். ஐயன்—ஐயனார். ௬. தலைவன்.

ஐயன் என்னும் சொல் பறையரும், ஐயா என்னும் விளி வடிவம் பாண்டி நாட்டு வெள்ளாளர் முதலியார் முதலிய பல குலத்தாரும், தந்தையைக் குறிக்க ஆளும் சொல்லாகும்.

ஐயன்—ஐயர் (உயர்வுப்பன்மை)=பெரியோர், உயர்ந்தோர். இறைவனடியார் பெரியோராதலின், சேக்கிழார் கண்ணப்பரையும் திருநாளைப் போவாரையும் திருநீலகண்ட யாழ்ப் பாணரையும் ஐயர் என்னுஞ் சொல்லாற் குறித்தார்.

''சார்வலைத் தொடக்கறுக்க ஏகும்ஐயர் தம்முனே''
(கண்ணப். ௭௦).

''ஐயரே அம்பலவர் அருளாலிப் பொழுதணைந்தோம்.''
(திருநாளைப். ௩௦).

''அளவிலா மகிழ்ச்சியினார் தமைநோக்கி ஐயர் நீர்''
(திருஞான. ௧௩௩).

ஐ—ஐயள்=வியக்கத்தக்கவள். (ஐங். ௨ருரு).

ஐயன்—ஐயை=௧. தாய். ௨. காளி (அம்மை). ௩. தலைவி. ௪. தவப்பெண். ரு. ஆசிரியன் மனைவி.

ஐயன்—ஐயா!=எல்லாப் பெரியோரையும் விளிக்கும் விளி.

ஐயன்—ஐயே!=௧. கீழ்மக்கள் தலைவனை விளிக்கும் விளி. ''ஐயே! நானுங் கொன்றவ னல்லேன்''
(திருவிளை. பழியஞ்.௨௪).
௨. வியப்புக் குறிப்பு. (வ. ஆ. மா.).

ஐயையே! (ஐயே ஐயே)=அருவருப்புக் குறிப்பு.

ஐயன்—ஐயோ!=௧. இரக்கக் குறிப்பு. ௨. வருந்தற்குறிப்பு.

ஐயன்—ஐயவோ—ஐயகோ!=வருந்தற்குறிப்பு.

ஐயையோ! (ஐயோஐயோ)=மிக வருந்தற் குறிப்பு.

ஐயன்—அய்ய (பாலி).

ஐயர் என்பது சுமார்த்தப் பிராமணரும், ஐயங்கார் என்பது வைணவப் பிராமணரும், தமக்கு ஆண்டுகொண்ட குலப் பட்டமாகும். ஐயர்அவர்—ஐயவாரு (தெ.)—ஐய்காரு—ஐயங்கார்.

ஐயன் என்னும் அடிப்படைத் தென்சொல்லை, ஆர்ய என்னும் இனப்பெயரின் திரிபாகச் சென்னைப் ப. க. க. அகரமுதலி காட்டியிருப்பது, அதைத் தொகுத்த பிராமணத் தமிழ்ப்புலவரின் துணிச்சலையும், மானமிழந்த தமிழத் தலைமைத் தமிழ்ப் பேராசிரியரின் அடிமைத்தனத்தையுமே, காட்டும்.

பிராமணர் ஏனை மூவகுப்பார்க்கும் தொழில்களை வரையறுத்துவிட்டு, தமக்குமட்டும் சமையத்திற் கேற்றவாறு எத்தொழிலையும் மேற்கொள்ளும் உரிமையை வைத்துக்கொண்டனர். துரோணாச்சாரி கிருபாச்சாரி என்னும் இரு பிராமணரும், பாரதக்காலத்தில் வில்லாசிரியரா யிருந்தனர். புத்தர் காலத்தில் தேவேந்திரநாதன் என்னும் பிராமணன் பயிர்த்தொழிலை மேற்கொண்டான். ஆயினும், அவர் பிராமண வரணம் மாறவில்லை. இற்றைப் பிராமணர் தோட்டிவேலை தவிர எல்லா வேலையுஞ் செய்கின்றனர். ஆயினும், பிராமணர் என்றும் பிராமணரே. இங்ஙனமே, ஏனை வகுப்பாரும் கல்வியல்லாத மற்றத் தொழில்களையெல்லாஞ் செய்துகொண்டு, உலகுள்ளவரையும் உடனுண்டலும் மணவுறவுமின்றி, வெவ்வேறு இருப்புக் கூண்டுக் குலங்களாக இருந்துவரவேண்டுமென்று, அவர் விரும்புகின்றனர். இதனால், நாட்டுமக்கள் முன்னேற்றமும் ஒற்றுமையுமின்றி, வந்தேறிகளான பிராமணர்க்கே என்றும் அடிமைத் தொண்டு செய்துவருமாறு, வர்ணாச்சிரம தருமம் என்னும் குலவொழுக்கத் திட்டம் வகுக்கப்பட்டதென்பது தெளிவாகின்றது.

இற்றைப் பிறவிக் குலங்கள்

அகம்படியன்

தொழில்—பண்டைநாளில் மறவர்குல மன்னர் மாளிகைகளில் அகம்படித் தொண்டு (இல்லப்பணி) செய்தவர். இன்று தென்மாவட்டங்களிற் பயிர்த்தொழி

லும், வடார்க்காட்டு மாவட்டத்திற் கொத்த (கட்டட) வேலையும், செய்பவர்.

பிரிவு—ஐவழி நாட்டான், கோட்டைப் பட்டு முதலிய பன்னீ ரகமணப் பிரிவுகள் (Endogamous septs).

பட்டம்—அதிகாரி, சேர்வைகாரன், பிள்ளை, முதலியார்.

"கள்ளன் மறவன் கனத்தால் அகம்படியன்" என்னும் பழமொழி, குலந்தோன்றிய வழியைக் காட்டும்.

அம்பல(க்)காரன்

தொழில்—பயிர்த்தொழிலும் ஊர்க்காவலும்.

பிரிவு—முத்திரியன் (முத்தரையன்), காவல்காரன், வன்னியன், வலையன் என்னும் நாலகமணப் பிரிவுகள்.

பட்டம்—சேர்வைகாரன், முத்தரையன் (முத்தரசன்), அம்பலகாரன், மழவராயன் (மழவரையன்), வன்னியன், மூப்பன்.

அளவன்

தொழில்—உப்பளத்தில் உப்பு விளைத்தல்.

பட்டம்—பண்ணையன், மூப்பன்.

இடையன்

பெயர்—அண்டன், ஆயன் (ஆன்வல்லவன்), இடையன், குடவன், கோவன் (கோன், கோனான்), கோவலன், தொறுவன், பொதுவன்.

தொழில்—ஆடுமேய்ப்பு, மாடுமேய்ப்பு, ஆனைந்து (பால், தயிர், மோர், வெண்ணெய், நெய்) விற்பு.

பிரிவு—தொழிற் பிரிவு: ஆட்டிடையன், மாட்டிடையன் (ஆனையன்).

குலப் பிரிவு : கல்கட்டி, பாசி முதலிய இருபது பிரிவுகள்.

தலைவன் பட்டம்—அம்பலக்காரன், மந்திரி (மந்தையாரி), கீடாரி (கிடையாரி).

குலப் பட்டம்—கோன் (கோனுன்), பிள்ளை, கரையாளன், சேர்வை, மணியக்காரன், முக்கந்தன், மந்திரி.

"இடையனில் ஆண்டியு மில்லை, குயவனில் தாதனுமில்லை."

இருளன்

பெயர்—இருளர் (நீலமலை), வில்லியர் (செங்கழுநீர்ப்பட்டு தென்னார்க்காடு மாவட்டங்கள்), தேன் வன்னியர் (தேன் படையாட்சி), வனப் பள்ளியர் (வ.ஆ.மா.).

பிரிவு—புறமணப் (Exogamous) பிரிவுகள்.

பட்டம்—நாய்க்கன், பூசாலி (பூசாரி).

தொழில்—தோட்டவேலை, தேனெடுத்தல், மீன் பிடித்தல்.

உடையான்

தொழில்—பயிர்த் தொழில்.

பிரிவு—நத்தமான், மலைமான், சுதர்மான், உடையான். ஒவ்வொன்றிற்கும் காணி என்னும் அகமணப் பிரிவுகளுண்டு.

பட்டம்—உடையார், நயினர், மூப்பன், பண்டாரியார், பண்டாரத்தார், பாளையத்தார், காவற்காரர்.

உப்பரவன் (உப்பளவண்)

பெயர்—உப்பிலியன் (தமிழ்நாடு), உப்பரன் (தெலுங்கு நாடு), உப்பாரன் (கன்னடநாடு).

தொழில்—உப்பு விளைத்தல்.

தலைவன் பட்டம்—பட்டக்காரன்.

குலப் பட்டம்—செட்டி.

உவச்சன் (பூசாரி)

தொழில்—காளி கோவிற் பூசை.

பிரிவு—மாராயன், பாண்டி முதலிய ஐம் பிரிவுகள்.

பட்டம்—புலவன்.

ஊராளி

தொழில்—பெரும்பாலும் பயிர்த் தொழில்.

பிரிவு—ஏழ் அகமண நாடுகள். கரை அல்லது காணியாட்சி என்னும் புறமண உட்பிரிவுகள் உண்டு.

பட்டம்—கவுண்டன்.

ஓதுவார்

தொழில்—சிவன் கோவிலிற் பூசை செய்தல்.

இனப் பிரிவு—ஓதுவார், பண்டாரம், குருக்கள், புலவர்.

பட்டம்—ஓதுவார்.

கடசன்

தொழில்—கூடை முடிதல், சுண்ணம்புக்கல் சுடுதல்.

பிரிவு—பட்டங்கட்டி, நீற்றரசன் என்னும் அகமணப் பிரிவுகள்.

பட்டம்—பட்டங்கட்டி, கொத்தன்.

கணக்கன்

தொழில்—ஊர்க்கணக்கு எழுதுதல்.

பிரிவு—சீர், சரடு, கைகாட்டி, சோழியன் என்னும் நான்கு.

பட்டம்—பிள்ளை.

கணிகை (பெண்)

தொழில்—நாடக வரங்கிலும் கோவிலிலும் நடஞ் செய்தல்.

பிரிவு—நாடகக் கணிகை, தேவகணிகை.

கள்ளன்

பெயர் விளக்கம்—வேற்று நாட்டு ஆநிரைகளைக் களவிற் கவருமாறு, சோழ வேந்தரால் ஆளப்பட்ட பாலைநிலத்து வெட்சி மறவர் கள்ளர் அல்லது கள்வர் எனப்பட்டனர்.

> ''வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
> ஆதந் தோம்பல் மேவற் றாகும்.'' (தொல். புறத். உ).

தொழில்—பண்டைநாளிற் போர்த்தொழில். இன்று பயிர்த் தொழிலும் கல்வித் தொழிலும்.

பண்டை இடம்—சோழநாடு.

பிரிவு—மேல்நாடு சிறுகுடிநாடு முதலிய பத்து அகமண நாடுகள் (மதுரை), பதினால் நாடுகள் (சிவகங்கை). வகுப்பு, தெரு, கரை, கிளை என்பன நாட்டின் புறமண உட்பிரிவுகள்.

தலைவன் பட்டம்—அம்பல(க்)காரன், நாட்டான்.

குலப் பட்டம்—நாட்டார், வன்னியன், பிள்ளை, அம்பலகாரன், சம்புவராயன், வாண்டையார், சேர்வைகாரன், சோழகன் முதலியன.

பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரின் 'கள்ளர் சரித்திரம்' ௩௪அ பட்டங்களைக் குறித்துள்ளது. பழமொழி தாழ்த்திக் கூறினும், கள்ளர் மறவர்க்கு எட்டுணையுந் தாழ்ந்தவரல்லர்.

காராளன்

காராளர் உழுதுண்ணும் வேளாளர்.

சேலம் சேர்வராயன் (சேரவரையன்) மலையாளிகளுள் ஒருசாரார் தம்மைக் காராளர் என்பர்.

> ''காராள ரேர்கள் கடவோதை'' (அரிச். பு. மயா. உரு).

குசவன்

தொழில்—மட்கலம் வனைதல்.

பட்டம்—வேளான், செட்டி, உடையார், பிள்ளை.

குடிமகன்

தொழில்—பெரும்பான்மை மயிர் சிரைத்தலும் வெட்டுதலும், சிறுபான்மை மருத்துவமும் அறுவையும் (Surgery).

"ஆரார் தலைவணங்கார் ஆரார்தாங் கையெடார்
ஆரார்தாஞ் சத்திரத்தில் ஆறுதார்—சீராரும்
தென்புலியூர் மேவுஞ் சிவனருள்சேர் அம்பட்டத்
தம்பிபுகான் வாசலிலே தான்." (கம்பர்).

பிரிவு—தீண்டுவான், தீண்டான்.

பட்டம்—பண்டிதன்.

குலப்பிள்ளை (சாதிப்பிள்ளை)

தொழில்—இரப்பு.

குலம்	இரப்போன்
பள்ளி	நோக்கன்
கொங்குவெள்ளாளன்	முடவாண்டி
கைக்கோளன்	பொன்னம்பலத்தான்
பேரிச்செட்டி	வீரமுட்டி

குறவன்

தொழில்—வேட்டையாடல், கூடைமுறம் முடைதல், உப்பு விற்றல், மருத்துவஞ் செய்தல், திருடல்.

பெண்டிர் தொழில்—குறிசொல்லுதல், பச்சைகுத்துதல்.

பிரிவு—ஊர்க்குறவன், மலங்குறவன், நாடோடி.

ஊர்க்குறவன் பிரிவு—தப்பை (மூங்கில்வேலை), கொங்கன், உப்பு.

பல அகமணப் பிரிவுகள்.

மலங்குறவன் பிரிவு—குன்றக் குறவன், பூங்குறவன் (வேலன்), காக்கைக் குறவன் (கக்கலன்), பாண்டிக் குறவன் (நாஞ்சிற் குறவன்).

நாடோடிகள்—காளிக்கோட்டம் வரை பல்வேறு நாடு சென்று, அவ்வந்நாட்டு மொழி பேசி, வெவ்வேறு பெயர் கொண்டு, வேட்டை மருத்துவம் களவு ஆகிய தொழில் செய்பவர். குருவிக்காரன் அல்லது நரிக்குறவன் தமிழ் மராட்டி இந்துத்தானி ஆகிய மும்மொழி பேசுபவன்.

தலைவன் பட்டம்—பெரிய மனிதன் (மனுசன்), ஊராளி, பணிக்கன்.

குலப் பட்டம்—சேர்வைகாரன், பிள்ளை, கவுண்டன் முதலியன.

குறும்பன்

தொழில்—குறும்பாடு மேய்ப்பு, முரட்டுக் கம்பளி நெசவு, தேனெடுப்பு முதலியன.

பிரிவு—காட்டுக் குறும்பு × நாட்டுக் குறும்பு.

தேன் (ஜேன்) குறும்பு, பன்றிக் குறும்பு முதலியன உட்பிரிவுகள்.

பட்டம்—மூப்பன்.

கைக்கோளன்

பெயர்—கைக்கோளன் (தமிழ்நாட்டின் நடுவும் தென் பாகமும்).

செங்குந்தன் (தமிழ்நாட்டின் வடபாகம்).

கையிற் கோல் (நெசவுக் குழல்) கொண்டவன் கைக்கோளன். கோலன்—கோளன். குழல்—கோல். கையிற் செங்குந்தம் பிடித்திருந்த போர்ப் படையினர் வழிவந்தவர் செங்குந்தர்.

தொழில்—நெசவு.

பிரிவு (சிலவிடங்களில்)—சோழியன், இருட்டு, சிறுதாலி,

பெருந்தாலி, சீர்பாதம், சேவக விருத்தி.

நாட்டுப்பிரிவு—எஉ நாடு.

வழக்கம்—ஒவ்வொரு குடும்பமும் ஒரு பெண்ணைக் கோவிலுக்குத் தேவ கணிகையாக விடுதலும், அவளொடு செல்வ அல்லது ஏழைப் பிராமணன் கூடுதலும். இவ்வழக்கம் நின்று விட்டது.

தலைவன் பட்டம்—பெரியதனக்காரன், பட்டக்காரன்.

குலப் பட்டம்—அடவியார், நயினர், முதலியார், மூப்பர்.

கொல்லன்

வகையும் தொழிலும்—ஐங் கொல்லர் (ஐங் கம்மாளர்).

மரக் கொல்லன்—தச்சன்.

கற் கொல்லன்—கல் தச்சன், கம்மியன்.

பொற் கொல்லன்—தட்டான், கம்மாளன்.

செப்புக் கொல்லன்—கன்னான்.

இருப்புக் கொல்லன்—கருமான் (கருமகன்), கொல்லன்.

முதன்முதல் தோன்றியவன் மரக் கொல்லனே. ஓரறிவுயிருள்ள மரத்தை வெட்டிக்கொல்வதால், அவன் கொல்லன் எனப் பட்டான்; அவன் தொழில் கொல் எனப்பட்டது. "மரங்கொல் தச்சரும்" என்று சிலப்பதிகாரம் (ரு:உகூ) கூறுதல் காண்க. முதற்காலமாகிய கற்காலத்தில், மரத்தினாலுங் கல்லாலுமே வீடு கட்டப்பட்டது. அதன் பின்னரே பொன்னும் செம்பும் உறையும் இரும்பும் கண்டுபிடிக்கப்பட்டன. வெண்கலக் கன்னாரும் செப்புக் கன்னாருள் அடங்குவர்.

நாட்டுப்பிரிவு—பாண்டியம், சோழியம், கொங்கம் என்னும் மூன்று அகமணப் பிரிவுகள்.

தலைவன் பட்டம்—நாட்டாண்மைக்காரன், கருமத்தான் (காரியத்தன்).

குலப்பட்டம்—நயினர், பத்தன், ஆச்சாரி (ஆசாரி) என்பது பிராமணரொடு போட்டியிட்ட பிற்காலத்து ஆரியச் சொல்.

கோலியன்

தொழில்—நெசவு.

பிரிவு—நாடுகள் என்னும் பெரும் பிரிவும் குப்பங்கள் என்னும் சிறு பிரிவும்.

பட்டம்—'இசன்' என்னும் வடசொல் அடைமொழி.

சவளக்காரன்

தொழில்—ஓடம் விடுதல், பயிர் விளைத்தல், இசைக்குழல் ஊதல், இட்டிப் போர் புரிதல், தாதுக்கனி தோண்டுதல்.

பட்டம்—படையாட்சி (பயிர்த்தொழிலாளர்), அண்ணாவி (இசைத்தொழிலாளர்).

சாயக்காரன்

தொழில்—சாயங் காய்ச்சுதல்.

சாலியன்

தொழில்—நெசவு.

பிரிவு—உ௪ புறமணவீடுகள்.

பட்டம்—அடவியார்.

சான்றான் (சாணான்)

பெயர்: சான்றோர் = போர்மறவர்.

''தேர்தர வந்த சான்றோ ரெல்லாம்'' (புறம். ௬௩).

சான்றோர்—சான்றார்.

''இழக் குலச்சான்றார் ஏனாதி நாதனார்'' (பெரியபு. கரு:உ)

தொழில்—கள்ளிறக்குதல், கருப்பட்டி காய்ச்சுதல்; வாணிகஞ் செய்தல், குடிக்காவல், படைக்கலம் பயிற்றல்.

பிரிவு—கருக்குமட்டையன், மேனுட்டான், கொடிக்கால் நட்டாத்தி, பிழுக்கை.

ஊர்த்தலைவன் பட்டம்—நாட்டாண்மை.

குலப் பட்டம்—நாடார், சேர்வைகாரன். முக்குந்தன் என்பது வழக்கு வீழ்ந்தது.

சிங்கன்

தொழில்—வேட்டையாடல்.

செட்டி

பெயர் விளக்கம்—பெரும்பொருளீட்டி நாட்டிற்கு நன்மை செய்த வணிகர் தலைவர்க்குப் பண்டை யரசர் அளித்த பட்டம் எட்டி என்பது. "எட்டி குமரன் இருந்தோன் தன்னை" (மணி. ச. ருஅ). எட்டுதல் உயர்தல். எட்டம் உயரம். எட்டு—எட்டி=உயர்ந்தோன். பரம+எட்டி=பரமேட்டி (எல்லார்க்கும் மேலாக வுயர்ந்த இறைவன்)—மரூஉப் புணர்ச்சி. எட்டி—செட்டி. வடநாட்டு மொழிகளில் எகரக் குறிலின்மையால், செட்டி என்பது சேட்டி—சேட் எனத் திரிந்தது. ஸ்ரீ (திரு) என்பதன் உச்சத்தரமான சிரேஷ்டி என்னும் வடசொற்கும், செட்டி என்னும் தென் சொற்கும், தொடர்பில்லை.

பல்வேறு வாணிக வகுப்பார், செட்டி என்பதைப் பட்டமாக மட்டுமன்றிக் குலப்பெயராகவும் கொண்டுள்ளனர்.

(க) வெள்ளாஞ் செட்டி (வேளாண்குல வாணிகன்).

(உ) வாணியச் செட்டி.

தொழில்—செக்காட்டி எண்ணெய் விற்றல்.

பிரிவு—காமாட்சியம்மா, விசாலாட்சியம்மா, அச்சுத்தாலி, தொப்பைத்தாலி என நான்கு.

(ங) நாட்டுக் கோட்டைச் செட்டி.

தொழில்—வட்டிக்குப் பணங் கொடுத்தல்.

பிரிவு—ஒன்பது கோவில்கள்.

(௪) நகரத்துச் செட்டி (ஆயிர வணிகர்).

(௫) காசுக்காரச் செட்டி.

தொழில்—பொன்மணி வாணிகம், காசுமாற்று.

(௬) பேரிச் செட்டி.

தொழில்—ஊரூராகச் சென்று பேரிகை கொட்டிப் பண்ணியம் விற்றல்.

பிரிவு—திருத்தணியார், அச்சிறுபாக்கத்தார் முதலிய ஐந்து அகமணப் பிரிவுகள்.

(௭) கரையான் செட்டி (பட்டணவன், பரவன்).

தொழில்—கடல் வாணிகமும் மீன் வாணிகமும்.

(௮) மளிகைச் செட்டி.

தொழில்—பலசரக்கு விற்பனை.

(௯) மஞ்சட்குப்பத்துச் செட்டி.

(௧௦) பன்னிரண்டாஞ் செட்டி.

செம்படவன்

தொழில்—ஆறு குளம் ஏரிகளில் மீன் பிடித்தல். கடல்மீனும் கருவாடும் விற்றல், ஓடமும் பரிசலும் விடுதல்.

பிரிவு—ஏழ் நாடுகள் அல்லது புறமணப் பிரிவுகள்.

தலைவன் பட்டம்—நாட்டான், நாட்டாண்மைக்காரன்.

குலப்பட்டம்—நாட்டான், கவுண்டன், மணியக்காரன், பகுத்தார், பிள்ளை.

பயிரிடும் சிலர் குக வெள்ளாளர் எனல்.

தேவடியாள்

தொழில்—கோவில் தொண்டும் பரத்தைமையும்.

வகைகள்—தேவகணிகையர், நேர்ந்து கொண்டோர், வறுமையால் அடிமைப்பட்டோர், குல வழக்கத்தால் ஆனோர், ஆரியப் பூசாரியரால் வேண்டப்

பட்டோர், இவ் வைவகையாரின் வழியில் வந்தோர்.

தேவனுக்கு அடியாள் என்னும் சிறந்த பெயர் ஒழுக்கக் கேட்டால் இன்று இழிவடைந்துள்ளது.

தொண்டைமான்

பெயர்—தொண்டைமான், சுண்ணும்புக்காரன்.

தொழில்—சுண்ணும்புக்கல் நீற்றல், மேளம் தட்டுதல், இசைக்குழலூதுதல்.

பட்டம்—சோழகன்.

நளவன்

தொழில்—கள்ளிறக்குதல். (யாழ்ப்பாணம்)

பட்டணவன்

இடம்—கிருட்டிணு முதல் தஞ்சை வரை கடற்கரை.

பெயர்—பட்டணவன், கரையான்.

தொழில்—கடல்மீன் பிடித்தலும் வாணிகமும்.

பிரிவு—பெரிய பட்டணவர் × சின்னப் பட்டணவர்.

பட்டம்—செட்டி.

பண்டாரம்

பெயர் விளக்கம்—பண்டாரம் = கருவூலம் போன்ற உயர் பொருட் பேரறிஞன்.

பிரிவு—வெள்ளாளப் பண்டாரம் (கோவிற் பண்டாரம், மடத்துப் பண்டாரம், ஆண்டிப் பண்டாரம்), பள்ளிப் பண்டாரம், பள்ளர் பண்டாரம், வள்ளுவப் பண்டாரம் (பறையர் குரு).

பெயர்—இல்லத்துப் பிள்ளை.

பணிக்கன்

தொழில்—நெசவும் வாணிகமும்.

பிரிவு—பல புறமண இல்லங்கள்.

பட்டம்—பணிக்கர்.

பணிசெய்வோன் (பணிசவன்)

தொழில்—சாவறிவித்தலும் தாரை ஊதுதலும் இரத்தலும் (சேலம்).

கோவிலில் இசைக்குழல் ஊதுதலும் நட்டுவமும் (திருநெல்வேலி).

பிரிவு—வலங்கை, இடங்கை.

பட்டம்—புலவன், பண்டாரம், பிள்ளை, முதலி.

பரத்தை

பெயர்—விலைமகள், பொதுமகள், வரைவின் மகள், இராக்கடைப் பெண்டு.

வகை—இற்பரத்தை, சேரிப்பரத்தை.

பரவன்

பெயர்—பரவன், பரதவன், பரதன். படவன்—பரவன்.

இடம்—தஞ்சைக்குத் தெற்கிற் குமரிவரை கடற்கரை.

தொழில்—கடல் மீன் பிடித்தலும் கடல் வாணிகமும்.

பட்டம்—செட்டி.

பரிவாரம்

வந்தவழி—முக்குலத்தோர் கலப்பு.

தொழில்—வீட்டு வேலை செய்தல், மீன் பிடித்தல்.

பிரிவு—சின்ன ஊழியம் பெரிய ஊழியம் என்னும் இரகமணப் பிரிவுகள்.

பட்டம்—மணியகாரன், சேர்வைகாரன், ஊழியக்காரன்.

பள்ளன்

இடம்—சோழ பாண்டித் தமிழ்நாட்டின் தென்பாகம்.

தொழில்—பயிர்த் தொழிலும் பண்ணை வேலையும்.

பிரிவு—அம்மாப் பள்ளன், அஞ்ஞாப் பள்ளன், ஆத்தாப் பள்ளன், பணிக்கன், கடையன் முதலிய பல அகமணப் பிரிவுகள்.

''நெல்வகையை எண்ணினாலும் பள்வகையை எண்ண முடியாது.'' (உயர்வு நவிற்சி).

தலைவன் பட்டம்—குடும்பன், நாட்டாண்மைக்காரன், பட்டக்காரன், நாட்டு மூப்பன்.

குலப் பட்டம்—குடும்பன், பண்ணாடி (பண்ணையாடி), மன்றாடி, மூப்பன்.

பள்ளி (வன்னியன்)

இடம்—சோழ பாண்டித் தமிழ்நாட்டின் வடபாகம்.

பெயர்—பள்ளி, வன்னியன், செம்பியன்.

தொழில்—பயிர்த்தொழில், வாணிகம், கொல்லற்று (கொத்த வேலை. பண்டை நாளிற் சிலர் படை மறவர்.

பிரிவு—அரசு, பந்தல்முட்டி, அஞ்சுநாள், கோவிலர், ஓலை முதலிய பல அகமணப் பிரிவுகள்.

தலைவன் பட்டம்—கவுண்டன், பட்டக்காரன், கண்டர், சம்புவராயன், நாயகர், நயினார் முதலியன.

குலப் பட்டம்—கவுண்டன், படையாட்சி, நாய்க்கன், பிள்ளை, இராயன் முதலியன.

வன்னி என்பது ஒரு மர வகையைக் குறிப்பின் தென்சொல்; நெருப்பைக் குறிப்பின் வஃனி (Vahni) என்னும் வடசொல்.

கதிர்வன் திங்கள் நெருப்பு என்னும் முச்சுடரும், முறையே, சோழன் பாண்டியன் சேரன் ஆகிய மூவேந்தர் குலத்திற்கும் முதலாகக் கொள்ளப்பட்டன. பண்டைத் தமிழகம் முழுதும்

மூவேந்தர் ஆட்சிக்குட்பட்டே யிருந்தது. அவருக்கடங்கிய சிற்றரசர் பலர் ஆங்காங்கிருந்தாண்டனர். வன்னியைக் காவல் மரமாகக் கொண்ட குறுநிலமன்னர், உடையார்பாளையம் வேளைப்போற் சோழநாட்டுப் பகுதிகளை ஆண்டிருக்கலாம். ''நாற்படை வன்னியர்'' (கல்லா. ருஎ:கரு) என்னுந் தொடரில், வன்னியர் என்பது குறுநில மன்னரையே குறிக்கின்றது. கடம்பர் என்னும் சொல்லைப்போல் வன்னியர் என்பதையுங் கொண்டால், அது தென்சொல்லேயாகும். கிறித்துவிற்குப் பிற்பட்ட காலத்திலேயே, வடசொல் தமிழரசர் பெயர் வழக்கிற் புகுந்தது; குலப் பிரிவும் தலையெடுத்தது.

இனி, வன்னியன் என்னும் சொல், கள்ளர் வலையர் முதலிய சிலகுலத்தாரின் பட்டப் பெயராக வழங்குவதையும், அறிதல் வேண்டும்.

சத்திரியன் (க்ஷத்ரிய) என்னும் வடசொல், வல்லபம் என்னும் பொருளதே. ஆதலால், வன்னியர்குல வல்லபர் என்று வழங்குவதே, இக்காலத்திற் கேற்றதும் மோனையழகு அமைந்ததுமாகும்.

பறம்பன்

இடம்—திருநெல்வேலி மதுரை புதுக்கோட்டை.

தொழில்—தோல் வேலையும் சுண்ணாம்புக்கல் சுடுதலும். செருப்புத் தைக்கும் தமிழக் குலத்தான் இவனே. செம்மான் (சருமன்) என்பது வடசொல்.

பறையன்

பெயர்—பறையன், புலையன்.

தொழில்—பறையடித்தல்; பறையறைந்து விளம்பரஞ் செய்தல், முரட்டுத்துணி நெய்தல், கூலிவேலை செய்தல், பிணஞ்சுடுதல்.

பிரிவு—பல புறமணப் பிரிவுகள்.

பட்டம்—சாம்பான், மூப்பன், பிள்ளை.

பாணன்

பெயர் விளக்கம்—பண் = பாட்டு, இசை. பண்—பாண்—பாணன் = பாடகன், இசைத் தொழிலாளன்.

தொழில்—பண்டு: வாய்ப்பாட்டு, குழலிசை, யாழிசை.

இன்று: தையலும் கூத்தும் (தமிழ்நாடு).

குடை கட்டல், மீன் பிடித்தல், பேயோட்டல் (மலையாள நாடு).

பட்டம்—பணிக்கன்.

மறவன்

இடம்—பாண்டிநாடு.

தொழில்—பண்டு: போர்த் தொழில்.

இன்று: காவல், பயிர்த்தொழில், கல்வித்தொழில்.

௩௮ பிரிவுகள்—நாட்டார், மணியக்காரர், காரணர், கொத்தளர், சீத்தல், சேர்வைகாரர், தோலர், பண்டாரம், வேடங்கொண்டார், செட்டி, குறிச்சி, வேம்பன் கோட்டை, செம்பிநாடு, குன்றமான் நாடு, இராமன் நாடு, ஆப்பன் நாடு, கொங்கணர், அம்பொனேரி, வல்லம்பர், இவுளி, வன்னியர், கிள்ளை, ஓரியூர், வெட்சி, கரந்தை, வஞ்சி, உழிஞை, தும்பை, உப்புக்காடு, அஞ்சு கொத்து, கொண்டையன் கோட்டை, தொண்டைநாடு, சிறுதாலி, பெருந்தாலி, பாசிகட்டி, கன்னிகட்டி, கயிறுகட்டி, அணிநிலக் கோட்டை.

௫ நாடுகள்—செம்பிநாடு, அம்பநாடு, கிழவைநாடு, அகப்பாநாடு, ஆமைநாடு.

௫ கோட்டைகள்—செம்பிநாட்டுக் கோட்டை, கொண்டையன் கோட்டை, கருத்தக் கோட்டை, செகக்கோட்டை, அணிநிலக்கோட்டை.

௫௦ கிளைகள்—செம்பியன், வெட்டுவன், வீரமன், அரசன், வீரமுடி தாங்கினான், நாட்டுக்குழைத்தான், மரிக்கார், வடக்கு, அறியாதான், கோபாலன், மங்கலம், சுந்தரபாண்டியன், கங்கை, பிச்சை, தொண்டைமான், முத்துக்கினியான், வீணியன், தேரூர்வான், கம்பத்தான், கிழவி, மருவீடு, வாப்பா, நாச்சாண்டி, அமர், கருப்புத்திரன், வெட்டியான், மாப்பான சம்பந்தன், சேதுரு, அளவண்டன், சங்கரன், அகத்தா, நாலாப்பிரை, நங்கண்டா, பாச்சாலன், சாலா, இராக்கி, வன்னி, பண்டாரம், விடிந்தான், கருங்குளத்தான், பறையன்குளத்தான், மகுடி, அம்மியடுக்கி, அடுகலை, எருமைக்குளத்தான், கீரைக்குடியான், இத்தி, விளிந்திட்டான், வயநாடு, வெம்பக்குடி.

கொண்டையன்கோட்டையார் கொத்தும் கிளையும்—ஒன்பது கொத்தும் பதினெண் கிளையும்:

கற்பகக் கொத்து — மருதீசர் கிளை, அகத்தீசர் கிளை.
கமுகங் கொத்து — வீணியன் கிளை, பேர்பெற்றான் கிளை.
மல்லிகைக் கொத்து — சேதா கிளை, வாள்வீமன் கிளை.
முந்திரிக் கொத்து — வெட்டுவன் கிளை, அழகுள்ள பாண்டியன் கிளை.
ஏலக் கொத்து — குடையன் கிளை, அரசுமான் கிளை.
மிளகுக் கொத்து — செகமண்டலாதிபன் கிளை, வீர முடி தாங்கினான் கிளை.
நற்சீரகக் கொத்து — நாட்டை வென்றான் கிளை, தருமர் கிளை.
தக்காளிக் கொத்து — சங்கரன் கிளை, சாத்தன் கிளை.
தென்னங் கொத்து — ஔவை கிளை, சாம்புவன் கிளை.

பட்டம்—தேவன், தலைவன், கரையாளன், சேர்வைகாரன்.

முத்தரையன் (முத்திராசு, முத்திரியன்)

வேளிர் (குறுநில மன்னர்) பதவியும் விருந்தோம்பி வேளாண்மை செய்யும் இயல்புங் கொண்ட முத்தரையர் என்னும் வகுப்பார், கூ-ஆம் நூற்றாண்டிலேயே தமிழ்நாட்டிலிருந்தமை,

''பெருமுத் தரையர் பெரிதுவந் தீயும்
கருனைச்சோ றார்வர் கயவர்'' (நாலடி. உ00),

''நல்கூர்ந்தக் கண்ணும் பெருமுத் தரையரே
செல்வரைச் சென்றிரவா தார்.'' (ஷ உகூசு),

என்னும் நாலடிப் பகுதிகளால் அறியக் கிடக்கின்றது.

அவர் தஞ்சைக்கும் புதுக்கோட்டைக்கும் இடைப்பட்ட நிலப்பகுதியை ஆண்டு வந்தவர் என்பது, செந்தலைக் கல்வெட்டால் தெரிய வருகின்றது. பல்லவர் கீழ்ப்பட்டிருந்த சோழர், தஞ்சையை ஆண்டுவந்த பெரும்பிடுகு முத்தரையனை வென்ற செய்தி, திருவாலங்காட்டுச் செப்பேட்டிற் குறிக்கப்பெற்றுள்ளது.

இன்று தஞ்சை திருச்சி மாவட்டங்களிற் பயிர்த்தொழில் செய்து வாழும் முத்திரியர் என்பார், பண்டை முத்தரையர் வழியினரே.

தஞ்சை மாவட்டத்திலுள்ள செம்பிய முத்தரையர் என்னும் பட்டங்கொண்ட கள்ளர் வகுப்பினர், முத்தரையரின் படைமறவர் வழிவந்தவராகவே யிருத்தல் வேண்டும்.

கடைக்கழகக் காலத்திற் புல்லியும் பிற்காலத்தில் திருமங்கையாழ்வாரும் போன்ற கள்வர் கோமான்கள், பலர் இருந்தமை வெள்ளிடைமலை. ஆயின், முத்தரையர் வேளிர் மரபினர் என்பதே நடுநிலை முடிபாம்.

முதலியார்

குலங்கள்—(க) வேளாண் முதலியார் (மூவேந்தர் காலத்திற் படைமுதலியாராய் (படைத்தலைவராய்) இருந்தவரின் வழியினர்).

(உ) செங்குந்த முதலியார் அல்லது கைக்கோள முதலியார் (சோழர் படைமறவராகவும் படைத்தலைவராகவும் இருந்தவரின் வழியினர்).

(ங) அகம்படிய முதலியார் (கொத்த வேலை செய்பவர்).

பட்டங்கள்—(க) இலங்கை யரசியலார் வழங்கும் சிறப்புப் பட்டம்.

(உ) தஞ்சை மாவட்டச் சமணருள் ஒரு சாரார்க்கு வழங்கும் பட்டம்.

வண்ணான்

பெயர் விளக்கம்—ஆடைகளை வெளுத்து வண்ணமாக்குபவன்.

பெயர்கள்—வண்ணான், வண்ணத்தான், இரங்கொல்லி (ஏகாலி), காழியன்.

பிரிவு—இடம் பற்றியது: பாண்டிய வண்ணான், சோழிய வண்ணான், கொங்க வண்ணான்.

நிலைமை பற்றியது: தீண்டுவான் × தீண்டாதான்.

வல்லம்பன்

இடம்—தஞ்சை திருச்சி மதுரை மாவட்டங்கள்.

தொழில்—பயிர்த் தொழில்.

தலைவன் பட்டம்—சேர்வைகாரன்.

குலப் பட்டம்—அம்பலகாரன்.

வலையன்

பெயர்—வலையன், வலைகாரன், வேடன், சிவியான், குருவிக்காரன்.

தொழில்— வலை வைத்துப் பறவை விலங்கு பிடித்தல், ஆறு குளங்களில் மீன் பிடித்தல்.

பிரிவு—பல அகமணப் பிரிவுகள்.

தலைவன் பட்டம்—அம்பலகாரன், கம்பளியன்.

குலப் பட்டம்—மூப்பன், சேர்வை, அம்பலகாரன், வன்னியன்.

வாணிகன்

வகை—அறுவை வாணிகன் (சவளிக் கடைக்காரன்), கூல வாணிகன் (தவசக் கடைக்காரன்), பொன் வாணிகன் (காசுக் கடைக்காரன்), ஊன் வாணிகன் (இறைச்சிக் கடைக்காரன்).

வாணியன்

வாணிகன்—வாணியன்.

வகை—(க) எண்ணெய் வாணியன் (வாணியன், செக்கான், சக்கரத்தான்).

(உ) இலை வாணியன் (கொடிக்கால் வேளாளன்).

பட்டம்—மூப்பன், பிள்ளை.

வில்லி

வேடருள் ஒரு பிரிவான் (வில்வேடன்).

வெள்ளாளன்

உழுதுண்ணும் வேளாளனாகிய காராளனுக்கு எதிரானவன், உழுவித்துண்ணும் வேளாளனாகிய வெள்ளாளன். ஒ. நோ: கருங்களமன் × வெண் களமன்.

வகை—(க) பாண்டி(ய) வெள்ளாளன்.

பிரிவு—கார்காத்த வெள்ளாளன், சிவனிய (சைவ) வெள்ளாளன், கோட்டை வெள்ளாளன், நங்குடி வெள்ளாளன், அரும்பூர் (சிறுகுடி) வெள்ளாளன், நீறுபூசி வெள்ளாளன்.

(உ) சோழிய வெள்ளாளன்.

(௩) தொண்டை மண்டல வெள்ளாளன்.

(௪) துளுவ வெள்ளாளன்.

பட்டம்—பிள்ளை.

(௫) கொங்கு வெள்ளாளன்.

பிரிவு—ஆறை நாடு, ஒருவங்க நாடு முதலிய ௨௪ நாடுகள். அந்துவன், ஆதி முதலிய ௬௦ குலங்கள்.

தலைவன் பட்டம்—நாட்டுக் கவுண்டன், பட்டக்காரர், மன்றாடியார்.

குலப் பட்டம்—கவுண்டன்.

காமிண்டன்—கவுண்டன். மிண்டு = வலிமை. மிண்டன்—வல்லோன். காமிண்டன் = காவலன், தலைவன்.

காமிண்டன்—காவண்டன்—கவண்டன்—கவுண்டன்.

(௬) அகம்படிய வெள்ளாளன்.

"கள்ளன் மறவன் கனத்தால் அகம்படியன்
மெள்ளமெள்ள வந்து வெள்ளாளன் ஆனானே."

(௭) காரைக்காட்டு வெள்ளாளன்.

(௮) அரும்புகட்டி வெள்ளாளன்.

(௯) கும்பிடு சட்டி வெள்ளாளன்.

(௧௦) ஆறுநாட்டு அல்லது மொட்டை வெள்ளாளன்.

(௧௧) மலைகாணும் வெள்ளாளன்.

(௧௨) சங்குத்தாலி வெள்ளாளன்.

வேடன்

தொழில்—வேட்டையாடல்.

பட்டம்—நாய்க்கன்.

வேட்டுவன்

வகை—(௧) மலை வேட்டுவன்.

தொழில்—வேட்டையாடல், பயிரிடல்.

பட்டம்—நாய்க்கன், கவுண்டன்.

(௨) பாலை வேட்டுவன் (பண்டைக் காலத்தான்).

மறைந்த குலங்கள்

இறங்குசாத்து (செட்டிகளுள் ஒரு சாரார்), எயினர் (பாலை வாணர்), கணவாளன், நாட்டார் (தென்னார்க்காட்டு உழவர் வகுப்பார்), மழவர் (மழநாட்டுப் போர் மறவர்), மறமாணிக்கர் (மறக்குடியினர்) முதலியன. இறவுளன், கடம்பன், களப்பாளன், காடவன், காடுவெட்டி முதலியனவும் மறைந்த குலங்களே.

மலை வாழ் குலங்கள்

காடர் (ஆனைமலை), குன்றுவர் (பழனிமலை), பழியர் (குடமலை), மலையாளி (சேரவரையன்மலை, பச்சைமலை, கொல்லி

மலை), மலசர் (ஆனைமலை), மன்னான் (குடமலை), முதுவர் (நீலமலை, ஏலமலை)' முதலியன.

புதுக் குலங்கள்

புளியங்காரர் (வடார்க்காட்டு ஆம்பூர் வட்டத்திற் புளியம் பழக் குத்தகை யெடுப்பவர்), வளுவாதியர் (திருச்சி புதுக்கோட்டை வட்டார வலையருள் ஒரு பிரிவினர்).

மத மாற்றத்தால் தோன்றிய குலங்கள்

சமணர், பவுத்தர், கிறித்தவர், முகமதியர்.

மொழி மாற்றத்தால் தோன்றிய குலங்கள்

ஆங்கிலம்—சட்டைக்காரர்.

திரவிடம்—(க) சேரநாட்டுத் தமிழக் குலங்கள்.

(உ) கருநட குடக துளு நாட்டுத் தமிழக் குலங்கள்.

(ங) வடுக (தெலுங்க) நாட்டுத் தமிழக் குலங்கள்.

(ச) நீலமலைத் தமிழக் குலங்கள்.

மூவகைத் திரவிடக் குலங்கள்

(க) பெயர் மாறாதவை: எ—டு: கம்மாளன், பாணன், அடுத்தோன் (குடிமகன்), வெளுத்தேடன் (வண்ணான்).

(உ) பெயர் திரிந்தவை: எ—டு: இடிக, கொறச்ச, சோடர்.

(ங) பெயர் மாறியவை: எ—டு: ஒக்கலிக், குருப்பு, மங்கல (வாடு).

குல முயர்த்தும் வழிகள்

ஊண்—புலால் மறுத்தல், பச்சரிசிச் சோறுண்ணல்.

உடை—பிராமணர் போற் கச்சங் கட்டுதல், பிராமணர் அணியும் ஆடையே அணிதல்.

அணி—ஆடவர் பூணூல் அணிதல், பெண்டிர் நூற்கயிற்றில் தாலி கோர்த்தல்.

குலப் பெயர்—குலப்பெயரை மாற்றுதல் அல்லது பட்டப் பெயரைக் குலப்பெயராக ஆளுதல்.

ஆட் பெயர்—வர்மன் குப்தன் என்னும் இறுகள் கொண்ட வடசொற் பெயர் பூணல்.

பட்டம்—பிள்ளை, முதலியார், செட்டியார் என்னும் பட்டங் கொள்ளுதல்.

மணவுறவு—மேற்குலத்திற் பெண் கொள்ளல்.

மொழி—இயன்றவரை வடசொற் கலந்து பேசுதல், சமற்கிருதங் கற்றல், சமற்கிருத நூலெழுதுதல் அல்லது செய்யுளியற்றல்.

பழக்கவழக்கம்—ஆடவர் காலையிற் சந்தியா வந்தனஞ் செய்தல், கைம்பெண் மண மின்மை.

பூசாரி—இருவகைச் சடங்கிற்கும் பிராமணனையே பூசாரியாகக் கொள்ளுதல்.

ஆரியத்தொடர்புக்கதை—குல முதல்வன் வேள்வியில் தோன்றினதாகவோ, ஆரியனுக்குப் பிறந்ததாகவோ, கதை கட்டிக் கொள்ளுதல்.

ஒழுக்கம்—பிராமணனுக்குத் தானம் அல்லது தொண்டு செய்தல், இயன்றவரை பிராமணர் சடங்கைப் பின்பற்றல்.

சவ முடிவு—எரிப்பு.

இவற்றுள், எரிப்புத் தவிர, ஆரியச் சார்பானவெல்லாம் அறியாமையாலும் அடிமைத்தனத்தாலும் நேர்வனவே. மக்கள் தொகைமிக்க இக் காலத்தில், புதைப்பினும் எரிப்பே பொருளாட்சிச் சிக்கனத்திற் கேற்றதாகும்.

குலப் பட்டம் தோன்றிய வகைகள்

(க) முன்னோர் பதவி—(படை) முதலியார், படையாட்சி.

(உ) முன்னோர் வேந்தனாற் பெற்ற சிறப்பு—ஏனாதி, காவிதி, வேள்—வேளான், அரசு, எட்டி—செட்டி, முதலி, பிள்ளை.

(ங) முன்னோர் அருஞ்செயல்—புலிகடிமால், களம் வென்றான்.

(ச) முன்னோர் கொடிவழி—அதிகமான், மலையமான்—மலைமான், வாணன் (வாணகோவரையன்), முத்தரையன் (முத்துராசு).

(ரு) ஊர்த்தலைவன் அல்லது குடித் தலைவன் பட்டம்—நாடான், நாட்டான், நாட்டாண்மைக்காரன், ஊராளி, கரையாளன், அம்பலகாரன், மன்றாடி, குடும்பன், கவுண்டன், உடையான்.

(சா) தொழில்—பண்ணையாடி, மந்திரி, ஓதுவார், குருக்கள்.

(எ) தொழிற் கருவி—சாம்பான் (சாம்பு = பறை).

(அ) அறிவு—புலவன், பண்டிதன், பண்டாரம்.

(கூ) சிற்றரசன் தொடர்பு—வளுவாதி, தொண்டைமான்.

(க0) பத்திநெறியாட்சி—ஆண்டி.

(கக) வேந்தன் தொடர்பு—தேவன்.

(கஉ) குலவுயர்த்தம்—பிள்ளை, முதலி.

ஆரிய அட்டுழியத்தால் தமிழர்க்கு விளைந்த கேடுகள்

(க) குமுகாயத் துறை

ஒற்றுமைக் கேடு: நால்வரணக் கட்டுப்பாடு.

புலனம் (விடயம்)	அந்தணர் (பிராமணர்)	அரசர் (சத்திரியர்)	வணிகர் (வைசியர்)	வேளாளர் (சூத்திரர்)
தொழில்—	ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்.	ஓதல், வேட்டல், ஈதல், நாடுகாத்தல், பொருதல், வேட்டையாடல்.	ஓதல், வேட்டல், ஈதல், உழவு, வணிகம், நிரைகாத்தல்.	மேல்மூவர்க்கும் தொண்டு செய்தல்.
உயர்வு—	அறுமடங்கு	மும்மடங்கு	இருமடங்கு	ஒருமடங்கு
மேம்படுதல்—	அறிவால்	வல்லமையால்	காசுகூலம் ஆநிரையால்	அகவையால்
பூணூல்—	பட்டு	சணல்	கம்பளி	—
பெண்கொள்ளல் —	நால்வரணத்திலும்	பின் மூவரணத்தில்	பின் இருவரணத்தில்	தன்வரணத்தில்.
பற்குச்சு நீளம் —	௧௨ விரல்	௧௧ விரல்	௧௦ விரல்	௯ விரல்
நலம்வினவல் —	குசலமாயிருக்கிறாயா?	நோயின்றியிருக்கிறாயா?	சேமமாயிருக்கிறாயா?	சுகமாயிருக்கிறாயா?
தானம் பெறும்போது பெற்றேன் எனல் —	உரக்க	மெல்ல	வாய்க்குள்	உள்ளத்தில்
அறங்கூறவையத்திற் சான்றாளனை ஏவல் —	சொல்	உண்மை சொல்	பொய்சொன்னால் ஆவும் விதையும் பொன்னும் உனக்குதவா.	பொய் சொன்னால் பிராமணனைக் கொன்ற பழி சாரும்.

புலனம் (விடயம்)	அந்தணர் (பிராமணர்)	அரசர் (சத்திரியர்)	வணிகர் (வைசியர்)	வேளாளர் (சூத்திரர்)
மனை நில மண்சுவை	இனிப்பு	கார்ப்பு	புளிப்பு	கசப்பு
மனைத்திசை	தெற்கு	மேற்கு	வடக்கு	கிழக்கு
மனைநோக்கு	வடக்கு	கிழக்கு	தெற்கு	மேற்கு
மரம்	வேம்பு	தேக்கு	இலுப்பை	வேங்கை
அளவுகோல் நீளம்	௨௯ விரல்	௨௭ விரல்	௨௫ விரல்	௨௪ விரல்
முழக்கோல்	மூங்கில்	ஆச்சா	தேக்கு	வேங்கை
மட்டக்கோல்	புளிமா	,,	,,	,,
சங்கு மரம்	கருங்காலி	வன்னி	தேக்கு	புளி
எழுத்து	பன்னீருயிர், கஙசஞடண	தநபமயர	லவழள	றன
காக்குந் தெய்வம்	நான்முகன், சிவன், திருமால், முருகன்	வேந்தன், கதிரவன், திங்கள்	குபேரன், வாரணன்	கூற்றுவன்
பாடப்பட வேண்டும் பா	வெண்பா	ஆசிரியப்பா	கலிப்பா	வஞ்சிப்பா
பாட்டோலை நறுக்குநீளம்	௨௪ விரல்	௨0 விரல்	௧௬ விரல்	௧௨ விரல்
கலம்பகச் செய்யுள் தொகை	௯௫	௯0	௫0	௩0
நாடகக் கதைத் தலைவனுக்குரிய பொருள்	அறம் பொருளின்பம் வீடு	அறம் பொருளின்பம்	அறம் பொருள்	அறம்
நாடகக்கதைத் தலைவனுக்குரிய சுவை	ஒன்பான் சுவையும்	இளிவரலும் சமநிலையும் ஒழிந்தவை	சமநிலை ஒழிந்தவை	பெருமிதமும் சமநிலையும் ஒழிந்தவை

சோழ பாண்டி நாடுகள்

பிராமணர் ஊர்ப் பெயர்	பிராமணர் தெருப் பெயர்	பிராமணர் வீட்டுப் பெயர்
சதுர்வேதிமங்கலம்	அக்கிரகாரம்	அகம்

சேர (மலையாள) நாடு

வீட்டுப் பெயர்கள்:—

பிராமணன்—இல்லம், மனை
நாயர் (பொது)—வீடு
,, (தலைவன்)—இடம், தரவாடு
கொல்லர், சாலியர், இழவர் முதலியோர்—புரை, குடி.
கோவிற் பணியாளன்—வாரியம், பூமடம்
பறையன் (குடி)—சேரி
செறுமன்—சாலை

இன இழிபு

முதல் நிலை: பார்ப்பாரும் அந்தணரும் (ஐயரும்) பிராமணரேயென்று, தமிழப் பார்ப்பாரும் அந்தணரும் தம் நிலையினின்று தள்ளப்பட்டமை.

இரண்டாம் நிலை: உழுவித்துண்ணும் வேளாளராகிய வெள்ளாளரும் சூத்திருள் அடக்கப்பட்டமை.

மூன்றும் நிலை: அரசரும் வணிகரும் உட்படத் தமிழரெல்லாரும் சூத்திரர் எனப்பட்டமை.

வெள்ளாளர் தம்மை உயர்த்தக் கருதிச் சற்சூத்திரர் என்று தம்மைச் சொல்லிக் கொண்டது சிரித்தற்குரிய செயலாம்.

நாலாம் நிலை: இசை நாடகத் தொழிலும் உழவுத் தொழிலுஞ் செய்துவந்த சில வகுப்பாரைத் தீண்டாராக்கி, அவரை ஐந்தாங் குலத்தினர் (பஞ்சமர்) என்றமை.

முதற்கண் பாணரும், பின்னர்ப் பறையரும், அதன்பின் பள்ளரும் தீண்டாராக்கப் பட்டனர். இறுதியிற் சான்றுரையும் தீண்டாராக்கத் தொடங்கினர். ஆயின், ஆங்கிலராட்சியும்

ஆங்கிலக் கல்வியும் கிறித்துவ நெறியும் பரவியதால், சான்ருர் விழித்தெழுந்து தப்பிக் கொண்டதுமன்றித் தம்மை உயர்த்தியுங் கொண்டனர்.

சில வகுப்பார் தீண்டாராகவே, அவருக்குப் பணி செய்யும் வண்ணனும் மஞ்சிகனும் (மயிர் வினைஞனும்) ஆகிய குடிமக்களும், பூசை செய்யும் பண்டாரமும், தீண்டாராயினர்.

ஐந்தாம் நிலை: தீண்டார் நாளடைவில் பிராமணருக்குக் காணுர் ஆக்கப்பட்டனர். அதனுல், தீண்டுவார் தீண்டார் அண்டார் காணுர் எனத் தமிழர் பிராமணரை நோக்கி நால்வகைப் பட்டனர்.

ஆரும் நிலை: தீண்டார் மேல்வகுப்பாரான தமிழருள்ளும் சிலர்க்கு ௩௦ எட்டுத் தொலைவிலும் சிலர்க்கு ௬௦ எட்டுத் தொலைவிலும், விலகி நிற்க நேர்ந்தது.

ஏழாம் நிலை: மலையாள நாட்டுத் தீண்டாருள் ஒரு வகுப்பாரான நாயாடிகள், தமிழருக்கும் அல்லது மலையாளியர்க்கும் காணுர் ஆயினர். தாழ்த்தப்படாத தமிழக் குலத்தாருள்ளும், உயர்வு தாழ்வு பற்றி ஒற்றுமைக் குலைவு ஏற்பட்டது.

பிராமணர், நிறத்திலும் துப்புரவிலும் நாகரிகத்திலும் தமக்கு எத்துணையும் தாழ்வில்லா மரக்கறி வெள்ளாளர் சமைத்ததையும் தொட்ட வுண்டியையுங் கூட, இன்றும் உண்பதில்லை. தமிழருள் மரக்கறி வெள்ளாளரே தலைமையாகக் கருதப்படுபவர். அவருந் தாழ்த்தப்பட்டதனுல், தமிழினம் முழுதும் தாழ்த்தப்பட்டதே யாகும். இன்று தாழ்த்தப்பட்டவர் என்று சொல்லப்படுபவர் உண்மையில் ஒடுக்கப்பட்டவரே யாவர்.

பிராமண வுண்டிச்சாலைகளில், முதலில், தமிழர் தலை வாயிலையடுத்த கூடத்திலும், பிராமணர் மறைவான உள்ளறையிலும், படைக்கப்பட்டனர். அன்று, பிராமணர் எச்சிலையி னின்று கறி வகைகள் எடுத்துத் தமிழர்க்குப் படைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. இதை வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார் கண்ணுரக் கண்டு, தாமரைத்திரு. வ. சுப்பையாப் பிள்ளையிடம் சொல்லியிருக்கின்றனர். நாகர்கோவில் வாணரான ஆறுமுகம் பிள்ளை என்னும் துவக்கப் பள்ளியாசிரியர், ஒரு பிராமண வுண்டிச்சாலைக்கு உண்ணச் சென்றபோது, இத்தகைய இழிசெயலைக் கண்ணுரக் கண்ட அவருடைய பிராமண நண்பர், அவரை உண்ண வேண்டாமென்று தடுத்ததாக, அவர் காலஞ் சென்ற

பர். இராசமாணிக்கனாரிடம் சொல்லியிருக்கின்றனர். தில்லை இராமசாமிச் செட்டியார் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் திரு. சாமிநாத முதலியாரும், அவர் தந்தையார் ஒரு பிராமணர் வீட்டில் இத்தகைய இழிநிலைக்கு ஆளாக விருந்து தப்பியதாக, என்னிடம் சொன்னார்.

இந்நூற்றுண்டுத் தொடக்கத்தில், தில்லையில் ஒரு பிராமண உண்டிச்சாலையில், 'பிராமணர்க்கு மட்டும்' என்று ஒரு பலகை தொங்க விடப்பட்டிருந்தது.

நான் கக௨அ—இலிருந்து கக௩௪ வரை இராசமன்னார்குடியிலிருந்த போது, கீரங்குடி கோபாலையர் உண்டிச்சாலையில், தமிழர்க்கு எடுப்புச் சாப்பாடும் இல்லாதிருந்தது.

தமிழர் இங்ஙனம் தாழ்த்தப்பட்டும், பிராமணனை எதிர்க்காது, தமக்குள்ளேயே, "என் குலம் உயர்ந்தது, உன் குலம் தாழ்ந்தது." என்றும், "எனக்கெதிரில் நீ செருப்பணிந்து நடக்கக் கூடாது." என்றும், "மேலாடையை வல்ல வாட்டாக அணியக் கூடாது." என்றும், "திருமண ஊர்வலத்தில் நீ பல்லக் கேறக் கூடாது." என்றும், "குடை கொடி பிடிக்கக் கூடாது." என்றும், பலவாறு பிதற்றிக் கலாமுங் கலகமுஞ் செய்து வருவாராயினர்.

வலங்கை இடக்கை வழக்காரம்

குலப் பட்டம், குடை கொடி பந்தம் முதலிய விருதுச் சின்னங்கள், வெண்கவரி வீச்சு, சிவிகை குதிரை முதலிய ஊர்தி, மேளவகை, தாரை வாங்கா முதலிய ஊதிகள், வல்ல வாட்டு, செருப்பு ஆகியவை பற்றிக் குலங்கட்கிடையே பிணக்கும் சச்சரவும் ஏற்பட்டதனால், கரிகாலன் என்னும் பெயர் கொண்டிருந்த வீர ராசேந்திரச் சோழன் (க0௬௩—க0௬௯) அவ்வழக்கைத் தீர்த்து வைத்ததாகத் தெரிகின்றது.

"காவிய மாகிய காமீகங் கண்டுகங் காகுலத்தோர்
ஓவிய பாத்திர ராக விருபத்து நான்குயர்ந்த
மேவிய கோட்டத் திலுங்கரி கால வளவன்மிக்க
வாவிய மேன்மை கொடுத்தளித் தான்றெண்டை
மண்டலமே."

என்பது, கஎ-ஆம் கஅ-ஆம் நூற்றாண்டிலிருந்த படிக்காசுப் புலவர் பாடியது.

சோழனுக்கு வலக்கைப் பக்கம் அமர்ந்திருந்த குலத்தார் வலங்கையர் என்றும், இடக்கைப் பக்கம் அமர்ந்திருந்த குலத்தார் இடங்கையர் என்றும், பெயர்பெற்றதாக உய்த்துணரலாம். பகைகொண்ட இருசாரார் ஒரே பக்கத்தில் இருந்திருக்க முடியாது.

இருகையிலும் பல குலத்தார் சேர்ந்திருப்பினும், வலங்கையில் வேளாளரும் இடங்கையிற் கம்மாளருமே தலைமையானவர் என்று கருத இடமுண்டு.

சோழராட்சிக்குப்பின் பல்வேறரசுகள் ஏற்பட்டதனாலும், பல புதுக் குலங்கள் தோன்றியதனாலும், ஆங்கிலர் அரசாட்சிக் காலத்தில் மீண்டும் வலங்கை யிடங்கைச் சச்சரவு கிளர்ந்தெழுந்தது. கஅ0௯-ஆம் ஆண்டு சூலை மீ உ௫-ஆம் பக்கல், செங்கழுநீர்ப்பட்டு மாவட்ட நயன்மைத் தீர்ப்பாளர் சார்சு கோல்மன் (George Colman) துரை, அவ்வழக்கைத் தீர்த்து ஒவ்வொரு குலத்தார்க்கும் உரியவற்றைத் திட்டஞ் செய்தார்.

வலங்கைக் குலங்கள்	**இடங்கைக் குலங்கள்**
வேளாளன்,	கம்மாளன்,
அகம்படியான்,	பேரிச் செட்டி,
இடையன்,	நகரத்துச் செட்டி,
சாலியன்,	கைக்கோளன்,
பட்டணவன்,	பள்ளி (வன்னியன்),
சான்றான்,	வேடன்,
குறவன்,	இருளன்,
குறும்பன்,	பள்ளன்,
வள்ளுவன்,	இரட்டைமாட்டுச்செக்கான்,
பறையன்,	
முதலியன.	முதலியன.

இடங்கையினும் வலங்கை பெருங்கை. மேளகாரன், கணிகை (தாசி), பணிசெய்வோன் முதலிய குலங்களில் இரு கையு முண்டு. ஒரு சில குலங்களில் ஆடவர் ஒரு கையும் பெண்டிர் ஒரு கையும் ஆவர். வடுக கன்னடநாடுகளிலும் இவ்வகுப்புக்கள் இருப்பதால், அந்நாட்டுப் பகுதிகள் ௧௧-ஆம் நூற்றாண்டிலும் தமிழ்நாடாயிருந்தமை அறியப்படும்.

''இத்தமிழ்நாட்டில் ஒவ்வொரு நகரத்திலும் சிற்றூரிலும் இடங்கை வலங்கையார் வசிப்பதற்கு வீதிகள் தனித்தனியே ஏற்பட்டிருக்கின்றன. ஒருவர் வசிக்குந் தெருவில் மற்றொருவர் வசிப்பதில்லை. சுபாசுபப் பிரயோசனங்களிலும் ஒருவரிருக்கும் வீதி வழியாக மற்றொருவர் ஊர்வலம் வருவதில்லை. பிரேதங் கொண்டு போவதில்லை. கருமாதியிலுமப்படியே. இருவருக்கும் பொதுவாயுள்ள வீதியில் போவதற்குத் தடையிராது. சுவாமிகளுக்கு உற்சவாதிகளும் அந்தந்தக் கட்சிகளிலுள்ள வீதிகளிலே தான் நடத்துவார்கள்.'' என்று ௧௯௦௧-ஆம் ஆண்டில் எழுதியுள்ளார் (வருண சிந்தாமணி, பக். ௫௦௨—௩).

கல்வியிழப்பு: வேதம் முதலிய பன்னூலொடு பல்கலையும், பிராமணர்க்கு ஊணுடையுடன் வேத்தியற் செலவிற் கற்பிக்கப் பட்டன. தமிழர்க்கு மூவேந்தரும் ஒரு கல்விச்சாலையும் ஏற்படுத்தவில்லை.

நடுநிலை நயன்மை யிழப்பு: மூன்றாங் குலோத்துங்கச் சோழன் ஒரு பிராமணக் குற்றவாளிக்குக் கொலைத் தண்டனை யிட்டதனால், அப்பிராமணன் ஆவி அவனை நெடுநாள் அலைக்கழித்ததென்று ஒரு கதை கட்டப்பட்டுள்ளது. மலையாள நாட்டிற் பிராமணனுக்குக் கொலைத் தண்டனை யில்லையென்று, சட்டமிருந்தது.

முன்னேற்றத் தடை: தமிழன் தன் முயற்சியினால் இம்மையில் தன் நிலைமையை யுயர்த்தினாலும், தன் குலத்தை மறுமையில் தான் மாற்ற முடியும் என்றும், சூத்திரன் பல பிறப்பில் தவஞ்செய்து வைசியனாகலாமென்றும், இங்ஙனமே வைசிய நிலையிலும் சத்திரிய நிலையிலும் முயன்ற பின்னரே இறுதியிற் பிராமணனாக முடியுமென்றும், ஒரு திரிவாக்கக் (Evolution) கொள்கை புகுத்தப்பட்டது. இதை நம்பி ஏராளமான

பொருளை வேள்வியிற் செலவிட்ட பேதையர் எத்தனையோ பேர்! இனி, ஆறு தாண்டலையும் கடல் கடத்தலையும் தடுத்தது அறிவு வளர்ச்சித் தடையாகும்.

(உ) பண்பாட்டுத் துறை

மறமிழப்பு: ‘‘கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்
புல்லாளே ஆய மகள்.’’ (கலித். ௧0௩).

என்று புகழப்பட்ட ஆயர் குலம், இன்று பெண்டிர் மட்டுமன்றி ஆடவரும் ஆட்டுக் குட்டிகள் என்னுமாறு, அடங்கியொடுங்கி யமைந்தது. அன்று கூற்றுவனும் நடுங்குமாறு கோவர் (ஆயர்) நடத்தி வந்த கொல்லேறு கோடல்விழா, இன்று மறவராற் சல்லிக்கட்டு என்னும் பெயரில் காட்சியளவாக நடைபெற்று வருகின்றது. பொதுவர் கல்லூரி அல்லது கோவர் கல்லூரி என்று அழகிய பெயரிடவும் துணிவின்றி, யாதவர் கல்லூரி என்று ஒரு வடநாட்டரசன் பெயர் பற்றிய வடசொல்லை ஆண்டுள்ளனர்.

பகுத்தறிவிழப்பு: தமிழருள் தலைமையான குலத்தானாகக் கருதப்படும் மரக்கறி வெள்ளாளன், பொற்கலத்தில் நன்னீர் கொடுப்பினும் குடிக்க மறுக்கும் பிராமணன், வெள்ளாளனின் மிகத் தாழ்ந்தவளாகக் கருதப்படும் இடைச்சி, பழமட்கலத்தில் தண்ணீர் கலந்து விற்கும் தயிரை, வானமுதம் போல் வாங்கிக் குடிப்பது கண்டும், தான் அவனின் தாழ்ந்தவனென்று மானமின்றிச் சொல்கின்றான்.

பிராமணரில்லா மற்ற நாடுகளிலெல்லாம் என்றும் மாறக்கூடிய தொழில் பற்றியே மக்கள் வகுப்புக்கள் ஏற்பட்டிருத்தல் கண்டும், பிராமணருள்ள இந்நாட்டில் மட்டும் குலங்கள் இறைவன் படைப்பென்று கருதுவது, பகுத்தறிவின்மையைத் தெளிவாகக் காட்டும்.

தன்மான மின்மை: முதற் குலோத்துங்கன் காலத்தில், பையற் பருவத்து ஆளவந்தார் வித்துவ சனகோலாகலன் என்னும் ஆக்கியாழ்வானோடு தருக்கித்து, அரசி வேத வுரைப்படி கற்பிழந்தவளென்று, வேத்தவையில் அரசன் முன் சொன்னதை அவையோர் ஒப்புக்கொண்டதும், அவ்வாறே

நச்சினார்க்கினியரும் தொல்காப்பியவுரை வரைந்திருப்பதும், கோழிக் கோட்டு மன்னரான சாமொரின் குடியினர் தாம் மணந்த பெண்டிரை முதல் முந்நாள் பிராமணன் நுகர விட்டதும், தமிழரின் அல்லது தமிழ வழியினரின் தன்மான மின்மைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாம்.

நெஞ்சுரமின்மை: திருவரங்கத்தில் அரங்கநாயகி மூக்குத்தியைத் திருடிய பிராமணப் பெண், அத்தெய்வம் ஏறியவளாக நடித்து, கழுநீர்ப்பானையினின்று அம்மூக்குத்தியை எடுத்துக் கொடுத்த போது, தஞ்சை விசயராகவலு நாயக்கர் தண்டியாது விட்டதும்;

இறுதியாக ஆண்ட திருவாங்கூர் மன்னர் இங்கிலாந்து சென்று மீண்டவுடன், அவரது பதுமநாபர் கோவிலுக்குத் தீவைத்த, பிராமணப் பூசாரியைத் தீக்கரணியம் வினவிய போது, அது மன்னர் மேனாடு சென்றதனாற் பொங்கிய தெய்வச் சினம் என்று விடையிறுத்ததைக் கேட்டு, வாளா விருந்ததாகச் சொல்லப்படுவதும்;

சென்ற ஆண்டு 'தென்மொழி' ஆசிரியர் பாவலர் பெருஞ்சித்திரனார், திருநெல்வேலித் திரவியம் தாயுமானவர் தென் மதக் கல்லூரித் திருவள்ளுவர் விழாவிற் சொற்பொழிவாற்றியபோது தடுத்ததும்; தமிழ திரவிடரின் நெஞ்சுரமின்மையைத் தெற்றெனத் தெரிவிக்கும்.

தமிழ்ப் பற்றின்மை: சில கட்சித் தலைவரும் பாவிசைப்பாளரும், கட்டாய இந்தியை ஏற்பதும் கோவில் தமிழ் வழிபாட்டைத் தடுப்பதும் தாய்மொழிப் பற்றின்மை யாலேயே.

(௩) மொழித்துறை

மொழியிழிபு: சிவனியம் மாலியம் என்னும் இரு மதமுந் தோன்றிய தமிழ், வழிபாட்டிற்குத் தகாத மொழியென்று தள்ளப் பட்டது.

சொல்லிழிபு: சோறு, தண்ணீர் முதலிய தூய தமிழ்ச் சொற்கள் பள்பறை வழக்கென்று தமிழராலும் பழிக்கப்பட்டன.

சொல் வழக்கு வீழ்வு: கழுவாய் (பிராயச்சித்தம்) சூள் (ஆணை) முதலிய நூற்றுக்கணக்கான அருமையான தமிழ்ச் சொற்கள், வழக்கு வீழ்த்தப்பட்டன.

சொல்லிறப்பு: ஆயிரக்கணக்கான இரு வழக்குத் தமிழ்ச் சொற்களும் இறந்துபட்டன. இறந்த சொற்கு என்றும் எடுத்துக் காட்டில்லை.

சொற்பொருளிழப்பு: உயிர் மெய் என்பது, ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர் வரைப்பட்ட உயிரொடு கூடிய மெய் (living thing). பிராணி என்னும் வடசொல் வழக்கினால், உயிர் மெய் என்னும் சொல் தன் பொருளை இழந்தது; உயிரி என்றொரு சொல்லுந் தோன்றவில்லை.

புஜம் என்னும் வடசொல் வழக்கினால், தோள் என்னும் தமிழ்ச்சொல் தன் பொருளை யிழந்து, தோள்பட்டையைக் குறித்து, சுவல் என்னும் தென்சொல்லை வழக்கு வீழ்த்தியும் உள்ளது.

தமிழையும் தமிழ்ச் சொற்களையும் போற்றிக் காக்கவேண்டுமென்னும் உணர்வு, இன்றும், முப்பல்கலைக் கழகத் துணைக் கண்காணகர்க்கும் கல்வியமைச்சர்க்கும் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர்க்கும் இல்லை.

(௪) இலக்கியத் துறை

பல்லாயிரக் கணக்கான முதலிரு கழக நூல்களும் பெயருமின்றி அழிக்கப் பட்டுவிட்டன. தொல்காப்பியமும் திருக்குறளுந் தவிர, கிறித்துவிற்கு முற்பட்ட எல்லா நூல்களும் இல்லாவாயின. பொதுவிலக்கியத்தைச் சேர்ந்த, பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் ஆகிய பாடற்றிரட்டுக்களும் கீழ்க்கணக்குப் பனுவல்களும் அல்லாது, அறிவியலும் கலையும் பற்றிய கடைக் கழகக் காலச் சிறப்பிலக்கியம் ஒன்றுகூட இன்றில்லை. பதிற்றுப்பத்து முதலும் ஈறும் இன்றி நிலைபெற்று விட்டது. அகத்தியம் முதுநாரை பரதம் ஆகிய முத்தமிழ்ப்பிண்ட நூல்களும், அவற்றிற்கு முந்திய முத்தமிழ் மாபிண்ட நூல்களும், இறந்துபட்டன.

பாலவநத்தம் வேள் பாண்டித்துரைத் தேவர், அரும் பாடுபட்டுத் தொகுத்து வைத்திருந்த ஆயிரக்கணக்கான அரிய பண்டைத்தமிழ் ஏட்டுச்சுவடிகளும், மதுரைத் தமிழ்ச் சங்கக் கட்டிடத்தில் ஐந்திலே ஒன்று வைக்கப்பட்டன.

திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமுமான உலக முதற்றாய் உயர்தனிச் செம்மொழியாம் தமிழ், சமற்கிருதக் கிளையும் பன்மொழிக் கலவையுமான புன்மொழியென்று, நாலரையிலக்கம் உருபா செலவிட்டுத் தொகுக்கப்பட்ட, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகர முதலியிற் காட்டப் பட்டுள்ளது.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகரமுதலித் திட்டம் ஏற்படுமுன், ஒரு தமிழ்ப் பேரகர முதலி தொகுக்க வேண்டு மென்றும், அதற்கு நேருஞ் செலவனைத்தும் புதுக்கோட்டை யரசு ஏற்றுக்கொள்ளு மென்றும், பாண்டித்துரைத் தேவர் தம் மிடமுள்ள புலவரைக் கொண்டு அப்பணியில் இடுபடவேண்டு மென்றும், அவருக்குப் புதுக்கோட்டையரசர் எழுதிவந்த நெடுநாள் எழுத்துப் போக்குவரவுடுக்கு, தமக்குப் பின் வந்த பிராமணரால் அகற்றப்பட்டு விட்டதென்று, ஓய்வுபெற்ற புதுக்கோட்டைத் தலைமை நடுத்தீர்ப்பாளர் சிவஞான முதலி யார் என்னிடம் சொன்னார்.

ஆரியக் கருத்துக்களைப் புகுத்தித் தமிழிலக்கியத்தை ஆரிய வண்ணமாக்குதற் பொருட்டே, தொல்காப்பியர் காலம் முதல், நூல்களும் நூலுரைகளும் பிராமணத் தமிழ்ப் புலவரால் இயற் றப்பட்டும் எழுதப்பட்டும் வந்திருக்கின்றன.

பிராமணர் அண்டிப்பிழைக்க வந்த அயலினச் சிறுகுழு வாராயிருந்தும், தமிழ்நாட்டுக் கோவில்களில், தமிழர்க்குப் பயன்படாவாறும், தமிழ்கெடுமாறும், பல கல்வெட்டுக்கள் வட மொழியிற் பொறிக்கப்பட்டுள்ளன.

(௫) மதத் துறை

கடவுள் மத மறைப்பு: ஊர் பேர் குணங்குறியின்றி எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளை, உருவமின்றி உள்ளத்திற் கண்டு தொழும் கடவுள் நெறியை, உலகில் முதன்முதல்

தெளிவாகக் கண்டவர் தமிழரேயாயினும், அதனாற் பிராமணர்க்குப் பிழைப்பில்லை யென்றும், தமிழர் அறிவொளி பெறக்கூடா தென்றும், அந்நெறி அடியோடு மறைக்கப் பட்டுள்ளது.

இறைவனொடு தொடர்பின்மை: சிவனியமும் மாலியமும் தூய தமிழ மதங்களா யிருந்தும், அன்பான தந்தையுடன் அவனுடைய அருமை மக்கள் நேரடியாய்ப் பேச முடியா வாறு, இடையில் ஓர் அயலான் நின்று தடுத்து, மக்கள் கருத்தை அல்லது விருப்பத்தைத் தானே அவர்கட்குத் தெரியாத அயன் மொழியில் தந்தைக்குத் தெரிவித்தல் போல், கோவிலிலுள்ள பரம திருத்தந்தையும் அருட்கடலு மான இறைவன் உருவிற்கு, தமிழர் தாமே தம் நெஞ் சார்ந்த அன்பு கனிந்த வணக்கத்தைத் தம் தாய்மொழி யில் தெரிவித்து வழிபட்டுப் படைத்து, பேரின்பப் பெரு மகிழ்ச்சிபெற முடியாவாறு, மேனாட்டினின்று வந்த பிரா மணன் இடைநின்று, படைப்புத் தேங்காயை வாங்கி யுடைத்து, தமிழர்க்குத் தெரியாத, தனக்குந் தெளிவாக விளங்காத, அரைச்செயற்கை இலக்கிய நடைமொழி யாகிய சமற்கிருதத்தில் தான் உருப்போட்டதைச் சொல்லி, அஞ்சலகத்திலும் வைப்பகத்திலும் (Bank) வரி யகத்திலும் பணங் கட்டியவர் திரும்புவதுபோல் வழிபட்ட வரைத் திரும்பச் செய்வது, எத்துணைக் கேடான தீவினை!

உயிரிழப்பு: சிறந்த சிவனடியாராக ஒழுகிய குற்றத்தினால், நந்தனார் என்னுந் தூயர், பட்டப் பகலிற் பலர் காணச் சுட்டெரிக்கப் பட்டார். இத்தகைய கொடிய நிலைமையும் ௧௯௪௦-ஆம் ஆண்டுவரை தென்னாட்டிலிருந்து வந்தது.

(௬) பொருளாட்சித் துறை

பொது விழப்பு: பிராமணர், மூவேந்தரிடத்தும் கோவலன் போன்ற செல்வரிடத்தும் பல்வகைத் தானமாகப் பெற்ற, பொன்னிற்கும் ஆவிற்கும் நிலத்திற்கும் பிற பொருள்கட்கும் கங்கு கரையில்லை.

சில வகுப்பாரிழப்பு:

> "குழலினும் யாழினும் குரன்முத லேழும்
> வழுவின் றிசைத்து வழித்திறங் காட்டும்
> அரும்பெறன் மரபிற் பெரும்பா ணிருக்கையும்"

என்று (சிலப். ரு:௩௫—எ) இளங்கோவடிகளாற் புகழ்ந்து பாடப்பெற்ற பாணர், மாட்டிறைச்சி யுண்டதனாற் புலையர் என்று இழித்திடப்பட்டு, ௧௧–ஆம் நூற்றாண்டிற்குப்பின் தம் தொழிலையும் வருவாயையும் இழந்தனர்.

ஐரோப்பியரும் அவர் வழியினரும் அராபியரும் யூதரும் இன்றும் மாட்டிறைச்சி யுண்பவரே. ஆரியப் பூசாரியரும் வேதக்காலத்தில் அதை விரும்பி யுண்டவரே.

தவத்திற் சிறந்த பரத்துவாசர், தம் புதல்வனுடன் காட்டில் வாழ்கையில், விருது என்னும் தச்சனிடம் பல ஆக்களை வாங்கிக் கொன்று தின்றார்.

செம்மறியாட்டிறைச்சியால் நான்கு மாதம் வரையும், வெள்ளாட்டிறைச்சியால் ஆறு மாதம் வரையும், காட்டெருமைக்கடா விறைச்சியால் பத்து மாதம் வரையும், தென்புலத்தார் (பிதுர்க்கள்) பொந்திகை(திருப்தி)யடைகின்றனர் என்று, மனுதரும சாத்திரத்திற் கூறப்பட்டுள்ளது.

பாணர் இசைத்தொழிலை இழந்ததனால், பல இசைத் தமிழ் நூல்களும் இறந்தொழிந்தன. சதுரப்பாலை திரிகோணப்பாலை என்னும் பண் திரிவு முறைகளையும், அகநிலை மருதம் புறநிலை மருதம் முதலிய பண் நுட்பங்களையும், விளக்குவார் இன்று எவரும் இல்லை.

சென்னை இராயபுரம் பாதாள விக்கினேசுவரர் கோவில் தெருவிலுள்ள சுப்பிரமணியம் என்னும் இசைவாணர், புதுக்கோட்டைத் தட்சிணாமூர்த்தியார் போற் கஞ்சுரா இயக்கினும், ஒரு முடிதிருத்தாளன் மகனார் என்பது பற்றி, அவரை அரங்கிற் கழைப்பார் ஒருவருமில்லை.

தனித் தமிழ்ப் புலவர் இழப்பு: மறைமலையடிகள் வழிப்பட்ட தனித் தமிழ்ப் புலவர், எத்துணைப் புலமையும் ஆராய்ச்சியும் உடையவராயிருப்பினும், ஆரியத்திற்கு மாறானவர் என்னுங் கரணியத்தால், அரசியல் திணைக்களத்திலும் பல்கலைக் கழகத்திலும் அமர்த்தப் பெறுவதில்லை.

ஊர்ப் பெயர் மாற்றம்

தமிழ்நாட்டை ஆரியப்படுத்தற்குப் பல ஊர்ப் பெயர்கள் வட சொல்லாக மாற்றப்பட்டுள்ளன.

எ—டு:

தென்சொல்	வடசொல்
குடமூக்கு—குடந்தை	கும்பகோணம்
குரங்காடு துறை	கபித்தலம்
சிலம்பாறு	நூபுரகங்கை
சிற்றம்பலம்	சிதம்பரம்
பழமலை, முதுகுன்றம்	விருத்தாசலம்
புள்ளிருக்கு வேளூர், வினைதீர்த்தான் கோவில்	வைத்தீசுவரன் கோவில்
பொருநை	தாம்பிரபரணி
மயிலாடுதுறை	மாயூரம்
மரைக்காடு—மறைக்காடு	வேதாரணியம்

வடமொழியை யெதிர்த்து வெல்லும் வலிமை தமிழுக்கே யிருப்பதால், ஆரியக் கட்டுப்பாடு தமிழ் நாட்டிலேயே மிகக் கடுமையாகப் புகுத்தப்பட்டுள்ளது.

III. தெளிநிலைக் காண்டம்

திருவள்ளுவர் தமிழரின் கண்திறப்பிப்பு

(தோரா. கி. மு. உ-ஆம் நூற்.)

''அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்.'' (குறள். ௩௦)

''அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்.'' (ஷை ௪௬)

''இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.'' (ஷை ௮௧)

''சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி.'' (ஷை ௧௧௮)

''ஒழுக்க முடைமை குடிமை யிழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.'' (ஷை ௧௩௩)

''மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.'' (ஷை ௧௩௪)

''அவிசொரிந் தாயிரம் வேட்டலன் றொன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று.'' (ஷை ௨௫௯)

''அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்.'' (ஷை ௫௪௩)

''இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு.'' (ஷை ௫௪௫)

''ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்.'' (ஷை ௫௬௦)

''உழுவா ருலகத்திற் காணியஃ தாற்ரு(து)
எழுவாரை யெல்லாம் பொறுத்து.'' (ஷை ௧0௩௨)

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.'' (ஷை ௧0௩௩)

"இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்." (குறள். ௧௦௩௫)

"ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்(கு)
இரவி னிழிவந்த தில்." (ஷை ௧௦௬௬)

நக்கீரர் தமிழ்ப் பெருமை காப்பு
(கி.பி. ௨-ஆம் நூற்றாண்டு.)

"ஆரிய நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானைச் — சீரிய
அந்தண் பொதியி லகத்தியனா ராணையாற்
செந்தமிழே தீர்க்க சிவா."

நாற்பால் பற்றி ஔவையார் சோழனுக்குக் கூறியது
(தோரா. ௧௨-ஆம் நூற்.).

"நூலெனிலோ கோல்சாயும் நுந்தமரேல் வெஞ்சமராம்
கோலெனிலோ வாங்கே குடிசாயும் — நாலாவான்
மந்திரியு மாவான் வழிக்குத் துணையாவான்
அந்த வரசே யரசு."

தமிழிலக்கணச் சிறப்பை எடுத்துரைத்த முனிவர்

"கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமிழ் ஏனை
மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ."

என்று பாடினார், திருவிளையாடற் புராண ஆசிரியர் பரஞ்சோதி முனிவர் (௧௬-ஆம் நூற்.).

தென்மொழியின் தாழ்வு நீக்கிய முனிவர்

"இருமொழியும் நிகரென்னும் இதற்கையம் உளதேயோ"

என்று பாடி, வடமொழியையும் தென்மொழியையும் சமப் படுத்தியவர் சிவஞான முனிவர் (௧௮-ஆம் நூற்.).

ஆங்கிலராட்சியும் அதன் நன்மைகளும்

ஆங்கிலராட்சி ௧௮-ஆம் நூற்றாண்டிடையில் தோன்றி, இவ்விருபதாம் நூற்றாண்டிடையில் நீங்கியது. அரசினர் அலுவலகங்களிலும், பெருஞ்சாலைகளிலும், பொதுவிடங்களிலும், புகைவண்டிகளிலும், மின்வண்டிகளிலும், உயர்கல்வி நிலையங்களிலும், வகுப்பு வேற்றுமை நீக்கப்பட்டது. ஆங்கிலக் கல்வி எல்லா வகுப்பார்க்கும் பொது வாயிற்று. எல்லாத் துறையிலும், பொய்யும் புரட்டும் கட்டுங் கதையுமான ஆரியத் தொல்கதை (புராண) முறைக் கல்வியின்றி, உண்மையும் அகக்கரண வாற்றலை வளர்ப்பதும் அறியாமையையும் அடிமைத் தனத்தையும் அறவே அகற்றுவதுமான, அறிவியற்கல்வி புகட்டப் பட்டது. கல்வித் திறமை மிக்க அனைவர்க்கும் வகுப்பு வேற்றுமையின்றிப் படிப்புதவி (Scholar-ship) யளிக்கப்பட்டது. இந்தியா முழுதும் படிப்படியாக ஒரு பேரரைய ஆட்சிக்குட் கொண்டுவரப் பட்டது. ஆங்கிலராட்சியிருந்த, இலங்கை காழகம் (பர்மா) மலையா தென்னாப்பிரிக்கா முதலிய பல வெளிநாடுகளிலும், இந்தியர் குடியேறித் தமக்கேற்ற தொழிலும் அலுவலும் பெற்று ஏந்தாக வாழ்ந்தனர். ஆங்கில வரசு மதத்துறையில் தலையிடவேயில்லை. குல மத கட்சியினவேறுபாடின்றி, எளியார்க்கும் வலியார்க்கும் ஏழைகட்கும் செல்வர்க்கும், ஒரே நடுநிலை நயன்மை (நீதி) வழங்கப்பட்டது. இதனால், ஆங்கிலராட்சி நேர்மையையும் புதுச்சேரி காரைக்கால் தெரு நேர்மையையும் ஒருங்கு நோக்கி, "பிரிட்டிசு நீதியும் பிரெஞ்சு வீதியும்." என்று பழமொழியாக வழங்குமாறு, பொதுமக்கள் புகழ்ந்து பாராட்டினர். குமுகாய இன்ப வாழ்க்கைக்கும் மக்கள் முன்னேற்றத்திற்கும் முட்டுக்கட்டையாயிருந்த, உடன்கட்டையேறல், செடிற்குத்தல் (Hook-Swinging), குழந்தை மணம், நரக் காவு (human sacrifice) முதலிய, குருட்டுப் பழக்க வழக்கங்களும்; தக்கர், பிண்டாரியர், தீவட்டிக் கொள்ளைக்காரர் முதலிய கொடிய 'கயவர் கூட்டங்களும்; அறவே ஒழிக்கப் பட்டன. அருமையான அஞ்சல் துறையும், குன்றந்த செலவில் விரைந்து வழிச் செல்லும் இருப்புப் பாதைகளும், அழகிய மாட மாளிகைகளும் மலைநகர்களும், இந்தியாவெங்கும் அமைந்தன. உயிருக்கும் பொருட்கும் சேதமின்றி அமைதியாக வாழுமாறு சிறந்த ஊர் காவலொழுங்கும், கலகமும் போருங் கனவிலுங் காணாவாறு மாபெரும் படையமைப்பும், ஏற்பட்டன. எல்லாத் திணைக்களங்

களிலும் (departments), இந்தியர் தத்தம் கல்விக்கும் திறமைக்கும் தக்கவாறு பொறுப்பு வாய்ந்த பதவிகளில் அமர்த்தப்பெற்றனர். இந்தியா முழுதும் ஒன்றுபட்டு நாளடைவில் தன்னுட்சி பெறுமாறு, இந்தியத்தேசியப் பேராயம் (Indian National Congress) கியூம் (hume) என்னும் ஆங்கிலப் பெருமகனுரால் ௧௮௮௫-இல் தோற்றுவிக்கப் பெற்றது. அதன் பயனுக, பேராயத் தலைவர்கள், ஆங்கிலர் நேரடியாட்சி மண்டலங்களில் மட்டுமன்றி, எல்லா உள்நாட்டு மன்னர் நாடுகளுள்ளும் உரிமையொடும் பாதுகாப்பொடும் புகுந்து, விடுதலைப் போராட்டத்திற்கு விதைகளை வாரியிறைத்து வந்தனர். இறுதியில், ௧௯௪௭-ஆம் ஆண்டு முழு வெற்றியும் பெற்றனர். தந்தை மகனிடத்திற் சொத்தையும், அரசன் இளவரசனிடத்தில் நாட்டையும், தகுந்த பருவத்தில் ஒப்படைப்பதுபோல், ஆங்கிலரும் பேராயத் தலைவரிடம் இந்தியாவை ஒப்படைத்துவிட்டு, அமைதியாய் அகன்றனர். அதனுற் பிரெஞ்சியரும் போர்த்துக்கீசியரும் சற்றுப் பிந்தி இந்தியாவை விட்டு நீங்க நேர்ந்தது.

ஆங்கிலருக்கும் பிராமணருக்கும் வேற்றுமை

	ஆங்கிலர்	பிராமணர்
(க)	வாணிகத்திற்கு வேண்டும் பொருளொடும், பாதுகாப்பிற்கு வேண்டிய படையொடும், ஆட்சிக்கேற்ற அறிவொடும், வந்தனர்.	கையுங் காலுமாக வந்தனர்.
(௨)	'வெண்ணிறமாயிருந்தும், தம்மை மக்களென்றே கூறினர்.	வெண்ணிறம் பொன்னிறமாயும் செந்நிறமாயும் கருநிறமாயும் மாறிய பின்னும், தாம் நிலத்தேவரென்றே கூறியேமாற்றினர்.
(௩)	தம் மொழி மக்கள் மொழியென்பதை மறைக்கவேயில்லை.	ஆங்கிலத்தொடு தொடர்புள்ளதாயிருந்தும், தம் முன்னோர் மொழியையும் இந்தியாவிற்

ஆங்கிலர்	பிராமணர்
	புணர்த்த சமற்கிருதம் என்னும் இலக்கிய நடைமொழியையும் (literary dialact), இன்றும் தேவமொழியென்றே துணிச்சலுடன் சொல்கின்றனர்.
(ச) தாழ்த்தப்பட்ட தமிழருட் கடைப்பட்ட பறையரைத் தம் சமையற்காரராக்கி, அவர் ஆக்கியதையும் படைத்ததையும் பிராமணரும் விரும்பி யுண்ணும்படி செய்தனர்.	தமிழருள் தலைமையானவராகக் கருதப்படும் மரக்கறிவெள்ளாளர், பொற்கலத்திற் கொடுக்கும் தண்ணீரும் குடிக்கத் தகாததுபோல் நடிக்கின்றனர்.
(ரு) அகக் கரண வாற்றலை வளர்க்கும் உண்மையான அறிவியலைக் கற்பித்தனர்.	தமிழரை அடிமடையராக்கி, அடிமைத் தனத்துள் ஆழ்த்தும் தொல்கதைக் கல்வியைப் புகட்டினர்.
(சா) தமிழ் ஆரியத்திற்கும் சித்தியத்திற்கும் முந்தியதென்றும், மக்கள் முதன்மொழிக்கு நெருங்கியதென்றும், கூறினர். (கால்டுவெல்).	தமிழ் சமற்கிருதக் கிளையென்றும் பன்மொழிக் கலவையென்றும் காட்டியுள்ளனர். (சென்னைப் ப. க. க. தமிழ் அகரமுதலி).
(எ) குலம் தொழில் பற்றியதென்றும் மக்கள் படைப்பென்றும் கூறுகின்றனர்.	குலம் பிறவிபற்றியதென்றும் இறைவன் படைப்பென்றும், அதை இறைவனே சொன்னானென்றும் கூறுகின்றனர். (பகவற் கீதை).
(அ) ஆங்கிலத்திலுள்ள அயற்சொற்களையெல்லாம் தாமே தெரிவிக்கின்றனர்.	வடமொழியிலுள்ள தமிழ்ச் சொற்களெல்லாம் வடசொல்லேயென்று வலிக்கின்றனர்.

	ஆங்கிலர்	பிராமணர்
(௯)	கிறித்தவ மதம் உரோம நாட்டினின்று வந்து இலத்தீன் வாயிலாகப் புகுத்தப் பட்டும், தம் தாய்மொழியில் வழிபாட்டை நடத்துகின்றனர்.	சிவனியமும் மாயோனியமும் முழுத்தூய தமிழ மதங்களாயிருந்தும், தமிழர் கோவில் வழிபாட்டையும் சடங்குகளையும் அவர்க்குத் தெரியாத வடமொழியிலேயே ஆற்றி வருகின்றனர்.
(௧0)	ஆட்சியினாலும் கல்வியினாலும் இந்தியா முழுவதையும் ஒற்றுமைப்படுத்தினர்.	ஒரே பேரினத்தைப் பல சிற்றினமாகவும், ஒவ்வொரு சிற்றினத்தையும் பற்பல அகமணப் பிறவிக் குலங்களாகவும், சின்ன பின்னமாக்கிச் சிதைத்துள்ளனர். பிரித்தாட்சி முறையைப் பிராமணரைப் போற் கையாண்டவர், இவ்வுலகத்தில் வேறெவருமில்லை.
(௧௧)	தமிழ் தூய்மையாகப் பேசப்படுவதையே விரும்புவர்.	நூற்றிற்கு நூறும் வடசொற் கலந்து பேசப்படுவதையே விரும்புவர்.
(௧௨)	தம் திருமறை இறைவனால் ஏவப்பெற்ற முற்காணியரால் (தீர்க்கதரிசிகளால்) எழுதப்பட்டதென்பர்.	ஐம்பூதச் சிறுதெய்வ வழுத்துக்களும் ஆரிய வரலாற்றுத் துணுக்குகளுமான வேத மந்திரங்கள், இறைவனாலும் இயற்றப்படவில்லை யென்றும், முனிவராற் காணப்பட்டவையே யென்றும், பிதற்றுவர்.
(௧௩)	தாம் கண்டவற்றையும் செய்தவற்றையுமே தம் செயலாகக் கூறுவர்.	அயலார் நாகரிகத்தையும் இலக்கியத்தையும் தமவென்றே கூசாது பறையறைவர்.

ஆங்கிலர்	பிராமணர்
(கச) தம் வளமனைக்குள் நல்லார் எவரையும் தாராளமாகப் புக விடுவர்.	தம் இல்லத்திற்குள் பிராமணர் அல்லார் புகின் தீட்டெனக் கருதுவர்.
(கரு) தமக்கு உதவிய மொழிகளையும் அயலாரையும் நன்றியறிவோடு புகழ்வர்.	தமக்கு வாழ்வளித்த தமிழையும் தமிழரையும், இழிந்தோர் மொழி ("நீச பாஷை") யென்றும், சூத்திரர் என்றும், பழிப்பர்.
(கசு) தமிழ் நூல்களை அச்சிடின், உள்ளபடியே அச்சிடுவர்.	பழந் தமிழ் நூல்களையும் பாடல்களையும் அச்சிடும்போது, தம் குல மேம்பாட்டிற்கேற்றவாறு சொற்களை மாற்றியே அச்சிடுவர்.
(கஎ) பிரித்தானியம் உடலை மட்டும் தாக்கி, ஆங்கிலனுடன் நீங்கிவிட்டது.	பிராமணியம் ஆதனையும் (ஆன்மாவையும்) அகக் கரணங்களையும் தாக்கி, உயிர் நீங்கிய பின்னும் தொடர்வதாயுள்ளது.

பிராமணர் தென்னாடு வந்து மூவாயிரம் ஆண்டாகியும், இன்னும் தமிழருடன் உறவாடாவிடினும் உடனுண்ணாவிடினும், ஒரு தெருவிற் குடியிருப்பதைக் கூட விரும்புவதில்லை. திருச்சியில் தில்லை நகர் தோன்று முன், தென்னூரில் அமைந்த ஒரு பிராமணத் தெருவில், வழக்கறிஞர் வேதாசலம் பிள்ளை ஒரு மனைநிலம் வாங்காவாறு தடுக்கப்பட்டு விட்டார்.

கிறித்தவ விடையூழியர் (Missionaries) தொண்டு

இந்நூற்றாண்டுத் தொடக்கத்தில், முகவை மாவட்டத் திருவில்லிபுத்தூர் வட்டத் தென் எல்லையிலுள்ள சீயோன்மலை என்னும் திருக்குளிப்புத் (Baptist) திருச்சவை நிலையத்தில், **மேனா**

துரையிருந்த காலத்தில், அருள்புத்தூரிலிருந்து வந்த தேவ தாசன் என்னும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த கிறித்தவ ஆசிரியர், கல்பட்டியிற் பிராமண ஊராளி (கிராம முனிசீபு) யிருந்த தெரு வழியாக வந்தாரென்று, அவரேவலால் அடிக்கப் பட்டார். அதை அவர் மேனாடு துரையிடம் முறையிட்டார். உடனே துரை வண்டி கட்டிக் கல்பட்டி சென்று, ஊராளி யில்லத்தை யடைந்தார். அவர் வருகை யறிந்து, ஊராளியார் வீட்டிற்குள் சென்று தலைவாயிற் கதவைச் சாத்தித் தாழிட்டுக் கொண்டார். துரை கதவைத் தட்டிவிட்டுத் தெருத் திண்ணையில் அமர்ந்தார். சிறிது நேரம் கழித்து, ஊராளியாரின் மனைவியார் கதவைத் திறந்து, ஊராளியார் ஊரிலில்லை யென்று சொல்லிவிட்டார். துரை நடந்ததைச் சொல்லி, ஒரு கிழமைக்குள் ஊராளியார் தம்மிடம் வந்து மன்னிப்புக் கேளாவிடின் அவர் வேலை போய் விடும் என்று சொல்லிவிட்டுத் திரும்பி விட்டார். ஏழாம் நாள், ஊராளியார் தேவதாசன் ஆசிரியரை அழைத்துக் கொண்டு துரையிடம் வந்து மன்னிப்புக் கேட்டுச் சென்றார்.

குல வேற்றுமைக் கொடுமையினின்று தப்பவே, தாழ்த்தப் பட்ட வகுப்பினர் பலர் முகமதியராயினர்.

கால்டுவெலார் கண்ட வுண்மை

கால்டுவெலார் காலத்தில், தொல்காப்பியமும் கடைக் கழகப் பனுவல்களும் தலைமைத் தமிழ்ப் புலவர்க்குந் தெரியாது மறைந்து கிடந்தன. மறைமலையடிகள் போலும் தனித்தமிழ்ப் புலவரும் ஆராய்ச்சியாளரும் அக்காலத்தில்லை. இன விழிப் புறுத்தப் பெரியாரியக்கமும், இனத்தை முன்னேற்ற நயன்மைக் கட்சியாட்சியும், தமிழின் பெருமை யுணர்த்தச் சுந்தரம் பிள்ளையும், அன்றில்லை. குமரி நாடென்ற பெயரும் ஒருவரும் அறியார். எல்லாத் துறையிலும் தமிழர் ஆரியருக் கடிமைப்பட்டு ஊமையரா யிருந்த காலத்தில், கால்டுவெலார் வழிகாட்டுவா ரின்றித் தாமே ஆராய்ந்ததனால், நெடுங்கணக்கும் எண்வேற் றுமையும் சமற்கிருதத்தினின்று வந்தவை யென்றும், உயரிய கலைகளும் அறிவியல்களும் ஆரியர் கண்டவை யென்றும், இலங்கைக் கப்பால் எத்தீவுந் தமிழர்க்குத் தெரியாதென்றும், தவறாகக் கூற நேர்ந்தது. ஆயினும் மொழித் துறையில் ஓர் உண்மையைத் தெளிவாகக் கண்டார். அது, தமிழ் ஆரியத்

திற்கும் சித்தியத்திற்கும் முந்தியதும் மாந்தன் முதன்மொழிக்கு நெருக்கமானதுமாகும், என்பதே. இவ்வுண்மை விளங்கித் தோன்றிய சொற்றொகுதிகள், சுட்டுச் சொற்களும் மூவிடப் பெயர்களுமாகும்.

சுட்டெழுத்துக்கள் ஆ ஈ ஊ என மூன்றே. அவை பின்னர் அ இ உ எனக் குறுகின. இசைத்தல் மொழி (Articulate Speech) தோன்றுமுன், அதாவது எழுத்துஞ் சொல்லுஞ் சொற்றொடரும் ஆகிய மூவகை யுறுப்புக்களைக் கொண்டதாக மொழி அமையுமுன், ஆ ஈ ஊ என்பன சுட்டொலிகளாகவே யிருந்து, பின்னர்ச் சுட்டெழுத்துக்களாயின. எழுத்து நிலையிலும், உண்மையில் அவை ஓரெழுத்துச் சுட்டுச் சொற்களே. ஓரெழுத்தாயினும் பலவெழுத்தாயினும், பொருள் தருவனவெல்லாம் சொல்லே யாம்.

முதற்காலக் குமரிமாந்தர், இதழகற்றிச் சேய்மை சுட்டியும், இதழைப் பின்வாங்கி அண்மை சுட்டியும், இதழ் குவித்து இடைப்பட்ட முன்மை சுட்டியும், ஒலித்த ஒலிகளே, முறையே ஆ ஈ ஊ என்பனவாம். அவை சுட்டுச் சைகைகளோடு கூடியதனாலேயே, இன்றும் தவறாது மூவிடத்தையுங் குறிக்கின்றன. ஆரியமக்கள் இதை யுணராமையால், அவர் வாயிற் சுட்டொலிகள் பல்வாறு திரிந்துள்ளன. அதனால், அவர் மொழிகளிற் சுட்டுச் சொற்களேயன்றி, அவற்றிற்கு அடி மூலமான சுட்டெழுத்துக்களில்லை. தமிழர் குமரிமாந்தரின் நேர் வழியினராதலால், முச்சுட்டொலிகளும் தமிழில் தம் இயல்பு மாறா திருக்கின்றன.

முச்சுட்டொலிகளினின்றே மூவிடப் பெயர்கள் தோன்றி யுள்ளன. படர்க்கைச் சுட்டுப் பெயர் போன்றே, தன்மை முன்னிலைப் பெயர்களும் சுட்டுப் பெயர்களே யாம். தன்மையிலும் முன்னிலையிலும் சுட்டுப் பெயரன்றி வேறின்மையால், தன்மைச் சுட்டுப் பெயரும் முன்னிலைச் சுட்டுப் பெயரும் தன்மைப் பெயரென்றும் முன்னிலைப் பெயரென்றும் சுருக்கிச் சொல்லப்படுகின்றன.

மூவிடச் சுட்டுப் பெயர்கள்

		ஒருமை	பன்மை
முதல் நிலை:	படர்க்கை—	ஆன்	ஆம்
	தன்மை —	இன்—ஏன்	இம்—ஏம்
	முன்னிலை—	ஊன்	ஊம்.

குறிப்பு:— ஒருமை குறிக்கும் னகரமெய் ஒன் (ஒன்று) என்பதன் முதற்குறையும், பன்மை குறிக்கும் மகரமெய் உம் என்பதன் முதற்குறையும், ஆகும். உம்முதல் கூடுதல்.

இரண்டாம் நிலை:	படர்க்கை—	தான்	தாம்
	தன்மை —	யான்	யாம்
	முன்னிலை—	நூன்	நூம்

மூன்றும் நிலை:	படர்க்கை—	அவன் / அவள் / அது	அவர் / அவை
	தன்மை —	நான்	நாம்
	முன்னிலை —	நீன்	நீம்

குறிப்பு:— அவன் அவள் முதலிய ஐம்பாற் படர்க்கைச் சுட்டுப் பெயர்கள் தோன்றியபின், தான் தாம் என்பன படர்க்கைத் தற்சுட்டுப் பெயர்கள் (Reflexive Pronouns) ஆயின.

தன்மைப் பன்மைப் பெயரின் இரு வடிவுகளுள், யாம் என்பது தனித்தன்மைப் பெயரும் நாம் என்பது உளப்பாட்டுத் தன்மைப் பெயரும் ஆயின.

நீன் என்பது நீ என்று இறு குன்றி வழங்கி, 'இர்' இறு சேர்ந்து நீயிர்—நீவிர்—நீர் என்னும் பன்மை வடிவுகளையும் தோற்றுவித்தது.

நகரம் மகரமாகத் திரியும். எ—டு: நாம்—மனமு (தெ.), தென்பு—தெம்பு.

மகரம் வகரமாகத் திரியும்:—எ—டு: அம்மை—அவ்வை,
குமி—குவி.

நகரம் தகரமாகத் திரிவதுமுண்டு.

எ—டு: நுனி—நுதி. நேரம்—தேரம் (நாட்டுப்புற வழக்கு).

தேரம்—தேர் (இந்தி).

நீங்கள் என்பது மலையாளத்தில் நிங்ஙள் என்று குறுகியது போல், நூன் என்பது நுன் என்றும் நூம் என்பது நும் என்றும் குறுகும்.

நூன்—~~நுன்~~—துன்—து (இந்தி).

நூம்—நும்—தும் (இந்தி).

நான் நாம் என்னும் தன்மைப் பெயர்களின் முந்திய வடிவம் யான் யாம் என்றிருப்பது போல், நூன் நூம் என்னும் முன்னிலைப் பெயர்களின் முந்திய வடிவமும் யூன் யூம் என்றிருந்தன.

தகரம் சகரமாகத் திரிவது பெரும்பான்மை. எ—டு: மதி—மசி,
மாதம்—மாஸ (வ.).

தமிழ்	பிராகிருதம்	~~சமற்கிருதம்~~	தியூத்தானியம்	இலத்தீன்	கிரேக்கம்
நான்	மைன்	அஹம்	இக்	எகொ	எகோ
நாம்	ஹம்	வயம்	வீ	நோஸ்	ஹெமெயிஸ்
நூன்	து	த்வம்	தௌ	தௌ	ஸு
நூம்	தும்	யூயம்	யூ	வோஸ்	ஹூமெயிஸ்

மேற்காட்டிய திரிபுகளை யெல்லாம் உளத்திற் கொண்டு ஒப்பு நோக்கின், தன்மை முன்னிலைத் தமிழ்ப்பெயர்கள் பிராகிருதம் முதலிய ஐம்மொழிகளில் எங்ஙனந் திரிந்துள்ளன என்பது விளங்கும். படர்க்கைப் பெயர்களின் திரிபு, A Guide to Western Tamilologists என்னும் நூலில் விளக்கப் பெறும். பாலிலிருந்தே நெய் தோன்றினும், உருக்கின நெய் பாலினின்று எத்துணை வேறுபட்டுத் தோன்றுகின்றதோ, அத்துணை கிரேக்கச் சொல்

லும் தமிழ்ச் சொல்லினின்று வேறுபட்டுத் தோன்றும் என அறிக. ஆரிய மொழிகளிலுள்ள எல்லாச் சுட்டு வினுச் சொற்களும் தமிழடியின என்பதையும் அறிதல் வேண்டும்.

நோஸ் வோஸ் என்னும் வடிவுகளின் இற்றை, மனம்—மனஸ் (வ.) என்னும் திரிபொடு ஒப்புநோக்குக.

> ''அன்றியுந் தமிழ்நூற் களவிலே யவற்றுள்
> ஒன்றே யாயினுந் தனித்தமி ழுண்டோ?''

என்று வினவின சாமிநாத தேசிகர், இன்றிருப்பின்,

> ''அன்றியும் வடநூற் களவிலே யவற்றுள்
> ஒன்றே னுந்தனி வடமொழி யுண்டோ?''

என்று மாற்றியே பாடுவர்.

தமிழன் பள்ளியெழுச்சிப் பாடகர்—சுந்தரம் பிள்ளை

மனேன்மணீயத் தமிழ்த் தெய்வ வணக்கம்

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலுந் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமு மதிற்சிறந்த திரவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோ லனைத்துலகு மின்பமுற
எத்திசையும் புகழ்மணக்க விருந்தபெருந் தமிழணங்கே.

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் னிருந்தபடி யிருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்குங் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே யொன்றுபல வாய்விடினும்
ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயன்மறந்து வாழ்த்துதுமே.

சதுமறையா ரியம்வருமுன் சகமுழுது நிலவுதமிழ்
முதுமொழிநீ யநாதியென மொழிகுவதும் வியப்பாமே.

பத்துப்பாட் டாதிமனம் பற்றினோர் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையு மிலக்கணமில் கற்பனையே.

வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன், குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி யொருகுலத்துக் கொருநீதி.

மனங்கரைத்து மலங்கெடுக்கும் வாசகத்தில் மாண்டோர்கள்
கனஞ்சடையென் றுருவேற்றிக் கண்மூடிக் கதறுவரோ.

சென்ற நூற்றாண்டிறுதியில், சித்தூர் மார்க்க சகாய ஆச்சாரியார், பஞ்சாங்கம் குண்டையனோடு போராடி வென்று, பிராமணனின்றித் திருமணம் நடத்தி, கம்மாளர்க்கு விசுவப் பிராமணர் என்னும் பட்டமும் நாட்டிவைத்தார்.

ஆங்கில ஆட்சியின் விளைவாகவும் ஆங்கிலக் கல்வியின் பயனாகவும், திரவிடர் கண் விரிவாகத் திறக்கப்பட்டு, **நயன்மைக் கட்சி** தோன்றி, ௧௯௨௦-இலிருந்து ௧௯௩௭ இடைவரை இரட்டை யாட்சியைத் (Diarchy) திறம்பட நடத்தி, தமிழரை யும் திரவிடரையும் முன்னேற்றியது. அதனால், வகுப்புவாரிச் சுழல் பதவிகளும், குலத்தொகை விழுக்காட்டு அலுவற் பேறும், பிற்பட்டோர்க்கும் பலவகைச் சலுகைகளும், ஏற்பட்டன. பேராய ஆட்சியிலும், தமிழ்நாட்டில் மட்டுமன்றி மலையாள தெலுங்கு கன்னட நாடுகளிலும் பிராமணரல்லார் முதலமைச்சராக வரவும், தமிழ்நாட்டிற் பிராமணரில்லா அமைச்சுக்குழு ஏற்படவும், முடிந்தது.

கல்வித் தொழில் பிராமணர்க்கே யுரிய தென்னுங் கொள்கைக்கு மாறாக, ஆங்கிலர் எல்லா வகுப்பார்க்கும் அதைப் பொதுவாக்கித் தமிழரைப் பிராமணர்க்குச் சமமாக்கினதனால், தம் மேம்பாடும் பிழைப்பும் குன்றுவதுகண்டு, ஏற்கெனவே ஆங்கிலராட்சியில் வெறுப்புற்றிருந்த பிராமணர், நூற்றிற்கு மூவராயுள்ள பிராமணர்க்கு அரசியல் அலுவற்பேறு நூற்றிற்கு மூன்றே யென்று **நயன்மைக் கட்சி** யாட்சி திட்டஞ்செய்தபின்,

கிளர்ந்தெழுந்து ஒன்றுகூடிச் சூழ்ந்து, ஆங்கில அரசை அடியோடொழித்தாலொழியத் தமக்கு உயர்வாழ்வில்லை யென்றறிந்து, மும்மொழிக் கூட்டு நாடாயிருந்த சென்னை மண்டலத்தில், தமிழருள்ளும் திரவிடருள்ளும் இளைஞரையும் தன்னலக்காரரையும் தமிழின் பெருமையை அறியாதவரையும் துணைக்கொண்டு, தேசியக் கட்சியைத் தோற்றுவித்து, வெள்ளைக்காரன் கொள்ளைக்காரன் என்றும், அவனை அகற்றிவிட்டால் விண்ணுலக வாழ்வு வந்துவிடு மென்றும், நயன்மைக் கட்சி அயலானுக்கு நாட்டைக் காட்டிக் கொடுக்கின்றதென்றும், பொது மக்களிடம் சென்று புகட்டலாயினர்.

நூற்றிற்குத் தொண்ணூற்றுவர் கல்லாதவராயும் ஏழைகளாயும் இருந்ததனால், அடிமேலடி யடித்தால் அம்மியும் நகர்வதுபோல், நாளடைவிற் பொது மக்கள் தேசியக் கட்சித் தொண்டர்க்குச் செவிசாய்த்தனர்.

நயன்மைக் கட்சி யமைச்சர், எறும்புக்கடி போன்ற பிரித்தானியத்தினும் பாம்புக்கடி போன்ற பிராமணியம் கொடிதென்றும், ஆங்கிலர் ஒருகாலும் இந்தியாவினின்று நீங்காரென்றும், கருதினதனால், ஆங்கிலராட்சிக்கு மாருகப் பேசினவரையும் ஒழுகினவரையும் தடியடி யடித்தும் சிறையிலிட்டும் துன்புறுத்தினர். இது பொதுமக்கட்கு நேரிற் சொல்லப்பட்ட போது அவர்க்குச் சினம் மூண்டது. அதனால் தேசியக் கட்சி விரைந்து வளர்ந்தது. இறுதியில், பிராமணரல்லாத காந்தியடிகள் முனிவர் கோலம் பூண்டு, தாழ்த்தப்பட்டவரை யணைத்துப் பொது மக்களொடு தொடர்பு கொண்டபின், வெற்றி கிட்டிற்று; விடுதலையும் கிடைத்தது. விடுதலைப்பற்றும் நாட்டுமொழி யறிவும் பொது மக்கள் தொடர்பும் இன்மையால், நயன்மைக் கட்சித் தலைவர் ௧௯௩௭-ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலிற் படுதோல்வியடைந்தனர். பேராயம் ஆட்சியைக் கைப்பற்றியது.

தனித் தமிழ் முன்னோடியர் இருவர்

நாட்டுப் பற்றிற்கு உயிர் மொழிப் பற்று. முன்னது எல்லார் வாயிலாகவும் வெளிப்படும்; பின்னது புலவர் வாயிலாக மட்டுமே வெளிப்படும்.

இந்நூற்றுண்டுத் தொடக்கத்தில், **சூரிய நாராயண சாத்திரி யார்** தம் பெயரைப் **பரிதிமாற்கலைஞன்** என்று மாற்றி, மறுமலர்ச் சித் தனித் தமிழ்த் தொண்டைத் தொடங்கிவைத்தார்.

பாம்பன் குமர குருதாச அடிகள், **சேந்தன் செந்தமிழ்** என்னும் ஐம்பான் வெண்பாத் தனித்தமிழ் நூலியற்றி, நூற்றுக்கணக் கான வடசொற்கட்கு நேர்த் தென்சொற்களும் மொழிபெயர்த் தும், ஆக்கியும் வைத்தார்.

தனிப் பெருந் தமிழ் மீட்பர் **மறைமலையடிகள்**

கல்விக் கடல்; தமிழ் ஆங்கிலம் சமற்கிருதம் ஆகிய மும் மொழி வல்லுநர்; மருத்துவம், கருநூல் (Embryology), தொலை வுணர்வு (Telepathy), மனவசியம் (Mesmerism), அறிதுயில் (Hypnotism) முதலிய பல்கலை யறிஞர்; நூலாசிரியர் நுவலாசிரி யர் உரையாசிரியர் இதழாசிரியர் பதிப்பாசிரியர் ஆய்வாசிரியர் ஆகிய பல்வகையாசிரியர்; அடக்கமும் அஞ்சாமையும் உண்மை யொப்புக் கொள்வும் குலமத வேற்றுமையின்மையும் கொள்கைக் கடைப்பிடிப்பும் கொண்ட பண்பாட்டாளர்; நாட்டிற்கும் மொழிக் குமன்றித் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்; மாபெருந் தமிழ்ப் புலவரும் தமிழ்ப் பேராசிரியரும் தமிழுக்கும் வடமொழிக் கும் வேறுபாடு தெரியாது, நூற்றிற் கெண்பது விழுக்காடு வட சொற் கலந்து தமிழைப் பேசியும் எழுதியும் பாடியும் வந்த காலத் தில், தமிழ்ப் பயிர் அயற்சொற்களால் நெருக்குண்டு அடியோ டழிந்து போகவிருந்த நிலையில், ௧௯௧௬-ஆம் ஆண்டிலிருந்து வடசொற்களை அறவே களைந்து, தூய தீந்தமிழில், உரைநடை யும் செய்யுளுமாகிய இருவகை வடிவிலும், அறிவியல், சமயம், வரலாறு, ஆராய்ச்சி, திருமுகம், உரை, மொழிபெயர்ப்பு, முத லிய பல துறையிலும், ஐம்பான் அருநூல்களை வெளியிட்டு, தமிழில் எந்நூலையும் இயற்றவும் மொழிபெயர்க்கவும் இயலும் என்பதைக் காட்டி, தமிழ் வரலாற்றின் மூன்றுங் காலமாகிய மறுமலர்ச்சித் தனித் தமிழ் ஊழியைத் தொடங்கி வைத்தவர்; முதன் முதல் தனித்தமிழ்த் திருமணஞ் செய்து வைத்தவர்; Can Hindi be the Lingua Franca of India? (இந்தி இந்தியப் பொது மொழியா யிருக்க இயலுமா?) என்னும் ஆங்கிலச் சிறு நூலில், அறிவியன் முறையிலும் ஏரண முறையிலும் கட்டாய இந்திக் கல்வியை வன்மையாகக் கண்டித்தவர்; இறுதிவரை

எழுத்தாலும் சொற்பொழிவாலும் அருந்தமிழ்த் தொண்டாற்றியவர்; இன்றும் இனி என்றும் இடிணையற்றவர்; பல்லவபுரம் பொதுநிலைக் கழகத் தலைவர் **மறைமலையடிகள்.**

மறைமலை யென்னும் மறையா மலையின்
நிறைநிலை வாரத்தே நிற்க—இறையும்
தமிழன் வடமொழித்தீத் தாழ்வின்றி வாழ
இமிழுங் கடல்சூழ் இகம்.

பெரியார் அருஞ்செயல்

நயன்மைக் கட்சித் தலைவர், பொதுத்தேர்தலில் தோல்வியடைந்தபின், இருக்குமிடந் தெரியாது ஓடி ஆங்காங்குப் பதுங்கிக் கொண்டனர். அன்று **பெரியார்** ஒருவரே திரவிட—ஆரியப் போர்க்களத்திற் புகுந்து உடைபடை தாங்கி இடைவிடாது போராடி, கல்லாப் பொதுமக்கள் கண்ணைத் திறந்து கற்றோர்க்குந் தன்மான வுணர்ச்சி யூட்டி, பிராமணியத்தைத் தலைதூக்க வொண்ணு தடித்து வீழ்த்தி, ஆச்சாரியார் புகுத்திய இந்தியை எதிர்த்துச் சிறைத்துன்பத்திற் காளாகி, கணக்கற்ற சீர்திருத்தத் திருமணங்களை நடத்தி வைத்தும், பகுத்தறிவியக்கத்தைத் தோற்றுவித்தும், மூடப் பழக்க வழக்கங்களை யொழித்தும்,

"இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்
குற்ற மறைப்பான் உடம்பு." (குறள். ௧0௨௯)

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்." (ஷை ௨௬)

என்னுங் குறள்கட் கிலக்கியமானார்.

திரு. வி. கலியாண சுந்தர முதலியார் பொதுநலத் தொண்டு

பெண்ணின் பெருமை, தொழிலாளர் உரிமை, சமயப் பொதுநோக்கு, காதற் சிறப்பு முதலிய உண்மைகளையும் உரிமைகளையும் பண்புகளையும் நாட்டி, பல தமிழ்த் திருமணங்களை நடத்தி வைத்தவர் **திரு. வி. க.**

இரு தமிழ்ப் போராடியர்

உலக மொழிகளுள் ஒலிப்பு முயற்சி குன்றியது தமிழே யென்றும், அதன் நெடுங்கணக்கு முழு நிறைவானதென்றும், மேலையாரிய மொழிகளும் தமிழினின்று கடன் கொண்டுள்ளன வென்றும், நாடு முழுதும் மேடையேறிப் பறைசாற்றிய பா.வே. **மாணிக்க நாயகரும்**; தமிழ்ப் பற்று, ஆரியத்தினின்று விடுதலை, தமிழ வாழ்வு, குடும்ப நலம், கண்மூடிச் சடங்கொழிப்பு முதலியன பற்றி, எளிய இனிய மறப்பாடல்கள் ஏராளமாகப் பாடி நாட்டைத் திருத்திய புரட்சிப் பாவலர் **பாரதிதாசனும்**; இரு தமிழ்ப் போராடிய ராவர்.

இந்தி யெதிர்ப்புத் தலைவர் இருவர்

மறைமலையடிகளும் பெரியாரும் தத்தம் நிலையில் நின்று இந்திக் கட்டாயத்தை எதிர்த்து நிற்க, இயன்றபோதெல்லாம் நாடு முழுதும் பொதுக் கூட்டங்களும் மாநாடுகளும் கூட்டி, இடைவிடாது இந்தியை வன்மையா யெதிர்த்த தறுகட்படைத் தலைவர் இருவர், பேரா. **சோமசுந்தரபாரதியாரும்** தமிழகப் புலவர் குழு அமைப்பாளர் **கி. ஆ. பெ. விசுவநாதமும்** ஆவர்.

புலவர் பொறை குறைத்த பேராசிரியர்

ஆரியச் சூழ்ச்சியால், தமிழ்ப் புலவர் தேர்விற்குப் பாடமாக வைக்கப்பட்டிருந்த, சமற்கிருதப் பகுதியைப் பெரு முயற்சி செய்து நீக்கியவர் பேரா. கா. நமச்சிவாய முதலியார்.

பல்துறைத் தமிழ்த் தொண்டர்

தாமோதரம் பிள்ளை, பர். உ. வே. சாமிநாதையர், பாலவநத்தம் வேள் பாண்டித்துரைத் தேவர், மு. சி. பூரணலிங்கம் பிள்ளை, ச. பவானந்தம் பிள்ளை, த. வே. உமா மகேசுவரம் பிள்ளை, பன்னீர்ச் செல்வம், கா. சுப்பிரமணியப் பிள்ளை, மன்னார்குடிச் சோமசுந்தரம் பிள்ளை, நாவலர் வேங்கடசாமி நாட்டார், வ. திருவரங்கம் பிள்ளை, அண்ணாமலை யரசர், பண்டிதமணி கதிரேசன் செட்டியார், க. ப. மகிழ்நன் (சந்தோஷம்),

துடிசை கிழார் அ. சிதம்பரனுர், அம்பத்தூர்த் தலைமையாசிரியர் (M) சோமசுந்தரம் பிள்ளை முதலிய பல்பேரறிஞர், தத்தம் துறையில் தத்தமக்கியன்றவாறு தமிழ்த் தொண்டு செய்தவராவர்.

வரலாற்று நூல் தொண்டர் மூவர்

சேச ஐயங்கார், (P. T.) சீநிவாச ஐயங்கார், (V. R.) இராமச்சந்திர தீட்சிதர் ஆகிய மூவரும், தம் வரலாற்று நூலால் தமிழின் பெருமையைக் காத்தவராவர்.

கணியர் இ. மு. சுப்பிரமணியப் பிள்ளை, தலைமையாசிரியர் சாமி வேலாயுதம் பிள்ளையொடு கூடிக் **கலைச்சொற்கள்** ஆக்குவித்தும், பின்னர் **ஆட்சிச் சொல் அகர வரிசை** தொகுப்பித்தும், தமிழாட்சி நடைபெறத்தக்க தொண்டு செய்தவராவர்.

இசைத் தமிழாராய்ச்சித் தொண்டர்

தஞ்சை ஆபிரகாம் பண்டிதர், அவர் மகனுர் வரகுண பாண்டியன், மதுரைப் பொன்னுச்சாமிப் பிள்ளை முதலியோர், இசைத் தமிழாராய்ச்சியால் தமிழிசையின் பெருமையையும் முதன்மையையும் நாட்டியவராவர்.

நடிப்புத் துறைத் தொண்டர்

இன்னிசை நடிகர் தியாகராசப் பாடகரும் நகைச்சுவை நடிகர் (N. S.) கிருட்டிணனும், நடிப்புத் துறையில் தமிழன் பெருமையையும் தமிழப் பண்பாட்டையும் காத்தவராவர்.

தமிழ் வளர்த்த தனிப்பெரு முதல்வர் இராமசாமிக் கவுண்டர்

௧௯௨௫-இற்கும் ௧௯௫௦-இற்கும் இடைப்பட்ட காலத்தில், தமிழ் நாட்டிற் கல்லூரி முதல்வராயிருந்த தமிழர் அனைவருள்ளும், வயிறு வளர்க்காது தமிழ் வளர்த்த தனிப்பெரு முதல்வர் **அ. இராமசாமிக் கவுண்டர்.** கணிதப் பேராசிரியரா யிருந்தும் பெருங் கல்லூரிக்குச் சென்று பெருஞ்சம்பளம் பெருது சேலத்திலேயே நிலைத்திருந்து, பண்பட்ட தமிழரையே பாடத்துறைத் தலைமையாசிரியராக அமர்த்தியும், பிற கல்லூரிகளில் இடம் பெருத ஏழை மாணவர்க்கெல்லாம் இடந் தந்தும், திருக்குறட்

கழகம் நிறுவி வகுப்பு நடத்தியும், திருக்குறட்கு உரை வரைந்தும், பெரியார்க்குத் துணை நின்றும், கல்லூரிகளிலும் மன்றங்களிலும் சொற்பொழிவாற்றியும், சாத்திரியார் கலைச் சொற் குழுவிலிருந்து பணிபுரிந்தும், எனக்கு வேண்டிய ஏந்துகளையெல்லாஞ் செய்து என் மொழியாராய்ச்சியை முற்றுவித்தும், தம் துணையாசிரியர் சிலரைப் பிற கல்லூரி முதல்வராக்கியும், விருந்தோம்பி வேளாண்மை செய்து இறுதிவரை தமிழ வாழ்வு வாழ்ந்தும், இறவாப் புகழ் பெற்றவர் சேலம் நகராட்சிக் கல்லூரி முதல்வர் இராமசாமிக் கவுண்டர்.

தமிழரை முன்னேற்றிய நகராட்சித் தலைவர் இரத்தினசாமிப் பிள்ளை

இரண்டாந்தரமாயிருந்த சேலம் நகராட்சிக் கல்லூரியை முதற்றரமாக்கியும், ஆரியத்தை யெதிர்த்தும், இராமசாமிக் கவுண்டரை யூக்கியும், மறைமலையடிகளைப் போற்றியும், தமிழிசை மன்றம் நிறுவியும், தமிழையும் தமிழரையும் முன்னேற்றியவர், சேலம் நகராட்சித் தலைவர் அராவ அண்ணல் (இராவ் சாகிபு) இரத்தினசாமிப் பிள்ளை.

பேராய வீழ்ச்சியும் தி. மு. க. ஆட்சியும்

நாட்டு விடுதலைக் கொள்கை யின்மையால் நயன்மைக் கட்சி தோல்வியுற்றது. நாட்டுமொழிப் பற்றின்மையால் பேராயக் கட்சி வீழ்ந்தது. திராவிடர் முன்னேற்றக் கழகம் ௧௯௬௭-இல் தமிழ் நாட்டு ஆட்சியைக் கைப்பற்றியது. அதன் தலைவர் அண்ணாத் துரையார் சென்னை நாடென்றிருந்ததைத் தமிழ்நாடு என மாற்றினர்; சீர்திருத்தத் திருமணத்தையும் தமிழ்த் திருமணத்தையும் சட்டமுறைப்படி செல்லுபடியாக்கினர்; கோவை மாணவர் கிளர்ச்சி செய்தபின், சட்டப் பேரவையில் இந்தி விலக்குத் தீர்மானத்தை நிறைவேற்றினர்.

தமிழ்நாட்டிற்குத் தகுந்த கட்சி தி. மு. க. வே

தமிழ்நாட்டிற் பல அரசியற் கட்சிகளிருப்பினும், நிலையாக இருந்து ஆளத்தக்கது தி. மு. க. வே.

பேராயம் இந்தியை ஏற்றுத் தமிழ் நாட்டிற்குக் கேடு செய்தது. ஆங்கிலேயன் தமிழர்க்கு மீட்பனாகவன்றி அடிமைப்படுத்தியாக வரவில்லை. அவன் வந்த நிலையில், தமிழன் நாயும் கழுதையும் பன்றியும் போல் பிராமணனின் எச்சிலுண்டியைத் தின்றுகொண்டிருந்தான். அஃறிணை போலிருந்த தமிழனைப் படிக்க வைத்துத் தன்மானமூட்டி மீண்டும் உயர்திணைப்படுத்தினவன் ஆங்கிலேயனே. அவன் வந்திராவிடின், இந்தியா முழுதும் ஒரு போதும் ஓராட்சிக்குட்பட்டிராது. இரசியா கைப்பற்றியிருப்பின் விடுதலையே பெற்றிருக்க முடியாது. கிழக்கிந்தியக் குழும்பாட்சியில் தான் ஊழலிருந்தது. இங்கிலாந் தரசு இந்திய ஆட்சியை மேற்கொண்டதிலிருந்து மேன்மேலும் சீர்திருத்தம் நிகழ்ந்து கொண்டே வந்தது. இறுதியில், இந்தியரைத் தம்மாட்சிக்குத் தகுதிப்படுத்திய பின் தானே நீங்குவதற்கிருந்தான் ஆங்கிலேயன். பேராயம் தான் அவனை முந்தித் துரத்தியது. அதனால் இந்தியா அடைந்த பொருளிழப்பும் ஆளிழப்பும் அமைதிக் குலைவும் கொஞ்ச நஞ்சமல்ல. பேராயம் நயன்மைக் கட்சிக்கு மாறாகவே பிராமணரால் தமிழ்நாட்டிற் புகுத்தப்பட்டது. அதைத் தோற்றுவித்த பிராமணர் இவ்வுலகினின்றே அக்கட்சியினின்றே நீங்கிவிட்டனர். அடிமைத்தனமும் தன்னலமுங் கொண்ட தமிழரே அதில் இன்னும் ஒட்டிக்கொண்டிருக்கின்றனர். பெரு நன்மை செய்த ஆங்கிலேயனைப் பெருந்தீங்கு செய்தவனாகக் கூறுவது, கழுவாயில்லா வழுவாயாகும்.

“எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.” (குறள். ௧௨௦)

இக்குற்றம் பேராயத்திற் சேர்ந்துள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பார்க்கோ, பன்மடங்கு பெரிதாகும்.

ஆங்கில வரசு பல்கலைக் கழகக் கல்வி நிலையங்களில் தான், தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்க்கு இடந்தர முடிந்தது. மேல் வகுப்பார் நடத்தும் உயர்நிலைப் பள்ளிகளிலும், துவக்கப் பள்ளிகளிலும், கீழ் வகுப்பாரும் இடம் பெறச் செய்தது நயன்மைக் கட்சி யாட்சியே. அதன் பின்னரே, காந்தியடிகளின் முயற்சியால், பேராயமும் நயன்மைக் கட்சியைப் பின்பற்றியது. ஆயினும், குலங்களின் பிறவித் தொடர்பைக் காந்தியடிகள் நீக்க இயலவில்லை.

பேராயத் தமிழத் தலைவர் செய்த நன்மையெல்லாம், மனு தரும முறைப்படி பிள்ளைகள் பெற்றோர் தொழிலை மேற்கொள்ள வேண்டுமென்று, ஆச்சாரியார் புகுத்த விருந்த துவக்கக் கல்வித் திட்டத்தைத் திரு. காமராசர் தடுத்ததும்; திருவையாற்று அரசர் கல்லூரி விடுதியில், பிராமணன் சமைத்த வுண்டியைப் பிராமண மாணவர்க்குத் தனியிடத்திற் படைத்து வந்த வழக்கத்தை, தஞ்சை நாட்டாண்மைக் கழகத் தலைவர் நாடிமுத்துப் பிள்ளை நிறுத்தியதுமே. இவை நயன்மைக் கட்சி யாட்சியிலும் நடந்திருக்கும் என்பதைச் சொல்ல வேண்டுவதே யில்லை.

ஆங்கிலேயர் வந்திராவிடின், ஒரேயொரு வையாபுரி தவிர மற்றெல்லா அமைச்சரும் பிராமணராயிருந்திருக்கக் கூடிய நிலைமை, இன்றில்லையே என்றெண்ணித்தான், அக்குலத்தார், நயன்மைக் கட்சியையும், அதன் கான்முளையாகிய தி. மு. க. வையும், காட்டிக் கொடுக்கும் கூட்ட வகையார் (Guisling Variety) என்று பழிக்கின்றனர். இத்தகைய குற்றச்சாட்டு, நாட்டு மக்கள் வாயினின்று வரத்தக்கதே யன்றி, நாட்டைக் கெடுக்கும் வந்தேறிகள் வாயினின்று வரத்தக்க தன்று.

தி. மு. க. பொதுவுடைமைக் கொள்கையைப் படிப்படியாகத் தழுவுவதால், பொதுவுடைமைக் கட்சி இனிப் பிரிந்து நிற்க வேண்டிய தில்லை.

தமிழ்நாடு இன்னும் விடுதலை பெறவில்லை

வெள்ளைக்காரனை விரட்டி விட்டோமென்றும், நாட்டிற்கு விடுதலை வாங்கித் தந்தோமென்றும், பேராயத்தார் நாக்கடிப்பாக வாய்ப்பறை யறைந்துவரினும், ஆங்கிலன் நீங்கிக் கால் நூற்றாண்டான பின்னும், தமிழ்நாடு விடுதலை பெறவில்லை.

சமற்கிருதத்திற்கும் தமிழுக்கும் இடைப்பட்ட நிலைமை, தாக்குவோனுக்கும் தற்காப்போனுக்கும் இடைப்பட்ட தொத்ததே. தமிழன் தாழ்வு பிராமணன் உயர்வு என்ற முறையிலேயே தமிழின் தாழ்வு சமற்கிருத வுயர்வு என்னும் நிலைமையுள்ளது. தாக்குவோனைத் தாக்காது தற்காப்போன் விடுதலை பெற முடியாது. பிராமணர் இக்காலத்தில் தம்மை நிலத்தேவர் என்று சொல்லமுடியாதாகையால், சமற்கிருதம் தேவமொழியென்று சொல்லித் தம் மேம்பாட்டை நிலைநிறுத்த முயல்கின்றனர்.

கோவில் வழிபாடும் இருவகைச் சடங்குகளும் தமிழில் நடை பெற்ருலொழிய, தமிழ் விடுதலை யடைந்து தன் பழம்பெருமையை மீளப் பெறமுடியாது. தமிழுயர்ந்தால் தான் தமிழன் உயர்வான்.

இன்று பிராமணியத்தை நடத்தி வருபவர் தமிழரே

பண்டை நாளில், பிராமணர் தம் வெண்ணிறத்தாலும் வேத மந்திர வெடிப்பொலியாலும் வேறு வழியாலும் மூவேந்தரையும் வயப்படுத்தி, அவர் வாயிலாகத் தம் கொள்கையைப் பொதுமக்க ளிடம் வலிந்து புகுத்தினர். இக்காலத்தில், சில கட்சித் தலைவ ரையும் சில செல்வரையும் வையாபுரிகளையும் துணைக்கொண்டு, தம் கருமத்தை முடிக்கப் பார்க்கின்றனர்.

ஆயினும், அவருள்ளும் ஒள்ளிய மனமும் தெள்ளிய அறிவு முடையார் உளர். தமிழரெல்லாரும் நல்லவ ரல்லர்; பிராமண ரெல்லாரும் தீயவ ரல்லர். திருவதங்கோட்டில் (Travancore) தீண்டாதார்க்கு முதன்முதல் திருக்கோவில்களைத் திறந்து விட்ட வர் (C.P.) இராமசாமி ஐயரே. வரலாற்று நூல் தமிழ்த்தொண்ட ருள் தலைசிறந்த மூவர் பிராமணரே.

சின்னஞ்சிறு தொகையினரும் போர்மறமும் வல்லுடம்பும் இல்லாதவருமான பிராமணர், காட்டிக் கொடுக்கும் போலித் தமிழருதவியின்றித் தமிழுக்கும் தமிழர்க்கும் மாருக எதுவுஞ் செய்ய முடியாது.

தி. மு. க. அரசிற்குத் தமிழே வல்லரண்

இந்தியை யெதிர்த்துத் தமிழ்ப் பற்றுக் காட்டியதனுலேயே, தி. மு. க. பேராயத்தை வீழ்த்தி ஆட்சியைக் கைப்பற்றியது. தமிழ் திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமுமாகும் என் னும் உண்மையை நாட்டின், இம்மண்ணுலகுள்ள அளவும் தி. மு. க. அரசை எவரும் அசைக்க முடியாது. இந்தி தமிழ் நாட்டினின்று தானே நீங்கி விடும். திருக்கோவில்களில் தமிழி லேயே வழிபாடு நடைபெறும். பிற பைந்திரங்களை (பிரதேசங் களை) விடத் தமிழ்நாடு மிகுந்த வுரிமைகளை நடுவணரசினின்று பெறும்.

கல்வித் திணைக்களத்தின் கடுங் குறைகள்

தி. மு. க. ஆட்சியில், கல்வித் திணைக்களம் (department) தவிர மற்றெல்லாத் திணைக்களங்களும் ஏறத்தாழச் சீராக நடைபெற்று வருகின்றன.

தமிழ்த் துறையில், கடந்த அரை நூற்றுண்டாக நான் செய்து வரும் சொல்லாராய்ச்சியும் மொழியாராய்ச்சியும் அகர முதலித் தொகுப்பும், தமிழ்ப் புலவர் அனைவரும் அறிவர். தனித் தமிழ் வாரியாம் மறைமலையடிகள் எனக்குத் தந்த நற்சான்றும், 'செந்தமிழ்ச் செல்வி'யில் வெளியிடப் பெற்றுள்ளது. ஆயினும், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகர முதலியைத் திருத்தவும் மறுபதிப்பு வெளியிடவும், தகுதியில்லாத ஐந்தமிழ்ப் புலவர் அமர்த்தப்பட்டுள்ளனர். ஒவ்வொரு தமிழ்ப் புலவரும் அகர முதலித் தொகுப்பாளரா (lexicographer) யிருக்க முடியும் என்று, கல்வியமைச்சர் கருதுவதாகத் தெரிகின்றது. அது சரியான கருத்தாயின், ஏனை மொழிகளிலும் எல்லாப் புலவரும் அகர முதலித் தொகுப்பாளரா யிருத்தல் வேண்டும். அஃதில்லை. அகர முதலித் தொகுப்பிற்குத் தேர்வுப் பட்டம் பெற்றிருத்தல் மட்டும் போதாது; பன்மொழிப் பயிற்சியும், இருவகை வழக்கறிவும், சொல்லாராய்ச்சியும் மொழியாராய்ச்சியும், சொல்லாக்க நெறிமுறையறிவும், ஆங்கிலச் சொற்பிறப்பியல் அகர முதலிகளைத் துருவிப் பார்த்தலும், வேண்டும். சாமுவேல் சாண்சன், நோவா வெபுசித்தர் (Noah Webster) முதலிய அகர முதலித் தொகுப்பாளர் வரலாற்றைப் பார்த்தால் தான், அகர முதலித் தொகுப்பிற்குரிய தகுதிகள் எவையென்று தெரிய வரும்.

ஓய்வு பெற்ற சேலங் கல்லூரி வரலாற்றுப் பேராசிரியரும், திரு. பத்தவற்சலனார் முதலமைச்சுக் காலத்திற் கல்லூரிப் பாடப் பொத்தகங்கள் எழுத அமர்த்தப்பட்டவரும், 'முதன் மொழி' ஆசிரியருமாகிய சொக்கப்பனாரின் (எம். ஏ., எல். தி.) தலைமையிற் சென்ற குழு வகுத்துக் கொடுத்த, என் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் தொகுப்புத் திட்டம் தள்ளப்பட்டு, அதற்கு ஒரு குழு அமர்த்தப்படவேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டு விட்டது. இது ஒரு புகை வண்டியை ஓட்டுநர் ஒருவர்க்குத் தலைமாறாக (பதிலாக), அதை இழுத்துச் செல்ல ஒரு குழு அமர்த்த வேண்டுமென்று சொல்வது போன்றதே. கல்வித் துறை

உயர்திரு. மாதவனார் கையில் இருந்திருப்பின் நன்று யிருந்திருக்கும். அகர முதலித் திட்டத்தை அவர் ஒருதலையாய் ஒப்புக்கொண்டிருப்பார்.

குமரன் குமரி என்னும் தூய தென்சொற்களை வடசொல்லென்று தள்ளிவிட்டதுமன்றி, திருவாட்டி என்ற முழுத் தமிழ்ச் சொல்லை நீக்கிவிட்டுத் திருமதி என்ற அரைத் தமிழ்ச் சொல்லைப் புகுத்தியதே, இற்றைக் கல்வித் திணைக்களத்தின் நிலைமையை விளக்கப் போதிய சான்றாம்.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்ட அறிவிப்புத் தொடர்களுள், "அளவோடு பெற்று வளமோடு வாழ்க." என்பது, "அளவாகப் பெற்று வளமாக வாழ்க" என்றிருப்பின், சாரியை யின்மைக் குற்றம் நீங்கும்.

அரசினர் சாலைக் கடத்த (Govt. Road Transport) அறிவிப்புத் தொடர்களுட் பல புணர்ச்சியின்றி வரையப்பட்டுள.

எ—டு: தெற்கு பணிமனை, போக்குவரத்து துறை, அரசு போக்குவரத்து, தண்டையார் பேட்டை பணிமனை.

தமிழ் புணர்ச்சி மொழியாதலால், வலிமிகும் இடத்தில் மிகுக்காது எழுதுவது வழுவாம். மாணவரும் அதைப் பின்பற்ற நேரும். அறிவியலதிகாரம் வேறு; ஆள்வினையதிகாரம் வேறு.

என்னை அகர முதலிப் பணிக் கமர்த்தின் பிராமண எதிர்ப்புண்டாகுமென்று, சென்னைப் பல்கலைக் கழகத் துணைக்கண்காணகர் (Vice Chancellor) அஞ்சுவதாகத் தெரிகின்றது. பொய்யும் புரட்டும் சொல்லி ஒரு சிற்றின அயலார் தமிழ் நாட்டிலிருந்து கொண்டு துணிந்து ஏமாற்றும் போது, உண்மையைச் சொல்லி முன்னேற, மேலையர் திங்களை யடைந்த இவ்விருபதாம் நூற்றாண்டிறுதியிலும், ஏன் தமிழன் அஞ்ச வேண்டும்? இங்ஙனம் அஞ்சி யஞ்சிச் செத்தால், என்றுதான் தமிழன் முன்னேற முடியும்?

"குட்டக் குட்டக் குனிகிறவனும் முட்டாள், குனியக் குனியக் குட்டுகிறவனும் முட்டாள்." என்பது முதுமொழி.

என்னைப் பணியில் அமர்த்துமாறு தமிழன்பர் வேண்டின், எனக்கு ஏதோ நன்மை செய்யச் சொல்வதுபோல் அதிகாரிகள் கருதுகின்றனர். அது தமிழுக்கே நன்மை என்றறியும் ஆற்றல் அவர்கட் கில்லை. இது அவர்களது தமிழறியாமையையோ தமிழ்ப் பற்றின்மையையோ தான் காட்டும்.

புலவர் பெருமிதம்

சோழன் நலங்கிள்ளியிட மிருந்து உறையூர் புகுந்த இளந் தத்தன் என்னும் புலவனை, ஒற்று வந்தானென்று காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி கொல்லப் புகுந்த விடத்து, கோவூர் கிழார் என்னும் புலவர்,

"வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி
நெடிய வென்னது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்ற மருத்தி
ஓம்பா துண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீதறிந் தன்றோ வின்றே, திறப்பட
நண்ணார் நாண அண்ணாந் தேகி
ஆங்கினி தொழுகி னல்ல தோங்குபுகழ்
மண்ணாள் செல்வ மெய்தியு
நும்மோ ரன்ன செம்மலு முடைத்தே." (புறம். சஎ)

என்று பாடி, அப்புலவனை உய்யக் கொண்டார்.

மூன்றாங் குலோத்துங்கச் சோழன் முரண்பட்ட போது,

"மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ
உன்னையறிந் தோதமிழை யோதினேன்—என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ வுண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு."

என்று கம்பர் பாடிப் பிரிந்தார். எல்லா நாட்டிலும் புலவர் இப் படித்தா னிருப்பர். அது "மண்டைக் கனம்" அன்று. புலவர் வறுமையைப் பயன்படுத்தி அவரை யடக்கி யாளத் துணிவது

தான் செல்வனின் அல்லது அமைச்சனின் மண்டைக் கனம். சில வணிகப் புலவர் வணங்கிப் பணிவது போல் எல்லாரும் பணியார்.

முத்தமிழ்க் காவலர்

இன்று தமிழைக் காத்து வருபவர் மூவரே.

(க) தவத்திருக் குன்றக்குடி யடிகள்

அருள்நெறித் திருக்கூட்டம் அமைத்தும், கட்டாய இந்திக் கல்வியைக் கண்டித்தும், தமிழ்நாடு முழுதும் இடைவிடாது அல்லும் பகலும் இனிய தமிழிற் சொற்பொழிவாற்றியும், ஆண்டு தோறும் பறம்புமலையிற் பாரி விழா நடாத்திப் பாரி புகழைப் பரப்பிப் பல் புலவர்க்குச் சிறப்புச் செய்தும், திருக்கோவில்களில் தமிழ் வழிபாடு நடைபெறச் செய்தும், தமிழ்க் காப்பு நூல் வெளியீட்டிற்குப் பொருளுதவியும், செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகர முதலித் தொகுப்புப் பணியில் இடுபடுமாறு தமிழக அரசைத் தூண்டியும், தமிழரின் இருமை நலத்திற்கும் அருந்தொண்டாற்றி வருபவர், தமிழ்நாட்டுத் திருமடத் தலைவர் அனைவருள்ளும் தலைசிறந்த தவத்திருக் குன்றக்குடி அடிகள் ஆவர்.

(உ) தாமரைத்திரு வ. சுப்பையாப் பிள்ளை

நீண்ட காலமாகக் கிடைக்காத நூல்கள் நேர்மையான விலைக்குக் கிடைக்குமாறும், விளங்காத செய்யுட் பனுவல்கள் எளிதாக விளங்குமாறும், ஆயிரத்திற்கு மேற்பட்ட அருந்தமிழ் நூல்களின் மூலத்தையும் உரையையும் ஆங்கில மொழி பெயர்ப்பையும், திண்ணிய வெண்டாளில் முத்துப்போன்ற எழுத்திற் செவ்வையாக அச்சிட்டு, கண்கவர் கவின் கட்டடங் கட்டி, உலக முழுதும் பரப்பித் தமிழ்நூல் வெளியீட்டுத் துறையில் வாகை சூடியும், இந்தி யெதிர்ப்புப் போராட்டத்தில் ஆழ்ந்து இடுபட்டும், ஓய்வுபெற்ற தமிழ்ப் புலவர்க்கு வேலை யளித்தும், சென்னை வாணர்க்குச் சிறப்பாகப் பயன்படும் மறைமலையடிகள் நூல்நிலையத்தை நிறுவியும், ஆங்காங்கு நூற்காட்சி யமைத்தும், ஆண்டு தோறும் மறைமலையடிகள் விழாக் கொண்டாடியும், தனித் தமிழ்த் தொண்டரை ஊக்கியும், இடைவிடாது தமிழைக் காத்து வருபவர், தாமரைத்திரு வ. சுப்பையாப் பிள்ளை ஆவர்.

(௩) பாவலர் பெருஞ்சித்திரனார்

பட்டம் பதவியோ செல்வச் சிறப்போ அமைச்சர் துணையோ சற்றும் இல்லா திருந்தும், தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களும் அரசுகளும் வெட்கித் தலைகுனியவும், அகப் பகையும் புறப் பகையும் அடியோ டொழியவும், தமிழன்பர் தம் தவப் பயனை வியந்து மகிழவும், (சித்தியம் ஆரியம் சேமியம் என்னும்) முப்பெரு மொழிக் குடும்பங்களும் குமரி நாட்டுக் குலத் தமிழே உலக முதற்றாய் உயர்தனிச் செம்மொழி யென்று முரசறைந்து சாற்றவும், மக்களினமுள்ள காலமெல்லாம் முத்தமிழ் அரியணையில் வீற்றிருந்து மொழியுலகம் முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆளுமாறும், தமிழன் தலைநிமிர்ந்து ஏறுபோற் பீடுநடை கொள்ளுமாறும், எருதந்துறை ஆங்கிலச் சொற் களஞ்சியத்தை யொத்த, பன்னிரு மடலச் செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகர முதலியை உருவாக்கவும் வெளியிடவும், இதுவரை எவரும் செய்யாத வகையில் 'தென்மொழி'த் திட்டம் வகுத்து, எதிர்காலத் திட்டம் தமிழ் வரலாற்றில் தம் பெயரைப் பொன்னெழுத்திற் பொறிக்குமாறு செய்து கொண்டவர், 'தென்மொழி' ஆசிரியர் **பாவலர் பெருஞ்சித்திரனார்** ஆவர்.

புரட்சிப் பாவேந்தன் கனவு இன்னும் நனவாகவில்லை

தமிழை மூலமாகக் கொண்ட மேலையாரிய வகையான கிரேக்கத்திற்கு நெருக்கமாயிருந்து, இந்தியாவிற்கு வந்தவுடன் வழக்கற்றுப்போய் வடதிரவிடமாகிய பிராகிருதத்துடன் இரண்டறக் கலந்து வேதமொழியாகி, பின்னர்த் தமிழை யண்டி அதனாற் பெரிதும் வளம்படுத்தப்பட்டு அரைச்செயற்கை இலக்கிய நடைமொழியான சமற்கிருதத்தை, உலக அளவில் தலைமையாக்குதற் பொருட்டு, ஒரு புதிய சமற்கிருத ஆங்கிலப் பேரகர முதலி உருவாக்குதற்கு, இந்திய நடுவணரசும், மராட்டிர அரசும், பல்கலைக் 'கழக நல்கைக் குழுவும், பூனாப் பல்கலைக் கழகமும், ஒன்றிய நாட்டினங்களின் அமைப்பும்' (U. N. O.), இரு கோடிக்கு மேல் ஒதுக்கி யுள்ளன.

தமிழ் நாட்டிலோ, உலக முதற்றாய் உயர்தனிச் செம்மொழியான செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகர முதலி உருவாக்கவோ, சமற்கிருதக் கிளையென்றும் பன்மொழிக் கலவை யென்றும் பிரா

மணப் புலவர் காட்டியுள்ள நச்சுத் தன்மை நிறைந்த சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகர முதலியைத் திருத்தவோ, இற்றை யரசு ஒரு சிறு தொகையும் ஒதுக்கவில்லை.

தமிழ் நாட்டைத் தமிழ் நாடென்று அரசிய லேட்டிற் குறித்த தனுலும், அரசினர் சாலைக் கடத்தப் பேரியங்கிகளில் (Govt. Road Transports Buses) ஒவ்வொரு திருக்குறட் பலகையை ஆணியறைந்து வைத்ததனுலும், தமிழ் வடமொழியினின்றும் இந்தியினின்றும் விடுதலை பெற்று வளர்ந்து விடாது.

தமிழின் உண்மையான இயல்பை யறிந்து அதை அஞ்சாது போற்றிக் காப்பவன் தமிழ்நாட்டு ஆட்சித் தலைவனுகும் போதே, "தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சாய் வருதல் வேண்டும்." என்னும் பாரதிதாசன் கனவு நிறைவேறி யதாகும்.

தமிழ் திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமும் ஆகும் என்னும் உண்மையை, உலகறிய நாட்டுவேன். அதன்பின், நடுவணரசு வடமொழி அகர முதலிக்குத் தரும் தொகைபோல் ஒன்றரை மடங்கேனும் தமிழகர முதலிக்குத் தராவிடின், தமிழ் நாடு கீழ்வங்க நாடு போற் **பிரிந்தே யாகல் வேண்டும்.**

சுரை யாழ அம்மி மிதப்பு

தமிழ்ப் புலவர் தமிழைப் பழம் பெருமைக்குக் கொண்டுவர வேண்டுமென்றும், ஆசிரியர் அறிவியல் மனப்பான்மை கொள்ள வேண்டுமென்றும், அடிக்கடி அமைச்சரால் சொல்லப்படுகின்றது. ஆயின், அறிவியல் முறைப்படி தமிழை ஆய்ந்து வளர்ப்பவர் பிழைப்பின்றிச் சாகவும், தமிழைக் காட்டிக் கொடுப்பவர் மேன் மேலுயர்ந்து வாழவுமே, இற்றைத் தமிழ்நாட்டு நிலைமையுள்ளது. இத்தகை நிலைமையையே,

> "சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய
> யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
> கானக நாடன் சுனை."

என்று முன்னேர் பாடிக் காட்டினர். இந்நிலைமையே நீடின், இனித் தமிழு மில்லை; தமிழாராய்ச்சியு மில்லை. எல்லா மொழியுங்

கலந்த கொடுங் கொச்சைக் கலவைதான் தமிழ் என்று வழங்கும். அதன்பின்,

''ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதைந்தாலும்
சீரியவுன் பழையவிளஞ் செவ்விநிலைந் தேத்துதுமே''

என்றே பாட நேரும். இன்று நான் உடம்போடிருந்து இந்நூலெழுதுவதற்கு ஏதுவா யிருந்தவர், பாவலர் பெருஞ்சித்திரனுர், செட்டிகுளத்து நெசவாசிரியர் திரு. நாகமுத்தனுர், செங்காட்டுப்பட்டித் திரு. செந்தமிழ்க்கிழார், அன்னத்தாளக ஆசிரியர் திரு. முருகனுர், என் மதுரை மணிவிழாக் குழுவார், புன்செய்ப் புளியம்பட்டி மறைமலையடிகள் மன்றத்தார், தவத்திருக் குன்றக்குடி யடிகள் ஆகியோரே.

தமிழுக்கு ஒரு நன்மையும் செய்யாதவர் தெருத் தெருவாக சிலைக்கு வாங்கவும், தமிழுக்கே தம் வாழ்நாளைத் தத்தஞ்செய்தவர் ஏன் குடியிருக்க வாடகை வீடு தேடித் தெருத்தெருவாய் அலைய வேண்டும்?

முக்குலத்தார் கடமை

தமிழருள் மூவகுப்பார் முதன்மை யானவர். மரக்கறி வெள்ளாளர் நிறத்திலும் கல்வியிலும், நாட்டுக்கோட்டைச் செட்டிமார் செல்வத்திலும், மறவர் மறத்திலும், சிறந்தவராவர். இம் மூவகுப்பாரும் தமிழையும் தமிழப் பண்பாட்டையும் தமிழினத்தாரையுமே தாங்கிக் காத்தல் வேண்டும்.

தமிழ்நாடு முன்னேறும் வழிகள்

தமிழகம் வரவரக் குன்றியமை

ஒரு காலத்தில், முழுகிப் போன தமிழ்நாடாகிய பழம் பாண்டி நாடும் நாவலந் தீவு என்னும் இந்தியா தேசமும், தமிழகமா யிருந்தன. பழம் பாண்டி நாடு மூழ்கியபின், விந்தியமலைக்கு வடக்கிலுள்ள நிலப்பகுதி பிராகிருதம் என்னும் வட திரவிட நாடாகி, ஆரியர் வந்தபின் ஆரியா வர்த்தம் என்னும் ஆரிய நாடாக மாறிற்று.

அதன்பின், குசராத்தி மராட்டியம் ஒட்டரம் (ஒரிசா) ஆகிய நாடுகள், முன்பு திரவிடமாக மாறிப் பின்பு ஆரியமாகத் திரிந்தன.

அதன்பின், வடுகம் என்னும் தெலுங்க நாடும் பின்னர்க் கன்னட நாடும் திரவிடமாக மாறின. கன்னடநாடு ௭-ஆம் நூற்றுண்டு வரை தமிழ்நாடாகக் கருதப்பட்டது. அதனுல், வட கன்னடத்திலுள்ள **கோகர்ணம்** அப்பர் சம்பந்தர் ஆகிய இருவரின் தேவாரப் பாடல் பெற்றது. அம்மட்டத்திற் கீழ்கரை வரையுள்ள இற்றைத் தெலுங்கு நிலமும், அன்று தமிழ் நிலமாயிருந்தது.

கன்னட நாடு தோன்றியபின், தெலுங்கு நாட்டின் தென்னெல்லே அல்லது தமிழகத்தின் வடவெல்லே, சற்றுத் தெற்கே தள்ளிவந்தது.

பன்னிரண்டாம் நூற்றுண்டின்பின், மூவேந்தர் தமிழ் நாடுகளுள் ஒன்றுன சேரநாடு, கேரள நாடு அல்லது மலேயாள நாடு என்னும் திரவிட நாடாகப் பிரிந்து விட்டது.

எஞ்சிய சோழ பாண்டி நாட்டு நிலப்பரப்பே, இன்று தமிழ் நாடும் புதுவை நாடுமாகப் பிரிந்த தமிழகமாக இருந்து வருகின்றது.

இதிலும் சில வட்டங்களேக் (கூற்றங்களேக்) கன்னடர் சுறண்டப் பார்க்கின்றனர்.

தமிழ்த் திரிபினுலேயே, தமிழர் பல்வேறு சிற்றினங்களாக மாறினர்; பல்வேறு நாடுகளும் தோன்றின. அதனுல் தமிழகமும் வர வரக் குறுகிற்று. இனிமேலுங் குறுகாவாறு, செந்தமிழ் நடையைப் போற்றிக் காத்தல் வேண்டும்.

ஆரிய நச்சுத் தன்மை இன்னும் அருமை

மறைமலேயடிகள் தனித்தமிழ்க் கிளர்ச்சி தொடங்கிய **௧௯௧௬-ஆம் ஆண்டிலிருந்து, வடசொல் வழக்கிற்கு எத்தனேயோ வகையில் எதிர்ப்பிருந்து வந்தும், இன்னும் ஆரியர் ஒல்லும் வகையிற் செல்லும் வாயெல்லாம் வடசொல்லேப் புகுத்துவதிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கின்றனர்.**

சேலங் கல்லூரி மேனாள் முதல்வர் பேரா. அச்சுத நாயர் (எம். ஏ.) மலையாள நாட்டிற் பூங்குன்னம் என்னும் ஊரிலிருந்த போது, அவ்வூர்ப் பிராமணர், அவ்வூர்ப் பெயரைப் புஷ்பகிரி என்று மாற்ற நெடுநாட் பெருமுயற்சி செய்து, இறுதியிற் பேரா. அச்சுத நாயரின் துணை வேண்டினர். அதற்கு அவர் இசையாததால், அப்பெயர் மாற்றம் நிகழவில்லை.

(க) ஆங்கிலக் கல்வி

தமிழுக்கு நெருக்கமாயும் அறிவியல் இலக்கியப் பெட்டகமாயும் அமைப்பிலும் வழக்கிலும் உலகப் பொதுமொழியாயும் உள்ள ஆங்கிலம், தமிழர் முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது. தமிழ் ஆங்கிலம் ஆகிய இரண்டும் கல்வி வாயிலாயிருத்தல் வேண்டும். தமிழ் வாயிற் கல்வியால் தமிழ்ப் பற்று வந்துவிடாது; ஆங்கில வாயிற் கல்வியால் தமிழ்ப் பற்றுப் போய்விடாது. தமிழ் வாயிற் கல்வியே தமிழ்ப் பற்றைக் காட்டுமென்பது, ஆங்கிலர் மீது வெறுப்பும் ஆங்கில வறியாமையுங் கொண்ட அரசியற் கட்சித் தலைவராற் பரப்பப்பட்ட, குருட்டுமடக் கூற்றுகும். இரசியரும் சப்பானியரும் போல் தமிழர் புதுப்புனைவாளராகும் வரை, ஆங்கில வாயிற் கல்வி இருந்தே தீரல் வேண்டும். குளத்தொடு புலந்து குளியாமலும் கூவலொடு புலந்து குடியாமலும் போனவனுக்கு, கேடேயன்றி ஆக்கமில்லை.

(உ) தனித்தமிழ்

தமிழ் என்பது தனித்தமிழே. தனித்தமிழாலன்றிக் கலவைத் தமிழால் தமிழன் உயர்வடைய முடியாது. தமிழென்று பெயரிட்டுக் கலவைத் தமிழ் வழங்குபவன், அவலை நினைத்துக் கொண்டு உரலை யிடிப்பவனே யாவன்.

(ங) ஆராய்ச்சியாளரைப் போற்றலும் (கோவைக் கோ. துரைச்சாமி நாயக்கர் (G. D. நாயுடு) போன்ற) புதுப் புனைவாளரை (inventors) ஊக்கலும்

செயற்கை மழை பொழிவிப்பு, கடல் நீரை நன்னீராக்கல், மண்ணினின்று நேரடியாக உணவுருவாக்கல், பாலையை மருதமாக்கல், கரடுகளையும் பாறைகளையும் தகர்த்து மனை நிலமாக்கல்,

கதிரவன் வெம்மையைச் சமையற்குப் பயன்படுத்தல், நச்சுக் காய்கனிகளை நல்லனவாக்கல், கனி தரா மரஞ்செடி கொடிகளைக் கனி தரச் செய்தல், வெப்பமான காலத்திலும் இடத்திலும் குளிர் காற்று வீசுவித்தல், தீங்கு செய்யும் பூச்சிகளையும் ஊரிகளையும் அறவே தீர்த்தல், மருந்திலா நோய்கட்கு மருந்து காண்டல், உள்ளக் கருத்தை அறிதல், இறந்தவனை எழுப்பல், பேரொலியைச் சிற்றொலியாக்கல், மூளையைத் திருத்தி மடையனை மதிஞனாக்கல், கூனுங் குருடும் ஊமுஞ் செவிடும் முதலிய எச்சப் பிறவிகளைச் சீர்ப்படுத்தல் முதலிய பல்வேறு அருஞ் செயல்களை, அறிவியற் பெரு மதிஞரைக் கொண்டும் சூழ்ச்சியத் திறவோரைக் கொண்டும் ஆற்றுவித்தல்.

(ச) பல்கலைக் கழகங்களில் ஆராய்ச்சிப் பதவிகளில் இருக்கும் தமிழ்ப் பகைவரை அகற்றல்.

(ரு) இலவசக் கட்டாயத் துவக்கக் கல்வி

துவக்கக் கல்வியால் தான், தாழ்த்தப்பட்ட வகுப்புப் பொது மக்கட்கு நாகரிகமும் தன்மான வுணர்ச்சியும் துப்புரவும் உண்டாகும். அதனால் தீண்டாமை நீங்கித் தமிழின ஒற்றுமை ஏற்படும். ஒருசிலர் கல்வி கற்பதால் மட்டும் முன்னேற்றம் வந்து விடாது. பிற வகுப்பாரொடு குடியிருக்கவும் கடைத்தெருவிலிருந்து வணிகஞ் செய்யவும், கல்வியறிவும் துப்புரவும் ஒழுக்கமும் இன்றியமையாதன. இவ்வகை முயற்சியில் நாடார் குலத்தினரைப் பின்பற்றல் வேண்டும்.

பொதுத் தேர்தலில் தகுந்த தலைவரைத் தேர்ந்தெடுக்கவும், தமிழ்ப் பொத்தக வெளியீடுகள் பல்கவும், சிறந்த அறிஞரும் புதுப்புனைவாளரும் தோன்றவும், புலவர் போற்றப்படவும், கட்டாயத் துவக்கக் கல்வி பெரிதுந் துணை செய்யும். ஆயிரக் கணக்கான ஆசிரியர்க்கு வேலையுங் கிடைக்கும்.

(சு) பிறப்புப் பற்றுது தொழில் பற்றிய குடிமதிப்பு (Census).

(எ) கல்வித்துறையிற் குலப்பட்டத்தை நீக்கல்.

(அ) மக்கள் தொகைக் குறைப்பு

இந்தியா ௩௦ கோடி மக்களைத்தான் தாங்க முடியும். இன்று ௫௬ கோடியாக மக்கள் தொகை பெருகியுள்ளது. இங்ஙனமே தமிழ்நாடும் இருமடங்கு பெருகியுள்ளது. இதனால், காடழிவும் மழையின்மையும் உணவுத் தட்டும் விறகுத் தட்டும், வேட்டை விலங்கு பறவையின மறைவும், கால்நடை மேய்ச்சல் நிலமின்மையும், புன்செய் நிலக் குறைவும், குடியிருப்பு நில வீடின்மையும், ஏற்பட்டுள்ளன. இக்குறைகள் மேன்மேலும் வளரத்தான் செய்யும். மக்கள் பெருக்கத் தடுப்பைவிட (ஏற்கெனவேயுள்ள) தொகைக் குறைப்பே நன்று. இதற்கென்று தனித் திணைக்களம் ஏற்படுத்தி, உள்ள தொகையிற் பாதி குறையும்வரை, ஐந்தாண்டிற்கொருமுறையே திருமணங்கள் நடைபெறுமாறு சட்டம் பிறப்பித்தல் வேண்டும். இன்றேல், அடுத்த நூற்றாண்டு பஞ்ச நிலை ஏற்பட்டு, அரசினர் அடக்க முடியாவாறு களவுங் கொள்ளையுங் கொலையும் மிகும்.

(ஆ) முன்னோக்கும் சேணோக்கும்

நாடாளும் அரசன், தன்காலத்திற்குப் பின்பும் நாட்டிற்கு நன்மை பயக்குந் திட்டங்களைக் கையாள வேண்டும்.

கடைக்கழகப் பாண்டியரும், கரிகால் வளவன், இராசராசன், இராசேந்திரன் முதலிய சோழரும், இலங்கையில் தமிழரைக் குடியேற்றி எளிதாக அதைத் தமிழ்நிலமாக்கி யிருக்கலாம். அதை அவர் செய்திலர்; தம் காலவுயர்வை மட்டும் கருதினர்.

கி. பி. ௧௫-ஆம் நூற்றாண்டிற்குப் பின் கடலாட்சி பெற்ற ஆங்கிலர், ஆறாயிரங் கல் தொலைவிலிருந்து வந்து, அதன் மேலும் தமிழகத்திற்குத் தென்கிழக்கில் நாலாயிரம் கல் தொலைவிலுள்ள தென்கண்டம் (ஆத்திரேலியா) முழுவதையும் கைப்பற்றி விட்டனர். தமிழரோ, கி. மு. ௫௦-ஆம் நூற்றாண்டிலேயே கடலாட்சி பெற்றுச் சாலித் தீவைக் (Java) கைப்பற்றியிருந்தும், கி. பி. ௧௦-ஆம் நூற்றாண்டிலும் கடாரத்தை (பர்மாவை) வென்றிருந்தும், ஐம்பது கல் தொலைவிலேயே அணித்தாகவுள்ள இலங்கையையு மிழந்து, ஒண்டியிருக்கவும் அங்கு இடமின்றித் திண்டாடுகின்றனர்.

(௧௦) தமிழனை முன்வைத்த இரட்டைப் பகுப்பு

நயன்மைக் கட்சியார், தமிழ் நாட்டு மக்களைத் தவறாகப் பிராமணர் பிராமணரல்லார் என்று பிரித்தனர். அது வந்தேறிகட்குச் சிறப்புக் கொடுத்து நாட்டு மக்களைக் குறைவுபடுத்துவதாகும். தமிழர் தமிழரல்லார் என்றே பிரித்தல் வேண்டும்.

தமிழர் யார்?

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்பதே தமிழர் கொள்கை. தமிழைப் போற்றுவாராயின், தமிழருக்கு மிக நெருக்கமான திரவிடர் மட்டுமன்றி, மராட்டியர் மார்வாடியர் முதலிய வடநாட்டாரும், ஆப்பிரிக்கர் ஐரோப்பியர் முதலிய அயல் நாட்டாரும், தமிழரே.

பெருமையெனப் புன்செருக்கிற் பிரிந்து வாழ்ந்து
பிறருக்கொன் றீயாத புல்ல ரேனும்
எருமையொடு குரங்கரவம் தவளை தின்பார்
இரப்பெடுப்பார் தீயதொழு நோய ரேனும்
கருமைமிகும் ஆப்பிரிக்கர் முண்ட மெய்யர்
காடுறையும் விலங்காண்டி மாந்த ரேனும்
அருமையுறுந் தனித்தமிழை விரும்பு வாரேல்
அவரன்றோ தலையாய தமிழர் கண்டீர்.

தமிழைப் போற்றுதலாவது, தமிழ் திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமுமாகும் என்னும் உண்மையை ஒப்புக் கொள்வதே.

(௧௧) பரிசுச் சீட்டு நிறுத்தம்

ஆசை காட்டல், போட்ட பணம் மீளாமை, உழைப்பின்றிப் பிறர் பணத்தால் விரைந்து செல்வராதல், இழப்பால் வருத்தமுழ்வென்றவன் பாற்பொறாமையும் உண்டுபண்ணல், எத்தனைமுறையாடினும் எல்லாரும் வெல்ல முடியாமை ஆகிய சூதாட்டியல்புகளுடன், அயல் மாநிலத்திற்குப் பணம் போதலாகிய தீதும் கூடிய பரிசுச் சீட்டுத் திட்டம், தமிழ் நாட்டில் தோன்றிய திருவள்ளுவர் பெயருக்கு இழுக்கு நேராவண்ணம், உடனே நிறுத்தப் பெறுவதே நன்றாம்.

பொதுநலத் திட்டங்கட்கு வேண்டும் பணத்தை, செல்வ ரிடத்தன்றி ஏழை மக்களிடமிருந்து பெறுவது எவ்வகையிலும் பொருத்த மின்றாம்.

(கஉ) பொறுப்பாட்சி (Responsible Government)

மக்கள் தொகை மிகாத இடைக் காலத்தில், அரசன் அல்லது முதலமைச்சன் நாடாளு மன்றத்திற்கே (Legislature) கணக் கொப்புவிப்பவனா யிருந்தான். இன்றோ, முன்போல் எல்லார்க்கும் பிழைப் பின்மையால், ஆட்சித்தலைவன் குடிகள் என்னும் பொதுமக்கட்கே நேரடிப் பொறுப்பாளன் ஆகின்றான். ஆதலால், நாட்டிற் பிறந்த அனைவர்க்கும் பிழைப்பு வழி வகுத்தல் வேண்டும். அஃதியலாக் கால், நேர்மையான முறையில் மக்கள் தொகையைக் குறைத்தல் வேண்டும்.

வீடு கட்ட நிலப் பரப்பைப் பயன்படுத்தாது வான்வெளியையே பயன்படுத்தி, வானளாவிகள் (skycrapers) எழுப்ப வேண்டும். நிலப் பரப்பைப் பயன்படுத்தின், பழனங்களையும் ஏரிகளையும் விட்டுவிட்டுப் பாறை நிலத்திலும் கல்லாங்குத்திலும் முரம்பு மேட்டிலுமே கட்ட வேண்டும். விளை நிலங்கள் என்றும் விளை நிலங்களாகவே யிருத்தல் வேண்டும்.

(கங) மாணவர் அரசியற் கட்சியிற் சேராமை

மாணவர், கல்வியிலேயே முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டிய பயிற்சி யாளராயும், தத்தம் திறமைக்கும் மனப்பான்மைக்கும் ஏற்பப் பிழைப்புவழி தேடும் முயற்சி யாளராயும், பட்டறிவும் அகக்கரண வளர்ச்சி நிறைவும் பெறாத இளம் பருவத்தாராயும், இருப்பதால், அவர் அரசியற் கட்சிகளிற் சேர்தலோ சேர்க்கப் படுதலோ, கல்விநெறிக்கு மாறும் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையும் ஆன கேடாகும். இதைக் கல்வி யமைச்சன் மார் கண்டித்துத் தடுக்க வேண்டி யிருக்க, அதற்கு மாறாக அதை ஊக்குவது, வேலியே பயிரை மேய்தல் போன்றாம். அரசியற் கட்சியைச் சார்ந்த மாணவரின் அகக்கரண வியல்பு, பெரும்பாலும் இயற்கை வளர்ச்சியடையாது கட்சியச்சில் வார்க்கப் பட்டு விடுகின்றது. அதனால், அவர் தனிப்பட்ட தன்மையும் திறமும் அவர்க்கும் நாட்டிற்கும் பயன்படாது போகின்றன.

தமிழின ஒற்றுமை

இங்கிலாந்தில், ஐபீரியர், கெலத்தியர் (Celts), பித்தியர் (Picts), காட்டியர் (Scots), ஆங்கிலர், சாகசனியர் (Saxons), சூதியர் (Jutes), தேனியர் (Danes), நார்மனியர் (Normans) முதலிய ஒன்பான் அல்லது பன்னிரு சிற்றினங்கள் கலந்த கலவைப் பேரினமாயிருப்பவர் இற்றை ஆங்கிலேயர். அதனால், மதி நுட்பமுள்ள மக்கள் பிறந்து, நீராவியும் நெய்யாவியும் மின்விசையும் கொண்டியக்கும் பல்வேறு பொறிகளையும் ஊர்திகளையும் புனைந்து, இற்றை அறிவியல்களைத் தோற்றுவித்திருக்கின்றனர். தமிழ்நாட்டிலோ, ஒரேயினம் ஆரியச் சூழ்ச்சியால் நூற்றுக் கணக்கான அகமணப் பிரிவுகளாகச் சிதைக்கப்பட்டு விட்டதனால், இன்றும் தமிழர்

"............................வளைவிற் பொறியும்
கருவிர லூகமும் கல்லுமிழ் கவணும்
பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும்
காய்பொன் னுலையும் கல்லிடு கூடையும்
தூண்டிலும் தொடக்கும் ஆண்டலை யடுப்பும்
....
சென்றெறி சிரலும் பன்றியும் பணையும்"

(சிலப். கரு: ௨0௭—௧௪)

நூற்றுவரைக் கொல்லி, தள்ளிவெட்டி, களிற்றுப்பொறி, விழுங்கும் பாம்பு, கழுகுப்பொறி, புலிப்பொறி, குடப்பாம்பு, சகடப் பொறி, தகர்ப்பொறி, அரிநூற்பொறி முதலியனவுமான, முன்னோர் செய்த மதிற்பொறிகளையுஞ் செய்யத் தெரியாது, மாட்டு வண்டியும் குதிரை வண்டியும் நர வண்டியும் தொடர்வண்டிக் கூண்டுமே செய்யும் நிலையிலுள்ளனர்.

இங்கிலாந்திலுள்ள மக்கள் பெயரெல்லாம் பெயரளவில் வழங்குகின்றனவே யன்றி, தமிழ்நாட்டிற்போல் சேம்பர்லேன் முதலியார், சர்ச்சில் செட்டியார், அத்திலீக் கவுண்டர், இடன் நாடார், வில்சன் பிள்ளை என்று பொருளற்ற வால்களுடன் வழங்குவதில்லை. (இங்ஙனமே ஏனை நாடுகளிலும்.)

அன்றியும், அங்கு மக்கள் வகுப்பை வினவின், தொழிலடிப் படையில் உழவர் வணிகர் ஆசிரியர் கணக்கர் என்று சொல்லு

கின்றனரேயன்றி, இங்குப்போல் ஆசிரியனைக் கம்மாளன் (ஆச்சாரி) என்றும், கணக்கனை வணிகன் (செட்டியார்) என்றும், கட்டடவேலை செய்பவனைப் படைத்தலைவன் (முதலியார்) என்றும், தையற்காரனைப் பாடகன் (பாணன்) என்றும், ஒரே வேலை செய்பவரைப் பல்வேறு தொழிற் குலத்தாராகவும், இல் வாழ்வானைத் துறவி (ஐயர்) என்றும், பகுத்தறிவின்றிச் சொல்வதில்லை.

இனி, மாணவனின் அறியாமையைப் போக்கி அவனுக்கு உண்மையான செய்திகளை அறிவிக்கக் கடமைப்பட்டுள்ள ஆசிரியன், மாந்தனூலும் (Anthropology) உடல்நூலும் (Physiology) கற்றவனா யிருப்பினும், அவற்றிற்கு மாறாக, பிறப்படிப்படையில் அவனை ஓர் இனமாகவும் (Species) தன்னை மற்றோரினமாகவும் கூறுவதும், இங்ஙனமே கல்வியதிகாரியும் கல்வித்துறை இயக்குநரும் கல்வியமைச்சரும் பல்கலைக்கழகத் துணைக் கண்காணகருங் கூறுவதும், ஆசிரியன் மாணவனைப் பிறப்பில் தாழ்ந்தவனென்றும் மாணவன் ஆசிரியனைப் பிறப்பில் தாழ்ந்தவனென்றும் கொள்வதும், எத்துணைக் கேடான செயல்! இத்தகைக் கல்வியால் ஒரு நாடு முன்னேற முடியுமோ?

பிறவிக் குலப் பிரிவினையால் விளையும் பெருங்கேடுகள்

(க) உலகுள்ள அளவும் ஒற்றுமை யின்மை.
(உ) இன முன்னேற்ற மின்மை.
(௩) தமிழ் மொழி யிலக்கிய வளர்ச்சி யின்மை.
(௪) தமிழப் பண்பாட் டழிவு.
(௫) அடிமைத்தனமும் தாழ்வும் தொடர்கை.
(௬) மதிவிளக்கமும் உடல் வலிமையுமுள்ள மகப்பேறின்மை.
(௭) அயலார்க்கும் தகுதியில்லார்க்கும் பதவிப் பேறு.
(௮) பகுத்தறிவைப் பயன்படுத்தாமை.

ஒருவர் எத்துணை யுயரினும், தம்மை நாடார் என்று சொல்லிக் கொள்ளின், குல ஏணியில் அவருக்குரிய படியில் தான் அவரை வைப்பர். அதனால் அவர் வெள்ளாளரொடு உறவாட முடியாது. அங்ஙனமே, வெள்ளாளரும் எத்துணை உயர்வா யிருப்பினும், அவர் பிராமணருக்குத் தாழ்ந்தவராகவே கருதப்படுவர். ஆதலால், ஆரியக் குல ஏணியைத் தூள்தூளாக்கிச் சுட்டெரித்

தல் வேண்டும். ஒரு குலத்தாரிடை ஒரு நற்பழக்க மிருப்பின், அதைப் பிறரும் மேற்கொள்ள வேண்டும்; தீப்பழக்க மிருப்பின் அதை விட்டொழிக்க வேண்டும். நாகரிகம், துப்புரவு, ஒழுக்கம், கல்வி, செல்வம், அதிகாரம், மதிநுட்பம் முதலியவற்றாலேயே உண்மையான உயர்வுண்டாகும். நான் கார்காத்த வெள்ளாளன் என்றும், நான் படைத்தலைக் கவுண்டன் என்றும், சொல்வதால் மட்டும் உயர்வுண்டாகாது. துருக்கியைத் திருத்தி முன்னேற்றிய **கமால் பாசா** போல், ஒருவர் தமிழ்நாட்டிற்குத் தேவை. கல்வியறிவிற் சிறந்த அண்ணாத்துரையாரினும் ஆள்வினையிற் சிறந்த **அருட் செல்வனார்** (கருணாநிதியார்) அப்பொறுப்பேற்றுக் குமுகாயத் துறை மேடுபள்ளங்களைச் சமப்படுத்தி, தாம் **தமிழவேள்** என்று நாட்டுவாரா?

காலக் கடப்பு

உலகத்தில் முதன் முதல் தோன்றி நாகரிக விளக்கேற்றிய நாடு தமிழகம். பிந்தித் தோன்றிய நாடுகளெல்லாம் முன்னேறி விட்டன.

ஆங்கில நாடு தோன்றியது ரு-ஆம் நூற்றாண்டு; முன்னேறியது கஅ-ஆம் நூற்றாண்டு. **அமெரிக்க ஒன்றிய நாடுகள்** (U.S.A.) தோன்றியது கஅ-ஆம் நூற்றாண்டு; முன்னேறியது ககூ-ஆம் நூற்றாண்டு. அ. ஒ. நா. ஆங்கில நாட்டின் கான்முளையே.

பிரான்சு தோன்றியது கி. மு. எ-ஆம் நூற்றாண்டு; முன்னேறியது கி. பி. ககூ-ஆம் நூற்றாண்டு. **செருமனி** தோன்றியது கி. மு. ச-ஆம் நூற்றாண்டு; முன்னேறியது கி. பி. ககூ-ஆம் நூற்றாண்டு. **இரசியா** தோன்றியது கி. பி. முதலாம் நூற்றாண்டு; முன்னேறியது உ௦-ஆம் நூற்றாண்டு. இவற்றின் முன்னேற்றத்திற் கெல்லாம் மூலம் ஆங்கில முன்னேற்றமே.

சப்பான் தோன்றியது தோரா. கி. மு. உ௦௦௦; முன்னேறியது கி. பி. ககூ-ஆம் நூற்றாண்டு. **சீனம்** தோன்றியது தோரா. கி. மு. உ௦,௦௦௦; தாள் செய்தது கி. பி. உ-ஆம் நூற்றாண்டு; அச்சுப் பொறி புனைந்தது கி. பி. சு-ஆம் நூற்றாண்டு; மேலையறிவியல் முறையில் முன்னேறியது உ௦-ஆம் நூற்றாண்டு.

தமிழன் முதன்முத லடைந்த முன்னேற்றம் மூவாயிரம் ஆண்டாகத் தடுக்கப்பட்டுள்ளது. இன்றேல், அவன் தான் முதன்முதல் திங்களை யடைந் திருப்பான். இன்றுள்ள மக்கட் பெருக்க வேகம் தொடரின், அடுத்த நூற்றாண்டு கொடிய உண வுப் பஞ்சமும் உறையுட் பஞ்சமும் ஏற்படுமென்று, மக்கள் நூலார் (Demogrphers) அடிக்கடி வன்மையாக எச்சரித்து வருகின்றனர். கிறித்தவ ஊழியர் உலக முடிவு நெருங்கி விட்டதென்கின்றனர். இந்நிலையிலும், கடத்தி வையாது உடனே தமிழன் முன்னேற முயல வேண்டும்.

தமிழன் முன்னேற்றத் தடை

உயரப் பறக்கும் பருந்தின் காலிற் கட்டப்பட்டுள்ள பாருங் கல் போல், தமிழன் உயர் முன்னேற்றத்தைத் தடுப்பது, பிரா மணனுயர்வை அடிப்படையாகக் கொண்ட பிறவிக் குலப் பிரி வினையே.

பிராமணன் பிறப்பில் உயர்ந்தவன் அல்லன். அவன் எளிய இரப்போனாய் இங்கு வந்தவன். ''முட்டி புகும் பார்ப்பார்'' என்று கம்பர் பாடியிருத்தல் காண்க. பண்டை வெண்ணிறமும் இன்றவனுக் கில்லை. இன்று வெள்ளையரா யிருப்பவர் ஐரோப்பிய ரும் அவர் வழியினருமே. மாந்தன் மூச்சொலியும் முழங்கொலி யும் தம்மளவில் இறைவனுக்கேற்றவை யல்ல. கழுதை கத்தலும் அரிமா உரறலும் களிறு பிளிறலும் மாந்தனொலிகளினும் வலியன. இறைவனை இன்புறுத்துவது ஏழை யடியானின் தூய வுள்ளமே. கல்லா அடியானின் திருந்தாச் சொல்லே, கடவுட்குக் குழலினும் யாழினும் இனிய மழலை மொழி. சிவநெறியும் திருமால் நெறியும் ஆரியர் இந்தியாவிற்குட் புகு முன்னரே தமிழர் கண்ட மதங் களே. என் 'தமிழர் மதம்' என்னும் நூலில் இது விரிவாக விளக் கப் பெறும். வேதத்திற்கும் தமிழ மதங்கட்கும் எள்ளளவும் தொடர்பில்லை. ஆதலால், சிவனியன் என்றோ திருமாலியன் என்றோ, இரண்டிற்கும் பொதுவாகத் தென்மதத்தான் அல்லது தமிழ மதத்தான் என்றோ தான், தமிழர் தம் மதத்தைத் தெரி வித்தல் வேண்டும். கிரேக்கத்திற்கு நெருங்கிய கீழையாரியமும், அதுவும் பிராகிருதமுங் கலந்த வேதமொழியும், வேதமொழியும் தமிழுங் கலந்த சமற்கிருதம் என்னும் இலக்கிய மொழியும், தேவ மொழியல்ல. அவற்றிற்கெல்லாம் மூலம் தமிழே.

தமிழன் ஒவ்வொருவனும் தான் பிறப்பில் தாழ்ந்தவன் அல்லன் என்று கருதி,

“பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்குந் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.” (குறள். ருoரு)

என்னும் நெறிமுறையைக் கடைப்பிடித்தொழுக வேண்டும். அதுவே கார்டியன் முடிச்சறுக்கும் (Cutting the Gordian knot) வழி.

“ஆரிய வேடனின் அயர்ந்தனை மறந்தனை
சீரிய மொழிநூல் செவ்வி தி னுணர்த்தலின்
மூரிய பெருமையை முற்று முணர்ந்தினே
பூரிய அடிமையைப் போக்குவை தமிழனே.”

பிராமணியத்தால் தமிழன் முன்னேற்றம் மட்டுமன்றி, உலக வரலாறு (World History), குமுகாய, பண்பாட்டு மாந்தனூல் (Social and Cultural Anthropology), பொதுமொழிநூல் (General Linguistics) என்னும் உலகந் தழுவிய மூவறிவியல் வளர்ச்சியும் தடைப்படுகின்றது.

தமிழ்நாட்டுப் பிராமணர்க்கு ஓர் அன்பெச்சரிக்கை

அன்பர்காள்,

நும் முன்னோர், வேறெந்நாட்டிலும் அயலார் கையாளாத வலக்காரங்களைக் கையாண்டு, கள்ளங் கரவற்ற பண்டைத் தமிழ் மூவேந்தரையும் ஏமாற்றி வயப்படுத்தி, அவர் வாயிலாகத் தமிழரிடை நும் தன்னலச் சிறு தெய்வ வேள்வி மதத்தைப் புகுத்தி, அதனால் தமிழ் கெடவும் தமிழிலக்கியம் இறந்துபடவும், தமிழர் இழிந்து சிதறி விடவும் செய்துவிட்டனர். அத்தீத் தொழிலை, அறிவாராய்ச்சியும் உரிமையுணர்ச்சியும் மிக்க இக் காலத்தும் நீவிர் தொடர்தல் இயலாததொன்றும்.

“ஊருடன் கூடிவாழ்.” (“When you are at Rome do as Rome does.”) என்ற முறைப்படி, தமிழருடன் உடன்பிறப்புப் போற் கூடி வாழ்ந்து, உண்மையாகவும் நன்றியறிவுடனும் தமிழைத் தாய் மொழியாகப் பேணின், நீவிரும் நும் வழியின

ரும் முழுவுரிமையுடன் தமிழ்நாட்டில் வழிவழி வாழவும் ஆளவும் இடமுண்டாம்.

தமிழைப் போற்ருது வெறுப்பவர் தமிழ்ப் பகைவராகவே நடத்தப்படுவர். ஒருசில வையாபுரிகள் நுமக்குத் துணையா யிருப்பது உண்மையே. ஆயின், அக்கூட்டம் நாளடைவில் தேய்ந்து மாய்ந்து போம்.

தமிழே திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமுமான உலக முதல் உயர்தனிச் செம்மொழியென்று, தமிழ் நாட்டிலும் இந்தியாவிலும் மட்டுமன்றி, உலக மேடையிலும் நாட்டப்பெறும். அதன்பின், தமிழ்நாட்டிற் சமற்கிருதம் இன்றுள்ள நிலையில் இருத்தல் இயலாது.

"எண்ணெயும் உண்மையும் இறுதியில் மேற்படும்." ("Oil and truth get upper most atlast.")

புரட்சி

இன்று தமிழன் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையா யிருந்து பழமை போற்றி வருபவர், பெரும்பாலும் முந்திய அல்லது மூத்த தலைமுறையினரே. இனிமேலும் அவ்வநாகரிகக் கொள்கையில் ஊன்றியிருப்பாராயின், விரைந்து ஒரு பெரும் புரட்சியே கிளர்ந்தெழும். இளந் தமிழர் உள்ளத்திலெல்லாம் ஓர் எரிமலை கொதித்துக் குமுறிக் கொண்டிருக்கின்றதென்றும், எச்சமையத்திலும் அது பொங்கி வழியுமென்றும், அவர் அறிவாராக.

தமிழர் வரலாறு முற்றும்.

பின்னிணைப்பு

உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாடுகள்

திருத் தனிநாயகம் தோற்றுவித்த **உலகத் தமிழ்ப் பேரவைச்** சார்பாக, இதுவரை நடைபெற்ற **உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாடுகள்** மூன்றாலும், தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவி விட்டதாகப் பல பேராசிரியரும் கருதிக் கொண்டிருக்கின்றனர். ஆரியத்தால் அடைந்த பேதைமை இன்னுந் தமிழருள்ளத்தினின்று நீங்கவில்லை யென்பதற்கு, இது ஒரு சான்றாம். தமிழனை ஆரியனும் ஏமாற்றுகின்றான்; திரவிடனும் ஏமாற்றுகின்றான்; தமிழனும் ஏமாற்றுகின்றான்.

பர். தெ. பொ. மீ. யின் மாணவரென்று தம்மைச் சொல்லிக் கொள்ளும் திருத் தனிநாயகம், தமிழ் வளர்ச்சிக் கென்று உலகத் தமிழ்ப் பேரவையைத் தோற்றுவித்ததாகத் தெரியவில்லை. அண்ணாமலை நகரில் அவர் என்னைப் பார்க்க வந்திருந்தபோது, 'சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகர முதலியிலுள்ள குற்றங்குறைகளை யெல்லாம் எடுத்துக் காட்டினேன். அதற்கு அவர் ஒரு விடையுஞ் சொல்லாது சென்று விட்டார். அதனால், அவருக்குத் தமிழ்ப் பற்றில்லை யென்றும், என் தமிழ்த் தொண்டிற்குப் பயன்படமாட்டாரென்றும், கண்டு கொண்டேன். அவரும், தாம் அமைக்கும் குழுக்களில் என்னைச் சேர்க்கக் கூடாதென்றும், சேர்ப்பின் அவர் வேணவா நிறைவேறாதென்றும், துணிந்து விட்டார்.

மறைமலையடிகளும் நானும், வயிறு வளர்க்கவோ பொருளீட்டவோ தமிழும் பிறவும் கற்காது, தமிழை வடமொழிப் பிணிப்பினின்று மீட்கவே பலவும் கற்றாய்ந்தோம். ஆயினும், திருத் தனிநாயகம் நடத்திய உலகத் தமிழ்க் கருத்தரங்குகள் மூன்றிற்கும், எனக்கு வெற்றழைப்பும் இல்லை. அவ்வரங்குகளிற் கலந்து கொண்ட தமிழ்ப் பேராசிரியருள் ஒருவரும் இதுபற்றி வினவவுமில்லை.

முதற் கருத்தரங்கு, முறைப்படி தமிழ்நாட்டில் நடைபெறாது, அயல்நாடான மலையாவில் நடைபெற்றது. கட்சித் தலைவர் பலர் சுற்றுலாச் செல்வதுபோற் குடும்பத்துடனும் அங்குச் சென்றனர்.

இரண்டாம் கருத்தரங்கு சென்னையில் நடைபெற்றது. தமிழன்பர் பலர் என்னைப் பற்றித் திரு. அண்ணாத்துரையார்க்கு எழுதினதினால், அவர் தம் ஆட்சியதிகாரத்தைப் பயன்படுத்தி, 'தமிழத்தாட்கள்' (Tamil Papers) என்னும் கடைப்பட்ட அ-ஆம் கட்டுரைக் குழுவில், இறுதியில் என் பெயரைச் சேர்த்துக் கொண்டார். எனக்குரிய குழு 'மொழிநூல்'. அதற்குத் தலைவரா யிருந்தவர் வங்கப் பிராமணரான பர். சட்டர்சி.

தமிழ் வல்லுயிருள்ள வழங்கு மொழியாதலால், உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாடு, மறைமலையடிகள் இல்லாத காலத்தில் அவர்கள் வழிப்பட்ட ஒரு மொழிநூலறிஞரான தமிழ்ப் புலவர் தலைமையில், தமிழருள்ள நாட்டில் தமிழிலேயே நடைபெறல் வேண்டும். அகப் பகைவரும் புறப் பகைவரும் அறவே விலக்கப் படல் வேண்டும். கட்டுரைகளெல்லாம் தமிழிலேயே படிக்கப் படல் வேண்டும். தமிழிற் பேசவோ எழுதவோ படிக்கவோ ஆற்ற லில்லார் பார்வையாளராக மட்டும் இருத்தல் வேண்டும். கருத்தரங்கு மாநாட்டு மண்டபத்திற் கருகில் அமைக்கப்படும் மாபெரும் பந்தற்கீழ், பொதுமக்கள் அமர்ந்து மாநாட்டு நிகழ்ச்சிகளையும் கட்டுரைகளையும் உரத்தொலிப்பான்கள் (Loud Speakers) வாயிலாகக் கேட்டறிதல் வேண்டும். மாநாடு முடிந்தபின், அதன் நடபடி(க்கை)கள் ஆங்கில அறிக்கை வாயிலாக அயல் நாட்டார்க்கு அறிவிக்கப்படல் வேண்டும். இம்முறையில் எம் மாநாடும் நடைபெறவில்லை.

சென்னைக் கருத்தரங்கு மாநாட்டில் தமிழ்க் கட்டுரை படிப் போர்க்கு வழிகாட்டியாக விடுக்கப்பட்ட, 'ஆராய்ச்சிக் கட்டுரை களுக்கான விளக்கக் குறிப்புகள்' என்னும் அறிவிப்பில்,

"யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்கிற தமிழ் முதுரையில் பொருத்தமாக வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒன்றே உலகம் என்னும் நம் வாழ்வு முறையின் உயர்வு நவிற்சியற்ற காட்சியை வழங்குவதே நம்முடைய நோக்கமாக இருக்க வேண்டும்.

> "..........................'கல்தோன்றி மண்தோன்றாக்
> காலத்து முன்தோன்றிய பழங்குடி'

என்பது போன்ற தக்க ஆதாரமில்லாத தற்பெருமையான கூற்றுக்கள், எதையும் அறிவியல் அடிப்படையில் ஆராய்ந்து பார்க்கும் நம்முடைய தகுதியிலும் திறமையிலும் அவநம்பிக்கைதான் ஏற்படச் செய்யும்."

என்றுள்ளது இஃதொன்றே, திருத் தனிநாயகம் உலகத் தமிழ்ப் பேரவை வையாபுரிகள் கூட்டம் என்பதைக் காட்டப் போதிய சான்றும்.

உலகத் தமிழ்ப் பேரவைத் தலைவரான, தமிழறியாத பேரா. **பில்லியோசா,** பண்டைநாளில் சமற்கிருதமே இந்தியப் பொது மொழியா யிருந்த தென்றார். ஆரிய மொழியினரான திரு. **ஐராவதம் மகாதேவன்** தமிழெழுத்தைப் பிராமியெழுத்தோடு தொடர்பு படுத்தி, தமிழெழுத்தும் தொல்காப்பியமும் கி. மு. உ-ஆம் நூற்றுண்டில் தோன்றின என்றார். கொச்சைத் தமிழ் நச்சியாரான **பர். காமில் சுவலெபில்,** மறைமலை யடிகளும் சோமசுந்தர பாரதியாரும் பாரதிதாசனும் தமிழைக் கெடுத்தவர் என்று அறிவித்தார். அவர் நற்றிணை என்னும் கடைக்கழகச் செய்யுட் பனுவலையும் 'நாலுவேலி நிலம்' என்னும் கடுங்கொச்சை நாடகப் பொத்தகத்தையும் அடிப்படையாகக் கொண்டு, தமிழ் தோன்றிய காலம் கி. மு. கரு00 என்று கணித்திருப்பதும், அது சென்னைப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டிருப்பதும், இற்றைத் தமிழர் மாபெரும் பேதையர் கூட்டம் என்பதையே காட்டும்.

பாரிசு மாநகரில் நடந்த ந-ஆம் உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாடும், சுற்றுலாக் கூட்டமாகவே நடந்தது. அதிற் கலந்து கொண்ட கட்சித் தலைவரையெல்லாம் தகுதி வாய்ந்தவரே யென்று, பொறுப்பற்றதனமாய் எழுதினர் ஒரு பொறுப்பு வாய்ந்த தமிழ்ப் பேராசிரியர். சிந்து வெளி நாகரிகம் திரவிடரது என்பது பர். காமில் சுவெலபிலால் மறுக்கப்பட்டு, அதன் தீர்ப்பு திரு. ஐராவதம் மகாதேவனிடம் ஒப்படைக்கப்பட்டது. உலகத் தமிழ்ப் பேரவையின் நோக்கம் ஆராய்ச்சியே யன்றி, தமிழை வளர்ப்பதோ பரப்புவதோ அன்றென்று திருத் தனிநாயகத்தால் வெளிப்படையாகச் சொல்லப்பட்டது.

அயல் நாட்டார்க்குத் தமிழைப் பற்றியிருந்த உயர்வான எண்ணம் வரவரத் தாழ்ந்து போனதே, முக்கருத்தரங்கு மாநாடுகளின் விளைவுமாகும். சமற்கிருத வெறியரான இருதிசையாரியரும் வையாபுரிகளும் வணிகப் புலவரும் தமிழறியாதவருமே, திருத் தனிநாயகத்தின் துணைவர். ஆதலால், அவரால் தமிழுக்கு நன்மையை எதிர்பார்ப்பது, களாச் செடியிற் பலாப் பழத்தைப் பறிப்பது போன்றதே.

பட்டம் பெறுவதும் பதவியுயர்த்துவதும் பெரும் பொருளீட்டுவதுமே வணிகப் புலவர் குறிக்கோள்.

"இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு." (குறள். ௩எச).

குமரிநாடே தமிழன் பிறந்தகம் என்பதை, வையாபுரிகள் போன்றே வணிகப் புலவரும் ஒத்துக் கொள்வதில்லை.

"உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும்." (குறள். அ௫௦).

A History of South India, The History and Culture of the Tamils, New Light on the Indus Civilization, Aryatara--ngini முதலிய எத்தனையோ வரலாற்று நூல்கள், தமிழுக்கும் தமிழர்க்கும் கேடாக வெளியிடப்பட்டு வருகின்றன. அவற்றை வணிகப் புலவர் கண்டிப்பதே யில்லை.

"நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்." (குறள். ௧௦எ௨).

வணிகப் புலவர் சிலர், பண்டாரகர்ப் பட்டம் பெற்ற அள வில், தம்மை அனைத்து மறிந்தவரென்றும் எல்லாம் வல்லுந ரென்றும் இறப்ப மதித்து, பல்கலைக் கழகத் துணைக் கண்காண கரையும் அமைச்சரையும் ஏமாற்றி வருகின்றனர். "தான் அறி யாதான் என்பதை அறியாதான் முட்டாள், அவனை விட் டொழி." ("He who knows not that he knows not is a fool, shun him.") என்பது ஓர் ஆங்கிலப் பொன்மொழி.

இங்ஙனம் தம்மை இறப்ப மதிப்பதால், தமிழ் கெடினும் கெடுக; தம்பெயர் மங்கக் கூடாதென்று, மறைமலையடிகளையும் அவர்கள் வழிப் புலவரையும் இருட்டடிப்புச் செய்து, செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகர முதலித் தொகுப்பைத் தம்மால் இயன்ற வரை தடுத்து வருகின்றனர். இது காலஞ் சென்ற பர். சேதுப் பிள்ளையிடம் பெற்ற பயிற்சி.

பிறநாட்டார்க்குக் கொச்சையும் (Barbarism) உலக வழக் கும் (Colloquialism) ஒன்றும். தமிழர்க்கோ அவை முறையே தள்ளத் தக்கதும் கொள்ளத் தக்கதுமாய் வெவ்வேறும்.

பர். காமில் சுவெலபில், தம் Lectures on Historical Grammer of Tamil என்னும் ஆங்கிலச் சுவடியில், கொச்சைத்

தமிழையும் உலக வழக்குத் தமிழொடு சேர்க்கும் முப்பேராசிரியரை வானளாவப் புகழ்ந்து, "the three most eminent Tamil scholars of our time" என்று (பக். ௧௨) குறித்திருக்கின்றார். அம்மூவருள், ஒருவர் மொழிநூலையே அறியாதவர்; ஒருவர் மேலையர் மொழிநூல்களைப் படித்து மட்டும் இருப்பவர்; ஒருவர் சமற்கிருத அடிப்படையில் தமிழாய்ந்தவர். இந்நூற்றாண்டில் முப்பெருந் தமிழ்ப் புலவர் என்று சொல்லத் தக்கார், **மறைமலையடிகளும் சாமிநாதையரும் கா. சுப்பிரமணியப் பிள்ளையுமே.**

சமற்கிருதப் பேராசிரியரான **பர். பரோவும் பர். எமெனோவும்** சிறந்த அறிஞரேனும், தமிழைச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகர முதலி கொண்டும், திரவிட மொழிகளை அவற்றிலுள்ள அகர முதலிகள் கொண்டும், படித்தவரே யன்றி, திரவிடமொழிகட்குத் தாயான தமிழை ஆழ்ந்து ஆய்ந்தவரல்லர். அதனால், ஆரிய மொழி திரவிடத்தினின்று ௫௦௦ சொற்கள் போற் கடன் கொண்டுள்ளதே யன்றி, ஆரிய மொழியமைப்பிற்குள் திரவிடம் புகவில்லை யென்று, முடிபு கொண்டு விட்டனர். அது தவறென்பது, என் A Guide to Western Tamilologists என்னும் ஆங்கில நூலில் விரிவாக விளக்கப் பெறும். எத்துணைப் பேரறிஞராயினும், அடிப்படை தவறின் முடிபும் தவறாகவே யிருக்கும். மேலை மொழிநூலார் எல்லாரும், தமிழர் நண்ணிலக் கடற்கரை நாடுகளினின்று வந்தேறிகள் என்னும் தவறான கொள்கையினரே.

ஒரு நாட்டு இலக்கியத்தை அயலார் கற்று அதில் தேர்ச்சி பெறலாம். ஆயின், அதன் மொழியை, அதைத் தாய்மொழியாகக் கொண்டவரொடு பிள்ளைப் பருவத்தினின்று நெருங்கிப் பழகினாலொழிய, ஒரே தலைமுறையில் அவர் போல் முற்றக் கற்க முடியாது.

ஒய்வு பெற்ற சமற்கிருதப் பேராசிரியரான **பரோவும்** (T. Burrow) **எமெனோவும்** (M. B. Emeneau) தொகுத்துள்ள திரவிட அகர முதலி, 'திரவிடச் சொற்பிறப்பியல் அகர முதலி' (A Dravidian Etymological Dictionary) என்று பெயர் பெற்றிருப்பினும், உண்மையில் ஓர் ஒப்பியல் அகர முதலியே (A Comparative Lexicon).

கால்டுவெலார் கருத்திற் கிணங்கத் தமிழை ஆழ்ந்து கற்றுத் திரவிடமொழிகளைக் கொடிவழி முறைப்படி (Geneological method)

ஆராயாது, இற்றை வண்ணனை மொழிநூல் (Descriptive Linguistics) போல் ஒப்பியல் முறைப்படி (Comparative method) மட்டும் நோக்கி, தமிழிலுள்ள தவறான சென்னைப் பல்கலைக் கழக அகர முதலியையும், தமிழைத் தாய்மொழியாகப் பயன்படுத்திக் கொண்டே அதை இயல்பாக வெறுக்கும் பிராமணக் குலத்தைச் சேர்ந்த, (P. S.) சுப்பிரமணிய சாத்திரியார் எழுதிய தொல் காப்பிய எழுத்ததிகார சொல்லதிகாரக் குறிப்புரைகளையும், அளவை நூல்களல்லாத பிறவற்றையும், தமிழறியாதவர் தொகுத்த திரவிட மொழி யகர முதலிகளையுமே, அடிப்படை யாகக் கொண்டு தொகுத்ததனால், அவர் அகர முதலி பின்வரு மாறு பல பிழைபாடுகள் மலிந்துள்ளது.

(க) தமிழ் குமரிநாட்டில் தோன்றிய தென்னும் அடிப்படை யுண்மையை அறியாமை.

(உ) சமற்கிருதம் முந்தியதென்றும் அதனால் தமிழ் வளம் படுத்தப் பட்டதென்றும் ஒரு முற்கோள் (prejudice) உடைமை.

(ங) அங்கணம் (aṅgaṇam) என்பதை ankaṇam என்றும், அஞ்சு (anju) என்பதை ancu என்றும், அண்டி (aṇḍi) என்பதை aṇṭi என்றும், அந்தணன் (andaṇan) என் பதை antaṇan என்றும், அம்பு (ambu) என்பதை ampu என்றும், தவறாக ஆங்கிலத்தில் எழுத்துப் பெயர்த்துள் ளமை.

(ச) பல தென் சொற்களை ஆரியமாக அல்லது சமற்கிருதமாகக் காட்டியுள்ளமை.

	சமற்கிருதம்		தமிழ்
எ—டு:	ஆர்ய—பிரா. அஜ்ஜ	>	அச்சன்
	ஸகஸ்ர	>	ஆயிரம்

(ரு) பல தென்சொற்களை ஐயுறவுபடக் குறித்துள்ளமை.

எ—டு: ஆணி—Cf. āṇi
காக்கை—Cf. kāka
முகம்—Cf. mukha
கான்—, கானம் } Cf. kānana

(சா) சில தமிழ்ச் சொற்கும் திரவிடச் சொற்கும் தவறாக மூலங் காட்டப்பட்டுள்ளமை.

எ—டு: தோட்டம் < தொடு (தோண்டு)
உரா (பிராகுவி). = வீடு < ஊர்.
தோடு = திரட்சி. தோடு—தோட்டம்.
ஒ. நோ: தொகுப்பு—தோப்பு.

உறை (உறையுள்) = வீடு. உறை—உரா.

(எ) சில கூட்டுச் சொற்கள் தவருகப் பிரிக்கப்பட்டுள்ளமை.

எ—டு: தகப்பன் = தகு + அப்பன்.
தம் + அப்பன் = தமப்பன்—தகப்பன் என்பதே உண்மை நிலையாம்.

(அ) ஆயிரக் கணக்கான தென் சொற்கள் விடுபட்டுப் போன சென்னை அகர முதலியிலுள்ள தமிழ்ச் சொற்களும், எல்லாம் காட்டப் படாமை.

(கூ) ஒரு சொற்கேனும் வரலாறு வரையப் படாமை.

(கo) வட இந்தியச் சொற்களை யெல்லாம் சமற்கிருதமென்று கொண்டுள்ளமை.

இவற்ருல், இற்றை மேலைத் தமிழறிஞருள் தலைசிறந்த பேராசிரியன்மாரும் பண்டாரகன்மாரும் தமிழதிகாரிகளல்லர் என்றும், அவர்கள் கலந்து கொண்டதனுல் உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாடுகள் சிறப்புற்றுவிடா என்றும், தெற்றெனத் தெரிந்து கொள்க.

கால்டுவெலார் 'திரவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கண' ௩-ஆம் பதிப்பில், முன்னுரையிலுள்ள 'திரவிட மொழிகளின் முதுபழஞ் சான்றுகள்' என்னும் பகுதியில், 'Komaria Akron' என்னும் தலைப்பின் கீழுள்ள அடிக்குறிப்பில் (பக். கூசா),

"Compare Cymri (Wales). "It is stated that the original home of the Cwmry, Cumri, or Cymry, was in the Southern Hindustan, the Southern extremity of which, Cape Comorin, takes its name from the same root."—From a Historical Souvenir issued on the occasion of the meeting of the British Medical Association at Swansea, 1903—Editors."

என்று கனம் வயற்று ஐயரும் (Rev. J. L. Wyatt, M. A.) (T.) இராமகிருட்டிண பிள்ளையும் (B. A.) குறித்திருத்தலைக் கூர்ந்து நோக்குக.

"பல்குழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும்"

தமிழ் நாட்டில் மிக்கிருப்பதால், அவற்றையெல்லாம் நீக்கி, எவருக்கும் அஞ்சாது நடுநிலையில் நின்று முன்னோர் முறையில் தமிழை வளர்த்தற்கு, ௧௯௬௯-ஆம் ஆண்டு உலகத் தமிழ்க் கழகம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. உண்மைத் தமிழன்பர் அனைவரும் உடனே அதில் உறுப்பினராகச் சேர்க.

பெரும் புலமையும் தமிழ்ப் பற்றும் இல்லாதவர், தம் பெயர் விளம்பரத்தின் பொருட்டே, பொதுப் பணத்தை ஏராளமாக வீண் செலவு செய்து கூட்டித் தமிழைக் கெடுக்கும் உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாடுகட்கு, இனிமேலாயினும் தமிழக அரசு தன் ஒத்துழைப்புதவியை நல்காது விழிப்பாயிருக்க.

பின்னிணைப்பு — ௨.

மொழியின வுணர்வும் பழமுறைக் கலப்பும்

இந்தியாவில், சிறப்பாகத் தமிழ்நாட்டில், இன்றுள்ள பிறவிக் குலங்கள் பிறநாடுகளில் இல்லாவிடினும், செல்வநிலை, பட்டம், தொழில், மதம், கட்சி, பழங்குடி என்பன பற்றிய பொதுவகை யான வகுப்புக்கள் இருக்கின்றன. இருப்பினும், அவையெல்லாம் நாட்டுமொழி வகையில் ஓரினமாய் ஒன்றுபட்டு விடுகின்றன. ஒரு நாட்டிற் பன்மொழியினங்கள் தனித்தனிப் பெருந்தொகை மக்களைக் கொண்டிருப்பின், அப் பன்மொழிகளும் அங்கு நாட்டு மொழிகளாகச் சமநிலையடைகின்றன. தமிழ்நாட்டிலோ, ஆரிய வழியினருக்கும் தமிழே தாய்மொழியாயிருந்தும், அவரது இரண் டகத்தாலும் அவர்க்கடிமைப்பட்ட அரசியற் கட்சியாளரின் பேதைமையாலும், வேற்று மொழிகளே போற்றப்பட்டு நாட்டு மொழி தூற்றப்படுகின்றது. இக் கேட்டுநிலை எவ்வகையிலும் உடனே மாற்றப்படல் வேண்டும். அல்லாக்கால், தமிழ் வாழவும் தமிழன் முன்னேறவும் எள்ளளவும் இடமில்லை.

கடந்த மூவாயிரம் ஆண்டாகத் தமிழருள்ளத்தில் ஊட்டப் பட்ட ஆரிய நஞ்சைத் திடுமென்று வெளியேற்ற முடியாதாதலின், படிப்படியாகத்தான் தமிழர் குமுகாயம் திருந்திவரல் வேண்டும்.

முதற்கண், ஒரே குலத்திலுள்ள அகமணப் பிரிவுகளெல்லாம் புறமணப் பிரிவுகளாகலாம்.

அதையடுத்து, தெற்கும் வடக்கும் வெவ்வேறு பெயர் கொண்டுள்ள ஒரே குலத்தார் ஒரே பெயர் கொள்ளலாம். எ—டு: நாடாரும் கிராமணியாரும், கைக்கோளரும் செங்குந்தரும்.

அதன்பின், வேளாண் குடியினின்றே படைத்தலைமைப் பதவி பற்றிப் பிரிந்த முதலியார் குலத்தினர், பிள்ளைப் பட்டமுள்ள மரக்கறி வெள்ளாளருடன் மணவுறவு கொள்ளலாம்.

அதன்பின், முக்குலத்தார் (கள்ளர், மறவர், அகம்படியர்) ஒரே குலத்தாராகலாம்.

அதன்பின், உண்டாட்டிற் கலந்துகொள்ளுங் குலங்கள் மணவுறவிலும் கலக்கலாம்.

அதன்பின், சற்றே ஏற்றத் தாழ்வுள்ள குலங்கள், முன்பு உண்டாற்றிற் கலந்து பின்பு கொள்வனை கொடுப்பனையுஞ் செய்து கொள்ளலாம். அங்ஙனஞ் செய்யும்போது, ஒரு குலத்தாரின் உணவுமுறை இன்னொரு குலத்தார்க்கு ஏற்காவிடின், அதை மாற்றிவிட வேண்டும்.

இறுதியில், கல்வியிலும் நாகரிகத்திலும் துப்புரவிலும் உயர்ந்து, ஒத்த பதவியில் அல்லது நிலைமையிலுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்புக் குடும்பங்களுடன், உயர்ந்த வகுப்பாரும் இருவகையிலும் உறவாடலாம்.

தாழ்த்தப்பட்டோரின் உயர்விற்கு இலவசக் கட்டாயத் துவக்கக் கல்வி இன்றியமையாதது. அதனால்தான், தன் மானவுணர்ச்சியும் துப்புரவும் உண்டாகும். துப்புரவும் நாகரிகமும் இன்றேல் தீண்டாமை ஒழியாது. தீண்டாமை ஒழிந்த பின்னும், சலக்குப்புரை வாருதலும் முடி திருத்துதலும் போன்ற தொழில் செய்வார் வீட்டிலுண்டல் எல்லார்க்கும் ஏற்காது.

தமிழர் தமிழருடன் உறவு கலந்தபின், தெலுங்கர் கன்னடர் முதலிய திரவிடரொடும் உறவு கலக்கலாம். அதன்பின், தமிழ்ப் பற்றுள்ள இந்தி மக்களொடும் மணத்தொடர்பு கொள்ளலாம்.

மக்கள் தாமாகத் திருந்தாவிடின், எதிர்காலத்தில் உண்மையான பொதுவுடைமையாட்சி வந்து விரைந்து திருத்தி விடும். இன்று பொதுவுடைமையென்று உலகில் வழங்குவது கூட்டுடைமையின் (Socialism) முனைந்த வகையே யன்றி வேறன்று. உண்மையான பொதுவுடைமை **மண்ணில் விண்** என்னும் நூலில் விரிவாக விளக்கப் பெறும்.

இடைச் செருகல்கள்

க. கஅ-ஆம் பக்கம் ௩௨-ஆம் வரியில்,

தமிழின் முன்மையையும் என்பதற்குப் பின்,
அது சமற்கிருதத்திற்கு மூலமென்னும் உண்மையையும்

உ. க௨அ-ஆம் பக்கம் இறுதி வரியின் கீழ்,

மேல்வாயிலக்கம் போன்றே கீழ்வாயிலக்கமும் (fractions) நெட்டளவு கண்டனர். முந்திரி 1/320. கீழ் முந்திரி 1/320-இல் 1/320 இருவாயிலக்கங்கட்கும் சதுர வாய்பாடுகளும் (Square tables) இருந்தன. கீழ் வாய்க்குச் சிறுகுழி; மேல் வாய்க்குப் பெருங்குழி.

௩. க௩அ-ஆம் பக்கம் ௨௦-ஆம் வரிக்குக் கீழ்,

கபாடபுரம் என்னும் வட சொல் 'அலைவாய்' என்பதன் மொழிபெயர்ப்பாகவும் இருக்கலாம்.

ச. ௩௫௦-ஆம் பக்கம் க௩-ஆம் வரிக்குக் கீழ்,

பேரா. (P. T.) சீநிவாச ஐயங்காரும் பேரா. (V. R.) இராமச் சந்திர தீட்சிதரும் போல், தமிழர் தென்னாட்டுப் பழங்குடி மக்கள் என்று கொள்பவரையே, பல்கலைக் கழக வரலாற்றுத் துறைத் தலைவராக அமர்த்துதல் வேண்டும்.

அறுவகை ஆராய்ச்சித் தகுதி:—
பரந்த கல்வி, மதிநுட்பம், நடுவுநிலை, அஞ்சாமை,
தன்னல மின்மை, மெய்யறியவா.

௫. ௩௫௩-ஆம் பக்கம் இறுதி வரிக்குக் கீழ்,

மாணவரைக் கல்லூரிகளில், சிறப்பாக மருத்துவக் கல்லூரிகளில், சேர்ப்பதற்கும்; வேலை வேண்டுவோரை வேலையில் அமர்த்தற்கும், கையூட்டு வாங்காமை.

சு. ௩௫சு-ஆம் பக்கம் க௨-ஆம் வரிக்குக் கீழ்,

"நல்ல குலமென்றுந் தீய குலமென்றும்
சொல்லள வல்லாற் பொருளில்லை—தொல்சிறப்பின்
ஒண்பொரு ளொன்றோ தவங்கல்வி யாள்வினை
யென்றிவற்றா னாகுங் குலம்." (நாலடி. க௯௫).

அரும்பொருள் அருஞ்சொல் அகரமுதலி

(எண் பக்கத்தைக் குறிக்கும்.)

அகத்தியர், ௧௮0
அங்காரம், ௨
அசுர மணம், ௨௫௬
அமசோனியம், ௧
அரசச் சின்னம், ௧௩௫
அரசிய லுறுப்பு, ௧௩௫
அலோரசு, ௧௩௨
ஆனேந்து, ௬௪
இடைக்கழகம், ௧௩௩
இடைமண்டை, ௨௧
இயற்கைமொழி, ௩0
இலெமுரியா, ௬௭
இழைத்தல்மொழி, ௩௫
இனியற்படுக்கை, ௩௪
உவாலேசு, ௪
எக்கேல், ௭
எண்பேராயம், ௮0
எமெனே, ௩௬௪
எழுதீவுகள், ௨
ஏதேன், ௮
ஏர்மங்கலம், ௪0
ஐந்திரம், ௨௨௪
ஐம்பெருங்குழு, ௮௫
ஐயன், ௨௭௯
ஐவகையுறுதிச்சுற்றம், ௮௫
ஒப்பீர், ௪௨
ஓயன்னெசு, ௧௩௨
ஓல்டுகாம், ௫
கடகத் திருப்பம், ௧
கடைக்கழகம், ௨௨௨
காட்டு எலியட்டு, ௧௩௮
காண்டவனம், ௧
காந்தக் கோட்டை, ௧௫௫
காமிண்டன், ௨௧0
கால்டுவெலார், ௩௨௬
காளிக்கோட்டம், ௧௫0
கியூம், ௩௨௨
கிளேற்றர், ௭
குமரிக் கண்டம், ௩
குறுமண்டை, ௨௧
கோத்தர், ௩௬
சமற்கிருதம், ௨௨௩
சாமிக்கண்ணுப் பிள்ளை, ௧௭
சாலித்தீவு, ௧௩௨
சாலோமோன், ௨0௧
சிவதருமோத்தரம், ௧௩௯
செந்து அவெத்தா, ௧௯௬
செப்பறைத் தீவு, ௮௮
ஞெலிகோல், ௪௫
தலைக்கழகம், ௯௬
தாகோன், ௧௩௨
தியூத்தானியம், ௧௬௨
தூங்கெயில், ௧௫௫
தொல்காப்பியம், ௨௧௫
நாரதன், ௧௮௫
நால்வரணம், ௧௮௮
நாவலந்தீவு, ௩
நீள்மண்டை, ௨௧
பதினறு தானம், ௨௫0
பதினெண்குடிமக்கள், ௫௩
பரோ, ௩௯௪
பாணினீயம், ௨௨௪
பாலதிக்கம், ௧
புருசு பூட்டு, ௨௧
பேடிக் கூத்து, ௧௯௯
பொன் கிடைக்கும்வகைகள், ௩௯
மடலேற்றம், ௭௮
மாகசு முல்லர், ௧௭௬
முத்தமிழ்க் காவலர், ௩௪௪
முத்திருமேனி, ௧௯௩
முழைத்தல் மொழி, ௩0
யோவான் இங்கிலாந்து, ௭
வளிமறை, ௨௮
வாள்போழ்ந் தடக்கல், ௨௪௯
வின்சென்று சிமிது, ௧௫
வெள்ளக்கதை, ௧௪௭
வேளகம், ௧௫௧

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
11	இறுதி	காப்பும்	கலப்பும்
௩0	௬	சூரிய.	சூரிய,
௪௭	௮	தலைவராயிந்தவர்,	தலைவரா யிருந்தவர்,
௬0	௧௩	பின்ளர்	பின்னர்
௬௪	௧௭	நிரைக்கும் ஊர''	நிறைக்கும் ஊர''
௧0௬	௨0	மிஞ்தியதை	மிஞ்சியதை
௧௧௨	௧௨	என்றுபெயர்.	என்றும் பெயர்.
௧௩௪	௭	ஆண் (பன்றி).	ஆண் பன்றி.
௧௭0	௨௧	—ஞே	(திபூத்தானியக் கட்டத்திற்குத் தள்ளுக)
௧௭௧	௧௩	beg	பெக் (beg)
௧௭௯	௨௨	தாக	தாகவும்
௧௮௫	௧௪	பாலும்	பாடலும்
௨௬௬	௨௯	அரையன்	அரைசன்
௨௮0	௨௭	ஐயன்—ஐயவோ	ஐயன்—ஐய—ஐயவோ ('ஐய' அண்மை விளி)
௨௮௫	௧௫	—	இராசாளி (இடைச் செருகுக)
௨௮௮	௮	—	புள்ளிக்காரன் (இடைச் செருகுக)
௨௯௨	இறுதி	பெயர்-இல்லத்துப் பிள்ளை	(௨௯௩-ஆம் பக்கம் ௨-ஆம் வரியாக்குக)
௩௧௧	௧௫	என்று	என்று கனகசபைப் பிள்ளை
௩௧௪	௭	உயிர் மெய்	உயிர்மெய்
௩௨௧	௧௩	Scholar-ship	scholarship
௩௨௨	௫	(hume)	(Hume, Allen Octavian)
௩௩௯	௧௪	Guisling	Quisling
௩௪௫	௧௫	எதிர்காலம் திட்டம் தமிழ்	எதிர்காலத் தமிழ்
௩௪௬	௬	Transports	Transport

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
௩௫௯	௧௩	upper most atlast	uppermost at last
௩௬௦	௨௫	கற்ருய்ந்தோம்	கற்ருய்ந்தேம்
௩௬௨	௬	மொழியினரான	வழியினரான
௩௬௩	இறுதி	Grammer	Grammar
௩௬௮	௯	உண்டாற்றிற்	உண்டாட்டிற்

குறிப்பு:— ௩௦௫-ஆம் ௩௦௬-ஆம் பக்கங்களிலுள்ள சொல் வரிசைகள், கட்டங்கட்குள் ளிருப்பது போன்றே கருதிக்கொண்டு பிரித்துப் படிக்க.

௩௪௭-ஆம் பக்கத்திலுள்ள ''ஆரியம்போல்...... ஏத்துதுமே'' என்னும் தாழிசையிலும், ௩௫௮-ஆம் பக்கம் உள்ள ''ஆரிய......தமிழனே'' என்னும் கலி மண்டிலத்திலும், உள்ள மேற்கோட்குறியை நீக்கி விடுக.